# வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும்



டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன்

# வாழ்வில் நான்
# கண்டதும் கேட்டதும்

டாக்டர் நாவலர்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., டி.லிட்

*வெளியீடு :*

**நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை**

*7/4, மாசிலாமணி தெரு,*

*சீத்தம்மாள் குடியிருப்பு, ஆழ்வார்பேட்டை,*

*சென்னை - 600 018.*

# நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும் |
| நூல் நுவலும் பொருள் | தன் வரலாறு (1920 - 1981) |
| நூலாசிரியர் | டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் |
| பதிப்பு எண் | 1 |
| மொழி | தமிழ் |
| பதிப்புரிமை | நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை, சென்னை - 600 018. |
| வெளியீடு | நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை, சென்னை - 600 018. |
| வெளியீட்டு எண் | 5 |
| வெளியிட்ட ஆண்டு | ஆகஸ்டு 2000 |
| பயன்படுத்தப்பட்ட தாள் | 60 ஜி எஸ் எம் வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | 20 செ.மீ. X 13 செ.மீ |
| எழுத்து | 12 பாயிண்ட் |
| மொத்தப் பக்கங்கள் | 614 |
| நூல் அச்சிட்டோர் | ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை-14. |
| விலை | ரூ.140-00 |

# பதிப்புரை

வானார்ந்த மாட மாளிகைகள் கூட கோபுரங்களின் எழிலார் தோற்றம் காண்போர் கவனத்தைக் கவர்ந்திருப்ப தாகும். ஆனால் அவை நிலைத்து - நிலைபெற்று விளங்க உறுதுணையாக அமைந்த அடிப்படையான அடிக்கற்கள் புறத்தே புலப்படா. அதனைப்போன்று தென்னகத்தில் - குறிப்பாகத் தமிழ் நாட்டில் திராவிட இயக்கத்தின் படிப்படியான வளர்ச்சி நிலையினையும், பகுத்தறிவு இயக்கத்தின் பயன்மிகு விளைவுகளையும் காண்போர், அவற்றுக்குக் காரணமான அடிப்படையானவர்களை இன்றைய நிலையில் அறிந்துகொள்ள டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் எழுதிய 'வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும்' எனும் இந்நூல் மிகவும் துணை புரிவதாகும். நாவலர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோன்று, இருபதாம் நூற்றாண்டில் பொதுவாழ்க்கையில் ஈடுபட்டுப் பொதுத் தொண்டாற்றிய அவர்தம் வாழ்க்கையைப் பற்றியும், இருபதாம் நூற்றாண்டின் பொது வாழ்க்கையின் போக்குப் பற்றியும் இன்றைய தலைமுறையினரும், எதிர்காலத்தவரும் அறிந்துகொள்ள இந்நூல் பயன்படுவ தாகும்.

தந்தையார் அளித்த ஊக்கத்தாலும், ஆக்கத்தாலும் நாவலர் அவர்கள் இளமைப் பருவந்தொட்டே சுயமரியாதைப் பற்றுடனும், பகுத்தறிவு நெறியுடனும் வாழ்ந்து வந்தவரா வார்; தலைசிறந்த பகுத்தறிவுவாதி எனப் பகுத்தறிவுப் பகலவன் பெரியாரால் பாராட்டப்பட்டவர் ஆவார். சாதாரணக் குடும்பத்தில் பிறந்த நாவலர் 'வறுமையிற் செம்மை' என்பதற்கிணங்க மிகவும் இடர்ப்பாடான

நிலையில் கல்வி பயின்று பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். படிப்பை முடித்தவுடன் ஏழைமையான குடும்பத்தைக் காப்பாற்றத் தக்கதொரு வேலையை நாடிச் செல்வார் எனப் பலரும் எதிர்பார்த்ததற்கு மாறாகப் படிப்பு முடிந்தவுடன் தந்தை பெரியாரை அடைந்து அரசியல் பகுத்தறிவுப் பணிகளில் ஈடுபட்டவராவார்.

நாவலர் அவர்களின் வாழ்வு திராவிட இயக்கம் பகுத்தறிவு இயக்கமொடு பின்னிப் பிணைந்ததாகும்; அவற்றை வேறுபடுத்திக் காண இயலாது. தந்தை பெரியாருக்கு அடுத்தபடியாகத் தமிழ் நாடெங்கணும் சிற்றூர், பேரூர், பட்டி தொட்டிகள் எல்லாம் - சுற்றிச் சுழன்று திராவிட இயக்கத்தையும், பகுத்தறிவுக் கொள்கைகளையும் வளர்த்த பெருமை நாவலர் அவர்களுக்கு உண்டு. நாவலர் அவர்கள் பெரியாரிடமும், அண்ணாவிடமும் பயிற்சி பெற்றவர். பெரியார் அவர்கள் பேரிரைச்சலுடன் கிளம்பி வந்த ஒரு வெள்ளம் ஆவார். அந்த ஆற்று வெள்ளத்தை அணையிட்டுத் தேக்கி நாட்டு மக்களுக்குப் பக்குவமாக வழங்கிய அறிஞர் அண்ணா அவர்களுடைய பெரும் பணியில் உறுதுணையாக இருந்தவர் நாவலர் ஆவார். நாவலர் அவர்கள் பெரியாரின் நன்மதிப்பைப் பெற்ற நன்மாணவர். அறிஞர் அண்ணாவின் தம்பியருள் மூத்த தம்பியாக விளங்கியவர். திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி, சிறப்புமிகு வெற்றிகள் ஆகியவற்றில் நாவலர் பெரும் பங்கு கொண்டவர் என்பதை அனைவரும் அறிவர்.

பொது வாழ்வில் நாவலர் முன் எதிர்ப்பட்ட இடர்ப்பாடுகள் - இன்னல்கள் - தொல்லைகள் எண்ணி லடங்கா. அவற்றை எல்லாம் 'எதையும் தாங்கும் இதயத்துடன் கடந்து வந்தவர் நாவலர்.' இன்னா செய்தார்க்கும் இனியவே செய்த சால்பினராக வாழ்ந்தவர் நாவலர். கட்சியிலும், ஆட்சியிலும் அவர் வகித்த

சிறப்புமிகு பெரும் பொறுப்புகள் அவர்தம் கடின உழைப்பாலும், நேர்மைத் திறனாலும், சீரிய அறிவாற்ற லாலும் அவரை அடைந்தன என்பதனை நாவலர் அவர் களின் சீரிய வாழ்க்கைக் குறிப்புகள் நமக்கு உணர்த்து கின்றன. நாவலர் எந்நிலையிலும் புகழ்மொழியை நச்சி அடிமையாகாமலும், பழிமொழியை நம்பிப் பகை கோடாமலும் விளங்கியவராவார்.

நாவலர் காட்சிக்கு எளியராய், அறிஞர் அண்ணா வகுத்தளித்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் கோட்பாடுகளை வழுவாது பின்பற்றியவராவார். பொது வாழ்வில் ஒழுங்கு முறையை வலியுறுத்திய அவர் தமது தனிவாழ்விலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தவர்.

தம்முடைய இலக்கியச் சொற்பொழிவுகள் மூலமும், எழுத்துக்கள் மூலமும் சங்க இலக்கியங்களை மக்களிடையே உலாவரச் செய்தவர் நாவலர்; திருக்குறளுக்குப் பகுத்தறிவு வழிநின்று உரைகண்டவர்; பாவேந்தர் பாடல்களின் சுவையை மக்களுக்கு ஊட்டியவர். தமிழக அரசியல் மேடையில் தனித் தமிழ்ச் சொற்களால் தமிழுக்கு ஆக்கம் தந்தவர் தமிழ்த்தென்றல் திரு. வி.க. ஆவார். மேடைப் பேச்சில் தனக்கே உரித்தான எழுச்சியும், கருத்தோட்டக் கவர்ச்சியும் கொண்டதொரு சிறப்புமிகு தனி நடையைத் தந்தவர் அறிஞர் அண்ணா. அவ்விருவர் வழிமுறைகளையும் அணைத்து நின்று அரசியல் மேடைகளில் இனிய தமிழுக்குத் தனக்கே உரித்தான முறையில் தனி இடத்தைப் பெற்றுத் தந்தவர் நாவலர் ஆவார்.

நாவலர் அவர்கள் தம்முடைய இந்த வாழ்க்கை வரலாற்று நூலினை முற்றிலுமாக எழுதி முடிக்காத நிலையில் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்கள்; 1981 சனவரி முற்பகுதி வரை அவர் எழுதிவைத்துச் சென்றுள்ளார். அதனை நூலாக வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். எஞ்சிய காலப் பகுதிக்குரிய நாவலர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினைத்

தனியே முறைப்பட எழுதி வெளியிட வேண்டும் என்ற கருத்து உள்ளது. இந்நூலில் சில கருத்துக்கள் - செய்திகள் மீளவும் சில பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. தொடர்பு கருதியும், குறிப்பிட்டப்பெற்ற பகுதிகளில் கூறவந்த செய்தியினை விளக்கிக் கூறவும் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன; அவை கூறியது கூறலாக அமையா.

இந்நூலை நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக் கட்டளையின் சார்பில் வெளியிட இசைவளித்த டாக்டர் நாவலர் அவர்களின் குடும்பத்தினர்க்கு - குறிப்பாக டாக்டர் நாவலர் அவர்களின் துணைவியார் டாக்டர் (திருமதி) விசாலாட்சி அம்மையார் அவர்களுக்கு எம் நன்றி உரியவாகுக. இந்நூலை வெளியிடும் பணிகளில் ஒருங் கிணைப்பாளர்களாக அமைந்து உறுதுணை புரிந்த புலவர் இளஞ்செழியன் அவர்களுக்கும், திரு. ஆ. பன்னீர் செல்வம் அவர்களுக்கும் எம் நன்றி உரியவாகுக. நூலைச் சிறப்புற அச்சிட்டு அளித்த 'ஏசியன் பிரிண்டர்ஸ்' நிறுவனத்திற்கு - குறிப்பாக திரு. சுப்பு அவர்களுக்கு எம் நன்றி. மேலும் இந்நூலை வெளியிடும் பணிகளில் உறுதுணைபுரிந்த அனைவர்க்கும் நன்றி உரியவாகுக.

நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை சார்பில் ஏற்கெனவே வெளியிடப்பெற்ற நூல்களைப் போன்று, இந்நூலையும் தமிழ்ப்பெருங்குடி மக்கள் போற்றிப் பயன் கொள்வர் என நம்புகின்றோம்.

**சை. வே. சிட்டிபாபு**

**தலைவர்,**

**நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை**











## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வாழ்க்கை வரலாற்றின் குறிக்கோள் | 1 |
| 2. | வழிவழி வந்த குடிச்சிறப்பு | 3 |
| 3. | பெற்றோர் | 8 |
| 4. | பிறப்பும் பிள்ளைப் பருவமும் | 12 |
| 5. | பள்ளிக் கல்விப் பயிற்சி | 16 |
| 6. | கல்லூரிக் கல்வி | 21 |
| 7. | சுயமரியாதை இயக்கப் பற்று | 38 |
| 8. | திராவிட இயக்கத் தொடர்பு | 42 |
| 9. | அரசியலில் நேரடி ஈடுபாடு | 55 |
| 10. | திராவிடர் கழகம் | 64 |
| 11. | திராவிட முன்னேற்றக் கழகம் | 177 |
| 12. | மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம் | 518 |
| 13. | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் | 554 |
| 14. | டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் வாழ்க்கைக் குறிப்புகள் | 583 |

# 1

## வாழ்க்கை வரலாற்றின் குறிக்கோள்

உலகச் சான்றோர்கள், சீர்திருத்தச் செம்மல்கள், விடுதலை வீரர்கள், புகழ்பெற்ற புலவர் பெருமக்கள், கவர்ச்சிமிக்க கவிஞர்கள், நாட்டுக்குழைத்த நல்லோர்கள், அரசியல் அறிஞர்கள் போன்றோரின் வாழ்க்கை வரலாறுகள், வாழ வேண்டும், வளரவேண்டும், பெருமை பெறவேண்டும், புகழடைய வேண்டும் என்று எண்ணுகின்ற இளைய சமுதாயத்தினர்க்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகவும், சீரிய வழிகாட்டிகளாகவும் விளங்குவனவாகும்.

பெரும் புகழுக்கும், அரும் பெருமைக்கும், சிறந்த செல்வாக்குக்கும் எந்த வகையிலும் உரியவன் அல்லாத எளியேனின் வாழ்க்கைக் குறிப்புகள், வருங்கால இளைய சமுதாயத்தினர்க்கு ஏற்ற எடுத்துக்காட்டுக்களாகவோ, வழிகாட்டுவனவாகவோ ஒருசிறிதும் அமையா என்பதை நான் நன்கு அறிவேன்.

இருபதாம் நூற்றாண்டில் பொதுவாழ்க்கையில் ஈடுபட்டுப் பொதுத் தொண்டு ஆற்றிவந்த எளியேனாகிய என்னுடைய வாழ்க்கை எப்படி அமைந்திருந்தது, நான் எனது எளிய வாழ்க்கையில் கண்டதும், கேட்டதும் என்ன? நான் கூறிய கருத்துக்களும், ஆற்றிய தொண்டுகளும் எந்த வகையில் மதிப்புடையவை? இருபதாம் நூற்றாண்டின் பொது வாழ்க்கையின் போக்கு எப்படி இருந்தது? என்பன

போன்றவற்றை, வருங்காலத்தவர்கள் அறிந்து கொள்வதற்கும், புரிந்துகொள்வதற்கும் இந்த நூல் ஓரளவுக்குப் பயன்படக்கூடுமே என்று கருதித்தான், என்னுடைய எளிய வாழ்வின் வரலாற்றுக் குறிப்புக்களை இந்த நூலின் மூலம் வெளிப்படுத்துகிறேன்.

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு எளிய பொதுத்தொண்டனின் வாழ்க்கைக் குறிப்புக்கள், எப்படி யெல்லாம் அமைந்திருந்தன என்பதை வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு, இந்த நூல் ஒரு சிறு துணையாக அமையக்கூடும் என்பது எனது உள்ளக்கிடக்கை.

இந்த நூல் வருங்காலத்தவர்க்கு வழிகாட்டும் வரலாறாக அமையாது என்றாலும், சில வரலாற்றுச் சூழ்நிலைகளைப் புரியவைக்கும் பெற்றி வாய்ந்ததாக அமையும் என்பது என்னுடைய கருத்து.

# 2

# வழிவழி வந்த குடிச்சிறப்பு

## வேளாளர்

*வரலாற்றுப் பின்னணியில் ஆய்வுசெய்து பார்க்கும் போது, என்னுடைய குடியின் பழம்பெரும் முன்னோர்கள், சங்க காலத்திற்கு முன்பிருந்தே வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுப் பெரும் புகழுடனும், மிகுந்த செல்வாக்குடனும், பேராதிக்கத்துடனும், நிறைந்த ஆக்கத்துடனும் திகழ்ந்து வந்திருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.*

*வேளாண்மைத் தொழிலில் உழுவித்துண்போராக வாழ்ந்து வந்த காரணத்தால் அவர்கள் 'வேளாளர்கள்' என்று அழைக்கப்பட்டனர். அந்தக் காலங்களில் வேளாளர் என்பது தொழிலைக் குறித்து அழைக்கப்பட்ட ஒரு பெயரேயல்லா மல், இந்தக்கால சாதியுணர்வோடு குறிப்பிடப்பட்டதல்ல. அந்தக் காலங்களில் அறவோர், துறவியர், அரசர், வணிகர், கலை வல்லுநர், வேளாளர் போன்ற அனைவரும் ஒத்த நிலையில் வைக்கப்பட்டுக் குடிமக்கள் எல்லோராலும் மதிக்கப்பட்டு வந்தவர்களாவர்.*

*வேளாளர்கள், அவர்கள் வாழ்ந்த இடம், சிறப்பு, தனித்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில், தொண்டை மண்டல கொண்டை கட்டி வேளாளர், சோழிய வேளாளர், பாண்டிய வேளாளர், துளுவ வேளாளர், ஆறுநாட்டு வேளாளர், கார் காத்த வேளாளர், கொடிக்கால் வேளாளர், அகமுடைய வேளாளர் என்றவாறு பல்வேறு பிரிவினராக அழைக்கப்பட்டதுண்டு.*

## கொண்டை கட்டி வேளாளர்

*எனது முன்னோர்கள் 'கொண்டை கட்டி வேளாளர்' என்னும் பிரிவைச் சார்ந்தவர்கள் ஆவர். ஒவ்வொரு ஊரிலும் கொண்டை கட்டி வேளாளர்கள் பெரும் நிலங்களை உழுவித்துண்போாராகவும், மிகுந்த செல்வம் செறிந்தவர் களாகவும், பிறர்க்கு வழங்கும் வள்ளன்மை கொண்டவர் களாகவும் இருந்துவந்த காரணத்தால், மற்றக் குடிமக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் தகைமையினராக இருந்துவந்திருக் கின்றனர். ஊர்ச்செயற்பாடுகளில் முதன்மை வகித்தல், ஊர் வாழ்க்கை முறையைச் செம்மையாக்குதல், நியாயம் வழங் குதல், குற்றவாளிகளைத் தண்டித்தல் போன்ற பணிகளில் கொண்டை கட்டி வேளாளர்களே ஊருக்கு ஊர் பெரும்பங்கு கொண்டிருந்திருக்கின்றனர்.*

*கொண்டை கட்டி வேளாளர்கள் யாருக்கும் தலைவணங் குவதில்லை என்ற செம்மாந்த வாழ்க்கையை நடத்தி வந்த தால், முடிதிருத்தம் செய்வோரிடத்திலும், தாங்கள் தலை தாழ்ந்து செயல்படக் கூடாது என்று கருதி, தலையின் முன்பகுதியைச் சிரைக்காமல் அவர்கள் தங்கள் தலைமுடியை முழுக்கொண்டையாகக் கட்டி முடித்துக்கொண்டு வாழ்ந் தார்கள். அது காரணம் பற்றித்தான், அவர்களுக்குக் 'கொண்டை கட்டி வேளாளர்' என்ற பெயர் ஏற்பட்டது என்று வரலாற்று ஆசிரியர்கள் பகர்வர்.*

## வேளிர்

*சங்க காலத்திலும், அதனைத் தொடர்ந்து வந்த காலத் திலும் கொடுப்பவர்கள் உயர் குடியினராகவும், வாங்கு பவர்கள் தாழ்ந்த குடியினராகவும் கருதப்பட்டனர். ஔவை மூதாட்டியாரும் ''இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்'' என்று குறிப்பிட்டிருப்பது கூர்ந்து நோக்கத் தக்கது.*

*கொண்டை கட்டி வேளாளர்கள் பெரும் நிலக்கிழார் களாக வாழ்ந்த காரணத்தால், பிறர்க்கு உணவுப் பொருள்*

களை வாரி வழங்குவதில் வள்ளன்மை மிக்கவர்களாக விளங்கினார்கள். ''எந்நாளும் காப்பார் வேளாளர்காண்'' என்பது கம்பர் வாக்கு. அது காரணமாக அவர்கள் 'வேளிர்' என்றும் அழைக்கப்பட்டனர். 'வேள்' என்றால் உதவி என்றும் 'வேளிர்' என்றால் உதவி செய்வோர் என்றும் பொருள்படும். வேளிர் என்ற சிறப்புப்பட்டம் பெற்ற வேளாளர்கள் அரசர்களோடு நட்புக் கொள்ளவும், அரச குடும்பங்களில் உறவுகொள்ளவும் ஆன தகுதியைப் பெற்றிருந்தனர். அவர்களில் சிலர் குறுநில மன்னர்களாக வும், மண்டலம் காக்கும் தலைவர்களாகவும், போர்ப்படைத் தலைவர்களாகவும் பணியாற்றி வந்துள்ளனர்.

## கிழார்

பண்டைக் காலத்தில் கொண்டை கட்டி வேளாளர்கள் மூவேந்தர்களுக்கும், மன்னர்களுக்கும் முடிசூட்டி வைக்கும் உரிமையைப் பெற்றிருந்திருக்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் 'கிழார்' என்றும் சிறப்பாக அழைக்கப்பட்டிருக் கின்றனர். 'கிழார்' என்ற சொல்லுக்கு 'உரிமை உடையவர்' என்று பொருள் ஏற்படும்.

கிழார் என்ற சிறப்புப் பட்டப்பெயர் பெற்ற வேளாண் பெருங்குடியைச் சார்ந்த சான்றோர்களை, குறிப்பிட்ட தலைமுறையினரின் முன்னோடித் தலைவர்களாகக் கொள்வ துண்டு. அப்படிப்பட்ட தலைவர்கள் வரிசையில் காரிக் கிழார், கோவூர் கிழார், அரிசில் கிழார், ஆலத்தூர்க் கிழார், கிடங்கன் கிழார், குன்றத்தூர்க் கிழார், மாங்காட்டுக் கிழார், குன்றைக் கிழார், கூவத்துக் கிழார், சேக்கிழார், பெருங் குன்றூர்க் கிழார், மங்கலங்கிழார், பேரையூர்க்கிழார், வீரூர்க் கிழார், துடிசைக் கிழார், புரசைக் கிழார் போன்றவர்கள் இடம்பெறுகின்றனர்.

எங்கள் குடியினரின் முன்னோடித் தலைமுறையினர் அரிசில் கிழார் என்றும், சான்றோர் வழிவந்தவர்கள் என்றும் குறிப்பிடப்படுவார்கள்.

முதன்மையார்

வேளாளர் - கொண்டை கட்டி வேளாளர் - வேளிர் - கிழார் என்று அழைக்கப்பட்டவர்கள் சேக்கிழார் காலத் திற்குப்பிறகு 'முதன்மையார்' என்றும், பின்னர் நாளடைவில் 'முதலியார்' என்றும் அழைக்கப்பெறலாயினர். கொண்டை கட்டி வேளாளர்கள், அரசர்களுக்கு உறுதுணையாக ஆட்சியிலும் - போரிலும் முதன்மையாக நின்று பணியாற்றி வந்த காரணத்தால், அவர்கள் 'முதன்மையார்' என்று பெயர்பெற்றனர்.

நேமத்தார்

எனது குடும்பத்தைச் சேர்ந்த இருபது தலைமுறை யினர்க்கு முற்பட்ட முன்னோர்கள், தொண்டை மண்டலப் பகுதியைச் சேர்ந்த நேமம் என்ற சிற்றூரில் வாழ்ந்துவந்தனர். அதனால் எங்கள் குடியினரை 'நேமத்தார்' என்று பிறர் அழைப்பதுண்டு. நேமத்தார்க்குப் 'பெரிய தம்பிரான்' என்ற சான்றோர் வழிகாட்டியாகக் கொண்டாடப்பட்டு வந்திருக் கிறார்.

நேமத்தார் தலைமுறை தலைமுறையாகப் பெருநிலக் கிழார்களாகவும், குறுநில மன்னர்களாகவும், அறிவு ஆற்றலிற் சிறந்த சான்றோர்களாகவும், வீரத்திலும், தீரத்திலும் மிகுந்த போர்ப்படைத் தலைவர்களாகவும் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

அரச மக்கள்

நேமத்தார் தொண்டை மண்டல அரசர்க்கு அமைச்சர் களாகவும், படைத்தலைவர்களாகவும், முடிசூட்டி வைக்கும் தகுதி பெற்றவர்களாகவும் இருந்துவந்த காரணத்தால், அவர்களுக்கு 'அரசமக்கள்' என்ற சிறப்புப் பட்டப் பெயரும் இருந்துவந்தது.

தொண்டை மண்டலத்தில் முசிலிம் சுல்தான்களின் படையெடுப்புக்கள் நிகழ்ந்தபோது, நேமத்தார், அவர் களுக்கு நேருக்குநேர் எதிர்நின்று களத்தில் போரிட்டிருக் கின்றனர். அதனால், 'நேமத்தார் நின்று எதிர்கொண்டு வென்றார்' என்ற பாராட்டு மொழி ஏற்படலாயிற்று.

நேமத்தார் தலைமுறையில் வந்தவர்கள், இன்றைய நிலையிலும் அரசமக்களான நேமத்தாரால் முன்பு பயன்படுத்தப்பெற்ற வீரவாள் - கேடயம் - சேமக்கலம் போன்ற போர்க்களக் கருவிகளை வழிபடு பொருள்களாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர்.

தொண்டை மண்டல முதன்மையாரில் ஒரு பகுதியினர் தஞ்சை மாவட்டப் பகுதியிலும், பிறர் தென்மாவட்டங்களின் பகுதிகளிலும் மண்டலத்தலைவர்களின் முயற்சியால் குடியேற்றப்பட்டுப் பெருநிலக்கிழார்களாக ஆக்கப் பட்டனர். அந்த வகையில் எனது குடியினரின் முன்னோர் களான நேமத்தார், தஞ்சை மாவட்டப் பகுதியில் குடியேறி, ஏறத்தாழ 4500 ஏக்கர் நன்செய் நிலத்திற்கு உரிமையுடையவர் களாக ஆனார்கள். புதிய தலைமுறையினர் தோன்றத்தோன்ற நன்செய் நிலப்பரப்பு அளவு குறைந்து குறைந்து இன்றைய நிலையில் மிகக்குறைந்த தன்மையில் காணப்படுகிறது.

சோழமண்டலத்திலும், பிறமண்டலங்களிலும் குடியேற்றப்பட்ட முதன்மையார்கள், தொண்டை மண்டலத்திலிருந்து வந்தவர்கள் ஆதலால், அவர்கள் இன்றைய நிலையிலும் "தொண்டை மண்டல முதன்மையார்" என்றே அழைக்கப்பட்டு வருகின்றனர்.

# 3

## பெற்றோர்

என் தந்தையார் வ.சௌ. இராசகோபாலனார் (1882-1946) ஆவார். என் தாயார் மீனாட்சி சுந்தரத்தம்மையார் (1900-1961) ஆவார்.

### தந்தையார்

என் தந்தையாரின் சொந்த ஊர் தஞ்சை மாவட்டம் நாகை வட்டத்தைச் சேர்ந்த வடக்காலத்தூர்* என்னும் அழகிய சிற்றூராகும். அங்கே என் தந்தையாருக்கு இருபது ஏக்கர் அளவுக்கு நன்செய்-புன்செய் நிலங்களும், மரச்சோலைகளும் இருந்துவந்தன.

என் தந்தையாரின் தகப்பனார் கோ. சௌரிராசனார் தமிழ் இலக்கியம், சோதிடக் கணிதம் ஆகியவற்றில் வல்லமை பெற்றுப் புகழோடு விளங்கினார்; பாட்டனார் ச. கோதண்டராமர். தமிழ் இலக்கண, இலக்கியங்களில் தேர்ந்து தமிழாசிரியராகத் திகழ்ந்துவந்தார்; அவரைத் தமிழாசிரியர் என்றே ஊர்மக்கள் அனைவரும் போற்றிக் கொண்டாடினர்; முப்பாட்டனார் சடகோபர் அவர்கள் தமிழ் இலக்கியம், சோதிடம், மருத்துவம் ஆகிய துறைகளில் சிறந்த பயிற்சிபெற்று விளங்கினார்.

என் தந்தையாரின் முந்தைய தலைமுறையினர் பலரும், தமிழ் வளர்த்த பெரும்பரம்பரையினராகத் திகழ்ந்துவந்தனர்.

---

*இவ்வூர் தற்போது நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

என் தந்தையார் நல்ல தமிழார்வத்தோடு, முற்போக்குச் சிந்தனையையும், சொல்லாற்றல் திறமையையும் பெற்று விளங்கினார். அவர் நண்பர்களோடு உரையாடி மகிழ்வதில் சிறந்த ஆர்வங்காட்டி வந்தார். அவர் உரையாடும்போது, பிறருடைய உள்ளங்களை ஈர்க்கத்தக்க அளவுக்கு, வரலாற்று நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டியும், சமுதாய, அரசியல் கருத்துக்கள் பற்றி விளக்கம் தந்தும், நகைச்சுவைக் கதைகளைச் சொல்லியும், கேலி கிண்டல் செய்தும் பேசிடும் தன்மை வாய்க்கப்பெற்றவர்.

என் தந்தையார் பள்ளி இறுதி வகுப்புப் படிப்பைக் குடந்தை 'நகர உயர்நிலைப் பள்ளியில்' முடித்தபிறகு, முதலில் அஞ்சல் துறையிலும், பின்னர் மாவட்ட உரிமை யியல் நீதிமன்றத்திலும் அலுவலராகப் பணியாற்றி 1944இல் ஓய்வுபெற்றார்.

என் தந்தையார், 1925இல் பகுத்தறிவுத் தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கங்கண்ட காலத்திலிருந்து, பெரியாரின் பகுத்தறிவு - சீர்திருத்தக் கொள்கைகளைப் பின்பற்றி ஒரு பழுத்த பகுத்தறிவுவாதியாகவே இறுதிவரையில் திகழ்ந்தார். பெரியார் அவர்கள் தொடங்கி நடத்திவந்த 'குடியரசு', 'பகுத்தறிவு', 'புரட்சி', 'விடுதலை' போன்ற ஏடுகளையும், மற்றவர் நடத்திய சுயமரியாதை இயக்க ஏடுகளாக விளங்கிய 'புதுவை முரசு', 'வெற்றி முரசு', 'நகர தூதன்', 'புது உலகம்' போன்ற ஏடுகளையும் நன்கு படித்துப் பிறர்க்கு விளக்கிக் கூறுவதன்மூலம், பகுத்தறிவு இயக்கத்தை வளர்ப்பதில் நல்ல ஆர்வம் காட்டிவந்தார்.

என் தந்தையார் ரூ.60 தான் அப்பொழுது சம்பளமாகப் பெற்று வந்தார் என்றாலும் தமது சொத்துக்கள் அனைத்தையும் சிறிது சிறிதாக விற்றுச் சில நேரங்களில் இருக்கும் நகைகளையும் விற்று, என்னையும், என் உடன் பிறந்த எழுவரையும் உயர்படிப்பு வரையில் படிக்க வைப்பதிலே மிகவும் ஆர்வங்காட்டி வந்தார்.

நானும், என் உடன்பிறந்தாரும் சிறந்த பகுத்தறிவு நெறியினராக விளங்குவதற்கு அடிப்படைக் காரணராகத் திகழ்ந்தவர் என் தந்தையாரே ஆவார்.

## தாயார்

என் தாயார் மீனாட்சி சுந்தரத்தம்மையார் அவர்களின் சொந்த ஊர், தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டத்தைச் சேர்ந்த திருக்கண்ணபுரம்* என்னும் சீரிய ஊராகும். என் தாய் - தந்தையரின் திருமணம் 1916ஆம் ஆண்டில் திருக்கண்ணபுரத்தில் நடந்தேறியது.

என் உடன்பிறந்தவர்கள் ஆண்கள் மூன்று பேர்கள், பெண்கள் நான்கு பேர்கள் ஆவர். சௌரிராசன், நாடியம்மாள், நாராயணசாமி (நெடுஞ்செழியன்), சீனிவாசன் (செழியன்), புனிதவல்லி, இராமதாசு (இளஞ்செழியன்), நீலா, விமலா ஆகியோர் ஆவோம்.

எங்கள் குடும்பத்தின் வருமானம் குறைந்த அளவினதாக இருந்தபோதிலும், குடும்பம் மனநிறைவோடும், மன மகிழ்ச்சியோடும் நடைபெறும் தன்மையில், அதனைச் சிறப்பாகவும், செம்மையாகவும் கட்டிக் காத்து வளர்த்துவந்த பெருமை என் அருமைத் தாயாரையே சாரும்.

என் தந்தையாருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்வதிலும், பிள்ளைகளையெல்லாம் பேணிக்காப்பதிலும், பிள்ளைகளை முறைப்படி படிக்க வைப்பதிலும் எங்கள் எல்லோரையும் பண்புள்ளவர்களாக வளர்ப்பதிலும் கண்ணுங்கருத்துமாக இருந்து, என் தாயார் குடும்பப் பணிகளைத் திறம்பட நடத்தி வந்ததன் காரணமாகத்தான், எங்கள் குடும்பம் பலராலும் மதிக்கத்தக்க ஒரு குடும்பமாகப் பெயரும், புகழும் பெற்று விளங்கத் தொடங்கியது எனலாம்.

---

*இவ்வூர் தற்போது திருவாரூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

'வறுமையிலும் செம்மை' என்ற பழமொழிக்கு இணங்க, எங்கள் குடும்பத்தின் வருமானத்தைச் சிறிதளவு பெருக்க, என் தாயார், கறவைப் பசுமாடுகளை வளர்த்து, அவற்றின் பாலை, வீட்டிற்குத் தாராளமாகப் பயன்படுத்திக்கொண்டு, மீதப்படும் பாலை விற்று, அதன்மூலம் கிடைக்கின்ற வருமானத்தைக் குடும்பச் செலவுக்கு ஈடுகட்டி வந்தார்கள். எங்கள் குடும்பம் ஆடம்பரச் செலவுஅற்ற ஒரு குடும்பமாகவே சிறப்பாக நடந்துவந்தது.

கறவை மாடுகளைக் கண்காணிப்பது, அவற்றிற்குத் தீனிபோடுவது, அவற்றைக் குளிப்பாட்டிக் கொண்டுவந்து கொட்டிலில் கட்டுவதுபோன்ற பணிகளை நானும், என் இளவல் செழியனும் செய்துவந்தோம்.

என்னையும், என் உடன்பிறந்தார் அனைவரையும் ஆளாக்கி, இன்றுள்ள நிலைமைகளில் நாங்கள் வாழ, அடிப்படைக் காரணர்களாக இருந்தவர்கள் எங்கள் தந்தையாரும், எங்கள் தாயாரும் ஆவார்கள். அவர்கள் அளித்த ஆக்கமும், ஊக்கமுந்தான் என்னையும், என் இளவல் செழியனையும், ஏனையோரையும் குறிப்பிட்ட நெறியில், குறிப்பிட்ட அரசியல் துறையில் ஈடுபடுத்தி, நாங்கள் மேலோங்கி நிற்கப் பெருந்துணையாக அமைந்தன.

எங்கள் தந்தையார் நாணயம் - நேர்மை - ஒழுங்கு - கட்டுப்பாடு ஆகிய தன்மைகளின் அடிப்படையில் எங்களுக்கு மிகக் கண்டிப்பான முறையில் கட்டளைகளைப் பிறப்பிப்பார். நாங்களும் குடும்பச் சூழ்நிலைக்கு ஏற்ப மிகக் கட்டுப்பாட்டுடன் கடமைகளை ஆற்றிவந்தோம். எங்கள் தந்தையாரும், தாயாரும் எங்களின் நலனில் மிகுந்த அக்கறை காட்டி வந்ததனால், நாங்கள் மனஅமைதியோடும், மன மகிழ்ச்சியோடும் இளமைப்பருவத்தில் வாழ்ந்துவந்தோம்.

# 4

# பிறப்பும் பிள்ளைப் பருவமும்

## பிறப்பு

*நான் 1920 ஆம் ஆண்டு, சூலைத் திங்கள், 11ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமையன்று, திருக்கண்ணபுரத்தில் என் தாய் வீட்டில் பிறந்தேன் என்று கூறுவர். என்னைப் பெற்றெடுக்க மிகக் கடினப்படவேண்டியிருந்தது என்று என் தாயார் சொல்லுவார்கள்.*

*நான் பிறக்கும்போது அழாமலும், பேச்சு மூச்சு இல்லாமலும் பிறந்தேன் என்றும், பிள்ளைப் பேறு மருத்துவம் பார்த்த பெண்கள், நான் உயிரில்லாமல் பிறந்துவிட்டேன் என்று கருதிச் சாம்பல் குவியலுக்குப் பக்கத்தில் என்னை ஒதுக்கி வைத்துவிட்டார்கள் என்றும், அந்த நேரத்தில் பக்கத்து வீட்டைச் சேர்ந்த சம்பூரணப்பாட்டி என்பார் வந்தார் என்றும், அவர் ஒதுக்கப்பட்டுக் கிடந்த குழந்தையின் அருகே வந்து, கொழுந்து வெற்றிலை ஒன்றை எடுத்து குழந்தையின் மூக்கின் அருகிலே கொண்டுபோய் மூச்சு இருக்கிறதா? இல்லையா? என்று சோதித்துப் பார்த்தார் என்றும், வெற்றிலையின் நுனி அசைந்து ஆடுவதைக் கண்டு, மூச்சு இருக்கிறது என்பதை அறிந்துகொண்டு, குழந்தையாகிய என்னை வாரி எடுத்துத் தடவிக் கொடுத்தார் என்றும், அதன்பிறகு நான் நன்றாக மூச்சுவிடத் தொடங்கிக் கத்த ஆரம்பித்தேன் என்றும் என் தாயார் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.*

குழந்தையாகிய எனக்கு மூச்சு இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்ட சம்பூரணப்பாட்டி அவர்கள் மருத்துவம் பார்த்த பெண்களிடம், ''அட பாவிகளா! குழந்தை செத்து விட்டது என்று எப்படி முடிவு செய்தீர்கள்! குழந்தைக்கு மூச்சு இருக்கிறதேடி!'' என்று இரைச்சல் போட்டு, அவர் களைக் கண்டித்தார்களாம்.

எனது வாழ்க்கையில் பல இன்னல்களையும், இழப்புக்களையும், இடுக்கண்களையும், இடையூறுகளையும், சோதனைகளையும் நான் தாண்டி வந்திருக்கிறேன் என்றாலும், பிறந்தபோதே ஒரு சோதனைக்கு ஆளாகியிருக்கிறேன் என்பதை என் தாயார் மூலம் அறிந்தபோது, நானே வியந்துபோனேன்.

குழந்தையாய் இருந்தபோது மிகவும் நலிந்து, மெலிந்து காணப்பட்ட என்னைக் கண்ணுங்கருத்துமாகப் பேணி வளர்ப்பதில் என் தாயாருக்கு அரும்பெருந் துணையாக என் தாயார் வழி ஆத்தாள் பொன்னம்மாள் அம்மையார் அவர்களும், தாத்தா சீனிவாசனார் அவர்களும் பெரும் பாடுபட்டு வந்திருக்கிறார்கள்.

## இளமைப்பருவம்

என் தந்தையார் தஞ்சைமாவட்டம் பட்டுக்கோட்டை யில் பணியாற்றி வந்தாலும், நான் ஐந்தாவது வயதை அடையும் வரையில், பெரும்பொழுது திருக்கண்ண புரத்தில், தாய்மாமன் சௌரிராசனார் அவர்களது அரவணைப்பிலேயே வளர்ந்துவந்திருக்கிறேன்.

எனது இளமைக் காலத்தில், திருக்கண்ணபுர சூழ்நிலை எனக்கு மகிழ்ச்சி தரத்தக்கதாகவே அமைந்திருந்தது. திருக்கண்ணபுரம் புகழ்மிக்க பெருமாள் கோவிலும், பரந்த திருக்குளமும், அகன்று விரிந்த தேரோடும் தெருக்கள் நான்கினையும் ஒருங்கே கொண்ட ஒரு அழகிய சிற்றூராகும்.

அது ஐந்துக்கு மேற்பட்ட ஆழ்வார்களால் சிறப்பித்துப் பாடப்பட்ட சீரூராகும். கோயிலில் அடிக்கடி நடைபெற்ற திருவிழா நிகழ்ச்சிகளும், கொட்டுமேள இசை நிகழ்வு களும், விறலியரின் ஆடல் பாடல்களும், ஏராளமான வழிப்போக்கர் வந்துபோகும் நிகழ்ச்சிகளும் சிறுவனாக இருந்த எனக்குப் பெருமகிழ்ச்சியை அளிப்பனவாக அமைந்திருந்தன.

மாணவப் பருவ காலத்தில், நான் பட்டுக்கோட்டை உயர்நிலைப் பள்ளியிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பயின்றுவந்தேன் என்றாலும், விடுமுறைக் காலங்களில், என் தாய் தந்தையர், உடன் பிறந்தார் ஆகிய வர்களோடு திருக்கண்ணபுரத்திற்கும், வடக்காலத்தூருக்கும் சென்று தங்கியிருந்து இனிமையர்கப் பொழுதுபோக்குவது உண்டு.

இளமைக் காலத்தில் நகர்ப்புறச்சூழல்களிலும், சிற்றூர்ப் புறச் சூழல்களிலும் நன்கு பழகிடும் வாய்ப்பு ஏற்பட்டிருந்த தானது, எனக்குப் பிற்காலத்தில் பெரிதும் பயன்படுவ தாகவே அமைந்திருந்தது என்று குறிப்பிடலாம்.

நான் திருக்கண்ணபுரத்தில் சிறுவனாக இருந்தபோது, பெருமாள் கோயிலில் நடைபெறும் தேர்த் திருவிழாக்களில் கலந்துகொள்வதில் பெருமகிழ்ச்சி ஏற்படுவது உண்டு. என் மாமன் சீ. சௌரிராசன் அவர்கள் கிராம அதிகாரியாகவும், ஊர் நாட்டாண்மைக்காரராகவும், பெருமாள் கோயிலின் அறங்காவலராகவும் இருந்துவந்த காரணத்தால், கோயில் விழாக்களில் தனி மரியாதையோடு கலந்துகொள்வதற்கு நல்ல வாய்ப்புகள் ஏற்பட்டிருந்தன. பெருமாள் தெருவலம் வரும்போது, பல்லக்கு - சப்பரம் - தேர் போன்றவற்றில் நானும் ஏறி ஓர் ஓரமாக உட்கார்ந்துகொண்டு, காட்சிகளை யெல்லாம் கண்டுகளிப்பேன்.

பெருமாள் கோயிலில் வழங்கப்படும் 'முனியோதரன் பொங்கல்' என்பது மிகப் புகழ்வாய்ந்தது. அரிசிச் சோறு - பச்சைப் பயறு - வெல்லம் - நெய் கலந்து உருவாக்கப்படும் அந்தப் பொங்கல் உண்ணுவதற்கு மிக சுவை பயப்பதாக இருக்கும். பொங்கல் மட்டுமல்லாமல், புளியோதரை, வடை, தோசை போன்ற உணவு வகைகளும் கோயிலில் மிகச் சிறப்பாகத் தயாரிக்கப்படும். அவற்றை நாள்தோறும் எங்கள் குடும்பத்தினர் உண்டு மகிழ்வார்கள்.

திருக்குளத்தில் ஆண்டுதோறும் தெப்பம் விடும்போதும், அதில் ஏறி உட்கார்ந்து திருக்குளத்தில் வலம் வருவது என்பது, எனக்குப் பெருமகிழ்ச்சியை ஊட்டும். பொதுவாகத் திருக்கண்ணபுர வாழ்வு எனக்குத் தனிப் பேரின்பத்தைத் தருவதாகவே அமைந்திருந்தது.

# 5

## பள்ளிக்கல்விப் பயிற்சி

### பள்ளிக்கல்வி

*எனது பள்ளிக் கல்வி முழுவதும் பட்டுக்கோட்டை யிலேயே நடந்தேறியது. பட்டுக்கோட்டை காசாங்குளம் கரையில் இருந்த, மாவட்டாண்மைக் கழகத் தொடக்கப் பள்ளியில் முதல் இரண்டு வகுப்புகளில் கல்விப்பயிற்சி பெற்றேன்.*

*என்னுடைய கல்வியின் தரம் உயரவேண்டும் என்பதற் காக, என் தந்தையார், என்னை இராயர் ஒருவர் நடத்திவந்த தனியார் தொடக்கப்பள்ளியில் சேர்த்தார்கள். அதே பள்ளியில்தான் என் இளவல் செழியனும் சேர்க்கப்பட்டான். அங்கு, முதல் நான்கு வகுப்புகளுக்கு முறையே திங்கள் ஒன்றுக்கு கால்-அரை-முக்கால்-ஒரு ரூபாய் என்று கட்டணம் செலுத்திக் கற்கவேண்டியிருந்தது.*

*பின்னர் நானும், என் இளவல் செழியனும் மாவட் டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட் டோம். நான் மேல் வகுப்பிலும், என் இளவல் செழியன் ஒரு ஆண்டு தள்ளி அடுத்த கீழ் வகுப்பிலும் பயின்று வந்தோம். நாங்கள் இருவரும் ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையான மாணவர்களாகவே திகழ்ந்துவந்தோம். அதற்குக் காரணம், எங்கள் தந்தையாரின் கண்டிப்பான, அதே நேரத்தில் கனிவான வளர்ப்பும், ஆசிரியர்கள் சிலர்*

அவ்வப்போது எங்களுக்கு அளித்துவந்த ஊக்கமும், உற்சாகமும் ஆகும்.

ஒவ்வொரு வகுப்பிலும் நாங்கள் இருவரும் ஒட்டு மொத்த மதிப்பெண்களைப் பொறுத்து, முதன்மையாக விளங்கிவந்த காரணத்தால், ஆண்டுதோறும் பள்ளியின் பாராட்டுப் பரிசுகளைப் பெற்றுவந்தோம்.

எனக்கு ஊக்கமும், உற்சாகமும் ஊட்டிவந்த பள்ளி ஆசிரியர்களில், இராசகோபால் நாயுடு (4ஆம் வகுப்பு), பஞ்சாபகேச அய்யர் (6ஆம் வகுப்பு), முத்துக்கிருட்டிண நாட்டார் (தமிழ்), சிங்காரவேலு சேதுராயர் (தமிழ்), கோவிந்தராசுலு நாயுடு (ஓவியம்), சுப்பிரமணிய அய்யர் (கணக்கு), கிருட்டிணசாமி நாயுடு (வரலாறு), விவேகானந்தம் பிள்ளை (கணக்கு), கிருட்டிணசாமி அய்யர் (ஆங்கிலம்), சுப்பிரமணிய அய்யர் (இயற்பியல்), சாம்-ஏ-துரை (தலைமை ஆசிரியர்), ஆராவமுதம் அய்யங்கார் (தலைமை ஆசிரியர்) ஆகியோர் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள்.

### விளையாட்டுப் பயிற்சி

உயர் நிலைப்பள்ளியில் படிக்கும்போது நானும், இளவல் செழியனும் விளையாட்டுக்களில் அதிக ஆர்வங் கொண்டு கால்பந்து - கைப்பந்து - வளையப்பந்து ஆகிய விளையாட்டுக்களில் பெரிதும் ஈடுபட்டோம். மாவட்ட அளவில் பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளுக்கிடையே நடைபெற்ற கைப்பந்து - கால்பந்து போட்டிகளில் கலந்து கொள்ள, மன்னார்குடி, தஞ்சாவூர், திருவாரூர், திருத்துறைப் பூண்டி, கும்பகோணம் போன்ற ஊர்களுக்குச் சென்று வந்தோம். சில இடங்களில் சிறப்பான முறையில் வெற்றி பெற்றுக் கேடயங்களையும், கோப்பைகளையும் பள்ளிக் கூடத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தோம்.

## இளைஞர் தமிழ்க் கழகம்

பள்ளி மாணவர்களிடையே தமிழ் இலக்கிய அறிவையும், உணர்வையும் வளர்க்கும் நோக்கத்தோடு, மாணவர்களாகிய நாங்கள் சிலர் ஒன்று சேர்ந்து, என்னுடைய தலைமையில் "திருவள்ளுவர் இளைஞர் தமிழ்க்கழகம்" என்ற பெயரில் அமைப்பு ஒன்றினை ஏற்படுத்தினோம். அதன் சார்பாகத் திங்கள் தோறும் இலக்கியக் கூட்டங்கள் நடத்தினோம். *தமிழவேள் த.வே. உமா மகேசுவரனார், சாமி வேலாயுதம், சாமி சிதம்பரனார், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், ஈழத்துச் சிவானந்த அடிகள் போன்ற தமிழ்ச் சான்றோர்கள் சிறப்புக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டார்கள். அவர்கள் சிறந்த இலக்கியத் தலைப்புகளில் சீரிய முறையில் சொற் பொழிவாற்றினார்கள்.*

*நாளடைவில், பட்டுக்கோட்டை உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் பலர், திருவள்ளுவர் இளைஞர் தமிழ்க் கழகத்தில் உறுப்பினர்களாக ஆகி, நல்ல உதவியும், ஒத்துழைப்பும் தந்துவந்தார்கள். எங்களது இளைஞர் தமிழ்க் கழகம் பொதுமக்களாலும் போற்றி வரவேற்கப்பட்டது.*

## அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமியோடு தொடர்பு

*அஞ்சாநெஞ்சன் என்று அழைக்கப்பட்டவரும், சுய மரியாதை இயக்கத்தின் ஈடும் எடுப்புமற்ற சொற்பொழி வாளராக விளங்கியவரும், நீதிக்கட்சியின் தளபதியாக விளங்கியவரும், பெரியாரின் பெருந்தொண்டராகத் திகழ்ந்தவருமான பட்டுக்கோட்டை கே.வி. அழகிரிசாமி அவர்களோடு நெருங்கிய தொடர்புகொள்ளும் வாய்ப்பு மாணவப் பருவக்காலத்திலேயே எனக்கும், இளவல் செழியனுக்கும் ஏற்பட்டது.*

*என் தந்தையார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தி னிடத்துப் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தால், அவருக்கும், அழகிரிசாமி அவர்களுக்கும் இடையே*

*சிறந்தமுறையில் நட்பு வளர்ந்திருந்தது. அழகிரிசாமி அவர்கள் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருகை தந்து, என் தந்தையாரோடும், என் தமையனார் இரா. சௌரிராசன் அவர்களோடும் நீண்ட நேரம் உரையாடிக்கொண்டிருப்பார்.*

*அவர் பட்டுக்கோட்டையில் இருக்கும்போது, பெரும் பொழுதைச் சாமு முதலி தெருவிலுள்ள மாரியம்மன் கோயிலின் பாழும் மண்டபம் ஒன்றில் தங்கியிருந்து கழிப்பார். மாரியம்மன் கோயிலின் பூசாரி பக்கிரி சட்டாம் பிள்ளை என்பவர் அவருக்கு நெருங்கிய நண்பர். நானும், இளவல் செழியனும் பலநேரங்களில் மாரியம்மன் கோயிலுக்குச் சென்று, அழகிரிசாமி அவர்களுடன் சுயமரியாதை இயக்கம் - நீதிக்கட்சி பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வோம்.*

அவரது சொற்பொழிவில் சொற்சுவையும், பொருட்சுவையும் சிறந்து காணப்படும். அவரது பேச்சு கேட்போர் அனைவரின் உள்ளங்களையும் ஈர்ப்பதாக அமைந்திருக்கும். அவரது பேச்சின் ஊடே, ஊடே நகைச்சுவைக் கருத்துக்கள் மிகச் சிறப்பாக மிளிரும். கேலியும், கிண்டலும் அவரது பேச்சில் அவ்வப்போது வெடித்துவிழும். அவர் மேடை ஏறிவிட்டால், சிங்கமென முழங்குவார். அவர் பகைவரைச் சாடும்போது கூர் அம்புகொண்டு குத்துவதுபோல் அமைந்திருக்கும். அவர் வாயிலிருந்து சொற்கள் வெளிவரும்போது, துப்பாக்கிக் குண்டுகள்போல் சீறிவரும். அவரது பேச்சில் உணர்ச்சி கொப்புளிக்கும்; எழுச்சி பீறிட்டுப் பொங்கும்; இடிமுழக்கம் ஒலிக்கும்; வலிவான குரலில் வல்லோசை எழும்பும்; அவரது கருத்துக்கள் பசுமரத்தில் அறைந்த ஆணிபோல் படியும்.

*அவர் பெரியாரிடத்தில் நீங்காப்பற்றும், பெரியாரின் கொள்கைகளிடத்தில் தணியா ஆர்வமும் கொண்டிருந்தார். சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் தமிழ்நாட்டின்*

பெருநகர், சிறுநகர், பேரூர், சிற்றூர் ஆகிய எல்லாப் பகுதிகளிலும் பரவ, அவரது அரும் பெருந்தொண்டு முக்கியக் காரணமாக அமைந்தது எனலாம். நாங்கள் நடத்தி வந்த 'திருவள்ளுவர் இளைஞர் தமிழ்க்கழகத்திற்குப்' பேராதரவு தந்து பெருந்துணையாக இருந்துவந்தார்.

❋ ❋ ❋

# 6

# கல்லூரிக் கல்வி

### கல்லூரிப் படிப்பு

*பட்டுக்கோட்டையில் பள்ளி இறுதி வகுப்பை முடித்த பிறகு, மேற்படிப்பைத் தொடர்வதற்கு நான் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் (இண்டர் மீடியட்) சேர்ந்தேன். என் உறவினர் வீட்டில் தங்கிக்கொண்டு படித்துவந்தேன். நான் தங்கியிருந்த வீட்டுச் சூழ்நிலை சரிப்பட்டு வராததாலும், இந்தி எதிர்ப்புப் போராட்டம் எழுச்சி அடைந்த நிலையில் கல்லூரி நிருவாகத்தினர் அளித்த நெருக்கடியாலும், படிப்புத் தொடர்பான செலவுகள், போக்குவரத்துச் செலவுகள் போன்றவற்றை ஈடுகட்ட என் குடும்ப வருவாய் போதுமானதாக அமையாததாலும், நான் என் படிப்பை இடையிலேயே நிறுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இது 1938-39 ஆம் ஆண்டுவாக்கில் நடை பெற்றது. அதன்பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தேன்.*

### அண்ணாமலைப் பல்கலைக் கழகப் படிப்பு

*எனக்கும், என் இளவல் செழியனுக்கும் எங்கள் தாய்-தந்தையர் அளித்த ஊக்கத்தின் அடிப்படையில், 1939இல், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து மேற்படிப்பைத் தொடங்கினோம். அப்போது, பட்டுக்*

கோட்டையைச் சேர்ந்தவரும், எங்களது குடும்பத்திற்கு மிகவும் வேண்டியவருமான சி. அய்யாறு அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் விளையாட்டுத் துறையில், துணை இயக்குநராகப் பணியாற்றிவந்தார். அவர் எங்களுக்குப் பெருந்துணையாக நின்று பேருதவியும், பெரும் ஒத்துழைப்பும் தந்துவந்தார்.

நானும், என் இளவலும் பல்கலைக் கழக உறையுள்-உணவு விடுதியில் தங்கியிருந்து பயின்றுவந்தோம். சி. அய்யாறு அவர்கள், எங்கள் குடும்பத்தின் குறைந்த அளவு வருமானத்தைக் கருத்தில்கொண்டு, என் இளவல் செழியனுக்கு, விடுதியில் இலவச உணவு கிடைக்க ஏற்பாடு செய்தார். விடுதியில் வாழ்ந்துவந்த மாணவர்கள் அனைவரும் சேர்ந்து, ஒரு ஏழை மாணவருக்குத் தங்கள் பொறுப்பில் இலவச உணவு வழங்குவது என்ற முறை இருந்து வந்தது. சி. அய்யாறு அவர்கள் மாணவர்களின் இசைவை எளிதில் பெற்று, இலவச உணவு வழங்கும் சலுகையை இளவல் செழியனுக்கு வாங்கித்தந்தார். அந்தக் காலத்தில் சி. அய்யாறு அவர்கள் மாணவர்களால் பெரிதும் விரும்பப்பட்ட ஒருவராகத் திகழ்ந்தார். அந்தச் சலுகை இரண்டு ஆண்டுகாலம் நீடித்தது. அதுவரையில் எங்களுக்கு இருந்த பொருளாதாரச் சிரமம் சிறிது குறைந்து காணப்பட்டது.

## முதுகலை (எம்.ஏ) வகுப்பு

நான் பல்கலைக் கழக இடைநிலை வகுப்பில் பயிலும் போது, கணக்கியல் - இயற்பியல் - கலவையியல் ஆகிய பாடங்களை விருப்பப்பாடமாக ஏற்றுப் பயின்றுவந்தேன். நான் இடைநிலை வகுப்பின் தேர்வில் தேறியவுடன், முதுநிலை வகுப்பில் எந்தப் பாடத்தைத் தேர்ந்தெடுப்பது என்ற நிலை ஏற்பட்டது. நான் மிகுந்த தமிழ்ப்பற்றுக் கொண்டிருந்த காரணத்தால், தமிழ் எம்.ஏ. வகுப்பில் சேர்ந்து

மேற்கல்வி பயில மிகவும் விரும்பினேன். என் இளவல் செழியன் கணக்கு எம்.ஏ. வகுப்பில் சேர்ந்து பயில விரும்பினான். தந்தையாரின் இசைவைப் பெற்று இருவரும் எம்.ஏ. வகுப்புகளில் சேர்ந்து பயிலத் தொடங்கினோம்.

## தனி அறையில் வாழ்ந்து தனிச்சாப்பாடு பெறுதல்

எம்.ஏ. வகுப்புக்கான கல்விக்கட்டணம், தங்கும் விடுதிச் செலவு, உணவுச் செலவு ஆகியவைகளை எங்களால் சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்டது. எனவே, நாங்கள் இருவரும் பல்கலைக் கழக உறையுள்-உணவு விடுதியை விட்டு வெளியேறி, அண்ணாமலை நகரின் அருகில் உள்ள தெற்கிருப்பு என்ற பகுதியில், ஒரு சிறிய அறையை ரூபாய் ஐந்துக்கு வாடகைக்கு எடுத்துக்கொண்டு, அதில் தங்கினோம். அந்தக் காலத்தில் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பேராசிரியர், இயக்குநர், அலுவலர் போன்றோர், பல்கலைக் கழக உணவு விடுதியிலிருந்து, காலை-நண்பகல் - இரவு ஆகிய நேரங்களில், எடுப்புச் சாப்பாடு எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்த வாய்ப்பைப் பயன் படுத்தி, நாங்கள் இருவரும், விளையாட்டுத்துறைத் துணை இயக்குநர் சி. அய்யாறு அவர்கள் மூலம், உணவு விடுதியிலிருந்து ஒரு எடுப்புச் சாப்பாடு எடுத்துக்கொண் டோம். இந்த வகையில் சி. அய்யாறு அவர்கள் பெரிதும் உதவி செய்தார். அந்த ஒரு எடுப்புச் சாப்பாட்டை நானும், என் இளவலும் பகிர்ந்து சாப்பிட்டோம். ஒரு எடுப்புச் சாப்பாடு இருவருக்கும் போதுமானதாக இருந்தது. நாங்கள் ஒரு சாப்பாட்டுக்குரிய தொகையை மட்டும் செலுத்திவிட்டு, இரண்டுபேரும் உணவு உண்டுவந்தோம். நாங்கள் செய்துகொண்ட இந்த ஏற்பாட்டின்மூலம், உறையுள்செலவு - உணவுச் செலவு ஆகியவை பெருமளவுக்குக் குறைந்தன. நாங்கள் இருவரும் எம்.ஏ. வகுப்புகளை முடிக்கும் வரையில் இந்த ஏற்பாடே நீடித்துவந்தது.

அப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்றுவந்த அ. காந்திமதிநாதன், அ. சுப்பையா ஆகியோர் எங்களுக்கு உறவினராகவும், உற்ற நண்பர் களாகவும் இருந்துவந்தனர். எங்களுடைய பாட நூல்கள், குறிப்பேடுகள் போன்றவற்றைப் பாதுகாப்பாக வைத்து எடுத்துப் படிக்க, அவர்களின் தங்கும் விடுதியின் அறைகள் எங்களுக்குப் பயன்பட்டன. அவர்கள் தங்கள் அறைகளை நாங்கள் பயன்படுத்திக்கொள்ள வசதி ஏற்படுத்தித் தந்தது என்றென்றும் நன்றிக் கடப்பாட்டிற்கு உரிய செயலாகும்.

இரவு நேரங்களில் பல்கலைக் கழக விடுதிக்குள், வெளிப்புறத்து மாணவர்கள் நுழையவோ, அங்குத் தங்கி யிருக்கவோ அனுமதியில்லாத காரணத்தால், இரவு நேரங்களில் படிப்பதற்கும், படுப்பதற்கும் ஏற்ற ஒரு வசதி யான இடத்தைத் தேடிக்கொண்டிருந்தோம். எங்களுடைய நிலையை அறிந்துகொண்ட தமிழ்த்துறைத் தலைவரும், தமிழ்ப் பேராசிரியரும் ஆன கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள், தமிழ் வகுப்புகள் நடைபெறும் அறைகளில் ஒன்றை, மின்விளக்கு வசதியோடு, இரவு நேரத்தில் மட்டும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், எங்களுக்கு ஏற்பாடு செய்துதந்தார். நாங்கள் இருவரும் அந்த அறையைப் பயன்படுத்திக்கொண்டு, இரவு நேரத்தில் படிப்பது, பின்னர் படுத்துறங்குவது, மறுநாள் காலையில் காலி செய்துவிடுவது போன்ற கடமைகளைச் செய்துவந்தோம்.

எங்களைப் போன்ற வசதிக்குறைவான மாணவர்கள் வேறு சிலரும், எங்களோடு சேர்ந்து, இரவு நேரத்தில், வகுப்பு அறையைப் பயன்படுத்திக்கொள்ள விருப்பந்தெரி வித்தார்கள். அப்படிப்பட்டவர்களின் விருப்பத்தை நிறை வேற்றி வைக்க, நாங்களும் உடன்பட்டோம். அவர்களில் புலவர் ஆ. வீரபாகு, புலவர் முத்தழகன், புலவர் வள்ளலரசு, புலவர் மா. நன்னன், புலவர் வேலாயுதம், ஆதிவராகன், சோலையரசு போன்றவர்கள் நினைவில் தங்கியிருக்கும் முக்கியமானவர்கள் ஆவார்கள்.

நாங்கள் இரவில் படித்துக்கொண்டிருந்தபோது, பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எம். இரத்தினசாமி அவர்கள், எதிர்பாராத வகையில் அறையில் நுழைந்து, நாங்கள் படித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தார். எங்களுடைய நிலைமைகளையெல்லாம் கேட்டறிந்தார். அவர் எங்கள் மீது இரக்கங்கொண்டு, நாங்கள் எங்களது பாடநூல்கள், குறிப்பேடுகள் போன்றவற்றை வைத்து எடுப்பதற்குப் பயன்படும் வகையில், வகுப்பு அறையிலேயே அலமாரிகள் சிலவற்றை அமைத்துத் தந்தார். அந்த ஏற்பாடு எங்களுக்கு மேலும் நல்ல வசதியை ஏற்படுத்தித் தந்தது.

### துணைவேந்தர்கள்

நான் படித்த 1939ஆம் ஆண்டுக்கும், 1944ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட ஐந்தாண்டு காலத்தில், மூன்று துணைவேந்தர்கள் பணியாற்றினார்கள். அவர்கள், 'ரைட் ஆனரபில்' வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார் (1939-1940), சர் கே.வி. ரெட்டி (1940-1942), பேராசிரியர் எம். இரத்தினசாமி (1942-1944) ஆகிய மூவரும் ஆவர்.

மகாகனம் வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார் அவர்கள், ஆங்கில மொழியில் மிகவும் வல்லுநராகத் திகழ்ந்த காரணத்தால், பல்கலைக் கழக இடைநிலை வகுப்பில் பயிலும் மாணவர்களுக்குப் பயன்படும் விதத்தில், வாரத்திற்கு ஒருமுறை சிறப்பு ஆங்கில வகுப்பை மேற்கொண்டு, ஆங்கிலப் பேச்சு-எழுத்து ஆகியவற்றின் தரம் உயர, அரிய அறிவுரைகள் பலவற்றை வழங்கினார்.

சர். கே.வி. ரெட்டி அவர்கள் அரசு நிருவாகம் பற்றிச் சிறப்பாக அறிந்திருந்த காரணத்தால், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நிருவாகத்தைப் பலவகைகளிலும் செம்மைப்படுத்தினார்.

பேராசிரியர் எம். இரத்தினசாமி அவர்கள் கல்வித் துறையிலும், ஆட்சித் துறையிலும் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தினால், பல்கலைக் கழகத் துறைகளைச் சீர்படுத்தவும், செம்மையாக்கவும், விரிவுபடுத்தவும், வலிவடையச் செய்யவும் அரும்பாடுபட்டார். மாணவர்களின் நலனில் மிகவும் அக்கறை காட்டி, பல நன்மைகளை மாணவர்களுக்குச் செய்து தருவதில் முயன்று பாடுபட்டார்.

## தமிழ்த்துறை

நான் தமிழ் ஆனர்ஸ் (எம்.ஏ) வகுப்பில் சேர்ந்து படிக்கும் போது, எங்கள் வகுப்பில் என்னுடன் ஏழு பேர்கள் பயின்று வந்தனர். என்னுடன் பயின்றவர்கள், மாணவர் அன்பழகன், பூ. கணேசன், எம்.எல். பாண்டியன், செல்வி நாகாம்பாள், சின்னத்தம்பி, சிவராமன், எஸ்.எஸ். அய்யர் ஆகியவர்கள் ஆவர்.

நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்த போது, பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்கள் தமிழ்த் துறையின் பொறுப்புத் தலைவராக இருந்துவந்தார். பின்னர் பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் தமிழ்த் துறைத் தலைவரானார்.

நான் தமிழின் இலக்கண-இலக்கியங்களில் நல்ல பயிற்சியும் - தேர்ச்சியும் - வளர்ச்சியும் பெறுவதற்கு உறு துணையாக இருந்தவர்கள், பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, பண்டிதமணி கதிரேசச் செட்டியார், டாக்டர் ஏ.சி. செட்டியார், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், ஒளவை துரைசாமிபிள்ளை, பூவராகம் பிள்ளை, கந்தசாமியார், கோ. சுப்பிரமணிய பிள்ளை, மு. அருணாசலம் பிள்ளை, சதாசிவ பண்டாரத்தார் போன்றவர்கள் ஆவர்.

பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை திருக்குறள், தேவாரம்,திருவாசகம், சைவ சித்தாந்தம் ஆகியவற்றைப் பயிற்றுவிப்பதில் சிறந்தவராகத் திகழ்ந்தார். பண்டிதமணி

மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்றவைகளை நயம் படவும், நகைச்சுவைபடவும் எடுத்து விளக்குவதில் வல்லவராக விளங்கினார். டாக்டர் ஏ.சி. செட்டியார் அவர்கள் தமிழ் இலக்கிய வரலாறு, மொழிநூல், புற-நானூறு, பதிற்றுப்பத்து போன்றவற்றைப் பயிற்றுவிப்பதில் சிறந்து காணப்பட்டார். நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்க இலக்கியங்கள் ஆகியவற்றைப் பயிற்றுவித்து வந்தார். ஔவை துரைசாமி பிள்ளை அவர்கள் அகநானூறு, குறுந் தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, சிலப்பதிகாரம் போன்றவைகளைப் பயிற்றுவித்து வந்தார். பூவராகம் பிள்ளை, கந்தசாமியார் போன்றவர்கள் தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்களைத் தெள்ளத் தெளி வாகப் பயிற்றுவித்துவந்தனர். கோ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் கம்ப இராமாயணம், சீவகசிந்தாமணி, பெருங்கதை போன்றவைகளை நயம்படப் பயிற்றுவித்து வந்தார். மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் பெரிய புராணம், திருவிளையாடல் புராணம், கந்தபுராணம் போன்றவற்றைப் பயிற்றுவித்து வந்தார். சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் கல்வெட்டுக் குறிப்புக்கள் பற்றியும், தமிழர் வரலாறு பற்றியும் பயிற்றுவித்து வந்தார்.

நான் பேச்சாற்றலையும், எழுத்தாற்றலையும் ஓரளவுக் குப்பெற, என்னைப் பலவகைகளிலும் ஊக்குவித்தவர்கள், பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை, டாக்டர் ஏ.சி. செட்டியார், ஔவை துரைசாமி பிள்ளை ஆகியோர் ஆவர்.

### தமிழ்ப்பட்டிமன்றம்

நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிக்கத் தொடங்கிய காலத்தில் காங்கிரசு - கம்யூனிஸ்டுக் கட்சி களிடம் பற்றுக்கொண்ட மாணவர்கள் பலராக இருந்தார்கள். திராவிட இயக்கக் கொள்கைகளிடத்தே பற்று வைத்துத் திராவிட இயக்கத் தலைவர்களையும், பெரியார்

இராமசாமி அவர்களையும், பேரறிஞர் அண்ணா அவர்களையும் மதிக்கக் கூடியவர்கள் என்று ஒரு சிலர்தான் இருந்தோம்.

முதலில் நான், இரா. செழியன், பேராசிரியர் க. அன்பழகன், பூ. கணேசன் மற்றும் சிலர்தான் இருந்தோம். அடுத்தடுத்து வந்த ஆண்டுகளில், இரெ. இளம்வழுதி, கே. ஏ. மதியழகன், இராசகோபால், ஆ. வீரபாகு, முத்தழகன், சோலைஅரசு, வள்ளலரசு, மா. நன்னன், அரங்கசாமி, வை. கோவிந்தன் போன்ற பல மாணவர்கள் வந்து, எங்களுடன் திராவிட இயக்கத்தை வளர்ப்பதில் இணைந்து செயல்பட்டார்கள்.

பல்கலைக்கழகத் தமிழ்ப் பட்டிமன்றம் அப்போது ஒவ்வொரு சனிக்கிழமை காலையிலும் கோகலே மண்ட பத்தில், ஏதேனும் நடைமுறையில் இருக்கும் ஒரு அரசியல் கருத்தை விவாதத்திற்குரிய தலைப்பாகக்கொண்டு நடை பெறும். ஒரு சாரார் ஒட்டியும், மற்றொரு சாரார் வெட்டியும் பேசுவார்கள். தமிழ்ப் பேரவையின் தலைவர் பட்டிமன்றத் திற்குத் தலைமை தாங்குவார்.

பட்டிமன்றத்தில் வாதாடப் புகும் இரு சாராரும் காங்கிரசு-கம்யூனிஸ்டு மாணவர்களாகவே இருந்துவந்த தால், விவாதங்கள் பெரும்பாலும் சூடாகவோ, ஒளி மிகுந்ததாகவோ, விறுவிறுப்புக் கொண்டனவாகவோ இருந்ததில்லை.

மாணவர் க. அன்பழகன் அவர்கள், பள்ளிப்பருவக் காலத்திலேயே பேச்சாற்றல் உடையவராகத் திகழ்ந்த காரணத்தால், அவர் திராவிட இயக்கக் கருத்துக்களைத் துணிவோடு எடுத்துவைக்கப் பட்டிமன்றத்தில் பங்கு கொள்வார். அவர் தன்னந்தனியாக இருந்து பட்டிமன்றத்தில் வாதிட்டுவந்தது, திராவிட இயக்கத்திற்குப் போதுமான வலிவு சேர்க்காததால், நானும் எனது பேச்சாற்றலை

வளர்த்துக்கொண்டு, அவருக்குத் துணையாகத் துணிச்சலோடு பட்டிமன்றம் ஏறித் திராவிட இயக்கக் கருத்துக்களுக்கு ஆதரவாக வாதாடவேண்டும் என்று ஆர்வம் கொண்டேன்.

ஒரு தடவை ''இந்தி இந்தியாவின் பொதுமொழியாக ஆகவேண்டுமா? ஆகக்கூடாதா?'' என்ற தலைப்பின்கீழ் பட்டிமன்ற விவாதம் நடைபெற்றது. மாணவர் க. அன்பழகன் 'ஆகக்கூடாது' என்பதற்கான காரணங்களை எடுத்துவைத்துப் பேசினார். மாறுபட்ட கருத்துடைய மாணவர்கள் பலர் ''ஆகவேண்டும்'' என்ற கருத்தை வலியுறுத்திப் பேசினார்கள். அப்பொழுது அவர்களின் கருத்தை மறுத்துப்பேச நான் மிக்க வேகத்துடனும், ஆர்வத்துடனும் பட்டிமன்ற மேடை ஏறி, ''இந்தி இந்தியாவின் பொதுமொழியாக ஆகக்கூடாது'' என்ற கருத்தை அழுத்தந் திருத்தமாக, அடுக்கடுக்கான காரணங்கள் பலவற்றையும் எடுத்துவைத்துப் பேசினேன். அரசியல் - மொழியியல் - வரலாற்றுஇயல் தொல்பொருளியல் வழக்காற்றியல் ஆகியவற்றின் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு, இந்தித் திணிப்பை எதிர்த்து ஆணித்தரமாகப் பேசினேன். கூட்டத்தில் கூடியிருந்த பொதுவான மாணவர்கள் என்னுடைய வாதங்களுக்கு ஆதரவு அளிக்கும் முறையில் இடையிடையே கையொலி எழுப்பி, ஆரவாரித்து மகிழ்ந்தார்கள். இறுதியில் வாக்கெடுப்பு நடைபெற்றபோது, பெரும்பாலான மாணவர்கள், எங்கள் பக்கக் கருத்துக்கே, அதாவது ''இந்தி பொதுமொழி ஆகக்கூடாது'' என்ற கருத்துக்கே ஆதரவு அளித்தார்கள்.

பட்டிமன்ற நிகழ்ச்சி முடிந்தவுடன், பல மாணவர்கள் எனது பேச்சை வியந்து பாராட்டியதோடு, நான் அடிக்கடி பட்டிமன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு திராவிட இயக்கக் கொள்கைகளுக்காக வாதாடவேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள்.

அதன்பிறகு தொடர்ந்து நடைபெற்ற பட்டிமன்ற நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் கலந்துகொண்டு, திராவிட இயக்கக் கருத்துக்களுக்கு வலிவு தேடும் வகையில் வாதாடி வந்தேன். நாளடைவில் திராவிட இயக்க மாணவர்களில் பேச்சாளர்கள் பலபேர் தோன்றிப் பட்டிமன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

## திராவிட மாணவர் இயக்கம்

காலம் செல்லச் செல்ல, பட்டிமன்ற விவாதங்கள் அனைத்தும் திராவிட மாணவ இயக்கத்திற்கு ஆதரவாகவே அமைந்தன. 1942-43ஆம் ஆண்டுவாக்கில் திராவிட மாணவர் இயக்க உணர்ச்சி அண்ணாமலைப் பல்கலைக் கழக வளாகத்தில் வளரத் தொடங்கிக் காங்கிரசு - கம்யூனிஸ்டு ஆகிய கட்சிகளின் உணர்ச்சி மங்கத் தொடங்கிற்று.

1943-44ஆம் ஆண்டுவாக்கில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், திராவிட மாணவர் இயக்கம் மிகச் சிறப்பாகவும், செம்மையாகவும் வளர்ந்து, மிக்க செல்வாக்குடனும், புகழுடனும் விளங்கத் தொடங்கிற்று.

எங்களுக்குப் பின்னால், தொடர்ந்து வந்த ஆண்டுகளில், திராவிட மாணவ இயக்கத்தினர் பலர் திராவிட இயக்கத்தின் செல்வாக்கை மேலும் உயர்த்திப் பல்கலைக் கழக மாணவர்களிடையே பெரும் ஆதிக்கமும், ஆக்கமும் ஏற்பட வழி கோலினர்.

நானும் என்னுடன் சேர்ந்த மற்ற மாணவர்களும் மேற்கொண்ட முயற்சி நாளுக்குநாள் வளர்ந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிறந்த மாணவப் பேச்சாளர்களை உருவாக்கி, நாட்டிற்குத் தந்துகொண்டிருக்கிறது என்ற புகழுரை ஏற்படக் காரணமாக அமைந்தது.

## தமிழ் இலக்கிய மன்றம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், தமிழ்த் துறையின் சார்பாகத் தமிழ் இலக்கிய மன்றம் என்ற ஒரு

அமைப்பு இருந்தது. அதற்குத் தமிழ்த்துறையின் தலைவர் தலைவராகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் ஒருவர் செயலாளராகவும் இருந்துவந்தனர்.

1942-43, 1943-44 ஆகிய ஆண்டுகளில், தமிழ் இலக்கிய மன்றத்தின் செயலாளராக, நான் ஒரே மனதாகத் தேர்ந் தெடுக்கப்பட்டேன். தனித்தமிழ் உணர்வை வளர்க்கும் நோக்கத்தோடு மன்றம் செயல்பட்டுவந்தது. அதன் சார்பாக இயல்பான கூட்டங்கள் கோகலே மண்டபத்திலும், சிறப்புக் கூட்டங்கள் பல்கலைக்கழகப் பட்டமளிப்புவிழா மண்டபத் திலும் நடைபெற்றன. தமிழ்த்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள், மன்றம் சிறப்பாக நடைபெறப் பெரும் ஒத்துழைப்புத் தந்து வந்தார்.

மன்றத்தின் சார்பாக நடந்த சிறப்புக் கூட்டங்களில், விபுலானந்த அடிகள், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், டாக்டர் இரா.பி. சேதுபிள்ளை, பன்மொழிப்புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், மறைமலை அடிகளார், திரு. வி. கலியாண சுந்தரனார், டி.கே. சிதம்பரநாதனார், கா. சுப்பிரமணிய பிள்ளை, பண்டிதமணி கதிரேசச் செட்டியார், டாக்டர் ஏ.சி. செட்டியார், ஔவை துரைசாமி-பிள்ளை, நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் போன்ற தமிழ்ச் சான்றோர்களை அழைத்துச் சீரிய சொற்பொழிவுகள் ஆற்றும்படி நான் கேட்டுக் கொண்டேன். அவர்களும் எனது அழைப்பினை ஏற்று, வருகை தந்து, சொற்பொழிவு-களாற்றிப் பெருமைப்படுத்தினார்கள்.

ஒவ்வொரு சிறப்புக் கூட்டத்திலும் நான் நன்றிகூறும் போது, அரைமணிநேரம் - முக்கால் மணிநேரம் எடுத்துக் கொண்டு பேசுவேன். அந்த எனது பேச்சுக்களை மாணவர் களும், ஆசிரியப் பெருமக்களும், சிறப்புச் சொற்பொழி வாளர்களும் மிகவும் போற்றி வரவேற்றார்கள். அந்த நாட்களில் தமிழ் இலக்கிய மன்றம் பெருமையையும்,

*புகழையும் பெற்றுச் சிறப்பாகவும், செம்மையாகவும் இயங்கி வந்தது எனலாம்.*

பல்கலைக் கழகத்திற்குப் பெரியார் - அண்ணா வருகை

*பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களையும், பேரறிஞர் அண்ணா அவர்களையும் பல்கலைக் கழகக் கூட்டங்களுக்கு அழைக்க முடியாத அரசியல் சூழ்நிலை நிலவிய அப்போது, துணை வேந்தராக இருந்த பேராசிரியர் எம். இரத்தினசாமி அவர்களின் அனுமதியையும், பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் இசைவையும் பெற்றுப் பெரியார் அவர்களை ஒரு சிறப்புக் கூட்டத்திற்கும், பேரறிஞர் அண்ணா அவர்களை மற்றொரு சிறப்புக் கூட்டத்திற்கும் வரவழைத்தேன். அவர்கள் இருவரும் 1943ஆம் ஆண்டில் இரு வேறு நாட்களில் சிறப்புவிருந்தினர்களாக வந்து சொற் பெருக்காற்றினார்கள்.*

பெரியார் அவர்கள் கலந்துகொண்ட தமிழ் இலக்கிய மன்றச் சிறப்புக் கூட்டத்தில், 'பகுத்தறிவு நெறி' என்பது பற்றி, இரண்டு மணி நேரத்திற்குமேல் ஆணித்தரமான முறையில் உரையாற்றினார். அந்தப் பேச்சு மாணவர்களுக்குப் புதிய உணர்ச்சியையும், புதிய ஊக்கத்தையும் அளித்தது. நான் தமிழ் மன்றச் செயலாளர் என்ற முறையில் அவரை முதலில் வரவேற்றும், இறுதியில் அவருக்கு நன்றி கூறியும் பேசிய பேச்சுக்களைக் கேட்டு, அவர், என்னை மிகவும் பாராட்டினார். நான் பல்வேறு பேச்சுப் போட்டிகளிலும், எழுத்துப் போட்டிகளிலும் கலந்துகொண்டு, வெற்றிபெற்று வாங்கிய கேடயங்கள் - வெள்ளிக் கோப்பைகள் - தங்கப் பதக்கங்கள் - பரிசு நூல்கள் ஆகியவற்றையெல்லாம் பார்த்துவிட்டுப் பெரியார் அவர்கள் என்னைப் பெரிதும் போற்றினார். பல்கலைக் கழகப் படிப்பு முடிந்தவுடன், திராவிட இயக்கப் பொதுத் தொண்டாற்ற வருமாறு அவர் என்னை அழைத்தார். நானும் அவரது ஆவலை நிறைவேற்றி வைக்க முயலுவதாகக் கூறி ஒப்புதல் அளித்தேன்.

தமிழ் இலக்கிய மன்றச் சிறப்புக் கூட்டத்தில் பேச, பேரறிஞர் அண்ணா அவர்கள் வருகை தந்தபோது, "ஆற்றோரம்" என்ற தலைப்பில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக அழகாகவும், அருமையாகவும், மாணவர்களெல் லாரும் வியந்து பாராட்டும் அளவுக்குச் சிறப்பான முறை யில் சொற்பொழிவாற்றினார். உலகத்தில் உள்ள சிறந்த நாகரிகங்களெல்லாம் எப்படி ஆற்றோரத்தில் தோற்றம் பெற்று, வளர்ச்சியடைந்து, செம்மையும், சிறப்பும் பெற்றன என்பது பற்றி, மிகத் தெளிவாக அவர் எடுத்துரைத்தார். காவிரியாற்றோரத்தில் வளர்ந்த திராவிட நாகரிகமும், பண்பாடும் எந்த எந்த வகைகளில் சிறந்து விளங்கி வருகின்றன என்பது பற்றியும் அவர் விளக்கிக்கூறினார். திராவிட நாகரிகம் கங்கையாற்று ஓரத்தில் வளர்ந்த ஆரிய நாகரிகத்தைவிட எவ்வகையில் மேம்பாடுடையது என்பது பற்றியும் அவர் தெளிவாகப் பேசினார்.

பெரியார் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் சீரிய உரைகள், திராவிட மாணவர்களிடையே மிகுந்த எழுச்சியை யும், கிளர்ச்சியையும் ஏற்படுத்தின. அவர்களின் பேச்சுக்கள் திராவிட இயக்க மாணவர்களிடையே எழுச்சியைத் தந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழக வளாகத்தில், திராவிட மாணவர் இயக்கம் ஆழமாக வேரூன்ற வழிவகுத்தன.

பெரியார் அவர்களை நடுவில் உட்காரவைத்து, திராவிட மாணவர்கள் பலரும் அவரைச் சூழ்ந்து இருந்து நிழற்படம் ஒன்று எடுத்துக்கொண்டோம். அந்தப் படத்திற்குத் "தன்மானக் கடலும் நன்மாணவ அலைகளும்" என்று தலைப்பிட்டு மகிழ்ந்தோம்.

## தனித்தமிழ்ப் பெயர்மாற்றம்

திராவிட மாணவ இயக்கத்தைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள், எங்கள் பெயர்களைத் தனித்தமிழ்ப் பெயர்களாக ஆக்கிக் கொள்வதில் பேரார்வம் கொண்டோம். அத்தகைய முயற்சியின் விளைவாகப் புதிய பெயர் மாற்றங்கள் தனித்

தமிழில் ஏற்படலாயின. என்னுடைய பெயரையும், நண்பர் களுடைய பெயர்களையும் தனித்தமிழில் மாற்ற நான் முயற்சி எடுத்துக்கொண்டேன்.

அவற்றில் நெடுஞ்செழியன் (நாராயணசாமி), அன்பழகன் (இராமையா), இளம்வழுதி (தண்டபாணி), மதியழகன் (சோமசுந்தரம்), செழியன் (சீனிவாசன்), வள்ளலரசு (தியாகராசன்), நன்னன் (திருஞானசம்பந்தம்), வில்லாளன் (கோதண்டராமன்), அரங்கண்ணல் (அரங்க-சாமி), அண்ணாமலை (அருணகிரி), இனியன் (ஆனந்தன்), இளம்பரிதி (ஆதித்தன்), அழகுநிலவன் (இராமச்சந்திரன்), எழில்மன்னன் (மனோகரன்), அருட்செல்வன் (கருணாநிதி), அருள்இன்பன் (கருணானந்தன்), மணவழகன் (கலியாண சுந்தரம்), பொன்னழகன் (கனகசுந்தரம்), மன்றவாணன் (சபாபதி), மெய்யழகன் (சத்தியமூர்த்தி), அழகரசன் (சுந்தரராசன்), மணிமொழியன் (மாணிக்கவாசகன்), வெற்றிச்செல்வன் (விஜயகுமார்) ஆகியவை குறிப்பிடத் தகுந்த பெயர் மாற்றங்களாகும்.

மாணவர்களிடையே தமிழ் மலர்ச்சி உணர்வு ஏற்பட, திராவிட மாணவர் இயக்கம் முக்கிய காரணமாக இருந்தது.

### பேச்சு - எழுத்துப்போட்டிகள்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான் ஆனர்ஸ் (எம்.ஏ.) வகுப்பில் பயின்று கொண்டிருந்தபோது, அண்ணா மலைப் பல்கலைக் கழகத்திலும், வேறு பல பல்கலைக் கழகங்களின் வளாகங்களிலும் நடைபெற்ற தமிழ்ப் பேச்சுப்போட்டி, தமிழ் எழுத்துப்போட்டி போன்றவற்றில் கலந்துகொண்டு, வெற்றி பெற்றுத் தங்கம் வெள்ளிப் பதக்கங்கள், வெள்ளிக் கோப்பைகள், கேடயங்கள், நூல்கள் ஆகியவற்றைப் பரிசுகளாகப் பெற்றிருக்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1942-43, 1943-44 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தமிழ்ப் பேச்சுப்போட்டி - எழுத்துப்போட்டிகளில் கலந்துகொண்டு, முதன்மையான வனாக வெற்றிபெற்றுப் பரிசுகளைப் பெற்றேன்.

'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' என்னும் ஆராய்ச்சிப் போட்டி யில் நான் ஈடுபட்டு, பத்துப்பாட்டு பற்றி ஒரு நீண்ட ஆராய்ச்சிக் கட்டுரை எழுதினேன். அதற்கான டாக்டர் சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார் நினைவுப்பரிசு எனக்குக் கிடைத்தது.

1943இல், பல பல்கலைக் கழகங்களிடையே ஆன தமிழ்ப் பேச்சுப்போட்டி ஒன்று, பெங்களூர்ப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக, அதில் கலந்துகொள்ள நானும், க. அன்பழகன் அவர்களும் சென்றோம். பல்வேறு பல்கலைக் கழகங்களின் சார்பாக மாணவர்கள் பலர் அந்தப் பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டனர். பேச்சுப் போட்டியில் முதல் மாணவ னாக நானும், இரண்டாவது மாணவராக க. அன்பழகன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெள்ளிக் கோப்பை களைப் பரிசாகப் பெற்றோம். பல்கலைக் கழகத்திற்கான கேடயம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கே கிடைத்தது.

1944 இல், திரு.வி.க.வின் மணிவிழாவையொட்டிப் பல்வேறு கல்லூரிகளுக்கிடையேயான பேச்சுப்போட்டி ஒன்று, சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனைப் பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி-சுந்தரனார் அவர்கள், சென்னை, சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஏற்பாடு செய்திருந்தார். அந்தப் பேச்சுப்போட்டியில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தின் சார்பாக நானும், ச. இராசகோபாலன் என்ற மற்றொரு

மாணவரும் கலந்துகொண்டோம். பேச்சுப்போட்டியின் நடுவராக சி.பா. ஆதித்தனார் இருந்தார். "இசைக்கு மொழி முக்கியமா? இல்லையா?" என்பது, பேச்சுப் போட்டியின் பொருளாக அமைந்திருந்தது. நான் "இசைக்கு மொழி முக்கியமானது ஆகும்" என்று வாதிட்டேன். நான் முதல் மாணவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ச. இராசகோபாலன் இரண்டாவது மாணவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதலாவது - இரண்டாவது ஆகிய இரண்டு பரிசுகளையும் நாங்களே பெற்றோம் என்பது மட்டுமல்லாமல், மூன்று அடி உயரமுள்ள வெள்ளிக் கோப்பை ஒன்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குப் பரிசாகக் கிடைத்தது.

அப்பொழுது, கல்லூரிகளில் பயின்ற திராவிட மாணவர் இயக்கத்தைச் சார்ந்த சிறந்த சொற்பொழிவாளர்களில் முக்கியமாக நான், க. அன்பழகன், ஏ.பி. சனார்த்தனம், இரெ. இளம்வழுதி, கே.ஏ. மதியழகன், தவமணி இராசன் போன்றவர்கள் நாட்டிற்கு நன்கு அறிமுகமாக்கப்பட்டோம்.

### தாடி வளர்ப்பதில் மகிழ்ச்சி

நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆனர்ஸ் (எம்.ஏ.) வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது, தாடி வளர்க்கவேண்டும் என்பதில் எனக்குத் தனிவேணவா இருந்துவந்தது. 1943-இல் தாடி வளர்க்கத் தொடங்கினேன்.

உலகத்தின் சிறந்த சான்றோர்கள், அறிவியல் அறிஞர்கள், கவிஞர்கள், அரசியல் தலைவர்கள் போன்றவர்கள் நீண்ட தாடியோடு தோற்றமளித்து வந்தது எனது உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. சாக்கிரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில், டெமாஸ்தெனிஸ், ஜியார்டனோ புரூனோ, கலீலியோ, காரல்மார்க்ஸ், ஏஞ்செல்ஸ், சார்லஸ் டார்வின், திருவள்ளுவர், இரவீந்தரநாத் தாகூர், பெரியார் போன்றவர்களின் தாடியோடு கூடிய தோற்றப்பொலிவு, தாடி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை எனக்கு ஊட்டிற்று.

பல்கலைக் கழக வளாகத்திலும், நாட்டிலும் நான் நடமாடி வந்தபோது என்னைப் பலரும் எளிதில் அடை யாளங்காண முடிந்தது. பெரியாரும், நானும் நாட்டின் பல பகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, 'வெண் தாடிப் பெரியார்' என்றும், 'இளந்தாடி நெடுஞ்செழியன்' என்றும் எங்களை அழைப்பார்கள். கழகத்தினரும், பொதுமக்களும் விருப்பத்துடனும், பெருமையுடனும் இவ்வாறு என்னை அழைத்தாலும், இத்தொடர்பில் என் தாயாருக்கு மனக் கவலை இருந்துவந்தது. தாடி வைத்துக்கொண்டதன் காரணமாகவும், அரசியலில் முழுநேரம் ஈடுபட்டிருந்த தாலும் திருமணமே செய்துகொள்ளாமல் நான் தொடர்ந்து பிரமச்சாரியாகவே இருந்துவிடுவேனோ என்று என் தாயார் அச்சக்கப்பட்டது எனக்குத் தெரியவந்தது. அவர்களுடைய அச்சம், மனக்கவலை ஆகியவற்றையும் கருத்தில்கொண்டு 1947 ஆகஸ்டு 15ஆம் நாளாகிய விடுதலை நாளன்று நான் எனது தாடியை அகற்றிவிட்டேன்.

❋ ❋ ❋

# 7

# சுயமரியாதை இயக்கப் பற்று

நான் பள்ளி மாணவனாகப் பயின்றுவந்த காலத்தி லிருந்தே சுயமரியாதை இயக்கத்தினிடத்திலும், அதன் பகுத்தறிவு நெறிக்கொள்கைகளினிடத்திலும் மிகுந்த பற்றுடையவனாக வளர்ந்துவந்தேன். அதற்கு அடிப்படைக் காரணம், என் தந்தையார் வ.சௌ. இராசகோபாலனா-ராவார்கள்.

## 'குடிஅரசு' ஏடும் சுயமரியாதைச் சங்கமும்

என் தந்தையார் அவர்கள், 1925ஆம் ஆண்டில் 'குடிஅரசு' வார ஏடு தொடங்கிய காலத்திலிருந்தும், 1926 இல் 'சுயமரியாதை இயக்கம்' தோற்றுவிக்கப்பட்ட காலத்தி லிருந்தும், பெரியார் இராமசாமி அவர்களால், அழுத்தந்திருத்தமாகவும், ஆணித்தரமாகவும் பரப்பப்பட்டு வந்த சீர்திருத்தக் கொள்கைகள், பகுத்தறிவு நெறிக் கொள்கைகள் ஆகியவற்றில் நீங்காப்பற்றும், தணியா ஆர்வமும் கொண்டிருந்தார்கள்.

பெரியார் அவர்கள் காங்கிரசுக் கட்சியில் இருக்கும் போதே, சமுதாயச் சீர்திருத்தம், தீண்டாமை ஒழிப்பு, சாதி-மத பேதம் ஒழிப்பு, சமத்துவம், சுயமரியாதை உணர்வு, பகுத்தறிவு நெறி போன்றவற்றை மிகுந்த எதிர்ப்புகளுக் கிடையே துணிச்சலோடு பரப்பிவந்தார். மக்களிடையே

சுயமரியாதை உணர்வையும், பகுத்தறிவு உணர்வையும் ஊட்டவேண்டி, 1925 மேத் திங்கள் 2ஆம் நாள் 'குடிஅரசு' என்னும் வார ஏட்டினை ஈரோட்டில் தொடங்கினார்.

பெரியார் அவர்கள், காங்கிரசுக் கட்சியில் சாதிவெறி, மதவெறி, வருணாச்சிரமவெறி, சனாதன வெறி, ஏற்றத் தாழ்வு மனப்பான்மை போன்ற தீயபண்புகள் ஆதிக்கம் செலுத்துவதை எதிர்த்து ஆத்திரங்கொண்டு, 1925 நவம்பர்த் திங்கள் 22ஆம் நாள், காஞ்சிபுரம் மாநாட்டில், "பார்ப்பனர் ஆதிக்கத்தையும், அதற்குத் துணைபோகும் காங்கிரசுக் கட்சியை யும் ஒழிப்பதுதான் இனி என் வேலை" என்று சொல்லிவிட்டு வெளியேறினார்.

தமிழக மக்களிடையே தன்மான உணர்வையும், பகுத் தறிவு நெறிக் கருத்துக்களையும் பரப்பவேண்டி, 1926ஆம் ஆண்டில், பெரியார் அவர்கள் 'சுயமரியாதைச் சங்கத்தைத்' தோற்றுவித்தார்.

'குடிஅரசு' ஏடும், சுயமரியாதைச் சங்கமும் வீழ்ச்சி யுற்றுக் கிடந்த தமிழகத்திற்கு எழுச்சி ஊட்டின; விசை யொடிந்து கிடந்த உள்ளங்களுக்கெல்லாம் வலிமை தந்தன; மதத்தின் பேராலும், சாதியின் பேராலும் சமுதாயத்தைச் செல்லரித்துவந்த வஞ்சகம் - சூது - சூழ்ச்சி - பொய் - புனை சுருட்டு - கட்டுக்கதைகள் - கற்பனைக் கடவுள் தத்துவம் - குருட்டு நம்பிக்கைகள் மூடப்பழக்க வழக்கங்கள் போன்றவை தொகையாக எதிர் நிறுத்தப்பட்டுத் தூள் தூளாக்கப்பட்டன; தமிழ்ப் பெருங்குடி மக்களிடையே தன்மான உணர்ச்சியையும், பகுத்தறிவுச் சிந்தனையையும் வளர்க்க அவை பெரிதும் பாடுபட்டன; சமுதாயத்தில் உண்மை - உழைப்பு - உரிமை - உயர்வு ஆகியவை நிலவ, அவற்றை வலியுறுத்திவந்தன; சமுதாயத்தில் சமத்துவச் சமதர்ம நிலை ஏற்படப் பெரும்பாடுபட்டன.

சுயமரியாதை இயக்கத்தோடு நெருங்கிய தொடர்பை யும், பகுத்தறிவு நெறியினிடத்துப் பற்றையும், பிடிப்பையும் கொண்டிருந்த என் தந்தையார், ஒய்வு நேரத்தில் திண்ணை யில் உட்கார்ந்துகொண்டு, பிறரிடம் உரையாடுவதன் மூலமும், வாதிடுவதன் மூலமும் பகுத்தறிவு நெறிக் கருத்துக் களைப் பரப்பிக்கொண்டிருந்தார். 'குடிஅரசு' ஏட்டில் வெளிவந்த கட்டுரைகளை மற்றவர்களிடம் படித்துக்காட்டி விளக்கங்கள் தருவார். அவற்றையெல்லாம் நானும், என் இளவல் செழியனும் பக்கத்திலேயிருந்து கேட்டுக்கேட்டு நாளடைவில் பழுத்த பகுத்தறிவுவாதிகளாக ஆயினோம்.

மாணவப் பருவக் காலத்திலேயே நானும், இளவல் செழியனும் சுயமரியாதை இயக்கக் கூட்டங்கள், மாநாடு கள், ஊர்வலங்கள் போன்றவற்றில் கலந்துகொள்வதில் பேரார்வம் காட்டிவந்தோம்.

சுயமரியாதை இயக்கத்தின் சீர்திருத்தக் கருத்துக்களான, தன்மானத்தைக் காத்தல், மனிதர்கள் அனைவரையும் சமமாகக் காணுதல், சமத்துவத் தன்மையை வளர்த்தல், சகோதரத்துவப் பண்பைப் போற்றுதல், விடுதலை வேட்கை உணர்வை வளர்த்தல், மனித உரிமைகளுக்குப் பரிந்து பேசுதல், சிந்தனை அறிவு - செயலாற்றல் - உழுவலன்பு - உண்மை உழைப்பு - நேரிய ஒழுக்கம் - நேர்மை - நாணயம் போன்றவற்றிற்கு மதிப்பு அளித்தல், பெண்ணுரிமை போற்றுதல், தீண்டாமையைப் போக்குதல், சாதிமத உணர்வுகளை அகற்றுதல், குருட்டு நம்பிக்கைகளை நீக்குதல், மூடப்பழக்கவழக்கங்களைப் போக்குதல், மூடச் சடங்குகளை வெறுத்தல் போன்ற கொள்கைகள், இளம் வயதிலேயே என் உள்ளத்திலும், செழியன் உள்ளத்திலும் ஆழப்பதிந்துவிட்டன.

பகுத்தறிவு நெறிக்கொள்கைகளான, கடவுள் பற்றிய கற்பனைத் தத்துவத்தை எதிர்த்தல், வேத-புராண-இதிகாச கட்டுக்கதைகளை வெறுத்தல், சாத்திர சம்பிரதாயச் சடங்கு களை அகற்றுதல், பேய்-பூதம்-பிசாசு பற்றிய கூற்றுக்களை

ஒழித்தல், சோதிடம் - சோசியம் - பில்லி - சூன்யம் போன்ற மந்திரதந்திர வித்தைகளை அகற்றுதல், அன்றாட வாழ்க்கையில் சகுனம் - இராகுகாலம் - யமகண்டம் - குளிகை காலம் ராசிபலன் போன்றவற்றைப் பார்ப்பது பற்றிய மூட நம்பிக்கைகளை ஒழித்தல், கற்பனைக் கடவுளுக்குப் பூசைபோடுவது - திருவிழா நடத்துவது - தேர் இழுப்பது - காவடி தூக்குவது - பலியிடுவது போன்ற குருட்டுப் பழக்க வழக்கங்களை நீக்குதல் போன்றவைகளில் நானும், செழியனும் இளமைப் பருவக் காலத்திலிருந்தே மிகுந்த ஆர்வங்காட்டி, அவற்றிற்கான செயல்முறைகளில் ஈடுபட்டு வந்தோம்.

பகுத்தறிவு நெறியே பண்பட்ட நெறியாகும் என்பதில் நீங்காப்பற்றும், தணியா ஆர்வமும், முழு நம்பிக்கையும் கொண்டு நாங்கள் வளர, எங்களது இளமைக் காலச் சூழ்நிலைகள் பெரிதும் பயன்பட்டன.

# 8

# திராவிட இயக்கத்தொடர்பு

## இயக்க நிகழ்ச்சிகளில் மாணவனாகப் பங்கு கொள்ளுதல்

நான் சிறுவனாக இருந்தபோதே, சுயமரியாதை இயக்க நிகழ்ச்சிகளிலும், நீதிக்கட்சியின் நிகழ்ச்சிகளிலும் பார்வையாளனாகப் பங்குகொள்ளும் பழக்கத்தைக் கொண்டிருந்தேன்.

1926-இல் பட்டுக்கோட்டையில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சி ஒன்றில் பங்குகொள்ள, நீதிக்கட்சியின் முதலமைச்சராக இருந்த பனகல் அரசர் வருகை தந்திருந்தார். நான் என் தந்தையாரோடு சென்று, அந்த நிகழ்ச்சியைக் கண்டு களித்தேன்.

என் தாயார் பிறந்த ஊரான திருக்கண்ணபுரத்தில், வைக்கம் வீரர் பெரியாரின் பிறந்தநாள் விழாவையொட்டி ஊர்வலம், பொதுக்கூட்டம் ஆகியவற்றிற்கு (குத்தூசி) எஸ். குருசாமி ஏற்பாடு செய்திருந்தார். அவர் ஆண்டு தோறும் திருக்கண்ணபுரம் வந்து, தாய்மாமன் வீட்டில் தங்கிக் கல்லூரி விடுமுறை நாட்களைக் கழிப்பார். ஊர்வலத்தில் கலந்துகொண்ட பலரோடு சேர்ந்து, நானும் செங்கொடி ஏந்தி, ''வைக்கம் வீரர் வாழ்க!'' என்று முழக்கம் செய்துகொண்டு சென்றேன். விழாப் பொதுக்கூட்டத்தில் என் தந்தையார், வழக்கறிஞர் இராமதாசு, (குத்தூசி) எஸ். குருசாமி ஆகியோர் உரையாற்றினார்கள்.

## சுயமரியாதைத் தொண்டர்கள் மாநாடு

1929-இல், பட்டுக்கோட்டையில், "முதலாவது மாகாண சுயமரியாதைத் தொண்டர்கள் மாநாடு" நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு எஸ். குருசாமி தலைமை தாங்கினார். கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். அப்போது இளம் மாணவனாக இருந்த நான் என் தந்தையாரோடு சென்று பார்வையாளனாக மாநாட்டில் கலந்துகொண்டேன். அந்த மாநாட்டில்தான் பகுத்தறிவு இயக்கத் தந்தை பெரியார் அவர்களை நான் முதன்முதலாக நேரில் கண்டேன். அப்போது அவருக்குத் தாடியில்லை. அப்போது அவர் முரட்டு மீசையோடும், எடுப்பான தோற்றப்பொலிவோடும், முரட்டுக் கதர் உடைகளை அணிந்துகொண்டும், மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டும், கையில் பெருத்த தடியைத் தாங்கிய வண்ணமும், மார்பில் வண்ணச் சால்வையைப் போர்த்திய படியும் காட்சி அளித்தார். மாநாட்டில் சுயமரியாதை இயக்கத்தின் முக்கியத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டு இருந்ததை நான் கண்டேன். ஆனால் அவர்கள் எல்லோரும் பேசிய பேச்சுக்கள் எனது நினைவில் தங்கவில்லை; ஆனாலும் கண்ட காட்சிகள் மட்டும் கனவில் கண்டவை போல என் நினைவில் நிழலாடிக் கொண்டிருக்கின்றன.

1931இல், நீதிக்கட்சியின் அமைச்சராக இருந்த சர்.பி.டி. இராசன் அவர்களும், சட்ட மன்ற உறுப்பினராக இருந்த சர். கிருட்டிணநாயர் அவர்களும், பட்டுக்கோட்டைக்கு, உயர் நிலைப் பள்ளிக்கான அடிக்கல் நாட்ட வருகை தந்தனர். ஊர்வலத்தில் விரைவாகச் சென்ற அவர்களின் காரின் பின்னால், பொதுமக்கள் ஓட்டமும், நடையுமாகச் செல்ல வேண்டியிருந்தது. நானும், இளவல் செழியனும் எங்கள் தந்தையாரின் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு ஓடினோம். அப்போது எங்கள் தந்தையார் எங்களிடம், " நீங்களும் நன்றாகப் படித்துப் பட்டம் பெற்றுப் பெரும் பதவியைப் பெறுவீர்களே

யானால், உங்கள் பின்னால் பொதுமக்கள் இப்படித்தான் ஓடிவந்து உங்களைப் போற்றிப் பாராட்டுவார்கள்'' என்று கூறினார்கள். எங்கள் தந்தையாரின் அந்த அறிவுரை, எங்களின் உள்ளங் களில் ஆழப்பதிந்து, எதிர்காலத்தில் எங்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் பயப்பதாக அமைந்தது.

1932இல், பெரியார் அவர்கள் மேலைநாடுகளில் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு வந்த நிலையில், பட்டுக் கோட்டைக்கு வருகை தந்தார். அவரைச் சிறப்பான முறையில் வரவேற்றுப்பாராட்ட, பெரியதொரு ஊர் வலமும், மாபெரும் பொதுக்கூட்டமும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தன. ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் நான் மிக்க எழுச்சியுடன் மாணவனாகக் கலந்துகொண்டேன். பெரியார் அவர்களின் பேச்சு, புதிய பகுத்தறிவு உலகை உருவாக்கும் திறன் வாய்ந்ததாக அமைந்திருந்தது.

## சீர்திருத்த மாநாடும் வாக்காளர் மாநாடும்

1933இல், பட்டுக்கோட்டையில், அஞ்சாநெஞ்சன் கே.வி. அழகிரிசாமி அவர்களின் பெருமுயற்சியால், ''சமுதாயச் சீர்திருத்த மாநாடும்'', ''வாக்காளர் மாநாடும்'' இரண்டு நாட்கள் தொடர்ந்து கூட்டப்பெற்றன. அந்த இரண்டு மாநாடுகளிலும் நானும், இளவல் செழியனும் எங்கள் தந்தையாரோடு சேர்ந்துசென்று பார்வையாளர்களாகக் கலந்து கொண்டோம்.

1935இல் அகில இந்தியக் காங்கிரசின் தலைவராக இருந்த டாக்டர் பாபு இராசேந்திர பிரசாத் அவர்கள் பட்டுக் கோட்டைக்கு வருகை தந்தார். நீதிக்கட்சியின் தலைமையின் கட்டளைப்படி, அவரை எதிர்த்துக் ''கறுப்புக் கொடி காட்டும் ஆர்ப்பாட்டம்'' நடைபெற்றது. அந்த ஆர்ப்பாட்டத்திற்குப் பூவாளூர் அ. பொன்னம்பலனார் தலைமை தாங்கினார். நானும், இளவல் செழியனும் கறுப்புக்கொடி ஏந்தி, அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு காங்கிரசுக்கு எதிர்ப்பான முழக்கங்கள் இட்டோம்.

*1936இல், சென்னை மாகாண சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடைபெற்றபோது, நீதிக் கட்சியின் சார்பாகப் பொதுத் தொகுதியில் போட்டியிட்ட பாப்பாடு சமீன்தார் இராசப்பா அவர்களையும், கிறித்துவர் சார்பாகத் தனித்தொகுதியில் போட்டியிட்ட சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களையும் ஆதரித்து, 'சிவப்பு நிறப்பெட்டியில்' வாக்கு அளிக்குமாறு நீதிக்கட்சியினரோடு சேர்ந்து நாங்களும் வீடுவீடாகச் சென்று கேட்டுக்கொண்டோம்.*

## இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்

*1937ஆம் ஆண்டில், உயர்நிலைப்பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயப் பாடமொழியாக சென்னை மாகாணப் பிரதமராக இருந்த இராசகோபாலாச்சாரியாரால் புகுத்தப்பட்ட நேரத்தில், பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றோரின் சீரியதலைமையின் கீழ் ''இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்'' நாடெங்கும் நடைபெற்றது. அப்பொழுது, நானும், இளவல் செழியனும் மற்ற மாணவர்கள் பலரோடும் சேர்ந்து, ''திருவள்ளுவர் இளைஞர் தமிழ்க் கழகத்தின்'' சார்பாக, இந்தித் திணிப்பு எதிர்ப்புப் பொதுக் கூட்டங்கள் பலவற்றைப் பட்டுக்கோட்டையில் நடத்தினோம். இந்தியைத் தீவிரமாக எதிர்த்துக் கொண்டிருந்த தலைவர்கள் பலரும், அந்தக் கூட்டங்களில் கலந்துகொண்டு வீரவுரை ஆற்றினார்கள்.*

## இந்தி எதிர்ப்புத் தமிழர் பெரும்படை

*இந்தி எதிர்ப்பு உணர்ச்சியைப் பல ஊர்களிலும் பரப்பும் நோக்கத்தோடு, பல நூற்றுக்கணக்கான தொண்டர்களுடன் கூடிய 'இந்தி எதிர்ப்புத் தமிழர் பெரும்படை' ஒன்று, 1938 ஆகஸ்டு 1 ஆம் நாள் திருச்சியிலிருந்து சென்னை நோக்கிப் புறப்பட்டது. அந்தப் படைக்குத் தஞ்சை பள்ளி அக்ர காரத்தைச் சேர்ந்த ஐ. குமாரசாமி தலைவர், திருச்சி நகர*

தூதன் ஆசிரியர் மணவை ரெ. திருமலைசாமி துணைத் தலைவர், பட்டுக்கோட்டை கே.வி. அழகிரிசாமி படையை வழிநடத்திச் செல்லும் தளபதி, திருப்பூர் மொய்தீன், மூவலூர் இராமாமிர்தத்தம்மாள் முன்னிலைத் தொண்டர்கள். கால் நடையாகச் சென்ற அந்தப்படை வழிநெடுகிலும் உள்ள ஒவ்வொரு ஊரிலும் நின்று, பொதுக்கூட்டங்களைக் கூட்டி, வீர உரைகள் ஆற்றி, இந்தி எதிர்ப்பு உணர்ச்சி ஊட்டிச் சென்றது. அந்தப்படை 1938 செப்டம்பர் 1 ஆம் நாள் சென்னையை அடைந்தது.

சென்னைக் கடற்கரையில் இந்தி எதிர்ப்புப் பெரும் படைக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் நான் மாணவனாகக் கலந்துகொண்டேன். பெரியார் அவர்கள் இலட்சக்கணக்கான மக்களிடையே வீர முழக்கமிட்டார். அந்தக் கூட்டத்தில் பேசிய பெரியார், இந்திய அரசியல் அமைப்பில் தமிழர் நலம் தனியாகப் பாதுகாக்கப்பட உறுதி ஏதும் இல்லை என்றும், எந்நாளும் பார்ப்பனரும், வடநாட்டாரும் மட்டுந்தான் ஆதிக்கம் செலுத்திவருவர் என்றும், இதற்கான பரிகாரம் தமிழ் நாட்டின் ஆட்சி தமிழர் கைக்கு வருவதுதான் என்றும் கூறி, "தமிழ்நாடு தமிழர்க்கே!" என்ற கொள்கை முழக்கத்தை முதன்முதலாக அறிமுகப்படுத்தினார். கூட்டத்தில் பட்டுக் கோட்டை அழகிரிசாமி வீரமும், தீரமும் செறிந்த பேருரை நிகழ்த்தினார். கூட்டம் முடிந்தவுடன் நான் பட்டுக்கோட்டை அழகிரிசாமியோடு உடன் சென்று, அவர் தங்கியிருந்த இடத்தில் அவரோடு உரையாடி மகிழ்ந்தேன்.

## இந்தியை எதிர்த்துப் புரட்சிக் கவிஞரின் பாடல்

தமிழர் பெரும்படையினர்க்கு வழிநடைப் பாட்டாகப் பயன்படும் வகையில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், எழுச்சியையும், உணர்ச்சியையும் ஊட்டக்கூடிய, வீரத்தையும், தீரத்தையும் பயக்கக்கூடிய, கவினும், கருத்தும்

நிறைந்த, பாடல் ஒன்றினை மிக அருமையாக இயற்றித் தந்திருந்தார். அந்தப் பாடல் மாணவனாக இருந்த என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. தமிழகம் எங்கணும் இந்தி எதிர்ப்புப் போர் வீரர்களை உசுப்பிவிட அந்தப் பாடல் பெரிதும் பயன்பட்டு வந்தது. நான் பிற்காலங்களில் கலந்து கொண்ட கூட்டங்கள், விழாக்கள், மாநாடுகள் ஆகியவற்றில் அந்தப் பாடலை அழுத்தந்திருத்தமான குரலில் எடுத்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சி கொண்டிருந்தேன். அந்தப் பாடல் வருமாறு :

"இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம் - நீங்கள்
எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!
செந்தமிழுக்குத் தீமை வந்தபின்னும் - இந்தத்
தேகம் இருந்தொரு லாபமுண்டோ? (இந்திக்கு)

விந்தைத் தமிழ்மொழி எங்கள்மொழி - அது
வீரத்தமிழ் மக்கள் ஆவிஎன்போம்!
இந்திக்குச் சலுகை தந்திடுவார் - அந்த
ஈனரைக் காறி உமிழ்ந்திடுவோம்! (இந்திக்கு)

இப்புவி தோன்றிய நாள்முதலாய் - எங்கள்
இன்பத் தமிழ்மொழி உண்டுகண்டீர்!
தப்பிழைத் தாரிங்கு வாழ்ந்ததில்லை - இந்தத்
தான்தோன்றி கட்கென்ன ஆணவமோ? (இந்திக்கு)

எப்பக்கம் வந்து புகுந்துவிடும்? - இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டிவரும்?
அற்பமென்போம் அந்த இந்திதனை - அதன்
ஆதிக்கந் தன்னைப் புதைத்திடுவோம்! (இந்திக்கு)

எங்கள் உடல்பொருள் ஆவியெலாம் - எங்கள்
இன்பத் தமிழ்மொழிக்கே தருவோம்!
மங்கை ஒருத்தி தரும் சுகமும் - எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்! (இந்திக்கு)

சிங்கமென்றே இளங்காளைகளே! - மிகத்
தீவிரங் கொள்ளுவீர் நாட்டினிலே!
பங்கம் விளைந்திடில் தாய்மொழிக்கே - உடற்
பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்! (இந்திக்கு)

தூங்குதல் போன்றது சாக்காடு! - பின்னர்
தூங்கி விழிப்பது நம் பிறப்பு!
தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம் - உயிர்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை! (இந்திக்கு)

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!
ஏங்கவிடோம் தமிழ்த் தாய்தனையே - உயிர்
இவ்வுடலைவிட்டு நீங்கும் வரை! (இந்திக்கு)

*இந்தப் பாடல் என்றென்றும் எனது நினைவில் பதிந் திருந்து, எனக்கு மகிழ்ச்சியையும், எழுச்சியையும் ஊட்டும் ஒரு பாடலாகும்.*

## நீதிக்கட்சியின் 14ஆவது மாகாண மாநாடு

*1938 இல், ''நீதிக்கட்சியின் 14ஆவது மாகாண மாநாடு'', சென்னைத் தீவுத்திடலில் நடைபெற்றது. அந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கவேண்டிய பெரியார், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் காரணமாக, இரண்டு ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு, முதலில் பெல்லாரிச் சிறையிலும், பின்னர் சென்னைச் சிறையிலும் அடைக்கப்பட்டு இருந்தார். அவரது திருஉருவப்படம் மாநாட்டு மேடையில் வைக்கப்பட்டிருந்தது. பெரியார் எழுதி அனுப்பி வைத்திருந்த தலைமை உரையை, அவருக்குப்பதிலாக, சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் மாநாட்டில் படித்தார். அப்பொழுது சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் மாணவனாகப் பயின்றுகொண்டிருந்த நான், மூன்று நாட்கள் நடைபெற்ற அந்த மாநாட்டில் பார்வையாளனாகக் கலந்துகொண்டேன். தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்தேன்.*

## எங்கள் வீட்டுத் திருமணம்

*1939 இல், என் அண்ணன் சௌரிராசன் - இராமாமிர்தம், என் தமக்கை நாடியம்மாள் - ஆவுடையப்பன் ஆகியோரின் சுயமரியாதைச் சீர்திருத்தத் திருமணங்கள், தஞ்சை நகரில் நடைபெற்றன. எங்கள் குடும்பத்தின் வேண்டுகோளை ஏற்றுப் பெரியார் அவர்கள் திருமணங்களுக்குத் தலைமை தாங்கி நடத்தி வைத்தார்கள். திருமண விழாவில் எஸ். குருசாமி, அ. பொன்னம்பலனார், கே.கே. நீலமேகம், மாயவரம் சி. நடராசன், நாகை காளியப்பன், பட்டுக் கோட்டை கே.வி. அழகிரிசாமி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார்கள்.*

## நீதிக்கட்சியின் 15ஆவது மாகாண மாநாடு

*1940இல், நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், இடைநிலை வகுப்பில் பயின்றுகொண்டிருந்தபோது, திருவாரூரில் நீதிக்கட்சியின் 15ஆவது மாகாண மாநாடு பெரியார் அவர்களின் தலைமையின் கீழ் 1940 ஆகஸ்டுத் திங்கள் 24, 25ஆகிய நாட்களில் நடைபெற்றது. மாநாட்டில் அறிஞர் அண்ணா, கி.ஆ.பெ. விசுவநாதம், பட்டுக் கோட்டை அழகிரிசாமி, டபிள்யு.பி.ஏ. சௌந்தரபாண்டி-யன், எஸ் குருசாமி, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், இராசா சர் முத்தையா செட்டியார், சர்.பி.டி. இராசன், நாவலர் எஸ்.எஸ். பாரதியார், த.வே. உமாமகேசுவரனார், பி. பாலசுப்பிரமணியம், பி. இராமச்சந்திரரெட்டி போன்ற பல தலைவர்கள் கலந்துகொண்டார்கள். மாநாடு இரண்டு நாட்கள் தொடர்ந்து மிகச் சிறப்பாக நடைபெற்றது. நாடெங்கிலும் இருந்து பல்லாயிரக்கணக்கானவர்கள் வந்து மாநாட்டில் கலந்துகொண்டார்கள். அண்ணாமலை நகரிலிருந்து நான், செழியன், எங்களுடன் ஏராளமான மாணவர்கள் அந்த மாநாட்டிற்குச் சென்று கலந்து கொண்டோம். அந்த மாநாட்டில்தான் "தமிழ்நாடு தமிழர்க்கே" என்ற முழக்கம், ஆந்திர - கருநாடக - கேரளப் பிரதிநிதிகளின்*

வேண்டுகோளுக்கு இணங்க, "திராவிட நாடு திராவிடர்க்கே" என்ற முழக்கமாக மாற்றப்பட்டது.

1941இல் சிதம்பரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் வருகை தந்திருந்தனர். அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவ நண்பர்கள் பலரோடும் சேர்ந்து நான் பொதுக் கூட்டத்திற்குச் சென்றது மட்டுமல்லாமல், பெரியாரும் அறிஞர் அண்ணாவும் தங்கியிருந்த இடத்திற்குச்சென்று, அவர்களோடு சுயமரியாதை இயக்கம் - நீதிக்கட்சி - இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி - தமிழ் மறுமலர்ச்சி போன்ற பொருள்கள் பற்றி உரையாடல்கள் நடத்தி மகிழ்ந்தோம்.

## தமிழிசை மாநாடு

1943 இல், பெரியார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான்கு நாட்கள் நடைபெற்ற தமிழிசை மாநாட்டிற்கு வருகை தந்தபோது, அவர் தங்கியிருந்த விருந்தினர் மாளிகையின் அறைக்குச்சென்று, நானும், செழியனும் அவரோடு நீண்ட நேரம் இயக்கக் கொள்கைகள் - குறிக்கோள்கள் பற்றி விவாதித்தோம்.

அப்பொழுது புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களும் உடன் இருந்து, உரையாடலில் கலந்துகொண்டார்.

1943ஆம் ஆண்டு இறுதியில், நான், அண்ணாமலைப் பல்கலைக்கழக இலக்கிய மன்றத்தின் சார்பாகப் பெரியார் அவர்களையும், பேரறிஞர் அண்ணா அவர்களையும் தனித் தனியாக அழைத்துச் சிறப்புக் கூட்டங்கள் நடத்தினேன். பெரியார் அவர்கள் 'பகுத்தறிவு நெறி' என்ற பொருள் பற்றியும், அறிஞர் அண்ணா அவர்கள் 'ஆற்றோரம்' என்ற பொருள் பற்றியும், அரிய, அழகிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

## தமிழிசை அரங்குக்குப் பாதுகாப்பு

*1943 இல், இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் அவர்கள், தமிழிசை அரங்கில் கலந்துகொள்ள, அண்ணா மலைப் பல்கலைக் கழகத்திற்கு வருகை தந்தார். அப்போது, தெலுங்கிசையை ஆதரிக்கும் சிலர் கூச்சல்போட்டுக் குழப்பம் விளைவிக்க முயன்றார்கள். நானும், ஏனைய திராவிட மாணவ இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்களும் சேர்ந்து, குழப்பம் ஏற்படுத்தியவர்களை விரட்டியடித்து, தமிழிசை அரங்கு தொடர்ந்து இனிமையாக நடைபெற வழி வகுத்துத் தந்தோம்.*

## சிதம்பரத்தில் 'சந்திரோதயம்' நாடகம்

*சுயமரியாதைச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பும் நோக்கத்துடன், அறிஞர் அண்ணா அவர்கள் 'சந்திரோதயம்' என்னும் நாடகத்தை எழுதி, அதில் அவரே ஆண்டி, துரைராஜ், சமீன்தார் - மடாதிபதி ஆகிய நான்கு வேடங்கள் தாங்கி நடித்தார்.*

*அந்த நாடகத்தை 1943ஆம் ஆண்டு, சிதம்பரத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திராவிட இயக்க மாணவர்களாகிய என்னைப்போன்றவர்களும், சிதம்பரம் இயக்கத் தோழர்களும் சேர்ந்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்தோம். நாடகம் மிகச்சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடந்தேறியது. நாடகத்திற்கு நடிகவேள் எம்.ஆர். இராதா அவர்கள் தலைமை தாங்கினார்கள். நாடகத்தின் மூலம் வசூலான தொகையில் செலவுபோக மீதப்பட்ட தொகை யைத் ''திராவிட நாடு'' இதழ் வளர்ச்சிக்குப் பயன்பட நன்கொடையாக அளித்தோம்.*

*நாடகத்தின் இறுதியில் பேசும்போது, அறிஞர் அண்ணா அவர்கள், திராவிட மாணவ இயக்கத்தினரின் முயற்சியை யும், செயல்பாடுகளையும் பெரிதும் பாராட்டிப் பேசினார்.*

'தமிழ் மாணவர் மன்ற' ஆண்டுவிழா

1943 இல், திருவாரூரில், (கலைஞர்) மு. கருணாநிதி அவர்களைத் தலைவராகக் கொண்ட 'தமிழ் மாணவர் மன்றத்தின்' ஆண்டு விழாவில் கலந்துகொள்ள, அண்ணா மலைப் பல்கலைக்கழக மாணவர்களாக இருந்த நானும், (பேராசிரியர்) க. அன்பழகன் அவர்களும் சென்றிருந்தோம். காலையில் நடைபெற்ற ஆண்டு விழாவிலும், மாலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் நாங்கள் இருவரும் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றினோம். அப்போது (கலைஞர்) மு. கருணாநிதி அவர்கள், திருவாரூர் கழக உயர்நிலைப் பள்ளியில் 9ஆவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அவர் 'முரசொலி' என்ற பெயரில் துண்டு அறிக்கை ஒன்றினைத் திங்கள் தோறும் வெளியிட்டுவந்தார்.

திராவிட மாணவர் மாநாடு

1944 பிப்ரவரி 19-20 ஆகிய நாட்களில் திராவிட மாணவர் இயக்க மாநாடு, மாணவர் தவமணிராசன், கருணானந்தம் ஆகியோரின் பெருமுயற்சியால், குடந்தையில் நடை பெற்றது. இரண்டு நாட்கள் நடைபெற்ற அந்த மாநாட்டில் கலந்துகொள்ள, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான மாணவர்கள் வருகை தந்திருந்தனர். அண்ணா மலைப் பல்கலைக்கழகத்திலிருந்து நான், க. அன்பழகன், செழியன், இரெ. இளம்வழுதி, கே.ஏ. மதியழகன், புலவர் குழந்தையா, நன்னன் ஆகியோரும் ஏ.பி. சனார்த்தனம், நா.மு. மாணிக்கம் ஆகியோரும் மாநாட்டில் கலந்துகொள்ள குடந்தைக்குச் சென்றிருந்தோம்.

மாநாட்டில் பெரியார், அறிஞர் அண்ணா, கே.கே. நீலமேகம், பேராசிரியர் முத்தையா, கான்பகதூர் கலிப-துல்லா, பா. தாவுத்ஷா, புலவர் பெரியசாமி போன்றவர்கள் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றினார்கள்.

மாநாடு காலை - மாலை என்ற முறையில், இரண்டு நாட்களில் நான்கு பிரிவுகளாக நடைபெற்றது. ஒவ்வொரு

பிரிவுக்கும் தனித்தனியாகத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தனர். நான் நான்காவது பிரிவுக்குத் தலைமை தாங்கினேன்.

நான் பேசியபோது,

''பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் கொள்கைகளைப் பின்பற்றித் திராவிட மாணவர் இயக்கம் கல்லூரிகள் தோறும் உணர்ச்சியோடும், எழுச்சியோடும் வளர்ந்து வருகிறது. திராவிட மாணவர் இயக்கம் எப்படி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவருகிறது என்பதை, இந்த மாநாட்டின் நான்கு பிரிவுகளின் தலைவர்களின் தோற்றப் பொலிவைப் பார்த்தாலே எளிதில் விளங்கிக் கொள்ளலாம். முதல் பிரிவுக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் முத்தையா அவாகளுக்குத் தாடியில்லை! இரண்டாவது பிரிவுக்குத் தலைமை தாங்கிய கான்பகதூர் கலிபதுல்லா அவர்களுக்குக் குறுந்தாடி! மூன்றாவது பிரிவுக்குத் தலைமை தாங்கிய பெரியவர் பா. தாவூத் ஷாவிற்கு சற்று நீண்ட தாடி! நான்காவது பிரிவுக்குத் தலைமை தாங்குகிற எனக்கு மிகவும் நீண்ட தாடி! இந்தத் தாடியின் வளர்ச்சியைப்போல், திராவிட மாணவர் இயக்கமும் இனி வேளைக்கு வேளை வளர்ந்து காணப்படும் என்பது உறுதி!''

என்று குறிப்பிட்டவுடன், மாநாட்டில் குழுமியிருந்தோர் அனைவரும் சிரித்துக் கையொலி எழுப்பி, ஆரவாரித்து மகிழ்ந்தார்கள்.

நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படிக்கும் போதே, 1942-43, 1943-44 ஆகிய ஆண்டுகளில் சிதம்பரத்திலும், அதனைச் சுற்றியுள்ள சிற்றூர்களிலும் நடை பெறும் சுயமரியாதைத் திருமணங்களில் கலந்துகொண்டு வாழ்த்துரைகள் வழங்கியுள்ளேன். இயக்கத்தின் தலைவர்கள் சிலரும் அந்தத் திருமணங்களில் கலந்துகொண்டது உண்டு.

*1944 மார்ச்சு - ஏப்ரல் திங்களில் ஆனர்ஸ் (எம்.ஏ.) வகுப்பிற்கான இறுதி ஆண்டுத் தேர்வு எழுதினேன். அதில் வெற்றிபெற்றுப் பின்னர் எம்.ஏ. பட்டம் பெற்றேன்.*

*அத்துடன் எனது கல்விப் பயிற்சி முடிவுற்றது. அப்பொழுது எங்கள் குடும்பம் ஏழ்மையான நிலைமையில் இருந்ததால், நான் ஏதேனும் ஒரு வேலைக்குப் போய்ப் பொருள் ஈட்டுவேன் என்று பலரும் எதிர்பார்த்தனர். வேலைக்குப் போகவேண்டும் என்பதில் எனக்கு ஆர்வம் ஏற்படவில்லை. திராவிட இயக்க அரசியலில் ஈடுபட்டுப், பெரியார்-பேரறிஞர் அண்ணா ஆகியோரின் தலைமையின்கீழ் பொதுத்தொண்டு ஆற்றவேண்டும் என்ற பேராவல் தான் எனக்கு இருந்துவந்தது. என்னுடைய தாய்-தந்தையர் என் விருப்பப்படி நான் நடந்துகொள்ள முழுமனத்தோடு இசைவு அளித்தனர். அரசியலில் நேரடியாக ஈடுபட வேண்டும் என்பதே என் பெருவிருப்பமாக இருந்துவந்தது.*

❋ ❋ ❋



நாவலரின் பெற்றோர்

தந்தையார் – இராசகோபாலனார் தாயார் – மீனாட்சிசுந்தரத்தம்மையார்



1944 – ஈரோடு திராவிட இளைஞர் மாநாட்டில் பங்கு கொண்ட தலைவர்களுடன் நாவலர்



இளவல் செழியனுடன் நாவலர்



நாவலர் – துணைவியார் டாக்டர் விசாலாட்சி அம்மையார்



மகன் மதிவாணன் – மருமகள் சாந்தி




நாவலர் குடும்பம்

பேத்தி – செல்வி விசாலாட்சி, மருமகள் – சாந்தி, நாவலர், பேரன் – செல்வன் நெடுஞ்செழியன், துணைவியார் டாக்டர் விசாலாட்சி அம்மையார் மகன் – மதிவாணன்

# 9

# அரசியலில் நேரடி ஈடுபாடு

## ஈரோடு இளைஞர் மாநாடு

*அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், 1944ஆம் ஆண்டு எம்.ஏ. இறுதி ஆண்டுத் தேர்வு எழுதி முடித்தவுடன், நான் பெரியார் அவர்களின் அழைப்பினை ஏற்று, மூன்றாவது நாளே ஈரோட்டிற்குச் சென்றேன்.*

*ஈரோட்டில் 1944 ஏப்ரல் 17ஆம் நாள் திராவிட இளைஞர் மாநாட்டிற்கு அப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாநாட்டிற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கவும், நான் மாநாட்டைத் தொடங்கி வைக்கவும், (பேராசிரியர்) க. அன்பழகன் அவர்கள் மாநாட்டுக் கொடி யேற்று நிகழ்ச்சியை ஆற்றுவிக்கவும் பெரியார் அவர்கள் விளம்பரப்படுத்தியிருந்தார்.*

*மாநாட்டிற்குத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளி லிருந்தும் சுயமரியாதை இயக்கம் நீதிக்கட்சி ஆகிய வற்றைச் சேர்ந்த முக்கியப் பொறுப்பாளர்களும், செயல் வீரர்களும் வந்து கலந்துகொண்டனர். திராவிட இயக்கப் பற்றுடைய ஏராளமான மாணவர்களும் மாநாட்டிற்கு வந்து கலந்துகொண்டனர். மாநாடு, ஈரோடு மகாசன உயர் நிலைப் பள்ளியின் மைய மண்டபத்தில் நடைபெற்றது.*

மாநாட்டில் பெரியார் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவதாக இருந்தது. உடல் நலக்குறைவின் காரணமாக அவர் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. மாநாட்டில், ஈ.வெ. கிருட்டிணசாமி, பழையகோட்டை பட்டக்காரர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார், பழைய கோட்டை அர்ச்சுனன், ஜி.பி. சோமசுந்தரம், கே.கே. நீலமேகம், பட்டுக்கோட்டை கே.வி. அழகிரிசாமி, சேலம் சித்தையன், திண்டுக்கல் எம்.ஆர். மத்திரன், தி.பொ. வேதாசலம், சி.டி. நாயகம், இராமாமிர்தத்தம்மையார், மஞ்சுளாபாய் சண்முகம், அ. பொன்னம்பலனார் போன்றவர்கள் கலந்துகொண்டு சிறப்புச்செய்தனர்.

இளைய தலைமுறையினராக ஏ.பி. சனார்த்தனம், தவமணிராசன், கருணானந்தம், இரெ. இளம்வழுதி, கே.ஏ. மதியழகன் போன்றோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

திராவிட இயக்கக் கொள்கைபரப்புப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ளும் வகையில், மாணவர்குழுக்களை மாவட்டந்தோறும் அனுப்பிவைப்பது என்று மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டது.

**மாணவர்குழு சுற்றுப்பயணம்**

அதன்படி நான், கே.ஏ. மதியழகன், மாரிமுத்து ஆகியோர் ஒரு குழுவாக அமைந்து, கோவை மாவட்டம் முழுவதும் 15 நாட்கள், கொள்கைபரப்புச் சுற்றுப்பயணம் மேற்கொண்டோம். நாங்கள் திருப்பூர், பல்லடம், சூலூர், கோவை, அவிநாசி, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, கணியூர், தாராபுரம், காங்கேயம், சென்னிமலை, கொடுமுடி போன்ற ஊர்களில் கொள்கை பரப்புப் பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்டோம். மாணவர்களாகிய நாங்கள் பேசிய பேச்சுக்கள் பொது மக்களிடையே புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக் காரணமாக அமைந்தன. பழையகோட்டை அர்ச்சுனன்

அவர்களும், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்களும் எங்களுடன் வந்து, ஆங்காங்குப் பொதுக்கூட்ட ஏற்பாடு களைச் சிறப்பாகக் கவனித்துக்கொண்டார்கள்.

கூட்டங்களில் நான் பேசும்போது, திராவிட நாகரிகத்தின் சிறப்பு, திராவிடப்பண்பாட்டின் மேன்மை, திராவிட நாடு தனி நாடாக ஆகவேண்டியதன் இன்றியமையாமை, சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம், சாதி மத பேதமற்ற சமுதாயம் உருவாகவேண்டியதன் அவசியம், தமிழ் மொழி யின் தனிப்பெருஞ் சிறப்புக்கள், இந்தி மொழித் திணிப்பை எதிர்க்க வேண்டியதன் இன்றியமையாமை ஆகியவை பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் பேசி வந்தேன்.

சேலம் திராவிட மாணவர் மாநாடு

திராவிட மாணவர் இயக்கத்தின் சார்பாகச் சேலத்தில், 'திராவிட மாணவர் மாநாடு' மிகச்சிறப்பான முறையில் 1944இல் நடைபெற்றது. நான் அந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கினேன். சேலம் மாணவன் கண்ணப்பன் வரவேற்புரை நிகழ்த்தினார். க. அன்பழகன், ஏ.பி. சனார்த்தனம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். சேலத்தி லிருந்தும், சேலம் மாவட்டத்தைச் சுற்றியுள்ள மாவட்டங் களிலிருந்தும் திரளான மாணவர்கள் வந்து, மாநாட்டில் பங்குகொண்டார்கள்.

மாநாட்டில், நான் தலைமையுரை ஆற்றியபோது, குறிப்பிட்ட கருத்துக்களின் சுருக்கம் வருமாறு :

"திராவிட இயக்கம் மாணவர்களை அரசியலில் இழுத்துக் கெடுப்பதாக மாற்றுக்கட்சியினர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

திராவிட இயக்கம் மாணவர்களை வலுக்கட்டாயமாக அரசியலுக்கு இழுக்கவும் இல்லை; அவர்களை எந்த வகையிலும் கெடுக்கவும் இல்லை. மாணவர்கள் தங்களைப்

பாழ்படுத்திக்கொள்ளுகிற அளவிற்கு நேரடி அரசியலில் ஈடுபடக்கூடாது என்றும், அதே நேரத்தில் தாம் வாழ்கின்ற காலத்தின் அரசியல் நெறிமுறைகளை அறிந்துவைத்துக் கொள்ளவேண்டும் என்றுந்தான் இயக்கம் கூறிவருகிறது.

அரசியல் நாடகத்தையும், அதில் பங்குகொள்ளுகின்ற பாத்திரங்களின் பண்புநலன்கள், போக்குகள் ஆகிய வற்றையும் கண்டுகொண்டிருக்கும் பார்வையாளர்களாக மாணவர்கள் தங்களை எண்ணிக்கொள்ள வேண்டுமே யல்லாமல், அரசியல் நாடக அரங்கில் ஏறி, நடிக்கும் பாத்திரங்களாக மாணவர்கள் நிலையில் மாறிவிடக்கூடாது.

மாணவப் பருவக்காலத்தில், கற்று அறிந்துகொள்ள வேண்டிய துறைகளின் அறிவாற்றல் திறமைகளைப் பெற்றுக் கல்வியை முழுதுற முடித்ததற்குப்பிறகே, மாணவர்கள் அரசியலில் நேரடியாகப் பங்குகொள்ளும் வாய்ப்பைப் பெறவேண்டும் என்பதுதான் திராவிட இயக்கத்தின் நோக்கமாகும். நாட்டின் வருங்காலத்தை, எல்லா வகைகளிலும் சீர்படுத்தும் சிற்பிகளாக ஆக வேண்டியவர்கள் மாணவர்களே ஆவார்கள். அதற்கு ஏற்றவாறு, அவர்கள், தம் மாணவப் பருவக்காலத்தில், தங்களைத் தாங்களே ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டிய கடப்பாட்டில் இருக்கிறார்கள்.

மாணவர்களுக்கும் அரசியலுக்கும் இருக்கவேண்டிய தொடர்பைப் பற்றி மூன்று வகையினர், மூன்று விதமாக வற்புறுத்திவருகின்றனர். முதல் வகையினர், மாணவர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் முழுக்க முழுக்க அரசியலில் பங்குகொண்டே தீரவேண்டும் என்கின்றனர். இரண்டாம் வகையினர், மாணவர்கள் அரசியலில் நேரடி யாகவோ, மறைமுகமாகவோ தொடர்பு ஏதும் வைத்துக் கொள்ளக்கூடாது என்கின்றனர். மூன்றாம் வகையினர்,

மாணவர்கள் அரசியலைப்பற்றி அறிந்துகொள்ளத்தான் வேண்டும்; ஆனால் அவர்கள் தங்கள் கல்வி பாழாகக்கூடிய வகையில் நேரடியாகப் பங்குகொள்ளக்கூடாது என்கின்றனர். பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் இந்த மூன்றாவது வகையைச் சேர்ந்தவர்கள்.

புத்தம்புதிய பொலிவு மிக்க, வலிவுமிக்க, வளம்மிக்க திராவிடத்தை உருவாக்க, திராவிட இயக்கத் தலைவர்கள், திராவிட உணர்ச்சிகொண்ட அறிவாற்றல் மிக்க மாணவ சமுதாயத்தினரை நம்பித்தான் வாழ்கிறார்கள்.

பெரியாரின் பகுத்தறிவு நெறிமுறைக்கொள்கைகளும், பேரறிஞர் அண்ணாவின் சனநாயக அரசியல் நெறிமுறைக் கொள்கைகளும் திராவிட மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக அமைவனவாகும்.

பகுத்தறிவு - சீர்திருத்தக் கொள்கைகளையும், திராவிட அரசியல் கோட்பாடுகளையும் மக்களிடையே பரவலாகப் பரப்புகின்ற பெரும் பணியினை, மாணவர்கள் சிறப்பாகவும், செம்மையாகவும் செய்ய முன்வரவேண்டும். அதற்கு இந்த மாநாடு பெரிதும் பயன்படவேண்டும்."

## இலால்குடி திராவிட இளைஞர் மாநாடு

*திருச்சி மாவட்டம் இலால்குடியில், திராவிட இளைஞர்களின் மாநாடு, 1944 சூன் திங்கள் முதல் வாரத்தில் நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு என்னைத் தலைமை தாங்கும்படி பெரியார் அவர்கள் வற்புறுத்தினார். நான் அவரது விருப்பத்தை ஏற்று மாநாட்டிற்குத் தலைமை தாங்கினேன்.*

*மாநாட்டில், பெரியார், அறிஞர் அண்ணா, என்.வி. நடராசன், அ. பொன்னம்பலனார், தி.பொ. வேதாச்சலம், ஜி.பி. சோமசுந்தரம், கே.கே. நீலமேகம், க. அன்பழகன்,*

ஏ.பி. சனார்த்தனம், சி.பி. சிற்றரசு போன்றவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

தலைமை வகித்த நான் திராவிட இயக்க வரலாறு பற்றியும், திராவிட நாகரிகம் திராவிடப் பண்பாடு ஆகியவற்றின் மேன்மை பற்றியும், கம்ப இராமாயணத்தை ஒரு கதைக் காவியமாகக் கொள்ளலாமே தவிர, அதனை ஒரு தெய்வீக நூலாகக் கருதமுடியாது என்பது பற்றியும், சமுதாயத்திலுள்ள குருட்டு நம்பிக்கைகளும், மூடப்பழக்க வழக்கங்களும் அடியோடு ஒழியவேண்டும் என்பது பற்றியும், சாதி மத பேதங்கள் அகற்றப்படவேண்டும் என்பது பற்றியும் தெளிவுபடுத்திப்பேசினேன்.

**கோபி திராவிட இளைஞர் மாநாடு**

ஈரோடு பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த கோபிச் செட்டிப் பாளையத்தில், 1944 சூன் திங்கள் இரண்டாவது வாரத்தில், திராவிட இளைஞர் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு நான் தலைமை தாங்கினேன். அறிஞர் அண்ணா அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்து அரிய உரை ஆற்றினார். பெரியார் அவர்கள் சிறப்புச் சொற் பொழிவு நிகழ்த்தினார். தோழர்கள் சி.பி. சிற்றரசு, என்.வி. நடராசன், ஏ.பி. சனார்த்தனம், க. அன்பழகன், கோபி என் இராசு, சேலம் சித்தையன், ஈரோடு சண்முகவேலாயுதம், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி போன்றவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். திராவிட இயக்க இளைஞர்களும், பொதுமக்களும் பெருமளவில் கலந்துகொண்டார்கள்.

நான் தலைமை உரை ஆற்றியபோது, திராவிட இயக்கம், திராவிட நாட்டின் தனிப்பெருந்தன்மைகளையும், சிறப்புக் களையும் போற்றிக் காப்பாற்றவும், அவற்றை மேலும் வளப்படுத்தி வளர்க்கவும் தோன்றியுள்ளது என்றும்,

திராவிட நாகரிகத்திற்கு எதிராக ஆதிக்கம் செலுத்திவரும் ஆரிய நாகரிகத்தை அடியோடு அகற்றப் பாடுபட்டு வருகிறது என்றும், திராவிட இயக்கத்தின் கொள்கைகள் - குறிக்கோள்கள் - திட்டங்கள் ஆகியவற்றை நாடெங்கிலும் பரப்ப இளைஞர்கள் ஊக்கத்தோடு முன்வரவேண்டும் என்றும், உலகில் மிகமிகச் சின்னஞ்சிறு நாடுகளெல்லாம் தனி உரிமை படைத்த தனித்தனி நாடுகளாகச் சிறப்புற்று விளங்கி வரும்போது, நிலப்பரப்பு மக்கள்தொகை வரலாறு - இயற்கை வளம் - மொழி - கலைச்சிறப்பு - நாகரிகம் - பண்பாடு போன்றவற்றில் எல்லா வகைகளிலும் சிறந்துவிளங்கும் திராவிட நாடும் தனி உரிமைபெற்ற தனிநாடாக விளங்கமுடியும் என்றும், விளக்கமாகத் தெளிவுபடுத்திக் கூறினேன்.

## தூத்துக்குடி நீதிக்கட்சி மாநாடு

1944 சூன் திங்களில், தூத்துக்குடியில், நீதிக்கட்சியின் மாவட்ட மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு நான் தலைமை தாங்கினேன். மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். சி.பி. சிற்றரசு மாநாட்டுச் செங்கொடியை ஏற்றிவைத்தார். தோழர்கள் ஏ.பி. சனார்த் தனம், க. அன்பழகன், எஸ்.கே. சாமி, ஈ.வெ.ஆ. வள்ளி-முத்து, ஏ.வி.பி. ஆசைத்தம்பி, என்.வி. நடராசன், சி.பி. சிற்றரசு போன்றவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்கள். மாநாட்டை ஒட்டி மிகப்பெரிய ஊர்வலம் ஒன்றும், தூத்துக்குடியின் முக்கியத் தெருக்களில் வலம் வந்தது. மாநாட்டை தூத்துக்குடியைச் சேர்ந்த நீதிமாணிக்கம், எம்.எஸ். சிவசாமி, தங்கப்பழம், நடராசன், தாளமுத்து போன்றவர்கள் முன்னின்று சிறப்பாக நடத்தினார்கள்.

நான் தலைமையுரையில் பேசியபோது, சமுதாயத்தில் பலவகைகளிலும் பாதிக்கப்பட்டிருக்கும் பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்கள் பலதுறைகளிலும் மேம்பாடு எய்த வேண்டும் என்ற எண்ணத்தில், 1895 இல் வெளியிடப்பட்ட

'பார்ப்பனரல்லாதார் இனங்களும் இந்தியப் பொதுப் பணியும்' என்ற நூல்பற்றியும், பின்னர் வெளியிடப்பட்ட 'பார்ப்பனரல்லாத இனங்கள் தெளிவு பெறுவதற்கான வழிவகைகள்' என்ற நூல்பற்றியும், 1909 இல் ஏற்படுத்தப் பட்ட 'சென்னைப் பார்ப்பனரல்லாதார் சங்கம்' என்ற அமைப்பு பற்றியும், அந்தச் சங்கம் பின்னர் 'சென்னைத் திராவிடர் சங்கம்' என்று பெயர்பெற்றது பற்றியும், 1912இல் தோற்றுவிக்கப்பட்ட 'சென்னை ஐக்கியக் கழகம்' பற்றியும், 1916 இல் தோன்றிய 'தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்' பற்றியும், அது பின்னர் 'நீதிக்கட்சி' என்ற பெயரால் அழைக்கப்பட்டது பற்றியும், 1926இல் பெரியாரால் 'சுயமரியாதை இயக்கம்' தோற்றுவிக்கப்பட்டது பற்றியும், சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் என்ன என்பது பற்றியும், நீதிக்கட்சியின் நோக்கங்கள் என்ன என்பது பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டேன்.

அந்த மாநாடு தென்மாவட்டப் பகுதிகளில் நல்ல எழுச்சியையும், ஊக்கத்தையும் பொது மக்களிடையே வளர்ப்பதற்குக் காரணமாக அமைந்தது.

## இராசிபுரம் நீதிக்கட்சி மாநாடு

1944 சூன் திங்களில், இராசிபுரத்தில் பெரியார் அவர்களின் தலைமையின் கீழ் மாவட்ட நீதிக்கட்சி மாநாடு நடைபெற்றது. மாநாட்டை அறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கிவைத்தார்கள். நான் மாநாட்டுக் கொடியினை ஏற்றி வைத்தேன். மாநாட்டில் பேளுக்குரிச்சி ஜி.பி. சோம சுந்தரம், சேலம் அ. சித்தையன், சேலம் நடேசன், சலகண்ட புரம் ப. கண்ணன், சி.பி. சிற்றரசு, என்.வி. நடராசன், ஏ.பி. சனார்த்தனம் போன்றோர் கலந்துகொண்டு உரையாற்றி-னார்கள்.

பெரியார் அவர்கள் பேசியபோது திராவிட இனமக்கள் தன்மான உணர்ச்சியோடும், மதிப்போடும் வாழவேண்டும்

என்றும், மக்கள் கற்பனைக் கடவுளுக்கு மதிப்புத் தராமல், மனிதனை மதித்து, பகுத்தறிவுத் தன்மையோடு வாழ வேண்டும் என்றும், திராவிட மக்கள் சமுதாய, பொருளாதார அரசியல் துறைகளில் மேம்பட்டு விளங்கவேண்டும் என்றும், சமுதாயத்தில் எல்லோர்க்கும் சமவாய்ப்பும், வசதியும் ஏற்பட வேண்டும் என்றும், பார்ப்பனருடைய ஆதிக்கத்தை ஒழித்துப் பார்ப்பனரல்லாத மக்கள் எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெறவேண்டும் என்றும், இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கவே நீதிக்கட்சி தொடர்ந்து பாடுபட்டு வருகிறது என்றும் விளக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துரைத்தார்.

❋ ❋ ❋

# 10

# திராவிடர் கழகம்

## திராவிடர் கழகத் தோற்றம்

நீதிக்கட்சி நல்ல கொள்கைகளையும், குறிக்கோள்களையும், திட்டங்களையும் கொண்டு, 1916 ஆம் ஆண்டில், சர்.பி. தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர், டாக்டர் சி. நடேசனார் போன்ற தலைவர்களின் முயற்சியால் தொடங்கப்பட்டது என்றாலும், அது சென்னை மாகாணத்தின் ஆளும் கட்சியாக 1920 இலிருந்து 1936 வரை இருந்தபோது, அதில் பணக்காரர்கள், பட்டக்காரர்கள், சீமான்கள், பூமான்கள், சமீன்தாரர்கள், இனாம்தாரர்கள், தொழிலதிபர்கள், வணிகக் கோமான்கள் போன்ற பலபேர்கள் பங்குகொண்டு ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர்.

நாளடைவில் காங்கிரசுக் கட்சியினர், நீதிக்கட்சி என்றால், அது பெரிய சீமான்களின் கட்சி - மிட்டா மிராசுகளின் கட்சி - வகுப்புவாதக் கட்சி - நாட்டு விடுதலைக்கு மாறுபாடான கட்சி - வெள்ளையரின் ஆதிக்கத்திற்கு ஆதரவு தரும் கட்சி - வெள்ளையர்களின் தயவைப்பெற்று வாழும் கட்சி என்றெல்லாம் பேசியும், எழுதியும் வரத் தலைப்பட்டனர். அவர்கள் மக்களிடையே ஒரு தவறான கருத்துப் பரவக் காரணமாக இருந்துவந்தனர்.

அந்த நிலையை மாற்றிப் புதிய வழியில், மக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெறும் வகையில்,

கட்சியைத் திருத்திச் செம்மைப்படுத்திக் கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணம் பெரியார் மனத்திலும், அறிஞர் அண்ணாவின் மனத்திலும் ஏற்பட்டது. அறிஞர் அண்ணா அதற்கான சூழ்நிலையைத் தம் பேச்சின் மூலமும், எழுத்தின் வாயிலாகவும் உருவாக்கும் பணியில் ஈடுபட்டுவந்தார்.

அப்போது நீதிக்கட்சியின் தலைவராகப் பெரியார் அவர்களும், அதன் பொதுச் செயலாளராக அறிஞர் அண்ணா அவர்களும் இருந்து வந்தனர். அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்து வைத்திருந்த திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவர, பெரியார் அவர்கள் நீதிக்கட்சியின் 16ஆவது சென்னை மாநில மாநாட்டை 1944 ஆகஸ்டு 27-28 ஆகிய நாட்களில் சேலத்தில் கூட்டினார்.

அந்த நேரத்தில் நான் அறிஞர் அண்ணாவின் கூடவே இருந்து, மாநாட்டுப் பணிகளைக் கவனித்துக் கொண்டு வந்தேன். அறிஞர் அண்ணாவும், நானும் ஈரோடு சென்று மாநாட்டில் என்ன என்ன தீர்மானங்களை நிறைவேற்றலாம் என்பது குறித்துப் பெரியாருடன் இரண்டு நாட்கள் கலந்துரையாடல் நடத்தினோம்.

நீதிக்கட்சியில் இருந்த பட்டம் - பதவிபெற்ற பணக்காரத் தலைவர்கள், சேலம் மாநாட்டில் என்ன நடைபெறுமோ, ஏது நடைபெறுமோ என்று எண்ணி அதிர்ந்துபோயிருந்தனர். மாநாட்டில் சிறப்பான மாறுதல் இருக்கப்போகிறது என்ற பேராவலுடன், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகளும், பொறுப்பாளர்களும், செயல் வீரர்களும் மாநாட்டிற்கு வந்து சேர்ந்தனர்.

அறிஞர் அண்ணாவும், நானும் மாநாட்டிற்கு முதல் நாளன்றே சேலம் போய்ச் சேர்ந்தோம். கட்சியின் முக்கியமான பொறுப்பாளர்களையெல்லாம் கண்டு உரையாடினோம். அறிஞர் அண்ணாவின் புதிய திட்டத்திற்கு

அடி. மட்டப் பொறுப்பாளர்களிடத்திலும், தொண்டர்களிடத்திலும் பெருத்த ஆதரவு இருப்பதைக் கண்டோம்.

மாநாட்டிற்குப் பெரியார் அவர்கள் தலைமை தாங்கினார். கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாட்டுப்படத்தைத் திறந்துவைத்தார். சேலம் பி.ஆர். இரத்தினசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட தீர்மானங்கள் வரவேற்புக் குழுவில் வைக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டுப் பின்னர்ப் பொதுமாநாட்டின் ஒப்புதலுக்குக் கொண்டுவரப்பட்டன.

அந்தத் தீர்மானங்கள் வருமாறு :-

1. வெள்ளையர் ஆட்சியில் தரப்பட்ட சர், இராவ்பகதூர், திவான்பகதூர், கான்பகதூர், இராவ் சாகேப் போன்ற கௌரவப் பட்டங்கள் பெற்றவர்கள், அந்தப் பட்டங்களை உடனடியாகத் துறந்துவிட வேண்டும். மீண்டும் அவர்களோ, மற்றவர்களோ அத்தகைய பட்டங்களையும், விருதுகளையும் வெள்ளையரிடமிருந்து பெறக்கூடாது.

2. உள்ளாட்சி மன்றங்களில் தலைவர் முதலிய பதவிகள், கௌரவ மாஜிஸ்ட்ரேட் போன்ற நிருவாகத் தொடர்பு கொண்ட மற்றப் பதவிகளைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அனைவரும் உடனே இராஜிநாமா செய்துவிடவேண்டும் என்பதுடன் மீண்டும் அவற்றைப் பெறுதலும் கூடாது.

3. கட்சியினர் அனைவரும் தங்கள் பெயருக்குப் பின்னர் உள்ள சாதியைக் குறிக்கும் பட்டப் பெயர்களை விட்டொழிக்கவேண்டும். எதிர்காலத்தில் எவரும் சாதிப்பட்டப்பெயரைப் பயன்படுத்தக்கூடாது.

4. தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் (நீதிக்கட்சி) என்று அழைக்கப்படும் கட்சியின் பெயர் இனித் 'திராவிடர் கழகம்' என்று அழைக்கப்பட வேண்டும்.

இந்தத் தீர்மானங்களை அறிஞர் அண்ணா அவர்கள் முன்மொழிந்து, அவைபற்றி விளக்கமாகவும், தெளிவாக வும் பேசினார். தீர்மானங்களை வழிமொழிந்து நான், க. அன்பழகன், கே.கே. நீலமேகம், ஜி.பி. சோமசுந்தரம், பட்டுக்கோட்டை கே.வி. அழகிரிசாமி, சி.பி. சிற்றரசு, என்.வி. நடராசன், சேலம் அ. சித்தையன் போன்றோர் பேசினோம்.

தீர்மானங்களை வாக்கெடுப்புக்கு விட்டபோது, மாநாட்டுப் பந்தலில் குழுமியிருந்த பெரும்பாலான பிரதிநிதிகளும், செயல் வீரர்களும் பெருத்த ஆரவாரத்தோடு கையொலி எழுப்பித் தீர்மானங்களை நிறைவேற்றித் தந்தார்கள்.

நீதிக் கட்சியின் முக்கியத் தலைவர்களாக விளங்கிய சர்.பி.டி. இராசன், சி.ஆ.பெ. விசுவநாதம், வி.வி. இராம-சாமி, மணவை ரெ. திருமலைசாமி, பி.ஆர். இரத்தினசாமி, சி.ஜி. நெட்டோ, பி. பாலசுப்பிரமணியம், திருச்செங்கோடு அரங்கசாமி போன்றவர்கள் தீர்மானங்களுக்கு ஆதரவு அளிக்காமல், மாநாட்டுப் பந்தலை விட்டு வெளியேறி விட்டார்கள்.

மாநாடு அன்றும், மறுநாளும் தொடர்ந்து நடைபெற்றது. பொதுவான அரசியல், சமுதாயம், பொருளாதாரம் பற்றிய தீர்மானங்களும், காங்கிரசுக் கட்சியின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பான தீர்மானங்களும், இந்தித் திணிப்பு எதிர்ப்புத் தீர்மானமும், தமிழ்மொழிக்கு ஆக்கம் பயக்கும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. மறுநாள் பல தலைவர்கள் கருத்துரை வழங்கினார்கள். இறுதியில் பெரியார் அவர்களின் தலைமை முடிவுரையோடு மாநாடு நிறைவுபெற்றது.

திராவிட இயக்கம் எழுச்சிபெறவும், பொதுமக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெறவும், தமிழ்நாட்டில் ஆழமாக வேரூன்றி நிற்கவும், சேலம் மாநாட்டின் தீர்மானங் களின் மூலம் ஏற்பட்ட மாற்றமும், திருப்பமும் மிகவும் பயன்பட்டன.

மாநாட்டை விட்டு வெளியேறிய சீமான்கள் தனியாகக் கூடி சர் பி.டி. இராசன் அவர்களைத் தலைவராகத் தேர்ந்து எடுத்து, நீதிக்கட்சியைத் தொடர்ந்து நடத்திச் செல்வது என்று முடிவு எடுத்தார்கள். அந்த அமைப்பு பொதுமக்களின் ஆதரவு கிடைக்கப்பெறாமல், நாளடைவில் செயலற்று மறைந்துவிட்டது.

மாநாட்டிற்குப்பிறகு பெரியார், அறிஞர் அண்ணா, நான், ஏனைய கழக முன்னணித் தலைவர்கள் தனித்தனியாகப் பல்வேறு ஊர்களுக்கும், நகரங்களுக்கும் சென்று, பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்டு, சேலம் மாநாட்டின் முடிவு களைப் பற்றி விளக்கிப் பேசினோம். சேலம் மாநாட்டிற்குப் பின்னர், 'திராவிடர் கழகம்' மக்கள் இயக்கம் என்று பெயரெடுத்துப் புகழோடும், செல்வாக்கோடும் வளரத் தலைப்பட்டது.

## (கலைஞர்) மு. கருணாநிதியின் திருமணம்

(கலைஞர்) மு. கருணாநிதி அவர்கள், திருவாரூர் உயர் நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோதே, பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் சமுதாய - அரசியல் கொள்கைகளைப் பின்பற்றித் திராவிட இயக்கத்தினிடத்து மிகுந்த பற்றுக்கொண்டு விளங்கினார். அப்பொழுது அவர் 'தமிழ் மாணவர் மன்றம்' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு திராவிட இயக்கக் கொள்கைகளைப் பரப்பும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆனர்ஸ் (எம்.ஏ.) வகுப்பில் படித்துக்கொண்டிருந்த என்னையும், (பேராசிரியர்) க. அன்பழகனையும் அழைத்து, அவர்

1943 ஆம் ஆண்டில், 'தமிழ் மாணவர் மன்றத்தின்' ஆண்டு விழாவைச் சிறப்பாக நடத்தினார். அவர் 'முரசொலி' என்ற சிறிய இதழைக் காலணா (ஒன்றரைக்காசு) விலையில் வெளியிட்டுக்கொண்டிருந்தார்.

அவர் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வினை மூன்றுமுறை எழுதியும் தேர்ச்சி பெறவில்லை. அத்தோடு படிப்பை அவர் நிறுத்திவிட்ட நிலையில், அவருக்கு, அவரது தாயார் திருமணத்திற்கான ஏற்பாட்டினைச் செய்தார்.

(கலைஞர்) மு. கருணாநிதியின் திருமணம் 1944 செப்டம்பர் 13 ஆம் நாள் திருவாரூரில் நடைபெற்றது. சிறந்த தமிழிசைக் கலைஞராக விளங்கிய சிதம்பரம் சி.எஸ். செயராமன் அவர்களின் தங்கை பத்மா என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். (கலைஞர்) மு. கருணாநிதி யின் திருமணம் நடைபெற்ற அதே நாளில், அதே இடத்தில் சி.எஸ். செயராமன் அவர்களுக்கும் திருமணம் நடை பெற்றது.

சி.எஸ். செயராமனின் திருமணம் வைதிக முறையில் நடைபெற்றது. (கலைஞர்) மு. கருணாநிதியின் திருமணம் எனது தலைமையில் சுயமரியாதைச் சீர்திருத்தத் திருமண மாக நடைபெற்றது. திருமணவிழாவில் என் இளவல் செழியன், இரெ. இளம்வழுதி, கவிஞர் சுரதா, தென்னன் போன்றோர் கலந்துகொண்டு, மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினார்கள். தலைமை வகித்துத் திருமணத்தை நடத்தி வைத்த நான், (கலைஞர்) மு. கருணாநிதியின் இயக்கப் பற்றையும், அவர் ஆற்றிவந்த தொண்டையும் பாராட்டிய தோடு, சீர்திருத்தத் திருமணத்தின் சிறப்புக்குரிய தன்மை களையும் விளக்கிப்பேசி, மணமக்களுக்கு வாழ்த்துக்களை வழங்கி, அவர்களைப் போற்றிப் பேசினேன்.

அப்போது நானும், இளவல் செழியனும் திருவாரூரி லிருந்து ஆறுமைல்களுக்கு அப்பாலுள்ள வடகண்டம் என்ற

சிற்றூரில் வாழ்ந்துவந்தோம். அந்த நாட்களில் போக்கு வரத்து வசதிகள் சரியானபடி அமையாத காரணத்தால், நானும், செழியனும் ஆறு மைல் தொலைவு நடந்துவந்து அந்தத் திருமணத்தில் கலந்துகொண்டோம்.

திருமணத்தையொட்டி மாலையில் நகைச்சுவை மன்னர் என்.எஸ். கிருட்டிணன் அவர்களின் 'கிந்தனார்' கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

**கள்ளக்குறிச்சி திராவிடர் கழக மாநாடு**

1944 அக்டோபர்த் திங்களில், தெ.ஆ. மாவட்டம்* கள்ளக் குறிச்சியில், திராவிடர் கழக மாவட்ட மாநாடு நடை பெற்றது. மாநாட்டிற்குப் பெரியார் அவர்கள் தலைமை தாங்கினார்.

மாநாட்டில் அறிஞர் அண்ணா, நான், சி.பி. சிற்றரசு, காஞ்சி கலியாணசுந்தரம், விழுப்புரம் சண்முகம், விருத்தா சலம் சி. முனிசாமி, சிதம்பரம் கிருட்டிணசாமி போன்றோர் கலந்துகொண்டு உரையாற்றினோம்.

சேலம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கி, அவற்றின் நோக்கத்தையும், விளைவுகளையும் குறிந்து அனைவரும் பேசினோம்.

**ஜி.டி. நாயுடு அவர்களுடன் தொடர்பு**

1944 ஆம் ஆண்டுவாக்கில், கோவையில் தொழில் அதிபராகவும், அதிசயமனிதர் என்று போற்றப்பட்டவரு மான ஜி.டி. நாயுடு அவர்கள், என்னைப் பற்றிக் கேள்விப்பட்டுத் தம்மை வந்து நேரில் பார்க்கும்படி ஜே.எஸ். கண்ணப்பர் மூலம் எனக்குச் சொல்லியனுப்பி யிருந்தார்.

---

* பிரிக்கப்படாத அந்நாள் தென் ஆர்க்காடு மாவட்டம்

நான் கோவைக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டபோது, ஜி.டி. நாயுடு அவர்களை அவரது 'கோபால் பாக்' மாளிகைக்குச் சென்று நேரில் கண்டேன். அப்போது அங்கு ஜே.எஸ். கண்ணப்பரும், கைவல்ய சாமியாரும் உடன் இருந்தார்கள்.

ஜி.டி. நாயுடு அவர்கள் பகுத்தறிவு உணர்வுகொண்ட ஒரு நாத்திகவாதியாகத் திகழ்ந்துவந்தார். சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சியாக இருந்து மாறிய திராவிடர் கழகம் ஆகியவற்றின் கொள்கைகளிடத்து அவர் மிகுந்த பற்றுக்கொண்டிருந்தார். என்னுடைய கொள்கைப்பற்று, அரசியல் ஆர்வம், குடும்பநிலை, எதிர்காலத்திட்டம் ஆகியவற்றையெல்லாம் அவர்கேட்டு அறிந்துகொண்டார். அவர், தம்முடைய மாளிகையிலேயே நான் தங்கியிருந்து உண்டி, உறையுள் கொள்ளலாம் என்றும், அங்கிருந்து கூட்டங்கள், மாநாடுகள், விழாக்கள் போன்றவற்றில் கலந்துகொள்ள நான் என் விருப்பப்படி சுற்றுப்பயணங் களை மேற்கொள்ளலாம் என்றும் கூறி, எனக்கு ஆதரவும், அரவணைப்பும் நல்கினார்.

சுற்றுப்பயணம் மேற்கொண்ட நாட்கள்போக, அங்குத் தங்கியிருந்த நாட்களில் ஜி.டி. நாயுடுவின் நூலகத்தையும், மாணவர் விடுதியையும் கண்காணித்துவரும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டிருந்தேன்.

ஜி.டி. நாயுடு அவர்களின் மாளிகையில் நான் தங்கி யிருந்த காலங்களில், ஜி.டி. நாயுடு அவர்களோடும், கைவல்ய சாமியார் அவர்களோடும், ஜே.எஸ். கண்ணப்பர் அவர்களோடும் அவ்வப்போது நீண்ட நேரம் உரையாடி மகிழும் வாய்ப்பினைப் பெற்றிருந்தேன்.

ஜி.டி. நாயுடு அவர்களின் மாளிகைக்குத் தமிழ்நாட்டைச் சேர்ந்த முக்கியமானவர்களும், பிற மாநிலங்களைச் சேர்ந்த முக்கியத் தலைவர்களும் அவ்வப்போது வந்து போவார்கள்.

அப்படி வந்துபோகும் அவர்களோடு தொடர்புகொண்டு பழகும் வாய்ப்பு எனக்கு அடிக்கடி ஏற்பட்டதுண்டு. நான் அங்குத் தங்கியிருந்தபோது வருகை தந்த டாக்டர் எஸ். இராதாகிருட்டிணன், டாக்டர் வி.வி. கிரி, டாக்டர் பி.ஆர். அம்பேத்கார், சர் சி.வி. இராமன், சர் ஏ. இராமசாமி முதலியார், சர் ஏ. இலட்சுமணசாமி முதலியார், சர் சி.பி. இராமசாமி அய்யர், சர் ஆர்.கே. சண்முகம் செட்டியார், சர் பி.டி. இராசன், பொப்பிலி அரசர், இராசா சர் முத்தையா செட்டியார், பல்வேறு அரசியல் தலைவர்கள், அரசு அதிகாரிகள், தொழிலதிபர்கள், கலைஞர்கள், பேராசிரியர்கள் போன்றவர்களோடு தொடர்புகொண்டு உரையாடியிருக்கும் வாய்ப்புக்களை நான் பெரிதும் பெற்றிருக்கிறேன்.

ஜி.டி. நாயுடுவின் மாளிகை வாழ்க்கை எனக்குப் பலவகைகளிலும் பயன்படுவதாகவும், மகிழ்ச்சி அளிப்பதாகவும் இருந்தது. 1944 டிசம்பர் முதல் 1946 சூலை வரையில் அங்குத் தங்கியிருந்தேன். பின்னர் பெரியார் அவர்களின் அழைப்பினை ஏற்று, ஈரோடு 'குடியரசு' அலுவலகத்தில் தங்கியிருந்து கழகப் பணிகளை மேற்கொண்டேன்.

## டாக்டர் அம்பேத்கார் பங்குகொண்ட பொதுக்கூட்டம்

தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரு பெருந்தலைவராக விளங்கிய டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் அவர்கள் ஆங்கிலேயர் ஆட்சியில், டில்லியில் வைஸ்ராய் குழுவில், சட்ட உறுப்பினராகப் பணியாற்றினார். அவர் 1945ஆம் ஆண்டு கோவைக்கு வருகை தந்திருந்தபோது, ஜி.டி. நாயுடு மாளிகையில் மூன்று நாட்கள் தங்கியிருந்தார். அப்பொழுது அங்கு இருந்துகொண்டிருந்த நான் அவரோடு நெருங்கிப் பழகித் தொடர்புகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றேன். கோவை முற்போக்கு இளைஞர் கழகத்தின் சார்பாக நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு

உரையாற்றும்படி அவரை நான் கேட்டுக்கொண்டேன். அவரும் பெருந்தன்மையோடும், விருப்பத்தோடும் இசைவு தந்தார்.

பொதுக்கூட்டம் கோவை சிதம்பரம் பூங்காவில் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டத்திற்கு, சென்னை வழக்கறிஞர் கே.என். சிவராஜ் அவர்கள் தலைமை தாங்கினார். நான் டாக்டர் அம்பேத்கார் அவர்களை வரவேற்று வரவேற்புரை ஆற்றினேன். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் 90 நிமிடங்கள் பேசினார்.

அவர் பேசியபோது வருணாச்சார சாதி பேதங்களைக் கண்டித்தும், ஆரியப் பார்ப்பனர்களின் சூது, சூழ்ச்சி பற்றி விளக்கியும், தாழ்த்தப்பட்டவர்கள் எவ்வாறெல்லாம் கொடுமைப்படுத்தப்பட்டுவருகிறார்கள் என்பதுபற்றியும், சமத்துவ சமுதாயம் ஏற்படவேண்டிய அவசியம் பற்றியும், எவ்வாறு பகுத்தறிவு நெறிக்கு ஆக்கந்தரவேண்டும் என்பது பற்றியும் விரிவானமுறையில் விளக்கங்கள் பல தந்து பேசினார். அவரது பேச்சு எல்லோரையும் கவரத்தக்க வகையில் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

**தஞ்சை திராவிட மாணவர் மாநாடு**

தஞ்சையைச் சேர்ந்த கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் மண்டபத்தில், 1944 செப்டம்பர் 26ஆம் நாள், திராவிட மாணவர் மாநாடு ஒன்று திராவிட மாணவ இயக்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாநாட்டிற்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமை தாங்கினார். பெரியார் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசினார்கள். மாநாட்டில் அறிஞர் அண்ணா, நான், க. அன்பழகன், இரெ. இளம்வழுதி, கே.ஏ. மதியழகன், புலவர் பெரியசாமி, புலவர் அரங்கசாமி, மூவலூர் இராமாமிர்தத்தம்மையார், கே.கே. நீலமேகம்

போன்றோர் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினோம். தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான மாணவர்கள் வந்து மண்டபத்தில் குழுமியிருந்தனர். அந்த மாநாட்டில் திராவிட இயக்க மாணவர்களின் நல்ல எழுச்சியை நன்கு காணமுடிந்தது.

## புதுப்பேட்டை திராவிட மாணவர் மாநாடு

தென்ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த புதுப்பேட்டை என்ற சிற்றூரில், 1945 சனவரித் திங்களில், மாணவர் மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு ஈ.வெ.கி. சம்பத் தலைமை தாங்கினார்.

மாநாட்டில் நான், க. அன்பழகன், இரெ. இளம்வழுதி, கே.ஏ. மதியழகன், வள்ளலரசு, பூ. கணேசன், ஆ. திராவிட-மணி, கி. வீரமணி, அனகாபுத்தூர் இராமலிங்கம் போன்றோர் கலந்துகொண்டு உரையாற்றினோம்.

இந்த மாநாட்டிற்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் வர இயலாத நிலையில், வாழ்த்துப்பா ஒன்றினை எழுதி அனுப்பி வைத்திருந்தார். அந்தப் பாடல் வருமாறு :

**"பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு**
**திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில் வா!**
**எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்,**
**புலிஎனச் செயல்செய்யப் புறப்படு வெளியில்!**
**நம்பினை பகலினை நள்ளிருள் என்றே**
**சிம்புட் பறவையே சிறகை விரி! எழு!**
**சிங்க இளைஞனே! திருப்புமுகம்! திறவிழி!**
**இங்கு உன் நாட்டுக்கு இழி கழுதை ஆட்சியா?**
**கைவிரித்து வந்த கயவர், நம்மிடைப்**
**பொய்விரித்து, நம் புலன்கள் மறைத்துத்,**
**தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி,**

நமக்குஉள உரிமை, தமக்கு என்பார் எனில்,
வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற்று எங்கே? விழிப்புற்று எழுக!
இகழ்ச்சி நேர்ந்தால், இறப்போம் என்றும்
புகழ்ச்சியே எம் பூணாம்! என்றும்
வையம் ஆண்ட வண்தமிழ் மரபே!
கையி ருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும்உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணாக் கடல்போல் மாப்பகை மேல்விடு!
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு!
பொன்மொ ழிக்குநீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
கைக்குள திறமை காட்ட எழுந்திரு!
வாழ்க இளைஞனே! வாழ்கநின் கூட்டம்!
வாழ்க திராவிட நாடு!
வாழ்கநின் வையத்து மாப்புகழ் நன்றே!

*இந்தப் பாடலைத் தமிழ்நாடெங்கிலும் நடைபெற்ற திராவிடர் கழக மாநாடுகளிலும், பொதுக் கூட்டங்களிலும், நான் எடுப்பான குரலில் எடுத்துரைக்கும்போது, அதனைக் கேட்டுக்கொண்டிருக்கும் கழகத் தோழர்களும், கழக ஆதரவாளர்களும், பொதுமக்களும் எழுச்சியுற்றிருந்ததைக் கண்டு நான் பெரிதும் மகிழ்ந்திருக்கிறேன்.*

புதுவை திராவிடர் கழக மாநாடு

*புதுவையில் திராவிடர் கழகக் கிளை ஒன்றினை அமைத்து, அதன் சார்பாகச் சிறப்பான மாநாடு ஒன்றினை நடத்தப், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் திட்டமிட்டிருந்தார். அவருக்குத் துணையாக வழக்கறிஞர் பெருமாள், அ.ச. காங்கேயன், ம. நோயேல், பொன். இராமலிங்கம், புதுவைக் கவிஞர் சிவப்பிரகாசம், வ. பொன்னம்பலம், காஞ்சி கலியாணசுந்தரம் போன்றோர் அமைந்து மாநாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.*

புதுவை திராவிடர் கழக மாநாடு, 1945 சூலை 22ஆம் நாளன்று நடைபெறும் என்று அறிவிப்புச் செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப் பட்டன. மாநாட்டை எப்படியும் நடத்தவிடக்கூடாது என்ற தீய எண்ணத்தில் இருந்த பழைமைவாதிகளும், காங்கிரசுக் கட்சியினரும், கம்யூனிஸ்டுக் கட்சியினரும் அதற்கான சதித்திட்டங்களைத் தீட்டுவதில் தீவிரமாக ஈடுபட்டி ருந்தனர்.

மாநாட்டிற்குப் பெரியார், அறிஞர் அண்ணா, நான், பட்டுக்கோட்டை கே.வி. அழகிரிசாமி, சத்தியவாணி முத்து, மூவலூர் இராமாமிர்தத்தம்மையார், வை.சு. மஞ்சுளாபாய் போன்றவர்கள் அழைக்கப்பட்டிருந்தோம்.

மாநாட்டில் டாக்டர் அம்பேத்கார், முகமதலி ஜின்னா, பிரெஞ்சு விடுதலை வீரர் தெகோல், பெரியார், புரட்சிக் கவிஞர் ஆகியோரின் படத்திறப்புவிழா நிகழ்ச்சியும் ஏற்பாடாகி இருந்தது.

புதுவையின் முக்கியத் தெருக்களின் வழியாக மாநாட்டு ஊர்வலம் வந்தது. திராவிடர் கழகத் தலைவர்கள் பலரும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஊர்வலம் வந்துகொண் டிருந்தபோதே, எதிரிகள் ஆங்காங்குக் கூடிநின்று எதிர் முழக்கங்கள் இட்டுக் குழப்பம் விளைவிக்க முயன்றனர்.

முதலில் கொடியேற்றுவிழா நடந்தது. மாநாட்டை அறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கிவைத்து அரிய உரை ஆற்றினார். பெரியார் அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேருரை ஆற்றினார். மாநாட்டில் நானும், மற்றும் சிலரும் சிறப்புரை ஆற்றினோம்.

நண்பகல் நெருங்குகிற நேரத்தில், கலகக்காரர்கள் பெருந்திரளினராக வந்து, கொடிக்கம்பத்தை வெட்டி

வீழ்த்திவிட்டு, மாநாட்டுக் கொட்டகைக்குள் நுழைந்து, வன்முறைத் தாக்குதலில் ஈடுபட்டனர். காவல் துறையினர் செயலற்றுப்போயிருந்தனர். காலை மாநாடு அத்தோடு நிறுத்தப்பட்டு எல்லோரும் கலைந்துசென்றனர்.

பெரியாரும், அண்ணாவும், நானும், மற்றத் தலைவர்களும் ரிக்ஷா வண்டிகளில் ஏறி, எங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றோம். நடந்து போய்க்கொண்டிருந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், காஞ்சி கலியாண சுந்தரம், (கலைஞர்) மு. கருணாநிதி ஆகியோரைக் கலகக்காரர்கள் வழிமறித்துத் தாக்கினார்கள். கலகக்காரர்களை எதிர்த்துச் சமாளித்த புரட்சிக் கவிஞருக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது. அவரது மூக்குக் கண்ணாடி உடைந்து விழுந்தது. அவரது செருப்புகள் கழன்று சிதறிப்போய்விட்டன. அவர் கழகத் தோழர்களால் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டு, அவரது இல்லத்தில் கொண்டுபோய் விடப்பட்டார்.

காஞ்சி கலியாணசுந்தரம் அவர்களையும் கலகக்காரர்கள் பலர் வளைத்துக்கொண்டு அடித்துத் தாக்கினார்கள். சிறு காயங்களுடன் அவர் தப்பிப்பிழைத்தார். அவர் கழகத்தின் கொள்கைகளைப் பரப்பும் வார இதழ் ஒன்றை, ''தொழிலாளர் மித்திரன்'' என்ற பெயரில், புதுவையைத் தலைமை இடமாகக் கொண்டு நடத்திவந்தார். வழக்கறிஞர் பெருமாள் அவருக்கு ஆதரவாக இருந்து, உதவிகளைச் செய்துவந்தார்.

எதிரிகள் திரண்டு நின்றுகொண்ட இடத்தில், (கலைஞர்) மு. கருணாநிதி எதிர்பாராமல் சென்றதன் காரணமாக, வன்முறையாளர்கள் அவரைத் தாக்கி, அவர் மயங்கி விழும்படி செய்துவிட்டனர். பக்கத்தில் இருந்த வீடு ஒன்றில் இருந்தவர்கள் அவர் மயங்கிக் கிடப்பதைப் பார்த்து, இரக்கவுணர்வோடு, அவரை வீட்டிற்குள் எடுத்துச்சென்று அவருக்குத் தேவையான மருத்துவ உதவியைச் செய்து, அவரைக் காப்பாற்றினார்கள்.

மாநாடு நடைபெற்ற அப்போது, நாகை ஆர்.வி. கோபால் அவர்கள், ''நாகை திராவிட நடிகர் கழகத்தின்'' சார்பாகப் 'பழனியப்பன் அல்லது சாந்தா'' என்ற நாடகத்தைப் புதுவை 'கெப்லே' கொட்டகையில் நடத்திவந்தார். அந்த நாடகத்தின் கதை-உரையாடல் ஆகியவற்றைக் (கலைஞர்) கருணாநிதி எழுதியிருந்தார். அந்த நாடகத்தில் 'சிவகுரு' என்ற பாத்திரத்தை ஏற்று அவர் நடிக்கவும் செய்தார். அந்த நாடகத்தையும், அதில் நடித்தவர்களையும் எதிர்க்கட்சியினர் வெறுத்தனர். அவர்களைத் தாக்குவதற்கு ஏற்ற நேரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனர். தங்கள் வெறுப்பை நிலைநாட்டுவதற்குப் புதுவை திராவிடர் கழக மாநாட்டுச் சூழல்களை அவர்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

நானும், மற்றக் கழகத் தலைவர்களும் வேறுவேறு வழிகளில் சென்றுவிட்டதால், நாங்கள் தாக்கப்படாமல் தப்பினோம்.

மாலை மாநாட்டில், கழகப் பொறுப்பாளர்களும், செயல்வீரர்களும் மிக்க ஆத்திரத்தோடும், கொதிப்புணர்ச்சியோடும் வந்து கூடியிருந்தனர். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் சிறிதும் சோர்வடைந்துவிடாமல், மாநாட்டை எப்படியும் தொடர்ந்து நடத்தித் தீரவேண்டும் என்ற உணர்வோடு, மேடையில் மிகக் கம்பீரமான தோற்றத்துடன் அமர்ந்திருந்தார்.

மாலை மாநாட்டில், அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி அவர்கள் முதலில் வீரவுரை ஆற்றினார். அவர் உரையாற்றிய போது,

> ''காலையில் வேதனை தரக்கூடிய, நடக்கக்கூடாத, வேண்டத்தகாத நிகழ்ச்சிகள் நடந்ததாகக் கேள்விப்பட்டேன். தமிழகத்தின் ஒப்புயர்வற்ற ஒரு பெருங்கவிஞன், காணக்

கிடைக்காத கருவூலம், பெறற்கரிய பெருஞ்செல்வம் பாரதிதாசன் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த கயவர்களால் தாக்கப்பட்டார் என்ற செய்தியைக் கேள்வியுற்று நான் பெரிதும் அதிர்ந்துபோனேன்.

பேரறிஞன் சாக்ரடீசுக்குக் கிரேக்க நாட்டினர் நஞ்சு கொடுத்துக் கொன்றனர். இன்றைய உலகம் அவரைக் கொன்ற கொடுமையாளர்களைத் தூற்றுகிறது. ஆனால் கொல்லப்பட்ட சாக்ரடீசைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கிறது.

உலகெங்கணும், கயவர்களின் கொடுமைகளால் ஏசு சிலுவையில் அறையப்பட்டார்; நபிகள் நாயகம் மக்கா விலிருந்து மதினாவரையில் கல்லால் அடித்துத் துரத்தப் பட்டார்; ஜியார்டனோ புரூனோ நெருப்புக் குண்டத்தில் வைத்துப் பொசுக்கப்பட்டார்; கலீலியோ சிறையில் அடைக்கப்பட்டுக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார். அவர்கள் எல்லோரும் இன்றைய நிலையில் உலக மக்களால் போற்றிப் புகழப்படுகிறார்கள்; கொடுமைகள் புரிவதற்குக் காரணமாக இருந்த இழிகுணம் படைத்த அந்தக் கயவர்களை இன்றைய மக்கள் வெறுத்து ஒதுக்கி வருகிறார்கள்.

இன்று பாரதிதாசனைத் தாக்கிய கெடுமதி படைதத் கொடுமையாளர்கள் சமுதாயத்தால் வெறுக்கப்பட்டு, ஏசப்பட்டு, ஒதுக்கப்படுவார்கள் என்பது மட்டும் உறுதி; வருங்கால மக்களால் அவர் உலகப் பெருங்கவிஞர்களுள் ஒருவராகப் போற்றிப்புகழப்படுவார் என்பதும் உறுதி!

எப்படியோ நடந்தவைகள் நடந்தவைகளாகவே இருக்கட்டும்; இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்.''

*என்று சிங்கம்போல் முழங்கிய முழக்கம் மாநாட்டினர்க்குப் புத்துணர்ச்சியையும், எழுச்சியையும் ஊட்டின.*

பின்னர் மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் உரையாற்றினார். அதன்பிறகு சத்தியவாணி முத்து அவர்கள் பேசியபோது, மீண்டும் கலகக்காரர்கள் பெருந்திரளினராக மாநாட்டுக் கொட்டகைக்குள் நுழைந்து, வன்முறைக் கலவரங்களில் ஈடுபட்டார்கள். கழகத்தோழர்களும் எதிர்த் தாக்குதல் நடத்தினார்கள் என்றாலும், மாநாட்டைத் தொடர்ந்து அமைதியாக நடத்தமுடியவில்லை. அத்தோடு மாநாடு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

பெரியார், அறிஞர் அண்ணா, அழகிரிசாமி போன்ற தலைவர்களையெல்லாம் பாதுகாப்பாக வழி அனுப்பி வைத்துவிட்டு, நானும், மற்றக் கழகப்பொறுப்பாளர்களும் அவ்விடத்தைவிட்டு அகன்றோம்.

## திராவிடர் கழக மாநில மாநாடு - திருச்சி

திராவிடர் கழகத்தின் தலைவராகப் பெரியார் அவர்களும், பொதுச் செயலாளராக அறிஞர் அண்ணாவும் பொறுப்பேற்றுத் திராவிடர் கழகத்தைப் பரவலாக வளர்க்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர். நானும், ஏனைய முன்னணியினரும் கழகச் செயற்குழு உறுப்பினர்களாக இருந்து, கழகக் கொள்கை பரப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தோம்.

பெரியார் அவர்கள் பொதுக்கூட்டங்களில் பேசும்போது வெளியிட்ட கருத்துக்களும், 'விடுதலை', 'குடிஅரசு' ஆகிய ஏடுகளில் அவர் எழுதிய கொள்கை விளக்கங்களும் கொள்கை பரப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த என்போன்றவர்க்குப் பெரிதும் பயன்பட்டன. அறிஞர் அண்ணா அவர்கள் பொதுக் கூட்டங்களில் அழகாகவும், அருமையாகவும் வெளியிட்ட சமுதாய-பொருளாதார-அரசியல் விளக்கங்களும், அவர் 'திராவிட நாடு' வார இதழில் எழுதிய கொள்கை விளக்க, அரசியல் விளக்கக் கட்டுரைகளும் என்னைப் போன்றவர்களுக்கு வழிகாட்டிகளாக அமைந்திருந்தன.

திராவிடர் கழகத்தின் முதல் மாநில மாநாட்டைத் திருச்சி புத்தூர் மைதானத்தில் 1945 செப்டம்பர் 29, 30 ஆகிய நாட்களில் நடத்துவது என்று, தலைமைக் கழகத்தால் முடிவு செய்யப்பட்டது. மாநாட்டிற்கான ஏற்பாடுகளைக் கழகப் பொதுச் செயலாளராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் கண்காணித்துவந்தார். அவருக்கு உதவியாக நான் அவருடன் இருந்து பணியாற்றிவந்தேன். அறிஞர் அண்ணாவும், நானும் மாநாடு நடைபெறுவதற்கு ஒருவார காலத்திற்கு முன்பே திருச்சிக்குச் சென்று, அங்குத் தங்கியிருந்து, மாநாட்டு ஏற்பாடுகளைக் கவனித்து வந்தோம்.

முதல்நாள் சுயமரியாதை மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்குத் திருவொற்றியூர் டி. சண்முகம் அவர்கள் தலைமை தாங்கினார். மாநாட்டைக் குடந்தை கே.கே. நீலமேகம் அவர்கள் தொடங்கி வைத்தார். சேலம் கனகம்மையார் இராமசாமி அவர்கள், சுயமரியாதை இயக்கத்தின் செங்கொடியை ஏற்றிவைத்தார்.

அந்த மாநாட்டில் அறிஞர் அண்ணா, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், நான், பட்டுக்கோட்டை அழகிரிசாமி, மூவலூர் இராமாமிர்தத்தம்மையார், எஸ். குருசாமி, குஞ்சிதம் குருசாமி, குடந்தை எஸ்.கே. சாமி போன்றோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினோம்.

இரண்டாம்நாள் திராவிடர் கழக மாநில மாநாடு பெரியார் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. என். அர்ச்சுனன் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். மிராண்டா கஜேந்திரன் அம்மையார் தராசுக் கொடியை ஏற்றிவைத்தார். திருச்சி தி.பொ. வேதாசலம் அவர்கள் வரவேற்புக் குழுத்தலைவராக இருந்து, வரவேற்புரையாற்றினார்.

அந்த மாநாட்டில், அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு ஏன் தனிநாடாக ஆகவேண்டும்?' என்பது பற்றி

*விளக்கங்கள் பல தந்து நீண்ட உரையாற்றினார்; அவர் உரையின் சுருக்கம் வருமாறு*

"இந்தியா என்பது ஒரு கண்டம் ஆகும். எனவே, அது பலநாடுகளாகப் பிரிக்கப்படவேண்டியது அவசியமாகும். ஐரோப்பாக் கண்டத்தில் 32 தனித்தனி நாடுகள் உள்ளன. ஐரோப்பா முழுவதையும் ஒரு குடையின்கீழ் இருக்க வேண்டும் என யாரும் கூறவில்லை. இந்தியாவும் ஒரே குடையின்கீழ் இருக்கவேண்டும்என்ற அவசியமில்லை.

இந்தியா, பிரிட்டிசு ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு தனித்தனி ஆட்சிகொண்ட 56 தேசங்களைக் கொண்ட ஒரு கண்டமாகத்தான் இருந்துவந்திருக்கிறது. பிரிட்டிசார் தமது அதிகார ஆதிக்கம் சரியாக நடைபெறவேண்டும் என்ற எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளவே, இந்தியாவை ஒரே ஆட்சியின்கீழ் கொண்டுவந்து, அதனை ஒரு நாடு என்று மற்றவர் கருதும்படி செய்தனர்.

நாகரிகம், பண்பாடு, மொழி, கலை, மன நிலை, ஒரே குடிமக்கள் என்ற உணர்வு, வரலாற்றுத்தொடர்பு போன்ற இவைதான், ஒரு இனத்திற்குரிய இயல்புகளாகும். இந்த முறையில் பார்த்தால், இந்தியா தனித்தனியாகப் பல இனங்களைக் கொண்டது என்பது புலப்படும். இந்தியாவில் தனித்தனி இன இயல்புகள் இருப்பதால், இனவாரியாக இந்தியா பிரிக்கப்பட்டால்தான், அந்தந்த இனத்திற்கெனத் தனித்தனி இடமும், ஆட்சியும் கிடைக்கும். இல்லை என்றால், எந்த இனம் தந்திரத்தாலும், சூது சூழ்ச்சியாலும், தன்னலத்திற்காகப் பிறரை நசுக்கும் இயல்பினாலும் கை தேர்ந்திருக்கிறதோ, அந்த இனத்திற்கு மற்ற இனங்கள் அடிமைப்பட்டு வாழவேண்டி நேரிடும்.

முரண்பாடுள்ள இயல்புகளைக் கொண்ட பல்வேறு இனங்களைச் சூழ்ச்சியின் மூலம் ஒன்றாக இணைத்துக் காட்டுவதால், கலவரம், ஐயப்பாடு, ஆதிக்கம், மனக்கிலேசம்,

தொல்லை, துயரம் போன்றவையே வளர்கின்றன. எனவே, எதிர்காலத்தில் தொல்லைகள் வளர்ந்து, இந்தியா ஒரு இரத்தக் காடாக ஆகாது இருக்கவேண்டுமானால், இப்போதே சமரசமான முறையில், இனவாரியான தனித்தனி நாடுகளாக இந்தியா பிரிக்கப்படவேண்டும்.

இனவாரியாகவும், ஆட்சி ரீதியாகவும், நாடு பிரிக்கப்படுவது என்பது புதிதும் அல்ல; கேட்டறியாததும் அல்ல. ஏற்கனவே இந்தியா பிரிட்டிசு இந்தியா, பிரெஞ்சு இந்தியா, டச்சு இந்தியா, போர்த்துக்கீசிய இந்தியா, சுதேச இந்தியா எனப்பல பெயருடைய இந்தியாக்கள் இருந்துதான் வந்திருக்கின்றன.

சுதேச சமஸ்தானங்கள் மட்டும் இந்தியாவில் 574 இருந்து வந்தன. அவைகள் தனித்தனி முறைகளையும், அதிகாரங் களையும், ஆட்சிகளையும் கொண்டு இயங்கிவருகின்றன.

ஒட்டமான் பேரரசின் பிணைப்பிலிருந்து விடுபட்ட துருக்கி நாடு, சிறந்த ஒரு வல்லரசாக ஆகியிருப்பதைப் போல, இந்தியாவும் இனவாரியாகப் பிரிக்கப்பட்டால், ஒவ்வொரு வட்டாரமும் தனிப்புகழுடனும், பெருமையுடனும் விளங்கும் என்பது உறுதி.

இந்தியா இனவாரியாகத் தனித்தனி நாடுகளாகப் பிரிக்கப்பட்டால், அந்த நாடுகள் ஒவ்வொன்றும், பாதுகாப்பு, போர்ப்படை, வாணிகம், தொழில், மொழி, கலை போன்ற துறைகளில் தத்தம் இயல்புகளுக்கு ஏற்றபடி வளர வழிவகை ஏற்படும்.

அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர், சந்திரகுப்தர், சமுத்திர குப்தர், அக்பர், ஔரங்கசீப் போன்ற மன்னாதி மன்னர்கள் காலத்திலும் இந்தியா ஒரே நாடாக இருந்ததில்லை. சேர, சோழ, பாண்டிய மன்னர்களான திராவிட மன்னர்கள் ஆண்ட காலத்தில் திராவிட நாடு தனி இனப்பண்போடுகூடிய தனி நாடாகத்தான் விளங்கி வந்திருக்கிறது.

தனித்தனி நாடுகளாக வட்டாரங்கள் பிரிந்தால், ஒவ்வொரு வட்டாரமும் தங்களுக்குள்ள வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப, பொருளாதாரத்தைப் பெருக்கிக்கொள்ளவும், ஒரு வட்டாரம் மற்ற வட்டாரங்களைச் சுரண்டும் கொடுமையை ஒழிக்கவும் முடியும்.

அந்தந்த இனத்திற்கெனத் தனித்தனி இடமும், ஆட்சியும் இருந்தால்தான், அந்தந்த இனம், மற்றவைகளிடம் சம உரிமை, சமநிலைமை, சமத் தகுதி பெற்று மனநிறைவோடு வாழமுடியும்.

ஒரு இனத்திடம் மற்றொரு இனத்திற்கு இயற்கையாகவே நம்பிக்கை இருப்பது இல்லை. ஒரு இனத்தின் ஆட்சியின்கீழ் மற்றொரு இனம் இருப்பது என்பதே அச்சத்திற்கும் அபாயத்திற்கும் காரணமாக ஆகிவிடுகிறது. அச்சமும், அவநம்பிக்கையும் பெற்றெடுக்கும் குழந்தைதான் பயங்கரப் புரட்சியாக மாறிவிடுகிறது. இந்தப் பயங்கரப் புரட்சியைத் தடுக்கவே நாட்டுப்பிரிவினை அவசியமாகிறது.

இந்தத் திட்டத்தை எதிர்ப்பவர்களைப் பொருட்படுத்தாது, நாம் நம் கடமைகளைச் செவ்வனே செய்யவேண்டும். இலாகூரில், 'பாகிஸ்தான்' தனிநாடாக ஆகவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பே, நாம் 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்ற தீர்மானத்தை நிறைவேற்றி யுள்ளோம். 'பாகிஸ்தான் தேவை' என்று கூறப்படுவதற்கான காரணங்களைவிட, 'திராவிட நாடு தேவை' என்பதற்கான காரணங்கள் அதிகமாகவே இருந்து வருகின்றன. இது உலகறிந்த உண்மை. சாதி மத பேதமற்ற - பொருளாதார ஏற்றத்தாழ்வு இல்லாத - சமத்துவ நோக்கம்கொண்ட - சமதர்ம நோக்குபெற்ற - சனநாயகப் பண்பு உடைய - அறிவுத் தெளிவுபெற்ற அன்னியர் சுரண்டலுக்கு ஆட்படாத தனித் திராவிட நாட்டை அமைக்க அனைவரும் உறுதிகொண்டு பாடுபடுவோமாக!"

அறிஞர் அண்ணாவின் இந்தப் பேச்சு, மாநாட்டில் குழுமி யிருந்த அனைவர்க்கும் புதிய ஊக்கத்தையும், உணர்ச்சியை யும் அளிப்பதாக அமைந்திருந்தது.

திராவிடர் கழக மாநில மாநாட்டில், நானும், ஏ.பி. சனார்த்தனம், சி.பி. சிற்றரசு, என்.வி. நடராசன், சத்திய வாணிமுத்து, கே.கே. நீலமேகம், கோயில்பட்டி வள்ளி முத்து, சேலம் சித்தையன், திண்டுக்கல் எம்.ஆர். மத்திரன், ஜி.பி. சோமசுந்தரம், ப. கண்ணன் ஆகியோரும் உரை யாற்றினோம்.

மாநாட்டின் முதல்நாள் இரவிலும், இரண்டாம்நாள் இரவிலும் நடிகவேள் எம்.ஆர். இராதாவின் நாடகக் குழுவினரால் சீர்திருத்த நாடகங்கள் நடத்தப்பட்டன.

மாநாட்டில், திராவிட நாடு தனிச் சுதந்திர நாடாக ஆகவேண்டும், திராவிடர் கழகம் சட்டமன்ற - நாடாளு மன்றத் தேர்தல்களில் போட்டியிடாது, கழகத்தின் பாது காப்புக்காகச் சுறுப்புச் சட்டைத் தொண்டர் படை ஒன்று அமைக்கப்படவேண்டும் என்பவற்றை முக்கியமாக வலியுறுத்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திராவிடர் கழகத்தின் தொண்டர் படையைத் தனித்து அடையாளங்காட்டும் வகையில், தொண்டர் படையினர் மட்டுமே கறுப்புச் சட்டையை அணியவேண்டும் என்ற கொள்கையை அறிஞர் அண்ணா வற்புறுத்திவந்தார். ஆனால், பெரியார் அவர்கள் திராவிடர் கழகத்தைச் சார்ந்த எல்லோரும் கறுப்புச் சட்டை அணியலாம் என்பதை ஊக்கு வித்துவந்தார். அதனால் திராவிடர் கழகத்தார் அனைவரும் கறுப்புச் சட்டையை அணியத் தலைப்பட்டனர்.

## திராவிட மாணவர் கழகத்தின் மாநில மாநாடு - நீடாமங்கலம்

திராவிட மாணவர் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நீடாமங்கலத்தில்*, 1946 பிப்ரவரி 23, 24ஆகிய நாட்களில் நடைபெற்றது. ஆற்று மணலில் மாநாட்டிற்கான மாபெரும் பந்தல் அமைக்கப் பட்டிருந்தது.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து மாணவர் களும், திராவிடர் கழகச் செயல் வீரர்களும் மாநாட்டிற்குப் பெரும் அளவில் வருகை தந்திருந்தனர்.

பெரியார், அறிஞர் அண்ணா, சேலம் ஏ. இராமசாமி, நான், ஏ.பி. சனார்த்தனம், தவமணிராசன், சரவணன், வள்ளலரசு, ஏ.வி.பி. ஆசைத்தம்பி, கி. வீரமணி போன்றோர் கலந்துகொண்டு உரையாற்றினோம்.

இந்த மாநாட்டில்தான் திராவிடர் கழகத்தின் கொடி (கறுப்பு நிறத்தில் நடுவில் சிவப்பு வட்டம் கொண்டது) பெரியார் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. மாநாட் டில் கலந்துகொண்ட பலரும் கறுப்புச் சட்டை அணிந்திருந் தனர்.

திராவிடர் கழகத்திற்கெனப் பல்வேறு விதத்தில் வடிவமைக்கப்பட்ட கொடிகளின் மாதிரிகளை, ஈரோடு சண்முகவேலாயுதம் பெரியாரிடம் காட்டினார். இறுதியில், பெரியார் அவர்கள், இப்பொழுது திராவிடர் கழகம் பயன் படுத்தி வரும் சிவப்பு வட்டத்தை நடுவிலே கொண்ட கறுப்புக் கொடியைத் தேர்ந்தெடுத்தார். அந்தக் கொடிதான், நீடாமங்கலம் மாநாட்டில் முதன்முதலாக ஏற்றப்பட்டது.

## கறுப்புச் சட்டைப் படையினர் மாநாடு - மதுரை

திருச்சியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநில மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுக்கு இணங்கப்

* இவ்வூர் தற்போது திருவாரூர் மாவட்டத்தில் உள்ளது.

பெரியாரின் வேண்டுகோளை ஏற்றுத் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த ஆண்கள் கறுப்புச் சட்டையையும், பெண்கள் கறுப்புச் சேலையையும் அணியத் தொடங்கினர். கறுப்புச் சட்டை அணிந்தவர்களின் தோற்றம், நாடெங்கிலும், திராவிடர் கழகம் பற்றிய நினைவுகளை மக்களிடையே ஏற்படுத்தக் காரணமாக அமைந்தது. கறுப்புச் சட்டைப் படையினரின் எழுச்சியும், வளர்ச்சியும் எதிர்க்கட்சி யினர்க்கும், வைதிக மனப்பான்மை கொண்டவர்களுக்கும் ஒருவித அச்சவுணர்வை ஏற்படுத்தின.

மாநிலம் எங்கணும் உள்ள கறுப்புச் சட்டைப் படையினர் அனைவரையும் ஒருங்கு திரட்டிக் காட்டவேண்டும் என்ற எண்ணத்தில், 1946 மேத் திங்கள் 11, 12 ஆகிய நாட்களில், மதுரையில், கறுப்புச்சட்டைப் படையினரின் முதலாவது மாநில மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

மாநாட்டிற்கு நாடெங்கிலிருந்தும், பல்லாயிரக்கணக் கான ஆடவரும், பெண்டிரும் கறுப்பு உடையணிந்து, கும்பல் கும்பலாகத் திரண்டு வந்திருந்தனர். மாநாட்டை ஒட்டி மாபெரும் ஊர்வலம் ஒன்று மதுரைப் புகைவண்டி நிலையத்திற்கு அருகிலிருந்து புறப்பட்டு, முக்கியத் தெருக் களைக் கடந்து, வைகையாற்று மணற்பகுதிக்குச் சென்று சேர்ந்தது. வைகையாற்றின் நடுவில், மணற்பரப்பில், மிகப் பெரிய அளவில் மாநாட்டுப் பந்தல் போடப்பட்டிருந்தது.

ஊர்வலத்தில் நான்கு குதிரைகள் பூட்டிய (சாரட்) தேர் வண்டியில், பெரியார், அறிஞர் அண்ணா, என். அர்ச்சுனன், நான், ஈரோடு எஸ்.ஆர். காந்தி அம்மையார் ஆகியோர் அமர்ந்திருந்தோம். ஊர்வலத்தில் ஏராளமான அளவில் கறுப்பு உடை தரித்தோர் கலந்துகொண்டனர். நான் வெள்ளைக்கால் சட்டையும், கறுப்புப் புஷ்கோட்டும் அணிந்திருந்தேன். கறுப்புச் சீருடை அணிந்த தொண்டர்கள் பலர் ஊர்வலத்தில் அணி வகுத்துச்சென்றனர். மதுரை

எஸ். முத்து, தூத்துக்குடி கே.வி.கே. சாமி ஆகிய இருவரும் ஊர்வலத்தை வழிநடத்திச் சென்றனர். அடர்த்தியாகவும், மிக நீண்ட அளவிலும் அமைந்திருந்த ஊர்வலத்தின் சிறப்பைக் கண்டு, மாற்றுக் கட்சியினரும், வைதிகர்களும் பொறாமையும், எரிச்சலும் கொண்டனர்.

பழையகோட்டை என். அர்ச்சுனன் அவர்கள் கழகக் கொடியை ஏற்றிவைத்தார். அறிஞர் அண்ணா அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்துக் கழகத்தின் சீரிய கொள்கைகள் குறிக்கோள்கள் கோட்பாடுகள் பற்றி அருமையான முறையில் உரையாற்றினார். பெரியார் அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கித் திராவிடர் கழகத்தினர் கறுப்புச் சட்டைப் படையினராகக் காட்சியளிக்க வேண்டியதன் இன்றியமையாமை பற்றியும், சமுதாயத் திலும், அரசியலிலும் பார்ப்பனரின் ஆதிக்கம் ஒழிய வேண்டியதன் அவசியம் பற்றியும், இந்தித் திணிப்பைக் கூண்டோடு தடுக்கவேண்டிய தன்மைபற்றியும், திராவிட நாடு தனிநாடாக ஆகவேண்டிய அவசியம் பற்றியும் நீண்டதொரு உரை நிகழ்த்தினார். சர் பி. தியாகராயரின் திருஉருவப்படத்தை நான் திறந்துவைத்து, திராவிட இயக்கம் வளர்ந்துவந்த வரலாறு பற்றி எடுத்துரைத்தேன். ஈரோடு எஸ்.ஆர். காந்தி அம்மையார் திராவிட நாட்டுப் படத்தைத் திறந்துவைத்து உரை ஆற்றினார்.

மாநாட்டில் பட்டுக்கோட்டை அழகிரிசாமி, சி.பி. சிற்றரசு, என்.வி. நடராசன், ஈ.வெ.கி. சம்பத், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, திருச்சி தி.பொ. வேதாசலம், பாவலர் பால-சுந்தரம், சேலம் சித்தையன், மூவலூர் இராமாமிர்தத் தம்மையார், கே.கே. நீலமேகம், ஜி.பி. சோமசுந்தரம், எம்.கே. குப்தா, திண்டுக்கல் எம்.ஆர். மத்திரன் போன்றவர் கள் உரையாற்றினர். முதல்நாள் மாநாடு மிகச்சிறப்பாக நடந்துமுடிந்தது.

இரண்டாவது நாள் ஞாயிற்றுக்கிழமையாக இருந்ததால், அது பொதுவிடுமுறை நாளாக அமைந்தது. எதிர்க்கட்சியினர், சில காங்கிரசுத் தலைவர்களின் தூண்டுதலின் பேரில், மதுரை மாநகரில், ஆங்காங்குத் திரண்டு நின்று, கறுப்புச் சட்டையினர்க்கு எதிராக வன்முறைக் கலவரங்களைத் தூண்டி வன்முறை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். காங்கிரசு - கம்யூனிஸ்டுக் கட்சிகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் பலர், அந்த வன்முறைக் கும்பலோடு சேர்ந்து கொண்டனர்.

மதுரை மாநகரின் பல்வேறு பகுதிகளில் காணப்பட்ட கறுப்புச் சட்டைப் படையினரை, வன்முறைக் கும்பல்கள், ஆங்காங்கு வளைத்துக்கொண்டு, தடிகளால் தாக்கி அவர்களின் கறுப்புச் சட்டைகளைக் கழற்றிக் கொடுக்கும்படி வற்புறுத்தினார்கள். பெண்கள் கட்டியிருந்த சேலைகளை உருவிவிட்டு அவர்களை அவமானப்படுத்தினார்கள். வெறிநாய்களைத் துரத்தி அடிப்பதைப்போல் கறுப்பு உடை உடுத்தியவர்களை ஓட ஓட விரட்டி அடித்தார்கள்.

ஈவு இரக்கங்கொண்ட சில பெரியவர்கள், "கறுப்புச் சட்டையினரை ஏன் அடித்துத் துன்புறுத்தி, கொடுமை புரிகிறீர்கள்?" என்று வன்முறைக் கும்பலைப் பார்த்துக் கேட்டபோது, அவர்கள், "கறுப்புச் சட்டைக்காரர்கள்; சாமி இல்லை என்கிறார்கள்!", "மீனாட்சியம்மனைப் பழிக்கிறார்கள்!", "பிள்ளைவரம் கேட்டு ஏன் கோயிலுக்குப் போகிறீர்கள்? எங்களிடம் வாருங்கள், நாங்கள் உங்களுக்குப் பிள்ளை வரம் தருகிறோம் என்று கோயிலுக்குச் சென்ற பெண்களிடம் கூறுகிறார்கள்" என்பன போன்ற பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

மதுரையில் காங்கிரசுத் தலைவர்களாக இருந்த வழக்கறிஞர் வைத்தியநாத அய்யர், சசிவர்ணத்தேவர், பரமசிவ முதலியார் போன்றவர்கள் வன்முறைக் கும்பல்களைத்

தூண்டிவிட்டதாகச் சொல்லப்பட்டது. ஆட்சிப்பொறுப்பில், காங்கிரசு சார்பில் பிரகாசம் இருந்ததன் காரணமாகக் காவல் துறையினர் காங்கிரசுக் கலவரக் கும்பலுக்கு எதிராக முறை யான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. காவல் துறையினர் செயலற்று இருந்தனர். நேரம் ஆக ஆக, வன் முறைச் செயல்கள் மதுரையின் எல்லாப் பக்கங்களிலும் தலைவிரித்து ஆடின. வன்முறையாளர்களின் செயல்களைத் தடுத்துநிறுத்த, நகருக்குள் சென்ற மதுரை எஸ். முத்துவை யும், அவரைச் சார்ந்த இருநூற்றுக்கு மேற்பட்டவர்களையும் காவல்துறையினர் கைது செய்து சிறைக்காவலில் வைத்து விட்டனர்.

இரண்டாம்நாள் மாநாடு காலை 10 மணியளவில் தொடங்கி, நடைபெற்றுக்கொண்டிருந்தது. கழகத்தின் முக்கியப் பேச்சாளர்கள் சிலர் மாநாட்டில் உரையாற்றினர். சுமார் 11 மணி அளவில், வன்முறைக் கும்பலைச் சேர்ந்தவர்கள் பெருந்திரளினராகத் திரண்டு, கைகளில் தீப்பந்தங்கள் ஏந்திக்கொண்டு, மாநாட்டுப் பந்தலை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி, மாநாட்டில் இருந்த எங்களுக்கு எட்டியது. நான் ஒலி பெருக்கியின் முன்னால் நின்று, ''காங்கிரசுக்காரர்களின் வன்முறைக் கும்பல் ஒன்று மாநாட்டுப் பந்தலைத் தீயிட்டுக் கொளுத்த வந்து கொண்டிருக்கிறது. பந்தலில் குழுமியிருக்கும் தொண்டர் படையினரும், வீரமறவர்களும் ஆளுக்கு ஒரு கம்புடன் பந்தலுக்கு முன்னால் சென்று நின்று பந்தலைப் பாதுகாக்க உடனே புறப்படுங்கள். மாநாட்டுப் பந்தலில் உள்ள பெண்களுக்கும், கழகத் தலைவர்களுக்கும் உரிய பாதுகாப்பு அளியுங்கள்'' என்று உரத்த குரலில் வேண்டுகோள் விடுத்தேன்.

நானும், ஈ.வெ.கி. சம்பத், கே.வி.கே. சாமி, திருவாரூர் தங்கராசு, கறுத்தநாடார் போன்றோரும், நெல்லை - முகவை - மதுரை - திருச்சி - கோவை போன்ற மாவட்டங்களிலிருந்து வந்திருந்த தொண்டர்களும் ஆளுக்கு ஒரு தடியை எடுத்துக்

கொண்டுபோய் பந்தலின் முன்னால் நீண்ட தடுப்புச் சுவர் வைத்ததுபோல் நின்றுகொண்டோம். கலவரக்காரர்கள் சுமார் 5000க்கும் மேற்பட்டவர்கள், தடி அறுவாள் வேல்கம்பு - தீப்பந்தம் ஆகியவற்றோடுவந்து 100 அடிக்கு அப்பால் நின்றுகொண்டார்கள். அவர்கள் கையிலேந்தி யிருந்த தீப்பந்தங்களைச் சரமாரியாகப் பந்தலை நோக்கி வீசினார்கள். பந்தல் தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. உடனே நாங்கள் அனைவரும், தலைவர்களையும், தாய்மார்களை யும், கழகத் தோழர்களையும் வெளியேற்றிப் பாதுகாப்பாக மதிச்சியம் என்ற பகுதியிலுள்ள வீடுகளில் கொண்டுபோய்ச் சேர்க்கும் பணியில் ஈடுபட்டோம்.

காவல்துறை அதிகாரிகள் மாநாட்டை முடித்துவிட்டு விரைவாக வெளியேறும்படி, பெரியாருக்கும், ஏனையோர்க் கும் கட்டளை பிறப்பித்தார்களே ஒழிய, வன்முறைக் கும்பலின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த எந்தவித முயற்சியும் செய்யவில்லை. பகல் 1 மணிக்குள் பந்தல் முழுவதும் காலியாயிற்று. பகல் 2 மணி அளவில் பந்தல் முழுவதும் எரிந்து சாம்பலாயிற்று.

வன்முறைக் கலவரங்கள் மதுரை நகர் முழுவதும் நடந்துகொண்டிருந்த காரணத்தால், தலைவர்களைக் கார் களின் மூலமாகவும், கறுப்புச் சட்டைப் படையினரை டி.வி.எஸ். பேருந்துகளின் மூலமாகவும், விருதுநகர், திண்டுக்கல், மானாமதுரைப் புகைவண்டி நிலையங்களுக்கு அனுப்பிவைத்தோம்.

கறுப்புச் சட்டைப் படையினரின் மாநாட்டுப் பந்தலைக் கொளுத்தியது, காங்கிரசுக்காரர்களுக்கு அந்த நாளில் மகிழ்ச்சியைத் தந்திருக்கலாம்; ஆனால், அந்த நிகழ்ச்சி பொதுமக்களின் அனுதாபத்தைப் பெற்றுத் திராவிடர் கழகம் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வளரக் காரணமாக இருந்தது எனலாம்.

*மதுரை மாநாட்டின்போது ஏற்பட்ட காங்கிரசுக்காரரின் கலவரத்தை ஒட்டி அறிஞர் அண்ணா அவர்கள், "திராவிட நாடு" இதழில், 'மரணசாசனம்' என்ற தலைப்பில், மிக உருக்கமான கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார்.*

### மதுரையில் கழகப் பொதுக்கூட்டம்

*கறுப்புச் சட்டைப் படையினரின் மாநாட்டிற்குப் பின்னர், மதுரையில், ஆறு திங்கள்கள் வரையில், கழக நிகழ்ச்சி எதுவும் நடைபெறவில்லை. அந்த அளவுக்குக் கழகத்தோழர்களிடையே அச்சமும், பீதியும் குடிகொண் டிருந்தன. ஆறு திங்களுக்குப் பிறகு, மதுரை எஸ். முத்து அவர்கள், மதுரைத் திலகர் திடலில் கழகப் பொதுக்கூட்டம் ஒன்றைத் துணிந்து நடத்த முன்வந்தார். கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுமாறு, பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்களையும், என்னையும் மதுரை எஸ். முத்து கேட்டுக்கொண்டார். நாங்கள் இருவரும் இசைவு தந்து கூட்டத்தில் கலந்துகொண்டோம். மதுரை மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஏராளமான கழகத் தோழர்கள் கூட்டத்திற்குத் திரண்டு வந்திருந்தனர். நாங்கள் என்ன பேசப்போகிறோம் என்பதைக் கேட்டறிய, பொது மக்கள் பெருந்திரளினராகக் கூடியிருந்தனர்.*

*நான் கூட்டத்தில் பேசும்போது,*

> "ஆறு திங்கள்களுக்கு முன்னால் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த கயவர்களால் கழகத் தோழர்கள் கண்டகண்டபடி தாக்கப்பட்டார்கள். அத்தோடு கழகம் அழிந்துவிடும், ஒழிந்துவிடும் என்று எதிரிகள் பகற்கனவு கண்டார்கள். ஆனால், தாக்குதல்களுக்கு ஆளாகிய கழகத்தோழர்கள் இன்றைய நிலையில் வீறுகொண்டு எழுந்து, எழுச்சியோடு கழகப் பணிகளை முன்னிலும் பன்மடங்கு வேகமாகச் செய்துவருகிறார்கள்.

எதிரிகள் கழகத் தோழர்களின் உடல்களை வருத்துவதிலே வெற்றி பெற்றிருக்கலாமே ஒழிய, அவர்களின் உள்ளங்களில் கனன்று கொண்டிருக்கும் கொள்கைப் பிடிப்பை ஏதும் செய்துவிட முடியாது. தென்மாவட்டப் பகுதிகளில், இப்பொழுது கழகத்தின் கிளைகள் முன்னைவிடப் பன்மடங்கு பெருகிக் காணப்படுகின்றன.

அடிக்கப்படுகிற பந்து உந்தத்தான் செய்யும்; அரைக்கப் படுகிற சந்தனம் கமழத்தான் செய்யும்; பொசுக்கப்படுகிற பொன் ஒளி வீசத்தான் செய்யும்; அறுக்கப்படுகிற வைரம் ஒளிக்கற்றையை உமிழத்தான் செய்யும்; மிதிக்கப்படுகின்ற புழு துள்ளத்தான் செய்யும்; தாக்கப்படுகிற பூனை புலியாக மாறத்தான் செய்யும். அவற்றைப்போல, தாக்கப்படுகின்ற கழகமும் மேலும்மேலும் வலிவும், பொலிவும் பெறத்தான் செய்யும் என்பதை இப்பொழுதுள்ள நிலை தெளிவு படுத்துகிறது.

திராவிட நாடு தனிநாடாக விடுதலை பெறவேண்டும்; நாட்டின் வளம் பெருகவேண்டும்; திராவிடர் சமுதாயம் மேம்பாடு எய்தவேண்டும்; தொழில்துறை ஏற்றம் பெற வேண்டும்; திராவிட நாகரிகம் - பண்பாடு காப்பாற்றப் படவேண்டும்; எங்கும் தமிழ் - எதிலும் தமிழ் - என்றும் தமிழ் - எப்படியும் தமிழ் என்ற நிலை ஏற்படவேண்டும்; உலக நாடுகளுக்கிடையே திராவிடநாடு தனிப்பெரும் நாடாக உயர்ந்தோங்கி நிற்கவேண்டும். இந்தக் குறிக் கோள்களை நிறைவேற்ற திராவிடர் கழகம் எவ்வளவு தொல்லைகள் ஏற்பட்டாலும், அவையெல்லாம் எவ்வளவு மிடுக்குடன் எதிர்ப்பட்டாலும், அவை எவ்வளவு அடுக் கடுக்காக சீறி வந்தாலும் அவற்றையெல்லாம் எதிர் நின்று தாங்கி, வெற்றி நடைபோடும் என்பது உறுதி"

*என்று குறிப்பிட்டேன்.*

*பட்டுக்கோட்டை அழகிரிசாமி கழகத்தின் வளர்ச்சி பற்றிக் கூறி, எதிரிகளுக்கு வீராவேசமாக விடையிறுத்தார்.*

இந்தக் கூட்டத்திற்குப் பின்னர், மதுரை நகரில் கழகம், பல கிளைகளைக் கொண்டு சிறப்பாக வளரத் தொடங்கிற்று.

## புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுக்கு நிதி அளிப்பு

தமிழகத்தில், இருபதாம் நூற்றாண்டின் ஒப்புயர்வற்ற ஒரு பெருங்கவிஞராகத் திகழ்ந்த புரட்சிக்கவிஞர் பாரதி தாசன் அவர்களுக்கு நிதி வழங்கிச் சிறப்புச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு, நாமக்கல் பகுதியைச் சேர்ந்த என். கிருட்டிணராசு அவர்களும், மு. செல்லப்பன் அவர்களும் குழு ஒன்றினை ஏற்படுத்திக்கொண்டு, நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டனர். அவர்களால் போதுமான அளவுக்கு நிதி திரட்ட இயலவில்லை. இந்த நிலையைக் கண்டறிந்த அறிஞர் அண்ணா அவர்கள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நல்லமுறையில் மிகச் சிறப்பாகப் பாராட்டப் படவேண்டிய பெருங்கவிஞராவார் என்ற எண்ணத்துடன், நிதி திரட்டும் குழுவை மாற்றி அமைத்து, அதன்மூலம் செயல்படத் தொடங்கினார்.

மாற்றி அமைக்கப்பட்ட குழுவிற்குத் தலைவர் என். கிருட்டிணராசு; பொருளாளர் அறிஞர் அண்ணா; செயலாளர்கள் டி.என். இராமன், ப. கண்ணன்; உறுப்பினர்கள் : நான், மு. செல்லப்பன், எஸ். முத்தையா முதலியார், ஆர்.கே. சண்முகம், டாக்டர் ஏ. கிருட்டிணசாமி, டி.எஸ். சொக்கலிங்கம், வ.ரா., எஸ்.எஸ். இலட்சுமிரதன் பாரதி, ப. ஜீவானந்தம், டி.எஸ். குஞ்சிதம் அம்மையார், க. அன்பழகன், என்.வி. நடராசன், டி. செல்வராசு, ஏ.பி. சனார்த்தனம், இராம. சுப்பையா, டி.எம். பார்த்தசாரதி, ம.பொ.சி, ப. முத்தையா, ம. அமிர்தலிங்கம், சிங்கை கோ, சாரங்கபாணி, நா. பழனி போன்றோர் ஆவர்.

அறிஞர் அண்ணா அவர்களின் பெருமுயற்சியால் கணிசமான அளவுக்கு நன்கொடைகள் திரட்டப்பட்டன.

ரூ.25,000ஐ பொற்கிழியாகப் புரட்சிக் கவிஞருக்குத்தர அறிஞர் அண்ணா அவர்கள் திட்டமிட்டார். அதுவரையில் அவ்வளவு பெரிய தொகை எந்த ஒரு கவிஞனுக்கும் நிதியாகத் தரப்பட்டதில்லை.

நிதியளிப்புவிழா, 1946 சூலைத்திங்கள் 28ஆம் நாள் ஞாயிறன்று, மாலை 4 மணி அளவில், சென்னை சைனா கடைத் தெருவுக்குப் பக்கத்தில், பச்சையப்பன் கல்லூரியின் விளையாட்டுத் திடலில் ஏற்பாடு செய்யப்பட்டது. விழாவிற்கான எல்லா ஏற்பாடுகளையும் அறிஞர் அண்ணா, நான், டி.என். இராமன், ப. கண்ணன், மு. செல்லப்பன், என்.வி. நடராசன் ஆகியோர் முன்னின்று செய்தோம்.

விழாவிற்குத் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளி லிருந்தும் கவிஞர்கள், புலவர்கள், தமிழன்பர்கள், ஆசிரியர் கள், கழகத்தோழர்கள், பொதுமக்கள் ஆகியோர் பெருங் கூட்டமாக வந்திருந்தனர். விளையாட்டு மைதானம் முழுவதும் மக்கள் வெள்ளம் நிரம்பி இருந்தது.

குளிக்கரை பிச்சையப்பா அவர்களின் நாதசுர இசையரங் கோடு விழா தொடங்கப்பெற்றது. இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் அவர்கள், ''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும், மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு'', ''தமிழுக் கும் அமுதென்றுபேர், அந்தத் தமிழ்இன்பத் தமிழ் எங்கள் உயிருக்குநேர்'', ''வெண்ணிலாவும் வானும்போல, வீரனும் கைகூர் வாளும்போல'' என்பனபோன்ற புரட்சிக்கவிஞரின் சில பாடல்களை இனிமையான முறையில், எடுப்பான குரலில் பாடிக் கூட்டத்தினரை இன்ப வெள்ளத்தில் திளைக்கச் செய்தார்.

விழாவிற்கு நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் தலைமை ஏற்றுப் புரட்சிக் கவிஞரின் கவிதை நயங்களை எடுத்துக்கூறி அவரைப் பாராட்டிப் புகழ்ந்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள், புரட்சிக் கவிஞரைப் பாராட்டி ஓர் அருமையான சொற்பொழிவாற்றிப், புரட்சிக் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்தி, ரூ.25,000 கொண்ட பொற்கிழியை அவரிடத்தில் கொடுத்தார். கூட்டத்தினர் ''புரட்சிக் கவிஞர் வாழ்க!'', ''பாவேந்தர் பாரதிதாசன் வாழ்க!'' என்ற முழக்கங்களை எழுப்பிக் கையொலி செய்து ஆரவாரம் செய்தனர். விழா மலரை ப. கண்ணன் வழங்க, புரட்சிக் கவிஞர் பெற்றுக்கொண்டார்.

விழாவில், புரட்சிக்கவிஞரின் அருமை பெருமைகளை யும், அவரது கவிதை நயங்களையும், அவரது புரட்சிகரமான சீர்திருத்தக் கருத்துக்களையும் எடுத்துக்கூறிப் பலர் புகழுரை நல்கினார்கள்.

திவான்பகதூர் என். சிவராசு, மேயர் எம். இராதா-கிருட்டிணபிள்ளை, வழக்கறிஞர் டி. செங்கல்வராயன், டாக்டர் ஏ. கிருட்டிணசாமி, பேராசிரியர் இரா.பி. சேதுப்-பிள்ளை, வா.ரா., கி.ஆ.பெ. விசுவநாதம், பி. இரத்தினசாமி, பேராசிரியர் மு. வரதராசன், சி.டி. நடராசன், ப. ஜீவா-னந்தம், மகாவித்துவான் மே.வீ. வேணு கோபாலப்பிள்ளை, பம்மல் சம்பந்தனார், ம.பொ.சி., குஞ்சிதம் குருசாமி ஆகியோர் உரையாற்றியதற்குப் பிறகு இறுதியாக நான் பேசினேன். புரட்சிக் கவிஞரின் பாடல்கள் பலவற்றை எடுத்துக்காட்டி, அவற்றில் பொதிந்து கிடங்கும் சொல்லழகு, பொருளழகு, நயங்கள், சிறப்புக்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தேன்.

இறுதியாகப் புரட்சிக்கவிஞர் அவர்கள் சிறப்பான முறையில் ஏற்புரை ஆற்றிக் கூட்டத்தினரை மகிழ்வித்தார்.

இடையிடையே திருவாரூர் இசைச்செல்வர் டி.வி. நமச்சிவாயம், புரட்சிக்கவிஞரின் பாடல்களை இனிமை யாகப் பாடினார்.

அறிஞர் அண்ணா நன்றி நவில, விழா சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் முடிவுற்றது.

பெரியாருடன் சுற்றுப்பயணம்

1946 சூலை 31 முதல் ஆகஸ்டு 8ஆம் நாள்வரை, பெரியார் அவர்களும், நானும் இணைந்து தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டோம்.

சீர்காழி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், திருத்துறைப்பூண்டி, அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, அறந்தாங்கி, தஞ்சாவூர், மன்னார்குடி, கும்ப கோணம், பாபநாசம், அய்யம்பேட்டை ஆகிய ஊர்களில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்டோம். சில நாட்களில் இரண்டு மூன்று ஊர்களில் கூடப்பேசினோம். கூட்டங்களுக்கான ஏற்பாடு களைத் திருவாரூர் வி.எஸ்.பி. யாகூப் செய்திருந்தார்.

வெண் தாடியோடு இருந்த முதியவர் பெரியாரையும், கறுந்தாடியோடு இருந்த இளையவன் என்னையும் பல ஊர்களில் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

ஒவ்வொரு ஊரிலும் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஏராளமான கழகத் தோழர்களும், பொதுமக்களும் கூடி யிருந்து, எங்கள் பேச்சுக்களைக் கேட்டு மகிழ்ச்சியும், எழுச்சியும் பெற்றனர்.

தஞ்சை மாவட்டத்தில் மேற்கொண்டதைப்போலவே, பெரியாரும் நானும் சேர்ந்து, திருச்சி - கோவை - மதுரை - நெல்லை - சேலம் - வேலூர் - விழுப்புரம் - கடலூர் - செங்கை ஆகிய மாவட்டங்களிலும், பல நாட்கள் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டு, பொதுக்கூட்டங்கள், திருமண விழாக்கள், ஆண்டு விழாக்கள் ஆகியவற்றில் கலந்து கொண்டோம்.

## வகுப்புவாரி இட ஒதுக்கீட்டு முறையில் மாற்றம்

*1946-47 ஆம் ஆண்டில், டி. பிரகாசம் முதலமைச்சராக இருந்தபோது, பார்ப்பனர்க்குச் சலுகை அளிக்கவேண்டும் என்ற எண்ணத்தில், 1928 முதல் நடைமுறையில் இருந்து வந்த, வகுப்புவாரி இட ஒதுக்கீட்டு முறையில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்தார்.*

*மருத்துவக் கல்லூரிகள், பொறியியற் கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில், சேர்க்கப்படும் மாணவர்களில் 20 சதவீதம் மாணவர்களைத் தகுதி திறமை அடிப்படையிலேயே சேர்க்கவேண்டும் என்று டி. பிரகாசத்தின் அரசு ஆணை பிறப்பித்தது.*

*எல்லா மாணவர்களையும் தகுதியின் அடிப்படையிலேயே சேர்க்கவேண்டும் என்று கூறினால் பொது மக்களின் பெரும் எதிர்ப்புக் கிளம்பும் என்று அஞ்சியே, முதலில் 20 சதவீத மாணவர்களைத் தகுதி திறமையின் அடிப்படையில் சேர்க்கவேண்டும் என்ற ஆணையைத் டி. பிரகாசம் பிறப்பித்தார்.*

*1946 ஆம் ஆண்டு மருத்துவக் கல்லூரியில் மொத்தம் 387 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். வகுப்புவாரி ஒதுக்கீட்டின் படி சேர்த்திருந்தால், மொத்தம் 56 பார்ப்பன மாணவர்களுக்குத்தான் இடங்கள் கிடைத்திருக்கும். ஆனால் டி. பிரகாசம் வெளியிட்ட புதிய ஆணையின் காரணமாக 96 பார்ப்பன மாணவர்களுக்கு இடங்கள் கிடைத்தன. தகுதி - திறமையின் அடிப்படையில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்ற ஆணையின் காரணமாக 40 பார்ப்பன மாணவர்களுக்கு அதிகமாக இடங்கள் கிடைத்தன.*

அதேபோல, பொறியியற் கல்லூரியில் மொத்தம் 342 இடங்கள் இருந்தன. வகுப்புவாரி இட ஒதுக்கீட்டு முறைப்படி தேர்ந்தெடுத்திருந்தால், 57 இடங்கள் மட்டுமே பார்ப்பன மாணவர்களுக்குக் கிடைத்திருக்கும். புதிய ஆணையின் காரணமாக 83 இடங்கள் பார்ப்பன மாணவர்களுக்குக் கிடைத்தன. அதாவது 26 இடங்கள் அதிகமாக அவர்களுக்குக் கிடைத்தன.

டி. பிரகாசம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனேயே, பார்ப்பனர்க்குப் பெருஞ் சலுகைகளை அளிக்க முன்வந்தார் என்பதைக் கண்டவுடன், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த பார்ப்பனரல்லாத தலைவர்கள் பலரும்கூட அவரது போக்கை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தினார்கள்.

அந்த நேரத்தில் திராவிடர் கழகத்தின் சார்பாகக் கடுமையான எதிர்ப்புக்குரல் எழுப்பப்பட்டது. பெரியார், அறிஞர் அண்ணா, நான், ஏனைய கழகச் சொற்பொழிவாளர்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டங்களில், இட ஒதுக்கீட்டு முறையில் டி. பிரகாசம் கொண்டுவந்த மாற்றத்தை எதிர்த்துக் கடுமையாகக் கண்டனம் தெரிவித்தோம்.

1947இல் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன், டி. பிரகாசம் கொண்டுவந்த மாற்றத்தை அறவே நீக்கிவிட்டுப் பழைய முறையை நடைமுறைக்குக் கொண்டுவந்தார்.

## கோவை நகர் வாழ்வு

1944க்கும் 1946க்கும் இடையில், நான் கோவை ஜி.டி. நாயுடு மாளிகையில் தங்கியிருந்துகொண்டு, கழகக் கூட்டங்களில் கலந்துகொண்டிருந்தபோது, கோவையில் நண்பர்கள் பலர் எனக்கு அறிமுகமானார்கள்.

கோவை நகரிலும், அதனைச் சுற்றிலுமுள்ள பல்வேறு நகரங்களிலும், பேரூர்களிலும் கழகக் கூட்டங்கள், திருமணங்கள் நடைபெறும்போது, கழக நண்பர்கள் என்னையும், (கலைஞர்) மு. கருணாநிதி அவர்களையும் அழைத்துப் பேசச் செய்வார்கள். கலைஞர் கருணாநிதி கோவை திரைப்பட ஸ்டுடியோவில் திரைப்படங்களுக்குக் கதை-உரையாடல் எழுதிக்கொண்டிருந்தார். அப்பொழுது கோவைக்கு அருகிலுள்ள சிங்காநல்லூரில் அவர் குடியிருந்தார்.

கோவையில் நான் தங்கியிருந்தபோது, இராசகோபால், பட்டிலிங்கம், கிருட்டிணமூர்த்தி, சே.அ. இராசமாணிக்கம், கோவைசெழியன், சதாசிவம், மீனாட்சிசுந்தரம் போன்றவர்கள் உற்ற நண்பர்களாக இருந்துவந்தனர்.

கூட்டங்களுக்குச் செல்லும்போதும், திரும்பி வரும் போதும் போதுமான அளவுக்குப் போக்குவரத்து வசதிகள் கிடைப்பதில்லை. சில நேரங்களில், நானும், (கலைஞர்) கருணாநிதி அவர்களும், ஐந்தாறு மைல் தொலைவு நடந்தே போய்விட்டு, நடந்தே திரும்பி வருவோம்.

**என் தந்தையாரின் மறைவு**

என் தந்தையார் இராசகோபலனார் அவர்கள், 1908 முதல் 1912 வரையில் கும்பகோணத்திலும், 1912 முதல் 1939 வரையில் பட்டுக்கோட்டையிலும், 1939 முதல் 1942 வரையில் மன்னார்குடியிலும் மாவட்ட நீதிமன்றங்களில் அலுவலராகப் பணியாற்றி ஓய்வுபெற்றார்.

பின்னர், திருக்கண்ணமங்கையை அடுத்த வடகண்டம் என்ற சிற்றூரில், என் பெரிய தாயார் எங்கள் குடும்பத்திற்கு வழங்கிய தோட்டம் சூழ்ந்த பெரிய வீடு ஒன்றில் எங்கள் குடும்பம் குடியேறிற்று.

ஓய்வுபெற்றபின் என் தந்தையார் உடல் நலங்குன்றி யிருந்ததால், பொதுத்தொண்டுகளில் மிகவாக ஈடுபடாமல்,

சிற்றூர்ச் சூழலில் அமைதியான முறையில் வாழ்க்கையை நடத்திவந்தார். அவர் ஓய்வுநேரங்களில் செய்தித்தாள்கள், நூல்கள் ஆகியவற்றைப் படிப்பதிலும், உற்ற நண்பர்களுடன் உரையாடி மகிழ்வதிலும் பொழுதைப் போக்கிவந்தார். என் தாயார் மீனாட்சி சுந்தரத்தம்மாள் அவர்கள் அவருடன் இருந்து, தேவைப்படும் உதவிகளை அவருக்குச் செய்து அவரைப் பாதுகாத்துவந்தார்.

1946ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில், அவர் மிகுந்த உடல்நலக் குறைவின் காரணமாக ஒருவார காலம் படுத்த படுக்கையாக ஆகிவிட்டார். 64 ஆண்டுகாலம் நல்ல பெயரோடும், புகழோடும், பூரிப்போடும் நல்வாழ்வு வாழ்ந்து வந்த என் தந்தையார், வாழ்நாள் கடமையைச் செவ்வனே ஆற்றினோம் என்ற களிப்புணர்வோடு, கவலையோ, கலக்கமோ ஏதுமில்லாமல், மனத்தெளிவோடும், மன அமைதியோடும் 1946 ஆகஸ்டு 21ஆம் நாள் இரவு 7.30 மணி அளவில் இயற்கை எய்தினார். என் தாயாரும், நானும், என் உடன் பிறந்தாரும் பேரிழப்புக்கு ஆளாகிக் கதறி அழுது கண்ணீர் வடித்து மிக்க துயரில் ஆழ்ந்தோம்.

இராசகோபாலனார் அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்த உடனே உற்றார், உறவினர், ஊரார், கழகத் தோழர்கள் பலரும் வந்து, இறுதி அஞ்சலி செலுத்தினர். 22ஆம் நாளன்று மாலையில், அமைதியான முறையில், பெருந்திரளான மக்கள் புடைசூழ இறுதி ஊர்வலம் நடைபெற்றது. காண்போர் கண்களெல்லாம் கலங்க எரியூட்டும் நிகழ்ச்சி நடந்தேறியது.

என் தந்தையார் மறைவுக்குப்பின்னர், என் தாயார் குடும்பத்தைப் பேணிக்காக்கும் பொறுப்பையும், என் தம்பி, தங்கையர்களைப் படிக்க வைக்கும் பொறுப்பையும், பிள்ளைகளுக்கு உரிய காலத்தில் திருமணம் செய்துவைக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருந்தார்கள். நானும், இளவல் செழியனும் எங்கள் குடும்பத்தினரை 1948இல்

நாங்கள் தங்கியிருந்த சென்னையில் குடியேற்றிக் கண் காணித்து வரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டோம்.

## 1947 ஆகஸ்டு 15 - விடுதலை நாள்

1947ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15ஆம் நாள், இந்தியத் துணைக்கண்டத்தில், ஆங்கிலேய வல்லரசு ஆட்சி முடிவுற்று, இந்தியரின் விடுதலை ஆட்சி மலர்ந்தது.

இந்தப் பொன்னான நாளை இந்திய மக்கள் அனைவரும் பூரிப்போடும், பெருமையோடும் கொண்டாடி மகிழ்ந்தனர். இந்தியாவிலுள்ள அனைத்துக் கட்சிகளும், அமைப்புக் களும், அனைத்துச் சமயத்தினரும், அனைத்து இனத்தினரும் விடுதலை நாளைச் சிறப்பாகக் கொண்டாடுவதில் மிக மும்முரமாக முனைந்திருந்தனர். நாடு நகரங்கள், பேரூர்கள், சிற்றூர்கள், பட்டிதொட்டிகள் ஆகிய எல்லா இடங்களும் விழாக்கோலம் பூண்டிருந்தன. மக்கள் எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு காணப்பட்டனர்.

லார்டு மௌண்ட் பேட்டன் விடுதலை இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக, ஓராண்டு காலத்திற்கு நியமிக்கப் பட்டார். பண்டித ஜவகர்லால் நேரு இந்தியாவின் பிரதமர் ஆனார். டில்லி செங்கோட்டையிலும், மாநிலங்களிலும் பறந்த வெள்ளையரின் 'யூனியன் ஜாக்' கொடி கீழே இறக்கப் பட்டு, இந்தியாவின் அசோகச் சக்கரம் பொறித்த மூவண்ணக்கொடி எங்கணும் ஏற்றப்பட்டது.

எல்லாத் தரப்பினரும் 1947 ஆகஸ்டு 15 ஆம் நாளை, பெருமகிழ்ச்சிக்குரிய 'விடுதலை நாளாகக்' கொண்டாடிய போது, திராவிடர் கழகத் தலைவர் பெரியார் அவர்கள் மட்டும் அந்தநாள் திராவிடர்க்குத் துக்கநாள் என்றும், வெள்ளையர் ஆட்சி போய் வடநாட்டுக் கொள்ளையர் ஆட்சி ஏற்படும் நாள் என்றும், ஆரியர் ஆதிக்கம் மேலோங் கும் நாள் என்றும் கூறத்தலைப்பட்டார்.

பெரியார் அவர்கள் கழகப் பொதுக்குழுவையோ, கழகத்தின் முக்கியப் பொறுப்பாளர்களையோ கலந்து ஆய்வு செய்யாமல், ஆகஸ்டு 15ஆம் நாளை, திராவிடர்கள் அனைவரும் துக்க நாளாகக் கொண்டாடவேண்டும் என்று அறிக்கை வெளியிட்டுவிட்டார்.

அப்பொழுது, நான் கோவை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, பல நகரங்கள் பேரூர்கள் ஆகியவற்றில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டேன். ''1947 ஆகஸ்டு 15ஆம் நாளைத் துக்க நாளாகக் கொண்டாடவேண்டும்'' என்று, பெரியார் அவர்கள் அறிக்கை வெளியிட்டிருந்ததைச் செய்தித்தாள்களில் படித்து, நான் பெரிதும் அதிர்ந்துபோனேன். தாங்கவொணாத்துயரம் எனது உள்ளத்தைப் பெரிதும் குடைந்துகொண்டிருந்தது.

''நீதிக்கட்சி - சுயமரியாதை இயக்கம் - திராவிடர் கழகம் ஆகியவை வெள்ளையர்க்கு அடிமைப்பட்ட கட்சிகள்'' என்றும், ''வெள்ளைக்காரர்களுக்கு வால் பிடித்து வாழ்வதே அவற்றின் தொழில்'' என்றும், ''அவற்றிற்கு நாட்டுப் பற்றோ, சுதந்திரவேட்கையோ, மானமோ, மதிப்போ அறவே கிடையாது'' என்றும், ''அவை வெள்ளையர்களின் பூட்சுகால்களை நக்கி வளர்ந்துவருபவை'' என்றும் காங்கிரசுக்கட்சியினர், நாளெல்லாம் பழிகள் சுமத்திவந்த காலம் அது. சுயமரியாதை இயக்கத்தினரும், திராவிடர் கழகத்தினரும் அவற்றையெல்லாம் எவ்வளவோ காரண காரிய விளக்கங்களோடு வன்மையாக மறுத்துவந்த போதிலும், ''திராவிட இயக்கத்தினர் காலங்காலமாக வெள்ளையர் ஆட்சிக்குப் பாதுகாப்பு அளித்து வருபவர்களே ஆவார்கள்'' என்ற பழுதான எண்ணம், பொதுமக்களின் உள்ளத்தில் பதிந்திருக்கவே செய்தது.

திராவிடர் கழகமானது, வெள்ளையன் வெளியேறுவதை மகிழ்ச்சியுடன் வரவேற்று, அதற்கு உடன்பாடு தெரிவிக்கா

விட்டால், திராவிட இயக்கத்தின் மீது காங்கிரசுக் காரர்கள் சுமத்திய வீண்பழி, என்றென்றும் நிலைத்து நிற்பதாகிவிடும் என்ற அச்ச உணர்வு எனது மனத்தை உறுத்திக்கொண்டே இருந்தது. 'வெள்ளையன் வெளியேறும் நாள் நமக்கெல்லாம் மகிழ்ச்சி தரத்தக்க ஒரு நல்ல நாளேயாகும்' என்ற உணர்வை, எனது மனச்சான்று, எனக்குள்ளே இருந்து வலியுறுத்தி வந்தது.

நான் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த அப்போது, கோவை, பொள்ளாச்சி ஆகிய நகரங்களைச் சேர்ந்த கழகத் தோழர்கள் பலர், என்னைக் கண்டு பெரியார் அறிக்கையின் மூலம் ஏற்பட்டுள்ள நிலைமைபற்றி என்னிடத்தில் நீண்டநேரம் கலந்துரையாடல் நடத்தினார்கள். நான் அன்றைய அரசியல் சூழ்நிலைகளைப் பற்றியும், எதிர்காலத்தில் கழகம் எதிர்கொள்ளவேண்டியிருக்கும் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியும் விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துரைத்து, ''1947 ஆகஸ்டு 15ஆம் நாளை, எல்லா மக்களோடும் சேர்ந்து நாமும் மகிழ்ச்சிக் குரிய விடுதலை நாளாகக் கொண்டாடினால்தான், நாம் எதிர்காலத்தில் சனநாயக அரசியல் வாழ்வைச் சிறப்பாக வும், செம்மையாகவும், மக்களின் பாராட்டுதலையும், போற்றுதலையும், பெறக்கூடிய வகையில்; நடத்திச் செல்ல வழி ஏற்படும்'' என்று கூறினேன். கோவை - பொள்ளாச்சி ஆகிய நகரங்களைச் சேர்ந்த கழகத் தோழர்கள், எனது முடிவை ஏற்று, அதன்படி நடந்துகொள்ள ஆயத்தம் ஆனார்கள். ''ஆகஸ்டு 15ஆம் நாள் மகிழ்ச்சிக்குரிய நாளே!'' என்று தலைப்பிட்டு, கிளைக் கழகங்களின் சார்பாகத் துண்டு அறிக்கைகளையும் வெளியிட்டார்கள்.

நான் உடனடியாகக் கோவை மாவட்டச் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு, நேரே சென்னைக்கு வந்து சேர்ந்தேன். அப்பொழுது நான், இளவல் செழியன், ப. வாணன் ஆகியோர் சென்னை, செம்புதாசுத் தெரு,

'கார்னர் எஸ்டேட்' மாளிகையில், நான்காவது மாடியில், 30ஆம் எண் அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, அதில் வாழ்ந்து வந்தோம். எங்கள் அறைக்குப் பக்கத்து அறையான 31ஆம் எண் அறையைக் கம்யூனிஸ்டடுக் கட்சித் தலைவர்கள் வாடகைக்கு எடுத்துக்கொண்டு, அதில் வாழ்ந்து வந்தார்கள். அந்த அறையில், அவ்வப்போது வந்து தங்கிய ப. ஜீவானந்தம், மணலி கந்தசாமி, சீனிவாசராவ், ஏ.எஸ்.கே. அய்யங்கார், எம்.ஆர். வெங்கட்டராமன் போன்ற கம்யூனிஸ்ட்டுத் தலைவர்களோடு, எங்களுக்கு நெருங்கிய நட்புறவு இருந்து வந்தது. நாங்கள் ஒய்வு கிடைக்கும் போதெல்லாம் அவர்களோடு அரசியல் பற்றிய விவாதங்களில் கலந்துகொண்டு சுவையான முறையில் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளுவோம். கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், இரு கட்சியினரும் ஒருவரையொருவர் மதித்து அன்போடு பழகிவந்தோம். அறிஞர் அண்ணா அவர்கள் வந்து எங்களோடு தங்கியிருக்கும் நேரங்களில், அவரும் சேர்ந்து கம்யூனிஸ்ட்டு நண்பர்களோடு விவாதம் நடத்துவார்.

''ஆகஸ்டு 15ஆம் நாளைத் துக்க நாளாகக் கொண்டாட வேண்டும்'' என்று பெரியார் அவர்கள் வெளியிட்ட அறிக்கையைப் பார்த்துவிட்டு, அதிர்ச்சி அடைந்த அறிஞர் அண்ணா அவர்கள், காஞ்சிபுரத்திலிருந்து சென்னை வந்து சேர்ந்தார். அவர் வழக்கம்போல் நேராக நானும், என்னுடன் இருந்தவர்களும் தங்கியிருந்த 'கார்னர் எஸ்டேட்' 30ஆம் எண் அறைக்கு வந்துசேர்ந்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் மிக்க மனக்குழப்பத்தோடு காணப்பட்டார். ''ஆகஸ்டு 15ஆம் நாள் துக்க நாளா? மகிழ்ச்சிக்குரிய நாளா?'' என்பதுபற்றி, இரண்டு நாட்கள் பகலும் இரவுமாக நீண்டநேரம் கலந்துரையாடல் நடத்தினார். பிரச்சினை குறித்த நன்மை தீமைகளையெல்லாம் அறிஞர் அண்ணா அவர்கள் ஆழ்ந்து ஆராய்ந்தார்கள். அறிஞர்

*அண்ணா அவர்களோடு உரையாடிக்கொண்டிருந்த நானும், இளவல் செழியனும், ப. வாணனும் ஆகஸ்டு 15ஆம் நாளை மகிழ்ச்சிக்குரிய ஒரு நாளாகவேதான் கொண்டாடவேண்டும் என்று வற்புறுத்தினோம்.*

*நான் பேசியபோது,*

"என்னைப்போன்ற இளைஞர்கள் அனைவரும் நாட்டுப் பற்று, மொழிப்பற்று, திராவிட இனப்பற்று ஆகியவற்றோடு தான், திராவிடர் கழகத்தில் இணைந்துள்ளோம். தாங்கள் சனநாயக நெறிமுறையிலும், சனநாயகப் பண்புகளிலும் மிகுந்த பிடிப்பு கொண்டிருக்கும் காரணத்தால்தான், ஏராளமான மாணவர்களும், இளைஞர்களும் தங்கள் தலைமையை விரும்பி உங்கள் பின்னால், உங்கள் கருத்துக்களையும் உணர்வுகளையும் பின்பற்றி நடை போட்டு வருகிறார்கள். நாடும், சமுதாயமும், மொழியும் எல்லா வகைகளிலும் விடுதலை பெறவேண்டும் என்ற ஆர்வத் தோடுதான், நாங்கள் எல்லோரும் திராவிடர் கழகத்தில் இணைந்திருந்து பாடுபட்டு வருகிறோம். அன்னியராகிய ஆங்கிலேய வெள்ளையர்கள் இந்தியாவை அடிமைப்படுத்தி ஆண்டுவருவதை, எங்களைப் போன்ற இளைஞர்கள் என்றும் ஏற்றுக்கொள்வதற்கில்லை. வெள்ளை யர்கள் இந்தியாவை விட்டுத்தாமாகவே வெளியேறுகிற ஒரு கட்டம் இப்பொழுது வந்திருக்கிறது என்றால், அதனை மன மகிழ்ச்சியோடு வரவேற்க வேண்டியதுதான் நமது கடமையாகும். இந்தியாவில் எவ்வளவு பிரச்சினைகள் இருந்தாலும், முதலில் அன்னிய ஆதிக்கக்காரர்களாகிய வெள்ளையரை வெளியேற்றிவிட்டு, நமது பிரச்சினைகளை நாம்தான் நம்முடைய முழு அதிகாரத்தின் அடிப்படையில் தீர்த்துக்கொள்ளவேண்டும். சொந்த நாட்டின் விடுதலையை விரும்பாதவர்கள் உலகில் எங்கும் எந்த ஒரு நாட்டிலும் இருக்கமுடியாது.

வெள்ளையர்களின் ஆதிக்க ஆட்சியை நாமும் வெறுக்கிறோம், அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதை நாமும் மனமார வரவேற்கிறோம் என்பதை நாம் ஊருக்கும், உலகத்திற்கும் தெரிவித்துக்கொள்ள இருக்கும் கடைசி வாய்ப்புதான், ஆகஸ்டு 15ஆம் நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடுவது ஆகும். இந்த வாய்ப்பை விட்டுவிட்டால், 'திராவிட இயக்கத்தினர் வெள்ளையரின் அடிவருடிகள்' என்று ஏற்பட்டுவிட்ட பழியை எதிர்காலத்தில் நாம் எந்த வகையிலும் துடைக்கமுடியாது.

பெரியார் அவர்கள் திராவிட இயக்கத்தின் தந்தை என்ற முறையில், நாம் அவரிடம் மிகுந்த மதிப்புக்காட்டி வருகிறோம் என்றாலும், ஆகஸ்டு 15ஆம் நாளைத் துக்க நாளாகக் கொண்டாடவேண்டும் என்ற அவரது கருத்து நம்மால் எக்காரணங்கொண்டும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. திராவிடர் கழகத்தின் எதிர்காலம், அதில் இணைந்துள்ள இளைஞர் சமுதாயத்தின் எதிர்காலம் ஆகியவற்றை மனத்தில்கொண்டு, பெரியாரின் அறிக்கைக்கு எதிரான அறிக்கையைத் தாங்கள் வெளியிட்டுப் பொது மக்களுக்கு நமது நிலையைத் தெளிவாக்கவேண்டியது மிக அவசியமாகும். திராவிட இயக்கத்தை எதிர்காலத்தில் காப்பாற்ற அதுதான் ஒரே வழியாகும்! அதற்குரிய ஏற்ற நிலையைத் தாங்கள்தான் உருவாக்கித் தரவேண்டும்; தங்களால் உருவாக்கித் தரமுடியும்!''

*என்று குறிப்பிட்டேன்.*

*அறிஞர் அண்ணா அவர்கள், நீண்டநேரம் சிந்தித்துப் பார்த்தபிறகு, நாங்கள் வற்புறுத்திக்கூறிய கருத்துக்களை ஏற்று, 'ஆகஸ்டு 15ஆம் நாள் மகிழ்ச்சிக்குரிய ஒரு நன்னாளே யாகும்' என்னும் கருத்தை வெளிப்படுத்துகின்ற வகையில், நீண்ட அறிக்கை ஒன்றைத் தெளிவும், திட்பமும் பயக்கின்ற வகையில், விரிவாக எழுதத் தொடங்கினார்.*

அந்த அறிக்கையை எங்களிடம் படித்துக் காட்டியதோடு, நண்பர் என்.வி. நடராசன் அவர்கள் மூலம் பெரியார் அவர்களின் பார்வைக்கு அனுப்பிவைத்தார். ''பெரியார் அவர்கள் அறிக்கையில் கண்டுள்ள கருத்துக்களை ஏற்றுக் கொள்வதானால், அவர்தாம் வெளியிட்ட 'துக்க நாள்' என்ற அறிக்கையை மாற்றி 'மகிழ்ச்சிக்குரிய நாள்' என்று புது அறிக்கையை வெளியிடட்டும்; அவர் என்னுடைய அறிக்கை யில் கண்டுள்ள கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், நான் என்னுடைய அறிக்கையைச் செய்தித் தாள்களில் வெளியிட வேண்டிவரும் என்ற நிலையைச் சொல்லிவிட்டு வாருங்கள்.'' என்று நண்பர் என்.வி. நடராசனிடம் அறிஞர் அண்ணா சொல்லி அனுப்பினார்.

நண்பர் என்.வி. நடராசன் கொடுத்த அண்ணாவின் அறிக்கையைப் படித்துப் பார்த்த பெரியார் அவர்கள், மிகவும் சினங்கொண்டு, "1947 ஆகஸ்டு 15ஆம் நாளைத் துக்க நாளாகக் கொண்டாடவேண்டும் என்று நான் திராவிடர் கழகத்தினர்க்கு வெளியிட்ட அறிக்கை முடிந்த முடிவான ஒன்றாகும். அறிக்கை வெளியிட்டது வெளியிட்டதுதான். அதனை மாற்றவேண்டிய அவசியம் எதுவும் இப்பொழுது ஏற்பட்டு விடவில்லை. எனது கருத்தை நிறைவேற்றவேண்டியதுதான் கழகத் தோழர்கள் அனைவரின் கடமையாகும். எனக்கு எவரும் யோசனை சொல்லவேண்டிய அவசியமில்லை. என் கருத்தை ஏற்றுக் கொள்ளுகின்றவர்கள் முட்டாள்கள் என்றாலும், அவர்கள் மட்டுமே என்னிடத்தில் இருந்தால் போதும்; எனக்கு யோசனை சொல்லுவதற் கென்று அறிவாளிகள் எவரும் என்னுடைய கழகத்தில் இருக்க வேண்டாம்!'' என்று நண்பர் என்.வி. நடராசனிடம் கடுமையாகச் சொல்லி அனுப்பினார்.

வேறுவழி எதுவும் இல்லாமல், அறிஞர் அண்ணா அவர்கள், தாம் எழுதிய அறிக்கையைச் செய்தித் தாள்களில் வெளியிட்டார். அந்த அறிக்கை 'திராவிட நாடு' ஏட்டில் 22 பக்கங்கள் கொண்டதாக வெளிவந்தது. அந்த அறிக்கை

யானது கழகத் தோழர்களிடத்திலேயும், பொதுமக்களிடத்திலேயும் பெரியதொரு பரபரப்புச் சூழ்நிலையை உருவாக்கியது. அறிஞர் அண்ணா அவர்களின் அறிக்கையைக் கழகத்தைச் சேர்ந்த பெரும்பாலோரும், பொதுமக்களும், பல்வேறு அரசியல் கட்சியினரும் மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்றுப் பாராட்டினர்.

அறிஞர் அண்ணா அவர்கள், 'ஆகஸ்டு 15ஆம் நாள் துக்க நாள் அல்ல; அது மகிழ்ச்சிக்குரிய நன்னாள்!' என்னும் கருத்து வெளிப்பட, எழுதிவிடுத்த அறிக்கையின் சுருக்கம் மட்டும் வருமாறு:-

''ஆகஸ்டு பதினைந்தாம் தேதி, பிரிட்டிஷ் ஆட்சி, இந்தியாவில் ஒழியும் நாள்! உலகிலே எங்கும் பேசப்படும் நாள்! இந்நாள் - வரலாற்றிலே இடம்பெறுகிறது!

அந்த நாளைத் திருநாளாகக் கொண்டாடுவதென, இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளது. இந்தியத் துணைக் கண்டத்திலே இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகப் பறந்துகொண்டிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொடி, அரசு வட்டாரங்களில் கீழே இறங்குகிறது! இந்திய சுதந்திரக் கொடி மேலோங்கிப் பறக்கத் தொடங்குகிறது!

ஆகஸ்டு 15ஆம் தேதி, பிரிட்டிஷ் ஆட்சி அஃலும் அந்த நாள், வெற்றி நாளாகக் கொண்டாடப்படுகிறது என்றாலும், வெற்றியிலே சிறிதளவு களங்கமும், அதன் பயனாகச் சிறிதளவு மனவேதனையும் இருக்கவே செய்கின்றன.

காங்கிரசு கோரிவந்த - பிடிவாதமாக ஆதரித்துவந்த 'ஏக இந்தியக்' கொள்கை வெற்றி பெறவில்லை. காங்கிரசு கொண்டிருந்த இலட்சியம் முழுவதும் வெற்றிபெறவில்லை.

என்றாலும், பிரிட்டிஷ் ஆட்சி மொத்தத்தில் வெளியேறுகிறது என்ற அளவில், விடுதலை விழாவாக ஆகஸ்டு 15 கொண்டாடப்படுகிறது. ஆகஸ்டு 15 பிரிட்டிஷ் ஆட்சியின் முடிவுநாள்! புதிய இந்திய ஆட்சியின் தொடக்கநாள்!

புதிய ஆட்சி எவ்வண்ணம் இருக்கும்? பலன்கள் யாவை? பாமர மக்களின் நலன்கள் எம்முறையில் கவனிக்கப்படும்? என்பவைகள் இனித் தனிப்பட்டமுறையில் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் ஆகும். இனிப்புதிய ஆட்சியினர் நல்லாட்சி நடத்தியாகவேண்டும் என்று வலியுறுத்த - அதற்கான கிளர்ச்சி செய்ய - போராட இந்தியாவிலுள்ள எவருக்கும் உரிமை உண்டு.

ஆகஸ்டு 15ஆம் நாள் முதல், இந்திய மக்களின் நலன்கள், நாட்டுப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி, வாழ்க்கைத் தர உயர்வு போன்றவைகளைச் சீர்படுத்தும் பொறுப்பு, இந்திய மக்களிடமே வந்து சேருகிறது.

இனிக் குடியாட்சி முறைப்படி நாட்டில் நல்லாட்சி அமைக்கவும், தீயகொடிய ஆட்சியை அகற்றவும் ஆன உரிமைகளும், வழிவகைகளும் பொதுமக்களுக்கு ஏற்பட இருக்கின்றன.

திராவிட இயக்கத்தவராகிய நாம், அன்னிய ஆட்சியாகிய ஆங்கில ஆட்சி கூடாது என்பதைப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வலியுறுத்தி வருகிறோம்.

இந்தித்திணிப்பு எதிர்ப்புக் கிளர்ச்சி மிகக் கடுமையாக நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்திலே, சென்னையில் பெரியார் தலைமையில் நடைபெற்ற, மாகாண 14வது நீதிக்கட்சி மாநாட்டில், 'இந்தியா பூரண சுயேச்சை நாடாக ஆகவேண்டும்' என்ற தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறோம்.

பல ஆண்டுகளாகவே, திராவிட இயக்கத்தினராகிய நாம், அன்னிய ஆட்சி அறவே நீங்கத்தான் வேண்டும், அதுதான் எங்களது விருப்பம் ஆகும் என்றும், காங்கிரசுக்காரர்கள் வெள்ளையர்களை நாளையே போகவேண்டும் என்று சொன்னால், நாங்கள், அவர்கள் இன்றே போகவேண்டும்

என்று சொல்லுபவர்கள் ஆவோம் என்றும் கூறி வந்திருக்கிறோம்.

வெள்ளையர்களைக் கண்டிக்கவும், வெறுக்கவும், விரட்டவும் ஆரியர்க்கோ, காங்கிரசுக்காரர்களுக்கோ இருக்கும் உரிமையைவிட, எங்களுக்கு அதிக உரிமை இருக்கிறது என்று நாம் கூறிவந்திருக்கிறோம்.

வெள்ளைக்காரர்களின் ஆட்சி, திராவிடப் பெருங்குடி மக்களின் குறைகளைக் களையவோ, அவர்களுக்கு நேர்மையான முறையில் நீதி கிடைக்கவோ செய்யவில்லை என்பதை எடுத்துக்காட்டி, ஆங்கில ஆட்சியைத் தொடர்ந்து கண்டித்துவந்திருக்கிறோம்.

நமக்குக் கேடுகள் பல செய்திருக்கின்ற பிரிட்டிஷ் ஏகாதி பத்திய ஆட்சி ஒழியத்தான்வேண்டும்; எப்படியேனும் அதனை ஒழிக்கப் பாடுபடுவோம் என்று நாம் கூறி வந்துள்ளோம்.

இரண்டாம் உலகப்பெரும் போருக்குப் பிறகு, பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவைவிட்டுத் தானாகவே விலகிப் போய்விடும் என்று நாம் எதிர்பார்த்தே இருந்தோம். உலகில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளின் காரணமாகக் குடியேற்ற நாடுகள் அனைத்தும் விடுதலைபெறும் நிலைமை இப்பொழுது உலகில் உருவாகியிருக்கிறது. அந்த வகையில், பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவைவிட்டு வெளியேறும் நாளாகிய ஆகஸ்டு பதினைந்தாம் நாள், மகிழ்ச்சியைத் தரக்கூடிய நாள் என்றே நாம் கருத வேண்டும்! அந்த நாள் எக்காரணங்கொண்டும் துக்க நாளாக ஆகமுடியாது!

ஆகஸ்டு 15ஆம் நாளை மகிழ்ச்சிக்குரிய ஒரு நாளாகக் கொண்டாடுவதுதான், இதுவரை நாம் மேற்கொண்ட கொள்கைகளுக்கும், குறிக்கோள்களுக்கும், போக்கு களுக்கும் ஏற்றதாக இருக்கும்.

ஒழிந்துபோகப்போகும் ஆட்சி உண்மையில் இங்கு ஒளிந்துகொண்டுதான் இருக்கும் என்பதையோ, அந்த ஆட்சி இருக்கும் இடத்தில் வட நாட்டுக்காரர்களின் ஆதிபத்திய ஆட்சிதான் அமரப்போகிறது என்பதையோ, நாம் மறுக்க வில்லை. திராவிடப் பெருங்குடி மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட ஏற்பட, எதிர்காலத்தில், வடநாட்டின் சுரண்டல் ஆட்சியும் ஒழிக்கப்பட்டுவிடும் என்பது உறுதி. இந்த உறுதியை, ஆகஸ்டு 15ஆம் நாள் இந்தியா விடுதலை பெறும் நேரத்தில், நாம் பெறமுடியும்.

ஆகஸ்டு பதினைந்தாம் நாள், அறுபது ஆண்டு காலப் பயிரின் அறுவடை என்றும், பட்ட கஷ்டங்கள், சிந்திய வியர்வை, கொட்டிய இரத்தம் ஆகியவற்றின் வெற்றி என்றும் காங்கிரசுக்காரர்கள் கூறவும், பெருமைப்படவும் அவர்களுக்கு முழு உரிமை இருக்கிறது.

ஒரு இனமக்கள் தங்களுக்கு உரிய உரிமைகளைப்பெற உறுதிகொண்டுவிட்டால், வெற்றியைத் தடுக்க யாராலும் முடியாது - என்ற உண்மை தெளிவுபெறப் பெற்றுள்ளது. திராவிடப் பெருங்குடி மக்களும் தங்களுடைய உரிமை களைப் பெறப் பெரும் நம்பிக்கைகொள்ள, ஆகஸ்டு 15ஆம் நாள், எழுச்சியூட்டும் ஒரு நல்ல நாளாக அமையும் என்பது திண்ணம்.

இந்திய விடுதலைக்குப் பல ஆண்டுகளாகப் போராடி வந்துள்ள வீரர்களை மதிக்க வேண்டியது தமிழ்ப் பண்பாட்டின்படி உயர்ந்த மரபாகும். அவர்கள் சிந்திய இரத்தமும், கண்ணீரும் நமது வீரவணக்கத்திற்கு உரியனவாகும். அவர்கள் நமக்கு வழிகாட்டிகள். நாம் நமது உரிமைகளைப்பெற அவர்களைப்போல வீரத்தியாகங் களுக்குத் தயாராகவேண்டும். அதற்கான உறுதியைப்பெற, விடுதலை வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்துவது, முறையானதும், சரியானதும், அவசியமானதுமாகும்.

அதுமட்டுமல்லாமல், வீரர்களை வணங்குவது நமது நீங்காக் கடமையுமாகும்.

ஆகஸ்டு பதினைந்தாம் நாளின் முக்கியத்துவத்தை உணரவும், அந்த நாளில் கழகம் எந்தவிதமான போக்கை மேற்கொள்ளவேண்டும் என்பதைத் தீர்மானிக்கவும், எதிர்காலத்தில் நமது செயற்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை வரையறுக்கவும், நமது கழகத்தின் செயற்குழுவைக் கூட்டியோ, முக்கியமானவர்களைக் கலந்துபேசியோ முடிவு எடுத்திருக்கவேண்டியது, கழகத் தலைமையின் நீங்காக் கடமையாகும். உலகம் முழுவதும் கூர்ந்து கவனிக்கும் ஒரு மாபெரும் நிகழ்ச்சியைப் புறக்கணிப்பது என்பது, சரியான செயலாகாது.

ஆகஸ்டு 15ஆம் நாளைத் துக்க நாளாகக் கொண்டாட வேண்டும் என்று பெரியார் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை காங்கிரசுத் திராவிடர்களின் மனதுக்குத் தேவையற்ற எரிச்சலை உண்டாக்கி, அவர்களின் பகைமையைக் காரணமின்றி மேலும் மேலும் சம்பாதித்துக்கொள்ள வழிவகுக்கும். இறுதிவரை நாமும், காங்கிரசுத் திராவிடர்களும் வேறுவேறு முகாம்களில் இருந்துகொண்டிருக்கவே இது பயன்படும். இன்று காங்கிரசிலே உள்ள திராவிடர்கள் பலர் நாம் கூறும் பல கொள்கைகளை ஏற்று நம்மை ஆதரிக்க முன் வந்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. பார்ப்பன ஆதிக்கம் கூடாது, வடநாட்டு ஆதிக்கம் ஆகாது, சமுதாய, பொருளாதார இயல்புகள் செம்மைப்படுத்தப் படவேண்டும், ஒவ்வொருவரும் சுயமரியாதை உணர்ச்சியோடு வாழவேண்டும் என்று சொல்லிவருகின்ற காங்கிரசுத் திராவிடர்கள், நாளுக்கு நாள் பெருகிவரும் நேரம் இது. இவ்வளவு சாதகமான நிலைமையைப் பெரியாரின் அறிக்கை பெரிதும் கெடுத்துவிடும். வீண்பழியும், அவசியமற்ற விரோதமும் வளரும். அதன் காரணமாக நாமே நமது வளர்ச்சியைக் கெடுத்துக்கொள்பவராகிறோம்.

நமது இயக்க வீர இளைஞர்கள் மீது இதுநாள் வரையிலே காங்கிரசுக்காரர்களால் சுமத்தப்பட்ட பழிச்சொல், 'நாம் ஆங்கிலேயர்களின் அடிமை' என்பது ஆகும். ஆங்கிலேய ஆட்சி முடியும்போது, நாம் துக்கம் கொண்டாடுவது என்பது, அந்தப் பழிச் சொல்லை, நம் மீது சுமத்தும்படி அவர்களை நாமாகவே வற்புறுத்தி அழைப்பதாகும்.

நாம், நமது வாழ்நாளில், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியை ஏற்க விரும்பாதவர்கள், அது ஒழியவேண்டுமென்ற நோக்கமுடையவர்கள், நாம் பிரிட்டிஷ்காரர்களின் அடிமைகளல்லர் என்பதை விளக்க, நமக்கு இருக்கும் ஒருநாள்தான் ஆகஸ்டு 15!

ஆகஸ்டு பதினைந்தாம் நாள், இரண்டு நூற்றாண்டுகளாக இந்தியத் துணைக் கண்டத்தின்மீது இருந்து வந்த பழிச்சொல்லை, இழிவை, நீக்கும் நாள்! அது திராவிடர்க்குத் திருநாள்! துக்கநாள் ஆகாது!

பெரியார் அவர்கள் கட்சியின் முக்கியமானவர்களைக் கலந்து பேசியோ, கட்சியின் செயற்குழுவைக் கூட்டியோ தக்க முடிவு எடுத்திருந்தால், இந்த இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்காது.

தலைவரின் அறிக்கை, நிருவாகத் தலைவரின் அறிக்கை, விடுதலையின் அறிக்கை என்ற முறையிலே திடீர் திடீரென அடுத்தடுத்து அறிக்கைகள் வந்த வண்ணம் இருந்தன. எனவேதான், என் கருத்தைப் பெரியாரிடம் விளக்கிக்கூற வாய்ப்பு ஏற்படவில்லை. அதைத் தெளிவுபடுத்த, செய்தித் தாளில் அறிக்கையாக வெளியிட வேண்டிய அவசியம் எனக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

நான் வெளியிடும் விளக்கம் சற்றுக் காலத்தாழ்வோடு வெளிவந்தபோதிலும், இவ்விதமான கருத்தினை மத்திய திராவிடர் கழகம், கழகச் செய்தித்தாளான 'விடுதலை' அலுவலகம், பல ஊர்களிலுமுள்ள திராவிடர் கழகக் கிளைகள் ஆகியவற்றிற்குப் பொள்ளாச்சி திராவிடர்

கழகத்தினர் துண்டு அறிக்கையின் மூலம் தெளிவு படுத்தியிருக்கிறார்கள்.

முறைப்படி நடப்பதானால், பொள்ளாச்சி திராவிடர் கழகத்தினர் வெளியிட்ட அறிக்கையை ஆய்வு செய்வதற் காகவாவது, மத்திய செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டி யிருக்கவேண்டும். இப்போதும் காலங்கடந்துவிடவில்லை. ஆகஸ்டு 15ஆம் நாளைப்பற்றிப் பெரியார் அவர்கள் கொண்டிருக்கும், அவரது போக்கை மாற்றிக்கொள்ளலாம். நாடு அதனை வரவேற்றுப் போற்றவே செய்யும்.

இவ்வளவு கூறும் நான், இதற்குமுன்பு, கழகம் எடுத்துக் கொண்ட எந்த ஒரு முக்கியமான திட்டத்திற்கும், வேலை முறைகளுக்கும் கட்டுப்படாமல் இருந்தவனல்லன்; கழகம் நெருக்கடியான கட்டத்திலே இருந்தபோதெல்லாம் அதனை விட்டுவிட்டு ஓடினவன் அல்லன்; பட்டம் பதவிகளை வைத்துக்கொண்டு அவற்றையெல்லாம் விட்டுவிட முடியாது என்று கூறினவனும் அல்லன்; தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்று கட்சி தீர்மானித்தபிறகும், அதனை மீறித் தேர்தலுக்கு நின்றவனும் அல்லன்; சிறை புகவேண்டிய கட்டங்கள் வந்தபோதெல்லாம் அவற்றை விட்டு ஓடி ஒளிந்துகொண்டவனும் அல்லன்; அடிக்கடி கட்சிகள் பலவற்றைப் புதிதுபுதிதாகத் தேடிக்கொண்டவனும் அல்லன்; சேலம் மாநாட்டின் போது, செல்வந்தர்கள் சிலர் விரித்த மயக்கமொழி வலையில் வீழ்ந்தவனும் அல்லன்; நான் திட்டங்களைக் கண்டித்தவனோ, கட்சியின் கட்டுப் பாட்டிற்கு அடங்க மறுத்தவனோ அல்லன்; ஆனாலும், இந்த ஆகஸ்டு பதினைந்தாம் நாள் பிரச்சினை, உண்மையில் என்போன்ற எண்ணற்றவர்களுக்கு மனவேதனையையும், துயரத்தையும் தரக்கூடிய விதத்திலே, தவறான முறையிலே திசை திருப்பப்பட்டிருக்கிறது. ஆகவேதான், ஆகஸ்டு 15ஆம் நாளைத் துக்கநாள் என்று அறிவித்து, அதற்கான அறிக்கைகளை வெளியிட்டுவருவது, ஒரு தவறான செயல்

என்று தெரிவிக்கவேண்டிய கட்டாய நிலை எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

1947 ஆகஸ்டு 15ஆம் நாள், திராவிடர் கழகத்தினராகிய நாமும் கலந்துகொண்டு, மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டிய ஒரு பெருந்திருவிழா நாளாகும் என்றும், உலகத்தின் முன்பு நமது மதிப்பை உயர்த்தும் நாள் ஆகும் என்றும் நான் மனநிறைவோடு நம்புகிறேன். நம்புவதுடன் மட்டுமல்லாமல், ஆகஸ்டு 15இல் விடுதலை விழாநாளைக் கொண்டாடுவது என்பது எந்தவகையிலும் தவறோ, துரோகமோ அல்ல என்றும் கருதுகிறேன்.

இது, கட்சிக் கட்டுப்பாட்டையும், தலைவரின் அறிக்கையை யும் மீறிய செயலாகும் என்று கருதப்பட்டு, என்மீது ஒழுங்கு நடவடிக்கையை எடுக்கக் கழகத் தலைமை முன்வருவ தானாலும், என் வாழ் நாளில், பிரிட்டிஷ் ஆட்சி கூடாது என்ற கொள்கையைக் கொண்டவன்தான் நான் என்பதைப் பொது மக்களுக்குக் கூற, எனக்கிருக்கும் ஒரே நாளான, ஆகஸ்டு பதினைந்தாம் நாளின் முக்கியத்துவத்துக்காக வேண்டி, கட்சியின் கடுமையான நடவடிக்கையை ஏற்க ஆயத்தமாக இருக்கிறேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவரும், கழகமும் என்போக்கு தவறானது என்று கருதி, என்னைக் கழகத்தை விட்டு நீக்கினாலும், நான் சமுதாயச் சீர்திருத்தம், பொருளாதாரச் சமத்துவம், திராவிடத் தனி அரசு, தமிழ்மொழி ஆக்கம் போன்ற அடிப்படைக் கொள்கைகளைக் கட்சிக்கு வெளியே இருந்தாகிலும் செய்துவருவேன் என்பதைப் பற்றிக் கூறி, இந்த அறிக்கையை முடிக்கிறேன்! வணக்கம்''

*அறிஞர் அண்ணா அவர்கள் பெரியாரின் முடிவை எதிர்த்து வெளியிட்ட அறிக்கையானது, திராவிடர் கழகத்*

தினரிடையே ஒரு பெரும் புரட்சியை உருவாக்கிவிட்டது. கழகத்திலிருந்து பெரும்பான்மையோர் அறிஞர் அண்ணா அவர்களின் கருத்தையும், சிறுபான்மையோர் பெரியார் அவர்களின் கருத்தையும் ஆதரித்து நின்றனர். இந்தக் கருத்து மாறுபாட்டின் காரணமாகக் கழகத் தோழர்கள் இருவேறு வகைப்பட்டவராகக் காட்சியளித்தார்களே அல்லாமல், கழகம் இரு கூறாகப் பிளந்துவிடவில்லை.

அறிஞர் அண்ணா அவர்களின் அறிக்கை வெளியானதற்குப்பிறகு, பெரியார் அவர்கள் அண்ணாவிடம் மிகுந்த வெறுப்புக்கொள்ள முற்பட்டார். கழகத்தவர்களிடையே பெரியாரைப் பின்பற்றுபவர்கள் என்றும், அண்ணாவைப் பின்பற்றுபவர்கள் என்றும் ஊருக்கு ஊர் பாகுபாடு ஏற்படும் நிலை உருவாகியது.

1947 ஆகஸ்டு 15ஆம் நாள் பற்றிய கருத்து வேறுபாடு ஏற்பட்ட பின்னர், அறிஞர் அண்ணாவும், அவரைச் சார்ந்த நானும், ஈ.வெ.கி. சம்பத், காஞ்சி கலியாண சுந்தரம், சேலம் சித்தையன், இரா. செழியன் போன்றவர்களும் கழகப் பணிகளில் ஈடுபடுவதைச் சிறிது சிறிதாகக் குறைத்துக் கொண்டே வந்தோம்.

## பெரியாரின் போக்கில் அண்ணாவுக்கு மாறுபாடு

பெரியார் அவர்கள் சனநாயக முறைக்கும், பண்புக்கும் மதிப்பளிக்காமல் நடந்துகொண்டுவந்தது, எதிலும் சர்வாதிகாரத் தன்மையைக் கடைப்பிடித்து வந்தது, கழகத் தொண்டர்களுக்கு உரிய மதிப்பு அளிக்காமல் இருந்து வந்தது, கறுப்புச் சட்டையைத் 'தொண்டர் படையினர்' மட்டுமே அணியவேண்டும் என்று கூறாமல் கழகத் தோழர்கள் அனைவரும் அணியவேண்டும் என்று வற்புறுத்திவந்தது, புரட்சிக்கவிஞருக்கு நிதியளிப்பு விழா எடுத்ததை வெறுத்தது, ஆகஸ்டு 15ஆம் நாளைத் துக்க

நாளாகக் கொண்டாடும்படி வற்புறுத்தி வந்தது போன்றவைகளைப் பொறுத்துப் பெரியாரிடத்தில் அறிஞர் அண்ணாவுக்கு மனத்தாங்கல் இருந்துவந்தது.

பெரியார் அவர்கள், ''இது என்னைத் தலைவனாகக் கொண்ட கட்சி; இது நான் தொடங்கி வைத்துத் தொடர்ந்து நடத்திவரும் கட்சி; நான் சொல்லுவதையெல்லாம் கேட்டு, அதன்படி நடக்கின்ற தொண்டர்கள்தாம் எனக்கு வேண்டுமே அல்லாமல் எனக்கு யோசனை சொல்லும் அறிவாளிகள் எனப்படுகிறவர்கள் எவரும் தேவையில்லை!'' என்றும், ''எவரும் கழகத்திற்குத்தான் நிதி திரட்டித் தரவேண்டுமே அல்லாமல், தனிப்பட்ட கவிஞனுக்கு, கலைஞனுக்கு என்ற முறையில் நிதிதிரட்டுவது போக்கிரித்தனமாகும்!'' என்றும், ''கழகத் தோழர்கள் எல்லோரும் எப்போதும் கறுப்புச்சட்டை அணியவேண்டும்; வெள்ளைச் சட்டை அணியும் குள்ளநரிகள் எனக்கு வேண்டாம்!'' என்றும் பலவாறாகப் பேசியும், எழுதியும் வந்தார்.

இப்படிப்பட்ட நிலையில், அறிஞர் அண்ணா அவர்கள், தம்முடைய போக்கிலும், கருத்திலும் நியாயம் இருப்பதை உணர்த்தும் பொருட்டு, ''திராவிட நாடு'' இதழில், 'லேபிள் வேண்டாம்', 'உள்ளம் உடையுமுன்', 'ராஜபார்ட் ரங்கதுரை', 'மரத்துண்டு', 'இரும்பாரம்' போன்ற உருவகக் கதைகள் சிலவற்றை எழுதிவந்தார். அந்தக் கதைகளைப் படித்துப் பார்த்தவர்கள் அனைவரும், அறிஞர் அண்ணாவின் மனநிலையையும், அவருடைய நியாயத் தன்மையையும் தெளிவாக அறிந்துகொண்டனர்.

### திராவிட நாடு பிரிவினை மாநாடு - கடலூர்

*1947* அக்டோபர் 14ஆம் நாள், தென்ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூரில், ''திராவிட நாடு பிரிவினை மாநாடு' நடைபெற்றது. அந்த மாநாட்டிற்குப்

பெரியார் அவர்கள் தலைமை தாங்கினார். டாக்டர் ஏ. கிருட்டிணசாமி மாநாட்டைத் தொடங்கிவைத்தார். 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் பி. பாலசுப்பிரமணியம் மாநாட்டில் கொடியை ஏற்றிவைத்தார்.

அந்த மாநாட்டில் தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாண-சுந்தரனார் அவர்கள் கலந்துகொண்டு, ஆரிய-திராவிடப் பிரச்சினைபற்றியும், திராவிட நாடு தனிநாடாகப் பிரிய வேண்டியதன் இன்றியமையாமை பற்றியும் அரியதொரு சொற்பொழிவாற்றினார்.

பட்டுக்கோட்டை அழகிரிசாமி, எஸ்.வி. லிங்கம், எஸ். குருசாமி, விருத்தாசலம் சி. முனிசாமி, ஏ.பி. சனார்த்தனம் வேலூர் திருநாவுக்கரசு, திராவிடமணி, கி. வீரமணி போன்றவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர்.

அப்போது கழகத்தில் நிலவிய சூழ்நிலையையொட்டி, அறிஞர் அண்ணா, நான், சம்பத், காஞ்சி கலியாணசுந்தரம் போன்றவர்கள் மாநாட்டில் பங்கு கொள்ளவில்லை. வீணாகச் சிலரால் கிளப்பப்படும் மனப்புகைச்சல், பகைமையுணர்ச்சி, வெறுப்புணர்ச்சி போன்றவைகளைத் தவிர்க்கும் நோக்கத்தின் பேரிலேயே, அண்ணா அவர்களும், நானும் மாநாட்டில் கலந்துகொள்ள விரும்பவில்லை.

அறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் காலகட்டத்தில், கழகப்பணிகளில் ஈடுபடுவதைப் பெருமளவுக்குக் குறைத்துக்கொண்டு, திருமணவிழாக்கள், பொதுமன்றங்களின் நிகழ்ச்சிகள், கல்லூரிகளின் சிறப்புக் கூட்டங்கள், தொழிற் சங்க விழாக்கள், மாணவர் மன்றக் கூட்டங்கள் போன்ற வற்றில் கலந்துகொண்டு உரையாற்றுவதில் மிகுந்த கவனம் செலுத்திவந்தார்.

நாட்டில் இருந்த நடுநிலையாளர்கள், நல்லறிவாளர்கள், பொதுநோக்குகொண்டவர்கள் பலர், அறிஞர் அண்ணாவின்

சனநாயகப் பண்புகளையும், நேர்மையான நியாயமான போக்கையும், அவரது அறிவாற்றல் திறமைகளையும் மிகவாக வியந்து பாராட்டினார்கள். படித்தவர்களும், பட்டதாரிகளும், மாணவர்களும், இளைஞர்களும் அறிஞர் அண்ணாவின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும் ஆதரிக்கும்படியான புதியதொரு சூழ்நிலை நாட்டில் உருவாகத்தொடங்கியது. அறிஞர் அண்ணா அவர்களை ஒதுக்கி வைத்துவிட்டுக் கழகம் பீடுநடைபோட்டு வளர இயலாது என்ற நிலைமையும் வளர்ந்துவந்தது. கழகத்தின் வளர்ச்சிக்கு அறிஞர் அண்ணாவின் தொண்டு பெரிதும் தேவை என்ற கருத்து, பலரிடம் நிலவி வந்தது. பெரியார் - அறிஞர் அண்ணா ஆகியவர்களிடையே மீண்டும் நல்லுறவு ஏற்படவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் சிலர் முயன்று வந்தனர்.

## கரூர் தொழிலாளர் மீது வழக்கு

திருச்சி மாவட்டம் கரூரில்*, நெசவுத் தொழிலாளர்கள் உரிமைகள் கோரி, முதலாளிகளை எதிர்த்துப் பெரும் போராட்டம் நடத்தினார்கள். போராட்டத்தில் வன்முறை நிகழ்ச்சிகள் சில நடந்துவிட்டன, நூற்றுக்குமேற்பட்ட கழக நெசவாளர்கள் காங்கிரசு அரசால் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்கள், நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடுக்கவும், அவற்றில் வாதாடி வென்று விடுதலைபெறவும் கழகத்தின் ஆதரவை மிகவும் எதிர்பார்த்தனர்.

கழகத் தலைவர் பெரியார் அவர்கள் தொழிலாளர்க்கு ஆதரவாக உதவிசெய்ய எந்தவொரு முயற்சியும் மேற் கொள்ளவில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் நெசவாளர் களின் இரங்கத்தக்க நிலையை எண்ணி, அவர்களுக்கு உரியமுறையில் உதவிசெய்யவும், நிதி திரட்டித்தரவும் முன்வந்தார்.

* இவ்வூர் தற்போது கரூர் மாவட்டத்தில் உள்ளது.

அண்ணா அவர்கள் நிதிதிரட்டுவதற்குத் திருச்சியில், தன்னுடைய 'நீதி தேவன் மயக்கம்' என்ற நாடகத்தை நடத்தலாம் என்றும் அதில் நாடகக் குழுவினரோடு சேர்ந்து, நாம் 'இராவணனாக' நடிக்க ஆயத்தமாக இருப்பதாகவும் தெரிவித்தார். நாடகம் நடத்துவதற்கான ஏற்பாடுகளைத் திருச்சி கழகத்தோழர்களின் ஒத்துழைப்போடு செய்யுமாறு அண்ணா அவர்கள் என்னிடம் கூறினார்கள்.

எனது மேற்பார்வையில், 'நீதி தேவன் மயக்கம்' நாடகம் சிறப்பாக நிறைவேறியது. கழகத் தோழர்களும், பொது மக்களும் மிகுந்த ஒத்துழைப்பை நல்கினார்கள். அதன்மூலம் ஒரு கணிசமான தொகை ரூபாய் பத்தாயிரத்திற்குமேல் கிடைக்கப்பெற்றது. அந்தத் தொகையைக்கொண்டு வழக்குகள் நடத்தப்பட்டு, நெசவாளத் தோழர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

நிதி திரட்டித்தந்த அறிஞர் அண்ணாவின் செயல் பெரியாருக்கு மேலும் எரிச்சலை ஊட்டவே செய்தது.

### 'சுதந்திர நாடு' இதழின் துணை ஆசிரியர்

1947 ஆம் ஆண்டு இறுதியில், பேராசிரியர் டாக்டர் முகம்மது உசேன் நைனார் அவர்களின் தலைமையில் இயங்கிய அறக்கட்டளை, 'சுதந்திர நாடு' என்னும் பெயரில் நாளிதழ் ஒன்றினைத் தொடங்கியது. அந்த இதழுக்கு புலவர் எஸ்.எஸ். அருணகிரிநாதர் அவர்கள் ஆசிரியராக நியமிக்கப் பட்டார். அதில் நான் துணை ஆசிரியராக இருந்து பணி யாற்றவேண்டும் என்று, பேராசிரியர் டாக்டர் நைனார் என்னைக் கேட்டுக்கொண்டார். அறிஞர் அண்ணாவின் இசைவோடு அந்தப் பணியில் சேர்ந்து ஒரு ஆண்டுகாலம் வேலை செய்தேன். பின்னர் அந்தப் பணியை விட்டுவிட்டுக் காஞ்சிபுரம் சென்று, அறிஞர் அண்ணாவின் 'திராவிட நாடு'

இதழ் அலுவலகத்தில் அண்ணாவுக்குத் துணையாக இருந்து, 'திராவிட நாடு' இதழையும், கழகப் பணிகளையும் கவனித்துக்கொண்டு வந்தேன்.

1947-49ஆகிய ஆண்டுகளில், அண்ணாவும், நானும் இணைந்து பல சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு, பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு வந்தோம். பெரியார் ஒரு பக்கத்தில் கழகப் பணிகளை ஆற்றிவந்த நேரத்தில், நாங்கள் வேறோர் பக்கத்தில் கழகப் பணிகளிலும், பொது நிகழ்ச்சி களிலும் ஈடுபட்டுவந்தோம்.

## 'மன்றம்' என்ற திங்கள் இதழ்

இலக்கியம், சமுதாயச் சீர்திருத்தம், பகுத்தறிவு, அறிவியல், பொருளியல், மொழியியல், வாழ்வியல், கலையியல், வரலாற்றியல் பற்றிய கருத்துக்களைச் சுவைபட வழங்குவதற்கு என்று, 'மன்றம்' என்ற பெயரில், திங்கள் இதழ் ஒன்றினை, நானும், இளவல் செழியனும் சேர்ந்து தொடங்கினோம். அதற்கு நான் ஆசிரியர் பொறுப்பு ஏற்றிருந்தேன். பெரும்பாலும் நானும், செழியனும் மட்டுமே கட்டுரைகள், கதைகள் போன்றவற்றை அந்த ஏட்டில் எழுதிவந்தோம். பிறரின் சிறப்புக்குரிய கட்டுரைகளும் அதில் வெளியிடப்பட்டன.

'மன்றம்' ஏடு, 1948 சனவரி 14ஆம் நாள் (தைத்திங்கள் முதல் நாள்) பொங்கல் விழா அன்று தொடங்கப்பட்டது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், 'மன்றம்' வெளி யீட்டிற்கு வாழ்த்துப்பா ஒன்றினை அனுப்பி வைத்திருந்தார். அந்த வாழ்த்துப்பா வருமாறு:

"மன்றம் என்பதோர் மாத இதழை,
இன்றெம் தோழர் எழில் நெடுஞ்செழியனார்
எழுதி வெளியிட இசைந்ததைப் போற்றுதும்!
எழுது புலமை முழுதுளார் ஆதலின்;

அன்னார் கருத்தை அமுதாக்கொள்ளுதும்!
பன்மொழிப் புலமை படைத்தார் ஆதலின்;
மன்றம் நன்கு வாழ்க!
என்றும் நெடுஞ்செழியனார் இனிது வாழியவே!"

'மன்றம்' இதழ் நூல்வடிவில் வெளியிடப்பட்டது. அதன்படி எட்டணா (48 காசு) விலையில் விற்பனை செய்யப்பட்டது. விற்பனை முகவர்க்கு 25 சதவீதம் கழிவு தரப்பட்டது. திங்கள் தோறும் 5000 க்கு மேற்பட்ட இதழ்கள் விற்பனை ஆயின.

'மன்றம்' இதழைத் திங்கள்தோறும் வெளிக்கொண்டு வர எல்லாவிதமான வேலைகளையும் நானும், இளவல் செழியனும் மட்டுமே செய்துவந்தோம். கட்டுரைகளை எழுதுவது, சிறந்த கட்டுரைகளைத் திரட்டுவது, அவற்றை அச்சகத்தில் கொண்டுபோய்க் கொடுப்பது, அச்சடிக்கப் பட்டு உருவாக்கப்பட்ட இதழ்களை வாங்கிவருவது, விற்பனை முகவர்களுக்கு அனுப்ப அவைகளைக் கட்டுக் கட்டாகக் கட்டுவது, கட்டுகளை எழும்பூர் இரயில் நிலையத் திற்கும், சென்னை மத்திய இரயில் நிலையத்திற்கும் எடுத்துச்சென்று இரயில்களில் ஏற்றச்செய்வது, சந்தா தாரர்களுக்கான இதழ்களை அஞ்சல்மூலம் அனுப்பி வைப்பது, விற்பனைப் பட்டியலைத் தயாரிப்பது, விற்பனை முகவர்களோடு கடிதத் தொடர்பு வைத்துக்கொள்வது, 'மணியார்டர்' மூலம் வரும் பணத்தை வாங்கிக் கணக்கில் பதிந்துகொள்வது போன்ற எல்லாப் பணிகளையும் நாங்களே செய்தோம். அலுவலக வேலைக்கு என்று யாரொருவரையும் அமர்த்திக்கொள்ளவில்லை.

'மன்றம்' இதழைப் பத்துத் திங்கள்கள் வரை பல சிரமங்களுக்கு இடையே நடத்திவந்தோம். விற்பனை முகவர்கள் பலர் விற்பனைத் தொகையைச் சரியானபடி அனுப்பி வைக்காததால், எங்களுக்குப் பண இழப்பு

ஏற்பட்டது. ஏற்பட்ட இழப்பை எங்களால் ஈடுசெய்ய முடியவில்லை. வேறுவழி எதுவும் இல்லாமல், 'மன்றம்' வெளியீட்டைப் பத்து திங்கள்களுக்குப் பிறகு நிறுத்திவிட வேண்டிய இன்றியமையாமைக்கு ஆளானோம்.

'மன்றம்' இதழில் வெளிவந்த பகுத்தறிவியல்-அறிவியல் வரலாற்றியல் மொழியியல் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பலரும் வியந்து போற்றினார்கள் என்றாலும், அந்த இதழை வெளியிட்டுவந்ததில், என்னால் தாங்கமுடியாத அளவுக்கு எனக்குப் பெருத்த நட்டமே ஏற்பட்டது. நாணயம் - நேர்மையில்லாத விற்பனை முகவர்கள் பலர், என்னை ஏமாற்றியபோதிலும், நாணயமும் நேர்மையும் கொண்ட உண்மையான விற்பனை முகவர்களை நான் ஏமாற்றக் கிஞ்சிற்றும் விரும்பவில்லை. அவர்கள் என்னிடத்தில் கட்டியிருந்த வைப்புத் தொகையில், அவர்களுக்குத் திருப்பிச் செலுத்திவிடவேண்டிய பணம் எவ்வளவு இருந்ததோ, அவ்வளவையும் 'மணியார்டர்' மூலம் திருப்பி அனுப்பி வைத்தேன். அதுபோலவே சந்தாதாரர்களுக்குத் திருப்பிச் சேரவேண்டியிருந்த தொகை முழுவதையும் முறைப்படி திருப்பி அனுப்பிவைத்தேன்.

நான் 'மன்றம்' இதழை நடத்திவந்த அதே காலகட்டத்தில், கழகத்திற்கு வலுவூட்டும் வகையிலும், உறுதுணையாக அமையும் வகையிலும் கிழமை இதழ்களும், திங்கள் இதழ்களும் கழக எழுத்தாளர்களால் வெளியிடப் பட்டுவந்தன. 'திராவிட நாடு' *(அறிஞர் அண்ணா)*, 'புதுவாழ்வு' *(பேராசிரியர் க. அன்பழகன்)*, 'நிலவு' *(பூ.கணேசன்)*, 'முரசொலி' *(கலைஞர் கருணாநிதி)*, 'திராவிடன்' *(என்.வி. நடராசன்)*, 'குயில்' *(புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்)*, 'பகுத்தறிவு' *(ப. கண்ணன்)*, 'எழுச்சி' *(தங்கப்பழம்)*, 'டார்பிடோ' *(ஏ.பி. சனார்த்தனம்)*, 'நகர தூதன்' *(மணவை ரெ. திருமலைசாமி)*, 'தென்னகம்' *(கே.ஏ. மதியழகன்)*, 'தனிஅரசு' *(ஏ.வி.பி. ஆசைத்தம்பி)*, 'நியூ ஏஜ்'

(ஏ.எஸ். வேணு), 'மறுமலர்ச்சி' (செல்வராசு) போன்ற இதழ்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

பின்னர் இரண்டு தடவைகள் 'மன்றம்' இதழ் விட்டுவிட்டுத் தொடங்கப்பட்டு, நடத்தப்பட்டுவந்தது என்றாலும், பண நெருக்கடியின் காரணமாக நிறுத்தப்பட்டு விட்டது.

திராவிடர் கழக மாநில மாநாடு - தூத்துக்குடி

1948 மே 8,9 நாட்களில், தூத்துக்குடியில், திராவிடர் கழக 18வது மாநில மாநாடு நடைபெற்றது. தூத்துக்குடி மாவீரன் கே.வி.கே. சாமி மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து, மாநாட்டிற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் சிறப்பாகக் கண்காணித்துவந்தார்.

மாநாட்டிற்குத் தலைவர், பெரியார்; மாநாட்டைத் தொடங்கி வைப்பவர், தி.பொ. வேதாசலம்; மாநாட்டின் கொடியினை ஏற்றி வைப்பவர், கே.கே. நீலமேகம்; திராவிடநாடு படத்தைத் திறந்துவைப்பவர், அறிஞர் அண்ணா; சர் ஏ.டி. பன்னீர்செல்வம் படத்தைத் திறந்து வைப்பவர், திரு. வி. கலியாணசுந்தரனார்; சிறப்புரை ஆற்றுவோர், கழகத்தின் முன்னணியினர் என்று விளம்பரப் படுத்தப்பட்டு இருந்தது.

மாநாடு நடைபெறுவதற்குமுன் அறிஞர் அண்ணாவும், நானும், சம்பத்தும் திருச்சியில் என். சாம்புவின் வீட்டில் தங்கியிருந்தோம். நாங்கள் எப்பொழுது திருச்சிக்குச் செல்லநேரிட்டாலும் அங்குதான் தங்கி ஓய்வு பெறுவோம்.

பெரியார் அவர்கள், அறிஞர் அண்ணாவையும், அவரைச் சார்ந்து நின்றவர்களையும் கண்டகண்டபடி, ஏசித் தூற்றி வந்த நேரம் அது. அப்பொழுது, அறிஞர் அண்ணாவும் பெரியாரின், சனநாயகத்திற்கு மாறுபட்ட போக்குகளை

மறைமுகமாகத் தாக்கி, 'திராவிட நாடு' இதழில் கதைகளாகவும், கட்டுரைகளாகவும் எழுதிவந்தார். அந்தச் சூழ்நிலையில், பெரியாரைப் பின்பற்றுவோர் சிலர், அறிஞர் அண்ணாவையும், அவரைச் சார்ந்தோர்களையும் மிகக் கீழ்த்தரமாகப் பேசியும், ஏசியும் வந்தனர்.

அறிஞர் அண்ணா அவர்கள், தாம் தூத்துக்குடி மாநாட்டிற்குச் சென்றால், பெரியார்-அண்ணா ஆகியோரைச் சார்ந்து நிற்கும் இரு பிரிவினரிடையேயும் ஏதேனும் சண்டை சச்சரவுகள் மூண்டு, மாநாட்டின் சிறப்பு குலையவும், அமைதி கெடவும், கழகத்தின் கட்டுப்பாட்டிற்குக் களங்கம் ஏற்படவும் வழி ஏற்பட்டுவிடும் என்று மிகவும் அஞ்சினார். மாநாட்டில் கலந்துகொள்வதைவிட, அதில் கலந்து கொள்ளாமல், செல்லுவதைத் தவிர்த்துக்கொள்வதுதான் நலம் பயக்கும் என்று கருதினார். அறிஞர் அண்ணாவின் கருத்தை நானும், சம்பத்தும், என். சாம்பு, எஸ்.வி. லிங்கம், வானமாமலை போன்றோரும் ஆதரித்தோம். அதன்படி தூத்துக்குடி மாநாட்டிற்குச் செல்வதில்லை என்று நாங்கள் எல்லோரும் முடிவு செய்து திருச்சியிலேயே தங்கிவிட்டோம்.

அறிஞர் அண்ணா அவர்கள் தூத்துக்குடி மாநாட்டிற்கு வருகை தருவார், பெரியாரும், அண்ணாவும் கலந்து பேசுவார்கள், பெரியாருக்கும், அண்ணாவுக்கும் இடையே இருந்துவரும் மனக்கசப்பு தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையில், பல்லாயிரக்கணக்கான கழகத் தொண்டர்கள் தூத்துக்குடிக்குச் சென்று, மாநாட்டு ஊர்வலத்திலும், மாநாட்டு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டனர்.

மாநாட்டிற்கு அறிஞர் அண்ணா வருகை தரவில்லை என்பதை அறிந்த கழகத் தோழர்கள் பலர், பெருத்த ஏமாற்றத்திற்கு ஆளானார்கள். மாநாட்டில் பேசிய பெரியார், ஆசைத்தம்பி, எம்.ஆர். இராதா போன்றோர் அறிஞர் அண்ணாவைக் குறித்துக் கேவலமாகப் பேசியது, பல கழகத்

தோழர்களுக்கு வருத்தத்தைத் தந்தது. முதல் நாள் மாநாட்டின் இறுதி நிகழ்ச்சி வரையில் இருந்து பார்த்துவிட்டு, அறிஞர் அண்ணா மாநாட்டிற்கு வரமாட்டார் என்று உறுதியாகத் தெரிந்தவுடன், பலர் தங்கள் தங்கள் ஊர்களுக்கு அன்று இரவே திரும்பிவிட்டனர்.

''அண்ணா வரவில்லையா?'', ''அண்ணா வர வில்லையா?'' என்று மாநாட்டில் கலந்துகொண்ட பலர் திரும்பத்திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தபோது, பெரியார் மிகவும் எரிச்சலடைந்தார். ''உங்களையெல்லாம் மதித்து மாநாட்டிற்கு வருகை தந்திருக்கும் தலைவர்களைப்பற்றி நீங்கள் கவலைப்படாமல் உங்களைச் சிறிதும் மதிக்காமல் வராதிருப்பவர்களைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? யார் வராவிட்டாலும் மாநாடு சிறப்பாக நடந்தேதீரும். தனிப்பட்ட எவரையும் நம்பி நான் கழகத்தைத் தொடங்க வில்லை. என்னை மட்டுமே நம்பித்தான், நான் இந்தக் கழகத்தைத் தொடங்கி நடத்திக் கொண்டுவருகிறேன்!'' என்று பெரியார் மிகக் காட்டமாக மாநாட்டில் பேசினார்.

அறிஞர் அண்ணா அவர்கள் திறந்துவைக்க இருந்த 'திராவிட நாடு படத்தை' ஆசைத்தம்பி திறந்து வைத்தார். மாநாட்டு ஏற்பாடுகளும், சாப்பாட்டு வசதிகளும் மிகச்சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தன.

### கறுப்புச்சட்டைப் படைக்குத் தடை

'கறுப்புச் சட்டைப் படை' என்ற பெயரில், தொண்டர் படை ஒன்று, கழகத்திற்குப் பலவகைகளிலும் பாதுகாப்புத் தரும் முறையில் அமைக்கப்படவேண்டும் என்று வலி யுறுத்தும் தீர்மானத்தை, 1945இல் திருச்சியில் நடைபெற்ற கழக மாநில மாநாடு நிறைவேற்றியது என்றாலும், முறைப்படி கட்டுக்கோப்போடு அப்படி ஒரு படை தனியாக அமைக்கப்படவில்லை. பெரியார் அவர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் எப்பொழுதும், எங்கும் கறுப்புச்

சட்டையோடுதான் காட்சி அளிக்கவேண்டும் என்று கட்டளையிட்டதன் காரணமாகக் 'கறுப்புச்சட்டைப் படை' என்ற பெயரில் தனி அமைப்பு ஏற்படவில்லை. கழகத் தோழர்கள் அனைவரும் கறுப்புச் சட்டை அணிந்தவர் களாகக் காணப்பட்டார்கள்.

காங்கிரசு ஏடுகளும், பார்ப்பன ஏடுகளும் கறுப்புச் சட்டையினரை எதிர்த்துக் கடுமையான முறையில் கண்டித்து எழுதி வந்தனர். 1948இல், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் முதலமைச்சராகவும், டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் உள்துறை அமைச்சராகவும் இருந்த நேரத்தில், குற்றவியல் சட்டத்திருத்தம் 15வது பிரிவின்கீழ், 'கறுப்புச் சட்டைப் படை'க்குத் தடை ஆணை விதிக்கப்பட்டது.

தடை ஆணையை எதிர்த்துச் சென்னை 'விக்டோரியா மெமோரியல்' மண்டபத்தில், கறுப்புச் சட்டைப் படைத் தடை ஆணை எதிர்ப்பு மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. மாநாடு பெரியார் தலைமையில் நடைபெற்றது. ஏராளமான கறுப்புச் சட்டை அணிந்தவர்கள், தமிழகம் எங்குமிருந்து மாநாட்டிற்கு வருகை தந்தனர்.

அந்தக் காலகட்டம் அறிஞர் அண்ணா அவர்களும், என்னைப்போன்றவர்களும் சற்று ஒதுங்கியிருந்த நேரம் ஆகும். அறிஞர் அண்ணாவும், அவரைச் சார்ந்தோரும் மனத்தாங்கல் காரணமாக, அந்த மாநாட்டிற்கு வரமாட் டார்கள் என்று பெரியாரும், அவரைச் சார்ந்தோரும், அரசினரும் கருதினர். ஆனால், அறிஞர் அண்ணா அவர்கள், மற்றவர்கள் போட்ட கணக்கு தப்புக்கணக்கு என்பதை நிலைநாட்டினார்.

அறிஞர் அண்ணா அவர்கள் அன்று காலை காஞ்சி புரத்திலிருந்து சென்னைவந்து, நான் தங்கியிருந்த 'கார்னர் எஸ்டேட்' அறைக்கு நேராக வந்தார். ''சாதாரண காலத்தில் நாம் எப்படியிருந்தபோதிலும், கழகத்திற்கு ஒரு நெருக்

கடியை உண்டாக்குகிற தடை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில், நாம் வாளா இருக்கக்கூடாது. நாமும் கறுப்புச் சட்டை அணிந்துகொண்டு அந்த மாநாட்டில் கலந்து கொள்ளவே வேண்டும். என்ன விளைவு ஏற்பட்டாலும் அதில் நாம் பங்குகொள்ளவேவேண்டும்'' என்று அண்ணா அவர்கள் என்னிடம் கூறினார்.

என்னிடம் கறுப்பு ஜிப்பா இருந்தது; ஆனால், அறிஞர் அண்ணாவிடம் கறுப்புச் சட்டை ஏதும் அப்பொழுது இல்லை. நான் கறுப்பு ஜிப்பாவை அணிந்துகொண்டேன். என்னிடத்திலிருந்த இன்னொரு கறுப்பு ஜிப்பாவை அவர் அணிந்துகொண்டார். என்னுடைய கறுப்பு ஜிப்பா அவருக்குப் பொருத்தமில்லாத வகையில், நீண்டு தொள தொளவென்று முழங்கால் வரை தொங்கிக்கொண்டிருந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் கோலத்தோடே மாநாட்டிற்குப் புறப்பட்டார்.

அண்ணாவும், நானும் காரில் மாநாட்டு மண்டபம் அருகே போய் இறங்கினோம். என்ன ஆகுமோ, ஏது நடக்குமோ என்ற கலக்கத்துடன் அங்குக் கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள், எங்களைக் கண்டதும் கையொலி எழுப்பி, ஆரவாரித்து மகிழ்ச்சியோடு குதித் தோடி வந்தனர். மகிழ்ச்சிப் பெருக்கால் கழகத் தொண்டர்கள் அனைவரும் ''அறிஞர் அண்ணா வாழ்க!'' பெரியார் வாழ்க! கறுப்புச்சட்டைப் படையினர் வெற்றிபெறுக! என்று வாழ்த்தினர்.

மாநாட்டில் பெரியார், அறிஞர் அண்ணா, நான், மற்ற கழக முன்னணியினர் தடை ஆணையை எதிர்த்துக் கண்டனம் தெரிவித்து, வீரமுழக்கத்தோடு உரையாற்றி னோம். மண்டபத்தைச் சுற்றி ஏராளமான காவல்படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர். மாநாடு கண்டனத் தீர்மான

நிறைவேற்றத்தோடு வெற்றிகரமாக முடிவுற்றது. கறுப்புச் சட்டை அணிந்திருந்த தலைவர்களோ, தொண்டர்களோ யாரும் கைது செய்யப்படவில்லை. தடை ஆணை ஏட்டளவில் நின்றுவிட்டது; நடைமுறைப்படுத்தப்படவில்லை. பின்னர் கறுப்புச் சட்டை அணிந்த கழகத் தோழர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் தாராளமாக உலா வந்தனர்.

**இந்தித் திணிப்பை எதிர்த்து இரண்டாம் கட்டப் போராட்டம்**

இந்திய தேசியவாதிகளும், இந்தி பிரச்சார சபையினரும், இந்தியை, மற்ற மாநிலங்களில் உள்ளதைப்போல, தமிழ்நாட்டுப் பள்ளிகளிலும் கட்டாய மொழிப் பாடமாக ஆக்கவேண்டும் என்று தொடர்ந்து வற்புறுத்திவந்தனர்.

காங்கிரசுக் கட்சியின் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டியிருந்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரின் அமைச்சரவை, இந்தி மொழியை மறைமுகமாகக் கட்டாயப் பாடமாக்கும் அரசாணையை, 1948 சூன் 20ஆம் நாளன்று வெளியிட்டது.

வஞ்சகமாக இந்தியைத் திணிக்கும் போக்கைப் பெரியார் இராமசாமி அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் வன்மையாகக் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டனர். பெரியார், அறிஞர் அண்ணா, நான், சி.டி.டி. அரசு, என்.வி. நடராசன் ஆகியோர் ஒரு குழுவாகச் சென்று, முதல்வர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரையும், கல்வி அமைச்சர் டி.எஸ். அவிநாசிலிங்கம் செட்டியாரையும் நேரில் கண்டு, மறைமுகமான இந்தித் திணிப்பு ஆணையைத் திரும்பப் பெறும்படியாக வற்புறுத்தினோம். பார்ப்பனர்களின் கட்டாயத்திற்கும், பார்ப்பனச் செய்தித்தாள்களின் மிரட்டலுக்கும் அஞ்சிய முதல்வர் ஓமந்தூரார், எங்களது வேண்டுகோளை ஏற்க மறுத்துவிட்டார்.

1948 சூலை 17ஆம் நாளன்று, சென்னையில், தூய மேரியார் மண்டபத்தில், இந்தித் திணிப்பு எதிர்ப்பாளர் மாநாடு ஒன்று கூட்டப்பெற்றது. அந்த மாநாட்டில், பெரியார், அறிஞர் அண்ணா, நான், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனார், டாக்டர் தருமாம்பாள், சிலம்புச்செல்வர் ம.பொ.சி., அருணகிரிநாத அடிகள் போன்றோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினோம். மாநாட்டில் இந்தித் திணிப்பை எதிர்த்துக் கண்டனப் பொதுக்கூட்டங்கள் கூட்டுதல், ஊர்வலங்கள் நடத்துதல், அமைச்சர்களுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டுதல், மறியல் போராட்டத்தை மேற்கொள்ளுதல் போன்ற தீவிர எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1948 ஆகஸ்டு 2ஆம் நாள், சென்னையில் திராவிடர் கழகத்தின் செயற்குழு பெரியார் தலைமையில் கூடி, இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கான திட்டங்களை வகுத்தது. அந்தக் கூட்டத்தில் அறிஞர் அண்ணாவும், நானும், ஏனைய செயற்குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டோம்.

1948 ஆகஸ்டு 10ஆம் நாளன்று, சென்னை முத்தியால் பேட்டை உயர்நிலைப் பள்ளி முன்பாக மறியல் போராட்டம் நடத்துவது என்றும், அந்தப் போராட்டத்தை அறிஞர் அண்ணா அவர்கள் போர்ப்படைத் தலைவராக இருந்து நடத்துவார் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அறப்போட்டம் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் அறிக்கை ஒன்றினை வெளியிட்டார். அந்த அறிக்கையில்,

"ஆகஸ்டு 10 ! ஆம்! வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நாள்! அருமைத்தாய் மொழியாம் தமிழினைக் காக்க, அறப்போர் தொடங்கும் நாள் அது! நாட்டுக்குக் கேடுதேடும் நயவஞ்சகர்கள், உலகம் போற்றும் உயிரனைய தமிழ் மொழியை உருக்குலைத்தனர் என்பதை

உணர்த்தும் நாள்தான், ஆகஸ்டு பத்து! திராவிடத் தனிஅரசு ஏன் கேட்கப்படுகிறதென்ற உண்மையை, உலகம் உணர்ந்துகொள்ளும்படி செய்ய, முறையிடும் நாள்தான், ஆகஸ்டு பத்து! அறப்போர் தொடுக்கும் நம்மீது ஆட்சி யாளர்கள் அடக்குமுறைகள் பலவற்றையும் வீசக்கூடும்! நமது உடல்களிலிருந்து குருதி கொட்டக்கூடும்! உடல்கள் முழுவதும் தழும்புகள் பல ஏற்படக்கூடும்! எதையும் தாங்கும் இதயம் எங்களுக்கு உண்டு என்ற உணர்வோடு, திராவிட வீரர்களும், தீரர்களும் திரண்டு வரவேண்டும்! உங்கள் அனைவரின் பேராதரவை நம்பித்தான், நான் அறப்போரை நடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளேன். அனைவரும் வாருங்கள்! படை வரிசையில் வந்து நில்லுங்கள்! அறப்போர் துவங்கிவிட்டது! வாரீர்! வாரீர்! வெல்வீர்!''

என்று வீரமொழிகள் பகர்ந்திருந்தார். அறிஞர் அண்ணா அவர்களோடு அவ்வப்போது கலந்துரையாடல் நடத்திப் போராட்டப் பணிகளை வகுப்பதையும், அன்றாடம் போராட்ட வீரர்களைக் களத்திற்கு அனுப்பி வைப்பதையும் நானும், கழக முன்னணியினரான என்.வி. நடராசன், காஞ்சி மணிமொழியார், கே. கோவிந்தசாமி, சின்னக்கண்ணு, சி. கணேசன், திராவிடமணி போன்றோரும் செய்துகொண்டி ருந்தோம்.

திட்டமிட்டபடி, 1948 ஆகஸ்டு 10ஆம் நாள் முதல் சென்னை முத்தியால்பேட்டை உயர்நிலைப்பள்ளியின் முன்பு மறியல் போராட்டம் தொடர்ந்து நடந்துவந்தது. மறியல் செய்த தொண்டர்கள் அனைவரும் கைது செய்யப் பட்டுத் தண்டிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்தி எதிர்ப்புப் பற்றிய உணர்ச்சியையும், எழுச்சியை யும் கிளப்ப, நாட்டின் பல்வேறு பகுதிகளில், இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் தீவிரம் ஆக்கப்பட்டது.

அப்பொழுது, ஐதராபாத்தில், நிஜாம் அரசரின் இரசாக்கர் படையை எதிர்த்து, இந்திய அரசு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஐதராபாத் கலவர சூழ்நிலையின் காரணமாகத் தமிழ்நாட்டில் அமைதிகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், இந்தி எதிர்ப்பு மறியல் போராட்டம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது.

## கவர்னர் ஜெனரல் இராஜாஜியை எதிர்த்துக் கறுப்புக்கொடி

1948 ஆகஸ்டு இறுதியில், இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்த இராஜாஜி அவர்கள் சென்னைக்கு வருவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. அப்பொழுது இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை வெளிப்படுத்த, இராஜாஜிக்கு எதிராகக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவது பற்றி ஆய்வு செய்ய, 1948 ஆகஸ்டு 22ஆம் நாள், சென்னை பெரியார் இல்லத்தில், திராவிடர் கழகத்தின் முக்கியத் தலைவர்கள் அடங்கிய கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அதில் பெரியார், அறிஞர் அண்ணா, நான், என்.வி. நடராசன், என். ஜீவரத்தினம், பட்டுக்கோட்டை அழகிரிசாமி, காஞ்சி கலியாணசுந்தரம், கே.ஏ. மதியழகன், இரா. செழியன், சி.டி.டி. அரசு, கே.வி.கே. சாமி, கே. கோவிந்தசாமி, காஞ்சி மணிமொழியார், ஏ.பி. சனார்த்தனம் போன்ற 95 பேர்கள் கலந்துகொண்டோம். அப்பொழுது சென்னை நகரக் காவலர்கள், தடுப்புக் காவல் சட்டத்தின்படி எங்கள் அனைவரையும் முன்னெச்சரிக்கையாகக் கைது செய்து, சென்னைப் பெரிய சிறைச்சாலையில் அடைத்தனர்.

என்றாலும், கவர்னர் ஜெனரலாக இருந்த இராஜாஜி சென்னைக்கு வந்தபோது, சிறைக்கு வெளியே இருந்த பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்கள், ஆங்காங்குத் திரண்டு நின்று கறுப்புக்கொடி காட்டி, ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். காவல் துறையினர் கறுப்புக்கொடி காட்டிய தொண்டர்களைத் தடியடி நடத்தியும், கண்ணீர்ப் புகைக்

குண்டுகளை வீசியும் கலைத்தனர். கழகத் தோழர்கள் பலர் படுகாயமுற்றுக் குருதி சிந்தினர்.

இராஜாஜி அவர்கள் சென்னையை விட்டுச் சென்றதற்குப் பிறகு சிறையில் அடைக்கப்பட்டிருந்த அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

இதனையொட்டி, சென்னையில் ஆளுநர் பவநகர் மன்னருக்கும், திண்டுக்கல்லில் அமைச்சர் சந்திரமௌலிக்கும், தருமபுரியில் கல்வி அமைச்சர் அவினாசிலிங்கத்திற்கும், ஆலந்தூரில் அமைச்சர் மாதவனுக்கும், காஞ்சிபுரத்தில் முதல்வர் ஓமந்தூராருக்கும் கறுப்புக்கொடி காட்டும் நிகழ்ச்சிகள் தொடர்ந்துநடைபெற்றன.

## திராவிடர் கழகத் தனி மாநில மாநாடு - ஈரோடு

கடலூர் மாநாட்டிலும், தூத்துக்குடி மாநில மாநாட்டிலும், அறிஞர் அண்ணாவும், அவரைச் சார்ந்த முக்கியத் தலைவர்களும் கலந்து கொள்ளாமல் இருந்தது பெரும்பாலான கழகத் தோழர்களிடையே ஒருவித மனக்கலக்கத்தை உருவாக்கிக் கொண்டிருந்த போதிலும், சென்னையில் நடைபெற்ற கறுப்புச்சட்டைப் படைத் தடை எதிர்ப்புக் கண்டன மாநாட்டிலும், இந்தி எதிர்ப்பு மாநாட்டிலும் அறிஞர் அண்ணாவும், அவரைச் சார்ந்த முக்கிய முன்னணித் தலைவர்களும் கலந்து கொண்டது, கழகத் தோழர்கள் பலருக்கும் மனநிறைவையும், மன மகிழ்ச்சியையும் அளித்தது.

கழகத்தில் இருந்த பெரியவர்கள் சிலர், அண்ணா அவர்கள் கழகத்தை விட்டு ஒதுங்கிச் செல்ல விட்டு விடக்கூடாது என்ற கருத்தைப் பெரியாரிடம் அவ்வப்போது வலியுறுத்தி வந்தனர். பெரியார் அவர்கள், அறிஞர் அண்ணா அவர்களை மதித்து வரவேற்கும் முறையில் 1948 அக்டோபர் 23, 24, ஆகிய நாட்களில், ஈரோட்டில் திராவிடர் கழக

மாநிலத் தனி மாநாட்டைக் கூட்டினார். அந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்க வருகை தரும்படி பெரியார் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். பெரியாரின் அழைப்பை ஏற்று அறிஞர் அண்ணா அவர்கள் ஈரோட்டு மாநாட்டிற்குத் தலைமை தாங்க இசைவு அளித்தார்.

மாநாடு, மாநாட்டின் ஊர்வலம் ஆகியவற்றைப் பெரியார் அவர்களே பொறுப்பேற்று முன்னின்று நடத்தினார். அறிஞர் அண்ணா அவர்களையும், மாநாட்டில் பங்கு கொண்ட பிறமுக்கியமான தலைவர்களையும் இரட்டைக் குதிரைகள் பூட்டப்பட்ட சாரட் வண்டியில் அமரவைத்து, மாபெரும் ஊர்வலம் மாநாட்டை ஒட்டி நடத்தப்பட்டது. ஊர்வலம் ஈரோட்டின் முக்கியமான தெருக்களின் வழியாக வந்து, இறுதியில் காரைவாய்க்கால் அருகில் போடப் பட்டிருந்த மாநாட்டுப் பந்தலுக்குச் சென்று சேர்ந்தது. பெரியார் அவர்கள் கறுப்புச் சட்டைபோட்டுக் கொண்டு சால்வையை இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு கைத் தடியுடன் ஊர்வலத்தில் முன்னால் கடைசி வரை நடந்தே வந்தார். பெரியாருடன் நான், பேராசிரியர் அன்பழகன், ஏ.பி. சனார்த்தனம், தவமணிராசன் போன்றோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டு நடந்தே சென்றோம். தூத்துக்குடி கே.வி.கே சாமி, கழகத் தொண்டர் படைக்குத் தலைமை ஏற்று ஊர்வலத்தின் முன்பகுதியில் சென்றார்.

அறிஞர் அண்ணா அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்க, எஸ் குருசாமி அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். இந்திராணி பாலசுப்பிரமணியம் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். மாநாட்டில் திருவள்ளுவர் படத்தைப் பெரியார் அவர்களும், திராவிட நாடு படத்தைத் திரு. வி. கலியாண சுந்தரனாரும், மனோன்மணியம் சுந்தரனார் படத்தை நானும், காந்தியார் படத்தைக்

கலைவாணர் என். எஸ் கிருட்டிணனும், சிங்காரவேலரின் படத்தை என்.வி. நடராசனும், தியாகராயர் படத்தைத் தி.பொ. வேதாசலமும், நாகம்மையார் படத்தை அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமியும், தாளமுத்து - நடராசன் படத்தை ஆசைத்தம்பியும், ஏ.டி. பன்னீர்செல்வம் படத்தை ஏ.சித்தையனும், என் அர்ச்சுனன் படத்தை சி.டி.டி. அரசும் திறந்து வைத்துச் சிறப்புரைகள் ஆற்றினோம்.

மாநாட்டில் பெரியார் அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசும்போது குறிப்பிட்ட கருத்துக்களின் சுருக்கம் வருமாறு:

"நான் பொதுத் தொண்டில் ஈடுபட்டு நாற்பது ஆண்டு களுக்குமேல் ஆகிவிட்டது. எனக்கோ வயது எழுபதை எட்டிக்கொண்டிருக்கிறது. என்னால் இனி எத்தனை நாட்களுக்குத்தான் உழைக்க முடியும் என்று தெரியவில்லை; என் உடல் நிலையும் சரியாக இல்லை. நம்முடைய கழகமோ, நாம் எதிர்பார்த்ததைவிட நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து, பொதுமக்கள் இயக்கமாகக் காட்சியளிக்கிறது.

இதுவரையில் நான் ஒருவனே எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்று, எதையும் நான் ஒருவனேதான் செய்யவேண்டும் என்ற நிலை இருந்து வந்தது. இப்படிப்பட்ட ஒரு நிலை நீடித்து வருவதை நான் விரும்பவில்லை. இப்போது நமது இயக்கத்தில் தலைமை ஏற்றுத் தொண்டாற்றப் பலர் இருக்கிறார்கள். கட்சியின் நலம் நாடி உழைக்க இன்றைய மாநாட்டின் தலைவர் அண்ணாதுரை ஒருவரே போதும். அவர் கழகத்தை நடத்திச் செல்வதற்கான முழு அறிவுத் திறனையும், ஆற்றல் திறனையும் பெற்றிருக்கிறார். அவர் நன்கு படித்தவர். சிறந்த பகுத்தறிவுவாதி; நல்ல எழுத்தாளர்; சிறந்த பேச்சாளர்; அத்துடன் உங்கள் அன்பையும் ஆதரவையும் நிரம்பப்பெற்றவர்; இளைஞர்; அவர் ஒருவரே போதும் கழகத்தைச் சிறப்பாக நடத்திச் செல்ல!

என்னைப் பொறுத்த வரையில் நான் கூறுகிறேன். எனக்கு வயதாகிவிட்டது. வயதாகிய தந்தை தன் பொறுப்பைத் தன் மகனிடம் ஒப்படைத்துவிடவேண்டியதுதான் நியாயம்; உலக நடைமுறையும் கூட. ஆகவே, நான் இன்று எனது பெட்டிச் சாவியை அண்ணாவிடம், உங்கள் முன்னிலையில் கொடுத்துவிடுகிறேன். எனவே, தந்தை தன் கடமையைச் செய்துவிட்டான்; இனித் தனயன் தன் கடமையையும், பொறுப்பையும் உணர்ந்து நடக்க வேண்டும்!''

*மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையுரை ஆற்றுகையில் தெரிவித்த முக்கிய கருத்துக்கள் வருமாறு:-*

''பாட்டாளி மக்களின் விடுதலைப் போருக்கு முரசு கொட்டிய நாளான மேநாள் விழாக் கொண்டாடும் நேரத்தில் தூத்துக் குடியில் நமது கழகத்தின் மாநில மாநாடு நடைபெற்றது. இப்போது ஈரோட்டில் மீண்டும் மாநாடு கூட்டப்பட்டிருக் கிறது. அவனிகண்டு அஞ்சும்படியான பாட்டாளிகளின் விடுதலைக்கான மாபெரும் புரட்சி சோவியத் நாட்டில் நடைபெற்ற அக்டோபர்த் திங்களில் கூடியிருக்கிறோம். இந்த அற்புதமான அக்டோபர்த் திங்களில்தான் ஜாரின் கொடுமையைத் தகர்த்தெறிந்து, இராணுவத்தின் ஈட்டி முனைகளை ஒடித்தெறிந்து, இரத்தம் சொட்டச் சொட்ட, ஆனால் இலட்சியம் ஒளிவிட, சோவியத் நாட்டின் சோர்விலா மக்கள், தமது தலைவர்முன் நின்றனர். நாமும் இன்று நமது மாபெரும் தலைவர் பெரியாரின் முன்பு அணிவகுத்து நிற்கின்றோம்.

அறப்போரில் ஈடுபட்டவர்கள், அடக்கு முறைக்கு ஆளானவர்கள், சிறை சென்று திரும்பியவர்கள், தடியடியைத் தாங்கியவர்கள், கல்லடியைக் கண்டவர்கள், சொல்லடியைப் பெற்றவர்கள், மீண்டும் அறப்போரில் ஈடுபடத் துடிப்பவர்கள், சிறையை நோக்கி நடப்பவர்கள், சீறும்

சர்க்காரைக் கண்டு சிரிப்பவர்கள் என்ற முறையிலே, அக்டோபர் அவனியிலே அற்புதமான புரட்சியைக் குறிக்கும் சொல்லாகிவிட்டது சோவியத்தில். திராவிடத்திலும் இந்த அக்டோபரில் நாம் நிறைவேற்றப்போகும் தீர்மானம், தொடங்கப்போகும் இந்தி எதிர்ப்பு அறப்போராட்டம், வ்ரலாற்றில் இடம் பெறப்போகும் நிகழ்ச்சியாக ஆக வேண்டும்; ஏன் ஆகியே தீரும் என்ற நிலை எற்பட வேண்டும். 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?' என்ற எக்காளம் எங்கும் எழும்பியுள்ளது. நாம் அறப்போரை எக்காரணம் கொண்டும் கைவிடப்போகிறவர்களல்லர் என்பதை ஆளவந்தார்களும் அறிவார்கள். மீண்டும் அறப்போரினைத் தொடுக்கப்போகிறோம்; அறப்போரைத் தொடுத்தே தீருவோம்; அதற்காகவே நாம் இங்குக் கூடியிருக்கிறோம்.

சொந்த மொழிக்காக நாங்கள் உயிர் கொடுக்கவும் ஆயத்தமாகிவிட்டோம். நீங்கள் அயலான் மொழிக்காக, உங்கள் உடன் பிறந்தோரைக் கொல்லும் உத்தமர்கள் என்ற நற்பெயருடன் வாழுங்கள் என்று ஆளவந்தார்க்குக் கூறிவிடுவதே, இம் மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

கழக அறப்போர் வீரர்களே! அரசியல் இலாப வேட்டைக் காரரின் எண்ணம் எப்படியோ இருந்துவிட்டுப் போகட்டும். நாம் நமது நாட்டு விடுதலைக்காகவும், நமது மொழி விடுதலைக்காகவும் போராடத் துணிந்துவிட்டோம். நமது மொழியும், கலையும் பாழக்கப்படுவதற்கும், அதன் பலனாக நாம் வடநாட்டின் அடிமைகளாவதற்கும் செய்யப்படும் சூழ்ச்சித் திட்டந்தான் இந்தக்கட்டாய இந்தி! நாம் தொடங்கப்போகும் இந்தி எதிர்ப்பு அறப்போருக்கு நல்லாதரவையும், ஒத்துழைப்பையும் தருமாறு இம் மாநாட்டில் கூடியிருக்கும் வீர மறவர்கள் அனைவரையும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று பெரியார் அவர்கள் கழகப் பெட்டிச் சாவியை என்னிடம் கொடுத்துவிடப்போவதாகவும் இனி நான் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கழகக் கடமைகளை ஆற்ற வேண்டும் என்பதாகவும் குறிப்பிட்டுப்பேசினார்கள். பெரியார் அவர்கள் அப்படியே பெட்டிச் சாவியை என்னிடத்தில் கொடுத்தாலும், சாவிமட்டுந்தான் என்னிடத்தில் இருக்குமே ஒழிய, பெட்டியும், அதிலுள்ள பொருளும் என்றென்றும் அவரிடத்திலேயேதான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.''

*மாநாட்டில் திராவிட நாட்டுப் படத்தைத் திறந்து வைத்துப் பேசியபோது திரு.வி. கலியாணசுந்தரனார் குறிப்பிட்டதாவது:-*

''நான் பழைய காங்கிரசுவாதி; பெரியாரும் காங்கிரசில் இருந்தவர்தான். நாங்கள் இருவரும் அரும்பாடுபட்டு வளர்த்த காங்கிரசுதான், இன்று சிலரது சுயநலக் கோட்டையாகக் காட்சியளிக்கிறது. இன்றைய நிலையில் காங்கிரசுக் கட்சியில் உண்மை உழைப்பாளிக்கு இட மில்லை. அது கள்வர்கள் நிறைந்த குகை ஆகிவிட்டது. அது அழிவுபடுதல் வேண்டும் அதுவே எனது வேட்கை; அவா!

இன்றளவும் தூயவர் காந்தியார் கண்ட காங்கிரசையோ, ஆகஸ்டு 15க்கு முன் நாட்டு விடுதலைக்குத் தொண் டாற்றிய காங்கிரசையோ, நான் அழிக்க முயன்றதில்லை. பட்டேல் உள்ள காங்கிரசை - பாசிசப் பாதையில் சென்று கொண்டிருக்கும் காங்கிரசை - முதலாளிகளுக்கு அரண் தேடும் இன்றைய காங்கிரசைத்தான் நான் அழிக்க வேண்டும் என்று கூறுகிறேன்.

இந்தியாவானது விரைவில் சமதர்ம நாடாக மாறுவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை. எங்கணும் முதலாளி களின் ஆதிக்கமே ஓங்கி வருகிறது. தென்னாட்டைச் சுரண்டுவதிலேயே அதன் முழு நோக்கமும் இருந்து

வருகிறது. இந்தக் கேட்டிலிருந்து தப்புவதற்கு ஒரே வழிதான் உண்டு. அது தான் நமது நாட்டை வடவர் தொடர்பிலிருந்து அறவே அறுத்துக்கொள்வது; நமது நாட்டை நமதாக்கிக் கொள்வது; அதாவது ''திராவிட நாடு திராவிடர்க்கே என்பதாகும்.''

*உடல் நலம் மிகவும் குன்றிய நிலையில் மாநாட்டில் கலந்து கொண்ட பட்டுக்கோட்டை அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி அவர்கள் நின்றுகொண்டு பேசமுடியாமல், மேடையில் அப்படியே உட்கார்ந்து கொண்டு பேசத் தொடங்கினார். அவர் பேசும்போது குறிப்பிட்டதாவது:-*

''நான் கலந்து கொள்ளும் கடைசி மாநாடு இதுவாகத்தான் இருக்கும் என்று கருதுகிறேன். எனது உடல் நலம் குன்றி நான் மிகவும் தளர்ந்து போயிருக்கிறேன். அடுத்து ஒரு கூட்டத்தில் உங்களையெல்லாம் காணும் வாய்ப்பு ஏற்படும் என்று நான் எண்ணவில்லை. இயக்கத் தோழர்கள் பலரையும் இறுதியாகக் கண்டு அளவளாவி விட்டுப்போக வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்த மாநாட்டிற்கு வந்தேன். இயக்கத் தலைவர்களையும், தொண்டர்களையும் ஒரு சேரக் காணுவதில் எனக்குப் பெருமகிழ்ச்சி ஏற்படுகின்றது. உடல் நலிவையும் சற்று மறந்து உங்களையெல்லாம் கண்டும், தலைவர்களின் பேச்சுக்களையெல்லாம் கேட்டும் மகிழ்ந்து கொண்டிருக்கிறேன்.

நான் என் வாழ்நாள் முழுவதும் பெரியாரின் பெருந் தொண்டனாக இருந்து, அவரது சமுதாய, சீர்திருத்தக் கருத்துக்களும், சுயமரியாதை இயக்கக் கொள்கைகளும், பகுத்தறிவு நெறிக்கருத்துக்களும், அரசியல் கோட்பாடு களும் நாட்டின் பட்டிதொட்டிப் பகுதிகளில் எல்லாம் பரவிட அரும்பாடுபட்டு வந்தேன். நான் என்னால் ஆன கடமை களைச் செய்து முடித்தேன் என்ற களிப்புணர்வோடு, எனது இறுதி நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறேன். பெரியாரின் கனவுகளையெல்லாம் நனவாக்கிக் காட்டிடப்

பல்லாயிரக்கணக்கில் இளங்சிங்கங்கள் தோன்றியிருக்கிறார்கள் என்ற மன நிறைவோடு நான் என் காலத்தை முடிக்க இருக்கிறேன்.

திராவிட நாடு திராவிடர்க்கே!'' ''இந்தி ஆதிக்கம் ஒழிக!'' ''தமிழ் வாழ்க! வளர்க! வெல்க!'' என்று முழக்கமிட்டு நான் மீளா விடைபெற்றுச் செல்கிறேன். ''வாழ்க பெரியார்! வாழ்க திராவிடர் கழகம்!''

*பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரனார் படத்தைத் திறந்து வைத்து நான் சிறப்புரை ஆற்றினேன். அதன் சுருக்கம் வருமாறு:-*

''ஆரிய நாகரிகம்- திராவிட நாகரிகம் ஆகியவற்றின் வேறுபாடுகளை நன்கு வெளிப்படுத்தவும், திராவிட நாகரிகத்தின் தனிப்பெருஞ் சிறப்புக்களை நிலைநாட்டவும், மூலகாரணமாக இருந்த ஆராய்ச்சி வல்லுநர்களில் முக்கியமான ஒருவராகத் திகழ்ந்தவர் பேராசிரியர் சுந்தரனார் ஆவார். அவர் விதைத்த 'திராவிடர் உணர்வு' என்ற வித்து தான், இன்றைய நிலையில் திராவிடர் கழகம் தலைதூக்கி நிற்பதற்கு அடைப்படைக் காரணமாகும்.

பேராசிரியர் சுந்தரானார் கி.பி. 1855-க்கும் கி.பி 1897சகும் இடையிலே, நாற்பத்திரண்டு ஆண்டுகாலம் மட்டுமே வாழ்ந்த பெருமகனார் ஆவார். அவர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

அவர் மனோன்மணியம் என்னும் அழகிய நாடக நூலை செய்யுள் வடிவில் இயற்றித் தந்தார். அதுமட்டுமல்லாமல், 'நூற்றொகை விளக்கம்', 'திருவிதாங்கூர் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி', 'திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி', 'பத்துப் பாட்டு பற்றிய திறனாய்வு' போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

அவர் 'மனோன்மணியம் என்ற நாடகக் காவியத்தின் பாயிரப்பகுதியில் பாடியுள்ள தமிழ்த்தாய் வணக்கந்தான் இப்பொழுது தமிழ்ப்பெருங்குடிமக்களால் சிறப்பாக எங்கணும், எப்பொழுதும் பாடப்பட்டு வருகிறது.

அவரது தமிழ்த்தாய் வணக்கப்பாடலின் முதல் ஆறு அடிகளில், கடலால் சூழப்பட்டுள்ள உலகம் தாயாகவும் அதில் உள்ள பரதகண்டம் அத்தாயின் திருமுகமாகவும், தக்காணமாகிய தென்னாடு அத்திருமுகத்தில் அழகுற அமைந்துள்ள நெற்றியாகவும், தமிழ்த்திருநாடாகிய திராவிட நாடு அந்நெற்றியில் விளங்கும் திலகமாகவும் தமிழ்மொழி அத்திலகத்திலிருந்து எழும் நறுமணமாகவும் உருவகித்துக் கூறப்பட்டுள்ளது.

''நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழில் ஒழுகும்,
சீராரும் வதனம்எனத் திகழ்பரத கண்டம் அதில்,
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்து உலகும் இன்பம்உற,
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!''

என்பது அந்தப்பாடலின் வரிகள் ஆகும்.

அடுத்துக் காணப்படும் ஆறு அடிகளில், பல உயிர்களும், பல உலகுகளும் அவ்வப்போது ஆக்கப்பட்டு, அளிக்கப் பட்டு, பின்னர் அழிக்கப்பட்டாலும், ஒரு எல்லையற்ற பரம்பொருள் எப்போதும் இருந்தபடியே இருந்துவருவது போல், கன்னடம் - தெலுங்கு - மலையாளம் - துளு போன்ற மொழிகள் உன் வயிற்றிலிருந்து தோன்றி ஒன்று பலவாக ஆன நிலையிலும், ஆரிய மொழி உலக வழக்கிலிருந்து மறைந்து, அழிந்து, ஒழிந்து போனதுபோல், எந்த வகையிலும் சிதைந்து சீரழியாத உன்னுடைய சீரிய இளமைத் தன்மையை

வியந்து, பிறசெயல்களையெல்லாம் மறந்து உன்னை வாழ்த்துகிறோம் என்று சுந்தரனார் அழகுபடக் கூறியுள்ளார்.

வள்ளுவர் செய்தருளியுள்ள திருக்குறளை, அதன் மீது ஏற்றப்பட்டுள்ள மாசு மறுக்கள் நீங்கும்படியாகப் படித்து உணர்ந்தவர்கள் எவரும், ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்று வகுத்துள்ள மனுமுதலிய ஆரிய சாத்திரங்களை ஒருபோதும் எண்ணிப் பார்க்கமாட்டார்கள் என்று, பேராசிரியர் சுந்தரனார் அழுத்தந்திருத்தமாகக் கூறியுள்ளார்.

''வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்கு உணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுஆதி ஒருகுலத்துக்கு ஒரு நீதி''

என்பது அவரது வாக்கு.

நான்கு வேதங்களைக் கொண்ட ஆரிய மொழி வந்து இந்த நாட்டில் புகுவதற்கு முன், தமிழே! நீ உலகம் முழுவதும் மூத்த முதிர்ந்த மொழியாய், பிறப்பு, இறப்பு அற்ற மொழியாய் விளங்கினாய் என்பதை எண்ணி வியப்படைகிறோம் என்று கூறியுள்ளார்.

''சதுர்மறை ஆரியம் வருமுன் சக முழுவதும் நினதாயின்
முதுமொழி நீ அநாதிஎன மொழிகுவதும் வியப்பாமே!''

என்று சுந்தரனார் தமிழைப்போற்றிப்புகழ்ந்துள்ளார்.

திராவிட நாகரிகம் - ஆரிய நாகரிகம் ஆகியவற்றின் வேறுபட்ட தன்மைகளைப் பேராசிரியர் சுந்தரானார் விளக்கிக் காட்டியதைப்போல, இராபர்ட் கால்டுவெல், ஏக்கல், பி. கயில்ஸ், என். ஆண்டர்சன், எச். சுவீட், பாப், டெயிலர், எப். ஆம்மல், ஹீராஸ் பாதிரியார் போன்றவர்களும் தங்கள் ஆராய்ச்சிகளின் மூலம் தெளிவுபடுத்திக் காட்டியுள்ளார்கள்.

திராவிடம் - திராவிடர் - திராவிட மொழி போன்ற உணர்வு நமக்கெல்லாம் ஏற்பட முன்னோடியாக இருந்தவர் பேராசிரியர் சுந்தரனார் என்ற முறையில் அவரது

திருஉருவப்படத்தைத் திறந்து வைப்பதில் நான் பூரிப்பும் பெருமையும் கொள்கிறேன்.''

மாநாட்டின் முதல்நாள் இரவில் குடந்தை கே.கே. நீலமேகம் தலைமையில் நடிகவேள் எம். ஆர். இராதாவின் 'மகாத்மா தொண்டன்' என்ற நாடகம் நடைபெற்றது. மறுநாள் இரவில் குஞ்சிதம் குருசாமி தலைமையில் (கலைஞர்) மு. கருணாநிதியின் ''தூக்குமேடை' நாடகம் நடந்தேறியது. இறுதியில் டி.கே. சீனிவாசன் நன்றி கூறினார்.

### திருக்குறள் மாநாடு - சென்னை

தமிழகத்தில், மக்கள் நல்வாழ்வு வாழ நன்னெறி காட்டவந்த சான்றோர்களில் தலைசிறந்து விளங்குபவர் திருவள்ளுவப் பெருந்தகையார் ஆவார். அவர் இயற்றிய திருக்குறள், உலகம் உய்யும் பொருட்டு உயர்நெறி காட்ட வந்த ஒரு பெரும் அறநூல்.

திருக்குறள் தனிமனிதனின் வாழ்க்கைக்கும், சமுதாயப் பொது வாழ்க்கைக்கும் நல்ல வழிகாட்டும் நூல்; அது நல்லன எவை, அல்லன எவை என்பதைச் சுட்டிக்காட்டும் நூல்; தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் ஆன கடமை களை வலியுறுத்தும் நூல்; அறத்திற்கு விளக்கந்தந்து அதற்கு ஆக்கம் பயக்கும் நூல்; நற்பண்புகளையும், நற்செயல் களையும் வரையறுத்துக் கூறும் நூல்; தீய பண்புகளையும், தீய செயல்களையும் சுட்டிக் காட்டி அவற்றை வெறுத்து ஒதுக்கும்படிகூறும் நூல்; சால்பினை வற்புறுத்தும் நூல்; ஒழுக்கத்திற்கும், ஒப்புரவிற்கும் உயர்வு தரும் நூல்; அறிவுக்கும் ஆற்றலுக்கும் மதிப்பு அளிக்கும் நூல்; முயற் சிக்கும், ஊக்கத்திற்கும் ஆக்கம் பயக்கும் நூல்; உழைப்பை யும், உற்பத்திப் பெருக்கத்தையும் வலியுறுத்தும் நூல்; மனிதகுலம் முழுவதும் ஒன்றே என்பதனை வலியுறுத்தும் நூல்; சிறந்த காதலின்ப வாழ்வைப் போற்றும் நூல்; கற்பனைக் கடவுட் கொள்கைகளையும், அவை தொடர்பான

கட்டுக் கதைகளையும் ஏற்காத நூல்; மூடநம்பிக்கைகள், குருட்டுப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் போற்றாத நூல்; ஆரியக் கொள்கைகள் பலவற்றையும் மறுக்கும் நூல்; உலகியல் வாழ்வுக்கு அப்பாற்பட்ட எதனையும் வலியுறுத் தாத நூல்.

மேற்கண்ட இந்தக்காரணங்களுக்காகப் பெரியாரும், பகுத்தறிவாளர்களும், சுயமரியாதை இயக்கத்தினரும், திராவிடர் கழகத்தினரும் திருக்குறளைப் போற்றி வந்தனர். திருக்குறளின் சிறப்பை உலகுக்கு உணர்த்தவேண்டி, திராவிடர் கழகத்தின் சார்பாக 1949 சனவரி 15,16 நாட்களில் பொங்கல் பெருவிழாவையொட்டிச் சென்னையில், 'திருக்குறள் மாநாடு' ஒன்று கூட்டப்பெற்றது. மாநாட்டிற்கு நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் தலைமை தாங்கினார். ஏ. சக்ரவர்த்தி நயினார் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். பெரியார், திரு. வி. கலியாண-சுந்தரனார், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், அறிஞர் அண்ணா, நான், திருக்குறள் முனிசாமி, விருதுநகர் வெள்ளைச்சாமி, டாக்டர். மு வரதராசனார் மற்றும் தமிழறிஞர்கள் பலர் கலந்துகொண்டோம்.

திருக்குறளை நாட்டுக்குரிய நூலாக ஆக்கவேண்டும் என்றும், பொங்கல் திருநாளுக்கு அடுத்த நாளைத் திருவள்ளுவர் நாளாகக் கொண்டாடவேண்டும் என்றும், திருவள்ளுவர் ஆண்டை நடைமுறைக்குக்கொண்டு வர வேண்டும் என்றும், ஊர்தோறும் திருக்குறள் வகுப்பு நடத்தப்பெறவேண்டும் என்றும், மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருக்குறள் மாநாட்டின் ஏற்பாடுகள் அனைத்தையும் கண்காணிக்கும் பொறுப்பைப் பெரியார் அவர்கள் என்னிடத்தில் விட்டிருந்தார். சென்னையிலிருந்த கழகத் தோழர்கள் பலரின் சிறந்த ஒத்துழைப்போடு, இரண்டு

நாட்கள் மாநாட்டை நான் மிகச் சிறப்பாகவும் செம்மை யாகவும் நடத்துவதில் வெற்றிகண்டேன். மாநாட்டில் தமிழறிஞர்கள் பலரும் ஆற்றிய உரைகள் மிகவும் பயன் தருவனவாக அமைந்திருந்தன.

## அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி மறைவு

தன்மதிப்பு இயக்கத்தின் தனிப்பெரும் தளபதியாகவும், பகுத்தறிவு இயக்கத்தின் சுடரொளியாகவும், சோர்விலாத சொல்லின் செல்வராகவும், அஞ்சா நெஞ்சம் படைத்தவராக வும் விளங்கிய பட்டுக்கோட்டை கே.வி. அழகிரிசாமி அவர் கள், சுயமரியாதை இயக்கம்-பகுத்தறிவுக் கழகம்-நீதிக்கட்சி - இந்தி எதிர்ப்பு இயக்கம்- தமிழ்மறுமலர்ச்சி இயக்கம்- திராவிடர் கழகம் ஆகியவற்றில் முக்கியப் பங்கு கொண்டு நாடெங்கணும் கொள்கை பரப்புப் பணியில் அடலேறாகச் சுற்றிச் சுழன்று வந்தவராவார்.

நான் பட்டுக்கோட்டையில் பள்ளி மாணவனாக இருந்த காலத்திலிருந்து, அவர் மறையும் காலம் வரையில் அவரோடு நெருங்கிப் பழகி, அவரது அன்பையும், நட்புறவையும் நன்கு பெற்று வந்தேன்.

அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி அவர்கள் 1898 இல், புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள காருக்குறிச்சி என்ற சிற்றூரில் பிறந்தவர் என்றாலும், அவர் வாழ்ந்து, வளர்ந்து, பெயரோடும், புகழோடும் திராவிட இயக்கப் பணிகளில் ஈடுபட்டிருந்தது பட்டுக்கோட்டையில்தான்.

அவர் மேடை ஏறிச் சொற்பொழிவு ஆற்றும்போது, எந்த ஒரு கருத்தையும் தெளிவாகவும், திட்பமாகவும், அழுத்தந் திருத்தமாகவும், உரத்த குரலில், கேட்பாரையெல்லாம் பிணிக்கும் தன்மையில், கோடையிடி என முழங்கும் ஆற்றல் பெற்றிருந்தார். அவரது சொற்பொழிவில் சொற் சுவையும், பொருட்சுவையும் சிறந்து காணப்படும்; கருத்

தோட்டம் கேட்போர் அனைவர் உள்ளத்தையும் ஈர்த்து நிற்கும்; அவரது பேச்சின் ஊடே, ஊடே நகைச்சுவை மிளிரும்; கேலியும், கிண்டலும் அவ்வப்போது விரவிவரும்; உணர்ச்சி கொப்புளிக்கும்; எழுச்சி பீறிட்டுப் பொங்கும்; இடிமுழக்கம் கேட்கும்; அவரது பேச்சு முழுவதும் வல்லோசை நிரம்பிக் காணப்படும்.

அவர் என் தந்தையார் வ.சௌ. இராசகோபாலனார் அவர்களிடத்திலும், என் தமையனார் இரா. சௌரிராசன் அவர்களிடத்திலும் மிக நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தார். அவர் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்து, என் தந்தையாரோடு கலந்துரையாடல் நடத்திவிட்டுச் செல்வார். நானும், என் இளவல் செழியனும் அவர் பெரும் பொழுது தங்கியிருந்த பட்டுக்கோட்டை மாரியம்மன் கோயில் மண்டபத்திற்குச்சென்று, அவருடன் உரையாடி மகிழ்வோம்.

1944இல் இருந்து, 1948 வரை அவரும் நானும் தமிழ் நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று, பொதுக் கூட்டங் களிலும், மாநாடுகளிலும் கலந்துகொண்டு உரைகள் நிகழ்த்தியிருக்கிறோம்.

அவர் 1948ஆம் ஆண்டில், காசநோயால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தார். அவர் உடல் நலம் குன்றிப் போய் இருந்த நிலையில், வறுமைப் பிடியில் சிக்கி மிகவும் அவதிக்கு உள்ளாகியிருந்தார். அறிஞர் அண்ணா அவர்கள் அழகிரியின் உடல்நிலையைக் கண்டு மிகவும் மன வேதனைப்பட்டார். அறிஞர் அண்ணா அவர்கள் ஓரளவுக்கு நிதிதிரட்டி, அதனைக் கொண்டு போய் அழகிரியிடம் கொடுத்துவிட்டு வரும்படி என்னிடம் கூறினார். நான் பட்டுக்கோட்டைக்குச் சென்று அந்த நிதியை அவரிடம் கொடுத்தேன். அண்ணாவின் பெருந்தன்மையை வியந்து

பாராட்டி, அண்ணாவுக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அறிஞர் அண்ணா அவர்கள், யார் நம்மைப் பொதுக் கூட்டத்திற்கு அழைத்தாலும், ரூ.100/- அழகிரிசாமி அவர்களுக்கு மணியார்டர்மூலம் அனுப்பிவைத்துவிட்டு, அதற்கான பற்றுச் சீட்டைத் தம்மிடத்தில் காண்பித்தால்தான், கூட்டத்திற்கு வருவேன் என்று நிபந்தனை விதித்தார். அதன்படி பல நூறு ரூபாய்கள் அழகிரிசாமிக்குப் போய்ச் சேர்ந்தன.

மருத்துவர்களின் பரிந்துரையின்பேரில் நானும், சென்னை சி. கணேசனும், அழகிரிசாமி அவர்களைத் தாம்பரம் எலும்புருக்கி நோய் சானிடோரியத்தில் கொண்டு போய்ச் சேர்த்தோம். அவ்வப்போது அறிஞர் அண்ணா திரட்டித்தந்த பணத்தை, நான் அவரிடம் கொண்டு போய்க் கொடுத்து வந்தேன். நான் அடிக்கடி சானிடோரியத் திற்குச் சென்று, அவரது உடல்நிலையை அறிந்து வந்தேன். மருத்துவ சிகிச்சை போதுமான பலனை அளிக்காத காரணத்தால், அழகிரிசாமி தஞ்சைக்குத் திரும்பிவிட எண்ணினார். அறிஞர் அண்ணா கொடுத்த ரூ.100/-ஐ அழகிரிசாமியிடம் கொடுத்து, அவரைத் தஞ்சைக்குத் தக்க பாதுகாப்புத் துணையோடு அனுப்பி வைத்தேன.

சில நாட்கள் படுக்கையிலிருந்த அழகிரிசாமி அவர்கள் 1949 மார்ச்சு 28ஆம்நாள் தமது 51ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி அவர்கள், மறைந்த நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் 1949 ஏப்ரல் 3ஆம் நாள், 'திராவிடநாடு' இதழில் பின்வருமாறு எழுதினார்.

> ''சுயமரியாதை இயக்கத்தின் சுடர்! தன்மதிப்பு இயக்கத்தின் தனிப்பெரும் தளபதி! மூடப்பழக்க வழக்கங்களை

முறியடிக்கும் முன்னணித் தலைவன்! வைதிகத்தின் வைரி! வருணாச்சிரமத்தின் விரோதி! சீர்திருத்தச்செம்மல்! சொற்செல்வன்! சோர்வற்ற உழைப்பாளி! தன்னலம் மறந்து தன்னாட்டுக்குப் பணியாற்றிய பண்புடையோன்! அறிவுப் பாதையில் அங்கும்இங்கும் கிடந்த பள்ளம் படுகுழிகளை நிரப்பிய பகுத்தறிவாளன்! அறியாமையை அகற்ற அஞ்சா நெஞ்சுடன் அவனி சுற்றி வந்த ஆண்மையாளன்! என்றெல்லாம் போற்றப்படும் அழகிரிசாமி மறைந்தார் என்ற துக்கச் செய்தி, ஆற்றொணாத் துயரத்தை அளிக்கிறது.

கல்லடியா? கவலைப்படாதே! சொல்லடியா? சோர்வடையாதே! பகைவரின் படையா? பயப்படாதே! எதிர்க் கட்சியினரா? ஏமாந்துவிடாதே! சனாதனமா? சாய்ந்து விடாதே! சதியா? சாகடி! மதமா? அதனை மங்கவை! மாசுகளைத் துடை! மன்பதையின் மாணிக்கமாக விளங்கு! மரியாதையைப் பெறு! சுயமரியாதையைப் பெற்றுச் சுகவாழ்வு வாழ முற்படு! - இதுவே உன்னுடைய குறிக்கோளாக இருக்கவேண்டும்! என்று எங்குச் சென்றாலும் எக்காளமிட்டு, மூலை முடுக்கெல்லாம் முரசு கொட்டித் தன்மான இயக்கத்தின் முன்னணித் தலைவராக விளங்கி, அஞ்சா நெஞ்சுடன் அறிவுப் பணிபுரிந்து வந்த அழகிரிசாமியே நீயா மறைந்தாய்?

கைம்மாறு கருதாமல் கடமையைச் செய்த கரும வீரனே! நீயா மறைந்தாய்? என் கடன் பணிசெய்து கிடப்பதே என்பதை நடைமுறையில் செய்துகாட்டிய செம்மலே! நீயா மறைந்தாய்? எதிர்ப்பையே விருந்தாகக் கொண்டு எண்ணற்ற மக்களின் அறிவுக் கண்களைத் திறந்த ஏந்தலே! நீயா மறைந்தாய்? பகுத்தறிவுப் பாசறையின் படைத் தலைவனே! நீயா மறைந்தாய்? தாயைப் பிரிந்த சேயைப் போல் தனித்து நின்ற தமிழ் மக்களின் தன்மானத்தைக் காக்க வந்த தளபதியே! நீயா மறைந்தாய்? அந்தோ! அழகிரி சாமியே! நீயா மறைந்தாய்? நினைத்தாலே நெஞ்சு

திடுக்கிடும் செய்தி! மறக்கமுடியாத சம்பவம்! மனத்தைக் குழப்பும் நிகழ்ச்சி!''

அழகிரிசாமியின் குடும்பம் கடன்பட்டிருந்ததை எண்ணி, அறிஞர் அண்ணா அவர்களும், நானும் 1949 மே 29ஆம் நாளன்று, தஞ்சை அரண்மனைத் திடலில், கலைவாணர் என்.எஸ்.கிருட்டிணன் அவர்களின் 'கிந்தனார்' கலைநிகழ்ச் சிக்கு ஏற்பாடு செய்தோம். அதன்மூலம் ரூ.6000/- நிதி திரட்டப்பட்டது. அந்தத் தொகையை அறிஞர் அண்ணா அவர்கள் அழகிரிசாமியின் குடும்பத்திடம் ஒப்படைத்தார்.

தஞ்சை சுடுகாட்டில் அழகிரிசாமியின் கல்லறையில் நினைவுச் சின்னம் ஒன்று எழுப்பப்பட்டது. பட்டுக் கோட்டையில் அவரது திருஉருவச் சிலை திறந்து வைக்கப் பட்டது.

### பெரியார் இராஜாஜியைத் தனியாகக் காணுதல்

இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த இராஜாஜி அவர்கள், 1948இல் சென்னைக்கு வருகை தந்தபோது, அவருக்கு எதிராகக் கழகத் தோழர்கள் அனைவரும் கறுப்புக் கொடி காட்டவேண்டும் என்று அறிக்கை விட்ட பெரியார் அவர்கள், 1949இல் இராஜாஜி அவர்கள் திருவண்ணா மலைக்கு வந்தபோது, அவரைத் தனியாகக் கண்டு தனித்து உரையாட முயன்றார்.

1949 மே 14இல், இராஜாஜி அவர்கள் திருவண்ணா மலைக் கோயிலில், இரமணர் தங்கியிருந்து தவம்செய்த பாதாளலிங்கக் குகையின் திறப்பு விழாவில் கலந்துகொள்ள வந்தார். அப்போது அவர் வந்த இரயில் சலூனில், அவரைக் காணப் பெரியாருக்கு இசைவு தரப்பட்டிருந்தது.

அப்படியொரு செய்தி நாளிதழ்களில் வெளிவந்ததைக் கண்டு அறிஞர் அண்ணா, நான், சம்பத், (கலைஞர்)

மு. கருணாநிதி, என்.வி. நடராசன், கே. கோவிந்தசாமி போன்ற கழக முன்னணியினர் பெரிதும் வியப்படைந்தோம். கழகத் தோழர்கள் பலரும் விவரம் எதுவும் தெரிந்துகொள்ள முடியாமல் கலங்கிப் போயிருந்தனர். பெரியார் அவர்கள் இராஜாஜியை ஏன் சந்திக்கச் சென்றார்? எதற்காகச் சென்றார்? என்ன அரசியல் முடிவுகாணச் சென்றார்? என்ற விவரங்கள் எவருக்கும் தெரியவில்லை.

இருவரும் ஒரு மணி நேரத்திற்கு மேலாகத் தனிமையில் கண்டு பேசியிருக்கிறார்கள். இந்தச் செய்தி எல்லா ஏடுகளிலும் வெளிவந்தது. அவர்கள் இருவரும் தனித்து என்ன பேசினார்கள்? எதைப் பற்றிப் பேசினார்கள்? என்பதைப் பற்றி ஏதும் வெளியிடப்படவில்லை. என்ன பேசப்பட்டது என்பது பற்றிப் பெரியாரும் வெளியிட வில்லை; இராஜாஜியும் வெளியிடவில்லை. அது மூடு மந்திரமாகவே இருந்து வந்தது. பெரியாரின் இச் செயல் கழக முன்னணியினரிடையே, மனக் கசப்பைப் பெரிதும் வளர்த்திருந்தது.

திராவிடர் கழக மாவட்ட மாநாடு-கோவை

கோவையில், 1949 மே 29ஆம்நாள், மாவட்ட திராவிடர் கழக மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு தி.பொ. வேதாசலம் அவர்கள் தலைமை தாங்கினார். அறிஞர் அண்ணா அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார் கழகக் கொடியை ஏற்றிவைத்தார். நான் 'திராவிட நாடு' படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினேன்.

மாநாட்டில் பெரியார், ஜி.டி.நாயுடு, ஜி.பி. சோம-சுந்தரம், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, திருப்பூர் எஸ்.ஆர். சுப்பிரமணியம், சம்பத், என்.வி. நடராசன்,

சிற்றரசு, கோபி என். இராசு போன்றோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

தொழிலதிபர் ஜி.டி. நாயுடு அவர்கள் பேசும்போது, ''கடந்த ஆண்டு அக்டோபரில், ஈரோட்டில் நடைபெற்ற மாநாட்டில், அண்ணாவிடம் பெட்டிச் சாவியைத் தரப் போவதாகப் பெரியார் அவர்கள் கூறினாரே, அப்படியிருக்க, அவருக்கும் தெரிவிக்காமல் திருவண்ணாமலையில் பெரியார் ஆச்சாரியாரைச் சந்தித்ததன் மர்மம் என்ன? அங்குப் பேசிய இரகசியம் என்ன? அதனைப் பெரியார் அவர்கள் இந்த மாநாட்டில் வெளியிட வேண்டும்'' என்று கூறினார்.

ஆனால் பெரியார் அவர்கள் அந்தச் சந்திப்புப் பற்றிய விவரம் எதனையும் அந்த மாநாட்டில் வெளியிடவில்லை. அறிஞர் அண்ணாவும், நானும், கழகத்தோழர்கள் பலரும் பெரியார் அவர்கள் ஏதேனும் விளக்கந்தருவார் என்று எதிர்பார்த்து ஏமாந்து போனோம். பெரியாரின் சந்திப்புப் பற்றி, ஐயமும், திகைப்பும், ஆத்திரமும் பலருடைய உள்ளத்தில் ஏற்பட்டிருந்தன.

பெரியார் அவர்கள், ''நான் ஆச்சாரியாரை என் சொந்த விஷயமாகத்தான் சந்தித்தேன். அதற்கும் கட்சிக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை!'' என்று மட்டும் கூறி விவரம் எதனையும் சொல்ல மறுத்துவிட்டார்.

## பெரியார் எண்ணியிருந்த ஏற்பாடு பற்றிய விளக்கம்

கோவை மாநாடு முடிந்தவுடன், பெரியார் அவர்கள் மணியம்மையாருடன் சென்னைக்கு வந்து சேர்ந்தார். 1949 சூன் 19ஆம் நாள் பெரியார் அவர்கள், 'விடுதலை' ஏட்டில், 'விளக்கம்' என்ற தலைப்பின் கீழ் சில கருத்துக்களை வெளியிட்டார். அவை வருமாறு:

''இயக்க வேலைகளில், என்னைப் போல் பொறுப்பு எடுத்துக்கொண்டு பணியாற்றத் தக்க ஆள் கழகத்தில் யார் இருக்கிறார் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆதலால், எனக்கு வாரிசாக ஒருவரை ஏற்படுத்தி அவர் மூலம் தக்க ஏற்பாடு செய்துவிட்டுப் போகவேண்டும் என்று அதிகக் கவலை கொண்டிருக்கிறேன். கழகத்தில் நம்பிக்கையான ஒருவர் எனக்குக் கிடைக்கவில்லை என்று நான் கூறும்போது, அதற்காக யாரும் என்மீது கோபித்துக்கொள்ளக் கூடாது. நான் எந்த ஒரு எதிர்ப்புக்கும், யாரொருவருடைய சதிச் செயலுக்கும் கவலைப்படவில்லை''

*பெரியார் அவர்கள், மீண்டும், 1949 சூன் 28ஆம் நாள், 'விடுதலை' இதழில் அறிக்கை ஒன்றினை வெளியிட்டார். அதில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது:*

''உடுமலைப் பேட்டையில் நான் 144ஆவது தடை ஆணையை மீறியதற்காகவும், சென்னையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் நான் பேசிய பேச்சிற்கு எதிராகவும் என் மீது குற்றவியல் நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க இருப்பதாலும், கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்து நான் தீவிரமாகப் பங்கேற்க இருப்பதாலும், இயக்க நடப்பிற்கும், இயக்கப் பொருள்- சொத்துக்கள் ஆகியவற்றிற்கும் பாதுகாப்பாக நான் ஓர் ஏற்பாட்டைச் செய்ய வேண்டியவனாக இருக்கிறேன். எனக்கு வயது எழுபத்தொன்றுக்கு மேலாகிறது. நான் பொது வாழ்வில், ஐம்பது ஆண்டுகால அனுபவம் உடையவன். பொதுமக்களின் மனப்பான்மையை நன்கு அறிந்தவன். நான் நான்கு, ஐந்து ஆண்டு காலமாகப் பழகி, எனக்கு நம்பிக்கைக்குரியவராக இருந்து வருபவரும், என் நலத்தில் உண்மையான பற்றும், கவலையும் கொண்டு நடந்து வருபவரும் ஆன மணியம்மையை, எப்படியாவது வாரிசு உரிமையாக ஆக்கிக்கொண்டும், அந்த வாரிசு

உரிமையையும், தனிப்பட்ட தன்மையையும் மற்றும் நான்கு, ஐந்து பேர்களையும் சேர்த்துக் கொண்டும், இயக்க நடப்பிற்கும், பொருள்- சொத்து பாதுகாப்பிற்குமாக ஒரு டிரஸ்ட் பத்திரம் எழுத ஏற்பாடு செய்திருக்கிறேன். அந்தப் பத்திரம் எழுதப்பட்டு வருகிறது. இதனைச் சட்டப்படி செல்லுபடி ஆக்குவதற்கு, நமது விருப்பத்திற்கு விரோதமாகச் சில சொற்களைப் பயன்படுத்த நேரிட்டால், அதனால் கொள்கையே போய்விடுமோ என்று பயப்படுவது உறுதியற்ற தன்மையேயாகும்''

*பெரியாரின் அறிக்கையானது, கழகத் தோழர்கள் பெரும்பாலானோர்களிடத்தில், மனக்கசப்பையும், பெருங் குழப்பத்தையும் உருவாக்கியது.*

## பெரியார்-மணியம்மை திருமண ஏற்பாட்டிற்கு எதிர்ப்பு

*பெரியார் அவர்கள், இயக்க நடப்பிற்கும், இயக்கச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் என்று தனி ஏற்பாடு ஒன்று செய்யப்போகிறேன் என்பதாக அறிக்கை வெளி யிடுவதற்கு முன்பே, அதாவது 1949 சூன் 18ஆம் நாள், சென்னை திருமணப் பதிவாளர் அவர்களுக்குத் தாம் கே.ஏ. மணியம்மையைப் பதிவுத் திருமணம் செய்துகொள்ளப் போவதாக மனுப் போட்டிருந்திருக்கிறார். இந்தச் செய்தி நாள் ஏடு ஒன்றில் வெளிவந்தது.*

*இந்தச் செய்தி உண்மைதானா என்பதைக் கண்டறிய, கழகத்தின் முக்கிய நண்பர்கள் சிலர், திருமணப் பதிவாளர் அலுவலகம் சென்று, அங்குள்ள விளம்பரப் பலகையைப் பார்த்தனர். நாள் ஏட்டில் வெளிவந்த செய்தி உண்மைதான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர்.*

*பெரியார்-மணியம்மை திருமணச் செய்தி, கழகத்திற்குள் ஒரு பெரும் கொந்தளிப்பை உண்டாக்கிவிட்டது. பகை*

வர்களும், எதிர்க்கட்சியினரும் கேலியும், கிண்டலும் செய்யத் தொடங்கினர். பெரியாரின் தியாகம், அவரின் அஞ்சாமை, அவர் புகட்டி வந்த சுயமரியாதைச் சீர்திருத்தம், அவர் போதித்து வந்த பகுத்தறிவுப் பண்பாடு, அவருடைய அறிவுரை, அவரால் தமிழகம் பெற்ற விழிப்புணர்ச்சி போன்ற எல்லாம் பயனற்றனவாக ஆகிவிட்டனவே என்று எண்ணிப் பலரும் மனங்கலங்கினார்கள். பெரியார்-மணியம்மை திருமணம் ஒரு பொருந்தாத் திருமணம் ஆகும்; அது பகுத்தறிவுவாதிகளால் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்ற பேச்சு எங்கணும் பேசப்பட்டு வந்தது. கட்சியின் கொள்கையும், குறிக்கோளும், கண்ணியமும், கட்டுக் கோப்பும் காப்பாற்றப் படவேண்டும் என்று கழகத் தோழர்கள் பலரும் கருதினார்கள். திருமணம் என்ற பெயரால் பெரியார் செய்ய இருக்கும் ஏற்பாட்டைக் கைவிடவேண்டும் என்று கோரித் தமிழகம் எங்கணும் இருந்த கழகத்தோழர்கள், கடிதங்கள் தந்திகள் - தொலைபேசி மூலம் பெரியாரைக் கேட்டுக் கொண்டனர். பெரியார் அவர்கள் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை.

பெரியார் அவர்கள் எதையும் பொருட்படுத்தாமல், சேலம் மாவட்டம் ஏற்காட்டிற்குச் சென்று, அங்கு ஒரு வீட்டில் தங்கிக் கொண்டார். பெரியாரின் முயற்சியைக் கைவிடுமாறு கேட்டுக் கொள்ள கே.கே. நீலமேகம், என்.வி. நடராசன், எஸ். குருசாமி போன்றவர்கள் அடங்கிய தூதுக்குழுவினர், ஏற்காட்டிற்குச் சென்று, பெரியாரைக் கண்டனர். திருமண முயற்சியைக் கட்சியின் நலங்கருதிக் கைவிடுமாறு, தூதுக்குழுவினர் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுக் கொண்டும் பெரியார் இணங்கவில்லை. தூதுக் குழுவினர் அனைவரும் பெருத்த ஏமாற்றத்துடன் திரும்பி வந்து, நிலைமையை அண்ணாவிடமும், என் போன்றாரிடமும் கூறினர்.

சென்னை டி.எம். பார்த்தசாரதி, காஞ்சி மணிமொழியார், கண்ணபிரான், சி.வி. இராசன் ஆகியோர் அடங்கிய மற்றொரு குழுவினர் ஏற்காடு சென்று, பெரியாரிடம், திருமண ஏற்பாட்டைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டனர். அதற்கும் பலன் ஏதும் ஏற்படவில்லை.

திராவிடர் கழகத்தின் மத்தியச் செயற்குழு உறுப்பினர்களாக இருந்த அறிஞர் அண்ணா, நான், கே. கோவிந்தசாமி, ஜி.பி. சோமசுந்தரம், சேலம் அ. சித்தையன் போன்றோர் கையெழுத்திட்டு, திருமண ஏற்பாட்டைக் கைவிடுமாறு வேண்டுகோள் விடுத்தோம். அதற்கும் எந்த ஒரு பலனும் ஏற்படவில்லை.

**பெரியாரின் திருமண ஏற்பாட்டை எதிர்த்து அண்ணாவின் அறிக்கை**

பெரியார்-மணியம்மை திருமண ஏற்பாட்டை இனித் தடுத்து நிறுத்திட முடியாது என்பது உறுதியாகிவிட்ட நிலையில், அறிஞர் அண்ணா அவர்கள் பல இலட்சக் கணக்கான தோழர்களால் கட்டிக் காத்து வளர்க்கப்பட்ட கழகத்தை எப்படிக் காப்பாற்றுவது, கழகத் தோழர்களை எவ்வாறு அமைதிப்படுத்தி மனநிறைவு கொள்ளச் செய்வது, கொண்ட கொள்கைகளையும், குறிக்கோள்களையும் எப்படியெல்லாம் நிறைவேற்றுவது என்பது பற்றி இரவு பகலாகச் சிந்திக்கத் தலைப்பட்டார். என்னோடும் மற்ற நெருங்கிய நண்பர்களோடும் பலமணிநேரங்கள் கலந்துரையாடல்கள் நடத்தினார்.

பெரியார்-மணியம்மை திருமணத்தால் ஏற்படக்கூடிய விளைவுகளையும், நாம் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றியும் அறிஞர் அண்ணா அவர்கள் தெளிவான அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்றும், அந்த அறிக்கை

கழகத் தோழர்களுக்கு மன அமைதியை ஏற்படுத்தக் கூடியதாக அமையும் என்றும் நான் அண்ணாவிடம் தெரிவித்தேன். என்னுடைய கருத்தை ஆதரித்துக் கழகத்தின் முக்கியமான நண்பர்களும் வலியுறுத்தினார்கள். அதன் பின்னர் அறிஞர் அண்ணா அவர்கள் நீண்ட அறிக்கை ஒன்றை எழுதித் 'திராவிட நாடு' இதழில் 1949 சூலை 3ஆம் நாள் வெளியிட்டார். அந்த நீண்ட அறிக்கையின் சுருக்கம் மட்டும் வருமாறு :

"சென்ற ஆண்டு நாம் நமது பெரியாரின் 70ஆவது ஆண்டு பிறந்தநாள் விழாவைச் சிறப்பாகச் கொண்டாடினோம். இந்த ஆண்டு அவரது திருமண விழாவைக் காணும்படி நம்மையெல்லாம் அழைக்கிறார்; இல்லை அறிவிக்கிறார்.

கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகப் பெரியாருடைய உடலைக் கவனித்துக் கொள்ளும் திருத்தொண்டிலே தன்னை ஒப்படைத்துக்கொண்டு வந்தவர், செல்வி மணியம்மையார்! அந்தச் செல்விக்கு வயது 26!

அவர்கள்தான் பெரியாருக்கு மனைவியாகும் திருத் தொண்டில் இப்போது ஈடுபட நேர்ந்திருக்கிறது! சென்னை யில் இவர்களின் பதிவுத் திருமண மனு, திருமணப் பதிவு நிலையத்தில், கடந்த ஒரு வாரகாலமாக ஒட்டப் பட்டிருக்கிறது. கழகத்தோழர்கள் பலரும் அதனைப் பார்த்துத் திகைப்படைந்துள்ளனர்.

பெரியாருக்கு வயது 71! மணியம்மைக்கு வயது 26!! இவர்களின் பதிவுத் திருமணம் நடைபெற இருக்கிறது!

'என்னிடம் அன்பும், எனது நலத்தில் கவலையும் உள்ளவர்களுக்கும், சற்றுப் புரட்சியாகவும், திடுக்கிடக் கூடியதாகவும், இயக்கமே அழிந்து விடுமோ என்று பயப்படக்கூடியதாகவும், எனக்கு ஒரு கெட்ட பேரும்,

இழிவும் ஏற்படக்கூடிய பெரிய தவறாகவுங்கூடக் காணப்படுவதாகத் தெரிகிறது'' என்று பெரியாரே 22.6.1949 விடுதலையில் வெளியிட்ட அறிக்கையிலே இதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

கோபம், கொதிப்பு இவை மட்டுமே இதனால் ஏற்படும் என்று அவர் குறிப்புக் காட்டுகிறார். ஆனால், இவை மட்டுமல்ல, இந்தச் சேதியாலே ஏற்பட்டுள்ள விளைவு கண்ணீர்! - கண்ணீர்! தூய்மையுள்ளங்கொண்ட பல்லாயிரக்கணக்கான இயக்கத் தோழர்கள் கண்ணீர் சொரிந்தவண்ணம் உள்ளனர்.

தலைநிமிர்ந்து தன்மானத்தூதர்களாய், விடுதலை வீரர்களாய், ஏறுநடைபோட்டு வந்த எண்ணற்ற இளைஞர்கள், இன்று உடைந்த உள்ளத்தைச் சுமந்து கொண்டு, வழியும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, பின்னும் கால்களுடன், பிசையும் கரங்களுடன், யார் யார் பார்த்து என்ன என்ன விதமாகப் பரிகாசம் செய்வார்களோ என்ற அச்சத்துடன், நடமாடிக் கொண்டிருக்கும் நிலையைக் காணும்போது, கல் நெஞ்சமும் கரைந்துவிடும் என்பது திண்ணம்.

திருமணம் சொந்த விஷயம்! வயோதிகப் பருவத்திலே திருமணம் செய்வதுகூடச் சொந்த விஷயந்தான்! அதனால் தனிப்பட்ட முறையில் எவருக்கும் கண்ணீர் ததும்பாது! ஆனால் இன்று கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது, பெரியாரின் திருமணச் செய்தி கேட்டு!

நாம் அவரை அரசியல் கட்சியின் தலைவராக மட்டும் கொண்டிருக்கவில்லை. இயக்கத்தைச் சார்ந்த ஒவ்வொரு வரும், அவரைத் தங்கள் குடும்பத் தலைவரென, வாழ்க்கைக்கு வழிகாட்டியென ஏற்றுக் கொண்டு, எந்த இயக்கத்தவரும் அதன் தலைவரிடம் காட்டாத அளவு மரியாதை உணர்ச்சியை அன்பைக் காட்டி வந்திருக்கிறோம்.

நமது கண்களுக்கு அவர் நமது மானத்தை மீட்டுத் தரும் மகானாக, நம்மைப் பன்னெடுங்காலமாகக் கொடுமைப் படுத்தி வரும் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப் போர் புரியும் மாவீரராகக் காட்சி தந்து வந்திருக்கிறார்.

நம்மை நாம் உணரவும், நமது மானத்தை நாம் காப்பாற்றிக் கொள்ளவும் திட்டமிட்டுக் காட்டினார். அரசியலைப் பற்றி அல்ல அவர் பேசிவந்தது- வாழ்க்கையைப் பற்றி, வாழ்க்கைச் சிக்கலை நீக்குவது பற்றி, வாழ்க்கையிலே புதிய மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கான வழிகளைப் பற்றி எடுத்துரைத்து வந்தார்.

வாழ்க்கைப் பிரச்சினையிலே, அவர் மிகச் சிறப்பாகவும், மிகத் தெளிவாகவும், எடுத்துப்பேசி வந்த பகுதி திருமணத்தைப் பற்றியதாகும். திருமண முறையிலே உள்ள மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்கவும், பெண்களை அடிமையாகும் கருவியாக்கும் கயமைத்தனத்தை ஒழிக்கவும், ஆண்களின் கொடுமையை அகற்றவும், இளம் சிறுமி திருமணத்தை வெறுக்கவும், கிழவன் குமரியைத் திருமணம் செய்து கொள்வதை அகற்றவும் அவர் ஆற்றியதைப் போல, வேறு எந்தத் தலைவரும் உரையாற்றினதில்லை.

பொருந்தாத திருமணத்தை அவர் கண்டித்ததைக் கேட்டுக் கிழவர்கள் கலங்கினர்; குமரிகள் குதூகலித்தனர். ஆண்கள் வயோதிகப் பருவத்திலே வாலிபப் பெண்ணைச் சொத்து சுகம் கிடைக்கும் என்று ஆசைகாட்டித் திருமணத்துக்குச் சம்மதிக்கச் செய்தால், மானரோஷத்தில் அக்கறை கொண்ட இளைஞர்கள், அந்தத் திருணம் நடைபெற இடந்தரலாமா? என்று ஆயிரமாயிரம் மேடைகளிலே அவர் முழக்கமிட்டார் - நமக்கெல்லாம் புது முறுக்கேற்றினார்.

பெரியார், சொத்துக்கு வாரிசு இல்லை என்ற காரணத்துக்காக மனைவியைத் தேடும் கொடுமையை, ஆயிரமாயிரம்

மேடைகளிலே கண்டித்து வந்திருக்கிறார். பொருந்தாத் திருமணம் நாட்டுக்குப் பெருங்கேட்டை விளைவிப்பதாகும் என்று அவர் முழக்கமிட்டார். அந்தக் காலத்துத் தசரதன் முதற்கொண்டு இந்தக் காலத்துத் 'தங்கபஸ்பம்' தேடும் கிழவர் வரையிலே அனைவரையும் எள்ளி நகையாடினார்.

'என்போன்ற வயதானவர்கள் திருமணம் செய்துகொள்ள எண்ணக்கூடாது - எப்படியாவது அப்படி ஒரு எண்ணம் வந்து தொலைந்தால், தாம்பு அறுந்ததாக (அதாவது விதவையாக) ஒரு நாற்பது, ஐம்பது வயதானதாக ஒரு கிழத்தைப் பார்த்துத் திருமணம் செய்துகொண்டு தொலையட்டுமே! - பச்சைக்கொடி போன்ற ஒரு பெண்ணை, வாழ்வின் சுகத்தை அறியவேண்டிய வயதும், பக்குவமும் கொண்ட ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதா?- காரணம் ஆயிரம் காட்டட்டுமே! எந்த மானமுள்ளவன் அப்படிப்பட்ட திருமணத்தைச் சரி என்று சொல்லுவான்? யாருக்குச் சம்மதம் வரும்?' என்று அவர் பேசிய பேச்சைக் கேட்காத ஊரே இல்லை.

இப்படிப்பட்ட அறிவுரைகளைப் புகட்டியவர், தமது 71ஆம் வயதில், 26 வயதுள்ள பெண்ணைப் பதிவுத் திருமணம் செய்துகொள்ளுகிறார் என்றால், கண்ணீரைக் காணிக்கை யாகத் தருவதைத் தவிர வேறு என்ன நிலைமை ஏற்பட முடியும்?

'எனக்கென்ன வயதோ 70க்கு மேலாகிறது. ஒரு காலை வீட்டிலும், இன்னொரு காலைச் சுடுகாட்டிலும் வைத்துக் கொண்டிருக்கிறேன். நான் செத்தால், அழ ஆள் இல்லை. நான் அழுகிறபடி சாவதற்கும் ஆள் இல்லை!'' என்றெல்லாம் பேசிவந்த பெரியார், திருமணம் செய்துகொள்ளப் போகிறாரய்யா என்று கடை வீதிமக்கள் பேசிக் கை கொட்டிச் சிரிக்கின்றனர்!

பொருந்தாத் திருமணம்! புனிதத் தலைவரின் பொருந்தாத் திருமணம்! எந்தக் காலத்திலும், எதிரியின் எந்த ஏச்சும், வீச்சும், சர்க்காரின் எந்த நடவடிக்கையும், இன்று நமது இயக்கத் தோழர்களைத் திகைக்கச் செய்திருப்பது போலச் செய்ததில்லை.

பல நெருக்கடிகளைப் பார்த்திருக்கிறோம்-பல ஆபத்து களைச் சந்தித்திருக்கிறோம்! ஆனால், இந்தப் பேரிடியை நம்மால் தாங்கிக்கொள்ள முடியவில்லை - முடியாது! முடியவே முடியாது! உறுதியாக முடியாது! பெரியார் நம் முகத்திலே கரி பூசிவிட்டார்! நமது மூக்கை அறுத்துவிட்டார்! மூலையில் உட்கார்ந்து முக்காடிட்டுக் கதறுகிறோம், சேதி தெரிந்தது முதல்!

நாம் வெட்கப்படுகிறோம் அயலாரைக் காண! வேதனைப் படுகிறோம் தனிமையிலே! அந்தோ! எவ்வளவு பெரிய தாக்குதல்! எத்தனை அவமானம் தரும் செயல்! இதற்காகவா இவ்வளவு எழுச்சி பெற்றோம்? இப்படிப்பட்ட ஒரு பழியை ஏற்றுக் கொள்ளவா இந்த அளவு வளர்ந்தோம்? என்னே நம் நிலை! என்னே நம் கதி! எங்கே நமக்குப் புகலிடம்? என்னதான் நமக்கு எதிர்காலம்? எதிரே பெரும் இருள்! சுற்றிலும் கேலி பேசுவோர்! இடையே நாம்! நெஞ்சிலே பெரும் வேதனை! கண்களிலே நீர்! கை கால்களிலே நடுக்கம்! இதுதான் இன்றைய நமது நிலை!

எத்தனை ஆயிரம் காரணங்களைக் காட்டினாலும், எவ்வளவு சமாதான விளக்கங்களைக் கூறினாலும், 71-26! இதை மறுக்க - மறைக்க - மறக்க முடியாதே! இது பொருந்தாத் திருமணம்தான் என்பதை எப்படி மறுக்க முடியும்?

பெரியாரின் உடற்பாதுகாப்புப் பணிபுரிய நான்நீயென்று போட்டி போட்டுக் கொண்டு வர, நூற்றுக்கணக்கிலே தூய உள்ளம் படைத்தவர்கள் கழகத்தில் இருக்கவே

செய்கிறார்கள். பெரியாருக்குப் பக்கத்துணையாக நின்று பணி விடை புரிய மணியம்மையார் வர நேரிட்டபோதே, புயல் நுழைகிறது என்று கருதியவன் நான்! ஆனால் புல்லன் என்று பெரியாரால் தூற்றப்பட்டேன்!

'அப்பா! அப்பா!!'' என்று மனம் குளிர, வாய் குளிரக் கூறிய அம்மையார், இன்று அவருக்கு மனைவியாக ஆகிறார்! 'அம்மா' 'அம்மா' என்று வளர்ப்புப் பெண்ணை அழைத்தவர், இன்று மணாளராக மாறுகிறார்! திருமணமாம்- பதிவுத் திருமணமாம்!

நடைபெற இருக்கும் திருமணம் என்பது, இத்துடன் முடிந்துவிடும் ஒரு செயல் அல்ல! பின்னால் வரவிருக்கும் பேராபத்துக்கு - பெரியதோர் இழிவுக்கு முன்னறிவிப்பு என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. மணியம்மை, பெரியாருக்கு மனைவி மட்டுமல்ல, இயக்கத்திற்குத் தலைமை தாங்கும் தகுதியையும் பெறப்போகிறார்.

''பெரியாரே! இப்படி ஒரு அநியாயமான, கொள்கைக்கு முரணான, நாகரிக மக்கள் நகைக்கத்தக்க, பொருந்தாத் திருமணம் செய்துகொள்கிறீரே, இது சரியா?'' என்று நாம் கேட்கிறோம்.

''போடா போ! நான் திருமணம் மட்டுமா செய்து கொள்கிறேன்? இயக்கத்தையே மணியம்மையிடம் நான் ஒப்படைக்கப் போகிறேன். அப்படி ஒப்படைப்பதற்காகவே தான், நான் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன்!'' என்னும் பொருள்படக் கூறியுள்ளார் தம் அறிக்கையில்!

நடைபெறப் போவது பொருந்தாத் திருமணம் மட்டு மல்ல! புதிய மகுடாபிஷேகமும் நடைபெற இருக்கிறது! ஒரு தவறு இன்னொரு தவற்றுக்குக் காரணமாகக் காட்டப்படுகிறது! இந்தத் தகாத முறையினால், 'தலைவி' ஆகப் போகும்

மணியம்மையின் கீழிருந்து நாம் எதிர்காலத்தில் பணியாற்றத் தயாராக வேண்டும்!

கட்சிக்கு வாரிசு முறை எதற்கு? யார் செய்யும் ஏற்பாடு? இது எந்தக் காலத்து முறை? ஒரு இயக்கத்திற்கு வாரிசு ஏற்படுத்துவது என்பது, சனநாயக முறைக்கு ஏற்றதுதானா? அல்லது நடைமுறையிலே வெற்றிதரக் கூடியதுதானா? திராவிடர் கழகம், அதற்கென உள்ளதாகக் கூறப்படும் சொத்து ஆகியவை இன்னொருவருக்கு வாரிசு முறைப்படி தரவேண்டிய காட்டாட்சிக்கு உரியவைகளா? இதற்குத்தானா 'வெள்ளிக் குண்டுகளை வீசுங்கள்! வேலை நடப்பதைப் பாருங்கள்!' என்று 'விடுதலை' முழக்கமிட்டது?

இயக்கத்திலுள்ள யாராவது, துரோகி - கேடு செய்பவன் என்று பெரியாருக்குத் தோன்றினால், அது நிரூபிக்கப்படுமே யானால், அப்படிப்பட்டவர்களை விரட்டிவிட்டு, உண்மை யான இயக்கப் பற்றும் செல்வாக்கும் உள்ளவர்கள், தமக்குப் பிறகு இயக்கத்தை நடத்திச் செல்வதற்கு இடமளித்து விடுவதுதான், முறையே யொழிய, கழகத்தை என் வாரிசிடம் ஒப்படைக்கப்போகிறேன் என்று பரம்பரைப் பாத்தியம் பேசுவது எப்படி நியாயமாகும்? அதற்காகப் புதிய வாரிசுப் பரம்பரையைத் தேடுவதா?

இப்பொழுது கழகத்தைச் சேர்ந்தவர்களாகிய நாம், சிந்திக்கவேண்டியது என்னவென்றால், தலைவரின் நம்பிக்கைக்கே பாத்திரமாக முடியாத நாம், அவருடைய தலைமையின்கீழ் பணியாற்றி என்ன பயன் ஏற்படப் போகிறது? என்பது பற்றியதுதான்.

நம்மை நம்பாதவரை, இனி நாம் எப்படி நம்ப முடியும்? ஏன் இனி நாம் அவரை நம்ப வேண்டும்?

பொருந்தாத் திருமணம் நடைபெறப்போகிறது என்பதைக் கேள்வியுற்றதும், நாம் வெட்கப்பட்டோம்! வேதனைப் பட்டோம்! இப்பொழுது நாம் விரட்டப்படுகிறோம்!

இந்தத் திருமணம் நம்மையெல்லாம் இழிவுபடுத்துகிறது! நமது சுயமரியாதைக் கொள்கையை இழிவுபடுத்துகிறது! இது திருமணம் அல்ல; திருமணம் என்ற பெயரால் ஒரு ஏற்பாடுதான்!' என்று பெரியார் சமாதானம் கூறுவது, நமது பகுத்தறிவைக் கேலி செய்வதாகவே இருக்கிறது.

இந்தத் திருமணத்தின்மூலம் இயக்கத்தின்சொத்து மணியம்மைக்குப் போய்ச்சேரும். ஆனால், இயக்கம் நம்மிடத்திலேயேதான் இருக்கும். இயக்கம் என்பது நமது உழைப்பு! தலைவரின் சொத்து அல்ல! இயக்கம் நமது வியர்வையிலும், கண்ணீரிலும், உழைப்பிலும் இருக்கிறது! அது எங்கும் போய்விடாது! நம்மால் இயக்கத்தை நடத்திச் செல்ல முடியும்; அதனைக் கட்டிக் காத்து வளர்க்கவும் முடியும்!

திராவிடர் கழகத் தோழர்களே! தடுமாற்றத்திற்கு இடமளிக்காதீர்கள்! உங்கள் கருத்தைத் தலைவருக்கு உடனே தெரிவித்துவிடுங்கள்! 'தலைவரே! உங்கள் திருமண ஏற்பாட்டை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்! கண்டிக் கிறோம்! கண்டனத்தின் அறிகுறியாக, இதோ உம்முடன் சேர்ந்து பணியாற்றுவதை நிறுத்திக்கொள்கிறோம்! விலகி நிற்கிறோம்!'' என்று தெரிவித்துவிடுங்கள்.

கண்டனம் தெரிவிக்கும் தோழர்கள், அந்தச் செய்தியைத் திராவிட நாடு இதழுக்கு எழுதி அனுப்புங்கள். பல்லாயிரக் கணக்கான கழகத் தோழர்கள் பெரியாரின் பொருந்தாத் திருமண ஏற்பாட்டை ஏற்க மறுக்கிறார்கள் என்ற உண்மையை, உலகுக்கு உணர்த்துங்கள். உங்கள் தன்மானத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

நமது கண்ணீரும், கண்டனமும், விலகி நிற்கிறோம் என்ற உறுதியும், பெரியாருடைய உள்ளத்தை மாற்றுமேயானால் - இந்த அநீதியான ஏற்பாட்டை அவர் கைவிடுவாரேயானால்,

நாம் அனைவரும் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அவர் தலைமையின்கீழ் மீண்டும் பணிபுரிவோம். இல்லையேல், நாம், நமது தூய உள்ளம், உழைப்பு, கொள்கை, குறிக்கோள், திறமை ஆகியவற்றைக் கொண்டு, தனி வழி காண்போம்! சிந்தியுங்கள் - சோர்ந்து விடவேண்டாம். தீர்மானியுங்கள் - அவசரம் வேண்டாம்! அஞ்சேல் - வெற்றி நமதே!''

*அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய இந்த அறிக்கையை, அப்படியே வழிமொழிந்து நான், சம்பத், நடராசன், கே. கோவிந்தசாமி, காஞ்சி கலியாணசுந்தரம், காஞ்சி மணிமொழியார், ஏ.கே. தங்கவேலர், திருவொற்றியூர் டி.சண்முகம், கே.கே. நீலமேகம், ஜி.பி. சோமசுந்தரம், சேலம் சித்தையன், ப. கண்ணன், மதுரை முத்து, எம்.எஸ். இராமசாமி, எம்.எஸ். சிவசாமி, சி. முனிசாமி, புவவர் கோவிந்தன் போன்ற பலரும் கையொப்பமிட்டு வெளியிடச் செய்தோம்.*

*அறிஞர் அண்ணாவின் அறிக்கையைப் படித்துப் பார்த்த கழகத்தோழர்கள் பலரும் தெளிவும், உறுதியும், நம்பிக்கை யும் பெற்று, அறிக்கையில் கண்டுள்ளபடி செயலாற்றத் தொடங்கினார்கள். அறிஞர் அண்ணாவின் நீண்ட தெளிவான அறிக்கையானது, நடுநிலைகொண்ட பெரியோர்களாலும், பொதுமக்களாலும் பெரிதும் வரவேற்கப்பட்டது.*

### பெரியார்-மணியம்மை திருமணம் நிறைவேற்றம்

*கழகத் தோழர்கள் பெரும்பாலோரின் வேண்டுகோள் களையும், எதிர்ப்புக்களையும், கண்டனங்களையும் சிறிது கூடப் பொருட்படுத்தாமல், பெரியார் அவர்கள், திட்ட மிட்டபடி, 1949 சூலை 9ஆம்நாள், சென்னை தியாகராய நகரிலுள்ள செ.த. நாயகம் அவர்கள் இல்லத்தில்,*

திருமணப் பதிவாளர் முன்னிலையில், மணியம்மையைப் பதிவுத் திருமணம் செய்துகொண்டார்.

பெரியார்-மணியம்மை திருமணம் நடந்தேறிவிட்டது என்பது தெரியாத நிலையில், முன்கூட்டியே திட்டமிட்ட படி, திருச்சியில், தி.பொ. வேதாசலம் அவர்களின் வீட்டுப் பின்புறத் தோட்டத்தில், திராவிடர் கழகத்தின் செயற்குழு உறுப்பினர்கள் 46 பேர்களில் 32 பேர்கள், திருமண ஏற்பாட்டைக் கைவிடுமாறு பெரியாரைக் கேட்டுக் கொள்ள 1949 சூலை 10இல் கூடினார்கள். அவ்வாறு கேட்டுக் கொள்ளும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில், பெரியார்-மணியம்மை திருமணம், சென்னையில், பதிவாளர் முன்னிலையில் பதிவுத் திருமண மாக நடந்தேறிவிட்டது என்ற செய்தி தந்தி மூலம் கிடைக்கப் பெற்றது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும், அதனால் பலன் ஏதும் இல்லாமற்போகும் நிலை ஏற்பட்டுவிட்டது. செயற்குழு உறுப்பினர்கள் அவரவர் வந்தவழியே கலைந்து சென்றுவிட்டார்கள். பெரியாரின் பொருந்தாத் திருமணத்தை யொட்டிக் குழப்பமும், மனக்கலக்கமும், ஆத்திரமும் கொண்ட பல்லாயிரக்கணக்கான கழகத்தோழர்களுக்கு ஆறுதல் கூறவேண்டிய நிலைக்கு அறிஞர் அண்ணா அவர்கள் ஆளானார்.

## அறிஞர் அண்ணா விடுத்த வேண்டுகோள்

பெரியாரின் போக்கு கண்டு மனம் மாறுபட்டு விலகி நின்றவர்கள் அனைவரும் அறிஞர் அண்ணாவின் வழி காட்டுதலை எதிர்பார்த்திருந்தனர். அறிஞர் அண்ணா அவர்கள் என்னோடும், கழகத்தின் முக்கிய முன்னணி நண்பர்களோடும் எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றிக் கலந்தாலோசித்தார்கள். குழம்பிப் போயிருந்த கழகத் தோழர்களுக்குத் தெளிவு ஏற்படுத்த,

*முதலில் ஒரு வேண்டுகோள் விடுவது என்ற முடிவுக்கு, அறிஞர் அண்ணா அவர்கள் வந்தார்கள்.*

*அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்ட வேண்டுகோளின் சுருக்கம் வருமாறு :*

''பெரியாரின் பொருந்தாத் திருமணமோ நடந்தேறிவிட்டது! திகைப்பும், குழப்பமும், கலக்கமும், பரபரப்பும் கலந்த நிலைக்கு ஆயிரக்கணக்கான கழகத் தோழர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இனிச் செய்ய வேண்டியது என்ன என்பதைப் பற்றி அவசரமும், ஆத்திரமும் கொள்ளாமல், தூண்டிவிடுவோர் - தூபமிடுவோர் - சிண்டு முடித்துவிடுவோர் - கண்டதைக் கிளறிப் பார்ப்போர் - சந்தி சிரிக்க வைப்போர் என்போர்க் கெல்லாம் இரையாகாமல், நாம் சிந்தித்து எதையும் முடிவு செய்யவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இந்தப் பொருந்தாத் திருமணம் இயக்கக் கொள்கைக்கு முற்றிலும் முரண்பட்டது. இயக்கத்தைச் சீரழித்துச் சிதைக்கக் கூடியது. எனவே, இச்செயலை வேண்டாம் - வேண்டாம் என்று கழகத்தவர் ஆயிரமாயிரம் பேர்கள் கெஞ்சிக் கேட்டுக் கொண்ட பிறகும், விடாப்பிடியாகச் செய்து முடித்துவிட்ட வரின் தலைமையின்கீழே இருந்து இனி நாம் பணியாற்ற முடியாது. இனி, அவருடைய தலைமையிலே கழகம் இருக்கும் வரை, கழகப் பணியிலிருந்து விலகியே இருப்போம் என்ற கருத்தை முன்பே கழகத்தைச் சேர்ந்த பலரும் தெரிவித்துவிட்டோம். அதே முறையில், மேலும் எவ்வளவு கழகங்கள்-தோழர்கள் இதே கருத்தைக் கொண்டுள்ளனர் என்பதை அறிய ஆவல் கொண்டவனாக இருக்கிறேன்.

இதனை அறியப் பொதுக் கூட்டங்கள் போடுவதோ, கண்டன அறிக்கைகள் வெளியிடுவதோ, மறுப்புகள் தெரிவிப்பதோ நிலைமையைத் தெளிவுபடுத்தாது.

எனவே, கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் நிலைமையை நன்றாகப் புரிந்துகொண்டு, சிந்தித்துத் தனித்தனியாக முடிவு செய்து, தங்கள் முடிவை எனக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன். நாம் எதிர்காலத்தில் எப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது பற்றிப் பலருடைய கருத்தும் எனக்குத் தெளிவாகத் தெரிந்தால்தான், தெளிவான ஒரு முடிவை உறுதியான முறையில் நான் எடுக்க முடியும். அதுவரையில் இந்தக் கருத்தறியும் செயல்தான் முறைப்படி நடைபெறவேண்டியிருக்கிறது, அமைதியுடன், ஆத்திரமற்ற முறையில்.

இதற்கிடையில், பெரியார் உடுமலை வழக்கிலே, அரசின் அடக்குமுறைக்கு ஆளாக நேரிடலாம் என்ற செய்தியும் வந்திருக்கிறது. அவ்விதம் நேரிட்டால், அவருடைய விடுதலைக்குப் பிறகு, நாம் கூடிக்கலந்து பேசி, ஒரு முடிவினை எடுப்பதுதான் கண்ணியமான முறையாக இருக்கும்.

பகைமையைக் கிளப்பி விடுவதும், தவறுகளைக் கண்டு பிடித்துக் கண்டிப்பதும் எளிது - ஆனால் அது நேர்மையான பலன் தரத்தக்க முடிவு ஆகாது. நாம் பொறுமையைக் கடைப்பிடித்து, நன்கு ஆராய்ந்து, ஏற்றதொரு முடிவை எடுப்பதுதான், எந்த வகையிலும் நன்மை பயப்பதாக அமையும்.

இனிக் கொள்கைக்கும், குறிக்கோளுக்கும் முரண்பாடு ஏதும் இல்லாத வகையில் எப்படிப் பணிபுரிவது, எத்தகைய பணிபுரிவது என்பது பற்றி, ஆராய்ந்து அறிந்து முடிவு செய்ய வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். எனவேதான், ஆரஅமர அமைதியாகச் சிந்தியுங்கள் என்று கழக நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன்''

குழப்பத்தில் மூழ்கிக் கிடந்த முன்னணித் தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் அறிஞர் அண்ணாவின் இந்த வேண்டுகோள் அறிக்கை மிகுந்த ஆறுதல் தந்தது. அறிஞர் அண்ணா கேட்டுக்கொண்டதற்கிணங்கக் கழகத் தோழர்களும், கிளைக் கழகங்களும் தத்தம் கருத்துக்களை அறிஞர் அண்ணாவுக்கு எழுதி அனுப்பி வைத்தனர். அண்ணாவின் கருத்தை ஏற்று, அவருடைய கருத்தைப் பின்பற்றுபவர்களின் பட்டியல் 'திராவிட நாடு' இதழில் வெளியிடப்பட்டுவந்தது.

'திராவிட நாடு' அலுவலகத்திலிருந்து பணிகளை மேற்பார்வையிட்டு வந்த நான், 'கண்ணீர்த் துளிகள்' என்று தலைப்பிட்டு அதன்கீழ், கருத்துத் தெரிவித்த கழகத் தோழர்களின் பட்டியலை வாரந்தோறும் வெளியிட்டு வந்தேன்.

## 'மாலைமணி' நாளேடு தோற்றம்

பெரியாரை விட்டுப்பிரிந்து வந்த கழகத் தோழர்களின் நடவடிக்கைகள், எண்ணங்கள் ஆகியவற்றை வெளியிடவும், ஏற்பட்டுள்ள நிலைமைகள் பற்றிய விளக்கங்களை அவ்வப்போது தெளிவுபடுத்தவும், கழகத் தோழர்களுடன் அன்றாடம் தொடர்பு கொள்ளவும், நாளிதழ் ஒன்றினைத் தொடங்க வேண்டியது அவசியம் என்று அறிஞர் அண்ணா கருதினார்.

புதிய நாளிதழ் ஒன்றினை உருவாக்க 1949 சூலை 30 ஆம் நாள், அறிஞர் அண்ணா அவர்கள், கழகத்தின் முக்கிய நண்பர்கள் அடங்கிய கூட்டம் ஒன்றினைச் சென்னை கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, 186ஆம் எண்ணுள்ள இல்லத்தில் கூட்டினார். அந்தக் கூட்டத்தில் நான், காஞ்சி மணிமொழியார், என்.வி. நடராசன், டி.எம். பார்த்தசாரதி, டபிள்யு. கே. தேவராசன், காஞ்சி கலியாண சுந்தரம், இரா. செழியன், சி. கணேசன், சின்னக் கண்ணு, செல்வராசு ஆகியோர் கலந்துகொண்டோம்.

*அந்தக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள், கூறியதாவது:*

> ''இன்றுள்ள நிலைமையில், நாம் கழகப் பணியைத் தொடர்ந்து நடத்த, நமக்குப் போதுமான வாய்ப்பும், வசதியும், பணமும் இல்லை. நம்மிடம் ஆட்கள் பலம் மட்டும் இருக்கிறது. அதைக்கொண்டு மட்டும் நாம் வெற்றிகரமாகச் செயலாற்றிட முடியாது. நமது எண்ணத்தையும், திட்டத்தையும், செயற்பாட்டையும் நாடு அறிந்துகொள்ள, நம்மவர் புரிந்துகொள்ள, எதிரிகள் தெரிந்துகொள்ள, மக்களை மனமாற்றமடையச் செய்ய, நாம் மேற்கொள்ளும் பணிகளில் வெற்றிகாண நமக்கு என்று ஒரு நாள்ஏடு இருக்க வேண்டியது அவசியமாகிறது. இப்பொழுது நமக்குச் சார்பாக இருந்து வரும் திங்கள் - வார ஏடுகள் மட்டும் போதா. நமக்கு என்று நாள்ஏடு ஒன்று இருந்தே தீரவேண்டும்.
>
> நம்மவர்களில் யாராவது ஒருவர் முன்வந்து, நாள் இதழ் ஒன்றினை நடத்தும் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்த் தரப்பில் உள்ள 'விடுதலை', சில நாட்களாக வெளியிட்டு வரும் தப்புத் தவறான செய்திகளுக்கு, நாம் நாளிதழ் ஒன்றின் மூலந்தான், மறுப்புக்களைத் தெரிவிக்க முடியும். மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்ட - உண்மையைப் புரியவைக்க நாளேடு தேவைப்படுகிறது. அப்படி ஒரு இதழைத் தொடங்க உங்களின் உதவியையும், ஒத்துழைப்பையும் எதிர் பார்க்கிறேன்''

*தோழர் டி.எம். பார்த்தசாரதி, தாம் நாள் இதழ் ஒன்றினை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருப்பதாகவும், ஆனால் அதன் ஆசிரியராக இருந்து பணிபுரிய அறிஞர் அண்ணா அவர்கள் இசைவு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அதற்கு அண்ணா அவர்கள் இசைவு தெரிவித்தார்.*

அந்த நாளிதழ் 'மாலைமணி' என்ற பெயரில் வெளியிடப் படலாம் என்ற கருத்தை அறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்தார் 1949 ஆகஸ்டு 10ஆம் நாள், 'மாலைமணி'யின் முதல் இதழ் வெளிவந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் அதன் ஆசிரியராகவும், நான் அதன் தலைமைத் துணை ஆசிரியராகவும், காஞ்சி கலியாண சுந்தரம், பூ. கணேசன், ஏ.கே. வேலன், நாகபூஷணம் ஆகியோர் துணை ஆசிரியர்களாகவும், மா.செங்குட்டுவன், இறைமுடிமணி ஆகியோர் பிழை திருத்துவோராகவும் பொறுப்புகள் ஏற்றுக்கொண்டோம்.

'மாலைமணி' நாளிதழுக்குக் கழகத்தோழர்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது. அறிஞர் அண்ணாவின் எண்ணங் களையும், அண்ணாவைச் சார்ந்த கழகத் தோழர்களின் நடவடிக்கைகளையும் நாட்டினர் நன்கு அறிந்துகொள்ள, அந்த ஏடு நல்லதொரு கருவியாக அமைந்தது.

'மாலைமணி' அலுவலகத்தின் மாடிப்பகுதி, கழகத்தின் தற்காலிகச் செயலகமாகச் செயல்பட்டு வந்தது.

### கழகத் தோழர்களின் இரு வேறு செயல்திட்டங்கள்

பெரியாரை விட்டுப் பிரிந்து வந்த கழகத் தோழர்கள், இரு பிரிவினராக இருந்து, இருவேறு செயல்திட்டங்களை வற்புறுத்தி வந்தனர்.

அறிஞர் அண்ணாவும், அவரைச் சார்ந்து நின்ற என்னைப் போன்ற சிலரும், திராவிடர் கழகத்தைப் பெரியாரிடம் அப்படியே விட்டுவிட்டு, நமக்கு என்று புதிய பெயர் கொண்ட அமைப்பு - புதிய கொடி - புதிய சட்ட திட்டம்- புதிய நெறிமுறைகள் ஆகியவற்றைக்கொண்ட புதிய கழகத்தைத் தோற்றுவித்துக்கொண்டு நாம் கழகப்

பணியாற்ற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வந்தோம்.

பிரிந்துவந்த கழகத் தோழர்களில் சம்பத், நடராசன், கே. கோவிந்தசாமி, சேலம் அ. சித்தையன், காஞ்சி மணிமொழியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், காஞ்சி கலியாணசுந்தரம், மதுரை முத்து போன்ற பெரும்பாலான வர்கள், திராவிடர் கழகத்தை அப்படியே பெரியாரிடத்தி லிருந்து கைப்பற்றவேண்டும் என்றும், அதன் சொத்துக்களை யும், 'விடுதலை' அலுவலகத்தையும் அப்படியே நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், அந்த அமைப்பு அதன் கொடி, அதன் அலுவலகம் ஆகியவற்றை நமதாக்கிக் கொள்ளவேண்டும் என்றும் வற்புறுத்தி வந்தனர்.

அவர்கள், பலநாட்கள் இரவு-பகலாகத் திராவிடர் கழகத்தைக் கைப்பற்றவேண்டியதன்—இன்றியமை யாமையை, அறிஞர் அண்ணாவிடம் திரும்பத் திரும்ப வற்புறுத்தி வந்தனர். ஆனால், அறிஞர் அண்ணா அவர்கள் வன்முறைச் செயல்கள், வல்லடி வழக்குகள், நீதிமன்றங் களின் தீர்ப்பு ஆகியவற்றின் மூலம் திராவிடர் கழகத்தைக் கைப்பற்ற இசையவே இல்லை.

அறிஞர் அண்ணா அவர்கள் பல்வேறு காரண-காரிய விளக்கங்களைச் சொல்லி, மாறுபட்ட மனப்பான்மை கொண்டவர்களின் மனத்தை மாற்றித் தம் வழிக்குக் கொண்டுவர எவ்வளவோ வாதாடிப் பார்த்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் வாதாடும் போது, கீழ்க் கண்ட சில முக்கியமான கருத்துக்களை எடுத்து வைத்தார். அப்பொழுதெல்லாம் நான் உடன் இருந்தேன். அவர் எடுத்து வைத்த கருத்துக்களில் முக்கியமானவை வருமாறு :

''இயக்கத்தைவிடப் பெரியாரிடம் மிகுந்த மதிப்பு வைத்திருக்கும் கழகப் பக்தர்கள் ஒரு சிலராக இருந்தாலும், அவர்கள் அவரிடம் சேர்ந்திருக்கிறார்கள்.

பெரியாரைவிட இயக்கத்தினிடத்து அதிகப் பற்றும், மதிப்பும் கொண்டிருப்பவர்கள் நம் பக்கம் சார்ந்திருக்கிறார்கள்.

நம்மால் உருவாக்கப்பட்ட இயக்கத்தை நாம் புதிய முறையில் எப்படியும் உருவாக்கிக்கொள்ள முடியும். இயக்கம் என்பது கொள்கை - குறிக்கோள் - கோட்பாடு - திட்டம் - உழைப்பு - செயற்பாடு - ஆர்வம் - பற்று - செயல்வீரர்களின் வலிவு ஆகியவற்றைக் கொண்டது. இயக்கத்தை கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரின் நல்ல ஒத்துழைப்போடு, தங்கு தடையின்றிப் பொதுமக்கள் மதிக்கத்தக்க முறையில் நடத்திச்செல்ல முற்படுவதுதான், நமது கடமையாக இருக்கவேண்டும்.

பெரியாரோடும், அவரைச் சார்ந்து நிற்கும் திராவிடர் கழகத்தினரோடும் மோதிக்கொள்வதும், சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதும், அவர்களை எதிர்த்து வல்லடி வழக்குகள் தொடுப்பதும், குற்றவியல் நீதிமன்றம் - உரிமையியல் நீதிமன்றம் ஆகியவற்றின் படிக்கட்டுகளில் ஏறி இறங்குவதும், நம்முடைய நேரம் - நினைப்பு - உழைப்பு - பொருள் போன்றவற்றை வீணாக்கிக்கொள்ளப் பயன்படுமே அல்லாமல், நம்மையோ - நம்முடைய கழகத்தையோ வளர்க்க அவை பயன்படா.

நாம் பெரியாரோடு மோதுவது என்பது, பொதுமக்களின் அனுதாபத்தையும், ஆதரவையும் அவர் பக்கம் சேர்க்கத்தான் பயன்படும். அவரின் முதிர்ந்த வயது, பல ஆண்டுகாலம் அவர் அரசியலில் பாடுபட்ட தன்மை, அவர் பல ஆண்டுகள் பல தடவைகள் சிறைசென்று தியாகம் செய்தமை, மூத்த அரசியல்வாதிகளுடன் தொடர்புகொண்டிருப்பது

போன்றவை அவருக்கு எல்லா வகையிலும் ஆதரவாகவே அமைவனவாகும்.

பெரியாரோடு மோதுவதன்மூலம் நமது நோக்கம் நிறைவேறாது; நாம் வளர்க்க விரும்பும் கழகமும் வளராது. நமக்கு இழப்புக்கள்தாம் மிகவாக ஏற்படும். இறுதியில் சண்டையும், சச்சரவும், வழக்குகளும் மட்டுந்தான் எஞ்சி நிற்கும்.

நான் என் கருத்தை உங்கள்மீது திணிக்க விரும்பவில்லை. என் கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், இயக்கத்திற்கு வழிகாட்ட நான் ஆயத்தமாக இருக்கிறேன். நீங்கள் எல்லோரும் சேர்ந்து, திராவிடர் கழகத்தை வன்முறையில் கைப்பற்றித்தான் தீரவேண்டும் என்று முடிவு எடுப்பீர்களேயானால், உங்களது முடிவுக்கு நான் கட்டுப் படுகிறேன். ஆனால், அந்தக் கருத்துக்கு நான் தலைமை தாங்கமாட்டேன், உங்களில் ஒருவர் தலைமைதாங்கி வழிகாட்டுங்கள். நான் உங்களைப் பின்பற்றி, நீங்கள் இடுகின்ற பணிகளை ஏற்றுச் செய்கிறேன். நீங்கள் 'விடுதலை' அலுவலகத்தின் பூட்டை உடைக்கச் சொன் னாலும், கதவுகளை நொறுக்கச் சொன்னாலும், அச்சுப் பொறியை எடுக்கச் சொன்னாலும், பணப்பெட்டியைக் கவரச் சொன்னாலும், உங்கள் கட்டளைகளை ஏற்று, அவற்றைச் செய்துமுடிக்க என்னால் முடிந்தவரை முயலுகிறேன்.

நீங்கள் சிந்தித்து ஒரு முடிவை எனக்கு விரைவில் சொல்லுங்கள். நான் அதன்படி நடக்கிறேன்!"

*இவ்வாறு கூறிவிட்டு, அறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்திற்குச் சென்றுவிட்டார்.*

## கழகத்தவர் செயலற்றுக் கிடந்த நிலை

பெரியாரை விட்டுப் பிரிந்து வந்த கழகத்தோழர்கள், என்ன முடிவு எடுப்பது? எப்படிப்பட்ட முடிவு எடுப்பது? என்பதில் தெளிவு ஏற்படாத நிலையில், அனைவரும் ஏறத்தாழ இரண்டு திங்கள்கள் செயற்பாடு அற்றவர்களாக இருந்து வந்தனர்.

கழகத்தின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் பாடுபட்டு வந்த கழகத் தோழர்கள் இடையே, ''இப்படியா நாம் வாளா இருப்பது?'' ''இந்த நிலை இன்னும் எத்தனை நாட்களுக்குத் தான் நீடிப்பது?'' ''ஏதேனும் ஒரு முடிவை விரைவில் காணவேண்டாமா?'' ''கழகத்தைக் கட்டிக் காத்து வளர்க்க வேண்டியது நமது கடமையல்லவா?'' என்பன போன்ற கேள்விகள் எழும்பியவண்ணம் இருந்தன.

தீவிரவாதம் பேசிய கழக முன்னணித் தலைவர்கள் பல நாட்கள் பொறுத்திருந்து பார்த்துவிட்டு, அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையின் கீழ் அவரது கருத்துப்படி புதிய அமைப்பை உருவாக்கி, அதனை வளர்க்க வேண்டியதைத் தவிர வேறு வழி இல்லை என்ற முடிவுக்கு இறுதியில் வந்தார்கள்.

1949 செப்டம்பர் 10ஆம்நாள் வாக்கில் நானும், கழகத்தின் முன்னணியினர் சிலரும் காஞ்சிபுரம் சென்று, அறிஞர் அண்ணா அவர்களைக் கண்டோம். தீவிரவாதம் பேசிய நண்பர்கள் அண்ணாவின் விருப்பப்படி புதிய அமைப்பை ஏற்படுத்தவும், அவரை வழிகாட்டியாகக் கொண்டு கழகத்தை நடத்திச் செல்லவும் இசைவதாக அண்ணாவிடம் தெரிவித்தார்கள்.

திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்த, மத்தியச் செயற்குழு உறுப்பினர்கள் கொண்ட சிறப்புக் கூட்டத்தை,

1949 செப்டம்பர் 17ஆம் நாள் சென்னையில் கூட்டித் தக்க முடிவு எடுக்கலாம் என்று அறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்.

புதிய அரசியல் கட்சியைத் தோற்றுவிக்க அண்ணா அவர்கள் இசைவு அளித்து விட்டார் என்ற பெருமித உணர்வோடும், பெருமகிழ்ச்சியோடும் நானும், பிற நண்பர்களும் சென்னைக்குத் திரும்பினோம்.

17.9.1949இல் கழக முன்னணியினரின் கூட்டத்தைச் சென்னையில் கூட்டுவதற்கான ஏற்பாடுகளை, நானும், சென்னை மாவட்டக் கழகத் தோழர்களும் சிறப்பான முறையில் செய்யும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டோம்.

❀ ❀ ❀

# 11

# திராவிட முன்னேற்றக் கழகம்

## திராவிட முன்னேற்றக் கழகத் தோற்றம்

பெரியாரின் பொருந்தாத் திருமணத்தை எதிர்த்துக் கருத்துத் தெரிவித்த கழகத் தோழர்களில் முன்னணியில் இருந்த முக்கியமானவர்கள் அடங்கிய அமைப்புக் கூட்டம், 1949 செப்டம்பர் 17ஆம் நாள், சென்னை பவளக்காரத்தெரு, 7ஆம் எண் இல்லத்தில் கூட்டப் பெற்றது. அறிஞர் அண்ணா அவர்களின் சார்பாக அமைப்புக் கூட்டத்திற்கான அழைப்பிதழ்களை, முக்கியமான முன்னணியினர்க்கு நான் அனுப்பி வைத்திருந்தேன்.

அறிஞர் அண்ணாவின் அழைப்பை ஏற்று, 150க்கு மேற்பட்ட முக்கிய முன்னணியினர் கூட்டத்தில் கலந்துகொண்டனர். அவர்களில், அமைப்புக் கூட்டத்தில் பங்குகொண்ட மிக முக்கியமானவர்கள் மட்டும் வருமாறு: அறிஞர் அண்ணா, நான், கே.ஏ. மதியழகன், கலைஞர் கருணாநிதி, சம்பத், என்.வி. நடராசன், டி.எம். பார்த்த சாரதி, காஞ்சி மணிமொழியார், என். சீவரத்தினம், கே. கோவிந்தசாமி, வி. முனிசாமி, சி.வி. இராசன், எம்.ஆர். பாண்டியன், வி.டி. பெரியசாமி, மா. இளஞ்செழியன், சி.டி.டி. அரசு, இரா. செழியன், ஏ.எஸ். இராமன், சத்திய வாணிமுத்து, எஸ். தருமாம்பாள், எஸ். பாலசுந்தரம், டாக்டர் சி. கணேசன், ஏ.எஸ்.வேணு, எம்.எஸ்.எம்.

மொய்தீன், ஏ.கே. சாமி, சி.வி.எம். அண்ணாமலை, எம்.சின்னையா, இராம அரங்கண்ணல், ஈழத்தடிகள், காஞ்சி கலியாணசுந்தரம், சி. பஞ்சாட்சரம், சி.எஸ். சஞ்சீவி, தில்லை வில்லாளன், எஸ். துரைசாமி, புலவர் கோவிந்தன், மா. இராசமாணிக்கம், எம்.பி. வடிவேலு, சி.பி. சிற்றரசு, ப.உ. சண்முகம், போளூர் கே. சுப்பிரமணியம், திருப்பத்தூர் நடேசன், ஏ.எல்.சி. கிருட்டிணசாமி, சி. முனுசாமி, கே.பி. சுந்தரம், இரா. சாம்பசிவம், எம்.சிவப்பிரகாசம், எ. சித்தையன், ஜி.பி. சோமசுந்தரம், ப. கண்ணன், என்.கே.பி. வேலு, பி. பொன்னுச்சாமி, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, எஸ்.ஆர். சுப்பிரமணியம், எம்.எஸ். கனகராசன், கோபி இராசு, பொள்ளாச்சி நடராசு, எஸ்.ஏ. இராசமாணிக்கம், பிள்ளாரி, கே.ஆர். இராமசாமி, டி.வி. நாராயணசாமி, ஏ.எஸ். பாலசுப்பிரமணியம், கே.கே. நீலமேகம், எஸ்.கே. சாமி, எம்.எம். நடராசன், டி.கே. சீனிவாசன், என்.எஸ். இளங்கோ, கே.என்.சிவராம கிருட்டிணன், டி.என். இராமன், ஹாஜாபீர், நாகை பாப்பையன், மூவலூர் இராமாமிர்தத்தம்மையார், குடந்தை வி. சின்னத்தம்பி, திருச்சி பராங்குசம், குளித்தலை இராஜாசோழகர், திருச்சி வானமாமலை, திருச்சி சாம்பு, திருச்சி சங்கரன், நெடுமாறன், அன்பில் தருமலிங்கம், மன்னை நாராயணசாமி, கரூர் கோவிந்தராசன், கே.எஸ்.எஸ். இராசன், புதுக்கோட்டை முருகு சுப்பிரமணியம், புதுக்கோட்டை பெரியண்ணன், காரைக்குடி இராம. சுப்பையா, துறையூர் அழகமுத்து, சோழவந்தான் ஆவுடையப்பன், மதுரை முத்து, மதுரை அய்யாசாமி, சிவகங்கை இராசசேகரன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி ஆர். இராமசுப்பிரமணியம், தூத்துக்குடி சாமி, நீதி மாணிக்கம், எம்.எஸ். சிவசாமி, தங்கப்பழம், சிவசங்கு, திராவிட அரசு, எஸ். சண்முகம், து. ரத்தினம், ஆ. வேலாயுதம், நாகர்கோயில் பூதலிங்கம், மனோகரன், கிருட்டிணபிள்ளை, ஈ.வே.ஆ. வள்ளிமுத்து, எம்.எஸ். மணி,

வி.சி.கோபால், எஸ்.ஆர். சந்தானம், அ. சங்கரய்யா, எம்.எஸ். இராமசாமி, ஏ.கே. வேலன், து.மா. திருநாவுக்கரசு, பழனியப்பன், பூ. கணேசன், எஸ். அப்பாவு, பி. இராமசாமி போன்றோர் கலந்து கொண்டோம்.

அமைப்புக் கூட்டம் குடந்தை நீலமேகம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட சிலர் பெரியாரின் போக்கைக் கண்டித்துப் பேசியதோடு புதிய அமைப்பை எப்படியெல்லாம் நடத்திச் செல்ல வேண்டும் என்பதற்கான பரிந்துரைகளைக் கூறினார்கள்.

கூட்டத்தினர்க்கு நிலைமையைத் தெளிவுபடுத்திக் காட்டுவதற்காகக் காரணகாரிய விளக்கங்களோடு கூடிய நீண்ட அறிக்கை ஒன்றினை அறிஞர் அண்ணா உருவாக்கி இருந்தார். அதனைக் கூட்டத்தினர்க்குப் படித்துக் காட்டும்படி அறிஞர் அண்ணா அவர்கள் என்னிடம் கூறினார். நான் அந்த அறிக்கை முழுவதையும் படித்துக் காட்டினேன்.

அந்த அறிக்கையில் கண்டுள்ள முக்கியமான கருத்துக் களில் சில வருமாறு:

> "திராவிடர் கழக உறுப்பினர்களான நாம், இதுவரையில் ஆற்றிவந்த பணியினைச் சில நாட்களாகத் தொடர்ந்து ஆற்ற முடியாத நிலையில், கொண்டுவந்து விடப்பட்டிருக்கிறோம். இதற்கான காரணம் எல்லோரும் நன்கு அறிந்ததுதான். கழகத்தில் ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக நாம் எப்போதும்போல் பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. இந்தக் குழப்பம், பெரியார் செய்துகொண்ட பொருந்தாத் திருமணத்தின் விளைவு ஆகும். திருமணம்

நடந்தேறிவிட்டது. நாம் அவருடைய தலைமையில் அடியோடு நம்பிக்கை இழந்துவிட்டோம்.

கழகத்தின் பெரும்பான்மையோர், பெரியாரின் போக்கைக் கண்டித்தனர். அவருடைய தலைமையில் நம்பிக்கை இழந்தனர். பெரியார் தாமாகத் தலைமைப் பதவியை விட்டு விலகிக் கழகப் பணி தொடர்ந்து நடைபெற வழிசெய்வார் என்று எதிர்பார்த்தோம். ஆனால், அவரோ பதவியை விட்டு விலகுவதாக இல்லை.

இன்று கழகத்தில் செயலற்ற நிலை உண்டாகி இருக்கிறது. இந்த நிலையை வெற்றியாக நாம் கொள்ளவில்லை; வேதனையாகவே கொள்கிறோம்.

திராவிடர் கழகத்திலே இருந்து நாம் பணியாற்றி வந்ததன் நோக்கம், நாட்டிலே அறிவுப் புரட்சி உண்டாக வேண்டும், வைதிக ஆதிக்கம் அடியோடு அகற்றப்பட வேண்டும், வடநாட்டு ஏகாதிபத்தியம் ஒழியவேண்டும், திராவிடம் எந்த வகையிலும் தேயாமல் பாதுகாக்கப்பட வேண்டும், திராவிடத்தில் நல்லாட்சி மலர வேண்டும் என்பதேயாகும். நமது பணி தொடர்ந்து நடந்தாக வேண்டும். மிகத் தீவிரமாக நடந்தாக வேண்டும். நாம் நாட்டிலே ஆற்றி வந்த நல்லறிவுப் பிரச்சாரப் பணியை எக்காரணங்கொண்டும் விட்டு விடக்கூடாது.

நாம் நமது இலட்சியத்தை இழக்கவும் கூடாது; எதேச்சதிகாரத்திற்குப் பலியாகிவிடவும் கூடாது. நாம் நமது பணிகளைத் தொடர்ந்து செய்துவர, புதிய அமைப்பு ஒன்றினை உருவாக்கவேண்டும். அதற்காகவே இன்று இங்கு நாம் அனைவரும் கூடியிருக்கிறோம்.

பெரியார் தலைமையின்கீழ் இயங்கி வரும் திராவிடர் கழகத்தைக் கைப்பற்றுவது என்பதும், அதன் புதிய தலைமையின்கீழ் நமது பணிகளை நடத்துவது என்பதும்

நம்மால் மேற்கொள்ளக்கூடிய செயல்களே ஆகும். இதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்கான போதுமான வலிவும், தேவையான வசதியும், மறுக்கமுடியாத நியாயமும் நம்மிடம் இருக்கவே செய்கின்றன. என்றாலும் இவ்வழியில் நாம் செல்வது, நாட்டிலே சண்டை சச்சரவுகள் மூளவும், பாசிசத்திற்கும், பழமைக்கும் இடம் ஏற்படவும், கழகம் சிதைந்து போகவும் துணை போவதாக ஆகிவிடும்.

கழகத்தைக் கைப்பற்ற நாம் முயன்றாலும், அது அந்த நடவடிக்கையுடன் நின்றுவிடாது; பகை உணர்ச்சி பெருமளவுக்கு வளர்ந்த வண்ணம் இருக்கும். முறைப்படி நாம் கழகத்தைக் கைப்பற்றினாலும், பெரியார் அந்த முறைக்குக் கட்டுப்படப் போவதில்லை. அவரைக் கட்டுப்படுத்தக்கூடிய விதத்தில் கழகத்தில் சட்ட திட்டம் எதுவும் இல்லை. எனவேதான், கழகத்தைக் கைப்பற்றுவது என்பது என்றும் தீராத போராகவே இருந்து விடும். நாம் மிகப் பலராகவும் எதிரிகள் மிகச் சிலராகவும் இருந்த போதிலும், போரிடுவதன் மூலம் இறுதியாகக் காணப் போகும் உருவான பலன் எதுவும் இருக்க முடியாது. இன்னல், இழப்பு, சண்டை, சச்சரவு, பழி, பகை என்பவைதாம் மிஞ்சும்.

கூட்டு முயற்சிக்கான கொள்கையும், குறிக்கோளும், வசதியும், வாய்ப்பும், உழைப்பும், ஊக்கமும், எழுச்சியும் நம்மிடம் இருக்கின்றன, ஏராளமான அளவில் வளரக்கூடிய விதத்தில்!

பெரியாருடைய தலைமையையும், அவரிடம் இருக்கும் திராவிடர் கழகம் என்ற அமைப்பையும் விட்டுவிட்டு, நாம் தனித்து நின்று, **'திராவிட முன்னேற்றக் கழகம்'** என்ற புதிய அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு, இயக்கப் பணி ஆற்ற முற்படுவதுதான், நல்ல வழி என்பது என் கருத்து.

நாட்டுக்குத் தேவையான நல்ல கருத்துக்களைப் பரப்பிடவும், சீரிய திட்டங்களை நிறைவேற்றிடவும், திராவிடச் சமுதாயத்தைச் சீராக்கவும், திராவிட நாட்டை மேம்பாடுறச் செய்யவும், **'திராவிட முன்னேற்றக் கழகம்'** என்ற புதிய அமைப்பு பெரிதும் பயன்படும் என்ற அவாவினாலும், நம்பிக்கையாலுமே, இந்தக் கருத்தை நான் உங்களுடைய மேலான முடிவுக்கு வைக்கிறேன்.

கழகத்தின் எதிர்கால நிலைமையையும், நாட்டின் நிலைமையையும் சீர்தூக்கிப் பார்த்து நல்ல முடிவு செய்யும்படி உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

*அறிஞர் அண்ணாவின் இந்த அறிக்கையை நான் படித்து முடித்தவுடன் அறிக்கையை அப்படியே முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்ளுகின்ற ஒருமித்த உணர்வோடு, கூடியிருந்த அனைவரும் கையொலி எழுப்பி, வாழ்த்தொலி முழங்கி ஏற்றுக் கொண்டனர்.*

## தி.மு. கழகத்திற்கான அமைப்புமுறை வகுத்தல்

*'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற புதிய அரசியல் அமைப்பு தோற்றம் பெற்றதற்குப் பிறகு, அதற்கான அமைப்பு முறையையும், செயலாற்றல் முறையையும் வகுக்க, 18.9.49 அன்று காலை, 10 மணி அளவில், சென்னை பவளக் காரத்தெரு 7ஆம் எண் இல்லத்தில், அறிஞர் அண்ணா, நான், கே.கே. நீலமேகம், ஏ. சித்தையன், என்.வி. நடராசன், கே.கோவிந்தசாமி, காஞ்சி மணிமொழியார், கே.ஏ. மதியழகன், கே.வி.கே. சாமி, மதுரை முத்து, ஜி. பராங்குசம் ஆகியோர் கூடிக் கலந்துபேசி, சில முடிவுகளை மேற் கொண்டோம்.*

## பொதுக்குழு

*கழகத்தின் முக்கிய முன்னணியினராக விளங்கிய 110 பேர்கள் கொண்டதாகப் பொதுக்குழு ஒன்று உருவாக்கப் பட்டது.*

கழகக்கொடி

நீண்ட சதுர வடிவத்தில், மேல் சரிபாதி கறுப்பு நிற மாகவும், கீழ் சரிபாதி சிவப்பு நிறமாகவும் அமைந்த கொடியே தி.மு. கழகக் கொடியாக இருக்கும் என்று தீர்மானிக்கப்பட்டது.

பொதுச் செயலாளர்

கழகத்திற்குத் தலைவர் பதவி என்ற முறையில் ஒரு பதவி தேவையில்லை என்றும், முழு உரிமையும், அதிகாரமும் பெற்ற பொதுச் செயலாளர் ஒருவர் மட்டுமே இருக்க வேண்டும் என்றும், அப்படிப்பட்ட பொதுச் செயலாளராக அறிஞர் அண்ணா அவர்கள் இருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

கொள்கை பரப்புச் செயலாளர்

கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராக இரா. நெடுஞ்செழியன் (நான்) இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. கொள்கை பரப்புச் செயலாளரின்கீழ் பணியாற்ற 30 பேர்கள் கொண்ட கொள்கைபரப்புக் குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அமைப்புச் செயலாளர்

கழக அமைப்புச் செயலாளராக என்.வி. நடராசன் இருக்க வேண்டும் என்றும், 12 பேர்கள் கொண்ட அமைப்புக் குழு ஒன்று பணியாற்ற வேண்டும் என்றும் முடிவு செய்யப் பட்டது.

சட்டதிட்டச் செயலாளர்

கழகத்திற்கான சட்ட திட்ட விதிமுறைகளை வகுக்கச் சட்டதிட்டச் செயலாளராக கே.ஏ. மதியழகன் இருக்க

வேண்டும் என்றும், 6 பேர்கள் கொண்ட சட்டதிட்டக்குழு ஒன்று செயலாற்ற வேண்டும் என்றும் முடிவு செய்யப் பட்டது.

நிதிச் செயலாளர்

கழக நிதிச் செயலாளராக காஞ்சி மணிமொழியார் இருக்கவேண்டும் என்றும், 18 பேர்கள் கொண்ட நிதிக்குழு ஒன்று பணியாற்ற வேண்டும் என்றும் முடிவு செய்யப் பட்டது.

தலைமை நிலையச் செயலாளர்

கழகத் தலைமை நிலையச் செயலாளராக கே. கோவிந்தசாமி இருக்க வேண்டும் என்றும், 5 பேர்கள் கொண்ட தலைமை நிலையக் குழு ஒன்று செயலாற்றவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

தி.மு. கழகத்தின் ஆதரவு நாளேடாக **'மாலைமணி'** பணியாற்றி வந்தது. கழகத்தைப் பற்றிய செய்திகள், நிகழ்ச்சி கள், நடவடிக்கைகள், கருத்துக்கள் போன்றவை அந்த நாளேட்டில்தான் அன்றாடம் வெளிவந்து கொண்டிருந்தன.

தலைமைக் கழகமும், அதன் குழுக்களும் சென்னை பவளக்காரத் தெருவில் 7ஆம் எண்ணுள்ள இல்லத்தில் இருந்த தலைமை அலுவலகத்திலிருந்து செயலாற்றி வந்தன. தி.மு. கழகத்தின் உறுப்பினர்களாகவும், ஆதரவாளர்களாக வும் இருந்து பணியாற்ற பல்லாயிரக்கணக்கானவர்கள் முன் வந்தார்கள். கழகம் நாளுக்கு நாள் சிறப்பாகவும், செம்மை யாகவும் வளர்ந்து வந்தது. அறிஞர் அண்ணாவும், நானும், பிற கழக நண்பர்களும் அன்றாடம் தலைமை நிலையத்திற்கு வந்து, கழகப் பணிகளைச் சிறப்பாகவும், செம்மையாகவும் ஆற்றி வந்தோம்.

## தி.மு. கழகத் தொடக்க விழாப் பொதுக்கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்க விழாப் பொதுக்கூட்டம், 16.10.49 அன்று மாலை, சென்னை இராயபுரம் இராபின்சன் பூங்காவிற்கு அருகிலுள்ள கல்லறை மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

கூட்டத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். அகன்ற, உயரமான மேடை, எழிலுடன் அமைக்கப்பட்டிருந்தது. கழகத்தின் புதிய இருவண்ணக் கொடிகள், ஓங்கி உயர்ந்த மரங்களில் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தன.

கூட்டம் மாலை 5 மணி அளவில் தொடங்கப்பட்டது. அறிஞர் அண்ணாவும், கழகத்தின் முன்னணித் தலைவர்களும் மேடையில் அமர்ந்திருந்தனர். கூட்டத்திற்குப் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் தலைமை தாங்கினார். குடந்தை கோவிந்தராசன் புரட்சிக்கவிஞரின் உணர்ச்சி ஊட்டும் பாடல்களை மிக இனிமையாகப் பாடினார்.

தலைவர் முன்னுரைக்குப் பிறகு, நான், கே.கே. நீலமேகம், என்.வி. நடராசன், ஈ.வெ.கி. சம்பத், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, மதுரை முத்து, ஏ. சித்தையன், சத்தியவாணிமுத்து ஆகியோர் உரையாற்றினோம். இறுதியாக அறிஞர் அண்ணா அவர்கள் பேருரை ஆற்ற எழுந்தபோது, பெருமழை பெய்யத் தொடங்கியது. என்றாலும், அறிஞர் அண்ணாவின் அருமையான உரையைத் திரளாகக் கூடியிருந்த மக்கள், கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல், நனைந்துகொண்டே, ஒன்றரை மணி நேரத்திற்கு மேலாக ஆடாமல், அசையாமல் நின்றுகொண்டு கேட்டார்கள்.

*அறிஞர் அண்ணா அவர்கள் மழையில் நனைந்து கொண்டே பேசும்போது, குறிப்பிட்ட கருத்துக்களின் சுருக்கம் வருமாறு:*

''பலநாட்களுக்குப் பின்னர் நாம் ஒன்று திரண்டு இங்குக் கூடியிருக்கிறோம். இந்தக் கூட்டம் நமது நோக்கத்தை நாட்டுக்குத் தெரிவிக்கக்கூடிய கூட்டமாகும். மழையோ பலமாகப் பெய்கிறது. வந்திருக்கும் கூட்டத்தினரோ ஏராளம். மழையில் நின்று கொண்டே நீங்கள் எனது பேச்சைக் கேட்கிறீர்கள். உங்களுக்குச் சங்கடந்தான். ஆனாலும் சமாளிக்கிறீர்கள்.இதுபோன்ற நிலையில்தான், நாட்டிலே சில காலம் கழகத்தின் வேலைகள் செயலற்றுக் கிடந்தன. சங்கடமான நிலை ஏற்பட்டது; சரி செய்தோம். திராவிட முன்னேற்றக் கழகம் என்ற புதிய அமைப்புத் தோன்றி யுள்ளது. புதிய அமைப்பு ஏன் தோன்றியது? எதற்காகத் தோன்றியது? என்பவைகளை விளக்கும் கூட்டமே இது.

புதிய அமைப்புத் தோன்றுவதற்குக் காரணம் என்ன? என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். தலைவர் கொள்கையினின்றும், பகுத்தறிவு நெறியிலிருந்தும் தவறினார். அவர் செய்தது தவறு என்று நானும், என்னுடன் பணியாற்றும் நண்பர்களும் மனதாரக் கருதினோம். பொருந்தாத் திருமணம் என்ற பெயரால் கழகத்திற்கு ஒரு ஏற்பாடு செய்வதைக்கூடாது என்று கூறினோம். எங்களுடைய கருத்தைத் தெரிவித்தோம்; வேதனையை வெளிப்படுத்தினோம்.

பெரியாருடனும், திராவிடர் கழகத்தாருடனும் பேதம், பிளவு, மனத்தாங்கல், சண்டை, சச்சரவு, வம்பு, வழக்கு கூடாது என்பது எங்களின் கொள்கை. அதன் விளைவுதான் 'திராவிட முன்னேற்றக் கழகத்தின்' தோற்றமாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகத்திற்குப் போட்டியாக ஏற்பட்ட கழகம் அல்ல. திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகள் மீதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. அடிப்படைக் கொள்கைகள், குறிக்கோள்கள், கோட்பாடுகள், கருத்துக்கள் ஆகியவற்றில் மாறுபாடோ, வேறுபாடோ, முரண்பாடோ, மோதுதலோ இல்லை. சமுதாயத் துறையிலே சமத்துவத்திற்கான சீர்திருத்தம், பொருளாதாரத் துறையிலே சமதருமத்திற்கான மேம்பாடு, அரசியலில் முழு விடுதலைக்கான சனநாயக நெறிமுறை ஆகிய கொள்கைகள்தாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகளாகும்.

திராவிடர் கழகம் எதற்காகப் பாடுபட்டு வந்ததோ, எவருடைய நன்மைக்காக - எந்தச் சமுதாயத்தின் ஏற்றத் துக்காக-எந்த ஏழை எளியவர்களை வாழவைக்கப் பணிபுரிந்து வந்ததோ அவற்றையெல்லாம் முரண்பாடின்றி முறைப்படி நிறைவேற்ற திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடும்.

1935ஆம் ஆண்டிலிருந்து நான் அறிந்த தலைவரும், எனக்குத்தெரிந்த தலைவரும் பெரியார் ஒருவரேதான். என் வாழ்நாளில் நான் கண்ட தலைவரும், நான் கொண்ட தலைவரும் ஒருவர்தான் - அவர்தான் பெரியார். அந்தக் காரணம் பற்றித்தான், திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தலைவர் என்று ஒருவரை ஏற்படுத்தவில்லை.

நான் மிகமிகத்தெளிவாகவே கூறிவிடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம், எந்தவிதத்திலும் திராவிடர் கழகத்திற்கு எதிரானது அல்ல; எதிர்நோக்கம் கொண்டது மல்ல. கொள்கை ஒன்றே; கோட்பாடும் ஒன்றே. அங்கிருந்தவர் களில் பெரும்பாலோர்தான் இங்கு வந்திருக்கிறோம். குடும்பத் தலைவரின் போக்குப் பிடிக்காததால், எங்கள்

போக்கில், எங்களுக்கு என்று, தனிப்பண்ணை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

பெரியாரோடு நான் சிலவற்றில் மாறுபாடான கருத்தினைக் கொண்டிருந்தாலும், நீண்ட நெடுநாட்களாகவே சில கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தன என்றாலும், அவைகளை இதுவரையில் வெளிப்படுத்திக் காட்டிக் கொள்ளவில்லை. முடிந்த அளவு நான் அவரோடு ஒத்துழைத்தே வந்திருக் கிறேன். முடியாத நேரத்தில், மிகமிகக் கண்ணியமான முறையில் ஒதுங்கியே இருந்திருக்கிறேன்.

பெரியாரின் போக்கு கண்டு இனி அடங்கியோ, ஒதுங்கியோ இருக்க இயலாது என்ற நிலை ஏற்பட்ட பிறகுதான், தனி அமைப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவிக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. திராவிடர் கழகம் ஆகட்டும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகட்டும், இரண்டும், இரண்டு படைவரிசைகள் என்றாலும், இரண்டிற்கும் கொள்கை ஒன்றுதான்; கோட்பாடும் ஒன்றுதான். இரண்டு பூங்காக்களிலும் பூக்கும் பூக்கள் - காய்கள் கனிகள் திராவிடத்தின் ஒட்டுமொத்த எழுச்சியையும், மலர்ச்சியையுந்தான் குறிக்கும். இரண்டு பூங்காக்களும் தேவை. ஒன்றோடொன்று பகைக்கத் தேவையில்லை; அதற்கான அவசியமும் இல்லை. எந்தப் பூங்காவில் பூக்கள் பூத்தாலும், இறுதியாக அவை மாலை ஆகப்போவது திராவிடத்துக்குத்தான் என்ற நல்ல எண்ணம் எல்லோர்க்கும் ஏற்படவேண்டும். அதை விட்டுவிட்டு, நள்ளிரவிலே வேலி தாண்டிப் பாத்தியை அழிக்கும் வேலி தாண்டிகள், எக்காரணங்கொண்டும் ஏற்படக்கூடாது என்பதுதான் என் நோக்கமாகும். இரண்டு கழகங்களும் இரட்டைக்குழல் துப்பாக்கியைப் போல் இருந்து பணியாற்ற வேண்டும்.

மழை பெய்து நின்று. கறுத்த வானம் இப்பொழுது வெளுத்திருக்கிறது. அதுபோல நமது புதுக்கழகம் புதிய பொலிவோடு, புதிய வலிவோடு, முன்னேற்ற வேகத்துடன் முரண்பாடு - மோதல் இன்றிப் பணியாற்றப் புறப்பட வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு ஒட்டு மாஞ்செடிதான். மண்வளம் ஏராளம். அதே நிலம். நீர்பாய்ச்ச, பதப்படுத்த, பாத்திகட்ட முன்னிற்போர் பலர். ஒட்டு மாஞ்செடி பூத்துக் காய்த்துக் கனிகுலுங்கும் நாள் வந்தே தீரும். ஒட்டு மாஞ்செடியானது, மாமரத்துக்கு எந்த வகையிலும் பகையானதல்ல. அதுபோல, திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடர் கழகத்திற்கு முரணானது அல்ல. ஒத்த கருத்துக் கொண்டதுதான் இந்த ஒட்டுமாஞ்செடி.

நமது கையிலே காசில்லை; அதே நேரத்தில் நமது மனத்தில் மாசுமில்லை. எனவே நமது தூய கொள்கைகள் வளரும், வெற்றிபெறும் என்ற உறுதிப்பாடு எனக்கு உண்டு.

முதல் வேலையாகப் பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகிய வற்றை அடக்குமுறை கொண்டு அடக்கும் அரசினரின் போக்கை எதிர்த்துப் போரிடத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆயத்தமாக வேண்டும்.

நமது இயக்க நாடகங்கள் அரசினரால் தடை செய்யப் பட்டிருக்கின்றன. தடை செய்யப்பட்டுள்ள நாடகங்களில் முதலாவது, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் இயற்றிய 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்பதாகும். நமது முதல் வேலை, இந்த நாடகத்தைத் தடையை மீறி ஆங்காங்குப் பொதுமக்கள்முன் நடித்துக் காட்டும் திட்டந்தான்.

பெரியாருக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். பெரியாரே! நீங்கள் அளித்த பயிற்சி, பக்குவம் பெற்ற நாங்கள், புதிய கழகத்தைச் சிறப்பாகவும், செம்மையாகவும் நடத்திச் செல்வோம்! கொள்கைகளைத் தொடர்ந்து பரப்புவோம்! அரசினரின் அடக்குமுறைகளை எதிர்த்துச் சிறைக்குச் செல்லுவோம்! வெற்றிபெறுவோம்!''

*திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டு, ஒரு திங்களுக்குள் சிற்றூர், பேரூர், நகரங்கள் ஆகியவற்றில் பல நூற்றுக்கணக்கான கிளைகள் தோன்றலாயின. மாவட்டம் தோறும் மாவட்டக் கிளைக்கழகங்கள் அமைந்தன. கிளைக் கழகங்களின் தொடக்க விழாப் பொதுக்கூட்டங்களில், அறிஞர் அண்ணாவும், நானும், கழகத்தின் முக்கியச் சொற்பொழிவாளர்களும் ஆங்காங்குச் சென்று கலந்து கொண்டோம். கழகத்திற்கான உறுப்பினர் சேர்க்கும் பணி எல்லா ஊர்களிலும், நகரங்களிலும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. தி.மு.கழகம் வளரக்கூடிய ஒரு வலிவுபொருந்திய அரசியல் அமைப்பாகக் காட்சி அளிக்கத் தொடங்கியது.*

## தி.மு.கழகத்தின் முதல் பொதுக்குழுக்கூட்டம்

*1949 டிசம்பர் 31ஆம் நாள் தி.மு.கழகத்தின் முதல் பொதுக்குழுக் கூட்டம் திருச்சியில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணாவும், தலைமைக்கழகச் செயலாளர்களான நான், என்.வி. நடராசன், கே.ஏ. மதியழகன், காஞ்சி மணிமொழியார், கே. கோவிந்தசாமி ஆகியோரும், மாவட்டக்கழக அமைப்பாளர் களும், பிற பொதுக்குழு உறுப்பினர்களும், சிறப்பு அழைப்பாளர்களும் கலந்துகொண்டோம்.*

*பொதுக்குழுக் கூட்டத்திற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார். பொதுக்குழுவில், உறுப்பினர்*

சேர்த்தல், ஆங்காங்குக் கிளைக்கழகங்களை அமைத்தல், பொதுக்கூட்டங்களை நடத்துதல், மாவட்டந்தோறும் மாவட்டக்கழக மாநாடுகளை நடத்துதல், அடக்குமுறைச் சட்டங்களை எதிர்த்துப் போராடுதல் போன்ற பொருள்கள் பற்றி விவாதிக்கப்பட்டுத் தீர்மானங்கள் பல நிறை வேற்றப்பட்டன.

## திருச்சி மாவட்ட தி.மு.கழக முதல் மாநாடு

1950 சனவரி 1ஆம் நாள், திருச்சி மாவட்டக் கழக முதல் மாநாடு, திருச்சி நகரில் நடைபெற்றது. மாநாட்டில் கழகத் தோழர்களும், பொதுமக்களும் பல்லாயிரக் கணக்கில் குழுமியிருந்தனர்.

நகைச்சுவை மன்னர் என்.எஸ் கிருட்டிணன் இன்னிசைக் கலை நிகழ்ச்சியோடு மாநாடு தொடங்கப்பட்டது. கோவில்பட்டி ஈ.வே.ஆ. வள்ளிமுத்து மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். பெத்தாம்பாளையம் பழனிச்சாமி மாநாட்டைத் தொடங்கி வைத்தார். சங்கரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அறிஞர் அண்ணா, நான், என். வி நடராசன், கே. ஏ. மதியழகன், சி.பி. சிற்றரசு, ஈ.வெ.கி. சம்பத், காஞ்சி மணிமொழியார் போன்றோர். சிறப்புச் சொற்பொழி வாற்றினோம்.

இரவு, அறிஞர் அண்ணா, நடிப்பிசைப்புலவர் கே.ஆர் இராமசாமி ஆகியோர் நடித்த 'சந்திரமோகன்' நாடகம் சிறப்பாக நடந்தேறியது.

1950 சனவரி 26ஆம் நாள் ஏற்படப்போகும் இந்தியக் குடியரசு அமைப்பால் திராவிடர்க்கு உரிய நன்மை ஏற்பட வில்லை என்பதை வலியுறுத்தும் தீர்மானமும், தொழிற் சங்க உரிமைகளை மாநில அரசு பறிக்கக்கூடாது என்று

கூறும் தீர்மானமும், இலங்கைத் தமிழரின் நலன்கள் குறித்த அறக்கிளர்ச்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் தீர்மானமும், இந்தித் திணிப்பைக்கண்டிக்கும் தீர்மானமும், மேலும் 18 தீர்மானங்களும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

## தி.மு.கழகத்தின் சார்பில் பொங்கல் விழா

தமிழர்களின் அறுவடைத் திருவிழாவாகவும், உழவர் களின் பெருவிழாவாகவும், தமிழரின் புத்தாண்டு புதுவிழா வாகவும், தமிழகத்தின் மகிழ்ச்சிப் பெருவிழாவாகவும் அமைந்த பொங்கல் விழாவைத் தி.மு.கழகக் கிளைக் கழகங்களெல்லாம் 14.1.50-ஆம் நாளன்று சிறப்பான முறையில் கொண்டாட வேண்டும் என்று, நான் கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் என்ற முறையில் வேண்டுகோள் விடுத்தேன். அந்த நல்ல நாளில் எங்கணும் கழகக் கொடியினை ஏற்றுதல், ஊர்வலம் நடத்துதல், கூட்டங்கள் கூட்டுதல், பரிசுகள் வழங்குதல், கலை நிகழ்ச்சிகளை மேற்கொள்ளுதல், ஏழை எளியவர்களுக்குப் பொங்கல் உணவு வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகள் நடந்தேறின.

அறிஞர் அண்ணாவும், நானும், பிற கழக முன்னணி யினரும் சென்னையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்துகொண்டோம். பல இடங்களில் இலக்கியச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

## சென்னை மாவட்ட தி.மு கழக மாநாடு

1950 சனவரி 21, 22 ஆகிய நாட்களில் சென்னை மாவட்ட தி.மு கழக மாநாடு அஞ்சாநெஞ்சன் அழகிரி திடலில் (சால்ட் கொட்டகைக்கு அருகில்) சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.

மாநாட்டிற்கு, சேலம் சித்தையன் தலைமை தாங்கினார். மதுரை முத்து மாநாட்டைத் தொடங்கி வைத்தார். டி.எம் பார்த்தசாரதி வரவேற்புரை நிகழ்த்தினார்.

*அறிஞர் அண்ணா, நான், சி.பி சிற்றரசு காஞ்சி கலியாண சுந்தரம், என்.வி நடராசன், கே.ஏ. மதியழகன். ஈ.வெ.கி. சம்பத், கே.கே. நீலமேகம், ஜி.பி. சோமசுந்தரம், ஈ.வே.ஆ. வள்ளிமுத்து போன்றோர் சிறப்புரை ஆற்றினோம். மாநாட்டில் 19 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

இரண்டு நாட்களிலும் 'வழக்கு வாபஸ்', 'கல்சுமந்த கசடர்' 'சந்திரமோகன்' ஆகிய நாடகங்கள் நடைபெற்றன. நான் 'கல்சுமந்த கசடர்' நாடகத்தில் சேரன் செங்குட்டுவன் வேடத்திலும், அறிஞர் அண்ணா 'சந்திரமோகன்' நாடகத்தில் 'காகப்பட்டர்' வேடத்திலும் நடித்தோம்.

### எனது திருமணமும் இல்லற வாழ்வும்

*எனது திருமணம், 1950 மார்ச்சுத் திங்கள் 26ஆம் நாள் சேலத்தில் மிக எளிமையாகவும், சிறப்பாகவும், செம்மை யாகவும் பதிவுத் திருமணமாக நடைபெற்றது.*

*நான் எம்.பி.பி.எஸ், டி.எம்.சி.எச். பட்டங்கள் பெற்ற டாக்டர் விசாலாட்சி அவர்களை என் இல்வாழ்க்கைத் துணைவியராக ஏற்றுக்கொண்டேன்.*

*எனக்கு வாய்க்கப்பெறும் துணைவியார் எனது அரசியல் வாழ்விற்கும், சமுதாயத்தொண்டிற்கும், பொதுத் தொண்டிற்கும் இடையூறாக இல்லாத வகையில் அமைய வேண்டும என்று விரும்பியிருந்தேன். நான் அரசியல் - சமுதாய அறப்போராட்டங்களில் ஈடுபட்டுப் பல ஆண்டுகள் சிறையில் வாழவேண்டிய நிலைமைகள் ஏற்பட்டாலும், யாருடைய தயவையும் எதிர்பார்க்காமல் தம் காலில் நிற்கக்கூடிய தகுதியும், திறமையும், சூழ்நிலையும் அமைந்த ஒருவர் என் வாழ்க்கைத் துணைவியராக வரவேண்டும் என்று விரும்பினேன்.*

என்னுடைய எதிர்பார்ப்பையும், விருப்பத்தையும் நிறை வேற்றக்கூடிய தன்மைகள் பொருந்திய தகுதி வாய்ந்த, ஓய்வு பெற்ற பொறியாளர் சேலம் இராமலிங்கனார் குடும்பத்தை, நண்பர் எஸ்.வி. லிங்கமும், நண்பர் வை. திருநாவுக்கரசுவும் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள். அந்தக் குடும்பம் சிறந்த பண்பாடும், பெருந்தன்மையும், குடிச்சிறப்பும், நாணயமும், நேர்மையும், பாங்கும், பக்குவமும் கொண்ட ஒரு நடுத்தரக் குடும்பம் என்பதைத் தெரிந்துகொண்டேன்.

இராமலிங்கனார் அவர்கள் நேர்மையும், நாணயமும், உழைப்பும், ஊக்கமும், கண்டிப்பும், கடமையுணர்வும் கொண்ட ஒரு அரசுப் பொறியாளராக இருந்து பணியாற்றி ஓய்வு பெற்றவர். அவருடைய துணைவியார் மாணிக்கத் தம்மாள் அவர்கள், சேலம்கன்னங் குறிச்சி சமீன்தாரரும், வழக்கறிஞருமான கனக சபை அவர்களின் மகளாவார். குடும்பத்தைக் கட்டுப்கோப்பாகவும், இனிமையாகவும், சிறப்பாகவும், மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய வகையிலும், சிறந்த பண்பாட்டோடும், பாங்கோடும், நடத்திவந்த பெருமை அவருக்கு உண்டு. அவர்களுக்கு டாக்டர் விசாலாட்சி, ஞானசுந்தரி என்ற இரண்டு மகள்களும், நடராசன் என்ற ஒரு மகனும் மக்களாக இருந்தார்கள்.

அவர்களின் மூத்த மகள் டாக்டர் விசாலாட்சி அவர் களை எனக்கு அவரது சேலம் இல்லத்தில் அறிமுகப் படுத்தினார்கள். அப்பொழுது அவர்கள் சேலம் மாவட்டத் தில் மாவட்ட நல்வாழ்வுத்துறை அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். இருவரும் ஒருவருக்கொருவர் சிறிது நேரம் கருத்துக் களைப் பரிமாறிக்கொண்டோம். ஒருவர் உள்ளத்தை மற்றவர் புரிந்துகொண்டோம்.

அவர்களது குடும்பத்தைப்போல எனது குடும்பமும் ஒரு சாதாரண நடுத்தரக் குடும்பமாகும். தாய் தந்தையார், தம்பி ஆகியோரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருந்ததை நான் உணர்ந்தேன். அதேபோன்று, என் தாயார், தம்பிகள், தங்கைகள் ஆகியோரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எனக்கு இருந்தது. திருமணம் ஆனபிறகும் அவரவர் குடும்பங்களைத் தனித்தனியாக அவரவரும் பொறுப்பேற்று முடிந்த அளவுக்குப் காப்பாற்றிக் கொள்ளலாம் என்ற முடிவில் இசைந்திருந்தோம். சூழ்நிலைகள் சரிப்பட்டு வரும்போது, தனிக் குடித்தனம் நடத்தலாம் என்றும், அதுவரையில் இருவரும் அவரவர் குடும்பத்தோடு ஒன்றி இருந்து குடும்பங்களைக் கவனித்து வரலாம் என்றும் முடிவு செய்து கொண்டோம்.

நான் அவர்களின் குடும்பத்தாரிடம் பேசும்போது, திருமணத்தை மிக எளியமுறையில் சிக்கனமாக, ஆடம்பரம் இல்லாத வகையில் நடத்தலாம் என்றும், பெண்வீட்டி லிருந்து எந்த வம்மை வரிசைகளோ, குடும்பவாழ்வுக்கான பாத்திர பண்டங்கள், நகைநட்டுக்கள், மரச்சாமான்கள் போன்றவையோ எனக்கு வேண்டாம் என்றும், அவற்றிற்காகப் பணத்தைச் செலவழிக்க வேண்டாம் என்றும் கூறிவிட்டேன். அதுபோலப் பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரிடமிருந்து எதையும் எதிர்பார்க்க வில்லை.

திருமணம் சேலத்தில் பெண்வீட்டில் நடைபெற்றது. பெண்வீட்டாரையும், எங்கள் வீட்டாரையும் சேர்ந்த மிக நெருங்கிய உற்றார் உறவினர்கள் மட்டும் திருமணத்திற்கு வருகை தந்திருந்தார்கள். நான் கழகத் தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் திருமண அழைப்பிதழை அனுப்ப வில்லை. மிகவும் நெருங்கிப் பழகியவர்கள் என்ற முறையில், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி,

ஈ.வெ.கி. சம்பத், ஏ.பி. சனார்த்தனம், அ. பொன்னம் பலனார், கே. ஆர். இராமசாமி, அ. சித்தையன் ஆகியோரை மட்டும் நேரில் கண்டு அழைத்தேன். அவர்கள் மட்டும் வருகை தந்திருந்தனர்.

எங்கள் திருமணம் மாவட்டப்பதிவாளர் முன்னி லையில் பதிவு செய்யப்பட்டது. நான் என்னுடைய பெயர் பொறித்த பதக்கத்தைக் கொண்ட தங்கச் சங்கிலியைப் பெண்ணின் கழுத்தில் சூட்டினேன். அவர்கள் தம் பெயர் பொறித்த தங்க மோதிரத்தை எனக்கு அணிவித்தார்கள். அந்த அளவிலேயே திருமணம் நிறைவுபெற்றது. திருமணத்தில் சடங்குகள் எதுவும் இல்லாமலும், வரவேற்புரை, தலைமை யுரை, வாழ்த்துரை, நன்றியுரை என்பவையும் இல்லாமலும், மிக எளிமையாக நடந்தேறியது. திருமணத்திற்கு வருகை தந்தவர்கள் ஒவ்வொருவராக வந்து எங்களை நேரில் வாழ்த்திவிட்டுச்சென்றார்கள். திருமணத்தையொட்டி, திருச்சி லோகநாதன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

திருமணம் முடிந்த மறுநாள், நானும் என் துணைவியார் டாக்டர் விசாலாட்சி அவர்களும், எடுத்துக்கொண்ட நிழற்படத்தை 'மாலைமணி' ஏட்டில் வெளியிட்டு, அதில் ''நான் 26.3.50. அன்று சேலத்தில் டாக்டர் விசாலாட்சி அவர்களை என் வாழ்க்கைத் துணைவியராக ஏற்றுக் கொண்டுள்ளேன் என்பதைக் கழகத் தோழர்கள், நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டிருந்தேன். நான் அழைப்பு அனுப்பாமலும், ஆடம்பரமில்லாமலும் திருமணம் செய்து கொண்டதைக் கண்டு பலரும் வியப்படைந்து, கடிதம் மூலமும், தந்தியின் மூலமும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்திருந்தனர்.

என் வாழ்நாள் முழுவதும் என்னுடைய வீட்டைக் கண்காணித்து வரும் முழுப்பொறுப்பையும் ஏற்று, இல்லறக் கடமைகள் அனைத்தையும் செவ்வனே செய்து முடிக்கும் பணியினை என் துணைவியார் சீராகவும், சிறப்பாகவும் நிறைவேற்றி வந்ததால், நான் வீட்டைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், நாட்டுப்பணி, அரசியல் பணி, சமுதாயப்பணி, இலக்கியப்பணி ஆகியவற்றில் முழுக்க முழுக்க ஈடுபட்டு மன அமைதியும், மனநிறைவும் பெற்று வாழ்ந்து வந்திருக்கிறேன்.

## இந்தியைக் கட்டாயப்பாடம் ஆக்குவதற்கு எதிர்ப்பு

*சென்னை மாநில அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்த மாதவமேனன், பள்ளிகளில், "ஒன்று முதல் ஆறாம் படிவம் வரையில் இந்தி கட்டாயப்பாடமாகப் பயிற்றுவிக்கப் படவேண்டும்" என்ற ஒரு அரசாணையை 2.5.1950 அன்று வெளியிட்டார்.*

*அந்த முடிவை எதிர்த்து மாநிலம் முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, மாபெரும் கிளர்ச்சிகள் நடைபெற்றன. உயர்நிலைப்பள்ளிகள் முன்பு மறியல் போராட்டங்கள் நடைபெற்றன. பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். கழகத்தொண்டர்களைத் தடியடி நடத்திக் காவல் துறையினர் விரட்டி அடித்தார்கள். பலர் படுகாயமுற்றனர். மறியலில் ஈடுபட்ட பல தொண்டர் களைக் காவல் துறையினர் நீண்ட தொலைவுக்குக் கடத்திச் சென்று, அங்கேயே விட்டுவிட்டு வந்தனர்.*

*அறிஞர் அண்ணாவும், நானும், பிற கழகப் பேச்சாளர் களும் பல ஊர்களுக்குச் சென்று, இந்தி எதிர்ப்புப் பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டோம். கழகத் தோழர்கள்,*

பொதுமக்கள் ஆகியோரின் மாபெரும் கிளர்ச்சிக்குப் பிறகு, அரசினர் 18.7.50. அன்று, ''இந்தி கட்டாயப்பாடம் அல்ல; அது விருப்பப்பாடமாகத்தான் வைக்கப்பட்டிருக்கிறது. விரும்புவோர் மட்டும் அந்த மொழியைப் பயிலலாம்'' என்று புதிய ஆணை ஒன்றினை வெளியிட்டனர். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இது ஒரு சிறப்பான வெற்றியாக அமைந்தது.

## இட ஒதுக்கீடு திட்டத்திற்கு எதிரான தீர்ப்பு

அரசு வேலை வாய்ப்பு- கல்வித்துறையில் இடம் ஆகியவற்றில், வகுப்பு வாரி அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்ற கொள்கையை நீதிக்கட்சியும் சுயமரியாதை இயக்கமும் தொடர்ந்து வற்புறுத்தி வந்தன. நீதிக் கட்சி சென்னை மாகாண ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற் கான முயற்சிகளை மேற்கொண்டு அதற்கு உரிய அரசாணைகளைப் பிறப்பித்தது.

அரசாணைகள் சரியான முறையில் பின்பற்றப்படாத நிலையில், 1928-இல் அமைச்சர் மூதறிஞர் முத்தையா அவர்கள் வகுப்புவாரி இட ஒதுக்கீடு செய்யும் சட்டத்தைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி அதனை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

இந்தச் சட்டத்தால், ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் அரசு வேலை களிலும் தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் நுழைவதற்கு ஓரளவுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. இந்தச் சட்டத்தின் மூலம் உயர் வகுப்பினராகிய பார்ப்பனர்க்கும் உரிய இடங்கள் ஒதுக்கப்பட்டன. மக்களில் 3 சதவீதத்தினராக இருந்த பார்ப்பனர்க்கு 17 சதவீத இடங்கள் இந்தச் சட்டத்தின் மூலம் கிடைக்க வழிவகுக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும்

எல்லாத் துறைகளிலும் பெரும்பாலான இடங்களைத் தாங்களே பெறவேண்டும் என்ற ஆதிக்க வெறிகொண்ட பார்ப்பனர்கள், இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல், அதற்குப் பலவகைகளிலும், தொடர்ந்து எதிர்ப்பினைத் தெரிவித்துவந்தனர். ஆனால் நாட்டில் ஏற்பட்டிருந்த விழிப்பான நிலைமை, அவர்களது முயற்சிக்கு இடங்கொடுக்கவில்லை.

பார்ப்பனர்களால் ஆதரிக்கப்பட்டு வந்த காங்கிரசுக் கட்சியின் ஆட்சி 1937 முதல் 1950 வரையில் இருந்துவந்த நிலையிலும், இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை அகற்றிவிட வேண்டும் என்ற முயற்சி நிறைவேறவில்லை.

1950-இல் இந்தியா குடியரசு நாடாக ஆகிப் புதிய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. அந்தச் சட்டத்தைத் துணையாகக்கொண்டு, 1950-இல் செண்பகம் துரைசாமி, சி. ஆர். சீனிவாசன் ஆகிய பார்ப்பன வகுப்பைச் சேர்ந்த இருவர் வகுப்பு வாரி இடஒதுக்கீட்டு முறையை எதிர்த்துச் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். அந்த வழக்கை ஆய்வு செய்த மூன்று நீதிபதிகள், இந்திய அரசமைப்புச்சட்டப்படி, வகுப்புவாரி இட ஒதுக்கீடு செய்வது என்பது செல்லாது என்று தீர்ப்பளித்தனர். உச்சநீதிமன்றத்தில் சென்னை மாநில அரசால் செய்யப்பட்ட மேல் முறையீடு தள்ளுபடி செய்யப் பட்டது. தமிழகத்தில் வாழ்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் வாழ்வு அளித்து, சமத்துவ நிலையை உருவாக்கப் பயன்பட்டு வந்த வகுப்புவாரி இட ஒதுக்கீட்டு முறை செல்லாது என்ற தீர்ப்பு வந்தவுடன் அறிஞர் அண்ணாவும், பெரியாரும் அந்தத் தீர்ப்பை எதிர்த்துக் கடுமையான முறையில் அறிக்கைகளை வெளியிட்டுப்

போராடத் தலைப்பட்டனர். திராவிடர் கழகத்தின் சார்பாக வும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் நாடெங்கும் தனித்தனியாகக் கிளர்ச்சிகள் மூண்டன. பெற்றோர்களும், மாணவர்களும் ஆங்காங்கு நடைபெற்ற கிளர்ச்சிகளுக்குப் பேராதரவு தந்தனர்.

அப்பொழுது தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இருந்த காமராசர் அவர்களும், அவரைச் சார்ந்த பார்ப் பனரல்லாத தலைவர்களும், பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் கொண்டிருந்த உணர்வுக்கு உடன்பாடாக இருந்து வந்தனர்.

காமாராசர் அவர்கள் இட ஒதுக்கீட்டு முறைக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அரசு அமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரத் தம் செல்வாக்கைப் பயன்படுத்தி, இந்தியப் பிரதமர் பண்டித நேருவை அணுகும்படி, அறிஞர் அண்ணாவும், பெரியாரும் காமராசரைக் கேட்டுக் கொண்டனர்.

நாடெங்கும் நடைபெற்ற கிளர்ச்சிகளை ஒட்டி, நான் சேலத்தில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டம், கண்டன ஊர்வலம், கண்டன மறியல் ஆகியவற்றிற்குத் தலைமை தாங்கி அவற்றை நடத்தினேன். நான் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டு, சேலம் சிறையில் 15 நாட்களுக்கு அடைக்கப்பட்டேன். தமிழ்நாட்டில் கொதித் தெழுந்த கிளர்ச்சிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த பண்டித நேரு அவர்கள் அரசமைப்புச் சட்டத்தின் 15ஆவது பிரிவில் நான்காவது உட்பிரிவு ஒன்றைச் சேர்த்து இனவாரி ஒதுக்கீட்டு முறைக்கு வழி ஏற்படுத்த இசைவு தெரிவித்தார். இந்திய அரசமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தம் அந்த வகையில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. சாதிகள்-மதங்கள் என்ற அடிப்படையில் இல்லாமல், பிற்படுத்தப்

பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர் என்ற அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்து கொள்ள, அந்தத் திருத்தம் வழிவகை செய்து கொடுத்தது.

அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டு, இடஒதுக்கீட்டுக்கான நீதி நிலைநாட்டப்பட்டதைக்கண்டு, தமிழ்ப் பெருங் குடிமக்கள் அனைவரும் பூரிப்பும், பெருமையும் கொண்டனர்.

நானும், கழகச் சொற்பொழிவாளர்களும் ஆங்காங்கு நடைபெற்ற வெற்றிவிழாப் பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டோம்.

## தி.மு.கழகத்திற்கான தலைமை நிலையம்

தி.மு.கழகத்திற்கான தலைமை நிலையம், தனிக் கட்டடம் ஒன்றில் அமையவேண்டும் என்ற கருத்தை, அறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள். வசதியான கட்டடம் ஒன்றை விலைக்கு வாங்கக் கழகத்தினிடம் போதுமான நிதி இல்லாத நிலையில், வாடகைக் கட்டடம் ஒன்றை அமைக்க நானும், என் வி. நடராசனும், கே. கோவிந்தசாமியும், சி. கணேசனும் முயற்சி எடுத்தோம்.

சென்னை, தங்க சாலைத் தெரு, 202 ஆம் எண்ணுள்ள வீடு ஒன்று, வசதியாக இருப்பதைப் பார்த்து அதனை வாடகைக்கு எடுத்தோம்.

1950 ஆகஸ்டு 27ஆம் நாள் முதல், திமு.கழகத்தின் தலைமை நிலையப்பணிகள் அந்தக் கட்டடத்தில்தான் நடைபெற்றன. அறிஞர் அண்ணா அவர்களும், நானும், மற்றத் தலைமைக்கழகப் பொறுப்பாளர்களும் நாள்தோறும், புதிய தலைமை நிலையத்திற்குச் சென்று, கலந்துரையாடல்களை நடத்துதல், கழகப் பணிகளை மேற்பார்வையிடுதல் போன்றவற்றைச் செய்துவந்தோம்.

## பேச்சுரிமை - எழுத்துரிமைப் போராட்டம்

*1950 அக்டோபர் 23ஆம் நாள், சென்னை தங்கசாலைத் தெருவிலிருந்த கழகத் தலைமை நிலையத்தில், தி.மு.கழகத்தின் தலைமைச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.*

*கூட்டத்திற்குப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார். நானும், ஏனைய தலைமைக்கழக நிருவாகிகளும், பிற செயற்குழு உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டோம்.*

*பேச்சுரிமை - எழுத்துரிமை ஆகியவற்றைப்பறிக்கும் முறையில், அடக்குமுறைச் சட்டங்களைக்கொண்டு வரும் அரசின் போக்கை எதிர்த்து அறப்போராட்ட மறியல்கள் நடத்துவது என்றும், தடைசெய்யப்பட்ட கழகத்தவரின் நாடகங்களைத் தடையை மீறி ஆங்காங்கு நடத்திக் காட்டுவது என்றும், தடைசெய்யப்பட்ட நூல்களிலுள்ள கருத்துக்களை அச்சடித்தோ, கையால் எழுதியோ துண்டு அறிக்கைகளாக வெளியிடுவது என்றும், மத்திய அரசின் அமைச்சர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தரும்போது அவர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டிக் கழகத்தின் வெறுப்பைத் தெரிவிப்பது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட . மேலும் கழக வளர்ச்சி, நாட்டின் நடப்பு பற்றிய தீர்மானங்கள் சிலவும் நிறைவேற்றப்பட்டன.*

*மத்திய அமைச்சர்களுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்ட வேண்டிய அவசியம் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் கூறும் போது,*

> "டில்லிப் பேரரசின் ஆதிக்கம் நம்மீது வளர்ந்து கொண்டே வருகிறது. இந்தியைக் கட்டாயமாக எல்லாத் துறைகளிலும் நுழைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வட நாட்டவரின் பொருளாதார ஆதிக்கத்திற்கு வலிவு

தரப்பட்டு வருகிறது. மாநிலத்தின் உரிமைகள் பல மத்திய அரசால் பறிக்கப்பட்டு வருகின்றன. தென்னாட்டு மக்கள் மத்திய அரசால் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப் படுகிறார்கள். இத்தகைய காரணங்களுக்காக நமது எதிர்ப்பையும், வெறுப்பையும் வெளிப்படுத்த நாம் கறுப்புக்கொடி காட்டுவது என்று தீர்மானித்திருக்கிறோம்.

டில்லி அமைச்சர்களை நாம் தனிப்பட்டமுறையில் வெறுக்கவில்லை; எதிர்க்கவும் இல்லை. அவர்கள் மத்திய அரசின் பிரதிநிதிகளாகப் பவனி வருகிறார்கள் என்பதற் காகத்தான், நாம் அவர்களுக்கு கறுப்புக் கொடி காட்டு கிறோம்.

கறுப்புக்கொடி காட்ட முற்படும் போது, அடக்கு முறைகளை அள்ளிவீசக்கூடும். அதற்கு நாம் அஞ்சவேண்டிய தில்லை. தடைகளை மீற வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படலாம்; அதற்குத் தயங்க வேண்டிய அவசியமில்லை. சட்டம் - ஒழுங்கு ஆகியவற்றிற்கு நாம் எப்பொழுதும் கட்டுப் பட்டவர்கள். நாம் ஒழுங்கு தவறாமல், கட்டுப்பாடு குலை யாமல் அமைதி கெடாமல் நமது கடமையை நிறைவேற்ற வேண்டும்."

*என்று குறிப்பிட்டார்.*

## கறுப்புக்கொடி காட்டும் ஆர்ப்பாட்டம்

*மத்திய அமைச்சராக இருந்த திவாகர், சென்னை தியாகராய நகரிலுள்ள இந்தி பிரச்சார சபையின் பட்ட மளிப்பு விழாவிற்கு வருகை தந்தபோது, அவருக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டும் ஆர்ப்பாட்டம் கழகத் தோழர் களால் நடத்தப்பட்டது. அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையின் கீழ், என்னைப்போன்றவர்கள் பலர் நூற்றுக் கணக்கில் கூடியிருந்து, கறுப்புக்கொடி காட்டினோம்.*

கறுப்புக்கொடி காட்டும் ஆர்ப்பாட்டம் அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடந்தேறியது.

திவாகர் மறுநாளன்று காஞ்சிபுரத்திற்குச் சென்றபோது, பெருந்திரளான கழகத்தோழர்கள் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

சென்னை, கோவை, திருச்சி, குளித்தலை, திண்டுக்கல், மதுரை ஆகிய நகரங்களுக்கு வருகை தந்த மத்திய அமைச்சர் அரிகிருட்டிண மெகதாப்புக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அந்த ஆர்ப் பாட்டங்களில் கலந்து கொண்டவர்கள் பலர் தடியடிக்கு ஆளானார்கள், பலர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

சென்னைக்கு வருகைதந்த மத்திய அமைச்சர் முன்ஷிக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான கழகத் தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்குகொண்டனர்.

சுமார் ஓராண்டுகாலம், தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்த மத்திய அமைச்சர்கள் அனைவருக்கும், அவர்கள் சென்ற ஊர்களிலெல்லாம் கறுப்புக் கொடி காட்டும் ஆர்ப்பாட்டங்கள் மிகச் சிறப்பாக நடந்தேறின. பல ஊர்களில் நடைபெற்ற கறுப்புக் கொடி காட்டும் ஆர்ப்பாட்டங்களில் நான் தலைமை தாங்கி நடத்தினேன். சில ஊர்களில் என்னை முன்கூட்டியே காவல் துறையினர் கைது செய்து ஒரிரு நாட்கள் காவலில் வைத்திருந்து விட்டு, மத்திய அமைச்சர்கள் திரும்பிச் சென்றவுடன் வெளியே விட்டு விட்டார்கள்.

## புரட்சிக்கவிஞரின் 60ஆம் ஆண்டு நிறைவு விழா

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் 60ஆம் ஆண்டு நிறைவுவிழா 1951 ஏப்பிரல் 29 ஆம் நாளன்று திருச்சி தேவர்

மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளைத் திருச்சி மாவட்ட தி.மு.கழகத்தினரும், நடிகர் யதார்த்தம் பொன்னுச்சாமியும் இணைந்து செய்தார்கள். விழாவில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கலந்து கொண்டார்கள். விழாக்குழுவினர் சார்பாக நான் புரட்சிக் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி ஒன்றினையும் அளித்தேன். மாவட்டக் கழகத்தின் சார்பாக அன்பில் தருமலிங்கம் பாராட்டு மடல் ஒன்றினைப் படித்து அளித்தார்.

விழாவில் நான், திருக்குறள் முனிசாமி, நாமக்கல் செல்லப்பா, பேராசிரியர் இலக்குவனார், புலவர் அரங்கசாமி, கி.ஆ.பெ. விசுவநாதம், கவிஞர் சிவப்பிரகாசம், கவிஞர் வாணிதாசன், கவிஞர் முடியரசன் போன்றோர் கலந்துகொண்டு புரட்சிக் கவிஞரைப் பற்றியும், அவரது கவிதை நயங்களைப் பற்றியும் சொற்பொழிவாற்றினோம்.

விழாவில் நான் பேசும் போது,

> "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு" என்று எப்பொழுதும் முழங்கிக் கொண்டிருக்கும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் இருபதாம் நூற்றாண்டுத் தமிழகத்தின் ஈடும் எடுப்பும் அற்ற ஒரு பெருங்கவிஞராவார். பாரதியார் புது நெறி காட்ட வந்த புதுமைக் கவிஞர் என்றால், பாரதிதாசன் புரட்சி நெறி காட்ட வந்துள்ள புரட்சிக் கவிஞர் ஆவார்.
>
> புரட்சிக் கவிஞர் அவர்கள், கவிதைகளில் புதிய பாங்கையும், புதுமை நெறியையும் புரட்சிக் கருத்துக்களையும் புகுத்தியவர்; அவர் பல பொருள்களின் அழகையும், அருமைகளையும், சிறப்பையும், செம்மையையும் படம்பிடித்துக் காட்டியவர்! வேண்டத்தகாத பழைமைகளைச் சாடுபவர்! வேண்டத்தகுந்த புதுமைகளை உணர்த்துபவர்! பாராட்டத்தக்க பழைமைகளையும், வரவேற்கத்தக்க

புதுமைகளையும் போற்றுபவர்! மூடப்பழக்க வழக்கங் களையும். குருட்டு நம்பிக்கைகளையும் வேரோடும் வேரடி மண்ணோடும் தகர்த்தெறிபவர்! பகுத்தறிவு நெறியின் ஒளி பாரெங்கும் பரவிட அரும்பணிகள் பலவற்றையும் ஆற்றி வருபவர்! தமிழ்- தமிழர். தமிழ்நாடு எல்லாவகைகளிலும் ஏற்றம் பெறவேண்டும். எழில்பெற வேண்டும் என்பதற்குப் பெரும் பாடுபட்டு வருபவர்! பாடல்களிலே சொல்லுக்குச் சொல் சுவை ஊட்டுபவர்! பொருளுக்குப் பொருள் ஒளி கூட்டுபவர்! கவிதைகளில் வீரச் சுவையையும், காதல் சுவையையும், நகைச்சுவையையும் மிகச் சிறப்பாக மிளிரச் செய்பவர்! கேலி கிண்டல் - சாடுதல் - தாக்குதல் மூலம் பகைவர்களையும், எதிரிகளையும், இழிமக்களையும் வீழ்த்துபவர்! எவருக்கும் தாழாதவர்! நல்லவர் எவரையும் தாழ்த்தாதவர்! அஞ்சி வாழாதவர்! எந்நிலையிலும் கெஞ்சிப் பிழைக்காதவர்! சுயமரியாதை இயக்கத்தின் கருத்துச் சுடரொளி எங்கும் வீசும்படி செய்கிறவர்! திராவிட இயக்கத்தின் கொள்கை - குறிக்கோள் - கோட்பாடு எல்லா வகையிலும் ஆக்கம் பெற ஊக்கத்தோடு உழைத்துவருபவர்! தனித்தமிழ் இயக்கத்தையும் தமிழிசை இயக்கத்தையும் வளர்த்து வருபவர்! சொற்போர்க் களங்கள் பல கண்டு வெற்றிகள் பல கொண்டவர்! பைந்தமிழ்த் தேர்ப்பாகனாய்த் திகழ்பவர்! செந்தமிழ்த் தேனீயாகப் பறந்து வருபவர்! சிந்துக்குத் தந்தையாக விளங்குபவர்! குவிக்கும் கவிதைக் குயிலாகப் பாடித்திரிபவர்! பகையைக் கவிழ்க்கும் கவிமுரசாக முழங்கி வருபவர்! நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலாவாகத் தோன்றுகின்றவர்! காடு கமழும் சொற்கோவாகத் திகழ்பவர்! கற்பனை ஊற்றாம் கவிதையின் புதையலாக ஒளிர்பவர்! திறம் பாட வந்த மறவர் என்று பெயர் பெற்றவர்! அறம் பாட வந்த அறிஞர் என்று புகழப்பெற்றவர்! நாட்டில் படரும் சாதிப்படைக்கு மருந்தாக விளங்கி வருபவர்! மண்டும் மதங்கள் அண்டா நெருப்பாகத் திகழ்பவர்! அயலார் எதிர்ப்புக்கு அணையாவிளக்காக நிற்பவர்! தமிழால் தகுதி பெற்று விளங்குபவர்! தமிழுக்குத் தகுதி பெற்றுத் தருபவர்!

தமிழ் இலக்கிய உலகில் தலை தாழாச் சிங்கமாக வீறுநடை போட்டு வெற்றி உலா வருபவர்! தமிழை ஆரா அமுதாகக் கருதுபவர்! தமிழைத் தம் உயிருக்கு நேராக எண்ணுபவர்! தமிழை வெண்ணிலாவாகப் பார்ப்பவர்! தமிழைச் சமுதாயத்தின் விளைவுக்கு ஏற்ற நீராகக் காண்பவர்! தமிழினிடத்தில் நறுமணத்தைப் பெறுபவர்! தமிழைத் தம் வாழ்வுக்கு ஏற்ற ஊராகக் கருதுபவர்! தமிழை நறுந்தேன் என்று எண்ணுபவர்! தமிழைத் தமிழரின் உரிமைச் செம்பயிருக்கு வேராகக் காண்பவர்! வீழ்ச்சியுற்றுக்கிடந்த தமிழகத்துக்கு எழுச்சி தந்து வருபவர்! விசையொடிந்து கிடக்கும் உள்ளங்களுக்கெல்லாம் வலிமை ஊட்டுபவர்! சூழ்ச்சிதனை, வஞ்சகத்தை, பொறாமை தன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கி வருபவர்! காழ்ச்சிந்தையையும், மறச் செயல்களையும் மிகவாகக் கொண்டவர்! கடல்போல் செந்தமிழைப் பெருக்கி வருபவர்!

இப்படிப்பட்ட புரட்சிக் கவிஞரின் மணிவிழாவைக் கொண்டாடுவதில் நாம் அனைவரும் பூரிப்பும் பெருமையும் கொள்கிறோம்.''

என்று குறிப்பிட்டேன்.

இறுதியில் புரட்சிக்கவிஞர் ஏற்புரை வழங்க, விழாவானது சிறப்பாக முடிவுற்றது.

'மன்றம்' அச்சக நிதி

1948-ஆம் ஆண்டு தொடங்கிப் பத்து திங்கள்களுக்குப் பிறகு நிதிப் பற்றாக்குறையின் காரணமாக நிறுத்தப்பட்ட 'மன்றம்' இதழை மீண்டும் தொடங்குவதற்கான முயற்சியில் நான் ஈடுபட்டேன். 'மன்றம்' இதழை வாரந்தோறும் கொண்டுவர ஒரு சிறு அச்சகம் அமைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. என்னுடைய விருப்பத்தை அறிஞர் அண்ணாவிடம் தெரிவித்தேன்.

அறிஞர் அண்ணா அவர்கள், தம்முடைய 'நீதிதேவன் மயக்கம்' நாடகத்தை ஏதேனும் ஒரு பெருநகரில் நடத்தி, அதன்மூலம் கிடைக்கும் நிதியை மன்றம் அச்சகம் அமைக்கப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கூறினார்.

அதன்படி கோவை நகரக் கழகத் தோழர்களின் உதவியையும், ஒத்துழைப்பையும் பெற்று, அறிஞர் அண்ணாவின் 'நீதி தேவன் மயக்கம்' நாடகத்தைக் கோவையில் 13.5.51-இல் நடத்தப் பெருமுயற்சியினை மேற்கொண்டேன். நாடகத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் இராவணன் வேடத்திலும், பேராசிரியர் அன்பழகன் அவர்கள் நீதிதேவன் வேடத்திலும், சி.வி.எம் அண்ணாமலை அவர்கள் கம்பர் வேடத்திலும் நடித்தார்கள்.

செலவு போக, நாடகத்தின்மூலம் ரூ 5000 நிதியாகக் கிடைத்தது. அந்தத்தொகையை அடிப்படையாகக் கொண்டு, ஒரு சிறிய அச்சகத்தைச் சிறியதொரு அச்சுப் பொறியோடு தொடங்கினேன். அதன்மூலம் 'மன்றம்' வார இதழை மீண்டும் வெளியிடத் தொடங்கினேன்.

**மகன் மதிவாணன் பிறப்பு**

1951-ஆம் ஆண்டு சூன் திங்கள் 21-ஆம் நாள், என் துணைவியார் டாக்டர் விசாலாட்சி அவர்கள் ஆண் மகனை ஈன்றெடுத்தார்கள். சேலத்தில் பிள்ளைப்பேறு நல்ல முறையில் நடந்தேறியது. மகனுக்கு மதிவாணன் என்று பெயர் சூட்டினேன்.

அன்று தேனி பொதுக்கூட்டத்திற்குச் செல்ல இருந்த நான் பொதுக்கூட்டத்தை ஒத்திவைக்கச் சொல்லிவிட்டு, சேலத்திலேயே தங்கிவிட்டேன். அறிஞர் அண்ணா அவர்களும், கழக முன்னணித் தலைவர்கள் சிலரும் சேலத்திற்கு வந்து குழந்தையை வாழ்த்திவிட்டுச் சென்றார்கள்.

## தேனி பொதுக்கூட்டத்தில் கலவரம்

ஒத்திவைக்கப்பட்ட பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நான், 4.7.51-ஆம் நாளன்று தேனிக்குப் போய்ச் சேர்ந்தேன். அதுவரையில், காங்கிரசின் ஆதிக்கக்காரர்கள் தேனியில் பொதுக்கூட்டம் ஏதொன்றையும் நடத்த விடவில்லை. தடை ஏற்படுத்திக் கொண்டே வந்தார்கள். தேனி நகரக் கழகத் தோழர்கள் நான் கலந்துகொள்ள இருந்த பொதுக்கூட்டத்தைக் கடைத்தெருவில் மிகச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து வைத்திருந்தனர். நான் கலந்து கொள்ள இருந்த தி.மு.கழகப் பொதுக்கூட்டத்தைக் கலவரம் செய்து நடக்கவொட்டாமல் கலைத்துவிட வேண்டும் என்ற தீய எண்ணத்தில், தேனி தியாகராசன் என்பவரும் அவரைச் சார்ந்த காங்கிரசு வன்முறையாளர்களும் சதித் திட்டம் போட்டு வைத்திருந்தனர்.

கலவரம் ஏற்படக்கூடும் என்பதை அறிந்துகொண்ட காவல் துறையினர் கூட்டத்தை மாலை 3 மணிக்குக் தொடங்கி 5 மணிக்குள்ளாக முடித்துக்கொள்ளும்படி, என்னையும் கழகத் தோழர்களையும் கேட்டுக்கொண்டார்கள். அப்படியே நடந்து கொள்வதாக நாங்கள் ஒப்புதல் அளித்தோம்.

நான் சரியாக மாலை 3 மணி அளவில் பொதுக்கூட்ட மேடையில் வந்து ஏறினேன். கழகத் தோழர்கள் பலர் பாதுகாவலாக என் உடன் வந்தார்கள். கூட்டம் தொடங்கப் படுவதற்கு முன்பே, தேனி தியாகராசன் தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட காங்கிரசு வன்முறையாளர்கள் அறுவாள்கள், தடிகள், திராவகப் புட்டிகள், கற்கள் ஆகியவற்றை ஏந்திக்கொண்டு வந்து, கூட்டத்தை நோக்கிக் கற்களையும், மண்ணையும் வீசி எறிந்தார்கள். கூடியிருந்த

பெருங்கூட்டத்தினர் நாலாபக்கமும் சிதறி ஓடினார்கள். மேடை அருகே வந்து மேடைப்பந்தலை வெட்டி வீழ்த்தினார்கள். 'ஜெய்ஹிந்த்' 'வந்தே மாதரம்' என்று முழக்கமிட்டுக்கொண்டு கற்களை மேடையில் இருந்த வர்களை நோக்கி எறிந்தார்கள். என்னைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் என்னை நோக்கி ஒரு பெரிய பாறாங்கல்லைத் தூக்கிப்போட்டார்கள். என்பக்கத்திலும், பின்னாலும் நின்றுகொண்டிருந்த கழகத்தோழர்கள், அந்தப் பாறாங்கல்லைத் தடுத்து, ஒதுக்கிக் தள்ளிவிட்டார்கள். கலவரம் பெரும் அளவுக்கு மூளவே, கழக நண்பர்கள் என்னைப் பக்கத்தில் இருந்த உணவு விடுதி ஒன்றுக்குள் அழைத்துச் சென்று அங்குப் பாதுகாப்பாக உட்கார வைத்தார்கள்.

காங்கிரசுக்காரர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் இடையே கடும்போர் நடைபெற்றது. பலர் காயமுற்றனர். குவித்து வைக்கப்பட்டிருந்த காவலர்கள் ஓடோடி வந்து, கூட்டத்தினரைத் தடியடி செய்து கலைத்தனர். காங்கிரசு வன்முறையாளர்கள் அனைவரும் அருகில் இருந்த காங்கிரசு அலுவலகக் கட்டடத்தில் போய்ப் பதுங்கிக் கொண்டனர். காவலர்கள், தேனி தியாகராாசன் உள்ளிட்ட அத்தனை வன்முறையாளர்களையும் அடித்துக் காவல் நிலையத்துக்கு இழுத்துச் சென்று கைது செய்து, காவலில் வைத்தார்கள்.

அப்பொழுது குமாரசாமி ராஜா அவர்களை முதல்வராகக் கொண்ட காங்கிரசுக்கட்சியின் ஆட்சி நடைபெற்றதால், சட்ட முறைப்படி நடவடிக்கைகள் மேற் கொண்ட காவல் துறை அதிகாரிகளை அந்த ஆட்சியினர் தற்காலிக வேலை நீக்கம் செய்து வைத்தனர். காங்கிரசுக் கட்சியின் வன்முறையாளர்கள் அனைவரும் விடுவிக்கப் பட்டனர்.

தேனி காங்கிரசுக்காரர்களின் போக்கையும், காங்கிரசு ஆட்சியினரின் போக்கையும் கண்டித்து, நீதிக்கட்சித் தலைவர் பி.டி. இராசன் அவர்களும், டபிள்யு.பி.ஏ. சௌந்தரபாண்டியன் அவர்களும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டார்கள்.

அரசுத் தரப்பில் கலவரம் குறித்து நடவடிக்கை ஏதும் எடுக்காததால், நான் நீதிமன்றத்தில் நியாயம் கோரி, வழக்கு ஒன்றினைத் தொடுத்தேன். வழக்கு பல திங்கள்கள் வரை தொடர்ந்து நடைபெற்றது. வழக்கை நடத்துவதற்கு நிதி திரட்டப்பட்டது. கம்பத்தில் வழக்கு நிதிக்காக அறிஞர் அண்ணா எழுதிய 'கல் சுமந்த கசடர்' என்ற நாடகம் நடத்தப்பட்டது. அந்த நாடகத்தில் நான் சேரன் செங்குட்டுவன் வேடம் புனைந்து நடித்தேன். நாடகத்திற்கு டபிள்யு.பி.ஏ. சௌந்தரபாண்டியன் அவர்கள் தலைமை தாங்கினார். நாடகத்தின் மூலம் செலவுபோக ரூ 4000 நிதியாகக் கிடைத்தது. அதனைக் கொண்டு வழக்கு தொடர்ந்து நடத்தப்பெற்றது.

வழக்கின் தீர்ப்பில் வன்முறையில் ஈடுபட்ட எதிரிகள் பலருக்கு அபராதம் விதிக்கப்பட்டது, தற்காலிகமாக வேலை நீக்கம் செய்து வைக்கப்பட்டிருந்த காவல் துறை அதிகாரிகள் மூவரும், மீண்டும் வேலையில் சேர்ந்து பணியாற்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது.

### அய்யம்பாளையத்தில் பேச்சாளர் பயிற்சி வகுப்பு

தி.மு.கழகத்தைச் சேர்ந்த இளம் பேச்சாளர்க்கும், மாணவர்க்கும் பயன்படும் வகையில், மதுரை மாவட்டம் அய்யம்பாளையத்தில், பெரிய தோட்டம் ஒன்றில், பேச்சாளர் பயிற்சி வகுப்பினை ஏழு நாட்கள் நடத்தும் பொறுப்பை நான் ஏற்றிருந்தேன்.

அரசியல் - பொருளியல் - சமுதாயவியல் - வரலாற்றியல் - வாழ்வியல் - தமிழியல் பற்றிய தலைப்புக்களில், நான் விளக்கங்கள் அளித்தேன். பயிற்சி வகுப்பு நடைபெறுவதற்கான உண்டி-உறையுள் போன்ற எல்லா வசதிகளையும், பட்டி வீரன்பட்டி சௌந்தரபாண்டியன் அவர்கள், தம் சொந்தச் செலவில் சிறப்பாக ஏற்பாடு செய்து தந்திருந்தார்.

பேச்சாளர்கள் அய்யம்பாளையத்தைச் சுற்றி உள்ள ஊர்களில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டங்களில் பேசிப் பழகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவர்களில் பலர் பிற்காலத்தில் கழகத்தின் சிறந்த பேச்சாளர்களாக ஆகிக் கழகத்திற்கான கடமையை நல்லமுறையில் நிறைவேற்றி வந்தார்கள்.

### தி.மு.கழகப் பொதுக்குழுக்கூட்டம்-மதுரை

1951 சூலை 17,18 நாட்களில், கழகத்தின் பொதுக் குழுக்கூட்டம் மதுரையில் நடைபெற்றது. பொதுக்குழுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா, நான், பிற தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள், 84 பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டோம்.

கழகத்திற்கு என்று புதிதாக உருவாக்கப்பட்ட சட்ட திட்டங்களைப் பொதுக்குழு விவாதித்துத் தேவையான திருத்தங்களைக்கொண்டு வந்து ஒருமனதாக நிறைவேற்றித் தந்தது.

பின்னர் 1952-இல் சட்டமன்றத்திற்கும், நாடாளு மன்றத்திற்கும் நடைபெறும் பொதுத் தேர்தலில், கழகம் எந்த வகையில் ஈடுபாடு கொள்வது என்பதுபற்றி நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. பொதுக்குழு உறுப்பினர்கள் பலர் தத்தம் கருத்துக்களை வெளியிட்டார்கள்.

இறுதியில், 1952 பொதுத்தேர்தலில் தி.மு.கழகம் நேரடியாகப் பங்கு கொண்டு கழக வேட்பாளர்களை நிறுத்துவதில்லை என்றும், தி.மு.கழகம் விதிக்கும் நிபந்த னைகளை ஏற்று, உறுதி மொழிப்படிவத்தில் கையெழுத்திட்டுப் பொதுச் செயலாளரின் ஒப்புதல் பெறும் கட்சிகளுக்கும், சுயேச்சைகளுக்கும் மட்டும் கழகத் தோழர்கள் தமது ஆதரவை அளிப்பது என்றும் முடிவுகள் மேற் கொள்ளப்பட்டன.

*கழகத்தின் ஆதரவைக் கோரும் வேட்பாளர் எத்தகைய உறுதிமொழி தரவேண்டும் என்பதற்கான உறுதிமொழிப் படிவத்தை உருவாக்கும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது. நான் உறுதிமொழிப்படிவத்தை உருவாக்கிப் பொதுக் குழுவின் ஒப்புதலுக்கு வைத்தேன். பொதுக்குழு அதனை ஏற்றுக் கொண்டது.*

உறுதிமொழி விவரம்:-

1. திராவிடநாடு தனி நாடாக ஆகவேண்டும் என்ற கொள்கையை நான் ஆதரிக்கிறேன்.

2. சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கைக்கு ஆதரவாகவும், தி.மு.கழகக் கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் ஆதரவு தேடும் வகையிலும் பணியாற்றுவேன்.

3. சுரண்டலையும், ஏதேச்சதிகாரத்தையும் ஒழிக்க தி.மு. கழகம் வெளியிடும் திட்டங்களுக்கு ஆதரவு கிடைக்கும் விதமாகப் பாடுபடுவேன்.

*மேற்கண்டவாறு அமைந்த உறுதிமொழிப் படிவத்தில் கையொப்பமிடும் வேட்பாளர்கள் கழகப் பொதுச் செயலாளரின் ஒப்புதல் பெறவேண்டும்.*

கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் வேட்பாளர் பட்டியலைப் பொதுச்செயலாளர் மாநில மாநாட்டில் அறிவிப்புச் செய்யவேண்டும்.

பொதுச் செயலாளரின் ஆணைக்கு ஏற்ப, அதற்குப் பிறகு கழகத் தோழர்கள் தேர்தல் களத்தில் இறங்கி உரியவர்களுக்கு மட்டும் ஆதரவு தரவேண்டும் என்றவாறு முடிவு செய்யப்பட்டது. மேலும் பல தீர்மானங்களை நிறைவேற்றிய பிறகு அறிஞர் அண்ணாவின் நிறைவுரையுடன் பொதுக்குழுக் கூட்டம் முடிவு பெற்றது.

## கழகத் தலைமை நிலையமாக அறிவகம் அமைக்கப்படுதல்

தி.மு.கழகத்திற்குத் தனிக் கட்டடம் ஒன்று சொந்தத்தில் அமையவேண்டும் என்பதற்காக, அறிஞர் அண்ணா அவர்கள் கட்டடநிதி திரட்டித் தருமாறு கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். வேண்டுகோளை ஏற்றுக் கழகச் செயல் வீரர்கள் நிதி திரட்டும் பணியில் மும்முரமாக ஈடுபட்டனர்.

கழகத்திற்கு வசதியான ஒரு கட்டடத்தை விலைக்கு வாங்க நானும், டபிள்யு. கே. தேவராசன் அவர்களும் சென்னையில் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். இறுதியில் சென்னை, இராயபுரம், சூரியநாராயணச் செட்டித்தெரு 24ஆம் எண்ணுள்ள தனிக்கட்டடம் ஏற்றதாக அமைந்திருப்பதைக் கண்டோம். தாழ்வாரங்கள், அறைகள், கூடங்கள் ஆகியவற்றைக் கொண்ட இரண்டு மாடிக் கட்டடமாக அது திகழ்ந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் கட்டடத்தை நேரில் வந்து பார்த்து விட்டு, அதனை வாங்க இசைவு அளித்தார். கட்டட உரிமையாளரிடம் நீண்ட நேரம் பேசி, இறுதியில் ரூ.30,000/-க்கு அதனை விலைக்கு வாங்கிக் கழகத்தின் பெயரில் பதிவு செய்தோம். 5.11.51-இல் அந்தக் கட்டடம் வாங்கப்பட்டது.

அதற்கு 'அறிவகம்' என்று அறிஞர் அண்ணாவால் பெயர் சூட்டப்பெற்றது. அதன் திறப்பு விழா, 2.12.51இல் சிறப்பாக நடந்தேறியது. தி.மு. கழகத்தின் தலைமை நிலையம் அதன் பின்னர் அங்குச் செயல்படத் தொடங்கிற்று. 'நம்நாடு' என்ற கழக நாளேடு பிறகு அங்கேயே வெளியிடப்பட்டது. அதற்கான அச்சகமும் அங்கேயே நிறுவப்பட்டது. 'நம்நாடு' நாளிதழின் ஆசிரியர்ப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன்; துணை ஆசிரியர்ப் பொறுப்பை காஞ்சி கலியாணசுந்தரம் ஏற்றுக் கொண்டார்.

### தி.மு.கழக முதல் மாநில மாநாடு

தி.மு. கழகத்தின் தொடக்கக் காலத்தில் திட்டமிட்டபடி, கழகத்தின் மாவட்ட மாநாடுகள், தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் சிறப்பாக நடந்தேறி முடிந்தன. அவை தவிர, சமுதாயச் சீர்திருத்த மாநாடு, திராவிட மாணவர் மாநாடு, வகுப்புரிமை மாநாடு, திராவிடப் பெண்கள் மாநாடு, எழுத்துரிமை-பேச்சுரிமை மாநாடு போன்ற தனி மாநாடுகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கழகத்தின் சார்பாக நடைபெற்றன.

எல்லா மாநாடுகளிலும் அறிஞர் அண்ணாவும், நானும், கழகத்தின் முக்கியப் பேச்சாளர்களும் கலந்து கொண்டோம்.

மதுரைப் பொதுக் குழுக்கூட்டத்தில் தீர்மானித்தபடி, 'தி.மு. கழகத்தின் முதல் மாநில மாநாடு', 1951 டிசம்பர் 13,14,15,16 ஆகிய நாட்களில், சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் அமைந்த மாபெரும் பந்தலில் நடைபெற்றது.

மாநாட்டுப் பணிகளை நான், என்.வி. நடராசன், கே.கோவிந்தசாமி, காஞ்சி மணிமொழியார், டி.எம். பார்த்த சாரதி, கே.எம்.கண்ணபிரான், ஏ.கே. சாமி, ஆர்.டி. அரசு,

சென்னை மாவட்டக் கழகத்தார் போன்றோர் பொறுப் பேற்று முன்னின்று நடத்தினோம்.

மாநாட்டிற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார். குடந்தை நீலமேகம் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக என்.வி. நடராசன் அவர்களும், செயலாளர்களாக காஞ்சி மணி மொழியார், நாஞ்சில் மனோகரன் ஆகியோரும் பணியாற்றினர்.

மாநாட்டுத் தீர்மானங்களை ஆய்வு செய்து, உருவாக்கும் பணிகளை நான், சம்பத், மதியழகன், வி.எம். ஜான் ஆகியோர் மேற்கொண்டோம்.

விளம்பரம்-கலை நிகழ்ச்சி ஆகியவற்றின் செயலாளர் களாகக் கலைஞர் கருணாநிதி, டி.எம். பார்த்தசாரதி ஆகியோர் பணியாற்றினர்.

பந்தல் குழு, தொண்டர் படைக்குழு, ஊர்வலக்குழு, கண்காட்சிக்குழு, உணவு - உறையுள் குழு என்று தனித் தனியாகக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

மாநாட்டில் கலந்து கொள்ள, தமிழ்நாட்டிலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும், பொது மக்களும் பெருந்திரளினராக வருகை தந்தனர்.

மாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சியாக மாபெரும் ஊர்வலம் அறிவகத்திலிருந்து தொடங்கி, மாநாட்டுத் திடலுக்கு வந்து சேர்ந்தது. கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணாவும், மாநாட்டின் பிற கழக முன்னணித் தலைவர்களும் ஊர்வலத்தில் ஆறு குதிரைகள் பூட்டப்பட்ட கோச்சு வண்டியில் அழைத்து வரப்பட்டனர். கழகச்

செயல்வீரர்கள் பல்லாயிரக்கணக்கில் கழகக் கொடிகளை ஏந்திக் கொள்கை முழக்கமிட்டுக் கொண்டு வந்தனர்.

மாநாட்டுப் பந்தலுக்கு முன்னால், திராவிடப் பண் பாடப்பட, அறிஞர் அண்ணா அவர்கள் ஓங்கி உயர்ந்த கொடி மரத்தில் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். அப்போது வாத்தியங்கள் முழங்கின; கையொலியும், வாழ்த்தொலியும் விண்ணதிர எழும்பின.

மாநாட்டுப் பந்தலில் திராவிட இயக்க வரலாற்றையும், முக்கிய நிகழ்ச்சிகளையும் குறிக்கும் வகையில், தனியாக அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியைச் சிந்தனைச் சிற்பி சிற்றரசு திறந்து வைத்தார்.

இரண்டாம் நாளாகிய 14.12.51 அன்று காலை குடந்தை நீலமேகம் மாநாட்டைத் தொடங்கி வைத்து உரை யாற்றினார். மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் என்.வி. நடராசன் மாநாட்டுத் தலைவரையும், கழக முன்னணி யினரையும், மாநாட்டுப் பிரதிநிதிகளையும், பார்வையாளர் களையும் வரவேற்றுப் பேசினார்.

மாநாட்டிற்குத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு, அறிஞர் அண்ணா அவர்களின் பெயரை என்.வி.நடராசன் முன்மொழிய, நான், கலைஞர் கருணாநிதி, சம்பத், சிற்றரசு, டாக்டர் தருமாம்பாள், மதியழகன், சத்தியவாணிமுத்து, அன்பில் தருமலிங்கம், மதுரை முத்து, தூத்துக்குடி சிவசாமி, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, முல்லை வடிவேலு, சி.வி.எம். அண்ணாமலை ஆகியோர் வழிமொழிந்து உரையாற்றினோம்.

அறிஞர் அண்ணாவுக்குக் கழக முன்னணியினரும், மாவட்டக் கழகச் செயலாளர்களும், முக்கியப் பேச்சாளர் களும் மலர் மாலைகள் அணிவித்துச், சால்வைகள் போர்த்திக்

*கைத்தறித் துண்டுகள் வழங்கி, அவரை அன்புடனும், மகிழ்ச்சிப் பெருக்குடனும் வரவேற்றனர்.*

*அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை உரை ஆற்றியபோது குறிப்பிட்ட கருத்துக்களில் சில வருமாறு:*

''திராவிட முன்னேற்றக் கழகம் வளருமா? இடையிலேயே அழிந்துபோய் விடுமா? என்று ஐயங்கொண்டிருந் தவர்களுக்கு, இந்த மாநாடு நல்ல தெளிவினை உண்டாக்கும் என்று கருதுகிறேன். கழகத் தோழர்கள், இந்த மாநாட்டில் கொண்டிருக்கும் ஆர்வத்தையும், காட்டும் எழுச்சியையும் கண்டு நான் பெரிதும் மகிழ்கிறேன். கழகத்தைச் சிறப்பாகக் கட்டிக் காத்து வளர்த்து வரும் கழக அடலேறுகள் அனைவர்க்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னைப் பற்றி இங்குப் பேசிய பலரும் பலவாறாகப் புகழ்ந்துரைத்தார்கள். அவைகளெல்லாம் அழகிய தமிழில் அன்போடு வீசிய சொற்கள் என்றே நான் கருதுகிறேன். ஏனெனில், அத்தகைய சிறப்புரைகளுக்கு ஏற்றவனல்லன் நான். என்னைப்பார்த்து, அன்புத் தம்பிமார்கள், ''கட்டளை இடுங்கள்; கடமையைச் செய்கிறோம்! வழிகாட்டுங்கள். வாகை சூடி வருகிறோம்' என்கிறார்கள். நான் கட்டளை யிடுபவனும் அல்லன், வழிகாட்டுபவனும் அல்லன். அனைவரின் உணர்வையும் மதித்து, அதற்கு ஏற்றபடி பணியாற்றி வரும் ஒரு தொண்டன்தான் நான்.

கழகத் தோழர்கள் என்மேல் வைத்துள்ள நம்பிக்கை கெடாமல், இதுவரை நடந்து வந்துள்ளேன்; எதிர்காலத்திலும் அப்படியே நடந்துகொள்வேன் என்று உறுதி கூறுகிறேன்.

நான் சனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவன். அரசியலிலே கண்ணியத்தை விரும்புபவன் - கட்டளையிடுபவன் அல்லன்! சனநாயகம் வளர்ந்துள்ள இந்நாட்களில்,

கட்டளையிடும் தலைவர்கள் தோன்றமுடியாது - தோன்றவும் கூடாது! சனநாயகம் இல்லாவிட்டால், அரசியலால் எந்தப் பலனும் ஏற்படுவது இல்லை! நான் நானாக எதையும் செய்வதில்லை! செய்யவும்மாட்டேன்! உங்களின் பலரின் கருத்துக்களையும் கேட்கிறேன்; அவற்றைத் தொகுத்துப் பார்க்கிறேன்; பிறகு அதனை ஒட்டி ஒரு முடிவுக்கு வருகிறேன்! உங்களின் பேராற்றலை நம்பித்தான், எனக்கு அளிக்கப்பட்டுள்ள பெரும் பொறுப்பை ஏற்று நடத்தி வருகிறேன்! நான் அளவுகடந்த பொறுமையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் பணியாற்றி வருகிறேன்!

திராவிடச் சமுதாயத்தின் வளர்ச்சிக்காக தியாகராயர், நாயர், நடேசனார், பெரியார் போன்றவர்கள் போராடிப் பாடுபட்டு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த நேரத்தில் மனம் நிறைந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் கண்ணியத்திற்குத் தோழன் - கொள்கைக்கு நண்பன் - திராவிடத்தின் பாசறை என்பதை எல்லோரும் உணரவேண்டும். பொதுவுடைமைக்கு ஒரு எல்லை வேண்டும் என்கிறேன், நமது எல்லைக்குள் பொதுவுடைமையைப் பரப்ப முடியும் என்கிறேன்.

அந்த இலட்சியத்தை நோக்கி, அமைதிப் பாதையில் நாம் நடந்து செல்கிறோம். அந்தப் பயணத்தின்போது இடையில் தொல்லைகள், துயரங்கள், இன்னல்கள், இழப்புக்கள் ஏற்படலாம். அதற்காக நாம் பாதையை விட்டுத் தவறப் போவதில்லை. இறுதியில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

நான் கனதனவான்கள் கூட்டத்தைச் சேர்ந்தவனல்லன்; பணத்தால் உயர்ந்தவனும் அல்லன்; பெரும் பதவி பெற்றவனும் அல்லன்; உங்களைவிடச் செல்வத்திலே

மிகவும் குறைந்தவன். இவையெல்லாவற்றையும்விட தைரியத்திலே மிகமிகக் குறைந்தவன். ஆனால் என்னைச் சூழ்ந்திருக்கும் தம்பிகளின் தைரியத்தை நம்பித்தான் நான் பணியாற்றி வருகிறேன்''

என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறியது மட்டுமல்லாமல், மாநில அரசியல் நிலை, மத்திய அரசியல் நிலை, பொருளாதார வீழ்ச்சி, தென்னாடு பல வகைகளிலும் தேய்ந்துவரும் தன்மை, கழகத்தைக் கட்டுக்கோப்போடு வளர்க்க வேண்டிய இன்றியமையாமை ஆகியவை பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

மூன்றாம் நாள் மாநாட்டில் பல தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. தலைவர்களின் படங்கள் திறக்கப்பட்டன. நான்காம்நாள் மாநாட்டில், சிறப்புச் சொற்பொழிவுகள் கழக முன்னணிப் பேச்சாளர்களால் ஆற்றப்பட்டன.

இறுதியில் அறிஞர் அண்ணா அவர்கள் முடிவுரை நிகழ்த்தும்போது, கழகம் பொதுத்தேர்தலில் யார் யாரை ஆதரிக்கவேண்டும் என்ற பட்டியலைப் படித்துக் காட்டி னார். கம்யூனிசுட்டுக் கட்சியினர், கழக உறுதிமொழிப் படிவத்தில் கையொப்பம் இடாததால், அவர்களை ஆதரிப்பதற்கில்லை என்று அறிவித்தார்.

நான்கு நாட்களிலும், நடிப்பிசைப்புலவர் இராமசாமி குழுவினர் நடித்த, சந்திரோதயம், ஜமீன்மாளிகை நாடகங்களும், கலைஞர் கருணாநிதி எழுதி நடித்த இளைஞன் குரல் நாடகமும், பெண்கள் நடித்த போராட்டம் என்ற நாடகமும், குலமுலேனி பில்லா என்ற தெலுங்கு நாடகமும், கலைவாணர் என்.எஸ். கிருட்டிணன் அவர்களின் கலைநிகழ்ச்சியும், எம்.எம். தண்டபாணி தேசிகர், சி.எஸ். செயராமன், டி.வி. நமசிவாயம், கஸ்தூரி,

செல்லமுத்து, நாகூர் அனிபா ஆகியோரின் இசையரங்கு களும் நடைபெற்றன.

## இந்திப் பெயர்கள் அழிப்பு அறப்போர்

இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் முறையில், புகை வண்டி நிலையங்களிலும், அஞ்சல் நிலையங்களிலும் உள்ள பெயர்ப் பலகைகளில் எழுதப்பட்டிருக்கும் இந்தி எழுத்துக் களைத் தார்கொண்டு அழிக்கும் போராட்டத்தை, 1952 ஆகஸ்டு 1ஆம்நாள் நடத்த வேண்டும் என்று தி.மு.க. மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டது. அதேபோல், அதே நாளில் இந்தி எழுத்துக்களை அழிக்கும் அறப் போராட்டத்தை நடத்துவது என்று திராவிடர் கழகமும் முடிவு செய்தது.

அப்பொழுது, அறிஞர் அண்ணா அவர்கள், "இரட்டைக் குழல் துப்பாக்கி வடநாட்டு இந்தி ஆதிபத்தியத்தின் மீது தாக்குதல் நடத்தப்போகிறது! மகிழ்கிறோம்!'' என்று அறிக்கை வெளி யிட்டிருந்தார்கள்.

இந்தி எழுத்துக்களை அழிக்கும் போராட்டத் தொண்டர் படைக்கு அறிஞர் அண்ணா அவர்கள் சென்னையில் தலைமை தாங்கினார்; நான் மதுரையில் தலைமை தாங்கி னேன். மற்றக் கழக முன்னணித் தலைவர்கள் பல்வேறு ஊர்களில் தலைமை தாங்கினார்கள்.

அரசினர் அடக்குமுறை நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருந்துவிட்டதன் காரணமாக, இந்தி எழுத்து அழிப்புப் போராட்டம் எல்லா ஊர்களிலும் அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடந்தேறியது. இந்திப் பெயர்ப் பலகைகள் அழிக்கப்பட்ட நிலையில், பல திங்கள்கள் அப்படியே இருந்தன.

## கைத்தறித் துணிகள் விற்பனைக்கு ஆதரவு அளித்தல்

1953ஆம் ஆண்டில், கைத்தறித் துணிகள் விலை போகாமல், பெருமளவுக்குத் தேங்கிக் கிடக்கும் நிலை உருவானது. அதனால், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த கைத்தறி நெசவாளர்கள், பெரும் அவதிக்கு உள்ளானார்கள்.

கைத்தறி நெசவாளர்களின் கண்ணீரை ஓரளவுக்காவது துடைக்க வேண்டும்என்று கருதி, அறிஞர் அண்ணா அவர்கள், 4.1.53இல், கழகத்தின் முன்னணித் தலைவர்களும், கழகப் பொறுப்பாளர்களும், தமிழகம் முழுவதிலுமுள்ள எல்லா நகரங்களிலும், பேரூர்களிலும், கைத்தறித்துணிகளைத் தெருத் தெருவாக எடுத்துச்சென்று விற்பனை செய்யவேண்டும் என்று அறிவிப்புச் செய்தார். அதன்படி கழக முன்னணித்தலைவர்கள் எல்லா நகரங்களுக்கும், பேரூர்களுக்கும் சென்று, கைத்தறி நெசவாளர்களும், கழகத் தொண்டர்களும் புடைசூழ, ஒவ்வொரு தெருவிலும் நின்று, கைத்தறி வேட்டி-சேலை-துண்டு ஆகியவற்றை விற்பனை செய்வதில் ஈடுபட்டனர்.

அறிஞர் அண்ணா அவர்கள் சென்னையிலும், நான் காரைக்குடியிலும் கைத்தறித் துணிகளை வண்டியிலும், தோள்மேலும் போட்டுக் கொண்டு,தெருத் தெருவாகச் சென்று விற்பனை செய்தோம். அதேபோல், மற்றக் கழக முன்னணியினரும் பல்வேறு நகரங்களில் விற்பனை செய்தனர். அன்று ஒருநாள் மட்டும், பலகோடி ரூபாய் அளவுக்குக் கைத்தறித் துணிகள் விலைபோயின.

இந்தச்செயல் பொதுமக்களிடத்தே ஒருவித விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், கைத்தறி நெசவாளர்களுக்கு ஓரளவுக்கு ஆறுதலையும் அளித்தது.

## கோவை மாவட்ட தி.மு.கழக மாநாடு

கோவை மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பாக, 14.2.53 அன்று சமுதாயச்சீர்திருத்த மாநாடும், 15.2.53 அன்று கழக அரசியல் மாநாடும் நடைபெற்றன.

சமுதாயச் சீர்திருத்த மாநாட்டிற்குக் கலைஞர் கருணாநிதி தலைமை வகித்தார். சிந்தனைச் சிற்பி சிற்றரசு மாநாட்டைத் தொடங்கி வைத்தார். அருண்மொழி கலைக் கண்காட்சியைத் திறந்து வைத்தார். கழக முன்னணித் தலைவர்கள் ஒவ்வொருவரும் 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' என்ற தலைப்பில், சீர்திருத்தச் செம்மல்கள் பற்றிய வாழ்க்கை வரலாறுகளைத் தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

நான் 'சாக்ரடீஸ்' பற்றி உரையாற்றினேன். அறிஞர் அண்ணா அவர்கள் இறுதியாகப் பேசினார்கள். நடிப்பிசைப் புலவர் இராமசாமி, அண்ணா எழுதிய காதல் ஜோதி நாடகத்தை நடத்திக் காட்டினார்.

இரண்டாம் நாள் கழக அரசியல் மாநாடு நடைபெற்றது. அதற்கு நான் தலைமை தாங்கினேன். நாஞ்சில் மனோகரன் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். அறிஞர் அண்ணா அவர்கள் இறுதியாக அரசியல் நிலவரங்கள் பற்றி விரிவாகப் பேசினார்.

## "நம்நாடு" நாளிதழ் வெளியீடு

தி.மு. கழகத்திற்கு ஆதரவாக வார ஏடுகளும், திங்கள் ஏடுகளும் நடைபெற்று வந்தாலும், நாளேடு ஒன்றில்லை என்ற குறைபாடு, மாலைமணி நாளேடு நின்றுவிட்டதற்குப் பிறகு ஏற்பட்டது. கழகத்தின் சார்பாகப் போதுமான அளவுக்கு நிதிதிரட்டப்பட்டு, 15.6.53 முதல், அறிவகத்திலிருந்து, 'நம்நாடு' என்ற பெயரில் நாளேடு வெளியிடப்பட்டது.

அதற்கு அறிஞர் அண்ணா அவர்கள் ஆசிரியராகவும், நான் தலைமைத் துணை ஆசிரியராகவும், காஞ்சி கலியாணசுந்தரம், ஏ.எஸ். வேணு, ஆர்.எஸ். பாண்டியன், சிவப்பிரகாசம் ஆகியோர் துணை ஆசிரியர்களாகவும் பணியாற்றினோம்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, நான் நம்நாடு நாளேட்டின் வெளியிடுபவராகவும், ஆசிரியராகவும் ஆக்கப்பட்டேன். நம்நாடு நாளிதழ் சிறிய அளவில் வெளியிடப்பட்டாலும், கழகத்தின் கருத்துக்கள், கொள்கைகள், நிகழ்ச்சிகள், போராட்டங்கள் பற்றி அறிந்து கொள்ள அந்த ஏடு பெரிதும் பயன்பட்டு வந்தது. 1972 வரை நடைபெற்றுவந்த நம்நாடு இதழ், பொருளாதார நெருக்கடியின் காரணமாக நிறுத்தப்பட்டது.

## ஆச்சாரியார் குலக்கல்வித் திட்டத்திற்கு எதிர்ப்பு

சக்கரவர்த்தி இராசகோபாலச்சாரியார், சென்னை மாநில முதலமைச்சராக இருந்தபோது, 6வயது முதல்11 வயது வரை உள்ள சிறுவர்-சிறுமியர், பாதிநாள் பள்ளியில் படிக்க வேண்டும் என்றும், பாதிநாள் அவரவர் குலத்தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும், புதியதொரு கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார்.

பிற்படுத்தப்பட்ட-தாழ்த்தப்பட்ட மக்களின் எதிர்கால நல்வாழ்விற்குக் கேடு பயக்கக்கூடிய இந்த ஏற்பாட்டை உடனே கைவிட வேண்டும் என்று,சென்னை மாநில அரசினரை வற்புறுத்தித் தி.மு. கழகம் அரக்கோணத்தில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் முடிவு எடுத்தது.

1953 சூன் 21ஆம் நாள், தமிழ்நாடு முழுவதும் புதிய குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்துக் கண்டனப்

பொதுக்கூட்டங்கள் நடத்துவது என்றும், குலக்கல்வித் திட்டத்தின் விளைவு எப்படி அமையும் என்பதைத் தெளிவாகப் பொது மக்களுக்கு விளக்கிக் காட்டுவது என்றும், வீடு வீடாகச் சென்று பெற்றோர்களிடம் குலக் கல்வித் திட்டத்திற்கு எதிராகக் கையெழுத்துப் பெற்றுக் கல்வித் துறையினர்க்கும், ஆட்சியாளர்களுக்கும் அனுப்பி வைப்பது என்றும், தி.மு. கழகம் செயல்திட்டங்களை மேற்கொண்டு, அவற்றை வெளியிட்டது.

தி.மு.க தலைமையின் வேண்டுகோளுக்கு இணங்க, குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்துக் கண்டன ஊர்வலங் களும், கண்டனப் பொதுக்கூட்டங்களும் பல நகரங்களில் மிகச்சிறப்பாக நடத்தப்பட்டன. அறிஞர் அண்ணாவும், நானும், கழகச் சொற்பொழிவாளர்களும் தீவிரமான முறையில் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு, பல ஊர்களிலும் நடைபெற்ற கண்டனப் பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்டோம்.

1953 சூலை 8ஆம்நாள், தி.மு.க.வின் ஆதரவு பெற்று, வெற்றிபெற்ற சட்டமன்ற உறுப்பினர்களை, ஆங்காங்குள்ள கழகத் தோழர்களும், பொதுமக்களும் ஊர்வலமாகச் சென்று நேரில்கண்டு, புதிய குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்துச் சட்டமன்றத்தில் வாதாடி, அதில் வெற்றி பெறுவதற்கான வழிவகைகளைக் காணவேண்டும் என்று கேட்டுக் கொள்ளு மாறுகோரி, அறிஞர் அண்ணா அவர்கள் அறிக்கை ஒன்றினை வெளியிட்டார்.

அதன்படி அறிஞர் அண்ணா தலைமையில் காஞ்சிபுரத்தில் ஊர்வலம் சென்று, சட்டமன்ற உறுப்பினர் தெய்வசிகாமணியிடம் கோரிக்கை விண்ணப்பத்தை கொடுத்தது. நான் சேலத்தில் ஊர்வலமாகச்சென்று, சட்டமன்ற உறுப்பினர் இரத்தினசாமியிடம் கோரிக்கை

விண்ணப்பத்தைக் கொடுத்தேன். அவ்வாறே, கழகத்தின் முன்னணித் தலைவர்கள் பலரும், பல ஊர்களிலும் உள்ள கழக ஆதரவு பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களிடம் ஊர்வலமாகச் சென்று, கோரிக்கை விண்ணப்பங்களைக் கொடுத்தார்கள்.

1953 சூலை 11,12 நாட்களில் சென்னையில், சென்னை மாவட்ட தி.மு. கழக மாநாடு நேப்பியர் பூங்காவில் போடப்பட்டிருந்த பந்தலில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் பேசிய கழகச் சொற்பொழிவாளர்கள் அனைவரும் குலக்கல்வித் திட்டத்தை மிகக் கடுமையாகக் கண்டித்துப் பேசினார்கள்.

மாநாட்டில் நான் பேசும்போது,

"முதலமைச்சர் ஆச்சாரியார் புதிய குலக்கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், பழைய வர்ணாச்சிரம தருமப்படி குலதருமத் திட்டத்தை நாட்டில் நிலைநாட்ட முயலுகிறார்.

பெரும்பான்மையான பிற்படுத்தப்பட்ட-தாழ்த்தப்பட்ட மக்கள், கல்வி அறிவு அறவே இல்லாமல், அவரவர் குலத்தொழில்களை மட்டுமே செய்துவந்த காரணத்தினால் தான், பார்ப்பனர்கள் படித்துப் பட்டம் பெற்றுப் பெரும் பெரும் பதவிகளுக்கு வந்து நாடாளும் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட நிலைமை, மீண்டும் வரவேண்டும் என்று முதலமைச்சர் ஆச்சாரியார் எண்ணுகிறார்.

குலத்தொழில்களை விட்டுவிட்டுப் படித்துப்பட்டம் பெற்றுத் தம் தகுதியையும், திறமையையும் வளர்த்துக் கொண்ட காரணத்தினால்தான், பார்ப்பனரல்லாத மக்களில் ஒரு சிலராவது, அண்மைக்காலத்தில் பேராசிரியர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், நீதிபதிகளாகவும், மருத்துவர்

களாகவும், பொறியாளர்களாகவும், தொழில்நுட்ப அறிஞர்களாகவும், அறிவியல் வல்லுநர்களாகவும், அமைச்சர்களாகவும் ஆக முடிந்திருக்கிறது. இந்நிலையை மேலும் வளரவிடாமல் தடுப்பதற்கு என்றே ஆச்சாரியார் குல தருமப்படி குலக்கல்வியைப் புகுத்தத் திட்டமிட்டுள்ளார். இதன்மூலம் திராவிடப் பெருங்குடிமக்களில் பெரும்பாலோர், கல்வியறிவு அற்றவர்களாக, ஏழைகளாக, ஏமாளிகளாக, அறிவிலிகளாக, இழிமக்களாக வாழக்கூடிய நிலைதான் எதிர்காலத்தில் ஏற்படும்.

புதிய கல்வித் திட்டம், ஆரிய ஆண்டைகளிடம், திராவிட மக்கள் அடக்கமாகவும், அடிமைகளாகவும் வாழவேண்டும் என்ற நிலையைத்தான் நாட்டில் உருவாக்கும்.

மலம் எடுத்தவர்கள் மலத்தை மட்டுமே எடுக்க வேண்டும்! குப்பையைக் கூட்டியவர்கள் குப்பையை மட்டுமே எடுக்கவேண்டும்! கூடை பின்னியவர்கள் கூடையை மட்டுமே பின்னவேண்டும்! கட்டை வெட்டியவர்கள் கட்டையை மட்டுமே வெட்டவேண்டும்! ஏர்பிடித்த உழவர்கள் பரம்பரை உழவர்களாகவே வாழவேண்டும்! கொல்லன் மகன் கொல்லனாகவே இருக்கவேண்டும்! கொத்தனார் மகன் கொத்தனாராகவே வாழவேண்டும்! தச்சன் மகன் தச்சனாகவே பிழைப்பு நடத்தவேண்டும்! ஆடுமாடு மேய்ப்பவரின் மக்கள் ஆடு மாடுகளை மட்டுமே மேய்க்க வேண்டும்! குயவர்களின் மக்கள் மட்பாண்டம் செய்பவர்களாகவே இருக்கவேண்டும்! செருப்புத் தைப்பவர் மகன் செருப்புத் தைப்பவனாகவே வாழவேண்டும்! சவரம் செய்பவர்களின் மக்கள் சவரம் செய்பவர்களாகவே இருக்க வேண்டும்! சலவைத் தொழிலாளியின் மகன் சலவைத் தொழிலை மட்டுமே செய்யவேண்டும்! விலைமாதர்களின் மகள்கள் விபச்சாரிகளாகவே தொழில் நடத்த வேண்டும்! என்பன போன்ற விளைவுகள், நாட்டில் ஏற்பட வேண்டும் என்பது, ஆச்சாரியாரின் நோக்கமாகும்.

ஆச்சாரியாரின் குலக் கல்வித்திட்டம் திராவிடப் பெருங்குடி மக்களுக்கு மிகப்பெரிய கேடுகளை விளைவிக்கக்கூடியது; கொடுமை பயக்கக்கூடியது, ஆபத்தை உண்டாக்கக்கூடியது, திராவிட மக்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டை போடக்கூடியது என்பதைப் பொதுமக்கள் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

நாட்டிலுள்ள அறிவாளிகள், கல்வி வல்லுநர்கள், செய்தித் தாளினர், அரசியல்வாதிகள் பலர் அந்தத் திட்டத்தைக் கண்டித்தும் ஆச்சாரியாரின் மனம் மாறவில்லை. ஆச்சாரியாரைப் பதவியை விட்டுக் கீழே இறக்குவதன் மூலமாகவே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காணமுடியும். அதற்கான அறப்போராட்டங்களில் நாம் ஈடுபடுவோமாக!''

என்று குறிப்பிட்டேன்.

இறுதியில் மாநாட்டின் நிறைவுச் சொற்பொழிவாற்றிய அறிஞர் அண்ணா அவர்கள் குலக்கல்வித் திட்டத்தை வன்மையாகக் கண்டித்ததோடு மட்டுமல்லாமல், அதனை எதிர்த்து அறப்போராட்டங்கள் பல நடத்தவேண்டிய அவசியம் பற்றியும் வீரவுரை நிகழ்த்தினார்.

### மும்முனைப் போராட்டம்

தி.மு. கழகத்தின் மத்தியச் செயற்குழுக் கூட்டம், 1953 சூலை முதல் வாரத்தில், சென்னை தலைமை நிலையத்தில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். கூட்டத்தில் நான், தலைமைக் கழகத்தின் பிற பொறுப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டோம்.

செயற்குழுவில், ஒரே நேரத்தில் மூன்று முனைகளில் கழகத்தின் சார்பாகப் போராட்டங்கள் நடத்துவது பற்றி விவாதிக்கப்பட்டது.

1953 சூலை 15ஆம் நாள் அன்று, புதிய குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்து, சென்னை முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார் இல்லத்தின் முன்பு, சம்பத் தலைமையிலான குழுவினர் மறியல் நடத்துவது என்றும், திருச்சி மாவட்டத்திலுள்ள 'டால்மியாபுரம்' என்று இருக்கும் புகைவண்டி நிலையத்தின் வடநாட்டவரின் பெயர் கொண்ட பலகையைக் கல்லக்குடி என்று மாற்றி அமைக்கும் போராட்டத்தைக் கலைஞர் கருணாநிதியின் தலைமையிலான குழுவினர் நடத்துவது என்றும், தமிழர்களை இழித்துப் பழித்துப் பேசிய பண்டித நேருவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், நாடெங்கணும் ஆங்காங்கு இரயிலை நிறுத்தும் போராட்டம் நடத்துவது என்றும், முடிவுகள் எடுக்கப்பட்டன.

மும்முனைப் போராட்டங்களை முறைப்படி நடத்துவதற்கான செயல்திட்டங்களை வகுக்க, அறிஞர் அண்ணா, நான், சம்பத், நடராசன், மதியழகன் ஆகியோர் அறிவகத்தில் கூடி ஆய்வு செய்து கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் காவல் துறையினர், துணை ஆணையர் அருள் தலைமையில் அறிவகத்திற்கு வந்து, எங்களை வளைத்துக் கைது செய்து, காவல் துறை ஆணையர் அலுவலகத்திற்குக் கொண்டு சென்று, பின்னர் எங்களை சென்னை மத்தியச் சிறைச் சாலையில் அடைத்து வைத்தனர்.

நாங்கள் ஐவரும் காவலர் கொண்டு வந்த காரில் ஏற்றப்படும்போது, அறிவகத்திற்கு முன்பு கூடியிருந்த திரளான மக்கள், "வாழ்க அறிஞர் அண்ணா! ஒழிக குலக்கல்வித் திட்டம்!" என்று முழக்கமிட்டனர். அப்போது அறிஞர் அண்ணா அவர்கள், கூட்டத்தினரைப் பார்த்து விடுத்த வேண்டுகோள் வருமாறு:

> **"தோழர்களே! அறப்போராட்டங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னரே, ஆச்சாரியாரின் அழைப்பு எங்களுக்குக்**

கிடைத்துவிட்டது. செயற்குழுவின் முடிவை ஒட்டி, என்னையும், என் தம்பிமார்கள் நால்வரையும் அரசாங்கத் தூதுவர்கள் அழைத்துச் செல்ல வந்திருக்கின்றனர். புறப்படுங்கள் என்று காவல்துறை அதிகாரி கேட்டுக் கொண்டதும், புன்னகையோடு நாங்கள் புறப்பட இருக்கிறோம். நான்கு தம்பிமார்களை என்னுடன் அழைத்துச் செல்கிறேன். இன்னும் எங்களைப் பின்பற்றி வரப் பல்லாயிரக்கணக்கான என் தம்பிமார்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணத்தோடும், பெருமிதத்தோடும் நாங்கள் செல்லுகிறோம்.

'தம்பியுடையான் படைக்கு அஞ்சான்' என்று நான் அடிக்கடி கூறுவது உண்டு. இனி நடக்க வேண்டிய போராட்டங்களில் வெற்றி நமக்கே என்பது உறுதியாகி விட்டது.

குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து ஆச்சாரியார் வீட்டுக்கு முன்னால் மறியல் - வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கல்லக்குடியில் போராட்டம்-பண்டித நேருவை எதிர்த்து இரயில் நிறுத்தப் போராட்டம், இந்த மூன்று முனைகளிலும் அறப்போராட்டங்களை நாம் தொடங்கியுள்ளோம். இந்த மூன்று போராட்டங்களிலும், கண்ணியமும், அமைதியும் கழகத் தோழர்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

ஆச்சாரியார் வீட்டு முன்பு அறப்போர் நடத்த இருந்த சம்பத் சிறைக்குச் செல்லுகிறார். அதனால் அந்தப் பொறுப்பினை சத்தியவாணிமுத்து ஏற்று நடத்துவார். கழகத் தொண்டர்கள் அவரைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னையும், என் தம்பிமார்களையும் சிறைக்குள் தள்ளி யிருக்கிறார் ஆச்சாரியார். ஆனாலும், நான் உங்களுடனே தான் இருக்கிறேன். தோழர்களே! போராட்டங்களை நடத்துங்கள், கண்ணியத்தை மறக்காமல்-அமைதியை இழக்காமல்! வணக்கம்.''

## சிறைத் தண்டனையை ஏற்றல்

மும்முனை அறப்போராட்டங்கள் நடைபெறுவதற்கு முன்னரே கைது செய்யப்பட்ட அறிஞர் அண்ணா, நான், சம்பத், நடராசன், மதியழகன் ஆகிய ஐவர் மீதும், பல குற்றவியல் சட்டப்பிரிவுகளின்படி அரசினர் சார்பாக வழக்குகள் தொடுக்கப்பட்டன. சென்னையிலுள்ள தலைமை மாகாணக் குற்றவியல் நீதிமன்றத்தில், எங்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்குகள் நடைபெற்றன. நாங்கள் ஈடுபட்ட செயல்கள் மனச்சான்றுப்படியும், நியாயப்படியும் முறையானவை என்று வாதாடினோம். நீதிபதி சட்டப்படி எங்களுக்கு மூன்று திங்கள் களுக்குச் சிறைத் தண்டனை என்று தீர்ப்பு அளித்தார். தீர்ப்பை நாங்கள் வீரப் புன்னகையோடு ஏற்றுச் சென்னை மத்தியச் சிறைக்கூடம் புகுந்தோம்.

இந்த வழக்கில் நாங்கள் ஐந்து பேர்கள் ஈடுபட்டிருந்த தால், செய்தித் தாள்கள் எங்களைக் குறிப்பிடும்போது, 'ஐம்பெருந்தலைவர்கள்' என்றே குறிப்பிட்டு வந்தன.

கழகம் அறிவித்த மூன்று முனைப் போராட்டங்களில், நாடெங்கணும் கலந்துகொண்ட கழக அறப்போர் வீரர்கள் அனைவரும், ஆங்காங்குக் கைது செய்யப்பட்டு, வழக்குகள் தொடுக்கப்பட்டு, மூன்று திங்கள்கள், ஆறு திங்கள்கள், ஓராண்டு என்ற வகையில் கடுங்காவல்தண்டனை விதிக்கப் பட்டுப் பல இடங்களிலும் இருந்த பெரிய சிறைச் சாலைகளில் அடைக்கப்பட்டனர். சென்னை, வேலூர், சேலம், கோவை, கடலூர், திருச்சி, மதுரை, பாளையங் கோட்டை ஆகிய இடங்களிலுள்ள பெரிய சிறைச்சாலை களில், இருபத்தையாயிரத்திற்கு மேற்பட்ட போராட்ட வீரர்கள் அடைக்கப்பட்டனர்.

அரசினரின் அத்துமீறிய அடக்குமுறை நடவடிக்கைகளை எதிர்த்து, ஆங்காங்குக் கழகத்தோழர்கள் நடத்திய கிளர்ச்சி களுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும் பொதுமக்கள் பேராதரவு தந்தனர்.

சென்னை மத்தியச் சிறைச்சாலையில், எங்களுடன் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட கழகத் தொண்டர்கள் அடைக்கப் பட்டிருந்தனர். நாங்கள் ஐவரும் சிறையில், 'பி' வகுப்பு அறைகளில் அடைக்கப்பட்டிருந்தோம். அறிஞர் அண்ணாவும், நானும் ஒரு அறையிலும், மற்ற மூவரும் தனித்தனி அறைகளிலும் அடைக்கப்பட்டிருந்தோம்.

அறிஞர் அண்ணா அவர்களின் தேவைகளை அவருடன் இருந்து நிறைவேற்றிவைப்பதில், நான் உதவியாக இருந்து வந்தேன். பகற்பொழுதுகளில் அறிஞர் அண்ணா அவர்கள், எங்கள் எல்லோருடனும் கலகலப்பாக உரையாடிப் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி எங்களுக்குத் தெளிவு ஏற்படுத்துவார். இரவு நேரங்களில், அறிஞர் அண்ணாவும், நானும் நீண்ட நேரம் உரையாடி மகிழ்வோம். அறிஞர் அண்ணா அவர்கள் பழைய அரசியல் நிகழ்ச்சிகளையும், வரலாற்றுக் குறிப்புக்களையும், அரசியல் - பொருளியல் - சமுதாயவியல் கலையியல் பற்றிய கருத்துக்களையும் சிறப்பாகத் தெளிவுபடுத்துவார்.

இரவு நேரங்களில் அறிஞர் அண்ணா, நான் தூங்கிய தற்குப் பிறகும் நீண்ட நேரம் ஏதேனும் ஒரு நூலைப் படித்துக் கொண்டிருப்பார். காலை 10 மணி அளவில்தான் படுக்கையைவிட்டு எழுந்திருப்பார். சில நாட்களில் நான் பகற்பொழுதில் சிறைச் சாலையில் இருந்த நூல் நிலையத் திற்குச் சென்று விருப்பமான நூல்களை எடுத்துப் படித்துக் கொண்டிருப்பேன். சில நூல்களை அறைக்கு எடுத்துக் கொண்டு வந்து படிப்பதுமுண்டு.

மூன்று திங்கள்கள் சிறைவாழ்வு நடத்தியபோது, அறிஞர் அண்ணா அவர்கள் மூன்று நூல்களை எழுதி முடித்தார். நான் 'பண்டைக் கிரேக்கம், 'ஜியார்டனோ புரூனோ', 'சார்லஸ்-பிராட்லா' ஆகிய நூல்களைச் சிறையில் இருந்தபோதுதான் எழுதினேன். சிறைச்சாலையில் நல்ல முறையில் படிக்கவும், எழுதவும் எங்களுக்கு வசதி கிடைத்திருந்தது.

மூன்று திங்கள்கள் கழித்து நாங்கள் ஐவரும் விடு விக்கப்பட்டோம். அதேபோல், பல்லாயிரக்கணக்கான கழகத்தோழர்களும், அவரவர் தண்டனைக் காலம் முடி வுற்றவுடன் விடுவிக்கப்பட்டனர். சிறையிலிருந்து வெளி வந்த ஐம்பெருந்தலைவர்களுக்குப் பெருநகரங்களில் வரவேற்பு-பாராட்டுக் கூட்டங்கள் மிகச் சிறப்பாக நடத்தப் பெற்றன.

## குலக்கல்வித் திட்டம் சட்டமன்றத்தில்முறியடிக்கப்படுதல்

ஆச்சாரியார் கொண்டுவந்த குலக்கல்வித் திட்டத்தை தி.மு.கழகத்தினர் மட்டுமல்லாமல், கம்யூனிசுட்டுக் கட்சியினர், சனநாயக முற்போக்குக் கட்சியினர் போன்ற எதிர்க்கட்சியினரும், காமராசர்-டாக்டர் வரதராசுலு நாயுடு போன்ற காங்கிரசுக்காரர்களும் கடுமையாக எதிர்த்தனர்.

1953ஆம் ஆண்டில் சென்னை சட்டமன்றத்தில், ஆச்சாரியாரின் குலக்கல்வித் திட்டம் பற்றிய பிரச்சினை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வல்லுநர் குழு ஒன்றினை அமைத்து, அது முடிவு கூறும்வரை, குலக்கல்வித் திட்டத்தை நிறுத்தி வைக்குமாறு கோரும் தீர்மானத்தை எதிர்க்கட்சித் தலைவர் தென்னேட்டி விசுவநாதம் கொண்டு வந்தார். தீர்மானத்தை விவாதத்திற்கு அனுமதிக்கக் கூடாது என்று கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் வாதிட்டார். ஆனால் அப்பொழுது அவைத் தலைவராக

இருந்த சிவசண்முகம் அவர்கள், தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள அனுமதி அளித்தார்.

தீர்மானத்தின்மீது, ஐந்து மணி நேரத்திற்கு மேலாகக் காரசாரமான முறையில் விவாதம் நடைபெற்றது. எதிர்க்கட்சி வரிசையிலிருந்த தலைவர்கள் பலரும் குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்தும், தீர்மானத்தை ஆதரித்தும் பேசினார்கள். இறுதியாகத் தீர்மானம் வாக்கு எடுப்புக்கு விடப்பட்டது. திருத்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 139 பேர்களும், அந்தத் தீர்மானத்திற்கு எதிர்ப்பாக 137 பேர்களும் வாக்களித்தனர். திருத்தத் தீர்மானம் வெற்றிபெற்றதன் மூலம், ஆச்சாரியாரின் குலக்கல்வித் திட்டமும், அமைச்சரவையின் முயற்சியும் தோல்வி அடைந்தன.

தம்முடைய குலக்கல்வித் திட்டம் தோல்வியடைந்த நிலையில் ஆச்சாரியார் முதலமைச்சர் பொறுப்பிலிருந்து இறங்க வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் பலரும், காங்கிரசுக்கட்சியினர் சிலரும் வற்புறுத்தினர். ஆச்சாரியார் தாமே பதவியைத் துறக்க முன்வராத காரணத்தால், டாக்டர் வரதராசுலு நாயுடு போன்ற காங்கிரசுக் கட்சியின் தலைவர்கள், அவரை ஆட்சிமனையிலிருந்து அகற்றப் பெரு முயற்சி செய்தனர். அவர்களின் முயற்சிக்கு ஆதரவு பெருகியிருந்ததைக் கண்ட ஆச்சாரியார், இறுதியில் முதலமைச்சர் பதவியிலிருந்து தாமாகவே விலகிக் கொண்டார். பின்னர் காமராசர் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அவர் ஆட்சிக்கு வந்தவுடன், புதிய குலக் கல்வித் திட்டம் அறவே அகற்றப்பட்டது. பழைய கல்வி முறையே நீடிக்கத் தொடங்கியது.

ஆச்சாரியாரின் குலக்கல்வித்திட்டம் நீக்கப்பட்டதானது, தி.மு. கழகத்திற்கு ஒரு மாபெரும் வெற்றியாக அமைந்தது.

## மொழிவழி மாநில அமைப்பு

*இந்தியாவிலுள்ள மாநிலங்களை மாற்றி அமைப்பது பற்றி ஆய்வு நடத்தி, அது பற்றிய அறிக்கையை அளிக்க வேண்டி, மத்திய அரசு குழு ஒன்றினை அமைத்தது. அந்தக் குழு மாநிலங்கள் தோறும் சென்று, மாநிலங்களின் சீரமைப்புப் பற்றிய கருத்துக்களைச் சேகரித்தது. அந்தக் குழு சென்னைக்கு வருகை தந்தபோது, அந்தக் குழுவைத் தி.மு. கழகத்தின் சார்பாக அறிஞர் அண்ணா, நான், மற்றும் மூன்று கழக முன்னணியினர் நேரில் சென்று சந்தித்து, கோரிக்கைகளை முன் வைத்தோம்.*

*குழுவினரிடம் நாங்கள் எடுத்துரைத்த கருத்துக்களில் முக்கியமானவை வருமாறு :*

> "ஒரே இந்தியா, இந்தியாவின் ஒருமைப்பாடு என்ற கொள்கைகளைச் சிலர் எவ்வளவுதான் வற்புறுத்தினாலும், இந்தியத் துணைக் கண்டமானது, பல்வேறு தேசிய இனப் பிரிவுகளையும், ஒன்றிற்கொன்று முரண்பாடான நிலைமை களையும், மாறுபாடான தன்மைகளையும் கொண்டதாகும். ஒன்றோடு ஒன்றை ஒரே வார்ப்பில் சேர்ப்பது என்பது, மிகக் கடினமானதொரு செயலாகும். இந்தியா, பல்வேறு தேசிய இனப்பிரிவுகளைக் கொண்டது என்பதை எவரும் புறக்கணித்து விடமுடியாது.
>
> ஒரு தேசிய இனப்பிரிவுக்கு வேண்டிய எல்லா இலக்கணங்களையும், இனம் - மொழி - வரலாறு - பண்பு - பழக்கவழக்கம் ஒட்டு மொத்த உறவு பற்றிய பெருமைகளையும் தமிழ்நாடு சிறப்பாகப்பெற்றுள்ளது. எனவே, தமிழ்நாடு தன்னாட்சி உரிமை பெறவும், தனக்கே உரிய தேசியப் பண்பாடுகளையும், திறமைகளையும், சிறப்புக்களையும் வளர்த்துக் கொள்வதற்கான வழிவகை களைத் தேடிக்கொள்ளவும் ஆன உரிமைகளைப் பெறத் தகுதி படைத்தது என்பது தெளிவான ஒரு உண்மையாகும்.

தமிழ்நாட்டு மக்களின் இசைவையும், வரலாற்று ஏடுகளின் ஆதாரத்தையும், திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ளது. மொழிவழி மாநிலக் கோரிக்கை என்பது, மொழியின் பாது காப்புக்காக மட்டுமல்ல; ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம், தங்கள் இயற்கையான தேசிய அவாக்களை நிறைவேற்றிக் கொள்ள, ஒரே அரசியல் அமைப்பின்கீழ் சேர்ந்து வாழவேண்டும் என்ற உண்மையை நிலைநாட்டவும் ஆகும். குறிப்பிடத்தகுந்த வேற்றுமைகளை உடைய இரு சாராருக்கு இடையில், ஒருசாரார் மற்றொருசாரார்மீது ஆதிக்கம் செலுத்தக்கூடாது என்ற கொள்கையை நிறைவேற்ற மொழிவழி மாநிலப் பிரிவினை தேவைப்படுகிறது.

சென்னை மாகாணம் என்பது, தமிழ் - தெலுங்கு - கன்னடம் - மலையாளம் ஆகிய நான்கு மொழிகளைப் பேசும் நான்கு பிரிவுகளைப் கொண்டதாக அமைந்திருக்கிறது. இதனை நான்கு மொழி வழி மாநிலங்களாக ஆக்குவதுதான் உடனடியான தேவையாகும்.

தற்பொழுது அமைந்துள்ள இந்திய அரசமைப்புச் சட்டம், இந்தியாவின் பல்வேறு தேசிய இனப் பகுதிகளை வலிவற்றனவாக ஆக்கியுள்ளது. பல தேசிய இனப் பகுதிகள் வலிவற்றனவாய் இருந்து வருவதால், இந்திய ஒருமைப் பாட்டில் உறுதிப்பாடு ஏற்படவில்லை.

மாநிலங்கள் மொழிவழி திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது, நிலப்பரப்பை மட்டும் பொறுத்தது அல்ல; மாநில அரசுக்கு இருக்கவேண்டிய அதிகாரங்கள் - உரிமைகள் ஆகியவற்றைப் பொறுத்தும் மாறுதல் ஏற்படவேண்டும் என்பது தி.மு. கழகத்தின் கோரிக்கையாகும். மொழிவழி மாநிலங்கள் அனைத்தும் முழு அளவில் தன்னாட்சியுரிமை பெற்றுத் திகழ வேண்டும் என்பது தி.மு. கழகத்தின் கொள்கையாகும்''

1954இல் தமிழ்நாடு தனி மாநிலமாக உருப்பெற்றது, பொதுவாக எல்லாத் தமிழர்க்கும், குறிப்பாகத் தி.மு.கழகத்தினர்க்கும் பெருமகிழ்வைத் தந்த ஒரு மாபெரும் வெற்றியாகும்.

## தி.மு.கழக மாவட்ட மாநாடுகள்

1953 பிப்ரவரி 14,15 நாட்களில் கோவையில், கோவை மாவட்ட தி.மு.கழக மாநாடும், ஏப்பிரல் 24,25 நாட்களில் இலால்குடியில் திருச்சி மாவட்ட தி.மு.கழக மாநாடும், சூன் 27,28 நாட்களில், விருதுநகரில் இராமநாதபுரம் மாவட்ட தி.மு.கழக மாநாடும், சூலை 4,5 நாட்களில், சிதம்பரத்தில், தென்ஆற்காடு மாவட்ட தி.மு.கழக மாநாடும், சூலை 11,12 நாட்களில் சென்னையில், சென்னை மாவட்ட தி.மு.கழக மாநாடும், 1954 ஏப்பிரல் 10,11 நாட்களில், தஞ்சையில், தஞ்சை மாவட்ட தி.மு.கழக மாநாடும், சூன் 26,27 நாட்களில் வேலூரில், வட ஆற்காடு மாவட்ட தி.மு. கழக மாநாடும், சூலை 10,11 நாட்களில் பொதட்டூர்ப்பேட்டையில் சித்தூர் மாவட்ட தி.மு.கழக மாநாடும், ஆகஸ்டு 21,22 நாட்களில் செங்கற்பட்டில் செங்கை மாவட்ட தி.மு. கழக மாநாடும், செப்டம்பர் 18,19 நாட்களில் பாளையங்கோட்டையில் நெல்லை மாவட்ட தி.மு.கழக மாநாடும், 1955 சனவரி 8,9 நாட்களில் மதுரையில் மதுரை மாவட்ட தி.மு.கழக மாநாடும், பிப்ரவரி 12,13 நாட்களில் பெங்களூரில் கருநாடக மாநில தி.மு.கழக மாநாடும் மிகச் சிறப்பாக நடந்தேறின.

அம்மாநாடுகளுக்குக் கழகத்தின் முன்னணித் தலைவர்கள் தலைவர்களாகவும், தொடக்குபவர்களாகவும், வரவேற்புக் குழுத் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். எல்லா மாநாடுகளிலும் அறிஞர் அண்ணாவும், நானும், பிற கழக முன்னணிச் சொற்பொழிவாளர்களும் கலந்துகொண்டு சிறப்புரைசள் ஆற்றினோம்.

## தி.மு.கழகத்தின் பொதுச் செயலாளராக நான் பொறுப்பேற்றுக் கொள்ளுதல்

*1950 முதல் 1956 வரையில், அறிஞர் அண்ணா அவர்கள் சென்னைக்கு வருகை தரும்போதெல்லாம் நானும், செழியனும் குடியிருந்த எங்களது வீட்டில்தான் வந்து தங்குவார். மூன்று நான்கு நாட்கள் அவர் தொடர்ந்து தங்கியிருக்கும் வாய்ப்பு ஏற்படும். அப்பொழுது இரவு பகலாக நானும், செழியனும், பிற கழக நண்பர்களும் அறிஞர் அண்ணா அவர்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தி மகிழ்வோம். அறிஞர் அண்ணா அவர்கள் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும், அறிவகத்தில் கழகப் பணிகளை ஆற்றவும் செல்லும்போது, நானும் அவருக்குத் துணையாகச் செல்லுவேன். அவரோடு அடிக்கடி கலந்துரை யாடல் நடத்தியதானது, கழகத்தைச் சீர்ப்படுத்தவும், கழகப் பணிகளைச் செம்மைப்படுத்தவும், கழகத்தைப் பலவகைகளிலும் வளர்க்கவும், சமுதாய - அரசியல் பிரச் சினைகளில் மிகத் தெளிவு பெறவும் பெரிதும் பயன்பட்டது.*

*அறிஞர் அண்ணா அவர்கள் என்னோடு கழகத்தின் எதிர்காலம் பற்றி உரையாடும்போது, கழகப் பொதுச் செயலாளராகப் புதிதாக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தார். கழகத்தில் சனநாயகமுறையும், சனநாயகப் பண்பும், சனநாயக அணுகுமுறையும் ஏற்பட, புதிய பொதுச் செயலாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும் என்று கூறினார்.*

**''கழகம் மிகக்கட்டுக்கோப்போடும், ஆர்வத்தோடும் வளர்ந்து வருவதற்குக் காரணம், நீங்கள் தலைமை தாங்கிக் கழகத்தை நடத்திச் செல்வதேயாகும். கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் உங்கள்மீது முழு நம்பிக்கை வைத்து எழுச்சியோடு செயல்பட்டு**

வருகிறார்கள். அப்படிப்பட்ட நம்பிக்கையைக் கழகத்தோழர்கள் வேறு எவர்மீதும் வைக்கமாட்டார்கள். இன்னும் பல ஆண்டுகளுக்கு நீங்கள்தான் பொதுச் செயலாளராக இருந்து கழகத்தை வழி நடத்திச் செல்லவேண்டும். வேறு யார் பொதுச் செயலாளராக ஆனாலும் கழகத்தின் வலிமை குன்றிப்போகும்'' *என்று அறிஞர் அண்ணாவிடம் கூறிவந்தேன்.*

*அதற்கு அண்ணா அவர்கள்,* ''நான் வலிவோடும், செல்வாக்கோடும் இருக்கும்போதுதான், என்னுடைய மேற்பார்வை யின்கீழ் கழகத்தின் முன்னணியினர், பயிற்சியும், பக்குவமும் பெறவேண்டும். அப்போதுதான், ஏற்படக்கூடிய குறைகளைத் தவிர்க்கவும், குற்றங்களைக் களையவும், தவறுகளை நீக்கவும், நேரிய வழியில் கழகத்தை நடத்திச் செல்லவும் என்னால் முடியும். நான் வலிவிழக்கும் நிலையில் மற்றவர்கள் பொறுப்புக்களை ஏற்கும்படி ஏற்பட்டுவிட்டால் அப்பொழுது கழகத்தைச் சீர்ப்படுத்தவோ, செம்மைப்படுத்தவோ, கட்டுப்படுத்தவோ என்னால் முடியாமல் போய்விடும்; வேறு யாராலும் முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். எனவே, நான் வலிமையோடும், செல்வாக்கோடும் இருக்கும்போதே, மற்றவர்கள் பயிற்சி பெறவேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன்'' *என்று குறிப்பிட்டார்.*

''உங்களுக்குப் பதிலாகக் கழகத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்று நடத்தும் தகுதியும், திறமையும் படைத்தவர்கள் எவரும் இப்போதைய நிலையில் இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை'' *என்று நான் கூறினேன்.*

''ஏன் நீயே கழகப் பொதுச் செயலாளர் ஆகலாம். நீ பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், உனக்குப் பக்கத்துணை யாக இருந்து,தேவைப்படும் உதவிகளை நான் எளிதாகச் செய்ய முடியும். நான் சொல்லுகிறபடி, எண்ணுகிறபடி நீ நடப்பாய் என்ற நம்பிக்கையும், உறுதிப்பாடும் எனக்கு எப்பொழுதும் உண்டு'' *என்று அறிஞர் அண்ணா தெரிவித்தார்.*

"பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்று நடத்துவது பற்றிச் சிந்திக்கும்போதே எனக்கு அச்சமும், கூச்சமும், மனக்கலக்கமும், தயக்கமும்தான் ஏற்படுகின்றன. நீங்கள் பொதுச் செயலாளர் பதவியை விடுகிறநிலையில், அதனை ஏற்க வேறு சில கழக முன்னணியினர் முன்வரக் கூடுமே-அப்படிப்பட்டவர்களில் ஒருவரைக்கூடப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கலாமே!" *என்று நான் தெரிவித்தேன்.*

*அதற்கு அறிஞர் அண்ணா அவர்கள்,* "கழக முன்னணியினராக உள்ள எல்லோருடைய தகுதி, திறமை, இயல்பு, பண்பு ஆகியவற்றை நான் நன்கு அறிந்துதான் வைத்துள்ளேன். சிலர் எனக்குக் கட்டுப்படமாட்டார்கள், வேறு சிலர் எதேச்சதிகாரமாக நடக்க முயலுவார்கள், மற்றும் சிலர் கழகத்தை இரண்டாக ஆக்கி விடுவார்கள்; வேறு சிலர் கழகத்தை விற்றுவிடுவார்கள்; மற்றுஞ்சிலர் கழகத்திற்குக் களங்கம் ஏற்படுத்தி அடியோடு அழித்து ஒழித்து விடுவார்கள். அப்படிப்பட்ட அவல நிலைகள் எவையும் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான், நான் உன்னைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்க விரும்புகிறேன். நீ கழகத்திற்கும், எனக்கும் கட்டுப்பட்டு நடப்பாய் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. உன்னை வழிநடத்திச் செல்வது என்பது எனக்கு மிக எளிதான ஒரு செயல் ஆகும். எனவே, நீ அந்த நிலைக்கு உன்னை ஆயத்தப்படுத்திக்கொள்!" *என்று விளக்கம் தந்தார்.*

*கழகத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பை நான் கட்டாயம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்ற கருத்தை, அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி என்னிடம் வலியுறுத்திக்கொண்டே வந்தார்.*

*நான் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தைக் கழகத் தோழர்களிடத்திலும், பொது மக்களிடத்திலும் உருவாக்கும் நோக்கத்தில், அறிஞர் அண்ணா அவர்கள், 1955,1956 ஆண்டுகளில்,* திராவிட நாடு

*இதழில் வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் என்னைப் பற்றி எல்லோரும் தெளிவாகத் அறிந்து புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகக் கட்டுரைகள் பல தீட்டி வந்தார். அவைகளில் பலவும் தம்பிக்குக் கடிதம் என்ற தலைப்பின்கீழ் வெளி யிடப்பட்டு வந்தன.*

*அறிஞர் அண்ணா அவர்கள் என்னைப் பற்றி எழுதிய தீந்தமிழ்ச் சொற்களால் ஆன செவ்விய சீரிய கருத்துக்கள் சிலவற்றை, நினைவுபடுத்திக் கொள்வதில் நான் பூரிப்பும், பெருமையும், பெருமிதமும் கொள்கிறேன்.*

அறிஞர் அண்ணா என்னைக் கண்டது பற்றி

> ''அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலேதான், நான் நெடுஞ்செழியனை முதன் முதல் கண்டேன்.
>
> உங்களில் பலரும் பார்த்திருப்பீர்கள். நல்லவேளை, அவருடைய துணைவியார் கண்டதில்லை என்று எண்ணுகிறேன் - தாடியுடன் நெடுஞ்செழியனை!
>
> அப்போது, தோழர் அன்பழகன் தீவிரமாகக் கட்சிப் பணி ஆற்றி வருபவர். தோழர் நெடுஞ்செழியன் தானுண்டு, தன் படிப்புண்டு என்று இருக்கும் போக்கினராகத் தோற்றமளித்து வந்தார். நான் அப்போது, தோழர் அன்பழகன் கல்லூரி யிலிருந்து வெளியேறியதும், கழகத்தில் வந்து சேருவார், தோழர் நெடுஞ்செழியன் எங்கேயாவது கல்லூரியில் கம்பனின் கவித்திறமை பற்றி (கட்டாயத்தாலும்), இளங்கோவடிகள் பற்றி (விருப்பத்துடனும்) எடுத்து உரைத்துக்கொண்டு, தமிழின் எழிலைக் கண்டும், காட்டியும் பணியாற்றி வருவார் என்றே எண்ணிக்கொண்டேன்.
>
> அதுபோல நடந்திருக்கக் கூடாதா? என்று ஆயாசத்துடன் கேட்கும் அவர் துணைவியார் தெரிகிறார்கள்! என்ன செய்யலாம்! அவரோ புயலில் குதித்துவிட்டார்''

என்னுடைய பேச்சாற்றலைப் பற்றி அறிஞர் அண்ணா

''தமிழ் எப்படி எப்படியெல்லாம் பேசுவதற்குரியது- இலக்கியம் பேச்சுடன் கலந்து வரும்போது எத்தகைய இன்பமளிக்கும் என்றெல்லாம் நான் பலமுறை எண்ணிப் பார்த்ததுண்டு! என் மனத்திலே உருவெடுத்துக் கொண்டிருந்த ஆசை நடமாடக் கண்டேன், தோழர் நெடுஞ்செழியன், கழக மேடைகளில் பேசத் தொடங்கியதும்!

கருவூர் ஆற்று மணலில்! நினைவிருக்கிறது-பெரியாரும் இருந்தார்! தோழர் நெடுஞ்செழியன் இலக்கியக் கருத்துக் களை இனிய முறையில் தெள்ளத்தெளிவாக எடுத்துரைத் தார்! தனித் தமிழில் செந்தமிழ் நடையில் அவர் பேசினார்! நல்ல விருந்து! ஆயினும் என்ன செய்வது? பாமர மக்களுக்கும் புரியக்கூடிய வகையில் நாளாவட்டத்தில் சொற்களின் அருமையையும், கடுமையையும் சிறிதளவு தளர்த்தும்படி கேட்டுக் கொள்ள வேண்டியிருந்தது. அவர் அளவுக்கு சாதாரண மக்கள் வளரவில்லை. எனவேதான் அவரை வளைந்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்ள வேண்டி வந்தது!

தரத்தை வளரச் செய்யும் போக்கிலா ஆளவந்தார்கள் மக்களையெல்லாம் விட்டு வைத்திருக்கிறார்கள்?

நடை இருக்கட்டும்! நண்பர் நெடுஞ்செழியனின் திறம் இருக்கிறதே, அதைக் கண்டுதான் வியப்புற்றேன்''

என்னுடைய இயல்புகள் பற்றி அறிஞர் அண்ணா

''என்னிடம் இல்லாத-நான் விரும்பாததால் அல்ல, இயலாததால்! ஓர் அருங்குணம் அவரிடம் உண்டு- கண்டிருப்பீர்கள்!

ஓயாது உழைப்பது! எப்போதும், எங்கேயும், எதையாவது செய்துகொண்டே இருப்பது!

என்னாலே இதைக் கண்டு இரசிக்க முடியும்! ஆனால் என்னை அந்த நிலைக்கு மாற்றிக்கொள்ள என்னால் இயலவில்லை!

நான் அடிக்கடி கனவு காணுவது உண்டு, சோலையிலே சொகுசாக உலவுவதுபோல! ஆனால் அந்தக் காலம் மலையேறிவிட்டது!

பொதுப் பிரச்சினைகளைப் பற்றி, தோழர் நெடுஞ்செழியன் எப்பொழுதும் எதையாவது சிந்தித்துக் கொண்டே இருப்பார்! ஏதேனும் காரியம் ஆற்றிக் கொண்டே இருப்பார்! அவர் அத்தகைய இயல்பினர்! நேரம் வீணாகிவிட்டது என்று கூறத்தக்க போக்கிலே, அவர் இருந்ததை நான் கண்டதே இல்லை!

அவரின் இந்த இயல்பு கழகத்திற்குப் பெருந்துணையாக அமைந்திருக்கிறது என்பதை எடுத்துக் கூறத்தேவை யில்லை.

வீட்டில் அவர் ஏதேனும் ஒரு வேலையை ஆர்வத் தோடும், அக்கறையோடும் செய்துகொண்டிருக்கும்போது, அவர்மீது என் குறும்புப் பார்வையைச் செலுத்துவேன். அது கண்டு அவர் சிறிது தளருவார். எனினும் அவரது இயல்பு அவரை விடாது. மறுகணம், ஏதாவது ஒரு வேலையைத் தொடங்கிக் கொள்வார்"

சிறைச்சாலையில் ஒன்றாக இருந்தது பற்றி அறிஞர் அண்ணா

சென்னை மத்தியச் சிறைச்சாலையில் நானும், தோழர் நெடுஞ்செழியனும் மூன்று திங்கள்கள் ஒரே அறையில் தங்கி இருந்தோம். அங்கு என்னவெல்லாம் நடந்தன என்று கருதுகிறீர்கள்?

நான் ஒரு பக்கம் உட்கார்ந்து, இராஜாஜி இராஜினாமா செய்வது போல, அவர் அவசரச் சட்டம் பிறப்பிப்பதைப் போல, நான் பாதுகாப்புக் கைதியாக ஆக்கப்படுவதைப் போல, பெரியார் என்னைக் கட்டித் தழுவிக் கொள்வதைப் போல, இப்படிப் பலப்பல கனவுகளை நான் விழித்தபடி கண்டு கொண்டிருப்பேன். அல்லது ஏதேனும் ஒரு நூலைப் பிடித்துக் கொண்டிருப்பேன். சில நேரங்களில் தோழர் நெடுஞ்செழியனிடம் இலக்கியம் பற்றி, அரசியல் பற்றி, வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றி, கலைத் திறன்கள் பற்றி உரையாடி மகிழ்ந்து கொண்டிருப்பேன்.

அவரோ, வேலை! வேலை! வேலை! என்ற பொறுப்புணர்ச்சி யுடன் ஏதேனும் ஒன்றைச் செய்து கொண்டிருப்பார்.

அவருடைய இந்த அருங்குணத்தை நாம் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு, கழகத்தைப் பலவகைகளிலும் மேன்மையுறச் செய்துகொள்ளவேண்டும் என்பது எனது நீங்காத ஆவல் ஆகும்.''

## பெரியாரால் கூடக் குறைகாண முடியாதவர் நெடுஞ்செழியன்

''தோழர் நெடுஞ்செழியனைப் பெரியார் அவர்கள் சில காலம் தம் மேற்பார்வையில் வைத்திருந்து பார்த்தார். பெரியாரால் யார்மீதும் குற்றம் காணமுடியும். ஆனால் நெடுஞ்செழியனிடம் அவராலும் ஒரு குறைகூடக் கண்டறிந்து கூற இயலவில்லை! அத்தகைய பண்பாளர் நமக்குக் கிடைத்திருக்கிறார். அவருக்குக் கிடைத்திருக்கும் கழகமோ, சாமான்யமானதல்ல. அப்படிப்பட்ட கழகத்திற்குப் பொதுச் செயலாளராகி, அதனைச் சீராகவும், சிறப்பாகவும் வழி நடத்திச் செல்லும் தகுதியும், திறமையும் அவருக்கு நிரம்ப உண்டு என்பதில் எனக்கு நல்ல நம்பிக்கை உண்டு.''

## நான் கழகப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்படுதல்

தி.மு.கழகத்தின் அடுத்த பொதுச் செயலாளராக நான் தான் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற கருத்தை, அறிஞர் அண்ணா அவர்கள், 'திராவிட நாடு' இதழில், அவ்வப்போது எழுதி வந்தது மட்டுமல்லாமல், கழகத்தின் முக்கியத் தலைவர்களிடமும், பொறுப்பாளர்களிடமும் அந்த எண்ணத்தை எடுத்துக் கூறி, அதற்கான சூழ்நிலையைப் பக்குவப்படுத்தி வந்தார்.

அதற்கு ஏற்ப, புதிய பொதுச் செயலாளரை முறைப்படி தேர்ந்தெடுப்பதற்கான தி.மு. கழகத்தின் பொதுக் குழுக் கூட்டத்தினை, அறிஞர் அண்ணா அவர்கள், 1955 ஏப்பிரல் 24ஆம் நாள்அன்று, சென்னை தியாகராயர் கல்லூரி மண்டபத்தில், காலை 10.30 மணி அளவில் கூட்டினார்.

பொதுக்குழுக் கூட்டத்திற்குப் பொதுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் ஆர்வத்தோடும், எழுச்சியோடும், மகிழ்ச்சியோடும் வருகை தந்திருந்தனர். பொதுக் குழுக் கூட்டத்திற்குப் பொதுச் செயலாளர் என்ற முறையில் அறிஞர் அண்ணா தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சி நிரலில் கண்டிருந்தபடி, முதலில் பொதுச் செயலாளர் தேர்வு நடைபெறவேண்டும் என்றும், அதன்படி பொதுச் செயலாளர் பெயரை முன்மொழிந்து, வழிமொழியலாம் என்றும் அறிஞர் அண்ணா குறிப்பிட்டார்.

சம்பத் எழுந்து, என்னுடைய பெயரை, பொதுச் செயலாளர் பொறுப்புக்கு முன்மொழிவதாகக் கூறினார். அதனை அடுத்து நடராசன், கலைஞர் கருணாநிதி, அன்பில் தருமலிங்கம், ஜி.பி. சோமசுந்தரம், மதுரை முத்து, கே.டி.எஸ். மணி, எம்.எஸ். இராமசாமி, இளம்பரிதி,

என்.எஸ். இளங்கோ, பொள்ளாச்சி இராமனுசம், ஆர். சாம்பசிவம், முல்லை சத்தி, எம்.எஸ். சிவசாமி, நாஞ்சில் மனோகரன் முதலியோர் வழிமொழிந்தனர்.

நான் ஒரே மனதாக, தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிஞர் அண்ணா அவர்கள் பொதுக்குழு உறுப்பினர்களின் கர வொலி, வாழ்த்தொலி ஆகியவற்றிற்கிடையே அறிவித்தார். கீழே நாற்காலியில் உட்கார்ந்திருந்த என்னை, மேடைக்கு வரச் சொல்லிப் பொதுச் செயலாளர் இருக்கையில் அமரும்படி கேட்டுக் கொண்டார். நான் மேடை ஏறி அறிஞர் அண்ணாவின் பக்கத்தில் போய் நின்றேன். அறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''கழகம் இப்பொழுது உயருகிறது என்பதை எல்லோரும் உணருங்கள். இதனை மாற்றாரும் அறிந்துகொள்வர்'' என்று கூறியவுடன், எல்லோரும் கைதட்டி, ஆரவாரித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

''நடமாடும் பல்கலைக்கழகம்! நாவலர்! இனி நமது பொதுச் செயலாளர்!'' என்று கூறி, அறிஞர் அண்ணா அவர்கள் என்னை இருக்கையில் அமரவைத்து, அருகில் அமர்ந்து கொண்டார்.

அறிஞர் அண்ணா அவர்கள் என்னை வரவேற்று, வாழ்த்திப் பேசும்போது,

> ''பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நாவலர் நெடுஞ்செழியன், இன்று முதல், கழக நாளேடான நம்நாடு இதழின் ஆசிரியர்ப் பொறுப்பையும் ஏற்கிறார். கழகம் எல்லா வகைகளிலும் மிகச் சீரோடும், சிறப்போடும் செயல்பட நாம் அனைவரும் அவருக்கு முழு ஒத்துழைப்பையும், உதவியையும் அளித்துப் பணி ஆற்ற வேண்டும்.

வெள்ளுடையான் கோயிலில், வீரரெல்லாம் கூடிப் புதிய பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுத்துவிட்டோம். புன்சிரிப்புத் தவழும் முகமும், புதுமை வேகமும் நிறைந்த தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் கழகத்தைக் கட்டிக்காக்கும் பெரும் பொறுப்பில் அமர்த்தப்பட்டுவிட்டார்.

நாவலர், நல்லவர், நற்றொண்டர் என்றெல்லாம் தோழர்களின் பாராட்டுக்களைப் பெற்றவர். அத்தகைய இளவல், திருவும், உருவும் கொண்டு பரிமளிக்கும் தென்னகத்து அரசியல் இயக்கத்தின் தலைமை நாற்காலியில் அமர்த்தப்பட்டு விட்டார்.

வரலாற்றில் இடம் பெறக்கூடிய இந்தப் பொதுக் குழுவை மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும், மணி மண்டபங் களும் நிரம்பிய சிங்காரச் சென்னையில், வேறு இடத்திலும் கூட்டாமல், வெள்ளுடைவேந்தன் - தியாகத் தீபம் தியாக ராயரின் பெயரால் விளங்கும் அறிவுக் கோயிலில் நடத்திட முடிவு செய்த சென்னை மாவட்டக் கழகத்தாரின் சீரிய செயலைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

தென்னகத்து அரசியல் வரலாற்றில், தியாகராயரின் திருநாமத்தை, விழிப்புணர்ச்சி கொண்ட எவரும் மறந்து விடமுடியாது. அவரை வெள்ளுடை வேந்தன் என்பர். இது வெறும் அடைமொழி அல்ல-தூய மணி அவர்!

அப்பேர்ப்பட்ட ஒரு ஒப்பற்ற தலைவரின் திருமண்டபத்தில் கூடி, வீர இளைஞரைத் தன்னுடைய பொதுச் செயலாளராக ஏற்றுக் கொண்டிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம். இது ஒரு புனிதமான காட்சியாகும்; பூரிக்கக்கூடிய நிகழ்ச்சியு மாகும்.

தோழர் நெடுஞ்செழியன் பல்கலைக் கழகத்தில் பெற்ற பட்டத்தைக் கொண்டு, உத்தியோக வேட்டைக்குச் சென்று,

ஏதோ ஒரு நூறு, இரு நூறு ரூபாய் கொண்டு வந்தால், நல்லதாக இருக்குமே என்று எதிர்பார்த்த மிகச் சாதாரணமான குடும்பத்தின் பிள்ளை. அந்த ஆசையால்தான் அவரது பெற்றோரும் அவரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைத்தனர்.

இருந்தும் பெற்ற கல்வியை உற்றார்களின் கவலையைப் போக்கும் உத்தியோகத்தைத் தேட முயலாமல், பெரியாரின் பெரும்படையில் சேர்ந்து பணியாற்றுவதே, பெருமைக்குரிய பெரும் பணியாகும் என்று அவர் கருதினார். நாடு, நகரம், பட்டி தொட்டி எங்கும் பவனி வந்தார். எந்த ஒரு கூட்டத்திலும் பெரியார் பேசுவதற்கு முன்பு மக்கள் இவரது குரலைத்தான் கேட்டு மகிழ்வார்கள்.

அப்படிப்பட்ட ஒரு இளைஞர், எஃகு உள்ளங்கொண்ட ஏறு, எல்லாவற்றையும் விட எளிமையும், அடக்கமும், நிதானமும் கொண்ட ஒரு தொண்டர், நமது பொதுச் செயலாளராக ஆகியிருப்பதை எண்ணி நான் பூரிப்பும், பெருமையும் கொள்கிறேன். நாவலர் நெடுஞ்செழியன் தலைமையின் கீழ், கழகம் வெற்றி நடைபோடும் என்பது உறுதி! நாம் அனைவரும் அவருக்குப் பக்கத் துணையாக இருந்து பணி ஆற்றுவோமாக!''

*என்று குறிப்பிட்டார்.*

*நான் தி.மு.கழகத்தின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில், நன்றி தெரிவித்துப் பேசுகையில்,*

''நான் தி.மு.கழக்தின் பொதுச் செயலாளராக ஆகிக் கழகத்தைச் சிறப்பாகவும், செம்மையாகவும் நடத்திச் செல்லுவதற்கான பயிற்சியையும், பழக்கத்தையும், பக்குவத்தையும் பெறவேண்டித் தொடர்ந்து என்னை வற்புறுத்தி வந்த அறிஞர் அண்ணா அவர்களுக்கும்,

என்னை ஒரே மனதாகத் தேர்ந்தெடுத்த பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவர்க்கும் எனது உளங்கனிந்த நன்றியை உவகைப் பெருக்கோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத்தில் பெறற்கரிய பெரும் பேற்றினைப் பெற்றிருக் கிறேன். குருவித் தலையில் பனங்காயை வைத்ததைப் போல, இன்று என்மீது பெருஞ்சுமை சுமத்தப்பட்டிருக் கிறது. இந்தப் பெருஞ்சுமையைத் தாங்குகிற தகுதியும், திறமையும் எனக்கு இருக்கின்றனவா என்பதில் எனக்கு ஐயப்பாடு இருந்து கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணாவும், கழகத் தோழர்களும் என்றென்றும், எந்த நிலையிலும் என் பக்கத் துணையாக நின்று, என்னை எல்லா வழிகளிலும், வகை களிலும் காப்பாற்றுவார்கள் என்ற முழு நம்பிக்கையோடுதான் இந்தப் பொறுப்பை நான் ஏற்றிருக்கிறேன்.

என் கடன் பணிசெய்து கிடப்பதே! தங்கடன் என்னையும் தாங்குவதே! என்ற முதுமொழிக்கு இணங்க, ஓயாமல் கழகப் பணிகளைச் செய்வதை என் கடமையாகக் கொள்வேன். அதே நேரத்தில் என்னை எல்லா வகையிலும் தாங்கிப் பிடிப்பதை உங்கள் கடமையாகக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

கழகம் வளரவும், கொள்கை பரவவும், குறிக்கோள் வெற்றி பெறவும் உங்களோடு இணைந்து நின்று தொடர்ந்து பாடுபடுவேன் என்பதில் உறுதிகொள்கிறேன்.''

*என்று குறிப்பிட்டேன்.*

*மாவட்டங்கள்தோறும், மாவட்டக் கழக மாநாடுகள் அனைத்தும் நடந்து முடிந்த வுடன், தி.மு.கழக இரண்டாவது மாநில மாநாட்டை, திருச்சி நகரில் நடத்துவது என்றும், அதற்கான முறையில், வரவேற்புக்குழு, பந்தல் அமைப்புக்குழு, விளம்பரக்குழு, நிதிக்குழு, உணவு வழங்கும் குழு, இடவசதிகள் செய்யும் குழு, தொண்டர்*

படைக்குழு, ஊர்வலக்குழு போன்ற பல்வேறு குழுக்களை அமைப்பது என்றும் பொதுக்குழுவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## என்னுடைய பொறுப்புகள் பற்றி அறிஞர் அண்ணா

கழகப் பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற எனக்கு ஊக்கமும், ஆக்கமும் ஏற்படுகின்ற வகையில், அறிஞர்அண்ணா அவர்கள் திராவிட நாடு இதழில் தொடர்ந்து அவ்வப்போது என்னைப் பற்றிச் சில குறிப்புக்களை எழுதினார். கழகத் தோழர்களும், பொது மக்களும் என்னிடத்தில் மிகுந்த மதிப்பும், மரியாதையும் வைக்கவேண்டும் என்ற நல்லநோக்கத்தில் அவர் எழுதினார். அவற்றில் சில வருமாறு :

> "கழகம் இப்பொழுது ஆயிரத்திற்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டிருக்கிறது. அது பொதுமக்களின் இடைவிடாத் தொடர்பினைக்கொண்ட இயக்கமாகத் திகழ்கிறது. கழகத்தில் களம் பல கண்ட காளைகள், தியாகத் தழும்பேற்ற தீரர்கள், கண்ணியத்தைக் காப்பாற்றும் பண்பினர் எண்ணற்றவர்கள் இருக்கின்றனர்.
>
> நாம், நமது விழியில் நீர் வழியப் பெரியாரால் வீதிக்கு விரட்டப்பட்டோம். இன்று நமக்கு என்று ஒரு தனிக் கழகமும், அதற்கென்று ஒரு தலைமை நிலையமும் அமைந்திருக்கின்றன. நம்முடையது என்று பெருமையுடன் கூறிக்கொள்ளத்தக்க முறையில், ஓர் அச்சகம் தோன்றி யிருக்கிறது. நாம் இவற்றையெல்லாம் உருவாக்கினோம் என்று மகிழ்ச்சியுடன் பேசிக் கொள்ளத்தக்க தன்மையில் செயல்பட்டியல் ஏற்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் பெற்றுச் செயற்படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ளார் தோழர் நெடுஞ்செழியன்! அவர் பன்மடங்கு இவற்றின் வனப்பை

யும், வலிவையும் அதிகமாக்கிக் காட்டப்போகிறார் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

நமக்கென்று ஒரு தலைமை நிலையம் ஏற்பட்டுள்ளது என்றேன்! மகிழ்கிறீர்கள்! ஆனால், நானோ, அந்தஇடத்தில் சில பகுதிகள் கலனாகி வருவதையும், அதனால், அந்தக் கட்டடம் புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியத்தையும், அதற்காக ஏற்படக்கூடிய செலவினையும் எண்ணிக் கவலைப்படுகிறேன்.

இப்பொழுது, தோழர் நெடுஞ்செழியனை அந்த இடத்திலே கொண்டுபோய் அமர்த்திவிட்டோம். அவருடைய நாட்களில், தலைமை நிலையம் புதிய உருவும், எழிலும் பெறவேண்டும். அதற்கான வசதிகளை நாம் அவரிடம் தேடித் தரவேண்டும்.

நமக்கென்று ஓர் அச்சகம் உண்டு என்று பெருமையுடன் பேசுகிறோம். ஆனால் நான் எவ்வளவோ முயன்றும் நம்நாடு நாளேடு பெரிதாக ஆகிடவில்லை. அந்தப் பொறுப்பும் அவரிடம் விடப்பட்டிருக்கிறது. இப்போது அதற்கான ஆதரவைத் திரட்டி அவரிடம் ஒப்படைக்க வேண்டியது நமது கடமையாகும்''

## பொதுச் செயலாளர் ஆனபிறகு மேற்கொண்ட பணிகள்

*தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டவுடன், அறிஞர் அண்ணா அவர்களைத் தலைமைக் கழகத்தின் அவைத்தலைவராக ஆகி எனக்கு உறுதுணையாகவும், உதவியாகவும், வழிகாட்டியாகவும் இருந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண் டேன். அறிஞர் அண்ணாவும் பெருந்தன்மையோடு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.*

என்.வி.நடராசனைக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராக நியமித்துக் கொண்டேன். பூவாளூர் பொன்னம்பலனார் அவர்களை நம்நாடு அலுவலகத்தின் மேலாளராக இருந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டேன்.

அறிஞர் அண்ணாவின் ஆதரவோடு, கழகத் தோழர்கள் மூலம் கணிசமான அளவுக்கு நிதி திரட்டித்தலைமை நிலையத்தைப் புதுப்பிக்க, 'நம்நாடு' அச்சகத்தை மேம்படுத்த, தலைமை நிலைய அலுவலர்களை நியமிக்க, தேவையான முயற்சிகளை மேற்கொண்டேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் நான்கு-ஐந்து நாட்கள் என்ற முறையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, கழகப் பொதுக் கூட்டங்களிலும், கிளைக் கழகத் திறப்பு விழாக்களிலும் கலந்துகொண்டேன். விடுபட்டிருந்த சில மாவட்டக் கழக மாநாடுகளை நடத்தி முடித்தேன். கழகத்திற்குப் புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும் பணி ஆங்காங்குத் தீவிரமாக முடுக்கி விடப்பட்டன.

அவ்வப்போது அறிஞர் அண்ணாவுடன் கலந்துரை யாடல்கள் நடத்திச் செயல்திட்டங்கள் தீட்டி அவற்றை நடைமுறைப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டேன்.

### திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடு

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடு, 19.11.55இல், சென்னை கோகலே மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாநாட்டிற்கு மதியழகன் தலைமை தாங்கினார். நான் மாநாட்டைத் தொடங்கிவைத்தேன். அறிஞர் அண்ணா, நடராசன் ஆகியோரும், மாணவர் கழகத்தைச் சேர்ந்த

*சொற்பொழிவாளர்களும் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர். இசைச் செல்வி கஸ்தூரியின் இன்னிசையுடன் மாநாடு தொடங்கியது.*

*மண்டபம் முழுவதும் கழகக் கொடிகளாலும், தோரணங் களாலும் கண்களைக் கவரும் வகையில் அழகு செய்யப் பட்டிருந்தது. மாநிலம் எங்குமிருந்து இயக்க மாணவர்கள் திரண்டு வந்திருந்தனர்.*

அந்த மாநாட்டினைத் தொடங்கி வைத்து நான் பேசும்போது,

''தி.மு. கழகம் நேரடியாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் பணியாற்றி வருகிறது. ஆனால் திராவிட மாணவர் கழகத்தைப் பொறுத்தவரையில், அரசியலைப் புரிந்து கொள்ளுகிற அளவிற்கும், தெரிந்துகொள்ளுகிற அளவிற்கும் மட்டுமே அரசியலில் பங்குகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது. மாணவர்கள் நேரடி அரசியலில், அதாவது ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள், அடக்குமுறைச் சட்டங்களை மீறுதல், கைது ஆகுதல், சிறைக்குச் செல்லுதல் போன்ற நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. படிப்பு பாழாகிற அளவுக்கோ, படிப்புக்குத் தடங்கல் ஏற்படுகிற அளவுக்கோ எந்த ஒரு நேரடி அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது. படிக்க வேண்டிய - படிக்க விரும்புகிற படிப்பு முழுவதையும் படித்து முடித்துத் தமது திறமைகளை வளர்த்துக்கொண்டு, கல்விச் சாலையிலிருந்து வெளியேறியதற்குப் பிறகே, மாணவர்கள் நேரடி அரசியலில் பங்குகொள்ள வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாகும்.

மாணவர்கள் பார்வையாளர்களாக இருந்து அரசியல் நாடகங்களைக் கவனித்து வர வேண்டுமேயல்லாமல், அரசியல் நாடக அரங்கத்தில் ஏறி, வேடம் தாங்கித் தாமும்

நடிக்க ஆரம்பித்துவிடக்கூடாது. படிப்பு பாழாகாத வகையில், நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் தேவைப்படும் தொண்டு களை மட்டும் நல்ல முறையில் நிறைவேற்ற மாணவர்கள் முன்வரவேண்டும்.

தி.மு.கழகம் ஓங்கி வளர்ந்துள்ள ஆலமரம் என்றால், மாணவர் கழகம் அந்த ஆலமரத்திற்கு உறுதுணையாக இருக்கும் விழுது போன்றதாகும்.

மாணவர்கள் அறிவாற்றல் திறமைகளை, எல்லா வகை களிலும், எல்லா நெறிகளிலும் வளர்த்துக் கொண்டால்தான், அவர்கள் எதிர்கால அரசியலை திறம்பட நடத்திச் செல்ல முடியும். அந்தத் தன்மையில் கழக மாணவர்கள் தங்களைத் திறம்பட ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும்''

*என்று குறிப்பிட்டேன்.*

### கே.ஆர். இராமசாமி நடிப்பிசைப் புலவர் ஆதல்

*தமிழக நாடக உலகிலும், திரைப்பட உலகிலும் சிறந்த நடிகர் என்ற பெயரும், புகழும் பெற்றிருந்த நடிகர் கே.ஆர். இராமசாமி அவர்கள், சிறந்த பாடகராகவும் விளங்கினார்.*

*அவருடைய இன்னிசை அரங்கு ஒன்று, 10.12.55இல் சென்னை கோகலே மண்டபத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சிக்கு நான் தலைமை தாங்கினேன்.*

*நடிகர் கே.ஆர்.ஆர். அவர்கள் நல்ல தமிழ்ப் பாடல்களை சிறந்த பண்களில் மிக இனிமையாகப் பாடினார். அவரை நான் பாராட்டிப் பேசும்போது அவருக்கு 'நடிப்பிசைப் புலவர்' என்ற பெருமைமிகு பட்டத்தைச் சூட்டினேன். அதிலிருந்து, அவர் நடிப்பிசைப்புலவர் என்றே எல்லோராலும் அழைக்கப்பட்டார்.*

அவர், அறிஞர் அண்ணா அவர்களால் மிகவும் மதிக்கப்பட்டுப் பெரிதும் பாராட்டப்பட்டவர் ஆவார். அறிஞர் அண்ணாவுக்கும், என்னைப் போன்றவர்களுக்கும் மிக நெருங்கிய நண்பராகத் திகழ்ந்தவர். அவர், அறிஞர் அண்ணா எழுதிய 'சந்திரோதயம்', 'சந்திரமோகன்', 'நீதி தேவன் மயக்கம்', 'காதல் ஜோதி', 'ஓர் இரவு', 'வேலைக்காரி', 'சொர்க்க வாசல்' போன்ற நாடகங்களிலும் திரைப்படங்களிலும் சிறப்பாக நடித்தவர்.

அவர், கழகத்திற்கு நிதி திரட்டுவதற்கு என்று ஏற்பாடு செய்யப்பட்ட பல நாடகங்களில் நடித்துக் கழகத்திற்குக் கணிசமான அளவு நிதி திரட்டித் தந்தவர்.

### தேவிகுளம் - பீர்மேடு தமிழர்க்கே எனும் போராட்டம்

மொழிவழி மாநிலம் பிரிக்கப்படும் முயற்சி மேற் கொள்ளப்பட்டபோது, திருவிதாங்கூர் சமஸ்தானத்திலிருந்த தேவிகுளம்-பீர்மேடு என்னும் தமிழர்கள் மிகவாக வாழ்ந்த பகுதிகளைத் தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை, தி.மு.கழகம் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளாலும் வற்புறுத்தப்பட்டு வந்தது.

தேவிகுளம்-பீர்மேடு என்ற பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்படவில்லை என்பது மட்டுமின்றித் தமிழகத் தோடு இணைந்திருந்த செங்கோட்டை வட்டத்தில் ஒரு பகுதியைக் கேரள மாநிலத்திற்கு ஒதுக்குவது என்றும், இந்தியப் பிரதமர் பண்டிதநேரு முடிவு எடுத்தார். அப்பொழுது சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த காமராசர் அவர்களும் அந்த முடிவுக்கு ஆதரவு அளித்தார்.

அப்படிப்பட்ட முடிவை எதிர்த்துத் தமிழகத்தைச் சார்ந்த அத்துணை அரசியல் கட்சிகளும் கடுமையான கண்டனத் தைத் தெரிவித்தன. கண்டன ஆர்ப்பாட்டங்கள்- வேலை

நிறுத்தம் - ஊர்வலங்கள் - பொதுக்கூட்டங்கள் ஆங்காங்கு நடத்தப்பட்டன. இந்தக் கண்டன நடவடிக்கைகளில் காங்கிரசுக் கட்சி மட்டும் கலந்துகொள்ளவில்லை. தமிழகத்தைச் சேர்ந்த மற்ற அனைத்து அரசியல் கட்சிகளும், பொதுமக்களும் கலந்துகொண்டனர். முதலமைச்சராக இருந்த காமராசர் பதவியை விட்டு விலகவேண்டும் என்ற முழக்கம் எங்கணும் எழுப்பப்பட்டது.

1956 பிப்ரவரி 20ஆம் நாள், தமிழகம் முழுவதும் பொதுவேலை நிறுத்தம் - கடையடைப்பு செய்வதென்று அனைத்துக் கட்சித்தலைவர்களாலும் முடிவு எடுக்கப் பட்டது. பொது வேலைநிறுத்தம் கடையடைப்பு அறப்போரைக் கண்காணித்து நடத்தக் குழு ஒன்று, சர். பி.டி.இராசன் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் நான், தமிழரசுக் கழகத் தலைவர் சிவஞானம், கம்யூனிசுட்டுக் கட்சித் தலைவர் ஜீவானந்தம், சோசியலிஸ்டுக் கட்சித் தலைவர் அந்தோணிப் பிள்ளை, பிரஜா சோசியலிஸ்டுக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்து பணியாற்றினோம்.

பொது வேலை நிறுத்தம், கலவரம் எதுவும் இல்லாமல் மிக அமைதியாகத் தமிழகம் தழுவிய வகையில் சிறப்பாக நடந்தேறியது. மக்களின் உணர்வையும், ஆர்வத்தையும், அக்கறையையும் புரிந்துகொள்ளுகின்ற அளவிற்கு மத்திய-மாநில அரசுகள் இல்லாதிருந்ததாலும், ஆதிக்க அதிகார ஆணவம் தலைவிரித்து ஆடியதாலும், பொது வேலைநிறுத்தத்தின் நோக்கம் நிறைவேறவில்லை. அதன் காரணமாகத் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட இழப்புக்கள் ஏராளம் ஆகும்.

## திருச்சி மாநில மாநாட்டிற்கு அறிஞர் அண்ணாவின் அழைப்பு

*1956இல், திருச்சியில், தி.மு. கழகத்தின் மாநில மாநாடு நடைபெறுவதற்கு முன், அறிஞர்அண்ணா அவர்கள் மாநில மாநாட்டின் முக்கியத்துவம் பற்றியும், பொதுச்செயலாள ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த என்னைப் பற்றியும் சிறப்பித்து,* திராவிட நாடு *இதழில்,* தம்பிக்குக் கடிதம் *என்ற பகுதியில் தொடர்ந்து கட்டுரைகள் பல எழுதிக் கழகத் தோழர்களையும், ஆதரவாளர்களையும் மாநாட்டிற்கு வருகை தருமாறு விரும்பிக் கேட்டுக்கொண்டார்.*

*அவர் எழுதி வெளியிட்ட கருத்துக்களில் சிலவற்றை மட்டும் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.*

> ''திருச்சியில் மாநில மாநாடு! மிகப் பெரிய பொறுப்பு, நம்மையெல்லாம் அறைகூவி அழைக்கிறது! அதற்கான அரும் பெரும் முயற்சிகளில் நாம் மிக மும்முரமாக ஈடுபட்டு, நமது பொதுச் செயலாளருக்குப் பெருந்துணையாக நிற்கவேண்டும்.
>
> இவற்றையும், இவைபோன்ற வேறு பல கடமைகளையும் நாம் நிறைவேற்றிக் கொடுத்தால்தான், நமது பொதுச் செயலாளர் மூலம், நமது கழகம் பெறவேண்டிய புதிய பொலிவுக்கும் வலிவுக்கும் வழி செய்தவர்களாவோம்.
>
> நேற்றுத்தான், நாம் அனைவரும் கண்ணீரும், கம்பலையுமாக வெளிவந்தது போல் இருக்கிறது. இதற்குள் என்னென்ன கடினமான கட்டங்கள், எவ்வளவு பெரிய எதிர்ப்புக்கள், இவைகளையெல்லாம் தாண்டி, இன்றைய நிலையில் இரண்டாவது மாநில மாநாட்டை நடத்தும் கட்டத்திற்கு நாம் வந்திருக்கிறோம்.
>
> இதுகளாவது கட்சியை நடத்துவதாவது என்ற ஏளன மொழிகளும், இழிமொழிகளும் ஈட்டிகள் போல வந்து நம்மைக் குத்தின!

இதோ! இரண்டாவது பொதுச் செயலாளர் நமது கழகத்திற்கு! இரண்டாவது மாநில மாநாடு திருச்சியில்!

இதுகளாவது, ஒன்று கூடி வாழுவதாவது, என்று எதிர்ப்போர் இட்ட சாபம், நம்மை மிரட்டிற்று!

நாம் ஒன்றுகூடி வாழுவது மட்டுமா? ஒருவரை ஒருவர் நம்பி வாழவும் கற்றுக் கொண்டோம்! தனி மனிதர்களைவிட, ஓர் அமைப்பே ஆற்றலுடையதும், முக்கியம் வாய்ந்ததுமாகும் என்ற தத்துவம், இப்போது நடைமுறைக்கு வந்துவிட்டது.

நமது வளர்ச்சி சாதாரணமானதல்ல! ஏ! அப்பா! பாரேன்! இதுகளுக்குள் மூண்டுவிடப்போகிற வம்பு வல்லடிகளை, போட்டி பொறாமைகளை, பூசல் ஏசல்களை என்று எதிரிகள் பலரும் கறுவினர்!

இதோ, நாம் அனைவரும் சேர்ந்து ஒருமனதாகத் தேர்ந் தெடுத்து, உடனிருந்து, பணியாற்றுகிறோம்-புதிய பொதுச் செயலாளருடன்!

இப்படிப்பட்ட கட்டத்திற்கு நாம் வந்திருக்கிறோமே என்பதை எண்ணி நான் மகிழ்ச்சியிலே பெரிதும் திளைத்திருக்கிறேன்! நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றி உங்கள் சீரிய யோசனைகளைக் கூறுவதுடன், சிறிதளவு பணத்தையும் சேர்த்துத் தரவேண்டுகிறேன், மாநில மாநாட்டுக்கு!

புதிய கட்டம்! - புதிய பொதுச் செயலாளர்! - அவர் தலைமையில் இரண்டாவது மாநில மாநாடு! - அதைச் சிறப்புற நடத்தித் தருவதிலேதான், கழகத்தின் மற்றோர் புதிய கட்டம் மலர இருக்கிறது!

புதிய பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியனின் திறத்தையும், அருங்குணத்தையும் கழகம் முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால் நாம் ஒவ்வொரு

வரும், நமது கடமைகளைத் தவறாமல் செய்து முடிக்க வேண்டும். அதற்கான முயற்சி எடுக்க வேண்டும் என்று எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்!

நாம், நமது குடும்பத்தின் முழு வலிவும், பூரணப் பொலிவும் திருச்சி மாநில மாநாட்டில், விளங்கிடும் வகையில், கூடிட வேண்டியது நீங்காக் கடமையாகும்.

களம் செல்லத் துடிப்போர்க்குக் கட்கம் முக்கியமே தவிர, கட்டில் தந்தத்திலா? தங்கத்திலா? வட்டிலில் பாலா? தேனா? வனிதையின் மொழி யாழா? குழலா? என்பதல்ல முக்கியப் பிரச்சினைகள்!

வதைபடும் தாயகத்தை நாம் காண்கிறோம்! வாழ்வுக்கான வழிவகை காணக் கூடுகிறோம்! இன்னல், இழப்பு ஆகிய வற்றை ஏற்கும் உறுதியான உள்ளம் படைத்தோராகிய நாம், திருச்சியில் கூடுகிறோம்!

நாவலர் நெடுஞ்செழியனைக் கழகக் காவலராகக் கொண்டு கூடுகிறோம்! நாவலர் நம் கழகக்காவலர்! நம்மிடம் ஒப்படைக் கப்பட்டுள்ள படை ஒப்புயர்வற்றது! உளத்திண்மை கொண்டது! என்பதை உணரத்தக்க அளவிலும், வகையிலும் ஆற்றல் மிக்க தம்பிதான், நாவலர் நெடுஞ்செழியன்!"

*என்று அறிஞர் அண்ணா எழுதிய கருத்துக்கள் கழகத் தோழர்களுக்கு மிக்க உணர்ச்சியை ஊட்டின.*

## திருச்சியில் தி.மு. கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு

*தி.மு.கழகத்தின் பொதுக்குழு கூடித் தீர்மானித்ததற்கு இணங்க, கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு, 1956ஆம் ஆண்டு மேத் திங்கள் 17,18,19,20 ஆகிய நாட்களில், திருச்சி நகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.*

மாநாட்டிற்கான மிகப் பெரிய பந்தல், பிரதிநிதிகள் தங்குவதற்கான தனிக் கட்டடங்கள், உணவு விடுதிகள், அஞ்சல்-தந்தி நிலையங்கள், தொண்டர் படையினர் தங்கும் பாசறை போன்ற எல்லா ஏற்பாடுகளையும், அன்பில் தருமலிங்கம் தலைமையிலான வரவேற்புக்குழு, மிக நல்ல முறையில் செய்திருந்தது.

மாநில மாநாட்டிற்குக் கழகப் பொதுச் செயலாளர் என்ற முறையில், நான் தலைமை தாங்கினேன். சேலம் மாவட்டம் பேளுக்குறிச்சி மிட்டாதார் சோமசுந்தரம் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். மாநாட்டில் அறிஞர் அண்ணா உட்படக் கழக முன்னணித் தலைவர்களும், முக்கியப் பேச்சாளர்களும் சிறப்புரைகள் நிகழ்த்தினர்.

### கலை நிகழ்ச்சிகள்

மாநாட்டில், திருவாவடுதுறை இராசரத்தினம் அவர்களின் நாதசுர இசையரங்கு, கலைவாணர் கிருட்டிணன் அவர்களின் வில்லுப்பாட்டுக் கலைநிகழ்ச்சி, புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி, இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன், நடிகமணி டி.வி. நாராயணசாமி ஆகியோர் நடித்த நாடகங்கள், நாகூர் அனிபா, ஜி.கஸ்தூரி, பி.எஸ். செல்வா ஆகியோரின் இன்னிசை அரங்குகள் ஆகியன மிகச் சிறப்பாகவும் கவர்ச்சிகரமாகவும், மகிழ்ச்சியூட்டும் வகையிலும் நடந்தேறின.

### மாநாட்டு ஊர்வலம்

17.5.56 அன்று காலை, திருச்சி சிந்தாமணிப் பகுதிக்கு அருகில், காவிரியாற்றங்கரையிலிருந்து மாபெரும் ஊர் வலம் புறப்பட்டது. கழகத் தோழர்கள் பல்லாயிரக்கணக்

கில், கைகளில் கழகத்தின் இருவண்ணக் கொடிகளை ஏந்தி காலை 6 மணி முதலே காவிரியாற்றங்கரையில் குழுமினர். தொண்டர் படையினர் ஆயிரக்கணக்கில் சீருடை அணிந்து போர்ப்படை புறப்பட்டதைப் போல் அணிவகுத்து நின்றனர். ஊர்வலத்தின் முன் பகுதியில் கழகக் கொடிகளை ஏந்திய வீரர்கள் அமர்ந்த வண்ணம், ஐந்து யானைகளும், இருபத்தைந்து குதிரைகளும் சென்றன. ஊர்வலத்தில் பல நாதசுரக் குழுவினர், பேண்டு வாத்தியக் குழுவினர், தாரை-தப்பட்டைக் குழுவினர் பங்கு பெற்று அடுத்தடுத்து அணி வகுத்து வந்தனர். முரசுகள் ஒலித்தன. துந்துபிகள் முழங் கின. எக்காளங்கள் ஒலி எழுப்பின. திருச்சின்னங்கள் முழங் கின. வழிநெடுக அதிர்வேட்டுக்கள் போடப்பட்டன.

மாநாட்டுத் தலைவரான என்னையும், மாநாட்டைத் தொடங்குபவரான சோமசுந்தரம் அவர்களையும், வரவேற்புக் குழுத் தலைவர் அன்பில் தருமலிங்கம் அவர்களையும் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட கழகச் செயல்வீரர்கள், 'அறிஞர் அண்ணா வாழ்க!' நாவலர் வாழ்க!' திராவிட நாடு திராவிடர்க்கே!' இந்தி ஒழிக, தமிழ் வாழ்க!' என்ற முழக்கங்களை விண்ணதிர எழுப்பினர்.

ஊர்வலத்தில் பங்குகொண்ட கருநாடக மாநிலத்தவர் கன்னட மொழியிலும், ஆந்திர மாநிலத்தவர் தெலுங்கு மொழியிலும், கேரள மாநிலத்தவர் மலையாள மொழி யிலும் வாழ்த்தொலி எழுப்பி வந்தனர்.

## கொடியேற்றுவிழா

ஊர்வலம் பகல் 2 மணிக்குத் திருச்சி காஜா மலைக்கு அருகில் இருந்த வள்ளுவர் திடலில் அமைந்திருந்த

மாநாட்டுப் பந்தலை வந்தடைந்தது. ஓங்கி உயர்ந்த கொடி மரத்தில் நான் கழகத்தின் இருவண்ணக் கொடியை ஏற்றி னேன். அறிஞர் அண்ணா உட்பட அத்துணைக் கழகத் தலைவர்களும், செயல்வீரர்களும் கொடிமரத்தைச் சுற்றிச் சூழ்ந்து நின்றிருந்தனர். கொடி ஏற்றியபோது வாழ்த் தொலிகள் எழுப்பப்பட்டன.

## கண்காட்சி திறப்பு

அன்று மாலை 5 மணி அளவில் கழக வரலாற்றையும், கழகக் கொள்கைகளையும் விளக்கக்கூடிய வகையில் அமைந்த கண்காட்சியைக் கழகத் துணைப் பொதுச் செயலாளர் நடராசன் அவர்கள் திறந்து வைத்தார். அந்தக் கண்காட்சியில், உலகைத் திருத்திய உத்தமர்கள், அறிவியல் கண்டுபிடிப்பாளர்கள், சீர்திருத்தச் செம்மல்கள், பகுத்தறிவுப் பகலவர்கள், விடுதலைப் போராட்டத் தலைவர்கள், புரட்சி வீரர்கள் போன்றவர்களின் படங்களும், அவர்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்களும் வைக்கப்பட்டிருந்தன.

பின்னர் நாதசுர இசைப் பெரும்புலவர் திருவாவடுதுறை இராசரத்தினம் அவர்களின் நாதசுர இசை அரங்கு இரண்டு மணிநேரம் நடைபெற்றது. அதன் பிறகு கலைவாணர் கிருட்டிணன் அவர்களின் 'புத்தர் வரலாறு' பற்றிய வில்லுப் பாட்டுக் கலைநிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடந்தேறியது.

## மாநாடு தொடக்கம்

18.5.56 அன்று காலை 9 மணிஅளவில், மாநாடு தொடங் கியது. இசைச் செல்வி கஸ்தூரியின் இன்னிசை அரங்கு நடைபெற்றது. அடுத்து சேலம் மாவட்டம் பேளுக்குறிச்சி மிட்டாதார் சோமசுந்தரம் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்து உரைநிகழ்த்தினார்.

திராவிட இயக்கத்தின் முதுபெரும் தலைவியாக விளங்கிய மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார் அவர்களுக்கு, அவரது நீண்டநாள் பொதுத் தொண்டினைப் போற்றிப் பாராட்டும் விதத்தில், 'தி.மு.க. பெருந்தொண்டர்' என்ற விருதினை, அறிஞர் அண்ணா அவர்கள் பெருத்த கரவொலிக்கிடையில், அளித்தார். அதற்கான கேடயத்தை யும் அவர்களிடம் வழங்கினார்.

### மாநாட்டிற்குத் தலைமை தாங்குதல்

மதுரை செல்வா அவர்களின் இனிய இன்னிசைக்குப் பிறகு, மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் அன்பில் தருமலிங்கம் அவர்கள், மாநாட்டிற்கு வருகை தந்திருந்த அனைவரையும் வரவேற்று நல்லுரை ஆற்றினார். பின்னர் அவர் என் பெயரைக் குறிப்பிட்டு, மாநாட்டிற்குத் தலைமை தாங்கி, மாநாட்டைச் சீரோடும் சிறப்போடும் நடத்தித் தருமாறு, முன்மொழிந்து என்னைக் கேட்டுக்கொண்டார். அவர் முன்மொழிந்ததைத் தமிழகத்தின் எல்லா மாவட்டங் களையும் சார்ந்த மாவட்டக் கழகச் செயலாளர்களும், ஆந்திரம், கருநாடகம், கேரளம், பம்பாய், ஆமதாபாத் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மாநிலச் செயலாளர்களும் வழிமொழிந்து பேசினார்கள்.

இறுதியில் அறிஞர் அண்ணா அவர்கள், பெருத்த ஆரவாரவொலிக்கிடையில் எழுந்து வழிமொழிந்து பேசினார். அவர் எடுத்த எடுப்பிலே,

> ''தம்பி வா! தலைமை தாங்க வா! உன் ஆணைக்கு நாங்கள் எல்லோரும் அடங்கி நடப்போம்! தலைமையேற்று நடத்தவா!''

என்று அழகாகவும், அருமையாகவும், மணிச் சுருக்க மாகவும், பொருள் பொதிந்த முறையிலும் கூறியபோது, மாநாட்டுப் பந்தலில் கூடியிருந்த இலட்சக்கணக்கான கழகத்

தோழர்களும், பொது மக்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கி, அறிஞர் அண்ணா வாழ்க, நாவலர் வாழ்க, கழகக் காவலர் வாழ்க, பொதுச் செயலாளர் வாழ்க, நெடுஞ் செழியன் வாழ்க என்று வாழ்த்தொலி எழுப்பிக் கையொலி செய்தனர்.

நான் தலைமையுரை ஆற்றியபோது குறிப்பிட்ட சில கருத்துக்கள் வருமாறு :

''திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாள ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த மாநில மாநாட்டிற்குத் தலைமை தாங்கும் பெரும்பேறு பெற்றிருப்பது குறித்து, நான் பெருமகிழ்வடைகிறேன்.

என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்ட அறிஞர் அண்ணா அவர்களுக்கும், எனக்கு இந்தப் பெரும் பொறுப்பை அளித்துள்ள கழகப் பொறுப்பாளர்களுக்கும், எனது உளங் கனிந்த நன்றியை உவகைப் பெருக்கோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

''படைபெருத்ததால் பார் சிறுத்ததோ, பார் சிறுத்ததால் படைபெருத்ததோ'' என்ற முதுமொழிக்கு இணங்க, கழகத் தொண்டர்படை பெருத்ததால் திருச்சி மாநகர் சிறுத்ததோ, திருச்சி மாநகர் சிறுத்ததால் கழகத் தொண்டர்படை பெருத்ததோ என்று நாமெல்லோரும் வியப்புறும் வகையில், கழகத் தொண்டர்கள் அனைவரும் திருச்சி நகரில் அணி திரண்டிருக்கிறார்கள்.

மாபெரும் மக்கள் கூட்டத்தை இந்த மாநாட்டுப் பந்தலில் நான் காணும்போது, வெள்ளம் போல் கழகத்தவர் கூட்டம்! வீரங்கொள் கூட்டம்! அன்னார் உள்ளத்தால் ஒருவரே! உடலினாற் பலராய்க் காண்கின்றனர்!'' என்று எண்ணத் தோன்றுகின்றது.

கடந்த ஆறு ஆண்டு காலத்தில், கழகத்தைக் கட்டிக் காத்து வளர்க்க, இடுக்கண் இடையூறுகளை ஏற்று, இன்னல் இழப்புக்களைத் தாங்கி, தொல்லை துயர்களைச் சுமந்து அரும்பாடுபட்ட கழக அடலேறுகள் அத்துணைப் பேர்க்கும், எனது வணக்கத்தையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் அனைவரும் இந்த மாநாட்டில் ஒன்று திரண்டு நின்று, கடந்து வந்த காலத்தைத் திரும்பிப் பார்க்கிறோம். இனிக் கடக்க வேண்டிய எதிர்காலத்தை எம்பிப் பார்க்கிறோம். தமிழ் இலக்கணத்தில் **அரிமாநோக்கு** என்று ஒரு சொற்றொடர் சொல்லப்படும். அதாவது சிங்கமானது நெடுந்தொலைவு கடந்து வந்த பிறகு, தான் வந்த வழியைத் திரும்பிப் பார்க்குமாம்; அதே நிலையில், தான் செல்ல வேண்டிய வழியை எம்பியும் பார்க்குமாம். அப்படிப்பட்ட அரிமா நோக்குடன், நாம் அனைவரும் இந்த மாநாட்டில் குழுமி யிருக்கிறோம்.

சென்ற ஆறு ஆண்டுகளில் புதிய கழகத்தை நாம் பொலிவுடன் தோற்றுவித்தது, அறிஞர் அண்ணா அவர்களைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தது, மாவட்டக் கழக மாநாடுகளை மாவட்டந்தோறும் நடத்தியது, முதல் மாநில மாநாட்டைச் சென்னையில் வெற்றிகரமாக நடத்தியது, இட ஒதுக்கீட்டு அறப்போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றிகண்டது, மும்முனைப் போராட்டத்தில் பங்கு கொண்டு பல்லாயிரம் பேர் சிறைசென்றது, கைத்தறியாளர்களின் துயர்துடைக்கக் கைத்தறித் துணிகளைத் தோளில் சுமந்து ஊர்தோறும் விற்பனை செய்தது, இந்திப் பெயர்ப் பலகை அழிப்புப் பேராட்டத்தில் ஈடுபட்டு இந்தித் திணிப்பு எதிர்ப்பு உணர்ச்சியை வெளிப்படுத்தியது, புயலால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு உண்டி- உடை-

உறையுள் வழங்கியது, மொழிவழி மாநிலம் கோரி அறப்போர் நடத்தியது போன்ற சீரிய தொண்டுகளை, நான் நினைத்துப் பார்க்கிறேன்! பூரிப்பும், பெருமையும், பெருமிதமும் கொள்கிறேன்!

'தடைக்கற்கள் உண்டு என்றாலும் தடந்தோள்கள் உண்டு' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பொன் மொழிக்கு இணங்க, கடந்த காலத்தில் நமக்கு எதிராக எதிரிகளாலும், அரசினராலும் ஏவிவிடப்பட்ட எதிர்ப்புக்கள், இழைக்கப்பட்ட கொடுமைகள், அள்ளி வீசப்பட்ட அடக்கு முறைகள், எள்ளி நகையாடப்பட்ட இழிசொற்கள்- பழிச் சொற்கள் போன்ற எல்லாவற்றையும் எதிர்கொண்டு, துவளாமல் - துயரடையாமல் - வளையாமல் - நெளியாமல் - பணியாமல் வெற்றி நடைபோட்டு வீறுடன் வந்துள்ளோம்.

அடிக்கப்படுகின்ற பந்து உந்துவதைப் போல, அரைக்கப் படுகின்ற சந்தனம் மணப்பதைப்போல, எரிக்கப்படுகின்ற காரகில் மணங்கமழ்வதைப்போல, சுடப்படுகின்ற செம்பொன் ஒளிர்வதைப்போல, பட்டை தீட்டப்படுகின்ற வைரம் ஒளி உமிழ்வதைப்போல, தாக்கப்படுகின்ற பூனை புலியாக மாறுவதைப்போல, எதிர்ப்புகள் தாக்கத்தாக்க, நமது கழகம் வலிவோடும், பொலிவோடும் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது.

டில்லி ஏகாதிபத்திய ஆட்சியினர் தென்னாட்டுக்குத் தீங்குகளை இழைக்கும்போதும், தென்னாட்டில் ஆதிக்க அதிகாரத்தை நிலைநாட்டும்போதும்,இந்தி வல்லாட்சியைத் திணிக்கும்போதும், சுரண்டல் திட்டங்களை நிறைவேற்றும் போதும், மாநில உரிமைகளைப் பறிக்க முற்படும்போதும், நாம் மிகக் கடுமையாக அவைகளை எதிர்த்துப் போராடி வந்திருக்கிறோம். தென்னாட்டு உரிமைகளையும் நலங்களை யும், வளங்களையும் காக்க, இனியும் தொடர்ந்து போராடு வோம்.

கண்ணீரோடு பிறந்த நமது கழகம், எதிர்ப்பு-ஏளனம் ஆகியவற்றிற்கிடையே ஓங்கி வளர்ந்து, தாயகத்தின் முழு விடுதலைக்கும், உரிமைகளுக்கும் பரிந்து பேசி, தோள் தட்டி, வலிமையைப் பெற்று நிமிர்ந்து நிற்கிறது.

மக்களுக்கு வயிறார உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், வாழ வழி, ஓய்வு, உல்லாச வசதி போன்ற அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படவேண்டும். அந்த அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித்தரத்தான் திராவிட நாடு தனி நாடாக ஆக வேண்டும்! நல்லாட்சி மலர வேண்டும்! வளங்கள் கொழிக்க வேண்டும்! வாழ்வுரிமைகள் பெருக வேண்டும்! என்பதனை நாம் ஓயாமல், ஒழியாமல் வற்புறுத்தி வருகிறோம்.

ஆயிரம் மக்களைக் கொண்ட வாட்டிகனும், 30 ஆயிரம் பேர்களைக் கொண்ட அண்டோராவும், 3 இலட்சம் மக்களைக் கொண்ட லக்சம்பர்க்கும் உலகில் தனித் தனி நாடுகளாக விளங்கும்போது, எல்லாவிதமான இயற்கை வளங்களையும் கொண்ட, பத்துக் கோடி மக்களை உடைய திராவிட நாடு, ஏன் தனி நாடாக ஆக முடியாது? வாழ முடியாது? என்பதைப் பொதுமக்கள் சிந்திக்க வேண்டும்.

திராவிட நாடு தனி நாடாக ஆனால், நமது மொழி, நாகரிகம், பண்பாடு, கலைகள் ஆகியவற்றைக் காப்பாற்றவும், வளர்க்கவும் வழிவகைகள் ஏற்படும். நமது தேவைகளை எல்லா வகையிலும் முழுதுற நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

பெரியாரின் பொருந்தாத் திருமணப் போக்கு, நமக்கெல் லாம் பிடிக்காத காரணத்தால், பெரியாரை விட்டுப் பிரிந்துவர வேண்டியிருந்தது. ஆனால், பெரியார் அவர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்த கொள்கைகள், சுட்டிக் காட்டிய

குறிக்கோள்கள், வகுத்துத் தந்த கோட்பாடுகள், தீட்டித்தந்த திட்டங்கள் ஆகியவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு, அவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்துவதற்காகவே, நாம் தனிக் கழகம் கண்டுள்ளோம்.

சமுதாய அமைப்பிலே சமத்துவம் ஏற்படவேண்டும். பொருளாதாரத் துறையிலே சமதர்மத் தத்துவம் நிலை நாட்டப்படவேண்டும். அரசியலிலே சனநாயகப் பண்பும், முறையும் தழைக்க வேண்டும். கலையியலிலே திராவிடப் பண்பாடு மிளிரவேண்டும், மொழியியலிலே தனித்தமிழ் கோலோச்ச வேண்டும். அறிவியல் அடிப்படையில் நாமும், நாடும் வளரவேண்டும். பகுத்தறிவு நெறி பரவவேண்டும். எல்லா வகைகளிலும் திராவிடம் தன்னிறைவு பெற்றுத் திகழவேண்டும் என்பன போன்ற கொள்கைகளை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

இழித்துப் பழித்துப் பேசுவதன்மூலம், தி.மு.கழகத்தை அழித்து ஒழித்துவிடலாம் என்று எதிர்க்கட்சியினர் பல விதமான இழிசெயல்களில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுப் பார்க்கின்றனர். தி.மு கழகத்தைப் பற்றி மாற்றார்கள் என்ன கருதுகிறார்கள்? எந்த அளவுக்கு அதற்கு மதிப்பு அளிக் கிறார்கள்? என்பதல்ல முக்கியம். கழகத்தைப் பற்றி மக்கள் மன்றத்தினர் என்ன கருதுகிறார்கள்? என்பதுதான் முக்கியம். கழகத்தை ஐயப்பாட்டோடும், பகையுணர்ச்சி யோடும், வெறுப்புணர்ச்சியோடும் தொடக்கக் காலத்தில் எண்ணி வந்த மக்கள் மன்றத்தினர், காலம் செல்லச் செல்ல, ஐயப்பாட்டையும் - பகைமையையும், வெறுப்புணர்ச்சி யையும் குறைத்துக் கொண்டு, தி.மு. கழகக் கொள்கை களுக்கு நல்ல தீர்ப்பு அளித்து, நல்ல ஆதரவு காட்டி வருகின்றனர்.

திராவிட முன்னேற்ற கழகம், முழுக்க முழுக்க எல்லா வகையிலும், ஒரு சிறந்த சனநாயக அமைப்பாகவே இருந்து அரும்பணிகளை ஆற்றி வருகிறது. தி.மு. கழகத்தில் சர்வாதிகாரம் தலைதூக்குவதற்கு ஒரு துளியும் இடமில்லை. தி.மு.கழகம் முறைப்படி உருவாக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்ற சட்டதிட்டங்கள் வழியேதான் செயல்பட்டு வருகின்றது.

தி.மு. கழகம் சனநாயக உணர்ச்சியின் அடிப்படையில் தோன்றிச் சனநாயகப் பண்புகளைக் கடைப்பிடித்து, சனநாயக நெறிமுறைகளோடு வளர்ந்து வருவதற்கு முழு முதல் காரணராகவும், அறிவுரைகளை அவ்வப்போது கூறிவரும் அரசியல் பேரறிஞராகவும், நம்மையெல்லாம் நேர் வழியில் அழைத்துச் செல்லும் வழிகாட்டியாகவும் இருந்து வருபவர் அறிஞர் அண்ணா அவர்களே ஆவார்கள். அவர்கள் நமக்கெல்லாம் ஒளிதந்து உணர்ச்சியையும், எழுச்சியையும், ஆர்வத்தையும் ஊட்டிவருகிறார். அவர் நமது கழக ஆல மரத்தின் ஆணிவேராகத் திகழ்கிறார். நாம் அதன் சல்லி வேர்களாக விளங்குகிறோம்.

அறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு அறிவுறுத்திய கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு என்னும் மூன்று முக்கியக் கோட்பாடுகளை, நாம் என்றும் மறத்தலாகாது. நாம் கடமை உணர்ச்சி குன்றாமல், கண்ணியப் பண்பு குறையாமல், கட்டுப்பாட்டு உறுதி குலையாமல் பாடுபடுவோமாக!

அகன்று விரிந்த காவிரிப் பேராறு, சிறு - பெரு வாய்க்கால்கள் வழியாகச் சென்று, கழனிகளில் பாய்ந்து, பயிர்களை வளர்ப்பதைப்போல, இந்த மாநாட்டிலிருந்து திரும்பிச் செல்லும் நீங்கள் ஒவ்வொருவரும், உங்கள் உங்கள் ஊர்களில், மாநாட்டில் கூறப்பட்ட கருத்துக்கள்

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஆகியவற்றை ஆங்காங்குப் பரப்பிக் கழகப் பயிர்களைச் சிறப்பாக வளர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு கட்சியை வளர்ப்பதற்குத் தேவைப்படும் வசதிகள் நம்மிடம் மிகக்குறைவாகவே அமைந்திருக்கின்றன. அவற்றை வைத்துக்கொண்டுதான், நாம், நமது முயற்சி யாலும், ஊக்கத்தாலும் இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறோம்.

பத்திரிகை வலிவு, பண வலிவு, ஆதிக்க வலிவு, அதிகார வலிவு நம்மிடம் கிடையாது. ஆனால், நெஞ்சு உரமும், நேர்மைத் திறமும், கொள்கைப் பற்றும், உரிமை வேட்கை யும், உழைப்பும், உறுதியும் கொண்ட இளைஞர்கள் இலட்சக்கணக்கில் நமது கழகத்தில் இடம் பெற்றிருக் கிறார்கள்.

நமது கொள்கைகளையும்; குறிக்கோள்களையும், கருத்துக் களையும், நமது கடுமையான உழைப்பின் மூலமும், விளக்கங்களின் மூலமும், நாம் இதுவரை அவை ஏறாத உள்ளங்களில் ஏற்றினால், புகாத செவிகளில் புகுத்தினால், தடவாத இதய நாடிகளைத் தடவச் செய்தால், நுழையாத நெஞ்சங்களில் நுழையவிட்டால், பொதுமக்களின் பேராதரவு நமக்கு நிரம்பக் கிடைக்கும் என்பது உறுதி.

இங்கே கூடியிருக்கின்ற உங்களையெல்லாம் பார்க்கிறேன்! உங்கள் கண்களிலே ஒளிவீசுகின்றது! உங்கள் உள்ளத்தில் பொங்கி எழுகின்ற உணர்ச்சி, முகத்திலே தென்படுகின்றது! உங்களின் நடைஉடை பாவனைகளில் எழுச்சி தாண்டவ மாடுகின்றது!

எஃகு உள்ளமும், ஏக்கழுத்தும், தடைபடாக் குருதி ஓட்டமும், தாயகப் பற்றும், விடுதலை வேட்கையும், நெஞ்சு உறுதியும், நேர்மைத் திறமும் கொண்ட வீரர்களே! திராவிடத் தீரர்களே!

தாயகத்தை மீட்க, நாட்டவர்க்கு நல்வாழ்வு நல்கிட வாரீர்! வாரீர்! என்று அழைக்கிறேன்! அடிமை நிலை ஒழிப்போம்! இழந்த வாழ்வைப் பெறுவோம்! இன்புறுவோம்!''

## சிறப்புச் சொற்பொழிவுகள்

மாநாட்டில், கழகத்தின் முன்னணிச் சொற்பொழிவாளர்களான சிந்தனைச் சிற்பி சிற்றரசு, பேராசிரியர் அன்பழகன், சம்பத், கலைஞர் கருணாநிதி, மதியழகன், காஞ்சி கலியாணசுந்தரம், ஆசைத்தம்பி, டி.கே. சீனிவாசன், கவிஞர் கண்ணதாசன், சத்தியவாணிமுத்து, என்.வி. நடராசன், ப.உ. சண்முகம், இராம. அரங்கண்ணல், என்.எஸ். இளங்கோ, எம்.எஸ். இராமசாமி, கி. மனோகரன், கே.கே. நீலமேகம், தில்லைவில்லாளன், அருண்மொழி, ஏ. சித்தையன் போன்றோர் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

'விடுதலைக் கிளர்ச்சி', 'தொழிற்புரட்சி', 'உரிமைக் கிளர்ச்சிகள்', 'திராவிடத் தனி நாடு அமைப்பு', 'இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு', 'நாட்டுப் பணியில் மாணவர் பங்கு', 'கழகமும் கலைஞர்களும்', 'திராவிடத்தின் உலகத் தொடர்புகள்', 'பெண்ணுரிமை', 'தீண்டாமை ஒழிப்பு', 'சாதி-மத வேறுபாடுகள் ஒழிப்பு', 'கலையில் கருத்துப் புரட்சி', 'தத்துவ வரலாறு', 'புத்தர் நெறி', 'மறைந்த இயக்க மாவீரர்கள்', 'திராவிட இயக்கத் தலைவர்கள்', 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' போன்ற பல்வேறு தலைப்புகளில் சிறப்புச் சொற்பொழிவாளர்கள் பேருரை நிகழ்த்தினர்.

மாநாட்டில், கழக வளர்ச்சி, தமிழ் மொழி ஆக்கம், மாநிலப் பிரச்சினைகள் ஆகிய இந்தியப் பிரச்சினைகள், உலகப் பிரச்சினைகள், திராவிடரின் உரிமைகள், தமிழகத்தின் மேம்பாடு பற்றிய நாற்பதுக்கும் மேற்பட்ட தீர்மானங்கள், கழகத் தோழர்களால் முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு, ஒரேமனதாக நிறைவேற்றப்பட்டன.

## பொதுத்தேர்தலில் போட்டியிடல்

*1957இல் நடைபெற இருந்த பொதுத் தேர்தலில் கழகம் போட்டியிடுவதா? போட்டியிடாமல் மற்றவர்க்கு ஆதரவு நல்குவதா? என்ற பிரச்சினை மாநாட்டில் எழும்பிற்று. பொதுத் தேர்தலில் தி.மு. கழகம் போட்டியிட வேண்டுமா? வேண்டாமா? என்பது பற்றி முடிவு செய்ய, மாநாட்டுக்கு வருகை தந்திருந்த பிரதிநிதிகளிடம் வாக்கெடுப்பு நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.*

*போட்டியிட வேண்டும் என்போர் சிவப்பு நிறப் பெட்டியிலும், வேண்டாம் என்போர் கறுப்பு நிறப் பெட்டியிலும் வாக்குச் சீட்டுக்களைப் போடுமாறு, பிரதிநிதிகள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.*

*20.5.1956 அன்று மாலை வாக்குச் சீட்டுக்கள் எண்ணப் பட்டு, மாநாட்டுத் தலைவர் என்ற முறையில் என்னால் முடிவு அறிவிக்கப்பட்டது.*

*தி.மு. கழகம் பொதுத் தேர்தலில் போட்டியிடவேண்டும் எ ன்ற கருத்தை ஆதரித்து, 56,942 பேர்களும், அந்தக் கருத்தை எதிர்த்து 4,203 பேர்களும் வாக்களித்தனர். இந்த முடிவை, நான் மாநாட்டில் அறிவித்தபோது, கூடியிருந்தவர்கள் பெருத்த கையொலி எழுப்பி, ஆரவாரம் செய்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.*

*அதன்பிறகு,* "அடுத்துவரும் பொதுத் தேர்தல்களில், தி.மு. கழகத்தின் சார்பாகத் தி.மு.கழக வேட்பாளர்கள் போட்டியிட வேண்டும் என்று இம்மாநில மாநாடு தீர்மானிக்கிறது" *என்ற தீர்மானம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.*

## அறிஞர் அண்ணாவின் பேருரை

*இறுதிச் சொற்பொழிவாளராக அறிஞர் அண்ணா அவர்கள் பேருரை நிகழ்த்தினார்கள். அவர் வெளியிட்ட கருத்துக்களில் சில வருமாறு :*

''நான் எதிர்பார்த்ததைவிட மிகப்பெருங்கூட்டத்தை இம்மாநாட்டுப் பந்தலில் காண்கிறேன். திருச்சியின் இந்தக் கோடியிலிருந்து ஆறு ஏழு மைல்களுக்கு அப்பால் உள்ள திருவரங்கம் வரையில், கழக வீரர்களின் நடமாட்டம் இருந்து கொண்டிருப்பதையும் காண்கிறேன். பூரிப்பும், பெருமையும் என்னைப் பெரிதும் கொள்ளை கொண்டிருக்கின்றன! கழிபேருவகையில் நான் மூழ்கி இருக்கிறேன்!

மாநாட்டிற்கு வருகை தந்திருக்கின்ற அத்துணைப் பேர்களும் நல்லதோர் குறிக்கோளுடன் இங்கே வருகை தந்திருக் கிறார்கள்! கழகம் என்ன, என்ன கட்டளைகளைப் பிறப்பிக்கப் போகிறது என்பதைக் கண்டறிய வந்திருக்கிறார்கள்! ஆற்றல் மிக்கவர்கள் வந்திருக்கிறார்கள்! அஞ்சா நெஞ்சம் படைத் தோர் வந்திருக்கிறார்கள்! சிறைச்சாலைக்கும், சீரான குடும்பத்திற்கும் வேறுபாடு தெரியாதவர்கள் வந்திருக் கிறார்கள்! இவர்களையெல்லாம் பார்த்து நான் பெருமைப் படுகிறேன்! ஆனால், நாட்டை ஆண்டு கொண்டிருப்போர் இந்தக் காட்சியைக் கண்டு பொறாமைப்படுவார்கள் என்பது எனக்குத் தெரியும்!

உங்கள் அனைவர்க்கும் மிக நன்றாகத் தெரியும், தி.மு.க. விலேயே கடைசி பலவீனன் நான்தான் என்பது! அது மட்டுமல்ல, நான் அதிகமாக அஞ்சும் இயல்புடையவன்! என்றாலும் மாற்றார் என்னும் இந்த நச்சுப் பூச்சிகளைக் கண்டு, நான் அஞ்சாமல் இருப்பதற்குக் காரணம், வீரதீரம் பொருந்திய நீங்கள் என் பக்கத்தில் இருப்பதுதான்! உங்கள் எதிரிலே புலி வந்தாலும், அது பூனை ஆகிவிடும் என்ற நம்பிக்கை என்னிடத்தில் இருந்துதான் வருகிறது.

நாம் எல்லாம் பொதுத் தேர்தலில் ஈடுபட வேண்டியது இன்றியமையாததாகும் என்று நீங்கள் தீர்மானித்திருக்கிறீர் கள். நீங்கள் கொண்டிருக்கின்ற இந்த ஆர்வமும், எழுச்சியும் பொதுத் தேர்தலின்போது பன்மடங்கு வளர்ச்சி அடைய

வேண்டும். நாம் வெற்றி பெறுவதற்கான சூழ்நிலை நல்ல முறையில் உருவாகவேண்டும். இந்த மாநில மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக்கொண்டிருக்கும் நாம், நாட்டை நல்லபடியாக ஆளவும் தகுதிபடைத்தவர்கள்தாம் என்பதை, இந்த மாநில மாநாடு உறுதியாக எடுத்துக்காட்டும்.

மகத்தான வெற்றியை இந்த மாநில மாநாட்டிலே நாம் பெற்றிருக்கிறோம். என்றாலும் மாற்றுக் கட்சியினர் மமதையின் காரணமாகத் தி.மு. கழகத்தைப் பற்றித் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். தி.மு. கழகம் இன்று தோன்றி நாளை மறைந்து விடுகின்ற ஓர் எரி நட்சத்திரம் என்றே அவர்கள் கருதினார்கள். நம்மை ஒழித்துக்கட்ட பல சதிவேலைகளில் ஈடுபட்டனர்! அடக்கு முறைகளை அள்ளி வீசினார்கள்! நம்மைப் பிளவுபடுத்தப் பார்த்தார்கள்! நம்மை அழிக்கக் கனவுகள் பல கண்டனர்! அவர்களது நினைப்பெல்லாம் தவிடுபொடி ஆகும்படியாக, நாம் வளர்ச்சி பெற்று வளர்ந்து வந்திருக்கின்றோம்.

பெரியாருடன் நானும், மற்றவர்களும் இருந்தபோது, அவர் பொதுக்கூட்டங்களில் பேசும்போது, 'இந்தக் காரியங்களை நான் மட்டுந்தான் செய்யவேண்டியிருக்கிறது, என்னை விட்டால், இவற்றைச் செய்வதற்கு வேறு ஆள் யார் இருக்கிறார்கள்?' என்று எங்களை வைத்துக் கொண்டே குறை கூறுவார். ஆனால், நான் கூறுகிறேன், எனக்குப் பின்னால் பலர் இருக்கிறார்கள். என்னைவிடச் சிறப்பாகவும், செம்மையாகவும் பணிகளைச் செய்யக்கூடியவர்கள் பல பேர்கள் இருக்கிறார்கள். ஏன், நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, என்னுடைய தம்பிமார்கள் எல்லாப் பணிகளையும் நான் பெருமைப்படும் அளவுக்குச் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்ற மனநிறைவான எண்ணத்தோடுதான் நான் உங்கள் முன்னால் நிற்கிறேன்.

உண்மையில், நம்முடைய இயக்கத்திற்கு வேறு எந்த ஒரு இயக்கத்திற்கும் ஏற்பட்டிராத பெரிய ஆற்றல், ஏற்பட்டிருப்ப தற்குக் காரணம், யார் யாரிடத்தில் எந்தெந்தத் திறமை மங்கி இருக்கிறதோ, மறைந்து கிடக்கிறதோ, யார் யாரிடத்தில் எந்தெந்த ஆற்றல் கண்டுபிடிக்கப்படாமலிருக்கின்றதோ, யார் யார் உள்ளத்தில் சுரங்கத்திற்கு அடியில் தூங்கிக் கொண்டிருக்கும் தங்கத்தைப் போல், பேராற்றல் புதைந்து கிடக்கின்றதோ அவற்றையெல்லாம் கண்டு பிடித்து, வெளியே கொண்டுவருகின்ற ஆற்றலை, நாம் பெற்றிருப்பதுதான். அதன் காரணமாகத்தான், இந்த மன்றத்திலும், மேடையிலும் செயலாற்றும் தீரர்கள் பலரைப் பார்க்கிறோம்! சிந்தனைகளை வெளியிடும் வீரர்களைக் காண்கிறோம்! எதற்கும் அஞ்சாத ஆற்றல் படைத்தவர்களை அறிகிறோம்!

சென்ற ஆறு, ஏழு ஆண்டுகாலத்தில், நாம் எதிர் பார்த்ததை விட மாபெரும் வளர்ச்சியைப் பெற்றிருக்கிறோம். இத்தகைய நிலை ஏற்பட நாம் கொடுத்த விலை கொஞ்சம் அல்ல! சிந்திய கண்ணீர் ஏராளம்! கொட்டப்பட்ட இரத்தம் சாமான்ய மானதல்ல! கொடுக்கப்பட்ட பலியும் கொஞ்ச நஞ்சமல்ல! எத்தனையோ தடியடிகளைத் தாங்கியிருக்கிறோம்! எத்தனையோ தியாகத் தழும்புகளை ஏற்றிருக்கிறோம்!

நம்மை ஏசிப் பேசியவர்கள் தொகை ஏராளம்! அவர்கள் பயன்படுத்திய இழிசொற்கள் கணக்கில் அடங்காதவை! தடியடிகளைத் தாங்கும் உடல்வலிவையும், ஏச்சுப் பேச் சுக்களைத் தாங்கும் உள்ளத்திண்மையையும் நம்மில் பலர் பெற்றிருப்பதால்தான், நாம் வளர்ந்திருக்கிறோம். நம்முடைய குறிக்கோளில் நமக்கு இருக்கிற நம்பிக்கையும், அந்தக் குறிக்கோளை நாம் வெற்றிகரமாக முடித்துக்காட்ட முடியும் என்பதில் நமக்குள்ள நம்பிக்கையும், நமது முயற்சிக்கு நாட்டு மக்கள் பேராதரவு அளிப்பார்கள் என்பதில் இருக்கும்

நம்பிக்கையும்தான் நம்மை எதிர்ப்புக்களிலிருந்து மீண்டு வளரச் செய்திருக்கின்றன.

மாநாட்டிற்கு வந்துள்ள நீங்கள், திருவிழாச் செய்திகளைக் கொண்டு செல்பவர்கள் அல்லர்! இங்கே திருஇடத்தை மீட்பதற்கு எப்படிப்பட்ட அணிவகுப்பு தயாராகியிருக்கிறது என்பதைக் கண்கூடாக நீங்கள் அனைவரும் பார்க்கிறீர்கள்! இங்கு ஆற்றிய உரைகளையெல்லாம் காதாரக் கேட்டிருக்கிறீர்கள்! அவற்றையெல்லாம் உங்கள் நெஞ்சில் நீங்கள் பதிய வைத்துக் கொண்டு இருப்பீர்கள்! அவற்றை நாடு நகரங்கள், பட்டிதொட்டிகள் போன்ற எல்லா இடங் களுக்கும் கொண்டு செல்லவேண்டிய பொறுப்பு உங்களுடையதாகும்!

பொதுத் தேர்தலில் தி.மு.கழகம் போட்டியிடவேண்டும் என்ற தீர்மானம், இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தேர்தல் என்றால் அதில் வெற்றியும் இருக்கும்; தோல்வியும் ஏற்படும். தேர்தல் என்றால், வெற்றி என்ற சொல்லையும் பக்கத்திலேயே எழுதவேண்டும் என்று எந்த அரசியல் அகராதியிலும் சொல்லவில்லை.

தேர்தல் என்பது ஒரு அரசியல் கட்சியின் சனநாயகக் கடமையாகும். எப்படி வயது வந்த ஒரு பெண் பருவம் அடைந்து விட்டாள் என்றால், அவள் மணவினைக்குத் தகுதி பெற்றவள் ஆகிறாளோ, அதுபோல வளர்ந்து வந்துள்ள ஒரு அரசியல் கட்சி, தேர்தலில் நிற்பதற்கான தகுதிபடைத்து விடுகிறது.

அரசியலில் நாம் என்றும் ஒட்டு முறையை ஆதரித்து வருகிறோமேயல்லாமல், வேட்டு முறையில் நமக்கு என்றைக்கும் நம்பிக்கை இருந்ததில்லை.

நமக்குக் கிடைத்திருக்கும் நல்ல வாய்ப்பை, நாட்டிலே நல்லாட்சி அமைப்பதற்கும், நாட்டின் விடுதலைக்கும் நாம் நன்கு பயன்படுத்தியாக வேண்டும்.

நம்முடைய நாடு சாமான்யமான நாடு அல்ல. தங்கம் விளைகின்ற பூமியிலே பிறந்தோம்-தரித்திரத்தாலே தாக்கப் பட்டிருக்கிறோம்! இரும்பு இருக்கிற நாட்டிலே இருக்கிறோம் - இல்லாமையில் இடர்ப்படுகிறோம்! கத்தும் கடலிலே முத்து இருக்கிறது - ஆனால் நமது வாழ்க்கை, மத்தடிபடும் தயிருக்குச் சமமாய் இருக்கிறது! நம்முடைய மூதாதையர்கள் கட்டியாண்ட கோட்டைகள் எல்லாம் இடிந்துவிட்டன! அவர்கள் வெட்டிய அகழிகள் எல்லாம் பாழாகிவிட்டன! அவர்கள் இயற்றிய இலக்கியங்களைப் படிப்பார் இன்று இல்லை! அவற்றின் எழுத்துக்களையும், கருத்துக்களையும் கண்டறிவதற்கு நம்மில் பலர்க்குத் திறமை இல்லை! வேறு எந்த ஒரு நாட்டிலும் இப்படிப்பட்ட இழி நிலை இல்லை! அந்த இழிநிலையைப் போக்க வேண்டியது நமது நீங்காக் கடமையாகும்!

இந்த மாநில மாநாட்டில் நீங்கள் கொண்டுள்ள உணர்ச்சியை யும், பெற்ற நல்ல உற்சாகத்தையும், அடைந்துள்ள நல்ல ஆர்வத்தையும் தேங்கவிடாமல், நன்கு அவற்றை வளர்ச்சியுறச் செய்து, நாடெங்கும் அவை வளர வழிவகை கண்டு நாம் எல்லோரும் நமது பொதுச் செயலாளர் காட்டும் வழியில் நடக்கவேண்டும்! நமது எண்ணத்திலும், செயலிலும் வெற்றி பெறவேண்டும்!"

*அறிஞர் அண்ணா பேசி முடித்தவுடன் நான், மாநாட்டில் பலரும் வெளியிட்ட கருத்துக்களின் சிறப்பினைச் சுட்டிக் காட்டித் தலைமை இறுதியுரை ஆற்றினேன்.*

*திருச்சியில் நான்கு நாட்கள், உணர்ச்சியோடும், எழுச்சி யோடும் நடைபெற்ற கழகத்தின் மாநில மாநாடு, கழகத் தோழர்கள் அனைவர்க்கும் புதிய ஊக்கத்தையும், ஆக்கத்தை யும் பயந்தது. அந்த மாநாட்டின் மூலம் கழகத்தின் வலிவை யும், பொலிவையும், வளர்ச்சியையும் பொதுமக்கள் நன்கு உணர்ந்து கொண்டார்கள்.*

## மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய என்னைப் பற்றி அறிஞர் அண்ணா

*திருச்சியில் நடைபெற்ற கழகத்தின் மாநில மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய என்னைப் பற்றி, அறிஞர் அண்ணா அவர்கள், மாநாட்டின் இறுதிக் கட்டத்தில், பேருரை ஆற்றியபோது, பலபடப் பாராட்டிப் பேசினார்கள். எனக்கு மேலும் ஊக்கமும், உற்சாகமும் அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலும், கழகத் தோழர்கள் அனைவரும் என்னிடத்தில் மதிப்பும், மரியாதையும் காட்டவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலும், அறிஞர் அண்ணா அவர்கள் மிக உயர்ந்த உள்ளத்தோடும், மிகப் பெருந்தன்மையோடும், மனிதப் பாங்கோடும், சனநாயகப் பண்போடும் என்னைப் பற்றிச் சில பல கருத்துக்களை வெளியிட்டார்கள்.*

*வண்டியை இழுத்துச் செல்லுகின்ற மாட்டிற்கு ஊக்கம் தரவேண்டும் என்ற எண்ணத்தில், வண்டி ஓட்டுபவர் மாட்டின் முதுகைத் தட்டிக் கொடுத்து மகிழ்வதுண்டு. அது போல, எனக்கு மேலும் ஊக்கம் ஊட்டவேண்டும் என்பதற்காகவே, அறிஞர் அண்ணா அவர்கள், என்னைப் பற்றிய பாராட்டு மொழிகள் பலவற்றை மாநாட்டில் வெளியிட்டார்கள்.*

*அவர் அப்படி வெளியிட்ட கருத்துக்களில் சில வருமாறு :*

> தம்பி வா! தலைமை தாங்க வா!
>
> "நமது பொதுச் செயலாளரை, தம்பி வா! தலைமை தாங்க வா! உன்னுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறேன் வா!' என்று நான் கூறியது வெறும் அலங்காரத்திற்காக அல்ல! அந்த நிலை நமது கழகத்தில் வளர்ந்து கொண்டு வருகிறது! அது மேலும் வளர வேண்டும் என்பதுதான்,

எல்லோருடைய உண்மையான நம்பிக்கை! அது வளர்ந்தால் தான் நமது கழகம் நல்ல சனநாயகப் பண்போடு திகழ முடியும்!

நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள், நம் கழகத்திற்குப் பொதுச் செயலாளராகக் கிடைத்திருக்கிறார்.

அவர் இடுகின்ற ஆணைகளை எல்லாம் ஏற்று நடத்துவதில் நான் பெருமை கொள்கிறேன். நமது தோழர்கள் அனைவரும் பெருமை கொள்ள வேண்டும்.

அப்படி ஏற்றுக் கடமைகளைச் செய்வதில் கட்சிக்கு ஊறு ஏற்படும் என்று யாருக்காவது கிலி இருந்தால் - பயமிருந்தால், தாராளமாக அவரிடம் வந்து விவாதிக்கலாம். அதுபற்றி எடுத்துக்காட்டலாம், சுட்டிக்காட்டலாம்!

ஆனால், வீண் பயத்தைச் சாக்காகக்கொண்டு, 'சன நாயகத்தை நாங்கள் நிலைநாட்டுகிறோம்' என்று, யாராவது விவாதங்களில் ஈடுபடுவார்களானால், அவர்களுக்கும், பொதுச் செயலாளருக்கும், கழகத் தோழர்களுக்கும் கூறுகிறேன் - கடைசி அதிகாரத்தைப் பெற்றிருக்கிற பொது மக்களிடத்தில், அந்த விவாதத்திற்குரிய விவரங்களைப் பற்றி எடுத்துச் சொல்லவேண்டிய 'சனநாயகக் கட்டம்' ஏற்படும்.

அதற்கெல்லாம் வழிவகுத்துக் கொள்ளாமல் நமது பொதுச் செயலாளருடைய பதவிக் காலத்தில், சனநாயகத்தை வளர்ப்பதற்கு, அவரோடு கலந்துபேசி, நல்ல திட்டங்களை அவருக்கு எடுத்துச் சொல்லி, அவர் தரும் சீரிய திட்டங்களை ஏற்று, அவர் இடுகின்ற ஆணைகளைத் தலைமேற்கொண்டு, கழகத்தை மேலும் வளர்த்து, வரும் பொதுத் தேர்தலிலே நாம் மாபெரும் வெற்றி பெறுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கி, நமது நல்லாற்றலைப் பயன்படுத்துவதற்கு, நாம் எல்லாம் இந்த மாநில மாநாட்டில் உறுதி பெற்றுக் கொள்வோமாக!

## என் தம்பிமார்களில் மூத்தவர் நாவலர்

'நாட்டுக்குக் கிடைத்திருக்கும் நாவலரே! கழகத்தைக் கட்டிக் காக்கும் காவலரே! என் தம்பிமார்களில் மூத்தவரே! கழகத்தைக் கட்டிக் காப்பதற்காகப் பொதுச் செயலாளராக ஆக்கப்பட்டிருப்பவரே! தலைவரே! உம்முடைய ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க நான் என்றும் தயாராக இருக்கிறேன்' என்பதை எடுத்துச் சொல்வதன் மூலம் மற்ற அத்தனை பேர்களும் அந்த ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க இருக்கின்றார்கள் என்பதையும் நான் கூறுகிறேன்.

நாம்எல்லோரும் மனமார ஒன்றுபட்டு, நமது கழகப் பொதுச் செயலாளராகவும், கழக மாநில மாநாட்டிற்குத் தலைவராக வும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைத் தேர்ந்தெடுத் திருக்கிறோம். நம் நண்பர்கள் பலரும் நெடுஞ்செழியன் அவர்களின் அறிவாற்றல், பண்பாட்டுத் திறன்கள் பற்றிப் பலபடப் பாராட்டிப் பேசினார்கள். அவர்கள் கூறிய அத்துணை உண்மைகளையும் நானும் ஏற்றுக்கொண்டேன் என்பதை, நான் அவர்களெல்லோரும் பேசும்போது, கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்ததைக் கண்டவர்கள் அறிந்திருக்கலாம்.

## என்னைவிட அடக்கமான இயல்பு உடையவர்

என்னைவிட நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள் அதிகமான அளவுக்கு அடக்கமான இயல்பு உடையவர். எனக்காவது திடீர், திடீரெனக் கோபம் வரும். சில சமயங்களில் அந்தக் கோபத்திற்குப் பலியாகக் கூடியவர்களும் இருக்கலாம். சில பேர்கள் அதைப் பரிகாசமாகக் கருதலாம். சில பேர்கள் 'அண்ணாவுக்கு வேறு யார் பேரிலேயோ ஆசை வந்து விட்டது! அதனால்தான் நம்மீது கோபமாக இருக்கிறார்!' என்று எண்ணத் தோன்றலாம்.

நான் சில பேர்களிடத்தில் கோபப்படுகிறேன் என்றால், அதற்குக் காரணம், அதனால் அவர்கள் நல்வழிக்கு வருவார்கள் என்று நான் எண்ணுவதாகத்தான் இருக்கும்.

ஆனால், அந்த அளவுக்குக்கூடக் கோபித்துக் கொள்வது கிடையாது நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள். அவரது இந்த இனிய இயல்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு, கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் எந்த ஒரு பிரச்சினைக்கும் அவரை மிக எளிதாக அணுகலாம்.

நாவலர் ஒரு புடம்போட்ட தங்கம்

என்னிடம் உள்ள சில குறைபாடுகள் நீக்கப்பட்டுப் புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கத்தை, அதாவது நாவலர் நெடுஞ்செழியனை இன்றைய தினம் நம்முடைய கழகத்திற்குப் பொதுச் செயலாளராகப் பெற்றிருக்கிறோம்.

வருகின்ற கடிதங்களுக்கெல்லாம் நான் பதில் போடுவ தில்லை - குறைதான்; ஆனால் அந்தக் குறை வெகுகாலமாக என்னைக் காப்பாற்றிக்கொண்டு வருகிறது. அதனால்தான், அதனை வைத்துக்கொண்டிருக்கிறேன். நண்பர் நெடுஞ் செழியனிடத்தில் அந்தக் குறை அறவே கிடையாது.

குறித்த காலத்தில் கூட்டங்களுக்கு நான் வருவதில்லை. ஆனால், நெடுஞ்செழியனோ, குறித்த காலத்தில் கூட்டம் கூட்டப்படாவிட்டால், கூட்டம் கூட்டுவதாகக் கூறியவர் களுக்குக் கொறடா எடுப்பார். இப்படி என்னிடத்தில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பட்ட புடம்போட்ட தங்கம்தான், நாவலர் நெடுஞ்செழியன்.

நான் ஏழெட்டு ஆண்டு காலமாகக் கண்ணுங் கருத்துமாக இருந்து பார்த்து, எண்ணி எண்ணிச் சிந்தித்து, ஏக்கத்தோடு பார்த்துப்பார்த்து, இருபத்து நான்கு மணி நேரமும் உடனிருந்து, 'காரியங்கள் இப்படி இப்படி நடைபெற வேண்டும்- இப்படி இப்படி நடந்தால்தான் நல்லது' என்றெல்லாம் எடுத்துச்சொல்லி, 'இந்த விதைகளெல்லாம் வளரக் கூடிய நல்லதோர் கழனி' அந்த உள்ளத்தில் இடம் பெற்று இருப்பதைக் கண்டு, என்னுடைய பொறுப்பை நாவலர் நெடுஞ்செழியனிடம் நான் ஒப்படைத்தேன்.

'ஏன், இதற்குள்ளாகக் கழகத்தின் பொதுச் செயலாளர், பொறுப்பிலிருந்து விலகவேண்டும்' என்று நண்பர்கள் சிலர் கேட்ட நேரத்தில், 'இல்லை! கழகம் உயரமாக வளர வேண்டும் என்பது என் எண்ணம். நானோ 5 அடி உயரந்தான். ஆனால் நாவலரோ 6 அடி உயரமுள்ளவர். உயரமான ஒருவரிடம் கழகத்தை ஒப்படைக்கிறேன் என்றால் அவர்போலக் கழகமும் உயரமாக அமையவேண்டும் என்ற ஆவலினால்தான்' என்று எடுத்துச் சொன்னேன்.

நமது நம்பிக்கை எல்லாம் ஈடேறத்தக்க வகையில் பணியாற்றுவதற்கு நாவலருக்கு ஆற்றல் இருக்கிறது என்பதை நான் நன்கு அறிவேன். அந்த ஆற்றல் மேலும் மேலும் வளரவேண்டுமானால், கழகத் தோழர்கள் அவருக்குத் தருகின்ற தொல்லைகள் குறைவாகவும், ஏற்படுத்திக்கொள்ளுகிற தோழமை அதிகமாகவும் இருக்க வேண்டும்.

நாவலர் தலைமையில் சனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும்

தொல்லைகள் குறைவாக இருக்கவேண்டும் என்றால், இப்போது நான் நமது கட்சிக்குள் இருக்கவேண்டிய சனநாயகம் பற்றிச் சிறிது கூறவிரும்புகிறேன்.

சனநாயகம் என்ற தத்துவத்தை நாம்தான் விரும்பி நடைமுறைப்படுத்தி வருகிறோம். எவரும் சனநாயகத்தை நம்மிடத்தில் திணிக்கவில்லை.

ஆகவே, அதன் அருமை பெருமைகளும், அதனை எப்படிக் கட்டிக் காப்பாற்றவேண்டும் என்பதில் இருக்கிற பொறுப்பு உணர்ச்சியும் நிச்சயம் நமக்கு உண்டு. ஆனால், சனநாயகம் என்றால், பொதுப்படையான தத்துவங்களை ஆராய்வதற்கு, கொள்கை கோட்பாடுகளை நிர்ணயிப்பதற்குத் தாராளமாக விவாதிக்கலாம் என்று பொருள்.

விவாதிக்கத் தெரிந்தவர்கள் மட்டுந்தான் விவாதிக்க வேண்டும் என்பது அல்ல; விவாதிக்க முடியாதவர்கள் எல்லோரும் கூட விவாதிக்கலாம். ஆனால் விவாதித்து முடிவு கட்டியான பிறகு, நடைமுறை வேலைகளில் நமது பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் ஈடுபடும் போது, அங்குப்போய்ச் சனநாயகம் பேசக்கூடாது.

உதாரணத்திற்கு நான் கூறுவேன். திருச்சியில் மாநாடு நடத்தலாமா? வேண்டாமா? இது அடிப்படைக் கொள்கை. இது பற்றித் தாராளமாக விவாதிக்கலாம். 'வேண்டாம்' என்று ஒருவர் - 'மதுரையில் நடத்தலாம்' என்று இன்னொருவர் - இப்படி விவாதிக்கலாம். ஆனால், திருச்சியில் நடத்துவது என்று முடிவு செய்து, இங்கு வந்து பந்தல் போட ஆரம்பித்தபிறகு, இந்தக் கழியை எத்தனை அடி ஆழத்திற்கு இறக்குவது என்பதற்குக் கூடச் சனநாயகம் பேசினால், சனநாயகம் துச்சமாகிப் போய்விடும்; கழி தாங்காது; குழியிலும் இறங்காது. ஆகையால், இந்த மாதிரி தொல்லைகளை அவருக்குத் தரவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாவலர் என்றும் ஒழுங்குமுறை தவறாதவர்

நான் பொதுச் செயலாளராக இருந்த காலத்தில், எனக்குப் பலரும் தொல்லைகள் தந்தார்கள். அவற்றையெல்லாம் நான் தாங்கிகொண்டேன்- இரண்டு முறைகளில்!

ஒன்று நான், சொல்லப்படும் எல்லா விவரங்களையும் கேட்டுக் கொண்டதைப் போன்று பாவனை செய்தேன். ஆனால், அவற்றைக் கேட்டுக் கொண்டதே இல்லை. சில விஷயங்களைப்பற்றிச் சிந்திப்பேன். அவற்றில் மறக்க வேண்டியதை மட்டும் மறந்துவிடுவேன். அவற்றில் செயலாற்ற வேண்டியதை மட்டும் செயலாற்றுவேன். நண்பர் நாவலர் நெடுஞ்செழியன் அப்படி அல்ல. அவர்

கல்லூரியில் படித்த காலம் முதற்கொண்டு, ஓர் ஒழுங்கு முறை தவறாத மாணவராக இருந்து வந்தவர். ஆகையால், தோழர்கள் ஒழுங்குமுறை தவறி, அவருக்கு நிரம்பத் தொல்லைகள் தந்தால், அவற்றை அவர் தாங்கிக்கொள்ள மாட்டார்; அவற்றிற்கு வளைந்துபோகவும்மாட்டார். இவ்வளவு தொல்லைகள் இருக்கின்றனவா? என்று அவர் அறிந்தால், மிகவும் சங்கடப்படுவார். அப்படியொரு நிலை ஏற்பட்டால், அவரிடமிருந்து நாம் பெறக்கூடிய அறிவாற்றல் பணிகளை முழு அளவிற்கு நம்மால் பெற முடியாமல் போய்விடும்.

நாடக மேடையில்கூட ஒருவர் நல்ல பாட்டுக்களைப் பாடிக்கொண்டிருக்கையில், இரண்டாவது முறையும் பாடச்சொல்லி 'ஒன்ஸ்மோர்' என்று கேட்கும்போது, பாடுகிறவருக்கு எவ்வளவோ சங்கடம் இருக்கத்தான் செய்யும். சாதாரண நாடக மேடையிலேயே அப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்றால், ஒரு பெரிய இயக்கத்தை நடத்திச் செல்லும்போது, பொறுப்பேற்றுக் கொண்டிருப்ப வருக்கு எத்தனை இன்னல்கள் இருக்கும் என்பதை நாம் எல்லோரும் எண்ணிப்பார்க்கவேண்டும்.

## தம்பி என்று அழைப்பதில் நான் பெருமைப்படுகிறேன்

தோழர் நெடுஞ்செழியன் எனக்குத் தம்பிதான்! வயதில்! உண்மையில் அவரைத் தம்பி என்று அழைப்பதில் நான் பெருமைப்படுகிறேன்! என்னை அண்ணனாகக் கொண் டிருப்பதில் அவரும் பெருமைப்படுகின்றார்.

ஆனால், அவர் பொதுச்செயலாளர் பதவியில் இருக்கின்ற நேரத்தில், அவர் இடுகின்ற ஆணைகள் அத்துணையையும், நான் ஒரு தலைவன் இடுகின்ற ஆணையாக ஏற்று அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பேன் என்பதை, இந்த மாநில மாநாட்டில் நான் உறுதி கூறவிரும்புகிறேன்.

## தலைவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதில் நான் ஓர் எடுத்துக்காட்டு

‘அப்படியா? நடப்பாரா? நடக்குமா?’ என்று சந்தேகம் யாருக்காவது இருந்தால், பெரியார் இராமசாமியைக் கேட்டுப் பாருங்கள் - இது வரையிலும், இனிமேலும் ஒரு தலைவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதில், என்னைவிட வேறு யாரும் உண்டா? என்று.

உதாரணத்திற்கு நான் ஒன்று கூறுவேன். வட நாட்டில் அவரோடு நான் சுற்றுப்பயணம் செய்தேன். இலக்னோ பல்கலைக்கழகத்தில் பெரியார் அவர்கள் தமிழில் பேசினார். நான் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தேன். பிறகு, அந்த மாணவர் கூட்டத்தின் தலைவராக இருந்தவர், நான் ஒரு எம்.ஏ. படித்தவன் என்பதை அறிந்து, என்னையும் சிறிது நேரம் ஆங்கிலத்திலேயே பேசுமாறு கூறினார்.

நான் பெரியார் இராமசாமியைத் திரும்பிப் பார்த்தேன். ‘பேசாதே’ என்றார். ‘பேசவில்லை’ என்றேன். மறுபடியும் மாணவர்கள் வற்புறுத்தினார்கள். பெரியாரைக் கேட்டேன். ‘இல்லை பேசாதே’ என்றார். மூன்றாம் முறையாக மீண்டும் வற்புறுத்தினார்கள். மூன்றாம் முறை பெரியார் என்னிடம் சொன்னார், ‘நான் பேசுவதற்கு வரவில்லை; பெரியாரின் பேச்சை மொழிபெயர்க்கத்தான் வந்தேன் என்று அவர்களிடம் எடுத்துச் சொல்லு!’ என்றார். நான் அதையே மாணவர்கள் கூட்டத்திடம் எடுத்துச்சொன்னேன். எதனால்? அவ்வளவு அடக்க ஒடுக்கமாகப் பெரியாரிடம் நடந்து கொண்டேன். நான் தான் கடைசி ஆள் - அவ்வளவு அடக்க ஒடுக்கமானவன் - அவருக்குக் கிடைத்தவன்.

நான் நமது பொதுச்செயலாளருக்கு அடங்கி நடக்க எவ்வளவு உறுதிகொண்டிருக்கிறேனோ, அதுபோல, கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும், அவரது ஆணைக்கு அடங்கி நடந்து,

கழகம் எல்லாவகையிலும் வெற்றிகாண உறுதிகொள்ள வேண்டும். நமது பெரு முயற்சியால் கழகம் எதிர்காலத்தில் சிறந்து வாழவேண்டும்! நன்கு வளர வேண்டும்! உறுதியாக வெல்லவேண்டும்!''

'திராவிடநாடு' இதழில் பாராட்டுரை

*திருச்சி மாநில மாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்த பிறகு, அறிஞர் அண்ணா அவர்கள் மாநாட்டின் சிறப்புக்கள் பற்றியும், பொதுச்செயலாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த என்னைப் பற்றியும் 'திராவிட நாடு' இதழில் விரிவான முறையில் கட்டுரைகள் எழுதினார்.*

*அந்தக் கட்டுரைகளில், அறிஞர் அண்ணா அவர்கள் என்னைப்பற்றி எழுதிய சில குறிப்புக்களை மட்டும் கீழே தர விரும்புகிறேன்.*

நாவலர் தலைமையில் கழகம்

''வறண்ட தலையினர் கூடினோம் திருச்சியில்! வாழ்ந்து கெட்ட இனத்தினர் கூடினோம்! வீழ்ச்சியுற்ற நிலையினின்று மீட்சி பெற, நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் கூடினோம்! எண்ணி எழுபது போலீசு உண்டா? ஏற்பாடு களைக் கவனிக்க வசதிகள் உண்டா? பணம் படைத்த பிரமுகர்களின் கடைக்கண் பார்வை உண்டா- இல்லை! இல்லை! என்றாலும், உங்கள் உள்ளத்தில் உவகை இருந்தது! திரண்டிருந்த கூட்டத்தில் எழில் இருந்தது! ஊர்வலத்தில் வீர வாழ்த்தொலி இருந்தது! மாநாட்டில் விடுதலை முழக்கம் இருந்தது! இவையெல்லாம் எவ்வளவு மகத்தானவை என்பதை நான்கு நாட்கள் திருச்சியில் கண்டேன்!

நான் மேற்கொள்ளும் பணியின் மேன்மையிலே எனக்கு எப்பொழுதும் நம்பிக்கை உண்டு! அந்த நம்பிக்கை, திருச்சி மாநாட்டைப் பார்த்தபிறகு ஆயிரம் மடங்கு மேலோங்கி வளர்ந்திருக்கிறது.

திருச்சி மாநாட்டில், மக்கள் ஒரு இலட்சம் என்று முதல் நாள் கூறினர் - நாலாம் நாள் கூட்டத்தில் மூன்று இலட்சம் மக்களுக்குக் குறையாது என்றனர் - நமது தோழர்கள் அல்லர் - ஊரார்! யாரைக் காணக்கூடினர்? காண்பது பெரும்பேறு என்று கருதத்தக்க நிலைபெற்ற ஞானவான்களையா? மனமருளை ஓட்டி, அஞ்ஞானத்தை விரட்டிடும் ஆற்றல் பெற்ற அருளாளர்களையா? திடுக்கிட வைக்கும் திட்டம் தரக்கூடிய தீரர்களையா? உலகுகண்டு பதறத்தக்க போர் வகைகளைக் கண்டோரையா? கவர்னரையா? முதலமைச்சர் களையா? மூதறிஞர்களையா? இல்லை! இல்லை! சாமான்யர் களான நம்மைக் காணத்தான் கூடினர்! சதா சர்வகாலமும் யார்யாரைச் சந்தைச் சதுக்கத்திலும், அங்காடிப்பக்கத்திலும், ஊருணித்திடலிலும், ஊர்க்கோடியிலும் காணுகின்றனரோ, அப்படிப்பட்டவர்களைக் காணத்தான் கூடினர்!

நாவலர் நெடுஞ்செழியன் என்பவர் யார்? எப்படி இருப்பார்? எங்கிருந்து வருகிறார்? என்று ஆவலுடன் கேட்டு, ஆர்வம் கொந்தளிக்கும் நிலைபெற்று, மக்கள் குவிந்தனர் என்றா கொள்ளமுடியும்? அவரைத் தமிழகம் மிக நன்றாகச் சர்வசாதாரணமாக அறியும். அவரை நேரடியாகவே ஒவ்வொருவரும் நன்றாக அறிவர். மாநாட்டுக்குமுன் மூன்று திங்கள்களுக்கு ஒருமுறையேனும் திருச்சி நகர் அவரது உரையைக் கேட்டிருக்கும். மதுரையில் அவரது முழக்கம் பழக்கமாகிப்போன ஒன்றுதான். நாடு நகரங்கள், பட்டி தொட்டிகள் ஆகிய அனைத்திலும் நாள்விடாமல் சுற்றிச் சுற்றிச் சுழன்று வருபவர்தான்.

அன்று, பழம்பெருங்காலத்தில் வஞ்சினம் கூறிச் செருவென்ற மன்னன் யார்? அவன்தான் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்! இன்று நமக்குக் கிடைத்திருப்பவரோ, நாவலர் நெடுஞ்செழியன்!

பண்டை நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறினான் - வெற்றி கண்டான்! இன்றைய நெடுஞ்செழியன் திருச்சியில் வஞ்சினம் கூறினார் - இறுதியில் வெற்றி காண்பார்!

இன்று நாம் விடுதலை அறப்போர்க் களத்திலே நின்று கொண்டிருக்கிறோம். விடுதலை அறப்போர்க்களத்திலே நின்றுள்ள நாம், சிறுசொல் சொல்லிய சிறுமதியாளர்கள் அகலக் கண் திறந்து, ஆச்சரியப்படத்தக்க வெற்றியை, மாபெரும் மாநாட்டைக் கூட்டிக் காட்டியதன் மூலம் பெற்றோம். ஆனால், நாம் பெறவேண்டிய வெற்றிகள் வேறு இருக்கின்றன. அவற்றைப் பெறுவதற்கே நமக்கோர் நெடுஞ்செழியன் கிடைத்துள்ளார். நாமும் நமது கழகத்தை அவரிடத்தில் ஒப்படைத்திருக்கிறோம். தமிழ் மரபறிந்த அவரின் தலைமையில், சிறு சொல் கூறிடும் சிறுமதியாளர்களின் கொட்டம் அடக்கி, வாகை சூடத்தான் போகிறோம். அறப்போருக்கு, அஞ்சாநெஞ்சனாம் நமது பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களின் அழைப்பு கிடைத்ததும், நெடுநல் யானையும் தேரும் மாவும் கொண்டு இறுமாந்து கிடந்த மன்னர்களைச் செருவென்றது போல, பணபலம், படைபலம், பத்திரிகை பலம் படைத்தோரை, நாம் நமது தூய உள்ளத்தில் துளிர்த்தெழும் அறப்போர்த் திறத்தால் வீழ்த்துவோம்.

நாவலர் வெற்றி கிடைக்கச்செய்வார்

நமது கழகத்திற்கு இப்போது காவலராக வந்திருக்கிறாரே நாவலர், அவர் மேலும் இந்தக் கழகத்திற்கு மெருகு ஏற்றி, வலிவு ஊட்டி, நமக்கு எல்லாம் வெற்றி கிடைக்கச் செய்வார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அந்த நம்பிக்கையோடு நாம் எல்லோரும், அவருக்குப் பக்க பலமாக இருக்க வேண்டும். நம் ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொருவிதமான திறமையும், செல்வாக்கும் வலிவும் இருக்கின்றன.

அவற்றையெல்லாம் ஒருங்கு சேர்த்து, அவருக்கு ஆயுதமாக்கித் தரவேண்டும். அப்போதுதான் வெற்றி உறதிப்படும்.

நெடுஞ்செழியன் யார்? கல்லூரிப்படிப்பையும், கணக் கேடுகளையும் வைத்துக்கொண்டு காலந்தள்ளிவிட முடியாதா? இவரைப்போல, ஊருக்கு ஊர், எண்ணற்ற இளைஞர்கள் ஊனையும், உறக்கத்தையும் மறந்து, உற்ற மனைவியையும் மறந்து, ஊருக்கு உழைப்பதே பெரும்பேறு என்று பணியாற்றிடக் காரணம் என்ன? அவர்கள் எல்லோரும் எதற்காக இப்படி முன்வர வேண்டும்? கனிமரக்காவும், பனி மலர்ச்சோலையும், பறக்கும் சிட்டும், தாவும் மானும், தத்தும் கிளியும், கொத்தும் திராட்சையும், கதலியும், மாவும், கழனியும், அருவியும் நிரம்பிக் கிடக்கும் உலகில், அவரவர்களும் அவரவர்கள் வேலையைப் பார்த்துக் கொண்டுபோகாமல், ஏனிந்த வெட்டடிபடும் வேலைக்கு வரவேண்டும்? கொள்கை! கொள்கை! என்று முழக்கி, துப்பாக்கிக்குண்டுக்கோ ஈரல்குலை நோய்க்கோ ஏன் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும்? என்ன அவசியம் அதற்கு? என்று எண்ணிப் பார்த்திடின் உலகைத் திருத்திய உத்தமர்களின் நினைவும், ஒவ்வொரு நாட்டையும் வாழ்விக்க உயிர்களைத் தத்தம் செய்த மாவீரர்களின் பட்டியலும்தான் கவனத்துக்கு வரும்.

அந்த வரிசையில் நம்மவர்களும் இன்று இருக்கிறார்கள். இது உண்மை! வெறும் புகழ்ச்சி இல்லை! தீயில் தள்ளினாலும், தொழுவத்திலே மாட்டிவைத்தாலும், சுட்டுப் போடுவேன் என்றாலும், நஞ்சளிப்பேன் என்று சொன்னாலும், நய வஞ்சகத்தை ஏவினாலும், நாயே பேயே என்று ஏசினாலும், அத்தனையையும் சகித்துக்கொண்டு, பொது நலத்துக்காகத் தங்களை ஒப்படைத்த ஒப்பற்ற சிந்தனையாளர்களின் பட்டியலிலே-ரூசோ, மாஜினி, கரிபால்டி, மார்க்ஸ் போன்ற

எண்ணற்ற விடுதலை வீரர்கள் சென்ற வழியிலே, நம்மவர்களும் இருக்கிறார்கள்.

அறிவுப் பரம்பரை மிகப்பெரியது! அந்தப் பெரிய குடும்பத்தின், இந்த நூற்றாண்டின் வாரிசுகளாக இருப்போர் பலர்! அவர்கள் பல இடங்களிலும் உளர்! அவர்களில் நாமும் நமது நாவலர் நெடுஞ்செழியனின் தலைமையின் கீழ் இருக்கிறோம்.

நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் நாம் கடமை ஆற்றுவோம்! அதுவும் கண்ணியத்தோடு ஆற்றுவோம்! அதுவும் கட்டுப்பாட்டோடு ஆற்றுவோம்! எதிர்காலத்தில் எல்லா வகையிலும் வெல்லுவோம்!"

மாவீரன் கே.வி.கே. சாமி படுகொலை

*நெல்லை மாவட்டம்* தூத்துக்குடியில் இளைஞர் படைத் தலைவராக இருந்து, அங்கு திராவிடர் கழகத்தையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் பலத்த எதிர்ப்புகளுக்கிடையே மிகச் சிறப்புற வளர்த்தவர் கே.வி.கே. சாமி அவர்கள். அவர் மாவீரன் என்றே பலராலும் அழைக்கப்பட்டார். அவர் பெரியார் அவர்களால் மிகவும் மதிக்கப்பட்டவர்; அறிஞர் அண்ணா அவர்களால் பெரிதும் பாராட்டிப் போற்றப்பட்டவர்.*

*அவர், மதுரை கறுப்புச்சட்டை மாநாடு, தூத்துக்குடி திராவிடர் கழக மாநில மாநாடு, திருச்சி திராவிட முன்னேற்றக்கழக மாநில மாநாடு ஆகியவற்றில் தொண்டர் படைத் தலைவராக இருந்து அரும்பெரும் பணிகளை ஆற்றியவர்.*

*அவரது வளர்ச்சிகண்டு பொறாமை கொண்ட எதிரிகள் சிலர் 20.9.56 அன்று நள்ளிரவில் அவரை வழிமறித்துப்*

* *பிரிக்கப்படாத அந்நாள் திருநெல்வேலி மாவட்டம்*

படுகொலை செய்தார்கள். அவர் படுகொலை செய்யப்பட்ட துக்கச் செய்தி, மதுரை முத்து அவர்களால் மதுரை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்த எனக்குத் தெரிவிக்கப்பட்டது. படுகொலை செய்யப்பட்ட செய்தி அறிந்து, நான் மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். அப்பொழுது நான் சோழவந்தானில், ஆவுடையப்பன் அவர்களின் 'பனகல் இல்லம்' வீட்டில் தங்கியிருந்தேன்.

இரவோடு இரவாக, நானும், மதுரை முத்துவும் காரில் புறப்பட்டுத் தூத்துக்குடிக்குப் போய்ச் சேர்ந்தோம். கே.வி.கே. சாமியின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினோம். துக்கச் செய்தி கேள்விப்பட்டு தென் மாவட்டங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்கள், அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காகத் தூத்துக்குடிக்குத் திரண்டு வந்திருந்தனர்.

அவரது உடல், பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காகக் கழக அலுவலகக் கட்டடத்தில், பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. மாலை 4 மணி அளவில் மாபெரும் இறுதி ஊர்வலம் எனது தலைமையில் புறப்பட்டு இடுகாட்டை அடைந்தது. ஊர்வலத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், பொதுமக்களும், கழகத் தோழர்களும் ஏராளமாகக் கலந்து கொண்டனர். இடுகாட்டில் எனது தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள் இரங்கல் உரை ஆற்றினார்கள்.

கே.வி.கே. சாமி புதைக்கப்பட்ட இடத்தில் நினைவுச் சின்னம் ஒன்று எழுப்பப்பட்டது.

கொலைக்குற்றத்தில் ஈடுபட்டதாகக் கருதப்பட்ட 11 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடந்தது.

அவர்களில் நான்கு பேர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

## தமிழக அமைப்பு நாள்

நாஞ்சில் பகுதிகளான அகத்தீசுவரம், தோவாளை, விளவங்கோடு, கல்குளம் ஆகியவற்றையும், செங்கோட்டை யின் ஒரு பகுதியையும் தமிழகத்துடன் இணைப்பதற்கான ஆணை ஒன்று, 1.11.56 அன்று வெளியிடப்பட்டது. அதனை வரவேற்றுத் தமிழக அமைப்பு நாள் என்ற பெயரில், 11.11.56 அன்று, நாடெங்கணும் விழாக் கொண்டாடவேண்டும் என்று, பொதுச் செயலாளர் என்ற முறையில், நான் வேண்டுகோள் அறிக்கை ஒன்றினை வெளியிட்டேன்.

அதன்படி, முக்கியமான நகரங்களிலும், பேரூர்களிலும் சிறப்புக் கூட்டங்கள் நடைபெற்றன. கழகத்தின் முக்கியப் பேச்சாளர்கள் பலரும் அந்தக் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

## பொதுத் தேர்தலில் பங்குபெறுவது பற்றிய பணிகள்

1957-ஆம் ஆண்டு நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் தி.மு.கழகம் எவ்வாறு ஈடுபடுவது என்பதைப் பற்றிக் கலந்தாலோசிக்க, கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் 29.12.56 அன்று, சேலத்தில் கூட்டப் பெற்றது. அறிஞர் அண்ணா அவர்கள் பொதுக்குழுக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். தேர்தல் சூழ்நிலைபற்றியும், தேர்தலைப் பொறுத்துத் தி.மு. கழகம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் பொதுச் செயலாளர் என்ற முறையில், நான் கூட்டத்தில் விளக்கிப் பேசினேன்.

1957 பொதுத் தேர்தலில் தி.மு.கழகத்தின் சார்பாக 150 இடங்களில் போட்டியிடலாம் என்ற முடிவு மேற்கொள்ளப் பட்டது.

தி.மு.கழகம் போட்டியிடக்கூடிய தொகுதிகளைத் தேர்ந் தெடுக்கவும், வேட்பாளர்கள் பட்டியலைத் தயாரிக்கவும், தனி ஆய்வுக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. அந்தக் குழுவிற்கு நான் தலைவராகவும், தோழர்கள் நடராசன், சம்பத், கலைஞர் கருணாநிதி, மதியழகன், ஆசைத்தம்பி, மதுரை முத்து ஆகியோர் உறுப்பினர்களாகவும் இருந்து பணியாற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆய்வுக்குழு தமிழகம் எங்கணும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, தகுதிபடைத்த வேட்பாளர்களின் பட்டி யலைத் திரட்டி வந்தது. பின்னர் அறிஞர் அண்ணா அவர்களோடு கலந்துபேசி, போட்டியிடக் கூடிய தொகுதி களையும், வேட்பாளர்களையும் தேர்ந்தெடுத்தோம். ஆய்வுக்குழுவினரால் தேர்தல் அறிக்கை ஒன்றும் தயாரிக்கப்பட்டு, அறிஞர் அண்ணா அவர்களின் ஒப்புதலும் பெறப்பட்டது.

கழக வேட்பாளர்களை நாட்டுக்கு அறிமுகப்படுத்து வதற்கு என்று, 10.1.57 இல், கோவையில், சிறப்பு மாநாடு ஒன்று கூட்டப்பெற்றது. அந்த மாநாட்டிற்கு நான் தலைமை தாங்கினேன். கழக முன்னணித் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். அறிஞர் அண்ணா அவர்கள் மாநாட்டின் இறுதியில் நீண்ட பேருரை ஆற்றினார். நான் வேட்பாளர் களின் பட்டியலை மாநாட்டில் வெளியிட்டேன்.

சட்டமன்றத் தொகுதிகளில், கீழ்க்கண்டவாறு கழகத்தின் முக்கியத் தலைவர்கள் போட்டியிடத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். காஞ்சிபுரம் தொகுதியில் அறிஞர் அண்ணா; சேலம் தொகுதியில் நான்; குளித்தலை தொகுதியில்: கலைஞர் கருணாநிதி; எழும்பூர் தொகுதியில்: பேராசிரியர் அன்பழகன்; பேசின்பிரிட்ஜ் தொகுதியில்: என்.வி.

நடராசன்; ஆயிரம்விளக்கு தொகுதியில்: ஆசைத்தம்பி; பெரம்பூர் (தனி) தொகுதியில்: சத்தியவாணி முத்து; திருவண்ணாமலை தொகுதியில் சண்முகம்; வளவனூர் தொகுதியில்: ஏ. கோவிந்தசாமி, கடலூர் தொகுதியில்: இளம்வழுதி; குடந்தை தொகுதியில்: நீலமேகம்; உடுமலை தொகுதியில்: மதியழகன்; மதுரை (மத்திய) தொகுதியில்: முத்து; தேனி தொகுதியில் இலட்சிய நடிகர் இராசேந்திரன்; சமயநல்லூர் (தனி) தொகுதியில் பி. சமதர்மம், நிலக்கோட்டை தொகுதியில் தா. ஆவுடையப்பன்; தூத்துக்குடி தொகுதியில்: எம்.எஸ். சிவசாமி; திருக்கோட்டியூர் தொகுதியில்: கவிஞர் கண்ணதாசன்.

மற்றும் 93 தொகுதிகளில் கழகத் தோழர்கள் வேட்பாளர்களாக நிறுத்தி வைக்கப்பட்டனர். மொத்தம் 112 பேர்கள் போட்டியிட்டனர்.

நாடாளுமன்றத் தொகுதிகளான தென் சென்னையில்:பி பாலசுப்பிரமணியம்; நாமக்கல் (பொது) ஈ.வெ.கி.சம்பத், கரூரில் இரா.செழியன்; நாகையில்: கி. மனோகரன்; திருச்சியில்: எம்.எஸ். மணி; திருப்பத்தூரில்: சி.பி. சிற்றரசு; திருவண்ணாமலையில்: இரா. தருமலிங்கம் ஆகியோரும், வேறு சிலரும் நிறுத்திவைக்கப்பட்டனர்.

தேர்தலில் அறிஞர் அண்ணா அவர்கள் உள்ளிட்ட 15 பேர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகவும், சம்பத், தருமலிங்கம் ஆகிய இருவர் நாடளுமன்ற உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேலம் சட்டமன்றத் தொகுதியில் நான் தி.மு. கழகத்தின் சார்பாகப் போட்டியிட்டேன். என்லை எதிர்த்து நின்ற காங்கிரசுக் கட்சி வேட்பாளர் ஏராளமான பணத்தைக்

கொடுத்து வாக்குகளை வாங்கினார். நான் பணம் கொடுத்து வாக்குகளைப் பெற விரும்பவில்லை. அதன் காரணமாக நான் 207 வாக்குகள் வேறுபாட்டில் வெற்றிக்கான வாய்ப்பை இழந்தேன்.

வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் சேலத்தில் நடைபெற்றபோது, அறிஞர் அண்ணா வந்து அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அந்தக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசும் போது, "நான் சேலம் தொகுதிக்குத் தங்கத்தைத் தந்தேன்; ஆனால், சேலம் தொகுதி வாக்காளர்கள் சிலர் அதனைப் பங்கப்படுத்திவிட்டார்கள்!" என்று வேதனையோடு குறிப்பிட்டார்.

தி.மு. கழகத்தின் ஆதரவு பெற்று டாக்டர் கிருட்டிணசாமி அவர்களும், சிவராசு அவர்களும் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்களாக ஆனார்கள்.

வெற்றி வீரர்களுக்குப் பாராட்டுக்கூட்டம்

1957 -இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தி.மு.கழகத்தின் சார்பாக நின்று வெற்றிபெற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாராட்டுத் தெரிவிக்கும் மாபெரும் பொதுக்கூட்டம், சென்னைக் கடற்கரையில், எனது தலைமையில் நடைபெற்றது.

பாராட்டுக் கூட்டத்தில் நான் பேசும்போது குறிப்பிட்டவை :

"நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் மூலம், நமது கழகத்தின் சார்பாக 15 சட்டமன்ற உறுப்பினர்களும், 2 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெற்றிபெற்று, சட்ட மன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் முதன் முதலாக அடியெடுத்து வைக்கிறார்கள்.

அவர்களையெல்லாம் வாழ்த்தி வரவேற்றுப் போற்றிப் புகழ்ந்து வழி அனுப்பி வைக்க நாம் அனைவரும் இங்குக் கூடியுள்ளோம். நமது கழகத்தினர் சிறிய எண்ணிக்கையில் தான் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்று இருக்கிறார்கள் என்றாலும் இந்த வெற்றியானது, மக்கள் மன்றத்தினர் நம்மை மதிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. பெரும்பாலான தொகுதிகளில் நாம் வெற்றிக்கான வாய்ப்பை இழந்திருக்கிறோம் என்றாலும், நாடு தழுவிய வகையில் தி.மு. கழகம் நன்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நாம் நாடெங்கணும் கழகத்தின் கொள்கை விதைகளைப் பரவலாகத் தூவி யுள்ளோம். அந்த விதைகள், எதிர்காலத்தில் முளை விட்டு, இலைவிட்டு, செடியாகி, மரமாகி, பூத்து, காய்த்து, கனிந்து நல்ல பல பலன்களைத் தரும் என்பது உறுதியாகிவிட்டது.

தமிழகச் சட்டமன்றத்திலும், இந்திய நாடாளு மன்றத்திலும் நமது கொள்கைக் குரல் ஒலிக்கத் தலைப்பட்டுவிட்டது. அந்தக் குரல் நாளுக்கு நாள் ஓங்கி நிற்கும் என்பது உறுதி.

இன்னும் ஐந்து ஆண்டுகளில், நமது கழகம் சட்டமன்றத் தில் முக்கிய எதிர்க்கட்சியாக விளங்கும். அதற்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஆளுங்கட்சியாக மாறும் என்பதற்கான அறிகுறிகளும் தென்படத் தொடங்கியுள்ளன.

எதிர்காலத்தில் நமது கொள்கை குறிக்கோள் - கோட்பாடு ஆகியவற்றிற்கு மக்கள் மன்றத்தில் நல்ல ஆதரவும், அரவணைப்பும் ஏற்படும் என்பது உறுதி.

அறிஞர் அண்ணா அவர்களின் சீரிய தலைமையின் கீழ் நமது சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியினராக இருந்து பணிபுரிவதன் மூலம், பொதுமக்களின் அன்பும், ஆதரவும் நம்பிக்கையும், நன்மதிப்பும் கழகத்திற்கு மிகவாகக் கிடைக்கும் என்பது திண்ணம்.

மக்களுக்கான நன்மைகளைச் செய்து முடிக்கிற வாய்ப்பு ஆளுங்கட்சியினர்க்கு உண்டு என்றாலும், அவற்றைத் திறம்பட எடுத்துச் சொல்லி, அவற்றிற்காக வாதாடுகின்ற வாய்ப்பும், உரிமையும் எதிர்க்கட்சியான தி.மு. கழகத்திற்கு ஏற்படும்.

தி.மு.கழகத்தின் வரலாற்றில் புதியதொரு பொலிவான கட்டம், இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இதனைப் பயன் படுத்தி நாம் மேலும் வளருவோமாக! வெல்லுவோமாக!''

*அறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றும்போது குறிப் பிட்டதாவது:-*

''தமிழகச் சட்டமன்றத்திற்கான உறுப்பினர்களாக, நாம் 15 பேர்கள் வெற்றி பெற்றிருக்கிறோம். எண்ணிக்கை குறைவு என்பதைச் சுட்டிக் காட்டி, எதிரிகள் ஏளனம் பேசக்கூடும்.

மொத்த இடங்களைக் கணக்கிடும்போது வெற்றி குறை வுதான் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். என்றாலும் இது முக்கியத்துவம் பெற்றதொரு வெற்றியாகும்.

'இதுகளுக்குத் தேர்தலில் போட்டியிட யார் கிடைப்பார்கள்? அப்படியே கிடைத்தாலும், இவர்களில் ஒருவர் கூட வெற்றி பெறமாட்டார்கள் என்று எதிர்க்கட்சியினர் ஏளனம் பேசினர். நம்மை இன்று ஏளனம் செய்வோர், கேலி பேசுவோர் என்றுமே நம்மை வாழ்த்தியவர்கள் அல்லர். நமது வளர்ச்சி, அவர்களுக்கு வீழ்ச்சி என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

எதிரிகளின் கேலி மொழியில், நமது பொதுச்செயலாளர் நாவலர் வெற்றிபெறவில்லையே என்ற துக்கமும் கலந் திருக்கிறது. நாங்கள் 15 பேர்கள் சட்டமன்றத்துக்குச் செல்லும் போது, நாவலர் எங்களுடன் இல்லையே என்ற ஏக்கம் எங்களுக்கு இருக்கவே செய்கிறது. நாங்கள் ஈட்டி பாய்ந்த இதயத்துடன்தான் செல்லுகிறோம்.

நமது நாவலரை என்றைக்கு நாம் சட்டமன்றத்திற்குள் அழைத்துச் செல்லுகிறோமோ, அன்றுதான் நாமெல்லாரும் மன நிம்மதி பெற முடியும்.

சட்டமன்றத்திற்குச் செல்ல இருக்கும் நமது தோழர் களுக்கு மூன்று வகையான பொறுப்புக்கள் இருக்கின்றன. ஒன்று, அங்கே நடைபெறக்கூடிய விவாதத்தை நாகரிகமானதாகவும், கண்ணியம் மிக்கதாகவும், சனநாயகப் பண்பு நிறைந்த தாகவும் ஆக்குவது; இரண்டாவது, அவரவர், அவரவரது தொகுதி நலன்களுக்கான செயல்களைச் செய்து முடிக்க வாதாடுவது; மூன்றாவது, நமது தி.மு. கழகத்தின் அடிப்படைக் கொள்கை-குறிக்கோள் கோட்பாட்டிலிருந்து சிறிதும் வழுவாதிருப்பது. இந்தப் பொறுப்புக்களை நாம் சரிவர நிறைவேற்றியாக வேண்டும்.

எதிரிகள் கேலி பேசுவதைக் கண்டு நான் குன்றிப் போகவில்லை; கேலி பேசுபவர்கள் தயவு செய்து நாம் வெட்கப்படுகிற அளவுக்குக் கேலி பேசவேண்டும் என்பது தான் எனது ஆவல். அப்பொழுதுதான், நமக்கு ஆர்வம் மேலும், மேலும் பெருகும்: திராணி மேலும், மேலும் வளரும்.

விரைவாக ஓடுகிற குதிரையைக் கூடச் சவுக்கால் தட்டிக் கொடுக்கிறார்களே! எதற்காக? மேலும் விரைவாக ஓடக் கூடியது அந்தக் குதிரை என்பதனால்தான்! அதுபோலத்தான். இன்று நம்மைப் பற்றிப் பேசும் கேலி மொழிகளும், நம்மை மேலும் விரைவாக ஓடச் செய்யும் என்பது உறுதி. கேலிமொழி அந்தச் சவுக்கடிபோல நமக்குப் பயன்பட வேண்டும் என்பது எனது ஆவல்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் பெற்ற வெற்றி யின் தன்மை குறித்து, தலைமையுரை ஆற்றிய பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் நன்றாக ஆராய்ந்து, தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறினார்.

நாம் பெற்றுள்ள இடங்கள் 15-தான் என்றாலும், நாம் பெற்றுள்ள வாக்குகள் 17 இலட்சம் என்பதை அவர் விளக்கினார். நாம் 17 இலட்சம் மக்களை நம் பக்கம் ஈர்த்திருக்கிறோம். நமது வெற்றி சாதாரணமானதொரு நிகழ்ச்சி அல்ல; தமிழக அரசியல் வரலாற்றில் புதியதோர் கட்டம்; நமது கழகத்தின் வரலாற்றிலே புதியதோர் கட்டம்; நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் புதிய பொறுப்பின் தன்மைகளை நாம் நன்கு உணரவேண்டும்.

தீவட்டிக்கும்- ஒளிவிளக்கிற்கும், சம்மட்டிக்கும்- அறுவை சிகிச்சைக் கத்திக்கும் உள்ள வேறுபாடு நமக்குத் தெரிந்தே இருக்கிறது. மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் சட்ட மன்றத்தில் நாங்கள் பணியாற்றுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சி எப்படி எப்படியெல்லாம் பணியாற்ற வேண்டும் என்றால், அதுபற்றி ஆளுகின்ற கட்சிதான் பதில் சொல்ல வேண்டும். ஆளுங்கட்சியினர் நடந்து கொள்வதைப் பொறுத்துத்தான் எதிர்க்கட்சியின் செயல்பாடு இருக்க முடியும்.

ஆளுங்கட்சி அடக்க ஒடுக்கமாக நடந்து கொண்டால், எதிர்க்கட்சியும் அவ்வாறே நடந்துகொள்ளும். ஏனோதானோ என்ற போக்கில், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று ஆளுங்கட்சி நடந்துகொண்டால், எதிர்க்கட்சியும் அதற்குத் தகுந்த மாதிரிதான் அமையும். எதிர்க்கட்சியை நல்ல முறையில் நடக்க வைக்க வேண்டிய பொறுப்பு ஆளுங்கட்சியின் கையில்தான் இருக்கிறது.

ஆளுங்கட்சியினர், தப்பித் தவறி நல்லவற்றைச் செய்தால், அவற்றிற்கு உறுதியாக ஆதரவு அளிப்போம்; அவர்கள் தவறான வழிகளில் சென்றால், அவற்றைக் கண்டிக்கத் தவறமாட்டோம்.

இங்கே உங்கள் முன்னால், மேடையில் வீற்றிருக்கும் திராவிட முன்னேற்றக்கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரையும் பாருங்கள்.

இவர்கள் எல்லோரும் கல்லடிகளைத் தாங்கியவர்கள்! சொல்லடிகளை ஏற்றவர்கள்! சிறைவாழ்வை மேற்கொண்ட வர்கள்! ஏளனத்திற்கும், இழி சொல்லிற்கும் மனங்கலங்காத வர்கள்! நெறித்த புருவத்தை மறந்தவர்கள்! புன்னகைதான் கொள்கை வெற்றிக்கு உதவும் என்று உணர்ந்தவர்கள்! நாட்டின் பெருமைக்குரிய தொண்டர்கள்! அவர்கள் ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியினராகப் பணியாற்றுவார்கள்! 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்ற முது மொழிக்கு ஏற்ப, விளங்கிவருபவர்கள்! எங்கள் பின்னால், பல இலட்சம் மக்களின் இதயங்கள் இருக்கின்றன என்ற உணர்வோடுதான் நாங்கள் பணியாற்ற முற்படுவோம்!"

*கூடியிருந்த பல இலட்சக்கணக்கான மக்கள், 'அண்ணா வாழ்க!,' 'தி.மு.கழகம் வாழ்க,' 'திராவிட நாடு திராவிடர்க்கே! என்ற முழக்கங்களை எழுப்பி ஆரவாரித்து மகிழ்ந்தனர்.*

புதுவரிகள் பற்றிய கண்டனப் பொதுக்கூட்டம்

*1957 இல் மத்திய அரசிலும், தமிழக மாநில அரசிலும் ஆட்சிப்பொறுப்புக்கு வந்திருந்த கட்சியினர், எடுத்த எடுப்பிலேயே மக்களால் தாங்கமுடியாத வரிகளை விதித் தார்கள். அப்படிப்பட்ட வரிவிதிப்புக்களை எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டிய இன்றியமையாமை, தி.மு.கழகத்திற்கு ஏற்பட்டது.*

*கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில், எல்லா ஊர்களிலும், நகரங்களிலும், கழகத் தோழர்கள் வரிவிதிப்புக் கண்டன ஊர்வலங்களையும், கண்டனப் பொதுக்கூட்டங்*

களையும், 26.5.57 அன்று நடத்தவேண்டும் என்று அறிக்கை வெளியிட்டேன்.

எல்லா இடங்களிலும் மிக்க எழுச்சியோடும், உணர்ச்சியோடும் கழகத் தோழர்கள் கண்டன ஊர்வலங்களையும், கண்டனப் பொதுக்கூட்டங்களையும் வெற்றிகரமாக நடத்தினர்.

மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் வரிவிதிப்புக்குக் கண்டனம் தெரிவித்தும், வரிகளைக் குறைக்குமாறு கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, அனுப்பி வைக்கப் பட்டன.

கழகத் தோழர்கள் 7.7.57 அன்று ஆங்காங்கு இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை நேரில் கண்டு, புதிய வரிகள் விதிக்கப்பட்டதைக் கண்டித்தும், அவற்றை அகற்றுமாறு கோரியும் முறையீடு செய்தனர்.

## 'ஹோம்லண்ட்' ஆங்கில வார இதழ் வெளியீடு

தி.மு.கழகத்தின் கொள்கைகளையும் குறிக்கோள்களையும் தமிழறியாத பிற மொழி மக்களும், பிற மாநிலத்தவரும் எளிதாகப் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக, ஆங்கில வார ஏடு ஒன்றினைக் கொண்டு வரவேண்டியதன் அவசியத்தை நான் அறிஞர் அண்ணா அவர்களிடம் அடிக்கடி வற்புறுத்தி வந்தேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் எனது வேண்டுகோளை ஏற்று, 'ஹோம்லண்ட்' (Homeland) என்ற பெயரில், ஆங்கில வார வெளியீட்டினைக் கொண்டு வர முயற்சியினை மேற்கொண்டார்கள். அந்த முயற்சி வெற்றி பெறக் கழகத் தோழர்களும், கழக ஆதரவாளர்களும் நன்கொடைகள் வழங்கி உதவி புரிந்தார்கள். அண்ணாமலைப்

பல்கலைக்கழகத் திராவிட மாணவர் அமைப்பின் சார்பாக, ரூ10,000 நன்கொடையாகத் திரட்டித் தரப்பட்டது.

அந்த ஏட்டில், அறிஞர் அண்ணா அவர்களே பல ஆங்கிலக் கட்டுரைகளை அருமையாகவும் அழகாகவும் எழுதினார். அந்த ஏடு மாற்றுக்கட்சியினர் உள்படப் பலராலும் மிகச் சிறப்பாக வரவேற்கப்பட்டது.

அறிஞர் அண்ணா அவர்களுக்கு உதவியாக இருந்து, தோழர்கள் ஏ.எஸ். வேணு, டி.எஸ். கிள்ளிவளவன், எம்.எஸ் வெங்கடாசலம், கிருட்டிணமூர்த்தி ஆகியோர் பணிபுரிந்து வந்தனர்.

### கலைவாணர் என்.எஸ்.கிருட்டிணன் மறைவு

அந்த நாட்களில், திராவிட இயக்கத்தோடு நீங்காத் தொடர்பு கொண்டு, சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை, நகைச்சுவை ததும்ப, திரைப்படங்கள் மூலமும், வில்லுப் பாட்டுக் கலை நிகழ்ச்சிகள் வாயிலாகவும் மிகச் சிறப்பாகப் பரப்பி வந்தவர், நகைச்சுவை மன்னர் கலைவாணர் என்.எஸ் கிருட்டிணன் ஆவார்.

அவர் பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரிடத்திலும், என்னைப் போன்றவர்களிடத்திலும் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். தி.மு. கழகத்தின் சார்பாக நடைபெற்ற பல மாநாடுகளிலும் விழாக்களிலும் அவர் கலந்து கொண்டு உரை ஆற்றியதோடு, கலை நிகழ்ச்சிகளையும், நாடக நிகழ்ச்சிகளையும் நடத்தி வந்தார். நாகர்கோவிலிலுள்ள அவரது இல்லத்தில், நான் பல தடவைகள், அவரது அன்பழைப்பை ஏற்று விருந்தினனாகத் தங்கியிருந்திருக் கிறேன். நானும் கழக முன்னணித்தலைவர்களான நடராசன், மதியழகன், கவிஞர் கண்ணதாசன், தா. ஆவுடையப்பன் போன்றோரும் அவருடன் சேர்ந்து, குமரிக் கடலில் பல தடவைகள் கடல் நீராடி மகிழ்ந்திருக்கிறோம்.

1957 இல், பொதுத்தேர்தல் நடைபெற்றபோது, நான் போட்டியிட்ட சேலம் தொகுதிக்கு வந்து, 'காந்திமகான்' வில்லுப்பட்டு கலை நிகழ்ச்சியை நடத்தி அவர் எனக்காக வாக்குக் கேட்டார். அவரது கலை நிகழ்ச்சியைக் காணவும், அவரது உரையைக் கேட்கவும் பெருந்திரளான மக்கள் கூடினர். 1957 ஆகஸ்டு திங்களில், அவர் நோய் வாய்ப் பட்டுச் சென்னைப் பெரிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபோது, நான் நேரில் சென்று அவரது உடல் நலம் உசாவி வந்தேன்.

நோய் கடுமையாக ஆகவே, அவர், 30.8.57 அன்று இயற்கை எய்தினார். மிகச் சிறந்தொரு நகைச்சுவை நடிகரை நாடு இழந்தது. தமிழகம் பெருந்துக்கத்தில் ஆழ்ந்தது.

சென்னையில் அவரது இறுதி ஊர்வலம் பெரிய அளவில் நடைபெற்றது. இறுதி ஊர்வலத்தில் அறிஞர் அண்ணா, நான் தியாகராச பாகவதர், எம்.ஜி ஆர்., சிவாஜி கணேசன், டி.கே. சண்முகம், ம.பொ.சி போன்றோரும், ஏராளமான நடிகர் - நடிகைகளும் பொதுமக்களும் கலந்துகொண்டோம். ஊர்வலத்தின் நெடுக அவர் பாடிய திரைப்படப்பாடல்கள் பலவும், ஒலிபெருக்கி மூலம் இசைக்கப்பட்டன.

அவரது உடல் எரியூட்டப்பட்ட சுடுகாட்டில் மாபெரும் இரங்கல் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் அறிஞர் அண்ணா, நான், எம்.ஜி. ஆர், மா.பொ.சி., டி.கே. சண்முகம் போன்றோர் கலந்துகொண்டு இரங்கல் உரை ஆற்றினோம்.

இரங்கல் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசியபோது கூறியதாவது:-

> 'பெரிய புயல் ஒன்று வீசி, நல்ல கனி மரம் சாய்ந்ததைப் போல, நம் கலைவாணர் சாய்ந்துவிட்டார்! அவரது அருமை

பெருமைகளையும், அவரது பெரும்பண்பு நலன்களைப் பற்றியும் பேச என் நா எழவில்லை. அவரது உயிரைக் காப்பாற்ற முடியுமானால், அவருக்காகத் தங்கள் உயிரைத் தரக்கூடிய உள்ளம் படைத்தவர்கள் பல பேர்கள், இங்குக் குழுமியிருக்கிறார்கள்.

கலைவாணருக்கு என்று தனிப்பட்ட குடும்பம் ஒன்றிருப்ப தாகச் சொல்ல முடியாது; தமிழ்நாடே அவரது குடும்பந்தான்; அவர் இந்த நாட்டுக்கும், கலை உலகுக்கும் முழுக்க முழுக்கச் சொந்தமானவர். இந்தியத் துணைக் கண்டம் மட்டுமல்ல, இந்தப் பார் முழுவதிலுமே அவரது புகழ்பரவி இருந்தது.

இன்று உலகம் ஓர் ஒப்பற்ற கலைஞரை இழந்துவிட்டது! கலைத்தாய் தன் மகனை இழந்து தவிக்கிறாள்! நாம் எல்லோரும் தாங்கவொண்ணாத வேதனைக்கடலில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம்! யாருடைய கலையால், யாருடைய தொண்டால், யாருடைய நல்ல உள்ளத்தால், நாடு ஏற்றம் பெற்று வந்ததோ, அந்த நாடு அவரை இழந்து இன்று தவிக்கிறது!

மறைந்த கலைவாணர் நம் நெஞ்சம் எல்லாம் நீக்கமற நிறைந்திருந்தவர்! எல்லோருடைய உள்ளத்திலும் தனிப் பெரும் இடம் பெற்றிருந்தவர்! அவர் என்றும் இறவாப் புகழ் பெற்றிருப்பவர்! நாம் அவருக்குச் செய்யும் கைம்மாறு அவரது உடலுக்கு நெருப்பு மூட்டுவதுதான்! அவர் நமக்குத் தந்தது அளவில்லா ஆனந்தம்! நாம் அவருக்குத் தருவது வற்றாத கண்ணீர்! நாம் நமது வேதனையைப் போக்கிக் கொள்ள, அவரது பெயரையும், புகழையும் நிலை நாட்டு வதைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை! கலைவாணரின் புகழ் என்றென்றும் நிலைத்து நிற்பதாக!"

*கலைவாணரின் முழு உருவச்சிலை, சென்னை தியாகராய நகரில் பேரறிஞர் அண்ணா அவர்களால் 14.1.1969*

அன்று திறந்து வைக்கப்பட்டது. சென்னையிலிருந்த 'சிறுவர் அரங்கம்' என்ற அரசின் அரங்கம் 'கலைவாணர் அரங்கம்' என்று பெயர் மாற்றியமைக்கப்பட்டது. நகைச்சுவை நடிகர் கலைவாணர் என்.எஸ். கிருட்டிணன் அவர்களுடைய இடத்தை நிரப்பக்கூடிய நகைச்சுவை நடிகர் எவரும் இதுகாறும் தோன்றவில்லை.

## வட ஆர்க்காடு மாவட்ட மாநாடுகள்

வட ஆர்க்காடு மாவட்டம் திருவண்ணாமலையில், 21.9.57 அன்று இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடும், 22.9.57 அன்று மாவட்ட தி.மு.கழக மாநாடும் சிறப்பாக நடைபெற்றன.

முதல் நாள் நடைபெற்ற இந்தித்திணிப்பு எதிர்ப்பு மாநாட்டினை சி.வி.எம். அண்ணாமலை தொடங்கி வைத்தார். மாநாட்டிற்குத் அருணகிரி நாத அடிகளார் தலைமை தாங்கினார்.

இரண்டாவது நாள் நடைபெற்ற மாவட்ட தி.மு.கழக மாநாட்டை, கே. கிருட்டிண மூர்த்தி தொடங்கி வைத்தார். மாநாட்டிற்கு அன்பில் தருமலிங்கம் தலைமை தாங்கினார்.

அந்த மாநாடுகளில் அறிஞர் அண்ணா, நான், சம்பத், கலைஞர் கருணாநிதி, நடராசன், சிற்றரசு, சத்தியவாணி முத்து போன்றோர் கலந்துகொண்டு உரையாற்றினோம்.

## இந்தித் திணிப்பு எதிர்ப்பு நாள்

இந்தியப் பேரரசு, எல்லாத் துறைகளிலும் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருப்பதை அகற்றிவிட்டுப் படிப் படியாக இந்தி மொழியை ஆட்சி மொழியாக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது.

திராவிடத்தின் மீது இந்தி மொழியை நேரடியாகவும், மறைமுகமாகவும் திணிக்கும் எண்ணத்துடன் மத்திய அரசினர் நடந்து கொண்டு வந்தனர். வடவரின் ஆதிக்க ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டவும், தென்னாட்டவரை நிலையான அடிமைகளாக ஆக்கவும், வடநாட்டு இந்தி வெறியர்கள் மிகவும் முயன்றுவந்தனர்.

இந்தித் திணிப்பு எதிர்ப்பு உணர்ச்சியை வெளிப்படுத்த 13.10.57 அன்று தமிழகம் எங்கணும், "இந்தித் திணிப்பு எதிர்ப்பு நாள்" கொண்டாடப்படவேண்டும் என்றும், அன்று இந்தித்திணிப்பை எதிர்த்துக் கண்டன ஊர்வலங்களும், கண்டனப் பொதுக்கூட்டங்களும் நடைபெற வேண்டும் என்றும், நான் பொதுச்செயலாளர் என்ற முறையில் வேண்டுகோள் விடுத்தேன்.

அதற்கேற்ப எல்லா நகரங்களிலும், பேரூர்களிலும் கண்டன ஊர்வலங்களும், கண்டனப் பொதுக்கூட்டங்களும் மிக்க எழுச்சியுடன் நடைபெற்றன.

கண்டனப் பொதுக்கூட்டங்களில், இந்தி மொழியைத் தென்னாட்டில் கட்டாய ஆட்சி மொழியாகவோ, பாட மொழியாகவோ திணிக்கக்கூடாது என்றும், அரசமைப்புச் சட்டத்தில் இந்தியை ஆட்சிமொழி ஆக்கும் விதி அகற்றப்படவேண்டும் என்றும், தமிழகத்தைப் பொறுத்த வரையில் தமிழ்தான் எல்லாவகையிலும் ஆட்சி மொழி ஆக்கப்படவேண்டும் என்றும், ஆங்கில மொழி தொடர்ந்து இந்தியாவின் பொதுமொழியாகவும் தொடர்பு மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் இருந்து வரவேண்டும் என்றும் வற்புறுத்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## நாஞ்சில் மாவட்ட தி.மு.கழக மாநாடு

நாஞ்சில் மாவட்ட தி.மு.கழக மாநாடு 1957 டிசம்பர் 27,28 நாட்களில், நாகர்கோவிலில் நடைபெற்றது.

மாநாட்டிற்குத் சம்பத் தலைமை தாங்கினார். மாநாட்டை மதுரை டாக்டர் அருணாசலம் தொடங்கி வைத்தார்.

மாநாட்டில் அறிஞர் அண்ணா, நான், கலைஞர் கருணாநிதி, மதியழகன், நடராசன், சிற்றரசு, ஆசைத்தம்பி, மதுரை முத்து, எம்.எஸ். இராமசாமி, சத்தியவாணிமுத்து, கழக முன்னணிச் சொற்பொழி வாளர்கள் பலரும் கலந்து கொண்டு உரையாற்றினோம்.

மாநாட்டை ஒட்டி, 29.12.57 அன்று, கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம், நாகர்கோவிலில் நடைபெற்றது. பொதுக்குழுவில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் மிக முக்கியமான தீர்மானம், இந்தியப் பிரதமர் பண்டிதநேரு சென்னைக்கு வரும்போது, அவருக்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தவேண்டும் என்பதாகும்.

இந்தியப் பிரதமர் பண்டித நேரு, "திராவிட நாட்டைத் தனி நாடாக ஆக்கவேண்டும் என்று கோருவது விசித்திரமான முட்டாள்தனமாகும்!" என்று ஒரு கூட்டத்தில் பேசினார். அவ ருக்குத் தி.மு.கழகத்தின் கண்டனத்தையும், எதிர்ப்புணர்ச்சி யையும் தெரிவிக்கும் வகையில், 6.1.58 இல் சென்னைக்கு வருகை தரும் பண்டித நேருவுக்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தை நடத்தவேண்டும் என்று பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### பண்டித நேருவுக்கு எதிராகக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம்

நாகர்கோவில் பொதுக்குழுத் தீர்மானத்திற்கு இணங்க, 6.1.58 இல் சென்னையில் பண்டித நேருவுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டும் ஆர்ப்பட்டத்தை மிகச் சிறப்பாக

நடத்துவதற்கான உரிய ஏற்பாடுகள் அனைத்தையும் தி.மு.கழகத் தலைமை நிலையம் மேற்கொண்டது.

அதனை ஒட்டிக் கழகப் பொதுச்செயலாளர் என்ற முறையில், நான் வேண்டுகோள் அறிக்கை ஒன்றினை வெளியிட்டேன். அதில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருந்த கருத்துக்களாவன:-

"இந்தியப் பிரதமர் பண்டித நேரு அவர்கள் ஆணவம் - அகந்தை - எதேச்சதிகாரம் - சர்வாதிகாரம் ஆகியவற்றின் காரணமாகத் திராவிட இயக்கத்தைச் சார்ந்த அறிவும், ஆற்றலும், அனுபவமும் மிக்க தலைவர்களைப் பித்தர்கள் என்றும், திராவிடத் தனி நாடு கேட்கும் மூதறிஞர்களை விசித்திரமான முட்டாள்கள் என்றும், இனஎழுச்சி ஊட்டுவோரைக் காட்டுமிராண்டிகள் என்றும், திராவிட இயக்கப் பெருந்தலைவர்கள் மூட்டை முடிச்சுடன் நாட்டை விட்டே ஓடிவிடவேண்டும் என்றும் இழித்துப் பழித்துக் கூறிவருவதைப் பழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

அவர், நாட்டில் இன்று தலைவிரித்து ஆடும் பஞ்சத்தைப் போக்கவில்லை! பசி பட்டினியைத் துடைக்கவில்லை! விடம்போல் ஏறிவரும் விலைவாசிகளைக் குறைக்க வில்லை! கட்டுப்படுத்தவில்லை! ஏழையரின் வாழ்வைக் காப்பாற்றவில்லை! வளத்தைப் பெருக்கவில்லை! வறுமையை அகற்றவில்லை! இல்லாமையைப் போக்க வில்லை! இவற்றையெல்லாம் செய்வதை விட்டுவிட்டு, அவர் திராவிட இயக்கத்தினரை இழித்தும் பழித்தும், கேலி செய்தும், கிண்டல் செய்தும் பேசி வருவதில், காலத்தைப் போக்கிக் கொண்டு வருகின்றார்.

அப்படிப்பட்ட பண்டித நேரு 6.1.58 அன்று, சென்னையில் பவனிவர இருக்கிறார். அப்போது அவருக்கு எதிர்ப்புணர்ச்

சியைத் தெரிவிக்க வேண்டியது நமது நீங்காக் கடமையாகிறது! பம்பாய்போல் பயங்கரம் வேண்டாம்! குசராத்போல் கலகம் வேண்டாம்! நாம் கட்டுப்பாட்டுடன், கண்ணியமான முறையில் கறுப்புக்கொடி காட்டி நமது கண்டனத்தைத் தெரிவிக்கவேண்டும்!

நமது நாடு உயரியது! நமது வரலாறு புகழ்மிக்கது! நமது தலைவர்கள் அறிவாற்றல் மிக்கவர்கள்! எனினும் நம்மை எல்லாம் ஏசுகிறார் பண்டித நேரு!

கறுப்புக் கொடி காட்டுவது என்பது, பண்டிதநேருவின் போக்கில் நாம் கொண்டிருக்கும் வெறுப்பையும், அருவருப்பையும், எதிர்ப்பையும், காட்டிக்கொள்ளும் அறிகுறியாகும்! அது சனநாயக நெறிமுறைப்படி அமைந்த ஒரு அமைதியான முறையாகும்! நமது கழகச் செயல்வீரர்கள் அனைவரும், யாதொருவிதமான வன்முறைச் செயலுக்கும் இடமளிக்காத வகையிலும், கட்டுப்பாடு குலையாமலும், கண்ணியம் குறையாமலும், கடமை தவறாமலும் கறுப்புக் கொடிகாட்ட அலைகடலெனத் திரண்டுவரக் கேட்டுக் கொள்கிறேன்! எப்படிப்பட்ட எதிர்ப்புக்கள், இன்னல்கள், இடையூறுகள், அடக்குமுறைகள் அரசுத் தரப்பினரிட மிருந்து வந்தாலும் அவற்றையெல்லாம், 'எதையும் தாங்கும் இதயம் உண்டு' என்ற முறையில், இன்முகத்துடன் ஏற்போமாக!"

*3.1.58. அன்று மாலை, சென்னைத் திருவல்லிக்கேணி கடற்கரையில், கறுப்புக் கொடி விளக்கப் பொதுக்கூட்டம் ஒன்றினைக் கூட்டி, அதில், அறிஞர் அண்ணாவும், நானும், கழகத்தின் மற்றத் தலைவர்களும் பேசுவதாக இருந்தோம். ஆனால் தமிழக அரசினர் பொதுக் கூட்டத்திற்கு அனுமதி தர மறுத்துவிட்டனர்.*

கறுப்புக் கொடி காட்ட இருந்த 6.1.58க்கு முன்னரே, அறிஞர் அண்ணா, நான், சம்பத், மதியழகன், பேராசிரியர் அன்பழகன், கலைஞர் கருணாநிதி, நடராசன் போன்றோரும், எல்லா மாவட்டங்களையும் சேர்ந்த பல கழக முன்னணியினரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டோம். நாடு எங்கணும் பல்லாயிரக் கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டனர். கழகத்தைச் சேர்ந்த கலைஞர்களான புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., நடிப்பிசைப் புலவர் கே. ஆர் இராமசாமி, இலட்சிய நடிகர் எஸ்.எஸ் இராசேந்திரன், நடிகமணி டி.வி. நாராயணசாமி ஆகியோரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் தள்ளப் பட்டனர்.

கழகத்தைச் சேர்ந்த முக்கியமானவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோதிலும், 6.1.58 இல், பண்டித நேரு சென்னைக்கு வருகை தந்தபோது, மீனம்பாக்கம் விமானக் கூடத்திற்கு எதிரிலும், சென்னை அண்ணா சாலையிலும் பதினாயிரக்கணக்கானவர்கள் திரண்டு நின்று கறுப்புக் கொடி காட்டி, எதிர்முழக்கங்கள் எழுப்பி, ஆரவாரித்து நின்றனர்.

கறுப்புக் கொடி காட்ட முனைந்து திரண்டு வந்தோரின் எண்ணிக்கை கட்டுங்கடங்காமல் போகவே, காவல் துறையினர் தடியடி நடத்தியும், கண்ணீர்ப்புகை விட்டும், குதிரைப் படையினரை ஏவிவிட்டும் கூட்டத்தினரைக் கலைக்க முயன்றனர். கூட்டத்தினரில் பலர் படுகாய முற்றனர். என்றாலும் கறுப்புக் கொடி காட்டுவது என்ற ஆர்ப்பாட்ட நிகழ்ச்சி வெற்றிகரமாக முடிந்தது. பண்டித நேருவின் பவனி பல இடங்களில் தடைப்பட்டது. கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தின் எழுச்சியை, அவர் வழிநெடுகக் கண்டுகொண்டே செல்லவேண்டி நேரிட்டது.

ஐந்து நாட்களுக்குப் பிறகு அறிஞர் அண்ணாவும், நானும், ஏனைய முக்கியக் கழகத்தோழர்களும் சிறையினின்று விடுவிக்கப்பட்டோம். மேலும் பலபேர்கள் விடுதலையாகப் பல நாட்கள் ஆயின.

## தி.மு.கழக மாவட்ட மாநாடுகள்

*16-17.2.58* ஆகிய நாட்களில் சேலம் மாவட்ட தி.மு.கழக மாநாடு பரமத்திவேலூரில் நடைபெற்றது. மாநாட்டிற்குக் கலைஞர் கருணாநிதி தலைமைதாங்க, நடிப்பிசைப் புலவர் இராமசாமி மாநாட்டைத் தொடங்கி வைத்தார். ஜி.பி.சோமசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

*22,23.2.58* ஆகிய நாட்களில், இராமநாதபுரம் மாவட்டக் கழக மாநாடு தேவகோட்டையில் நடைபெற்றது. மாநாட்டிற்குப் பேராசிரியர் அன்பழகன் தலைமை தாங்க, இலட்சிய நடிகர் இராசேந்திரன் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். இராம. வெள்ளையன் வரவேற்புரை ஆற்றினார்.

*2.3.58* இல் தி.மு.கழகம், தேர்தல் ஆணையத்தால் ஒரு மாநிலக் கட்சியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் தேர்தல் சின்னமாக, 'உதயசூரியன்' சின்னம் ஒதுக்கப் பட்டது. இந்தச் செய்தியை அறிக்கையின் மூலம் நான் வெளிப்படுத்தினேன்.

*8,9.3.58* ஆகிய நாட்களில் மதுரை மாவட்ட தி.மு.கழக மாநாடு, பழனியில் நடைபெற்றது. நாஞ்சில் மனோகரன் மாநாட்டிற்குத் தலைமை தாங்க, புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். மாநாட்டைத் தொடங்கிவைத்தார். மதுரை முத்து வரவேற்புரை நிகழ்த்தினார்.

*24,25.4.58* ஆகிய நாட்களில் கருநாடக மாநில தி.முக.கழக மாநாடு பெங்களூரில் நடைபெற்றது.

சத்தியவாணிமுத்து மாநாட்டிற்குத் தலைமை தாங்க, நடிகமணி நாராயணசாமி மாநாட்டைத் தொடங்கி வைத்தார். எஸ்.வி. பதி வரவேற்புரை ஆற்றினார்.

5,6.7.58 ஆகிய நாட்களில் கோவை மாவட்டக் கழக மாநாடு, கோபிச்செட்டிப்பாளையத்தில் நடைபெற்றது. ஆசைத்தம்பி மாநாட்டிற்குத் தலைமை தாங்க, தருமலிங்கம் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். உடுமலை நாராயணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

10,11.11.58 ஆகிய நாட்களில், தஞ்சை மாவட்ட தி.மு.கழக மாநாடு திருவாரூரில் நடைபெற்றது. மதியழகன் மாநாட்டிற்குத் தலைமை தாங்க, ப.உ. சண்முகம் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். என்.எஸ். இளங்கோ வரவேற்புரை ஆற்றினார்.

நடைபெற்ற எல்லா மாநாடுகளிலும் அறிஞர் அண்ணா, நான், கழக முக்கியத் தலைவர்கள் கலந்துகொண்டு சிறப்புரைகள் ஆற்றினோம்.

### சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தல்

1959ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நகராட்சி-மாநகராட்சி சட்டங்களின்படி தேர்தல் நடைபெறுமென ஆட்சியாளர்கள் அறிவித்தனர். தி.மு.கழகத்தின் சார்பாக நகராட்சி மன்றங்கள்-சென்னை மாநகராட்சி மன்றம் ஆகியவற்றில் வேட்பாளர்களைப் போட்டியிட வைப்பது என்ற தீர்மானம், கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

அதன்படி பல்வேறு நகராட்சி மன்றங்களின் தேர்தல்களிலும், சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலிலும் கழக வேட்பாளர்கள் நிறுத்திவைக்கப்பட்டனர். சில இடங்களில் மார்க்சிஸ்டு கட்சியினரோடு கூட்டணி அமைத்துக் கொண்டு தி.மு.கழகம் தேர்தல் பணி ஆற்றியது.

நகராட்சிகள்-மாநகராட்சி ஆகியவற்றின் தேர்தல் பிரச்சாரத்தில் அறிஞர் அண்ணா, நான்,கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன், மதியழகன், ஆசைத்தம்பி, சிற்றரசு, நடராசன், சத்தியவாணி முத்து, சம்பத், புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., இலட்சிய நடிகர் இராசேந்திரன், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி, நடிகமணி நாராயணசாமி, கவிஞர் கண்ணதாசன், காஞ்சி மணிமொழியார், காஞ்சி கலியாணசுந்தரம் போன்றோர் நாள் ஒன்றுக்கு நான்கு ஐந்து கூட்டங்கள் என்ற முறையில் மிகத் தீவிரமாக ஈடுபட்டோம்.

தேர்தல்முடிவுகள் பல இடங்களில் தி.மு. கழகத்திற்குச் சாதகமாகவே அமைந்தன. சென்னை மாநகராட்சியில் 100 இடங்களில், 45 இடங்கள் தி.மு.கழகத்திற்கும், காங்கிரசுக் கட்சிக்கு 37 இடங்களும், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சிக்கு 2 இடங்களும், பிரஜா சோஷியலிஸ்டு கட்சிக்கு 2 இடங்களும், சோஷயலிஸ்டு கட்சிக்கு 1 இடமும், சுயேச்சைகளுக்கு 13 இடங்களும் கிடைக்கப்பெற்றன.

24.4.59 அன்று சென்னை மேயர் பதவிக்கான தேர்தல் நடைபெற்றது. தி.மு. கழகத்தின் சார்பாக வேட்பாளராக நிறுத்தி வைக்கப்பட்ட அ.பொ. அரசு அவர்கள், கம்யூனிஸ்டுக் கட்சியினர், சுயேச்சைகள் ஆகியவர்களின் ஆதரவோடு சிறப்பான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாநகராட்சி மேயர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான பணிகளில் நானும், கலைஞர் கருணாநிதியும், முனிசாமியும் மிகத் தீவிரமாக ஈடுபட்டோம். அந்த முயற்சியில் வெற்றி பெற்றோம்.

மேயர் தேர்தலைக் காண நானும், கலைஞர் கருணாநிதி அவர்களும் சென்னை மாநகராட்சி மண்டபத் திற்குச் சென்றிருந்தோம். தேர்தல் முடிவைக் காண

ஆயிரக்கணக்கான கழகத் தோழர்கள் வந்து குழுமி யிருந்தனர். கழகத்தின் வேட்பாளர் அரசு, சென்னை மாநகர மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து, ரிப்பன் மாளிகைக்கு எதிரே கூடியிருந்த கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் வாழ்த்தொலி எழுப்பி, ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர்.

## சென்னை மேயருக்குப் பாராட்டுக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகச் சென்னை மாநகர முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைப் பாராட்டும் வகையில் சென்னையில் சிறப்புக் கூட்டம் ஒன்று 26.4.59 அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கூட்டத்திற்கு என்.வி. நடராசன், தலைமை தாங்கினார். பாராட்டு விழாவில் அறிஞர் அண்ணா, நான், கலைஞர் கருணாநிதி, சம்பத், முனிசாமி, காஞ்சிமணிமொழியார் ஆகியோர் கலந்து கொண்டு பாராட்டுத் தெரிவித்தோம்.

நான் பேசும்போது, புதிய மேயருக்குப் பாராட்டுத் தெரிவித்தோடு, சென்னை மாநகராட்சியின் வரல று பற்றிய குறிப்புக்களையும் தெரிவித்தேன். எனது பேச்சின் சுருக்கம் வருமாறு:

> "சென்னை மாநகராட்சியின் மேயராக நீதிக் கட்சியின் தலைவர்களான சர்.பி. தியாகராயர், சர். ஏ. இராமசாமி, சர்.எம்.ஏ. முத்தையா, பாசுதேவ், என்.சிவராசு போன்றவர்கள் பலர் இருந்து வந்திருக்கிறார்கள் என்றாலும், தி.மு.கழகத்தின் சார்பாக முதல் மேயராக அ.பொ. அரசு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நமக்கெல்லாம் பூரிப்பையும், பெருமையையும் தருகிறது.

தி.மு.கழகம் அரசியலில் புதியதொரு ஏற்றத்தைப் பெற்றிருக்கிறது. இன்று சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றிய தி.மு.கழகம், எதிர்காலத்தில் தமிழக ஆட்சியைக் கைப்பற்றும் என்பது உறுதி.

தி.மு.கழகத்தின் கொள்கைகளும், குறிக்கோள்களும், திட்டங்களும் தமிழ்நாட்டிற்கு ஏற்றம் தருபவை; எழில் பயப்பவை; மக்களுக்கு வாழ்வு அளிப்பவை; மக்களை வளர வைப்பவை; தி.மு.கழகம் மக்களுக்கு ஊட்டி வரும் ஊக்கம் எழுச்சியையும், உணர்ச்சியையும் பயப்பவை.

தி.மு.கழகம் மாநகராட்சியை அரசியல் கட்சிக் கண்ணோட்டத்தோடு நடத்தாமல், மக்களுக்கு அன்றாடம் தேவைப்படும் நன்மைகளைப் பயப்பதில் நாட்டம் செலுத்தும். தி.மு.கழகம் அரசியல் உணர்வோடு தேர்தலில் சூழ்நிலையை ஒட்டி ஈடுபட்டாலும், தேர்தலில் வென்ற பிறகு தொண்டுள்ளத்தோடுதான் பொதுவாகப் பணிபுரியும்.

மேயர் அ''சும், மாநகராட்சி மன்றக் கழக உறுப்பினர்களும் மக்களின் அன்பையும், அரவணைப்பையும், நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெறுகின்ற வகையில் தொண்டாற்றவேண்டும். அவர்கள் எல்லோர்க்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி மிகவும் தொன்மை வாய்ந்த வரலாறு படைத்த நகராட்சியாகும். 1688ஆம் ஆண்டு சென்னை நகராட்சி, ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத்தில் தோற்றம்பெற்றது. அப்போது நகராட்சியின் ஆட்சிப்பொறுப்பை முழுக்க முழுக்க ஆங்கிலேயர்களே ஏற்றிருந்தனர்.

1880 ஆம் ஆண்டில்தான், இந்தியாவின் வைசிராயாக இருந்த ரிப்பன் பிரபு உள்ளாட்சி முறையை முதன் முதலாக

நடைமுறைப்படுத்தினார். அதன் பிறகுதான் நகராட்சிகளில் பங்கு கொள்ளும் உரிமை இந்தியர்களுக்குக் கிடைத்தது.

சென்னை நகராட்சிக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுக்கும் தேர்தல் முறை, 1919 ஆம் ஆண்டில்தான் முதன்முதலாக நடைமுறைக்கு வந்தது. சர்.பி.தியாகராயர் சென்னை நகராட்சியின் முதல் தலைவராக, நீதிக்கட்சியின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1923 வரை நான்கு ஆண்டுகாலம் அந்தப் பதவியை ஏற்றிருந்தார்.

1934 ஆம் ஆண்டில்தான், சென்னை நகராட்சி என்ற அமைப்பு, சென்னை மாநகராட்சியாக மாற்றப்பட்டது. அப்பொழுது செட்டிநாட்டு அரசர் இராசாசர் முத்தையா செட்டியார் முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆண்டுக்கொருமுறை, வகுப்புவாரி அடிப்படையில் மேயர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற முறை அதுமுதல் நடைமுறைக்கு வந்தது.

1954இல், சென்னை மாநகராட்சிக்கு என்று, புலி - வில் - கயல் பொறிக்கப்பட்ட தனிக்கொடி உருவாக்கப்பட்டது.

இப்படியாகப் பல தனிச் சிறப்புக்களைக் கொண்ட சென்னை மாநகராட்சியைத் தி.மு.கழகம் இப்பொழுது கைப்பற்றி இருப்பது நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியைத் தருவதாகும்''

*இறுதியில் அறிஞர் அண்ணா அவர்கள் நீண்ட பேருரை நிகழ்த்தினார். பாராட்டு விழாக்கூட்டத்திற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் வருகை தந்து சிறப்புச் செய்தனர்.*

### தி.மு.கழக முத்தமிழ் மாநாடு-காரைக்கால்

*18,19.4.59 ஆகிய இரு நாட்களில், காரைக்காலில் தி.மு. கழகத்தின் சார்பாக முத்தமிழ் மாநாடு சிறப்பாக நடை பெற்றது.*

பேராசிரியர் தசரதன் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். க. இராசாராம் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

அறிஞர் அண்ணா, நான், கலைஞர் கருணாநிதி, கழக முன்னணித் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றினோம்.

மாநாட்டில் நாகூர் அனிபா குழுவினரின் இன்னிசை அரங்கு நடைபெற்றது. கலைஞர் கருணாநிதியின் 'உதய சூரியன்' நாடகம் நடைபெற்றது.

## நெல்லை மாவட்ட தி.மு.கழக மாநாடு

நெல்லை மாவட்ட தி.மு.கழக மாநாடு 16,17.5.59 ஆகிய இரு நாட்களிலும், தென்காசியில் நடைபெற்றது.

மாநாட்டிற்கு என்.வி. நடராசன் தலைமை தாங்கினார். கவிஞர் கண்ணதாசன் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

அறிஞர் அண்ணா, நான், கலைஞர் கருணாநிதி, புரட்சிநடிகர் எம்.ஜி.ஆர்., நடிப்பிசைப் புலவர் இராமசாமி, சிற்றரசு ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினோம். நாகூர் அனிபா குழுவினரின் இன்னிசை அரங்கும், 'உதயசூரியன்' நாடகமும் நடத்தப்பட்டன.

## திருச்சி மாவட்ட தி.மு.கழக மாநாடு

திருச்சி மாவட்ட தி.மு.கழக மாநாடு, 20,21.6.59 ஆகிய நாட்களில் துறையூரில் நடைபெற்றது. மாநாட்டிற்குச் சிந்தனைச் சிற்பி சிற்றரசு தலைமை தாங்கினார். மாநாட்டை முரசொலி மாறன் தொடங்கிவைத்தார்.

மாநாட்டில் அறிஞர் அண்ணா, நான், கலைஞர் கருணாநிதி, சம்பத், கவிஞர் கண்ணதாசன், என்.வி.

நடராசன், குடந்தை சாமி, அன்பில் தருமலிங்கம், கழக முன்னணிச் சொற்பொழிவாளர்கள் பலரும் சிறப்புரைகள் ஆற்றினோம்.

### திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடு

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடு, 22.8.59இல், சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்றது. ஏராளமான மாணவர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தந்தனர்.

மாநாட்டில், மூதறிஞர் இராஜாஜி, அறிஞர் அண்ணா, நான், கலைஞர் கருணாநிதி, மதியழகன், மா. இளஞ் செழியன், கவிஞர் கண்ணதாசன் போன்றோர் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றினோம்.

மாநாட்டில் இந்தித் திணிப்புக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து எல்லோரும் பேசினார்கள். கட்டாய மாக ஆட்சிமொழியாகவும் பொதுமொழியாகவும், தொடர்பு மொழியாகவும், பாட மொழியாகவும் திணிக்கப் படும் இந்தி அகற்றப்படவேண்டும் என்றும், அதற்கான முறையில் அறப்போர் மறியல் கிளர்ச்சி செய்யவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க.மாநாடு

செங்கற்பட்டு மாவட்ட தி.மு.கழக மாநாடு, 12,13.9.59 ஆகிய நாட்களில் பூவிருந்தவல்லியில் நடைபெற்றது.

மாநாட்டிற்கு ஈரோடு டாக்டர் சேதுபாஸ்கரன் அம்மையார் தலைமை வகித்தார். இராசேசுவரி சண்முகம் அம்மையார் மாநாட்டைத் தொடங்கிவைத்தார்.

மாநாட்டில் அறிஞர் அண்ணா, நான், கழகச் சொற்பொழிவாளர்கள் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்தினோம்.

மாநாட்டில், கவிஞர் கண்ணதாசன் நடித்த 'குற்றம் குற்றமே' என்ற நாடகமும், எம்.என். கிருட்டிணன் குழு வினரின் 'விடைகொடு தாயே' என்ற நாடகமும் நடை பெற்றன.

சென்னை மாவட்ட தி.மு.கழக மாநாடு

சென்னை மாவட்ட தி.மு.கழக மாநாடு, சென்னையில், 17,18.10.59 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

மாநாட்டிற்கு டி.கே. சீனிவாசன் தலைமை தாங்கினார். அரங்கண்ணல் மாநாட்டைத் தொடங்கிவைத்தார்.

அறிஞர் அண்ணா, நான், கழகச் சொற்பொழிவாளர்கள் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்தினோம்.

மாநாட்டில் கலைஞர் கருணாநிதி குழுவினர் நடித்த 'உதய சூரியன்' நாடகமும், அன்பில் தருமலிங்கம் குழுவினர் நடித்த 'பரப்பிரம்மம்' நாடகமும் நடைபெற்றன.

தி.மு.கழகச் செயற்குழு-பொதுக்குழுக் கூட்டங்கள்

தி.மு.கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம் 17.6.60 அன்றும், பொதுக்குழுக்கூட்டம் 18,19.6.60 ஆகிய நாட்களிலும், சேலம் மாவட்டம் குமாரபாளையத்தில் நடைபெற்றன. அறிஞர் அண்ணா, நான், தலைமைக் கழக நிருவாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டோம்.

கழகப் பொதுச்செயலாளர் என்ற முறையில் கழகத்தின் வளர்ச்சி நிலை, நாட்டின் அரசியல் சூழ்நிலை, காங்கிரசு ஆட்சியின் அடக்குமுறைப் போக்கு ஆகியவற்றை விளக்கிப் பேசினேன்.

சென்னை மாநிலத்தின் பெயரை மாற்றித் தமிழ்நாடு என்று பெயரிடவேண்டும் என்றும், நிலச்சீர்திருத்தக் கொள்கைகளை அரசு நடைமுறைப்படுத்த முயற்சியினை மேற்கொள்ள வேண்டும் என்றும், பஞ்சாலைத் தொழிலாளரின் ஊதியம் நியாயமான முறையில் திருத்தி அமைக்கப்படவேண்டும் என்றும், இந்தித் திணிப்பு அறவே அகற்றப்படவேண்டும் என்றும் வற்புறுத்தும் முக்கியமான தீர்மானங்கள் உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

இந்தித் திணிப்பை எதிர்த்துக் கடுமையான முறையில் போராடுவதற்கான திட்டங்களை வகுப்பதற்கு, இந்தி எதிர்ப்புப் போராட்டக்குழு ஒன்று எனது மேற்பார்வையில் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில், சம்பத், கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன், மதியழகன், சிந்தனைச் சிற்பி சிற்றரசு, சந்தியவாணிமுத்து, மனோகரன், ஏ. கோவிந்தசாமி, சண்முகம், கவிஞர் கண்ண தாசன், அரங்கண்ணல், நடிப்பிசைப் புலவர் இராமசாமி, இரா. தருமலிங்கம், எம்.பி. சுப்பிரமணியம், மதுரை முத்து, அன்பில் தருமலிங்கம், கோவை இராசமாணிக்கம் ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றிருந்தனர்.

நான் கழகப் பொதுச்செயலாளராகவும், நடராசன் கழகத் துணைப்பொதுச் செயலாளராகவும் ஆகி, ஐந்தாண்டுகாலம் நிறைவுபெற்றதை ஒட்டி, எங்கள் இருவரையும் போற்றிப் புகழ்ந்து பாராட்டும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப் பட்டது.

பாராட்டுக்கு நான் நன்றி தெரிவித்ததோடு, அடுத்துவரும் ஐந்தாண்டு காலத்திற்குக் கழகத்தைச் சனநாயக நெறி

முறைப்படி நடத்திச் செல்வதற்குப் புதிய பொதுச் செயலாளரை, அடுத்துக் கூடும் புதிய பொதுக்குழுக் கூட்டத்தில் ஒரே மனதாகத் தேர்ந்து எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன்.

## இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு

இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. இராசேந்திர பிரசாத் அவர்கள், கூட்டம் ஒன்றில் பேசும்போது, "இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாக வந்தேதீரும்; வந்தே தீரவேண்டும். அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மத்திய அரசு தொடங்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

குடியரசுத்தலைவரின் கூற்றுக்கு எதிர்ப்பும், கண்டனமும் தெரிவிக்கவேண்டிய இன்றியமையாமை தி.மு.கழகத்திற்கு ஏற்பட்டதன் காரணமாக, 'இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு' ஒன்றினை, 1.8.60இல், சென்னை கோடம்பாக்கம் அண்ணா நகரில் கூட்டுவது என்று கழகம் முடிவு செய்தது.

மாநாட்டிற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார். கழகப் பொது செயலாளராக இருந்த நான் மாநாட்டைத் தொடங்கி வைத்தேன். சம்பத் வரவேற்புக் குழுத்தலைவராகப் பணி ஆற்றினார். மதியழகன் வரவேற் புக் குழுச் செயலாளராக இருந்தார்.

மாநாட்டில், கழகத்தின் முக்கிய முன்னணிச் சொற் பொழிவாளர்கள் பலரும் கலந்துகொண்டு உரையாற்றி னார்கள். மாநாட்டுப் பந்தலில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட கழகத் தோழர்களும், பொதுமக்களும் திரண்டிருந்தனர்.

மாநாட்டைத் தொடங்கி வைத்து நான் பேசும்போது குறிப்பிட்டதாவது:-

''தமிழகத்தை எல்லா வகைகளிலும் அடிமைப்படுத்தும் நோக்கத்தோடு வடநாட்டு இந்தி வெறியர்கள் நம்மீது திணிக்க விரும்பும் இந்தி மொழி ஆதிக்கத்தைக் கண்டிக்கவும், எதிர்க்கவும், அறிஞர் அண்ணா அவர்களின் சீரிய தலைமையின்கீழ் நாம் அனைவரும் இங்குக் கூடியிருக்கிறோம்.

'இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம்! நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே! செந்தமிழுக்குத் தீமை வந்த பின்னும், இந்தத் தேகம் இருந்தொரு இலாபம் உண்டோ? என்ற முறையில் உரத்த குரல் எழுப்ப நாம் அனைவரும் இங்குக் குழுமியுள்ளோம்!

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை! ஏங்க விடோம் தமிழ்த் தாய்தனையே- உயிர் இவ்வுடலை விட்டு நீங்கும் வரை!' என்று சூளுரை உரைக்க நாம் இங்குக் கூடியுள்ளோம்.

இந்த மாபெரும் மாநாட்டில் கூடியிருக்கும் இளைஞர்களையும், வீரர்களையும், தீரர்களையும் அறப் போராட்டத்திற்குக் கூவி அழைப்பதற்காகவே, நான் உங்கள் முன்னால் வந்து நிற்கிறேன்.

'விந்தைத் தமிழ் மொழி எங்கள் மொழி! அது, வீரத்தமிழ் மக்கள் ஆவி என்போம்!' என்றும், 'அற்பம் என்போம் அந்த இந்திதனை-அதன் ஆதிக்கந்தன்னைப் புதைத்திடுவோம்! என்றும், 'எங்கள் உடல்பொருள் ஆவியெல்லாம்- எங்கள், இன்பத் தமிழ் மொழிக்கே தருவோம்!' என்றும், 'பங்கம் விளைந்திடில் தாய்மொழிக்கே உடல், பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்!' என்றும், 'தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம் - உயிர், தித்திப்பை எண்ணிடப் போவதில்லை!' என்றெல்லாம் அறைகூவல் விட நாம் அனைவரும் இங்குக்

குழுமியுள்ளோம். வளர்ச்சியடையாததும் வட நாட்டினர்க்கும் மட்டும் சொந்தமானதுமான இந்தி மொழியை, இந்தியாவின் ஒரே தேசிய மொழியாக ஆக்கவும், அதனையே இந்தியாவின் பொது மொழியாக ஆக்கவும், அதனையே இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்கவும், அதனையே இந்திய மாநிலங்களிடையே தொடர்பு மொழியாக ஆக்கவும் வடநாட்டு இந்தி மொழி வெறியர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள். அதற்காக அரசின் ஆதிக்க அதிகாரத்தைப் பயன்படுத்த முயலுகிறார்கள். அவர்களின் முயற்சிக்குக் குடியரசுத் தலைவர் துணை போயிருக்கிறார்.

இந்தி, இந்தியா முழுமைக்கும் சேர்த்து ஒரே தேசிய மொழி என்று கூறுவது எந்த வகையிலும் பொருந்தி வருவது ஆகாது. தேசியம் என்பது இயற்கையாக, தானாக, வளரக் கூடிய மொழி - நாகரிகம் - பண்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கூட்டுத் தன்மையாகும். தேசியம் என்பது உருவாகின்ற ஒன்றே அல்லாமல், உருவாக்கப்படுகின்ற ஒன்று அல்ல. இந்தியாவானது ஒரே ஒரு தேசிய மொழியை மட்டும் கொண்டு விளங்கும் ஒரு நாடல்ல; அது பல தேசிய மொழிகளைக் கொண்ட ஒரு துணைக் கண்டமாகும். இந்தியானது, இந்திய தேசிய மொழிகள் பலவற்றுள் ஒன்றே தவிர, இந்தி மட்டுமே இந்தியாவின் ஒரே தேசிய மொழியாக ஆகிவிட முடியாது.

இன்றைய நிலையில் டில்லியைச் சுற்றியுள்ள சுமார் ஒன்றரைக் கோடி மக்கள் மட்டும் பேசக்கூடிய 'கடிபோலி' என்ற இந்தியைத்தான் இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்கிட முயலுகிறார்கள். வடமாநிலங்கள் நான்கிலும் 89 வகையான இந்தி மொழிகள் பேசப் படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் 'கடிபோலி' இந்தி. எல்லா இந்திக்காரர்களையும் ஒன்று சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்தாலும், இந்திய மக்கள்

தொகையில், 35 சதவீதம் பேர்கள்தான் அவர்கள் காணப்படுகிறார்கள். மீதமுள்ள 65 சதவீத மக்கள் இந்தி மொழியல்லாத பிறமொழிகளைப் பேசுபவர்கள் ஆவார்கள்.

இந்தி மொழிகளில் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத வகையில், பந்தேலி இந்தி, கனோஜ் இந்தி, பிரஜ்பாஷா இந்தி, பங்காரு இந்தி, கடிபோலி இந்தி, அவதி இந்தி, பகேலி இந்தி, சாஸ்டில்காரி இந்தி, மைதிலி இந்தி, போஜ்புரி இந்தி, மககி இந்தி என்ற முறையில் பல பெரும் பிரிவுகளும், அவற்றிற்குள் பல சிறு பிரிவுகளும் இருக்கின்றன.

திராவிட நாட்டைப் பொறுத்த வரையில், இந்தி மொழி எந்தவகையிலும் பயன்படாத ஒரு மொழி; நமக்குத் தேவைப்படாத ஒரு மொழி. திராவிடத்தினுள் தமிழகம் - ஆந்திரம் - கருநாடகம் - கேரளம் ஆகிய நான்கு மாநிலங்களும் முறையே தமிழ் - தெலுங்கு - கன்னடம் - மலையாளம் ஆகியவற்றை, மாநில ஆட்சி மொழிகளாகக் கொண்டு வாழவும், வளரவும் முடியும்.

உலகப் பொதுமொழியாகவும், இந்தியாவின் பொது மொழியாகவும், தொடர்பு மொழியாகவும், இந்தியாவின் ஆட்சி மொழியாகவும், அறிவியலைக் கற்றுத் தரும் மொழியாகவும் இருந்து வருகின்ற ஆங்கில மொழியே நமக்கு என்றென்றும் துணை மொழியாக இருந்து வரக்கூடிய மொழியாகும். தமிழ் நமக்குத் தாய் மொழி என்றால், ஆங்கிலம் நமக்குச் செவிலித்தாய் மொழியாக இருந்து பயன்பட்டு வரமுடியும்.

திராவிட மொழிகளோடு ஒப்பிடும்போது, இந்தி மொழி எல்லாவகையிலும் தரம் குறைந்த ஒரு மொழியாகும். தமிழில் இருப்பது போன்று, இலக்கிய வளமோ, இலக்கணக் கட்டுக்கோப்போ, அழகோ, அருமையோ, இனிமையோ, தொன்மையோ இந்தி மொழிக்கு அறவே கிடையாது.

இந்தி மொழியைத் திணிப்பது என்பது, திராவிடத்தின் உரிமையையும், வாழ்வையும், விடுதலை வேட்கையையும் பறிக்கின்ற ஒரு சதித்திட்டமாக இருப்பதால் தான், அதனை முழு மூச்சோடு எதிர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு நாம் ஆளாகியிருக்கிறோம்.

இந்தித் திணிப்பை எவ்வாறு எதிர்ப்பது, என்ன விதமான அறப்போர் முறைகளை மேற்கொள்ளுவது என்பதற்கான திட்டங்களை அறிஞர் அண்ணா அவர்கள் தீட்டித்தர இருக்கிறார்கள். அவற்றை நிறைவேற்ற வேண்டிய கடப்பாட்டில் நாம் இருக்கிறோம்.

இந்தி எதிர்ப்புக்கான பாசறை உருவாகிவிட்டது! படைவீரர்களும் திரண்டுவிட்டனர்! வாளும் கேடயமும் ஏந்தி நிற்போம்! அறிஞர் அண்ணாவின் போர் முரசு கொட்டியவுடன் புறப்படுவோம் களம் நோக்கி!"

*இறுதியாகத் தலைமை உரை ஆற்ற அறிஞர் அண்ணா எழுந்தார்; எழுந்தவுடன் 'அண்ணா வாழ்க!' 'தமிழ் வாழ்க!' 'இந்தி ஒழிக!' திராவிட நாடு திராவிடர்க்கே! என்று ஒலி முழக்கம் செய்து ஆரவாரித்தனர், கூடியிருந்த மக்கள். அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய தலைமையுரையின் சுருக்கம் வருமாறு:-*

"நான் இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்க வேண்டும் என்று, எனக்குப் பிடித்தமில்லாத ஒரு செயலை, ஏன் என் தம்பிமார்கள் என்னை வற்புறுத்தினார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல், முதலில் பெரிதும் வியப் படைந்தேன், இப்பொழுது அதற்கான காரணம் என்ன என்பது எனக்குப் புரிந்துவிட்டது.

என்னை உட்கார வைத்துக்கொண்டே, என்னைப் பற்றிப்பேசிய தம்பிமார்களெல்லோரும், "வழிகாட்ட

வேண்டும்! திட்டங்கள் தரவேண்டும்! ஆணையிட வேண்டும்!'' என்றெல்லாம் கேட்டுக்கொண்டார்கள். இங்கே யாருக்கும் தெரியாத ஒன்று என்னிடம் மறைக்கப்பட்டுக் கிடப்பதைப்போலவும், எல்லோரும் அதை எதிர்பார்த்து ஏங்கிக்கிடப்பதைப் போலவும் அதை உங்கள் முன்னிலை யிலே எடுத்துக்கூறி உங்களையெல்லாம் திகைப்படையும் படி செய்யும் செயலைத் தம்பிமார்களெல்லோரும், மிகச் சாமர்த்தியமாகச் செய்து முடித்துவிட்டார்கள்.

இங்கே இந்தித் திணிப்புக்கான எதிர்ப்பினைக் காட்டிட மாபெரும் மாநாடு கூட்டப்பட்டிருக்கிறது! பெருந்திரளான மக்கள் கூடியிருக்கிறார்கள்! சோர்வுற்றிருந்த நெஞ்சங்களெல் லாம் களிப்படைந்திருக்கக் காண்கிறேன்! நமக்கெல்லாம் புதிய ஊக்கமும், உற்சாகமும், நம்பிக்கையும் ஏற்பட்டிருக் கின்றன! இங்கே கூடியிருக்கின்ற மக்கள் காட்டும் உற்சாகமும், உறுதியும் எங்களுக்குப் பெரிதும் உதவுவனவாகும்! அறப்போரில் நாம் ஈடுபட இந்த மாநாடு வழி கோலும் என்று நான் நம்புகிறேன்!

இன்றைக்கு இருக்கின்ற நிலையில், இந்தித் திணிப்பை எதிர்த்து, நாம் போராட்டம் நடத்தியே தீர வேண்டும் என்ற கட்டத்திற்கு, மத்திய அரசினரால் தள்ளப்பட்டிருக்கிறோம். அதற்காகப் போராட்டக்குழு ஒன்றினை முன்பே அமைத் துள்ளோம். அறப்போராட்டத்தை நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை.

காங்கிரசுக்காரர்கள் இந்தியினால் எந்த ஒரு ஆபத்தும் தமிழுக்கோ, தமிழர்க்கோ, தமிழ் நாட்டுக்கோ ஏற்படாது என்பதை எடுத்து விளக்கட்டும். அதை அதே நேரத்தில், அதே மேடையில் நான்கூட வேண்டாம், என்னுடைய தம்பிமார்களில் ஒருவரை, அதிலும் மிகவும் பலவீனமான

ஒரு தம்பியை அழைத்து, இந்தியினால் என்னவிதமான கேடுகள் ஏற்படும்? என்று கேட்கட்டும். பொதுமக்கள் முன்னிலையில் என் தம்பிகளில் ஒருவர், இந்தியினால் வரும் கேடுகளை விளக்கட்டும்; அதனை மறுத்துக் காங்கிரசு அமைச்சர்கள், இந்தியினால் இன்னின்ன நன்மைகள் ஏற்படும் என்று விளக்கிப் பேசட்டும். அதே கூட்டத்தில் இந்தி தேவையா? வேண்டாமா? என்பது குறித்து, வாக்கெடுத்துப்பார்க்கட்டும். இதற்குக் காங்கிரசு அமைச்சர்கள் தயார் என்றால், அதற்கான பொன்னான வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறோம்.

இந்தத் தடவை, நமது அறப்போராட்டத்தில் அடக்கு முறைகள் தலைவிரித்தாடும். நம்மில் பலர் கை கால்கள், மற்ற உறுப்புக்கள் ஆகியவற்றை இழக்க நேரிடும். இன்னும் சொல்லப்போனால் சிலர் உயிரையே இழக்க வேண்டிய நிலை ஏற்படலாம். எப்படிப்பட்ட கொடுமைகள் இழைக்கப் பட்டாலும், எத்தகைய தியாகத்திற்கும் உட்படுமளவுக்கு, நீங்கள் உங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும்.

நாம் நடத்தும் போராட்டம் எதுவாக இருந்தாலும், அது அறநெறியின்பாற்பட்டதாய், அமைதிக்கு ஊறு விளைவிக் காததாய், வன்முறைக்குச் சிறிதும் இடம் அளிக்காததாய் அமையும் விதத்தில் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

குடியரசுத் தலைவருக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டுகின்ற நேரத்தில், "இந்தி ஒழிக! இந்தித்திணிப்பு ஆணையைத் திரும்பப் பெறுக!" என்ற முழக்கந்தான் ஓங்கி நிற்கவேண்டும்."

*அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சு முடிந்ததும், அவர் கழக முன்னணித் தலைவர்களிடம் கறுப்புக் கொடிகளை வழங்கினார்.*

*இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாட்டில் காட்டிய எழுச்சியின் எதிரொலி, மத்திய அரசினரைச் சிறிது சிந்திக்க வைத்தது.*

''இந்திய அரசு வேலைகளில் சேர விரும்பும் இந்தி பேசாத பகுதிகளைச் சேர்ந்தவர்கள், இந்தித் தேர்வில் கட்டாயம் தேறவேண்டும் என்ற அவசியமில்லை. குடியரசுத் தலைவரின் ஆணையில், இந்தி பற்றி எவ்வித நிபந்தனையும் விதிக்கப்பட வில்லை'' *என்று பாராளுமன்றத்தில், உள்துறை அமைச்சர் பண்டித பந்த் விளக்கம் அளித்தார்.*

*பண்டித நேரு அவர்கள்,* ''மொழிப் பிரச்சினை பற்றி நான் மக்கள் அவையில் அளித்த வாக்குறுதி அப்படியே இருக்கிறது. அதற்குப் புறம்பான நடவடிக்கைகள் எவற்றையும் மத்திய அரசு நிறைவேற்றாது. இந்தி பேசாத மாநில மக்களுக்கு நாங்கள் அளித்த வாக்குறுதிக்குக் கட்டுப்பட்டே இருக்கிறோம்'' *என்ற கருத்தினை வெளியிட்டார்.*

*இந்த நிலையில், 4.8.60 இல், தி.மு.கழகத்தின் மத்திய செயற்குழுக்கூட்டத்தை நான் அவசரமாகக் கூட்டினேன். அறிஞர் அண்ணாவும், மற்ற முக்கியத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.*

*பண்டித நேரு அவர்கள் மொழிப்பிரச்சினை பற்றித் தாம் கொடுத்த வாக்குறுதி காப்பாற்றப்படும் என்று கூறியிருப்பதாலும், பண்டித நேருவின் சொற்படிதான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று குடியர சுத்தலைவர் உறுதி கூறியிருப்பதாலும், நேருவின் வாக்குறுதி எந்த வகையிலும் மீறப்படமாட்டாது என்று மத்திய அமைச்சர் பந்த் விளக்கம் அளித்திருப்பதாலும், கறுப்புக்*

கொடி காட்டி எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று செயற்குழு கருதி, அறப்போராட்டம் நடத்துவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தது.

இந்த நிலை, இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்குக் கிடைத்த ஒரு வெற்றி என்றே தி.மு.கழகம் கருதியது. கறுப்புக் கொடி காட்டும் கிளர்ச்சி இன்றியே, கழகம் பெற்றுள்ள வெற்றி என்ற முறையில் 7.8.60 அன்று, திருவல்லிக்கேணி கடற்கரையில், மாபெரும் வெற்றிவிழாக் கூட்டம் ஒன்று எனது தலைமையில் நடைபெற்றது. அறிஞர் அண்ணா அவர்கள் நீண்டதொரு வெற்றிவிழாச் சொற்பொழிவினை நிகழ்த்தினார். கூட்டத்தில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் திரண்டிருந்தனர்.

## தி.மு.க.வின் தலைமைக் கழகத்தேர்தல்

கழகத்தின் சிற்றூர்-பேரூர்-நகரக் கிளைகள், வட்டக் கிளைகள், மாவட்டக் கிளைகள் ஆகியவற்றின் தேர்தல்கள் முறையாக நடந்தேறிய பின்னர், தலைமைக் கழக நிருவாகிகளின் தேர்தல், 25.9.60 இல், சென்னை இராயப்பேட்டை, இலாயிட்சு சாலையில் புரட்சிநடிகர் எம்.ஜி.ஆர். அவர்களின் மாளிகை மண்டபத்தில் நடைபெற்றது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். எனது தலைமையில் தேர்தல் நடைபெற்றது.

புதிய பொதுச் செயலாளர் தேர்தலில் போட்டியிட சிற்றரசு அவர்களும், மதியழகன் அவர்களும் முயன்றனர். பொதுக்குழு உறுப்பினர்கள் இருபிரிவாகப் பிரிந்து நின்று, வாக்குகள் திரட்டுவதில் ஈடுபட்டனர். பொதுச் செயலாளர் தேர்தலில் போட்டி ஏற்படுவதை அறிஞர் அண்ணா, நான்,

கலைஞர் கருணாநிதி போன்றோர் விரும்பவில்லை. போட்டியைத் தவிர்ப்பதற்கு, அறிஞர் அண்ணா அவர் களையே ஒருமனதாகப் பொதுச்செயலாளராகத் தேர்ந் தெடுப்பது என்று எல்லோரும் முடிவு செய்தோம்.

அதன்படி அறிஞர் அண்ணா அவர்கள் கழகப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். துணைப்பொதுச் செயலாளர்களாக நான், நடராசன், பேராசிரியர் அன்பழகன், மதியழகன், சிந்தனைச் சிற்பி, சிற்றரசு ஆகியோர் நியமிக்கப்பட்டோம். அவைத் தலைவராக சம்பத்தும், பொருளாளராகக் கலைஞர் கருணாநிதியும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பின்னர் தணிக்கைக்குழு, தீர்ப்புக்குழு, சொத்துப் பாது காப்புக்குழு, ஆட்சி மன்றக்குழு ஆகிய குழுக்களுக்கான உறுப்பினர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர். 21 பேர்கள் கொண்ட தலைமைச்செயற்குழு அமைக்கப் பட்டது.

கழகப் பொதுச் செயலாளராக அறிஞர் அண்ணா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதைக் கழகத் தோழர்களும், கழக ஆதரவாளர்களும் பெரிதும் வரவேற்று, வாழ்த்தொலி எழுப்பி மகிழ்ந்தார்கள்

**என் அருமைத் தாயார் மறைவு**

என்னையும் என் உடன்பிறந்தவர்களையும் ஈன்றெடுத்து, எங்களையெல்லாம் நல்ல முறையில் வளர்த்து, ஆளாக்கி விட்ட பெருமைக்குரிய எங்கள் அருமை அன்னையார், மீனாட்சி சுந்தரத்தம்மையார் அவர்கள், சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து, 6-1-61 இல் 60ஆவது வயதில் இயற்கை எய்தினார்கள்.

எங்கள் அருமைத் தந்தையார் 21.8.46 இல் இயற்கை எய்திய பிறகு, எங்கள் குடும்பத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்று, அதனைக் கட்டிக் காத்துச் சிறப்புற வளர்த்து வந்தவர் எங்கள் அன்னையாரே ஆவார்.

எங்கள் அன்னையார் 18-5-1900 அன்று, சீனிவாச முதன்மையார்-பொன்னம்மாள் அண்ணி ஆகியோருக்கு ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தார். தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம் திருக்கண்ணபுரத்தில்*தான் எங்கள் தாயார் பிறந்து, வளர்ந்து, படித்து வாழ்ந்து வந்தார். 1916ஆம் ஆண்டில், எங்கள் தந்தையார் இராசகோபாலனார் அவர்களுக்கு வாழ்க்கைத் துணைவியராக ஆனார்கள்.

எங்கள் தந்தையாருக்குக் குறைந்த அளவில்தான் சம்பளம் கிடைத்து வந்தது என்றாலும், அதனைக்கொண்டு, 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்க' என்ற முதுமொழிக்கு இணங்க, குடும்பத்தைச்சீரோடும், சிறப்போடும் காப்பாற்றி வந்தவர் எங்கள் பேரன்பிற்குரிய தாயாரே ஆவார்கள். எங்கள் தந்தையாருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்வதிலும், பிள்ளைகளெல்லோரையும் பேணிவளர்ப்பதிலும், எல்லாரையும் கல்லூரி பல்கலைக்கழகம் வரையிலும் படிக்க வைப்பதிலும், எங்களையெல்லாம் பண்புள்ளவர்களாகவும், பாங்குடையவர்களாகவும் வளர்ப்பதிலும் இறுதி வரையில் அவர்கள் கண்ணுங்கருத்துமாகவே இருந்து வந்தார்கள்.

எங்கள் தாயார், எங்களது குடும்பத்தை உற்றாரும், உறவினரும், ஊராரும் போற்றிப் பாராட்டி மதிக்கத்தக்க வகையில், கட்டிக் காப்பாற்றி வந்தார்கள். கறவை மாடு

* இவ்வூர் தற்போது திருவாரூர் மாவட்டத்தில் உள்ளது.

களை வளர்த்துக் குடும்ப வருமானத்தைப் பெருக்குவதி லும், சிக்கனமாக இருந்து சேமிப்புச் செய்வதிலும், எங்கள் அன்னையார் திறம்படைத்தவராக இருந்த காரணத்தால், எங்களது குடும்பம் கடன் தொல்லைகளுக்கு ஆளாகாமல், மன அமைதியோடும், மனநிறைவோடும் நடந்தேறி வந்தது.

எங்கள் தந்தையார் மிகக் கடுமையாகவும், கண்டிப் பாகவும் எங்களை நடத்தி வந்த நேரத்திலெல்லாம்,எங்கள் தாயார் தான் எங்களுக்கு அரவணைப்பாக இருந்து, ஆறுதல் கூறி, எங்களைக் காப்பாற்றி வந்தார்கள்.

என்னிடத்தில் மிகுந்த அன்பும் அக்கறையும், ஆதரவும் காட்டி வந்த அருமை அன்னையார் மறைந்ததன் மூலம் ஏற்பட்ட துக்கத்தையும், துயரத்தையும் நீண்ட நாட்கள் வரையில், என்னால் மறக்கவே முடியவில்லை. காலம் செல்லச் செல்ல, துக்கமும், துயரமும் கொஞ்சம் கொஞ்ச மாக மறைந்து வந்தன என்றாலும், அவர்களைப் பற்றிய நினைவு என்றும் என் உள்ளத்தில் நிழலாடிக்கொண்டேதான் இருக்கும்.

## கழகத்தில் குழப்பம் ஏற்படுத்த முயற்சி

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பல்வேறு அமைப்பு களின் தேர்தலும், பொதுச் செயலாளர் தேர்தலும் நடை பெற்று முடிந்த பிறகு, கழகப் பணிகள் முறையாக நடை பெற்றுக் கொண்டு வந்தன. பொதுச் செயலாளர் தேர்தலின் போது, இரு பிரிவினரிடையே ஏற்பட்ட மனக் கசப்பு தொடர்ந்து நீடிக்கச் செய்தது. கலைஞர் கருணாநிதி குழுவினர் என்று ஒரு சாராரும், சம்பத் குழுவினர் என்று மற்றொரு சாராரும் பிரிந்து நின்று, ஒரு சாரார் மீது மற்றொரு சாரார் குற்றங்குறைகளைச் சுமத்தி வந்தனர். இரு சாராரிடையே ஏற்பட்ட மனக்கசப்பு வளர்ந்து வந்ததானது.

அறிஞர் அண்ணா அவர்களுக்கு மிக்க வருத்தத்தையும் வேதனையையும் அளித்தது. கலைஞர் கருணாநிதியும் அவரைச் சார்ந்தோரும் அறிஞர் அண்ணாவுக்குத் துணையாக இருந்து செயல்பட்டு வந்தனர். ஆனால், ஈ.வெ.கி. சம்பத்தும், அவரைச் சார்ந்தோரும் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையை எதிர்க்கும் போக்கில் செயல்படத் தொடங்கினர்.

சம்பத், 'கட்சிக்குள் மிதவாதத் தன்மை புகுந்துவிட்டது - கட்சி சனநாயக நெறிமுறைப்படி நடக்கவில்லை - கட்சியின் சட்டதிட்டங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டும் - பொதுச் செயலாளருக்கு அதிக அதிகாரங்கள் கூடாது - கழகத் தலைவர்கள் கலைத் துறையில் ஈடுபடக் கூடாது - அரசியல் வாதிகள் கலைஞர் போன்ற பட்டங்களை வைத்துக் கொள்ளக்கூடாது - நடிகர்களுக்குக் கட்சியில் பொறுப்புள்ள பதவிகளைத் தரக்கூடாது, கட்சியில் நடிகர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடாது'' என்பன போன்ற காழ்ப்புணர்ச்சிகொண்ட கருத்துக்களைப் பேசியும், ஏடுகளில் எழுதியும் வந்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள், கலைகளின் வளர்ச்சியில் அக்கறை காட்டுவதும், திரைப்படக் கலைஞர்களுக்கு ஊக்கம் அளிப்பதும், அவர்களின் புகழையும், செல்வாக்கையும் கழக வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதும் கழகத்திற்கு ஆக்கம் பயக்கும் செயல்களே ஆகும் என்றும், அறிஞர் அண்ணா அவர்களின் செல்வாக்கைக் கண்டு பொறாமைப் படக் கூடாது என்றும், நான் கருத்துக்களை வெளியிட்டு, ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட முயன்று பார்த்தேன். அறிஞர் அண்ணாவின் சொல்லிலும், செயலிலும் தவறுகாணும் தீய பணிகளில், சம்பத் தொடர்ந்து ஈடுபட்டு வந்தது, கழகத்

தோழர்கள் பலர்க்கும் மிகுந்த எரிச்சலையும், வெறுப்பையும், சினத்தையும் அளித்தது.

அறிஞர் அண்ணாவின் மதிப்பிற்குரிய இடத்தைப் பிடிக்கவும், அவரது செல்வாக்கைக் குறைக்கவும், சம்பத் முயலுகிறார் என்றும், இது நன்றி கெட்ட செயலாகும் என்றும் கழகத் தோழர்கள் பலரும் பரவலாகப் பேச முற்பட்டனர். இந்த நிலையில்தான், வேலூரில் பொதுக் குழுக் கூட்டத்தைக் கூட்டினேன். கழகத்தில் ஒற்றுமை உணர்வையும், உயர்ந்த கொள்கைப் பிடிப்பையும், குடும்பப் பாச உணர்வையும் வளர்த்துக் கழகத்தில் கட்டுக்கோப்பான நிலையை உருவாக்க, அறிஞர் அண்ணா முயன்றார்.

### வேலூரில் பொதுக்குழுக்கூட்டம்

கழகத்தின் தலைமைச் செயற்குழுக் கூட்டமும், பொதுக்குழுக் கூட்டமும், 1961 சனவரி 21,22 ஆகிய நாட்களில் வேலூரில் கூட்டப்பெற்றன.

21.1.61 அன்று காலை கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெற்றது. அவைத் தலைவர் சம்பத் தலைமை வகித்தார். தலைமைக்கழக நிருவாகிகளும், செயற் குழு உறுப்பினர்களும் வருகை தந்தனர்.

நிகழ்ச்சி நிரலில் கண்டிருந்தபடி பொருள்கள் ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்பட்டு, விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டன. மதுரை முத்து, சம்பத்தின் பேச்சையும், எழுத்தையும், போக்கையும் பற்றிக் குறிப்பிட்டு அவர் மீது குறை கூறி, குற்றஞ்சுமத்திப் பேசத் தொடங்கினார். அவைத்தலைவர் சம்பத் "மதுரை முத்து அப்படியெல்லாம் பேசக் கூடாது! உட்கார வேண்டும்!" என்றார். உடனே மதுரை முத்து, "பேசுவதில் தவறு இல்லை!

பிரச்சினைகளையெல்லாம் பேசித்தீர்ப்பதற்காகத்தான் நாம் இங்குக் கூடியுள்ளோம்! நான் பேசத்தான் செய்வேன்! தாங்கள் உரிய முறையில் பதில் சொல்ல வேண்டும்! என்று உரத்த குரல் எழுப்பினார். "பேசலாம்! பேசலாம்!" என்று பலரும் குரல் எழுப்பினர்.

"அப்படியானால், பொதுக்குழுக் கூட்டத்திற்குப் போகலாம் வாருங்கள்" என்று சம்பத் உரத்த குரலில் கூறி, தமது கையிலிருந்த எழுதுகோலை மேசையின் மீது எறிந்து விட்டு - தமது கைப்பையை எடுத்துக் கொண்டு எழுந்து நின்றார். பலரும் "வா போகலாம்!" என்று சொல்லி ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டு கூச்சல் போட்டனர். சிறு சலசலப்பு ஏற்பட்டது. அறிஞர் அண்ணாவும், நானும் எல்லோரையும் அமைதிப்படுத்தி உட்கார வைத்தோம். "அமைதியான முறையில் எந்தப் பிரச்சினையைப்பற்றியும் பேசித்தீர்த்துக் கொள்ளலாம். கூக்குரலுக்கோ, குழப்பத்திற்கோ இடமில்லை!" என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்.

மீண்டும் மாலை 4 மணி அளவில் செயற்குழு கூடும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார். அதற்கிடையில் சம்பத், "நான் சில காலமாக மேற்கொண்ட முறைகள், பேச்சுக்கள், எழுத்துக்கள் ஆகியவை பலராலும் எதிர்க்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய நிலை எல்லாவகையிலும் சரியானதே என்று நான் இன்னமும் கருதுகிறேன். எனது நடவடிக்கைகளின் காரணமாகப் பலரின் மனம் புண்பட்டிருப்பதை நான் அறிகிறேன். மற்றவர்கள் கழகப் பணி ஆற்றுவதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு, நான் பொறுப்புக்களி லிருந்து விலகிக் கொள்வதுதான் முறை என்று கருதுகிறேன். நான் சாதாரண உறுப்பினர் தவிர்த்து, அவைத் தலைவர் பதவியையும், பிற பொறுப்புக்களையும் விட்டு விலகிக் கொள்கிறேன் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று எழுதி, தமது

விலகல் கடிதத்தைப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணாவிடம் கொடுத்தார்.

செயற்குழுக்கூட்டம் ஏ.கோவிந்தசாமி தலைமை யில் கூடியது. சம்பத்தின் விலகல் கடிதத்தை அறிஞர் அண்ணா செயற்குழுவினர்க்குப் படித்துக் காட்டினார். செயற்குழு அதனை ஏற்றுக்கொண்டது.

22.1.61 அன்று காலை, கழகப் பொதுக்குழுக்கூட்டம், ஜி.பி. சோமசுந்தரம் அவர்களின் தலைமையில் நடை பெற்றது. பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தின் நிலைமை பற்றியும், சம்பத்தின் விலகல் கடிதம் பற்றியும் கழகத்தின் எதிர்காலச் செயல் திட்டம் பற்றியும் பொதுக்குழு உறுப்பினர்களிடம். விளக்கமாக எடுத்துக் கூறினார். பொதுக்குழுவானது சம்பத்தின் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டது. பின்னர் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அவைத்தலைவர் பதவிக்குப் பொதுக்குழு உறுப்பினர் களால் நான் ஒரேமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அதற்கு நன்றி தெரிவித்து இறுதியில் நான் உரையாற்றினேன்.

சில தினங்கள் கழித்து, சம்பத்தும் அவரைச் சார்ந்த மிகச் சிலரும் தி.மு.கழகத்தை விட்டுவிலகி, 'தமிழ் தேசியக் கட்சி' என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றினை அமைத்துக் கொண்டு தனியாகச் செயல்படத் தொடங்கினர். சில ஆண்டுகளுக்குப் பின்னர். 'தமிழ் தேசியக் கட்சி' காங்கிரசுக் கட்சியுடன் இரண்டற இணைக்கப்பட்டுவிட்டது.

கழகத்திற்குள் இருந்துகொண்டு வேண்டத்தகாத குழப்பங்களை ஏற்படுத்துவதைவிட, கழகத்தை விட்டு

சம்பத் குழுவினர் வெளியேறிவிட்டது, கழகம் அமைதியான முறையில் செயல்பட வாய்ப்பு ஏற்பட்டது.

## தி.மு.கழகத்தின் மூன்றாவது மாநிலப் பொது மாநாடு

தி.மு.கழகத்தின் மூன்றாவது மாநிலப்பொது மாநாடு, 1961 சூலை 13,14,15,16 ஆகிய நாட்களில், மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாநாட்டிற்குப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார். மதியழகன் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். மதுரை முத்து வரவேற்புக் குழுத் தலைவராகப் பணியாற்றினார். ஆவுடையப்பன், அன்பில் தருமலிங்கம், மணியம் ஆகியோர் செயலாளர்களாகப் பணிபுரிந்தனர். கலைஞர் கருணாநிதி பொருளாளராகச் செயல்பட்டார்.

மாநாடு நடைபெறுவதற்குப் பலநாட்கள் முன்பே, நான் மதுரை சென்று, மாநாட்டிற்கான முன்னேற்பாடுகளை மேற்பார்வையிட்டுக் கண்காணித்து வந்தேன். மாநாட்டில் கலந்துகொள்ள வருவோர் அனைவருக்கும் உணவு உறையுள் - போக்குவரத்து போன்றவைகள் வசதியாகவும், வாய்ப்பாக இருக்கும் வகையிலும் ஏற்பாடுகள் அனைத்தும் சிறப்பாகவும், செம்மையாகவும் செய்து வைக்கப்பட்டன.

சத்தியவாணிமுத்து கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

11.7.61 அன்று காலை புகைவண்டி மூலம் அறிஞர் அண்ணா மதுரை வந்துசேர்ந்தார். புகைவண்டி நிலையத்தில் கழக நிருவாகிகளும், கழகத் தோழர்களும், பொது மக்களும் பெருந்திரளாகத் திரண்டு நின்று அறிஞர் அண்ணாவிற்கு

மாலைகள் சூட்டியும், சால்வைகள் போர்த்தியும், வாழ்த் தொலிகள் முழங்கியும் சிறப்பான முறையில் வரவேற்பு அளித்தனர்.

11.7.61 அன்று மாலை கழகத்தலைமைச் செயற்குழுக் கூட்டமும், 12.7.61 அன்று கழகப் பொதுக்குழுக் கூட்டமும், எனது தலைமையில் நடைபெற்றன. அறிஞர் அண்ணா கழகத் தோழர்கள் அனைவரும் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றி விளக்கம் தந்து பேருரை ஆற்றினார். பின்னர் மாநாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் பற்றி ஆய்வு செய்யப்பட்டு, முக்கியமான தீர்மானங்கள் பரிந்துரை செய்யப்பட்டன.

13.7.61 அன்று காலை மாபெரும் ஊர்வலம் ஒன்று தொடங்கப்பட்டு, முக்கியத் தெருக்கள் வழியாக மாநாட்டுத் திடலை வந்தடைந்தது. கப்பல் போன்று அழகாக ஒப்பனை செய்யப்பட்ட வண்டியில், அறிஞர் அண்ணா, நான், மதியழகன், சத்தியவாணிமுத்து ஆகியோர் அமர்ந்திருந் தோம். ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கில் கழகத் தோழர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டு, கொடிகள் ஏந்தி, வாழ்த்தொலிகள் எழுப்பி, எழுச்சியோடு வீறு நடைபோட்டு வந்தனர்.

ஊர்வலம் மாநாட்டுப் பந்தலை வந்தடைந்தது, அறிஞர் அண்ணா அவர்கள் தொண்டர்களின் அணிவகுப்பு வணக்கத்தை ஏற்றுக்கொண்டு, ஓங்கி உயர்ந்த கொடிக் கம்பத்தில், கழகத்தின் இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்தார்.

அன்று மாலை, நாகூர் அனிபா அவர்களின் இன்னிசை யுடன் மாநாடு தொடங்கியது. மதியழகன் மாநாட்டைத் தொடங்கிவைத்து உரையாற்றினார்.

*பின்னர் மதுரை முத்து வரவேற்புரை நிகழ்த்தி விட்டு, மாநாட்டிற்குத் தலைமை தாங்கும்படி அறிஞர் அண்ணா அவர்களைக் கேட்டுக் கொண்டு முன் மொழிந்தார். அதனை, நான், கலைஞர் கருணாநிதி, நடராசன், சிற்றரசு, ஏ. கோவிந்தசாமி, கே.கே. நீலமேகம், ஜி.பி. சோமசுந்தரம், பல மாவட்டக் கழகச் செயலாளர்கள் வழிமொழிந்து பேசினோம்.*

*அறிஞர் அண்ணா அவர்கள் நீண்ட பெருங்கரவொலிக் கிடையிலே தமது தலைமையுரையைத் தொடங்கினார். அறிஞர் அண்ணா பேசியவற்றின் சுருக்கம் வருமாறு:*

> "கடமையுணர்ச்சியையும், கட்டுப்பாட்டுத் தன்மையையும் உணர்ந்த மக்கள் வெள்ளத்தை நான் காணும்போது, மட்டிலா மகிழ்ச்சி அடைகின்றேன். விடுதலை இயக்கத்தின் முன்னணி வீரர்களாகிய உங்களின் ஆர்வம் விடுதலை இலட்சியத்தில் நான் கொண்டுள்ள உறுதிப்பாட்டை மேலும் வலிவுள்ளதாக ஆக்கிவிட்டது.
>
> தி.மு.கழகம் தோன்றிப் பன்னிரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்த இடைக்காலத்தில் கழகம் எவ்வளவோ வளர்ச்சிபெற்று இன்று எழிலுடனும், எழுச்சியுடனும், ஏற்றத்துடனும் காணப்படுகின்றது. இந்த நிலையை அடைய, கழகத் தோழர்கள் பலபேர் குருதியைக் கொட்டியிருக்கின்றனர். அடிதடிகளைப் பெற்றிருக்கின்றனர்; உயிர் உடைமைகளை இழந்திருக்கின்றனர். அடக்கு முறைகளுக்கு ஆளாகியிருக்கின்றனர். சிறைக் கோட்டங் களில் அடைக்கப்பட்டிருக்கின்றனர். கழகத் தோழர்களின் தியாகங்களை எண்ணி எண்ணி நான் பூரிப்பும், பெருமிதமும் கொள்கிறேன்.
>
> சென்ற பொதுத் தேர்தலில் கழகம், 17 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப்பெற்றுப் பதினைந்து உறுப்பினர் களைச் சட்டமன்றத்திற்கும் இரண்டு உறுப்பினர்களை

நாடாளுமன்றத்திற்கும் அனுப்பி வைத்திருக்கிறது. கழகம், தனது பாராளுமன்றப் பணியைத் தொடர்ந்து நடத்துவது என்ற முடிவுக்கு வந்துள்ளது. அடுத்துவரும் பொதுத் தேர்தலில், தி.மு.கழகம் தனது கொள்கையை முன்வைத்துப் போட்டியிடும்.

இன்றைய தேர்தல்முறையில் பெரும்பாலான வாக்குகளைப் பெறமுடியாத காங்கிரசுக்கட்சி, சிறுபான்மை வாக்குகளை மட்டுமே பெற்று, பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றி யிருக்கிறது. பல கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதால், காங்கிரசுக் கட்சிக்கு எதிராக விழும் வாக்குகள் சிதறிப்போய் விடுகின்றன. அதன் காரணமாகக் காங்கிரசுக் கட்சி எளிதில் பதவிக்கு வந்துவிடுகின்றது. இது சனநாயகத்திற்கோ, அரசியல் நேர்மைக்கோ ஏற்றதல்ல. எனவேதான், சனநாயகம் பொருளற்றதாகவும், உயிரற்றதாகவும் ஆகிவிடுகிறது.

பலதிறப்பட்ட கொள்கைளைக் கொண்ட சக்திகள் நிலவிவரும் இந்தியா போன்ற நாடுகளில் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறையில் தேர்தல் நடைபெற வேண்டும். அப்படி இருந்தால்தான் உண்மையான சனநாயகம் மலரும். அப்போதுதான் எல்லா முக்கியமான கட்சிகளின் கருத்துக்கள் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் ஒலிக்கும். ஏதேச்சதிகார வல்லமையைக் கொண்டிருக்கும் காங்கிரசைத் தோற்கடிக்க வேண்டும் என்றால், நிலைமைக்கு ஏற்றபடி, கட்சிகளின் செல்வாக்குக்கு ஏற்றபடி, தொகுதிகளைப் பங்கீடு செய்துகொண்டு, ஒரு முனையாக நின்று போட்டியிட வேண்டும். அப்பொழுதுதான், வாக்குகள் சிதறிப்போகாமல் இருக்கும். அதுதான் நமக்கு ஏற்றதொரு வழியாக அமையும்!''

*14,15-7-61 ஆகிய நாட்களில் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளக் கொடுமையால்*

பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று கண்டு, ஆறுதல் கூறவேண்டும்; உதவிகள் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் அறிஞர் அண்ணா அந்த இரண்டு மாவட்டங்களுக்கும் சென்றுவிட்டார். அந்த இரண்டு நாட்களிலும். அறிஞர் அண்ணா வின் விருப்பத்திற்கு இணங்க, நான் மாநாட்டிற்குத் தலைமை தாங்கி நடத்தினேன். அந்த இரண்டு நாட்களிலும் கழகத்தின் முக்கியச் சொற்பொழிவாளர்கள் பலரும் பல்வேறு தலைப்புகளில், சிறப்புரை ஆற்றினர்.

இறுதி நாளாகிய 16.7.61 அன்று, தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. இறுதியில், அறிஞர் அண்ணா நீண்டதொரு முடிவுரை ஆற்றினார்.

கழகத்தில் நீண்ட காலம் பணியாற்றிப் பழம்பெரும் முதியவர்களாக விளங்கிய ஜி.பி. சோமசுந்தரம், கே.கே. நீலமேகம் ஆகிய இருவர்க்கும், அறிஞர் அண்ணா அவர்கள், வீரக் கேடயங்கள் வழங்கிப் பாராட்டுத் தெரிவித்தார்.

மாநாடு கழகச் செயல்வீரர்கள் அனைவருக்கும் உணர்ச்சி ஊட்டுவதாகவும், எழுச்சி பயப்பதாகவும் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

## தேர்தல் சிறப்பு மாநாடு

1962-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலை ஒட்டி, தி.மு.கழகத்தின் சார்பாகத் தேர்தல் சிறப்பு மாநாடு, 1961 டிசம்பர் 16,17ஆகிய நாட்களில், கோவையில் நடைபெற்றது.

மாநாட்டிற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார். நான் மாநாட்டைத் தொடங்கிவைத்தேன். உடுமலை நாராயணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாநாட்டை ஒட்டி மாபெரும் ஊர்வலம் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. கலைக் கண்காட்சியை என் வி. நடராசன் திறந்து வைத்தார்.

மாநாட்டிற்குத் தலைமை தாங்கித் தலைமையுரை ஆற்றிய அறிஞர் அண்ணாவின் பேச்சின் சுருக்கம் வருமாறு:-

''இன்று காலை நடைபெற்ற ஊர்வலம் இந்த மாநாட்டிற்குப் பெருஞ்சிறப்பைக் கொடுத்திருக்கிறது. ஏறக்குறைய பத்து மைல் தொலைவு ஊர்வலம் வந்திருக்கிறது. ஊர்வலத்தைக் கண்ட நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

இவ்வளவு படைபலம் நமக்குக் கிடைத்திருக்கிறதே என்ற எல்லை கடந்த உற்சாகம் எனக்கு ஏற்பட்டது. இது தேர்தல் வெற்றிக்கு ஒரு அறிகுறி என்றுதான் சொல்லவேண்டும். ''இப்படை தோற்கின் எப்படை வெல்லும்'' என்ற பொன்மொழிதான் எனக்கு நினைவுக்கு வருகிறது.

உங்களுடைய திறமையால், ஆற்றலால் எதையும் சாதிக்க முடியும் என்று நான் திடமுடன் நம்புகிறேன். அடுத்த பிப்ரவரித் திங்களில் நடைபெறப்போகும் தேர்தலில் நமக்கு நல்ல வெற்றிகிட்டும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

காங்கிரசின் ஆதிக்கத்தை ஒடுக்க, ஒழிக்க நாம் எல்லாக் கட்சிகளுடனும் பேச்சு நடத்துவோம். அப்படிப் பேசுவதன் மூலம் நாம் நமது இலட்சியத்தை மாற்றிக்கொள்ள மாட்டோம்; விட்டுக்கொடுக்கமாட்டோம்.

என் வீட்டில் ஒரு திருடன் திடீரென்று புகுந்துவிட்டால், அவனை அடித்துத் துரத்த எந்தத் தடி அகப்பட்டாலும், அதனை எடுத்து அடிப்பேன். அப்போது, அது சுதந்திரா தடியா? கம்யூனிசுட்டுத் தடியா? என்று பார்க்க மாட்டேன்; எந்தத் தடியானாலும் அதனைப் பயன்படுத்திக் கொள்ள முயலுவேன். அது போன்ற நோக்கத்தில்தான் கழகம் தோழமைக் கட்சிகளோடு தேர்தல் கூட்டு வைத்துக் கொள்ளும்.

சர்வாதிகாரப் போக்கில் நடந்துவரும் காங்கிரசை ஒழிக்க 1962 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நாமும், தோழமைக் கட்சிகளும் மிகவும் ஒற்றுமையாக ஒருங்கிணைந்து பாடு படவேண்டும். இன்றைய நாளில் காங்கிரசுக் கட்சி இளைத்துப் போயிருக்கிறது. அதை வீழ்த்துவதற்காக நாம் மற்றக் கட்சிகளுடன் உடன்பாடு செய்து கொள்வது தவறாகாது.

நாம், நமது தோழமைக் கட்சிகளுடன் கொள்கைக் கூட்டு சேர்ந்து தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று நான் கூறவில்லை. தொகுதி உடன்பாடுகள் செய்துகொள்ள வேண்டும் என்றுதான் கூறுகிறேன். எதிர்க்கட்சிகளின் வாக்குகள் பிரிந்து சிதறிப்போகக் கூடாது என்பதுதான் நமது நோக்கம்.

தேர்தல் உடன்பாடு ஏற்பட்டாலும் சரி, ஏற்படாவிட்டாலும் சரி, நீங்கள் உங்களுடைய கடமையிலிருந்து நழுவிடக் கூடாது என்பதுதான் எனது வேண்டுகோள். 1962 தேர்தலில் நமக்குத்தான் அதிகப் பொறுப்பு இருக்கிறது. அதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. எதிரிகளின் பண பலத்தையோ, படை பலத்தையோ, சூழ்ச்சிகளையோ கண்டு நாம் அஞ்ச வேண்டியதில்லை. நமது இலட்சியம் மிகத் தூய்மையானது. அது கடைசியில் வெற்றி பெற்றே தீரும்!''

*1962 பொதுத்தேர்தலில் தி.மு.கழகத்தின் சார்பாக நாடாளுமன்றத்துக்கு ஆறு தொகுதிகளிலும், தமிழகச் சட்டமன்றத்துக்கு எழுபத்திரண்டு தொகுதிகளிலும் போட்டியிடக் கூடிய வேட்பாளர்களின் முதல் பட்டியலை, அறிஞர் அண்ணா அவர்கள் மாநாட்டில் கூடியிருந் தோர்க்குப் படித்துக் காட்டினார்.*

*மதுரை திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற மாநாட்டின் மூலம் கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் புத்துணர்ச்சி*

யும், புதுஎழுச்சியும் பெற்று 1962 பொதுத் தேர்தலைச் சந்திக்க ஆயத்தமானார்கள்.

## 1962 பொதுத் தேர்தல்

1962 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் சனவரி 17ஆம் நாள் தொடங்கி, பிப்ரவரி 24 ஆம் நாள் வரையில் நடைபெற்றது பிப்ரவரி 25,26 ஆகிய இருநாட்களில், வாக்குச் சீட்டுக்கள் எண்ணி முடிக்கப்பட்டன.

பொதுத்தேர்தலில், தி.மு. கழகத்தின் சார்பாக, 142 இடங்களில் சட்டமன்றத்திற்கும், 18 இடங்களில் நாடாளு மன்றத்திற்கும் வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

அந்தத் தேர்தலில், காங்கிரசுக்கட்சி பேருந்து முதலாளி களையும், பெரும்பணக்காரர்களையும், பெரும் நிலக்கிழார் களையும், சமீன்தாரர்களையும், இனாம்தாரர்களையும், மிட்டாமிராசுகளையும், பட்டக்காரர்களையும், பாளையக் காரர்களையும் பல இடங்களிலும் வேட்பாளர்களாக நிறுத்தி வைத்தது. அவர்கள் பல கோடிக்கணக்கான ரூபாய்களைத் தேர்தலுக்காகச் செலவழித்தார்கள்.

தி.மு.கழகம் ரூபாய் நான்கு இலட்சம் மட்டுமே தேர்தல் நிதியாகப் பொதுமக்களிடமிருந்து வசூல் செய்திருந்தது. அந்தப் பணத்தைக் கொண்டுதான் தேர்தல் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

தி.மு.கழகம் 50 சட்டமன்றத்தொகுதிகளிலும், 7 நாடாளு மன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றது. அறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரம் தொகுதியில் நின்று சுமார் 8000 வாக்குகள் வேறுபாட்டில் வெற்றிக்கான வாய்ப்பை இழந்தார். அறிஞர் அண்ணாவை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரசுக்காரர், பேருந்து முதலாளியாக இருந்த

காரணத்தால், பல இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து, ஏழை எளிய மக்களின் வாக்குகளை விலைக்கு வாங்கிவிட்டார்.

நான் திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட்டு என்னை எதிர்த்து நின்ற காங்கிரசு வேட்பாளர் சிவநேசன் அவர்களைவிட 9000 வாக்குகள் கூடுதலாகப் பெற்றுத் தேர்தலில் வெற்றி பெற்றேன்.

என்னைத் தவிர, சட்டமன்ற உறுப்பினர்களாகக் கலைஞர் கருணாநிதி, மதியழகன், அன்பில் தருமலிங்கம், காஞ்சி மணிமொழியார், அரங்கண்ணல், அழகமுத்து, எம்.பி. வடிவேலு, சி.வி. வேலப்பன், எஸ். முருகையன், அப்துல்கலீல், எஸ்.ஜே இராமசாமி, ஜெகதாம்பாள் வேலாயுதம், சி. மாணிக்கம், செ.கோ. விசுவநாதன், ஆ. தங்கவேலு, என்.வி. செங்கோட்டுவேல், திருப்பதி, எம்.ஆர். கிருட்டிணமூர்த்தி, கோ.சி. மணி, எஸ்.எஸ் இராசேந்திரன், வி. அருணாசலம், ஆர். நல்லமுத்து, வி.ஆர். பெரியண்ணன், எம். இராசாங்கம், சீராமுலு, ஆ. துரையரசன், எஸ். ஆறுமுகம், புலவர் கோவிந்தன், எம்.எஸ் மணி, கேசவன், ஆர். சம்பங்கி, ஏ.ஜி. பாலகிருட்டிணன், எஸ் முத்துலிங்கம், சின்னராசு, வி. கிருட்டிணமூர்த்தி, தியாகராசன், செ. மாதவன், முனி ரத்தினம், நாராயணன். எம்.சண்முகம், கமலநாதன், வி.எஸ்.எஸ் மணி, கரிவேங்கடம், முனு ஆதி ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களாக மனோகரன், செழியன், இராசாராம், தருமலிங்கம், இராமபத்திரன், முத்து, சிவசங்கரன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## அறிஞர் அண்ணாவின் வேண்டுகோள்

*தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் அறிஞர் அண்ணா அவர்கள், வேண்டுகோள் விளக்க அறிக்கை ஒன்றினை வெளியிட்டார்கள். அதில் குறிப்பிட்டிருந்த முக்கியமான கருத்துக்கள் வருமாறு:-*

''என்பால் மாறா அன்பும், கழகத்திடம் தளராத பற்றும் கொண்டுள்ள தோழர்களே! என் தோல்வியைக் கேள்வியுற்ற நீங்கள் எக்காரணங்கொண்டும் உள்ளம் உடைய இடங் கொடுக்கக்கூடாது! கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, கழகக் காரியம் ஆற்றப்புறப்படுங்கள்! முன்னிலும் அதிகமான அளவுக்கு ஆர்வங்காட்டிப் பணிபுரியுங்கள்!

இந்தத் தேர்தலில், என்னைத் தோற்கடிக்க ஆளுங்கட்சி யினரும், அவர்தம் ஆதரவாளர்களும் என்னென்ன முன்னேற்பாடுகள் செய்தனர்-முறைகளைக் கையாண் டனர்- கருவிகளைப் பயன்படுத்தினர் என்பது, நாடறிந்த உண்மையாகும்.

நான் சட்ட மன்றத்திலிருந்து கொண்டு பணியாற்றுவதைத் தடுக்க மட்டுமே இந்தத் தோல்வி பயன்படும்!! என்னைத் தானே தவிர, கழகத்தை அல்ல!

கழகத் தோழர்கள் என் தோல்வியால் மனம் வேதனைப் பட்ட நிலையில் உள்ளனர் என்றாலும், அவர்கள் என்னால் ஆறுதல் அளிக்கப்பட்டுச் சட்டமன்றம் செல்லுகிறார்கள்; செம்மை யாகச் செயலாற்றுவார்கள்.

அவர்களின் எண்ணத்திலும், பேச்சிலும் நான் இருக்கிறேன். எனவே பெரியதோர் இழப்பு கழகத்துக்கு ஏற்பட்டுவிட வில்லை. ஆண்டுக்கு நூறுநாட்கள் கூடிடும் சட்டமன்றத்தில் நான் இடம் பெற முடியாதபடி செய்துவிட்டனர். என்றாலும், ஒவ்வொரு நாளும் நான் சந்திக்கும் பொது மக்களின் மன்றம்,

சட்டமன்றங்களை உருவாக்கும் வல்லமை பெற்ற பேரவையாகும்! அங்கு எனக்கு உள்ள அலுவல்களை இவர்களால் தடுத்துவிட முடியாது. எந்தத் தோல்வியும், என்னைக் கழகப் பணியிலிருந்து விலகச் செய்துவிடாது! மாறாக, அந்தப் பணி மேலும் மும்முரமாகவே நடைபெறும்.

குடியாட்சி மாண்புடன் இருக்கவேண்டுமானால், அச்சம், தயை தாட்சண்யத்துக்காகக் கொள்கைகளை இழந்திடாத பண்பு, உறுதியாக இருக்கவேண்டும். நாம்தான் அந்தப் பண்பை மேலும் மேலும் வளர்த்திட வேண்டும்.

நமக்கு எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்பதனை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நாளுக்கு நாள் வெற்றி பெற்று வருகிறது கழகம்! நாட்டு மக்களின் பேராதரவும் வளர்ந்து வருகிறது! இது சாதாரணமானதல்ல; அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது. இதை எண்ணி மகிழ்ச்சி அடையுங்கள்! பெருமைப்படுங்கள்! பெருமிதங்கொள்ளுங்கள்! புதிய ஊற்சாகத்துடன் பணி ஆற்றுங்கள்."

கழக வெற்றிவிழாக் கூட்டம்

*1962 மார்ச்சு 4ஆம் நாள் திமு.கழக வெற்றி விழா ஊர்வலமும் பொதுக்கூட்டமும் மிகச் சிறப்பாக நடந்தேறின.*

*ஊர்வலம் சென்னை இராயபுரம் அறிவகத்திலிருந்து புறப்பட்டுச் சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலை வந்தடைந்தது. வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமை யில் அழகுபடுத்தப்பட்ட ஜீப் கார்களில் ஊர்வலமாக அழைத்து வரப்பெற்றனர்.*

எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார். கூட்டத்தினர்க்கு, வெற்றிபெற்ற ஐம்பது சட்ட மன்ற உறுப்பினர்களும், ஏழு நாடாளுமன்ற உறுப்பினர் களும் அறிஞர் அண்ணாவால் அறிமுகப்படுத்தப்பட்டனர். அறிஞர் அண்ணா அவர்கள் வெற்றிபெற்றவர்கள் அனை வர்க்கும் பொன்னாடை போர்த்தி, அவர்களை வரவேற்று வாழ்த்திப் பேருரை ஆற்றினார்.

வெற்றி பெற்றவர்களின் சார்பாக நான் ஏற்புரை வழங்கி, சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் கழக உறுப் பினர்கள் ஆற்றப்போகும் பணிகள் பற்றி விரிவாக விளக்கிக் கூறினேன்.

அன்றே, சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் 'அறிவகத்தில்' அறிஞர் அண்ணா தலைமையில் கூட்டப்பெற்றது. சட்டமன்ற தி.மு.க. கட்சியின் நிருவாகி கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சட்டமன்றக் கட்சியின் தலைவராக நானும், துணைத்தலைவராக, கலைஞர் கருணாநிதியும், செயலாளராக, மதியழ கனும், துணைச்செயலாளர்களாக அரங்கண்ணல், முருகையன் ஆகியோரும், பொருளாளராக முனு ஆதியும் தேர்ந்தெடுக்கப்பட்டோம்.

நாடாளுமன்றக் கட்சியின் தலைவராக மனோகரனும், துணைத் தலைவராக தருமலிங்கமும், செயலாளராக செழியனும், துணைச்செயலாளராக அரூர் முத்துவும், பொருளாளராக சிவசங்கரனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1962 மார்ச்சு 20ஆம்நாள் நாடாளுமன்ற மாநிலங்கள் அவைக்கும், சட்டமன்ற மேலவைக்கும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மாநிலங்களின் அவை உறுப் பினர்களாக அறிஞர் அண்ணாவும், பேராசிரியர்

இரத்தினசாமியும் திமு.கழகத்தின் சார்பாகத் தேர்ந்தெடுக் கப்பட்டார்கள். சட்டமன்ற மேலவை உறுப்பினர்களாகப் புரட்சி நடிகர் எம்.ஜி.இராமச்சந்திரனும், அப்துல் வகாப்பும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## வாத்தலையில் பொதுக்குழுக் கூட்டம்

திருச்சி மாவட்டம் வாத்தலையில், 1962 மே 26,27 ஆகிய இருநாட்களிலும், தி.மு.கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டமும், பொதுக்குழுக் கூட்டமும், அவைத்தலைவராக இருந்த எனது தலைமையில் நடைபெற்றன.

கழகப் பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள், செயற்குழு-பொதுக்குழுக் கூட்டங்களில் கழகம் முடிவு செய்ய வேண்டிய முக்கியத் தீர்மானங்கள் பற்றி விளக்க வுரை ஆற்றினார்.

பொதுக்குழுக் கூட்டத்தில் முக்கியமான பொருள்கள் விவாதிக்கப்பட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கைத்தறி நெசவு நூலுக்குப் புதியவரி விதிக்கப்பட்டிருந்த தால், அதனைக் கண்டிக்கும் முறையில் 1962 சூன் 10ஆம் நாள், தி.மு.கழகத்தின் சார்பாக நாடெங்கணும் கண்டன ஊர் வலங்களும்-பொதுக் கூட்டங்களும் நடத்துவது என்றும், புதிய வரிவிதிப்பை நீக்கும்படி கோருவது என்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

ஏழை-நடுத்தர மக்களைப் பெரிதும் பாதிக்கும் வகை யில், கட்டுக்கடங்காமல் விலைவாசிகள் உயர்ந்துவிட் டதைக் கண்டிக்கும் வகையில், 1962 சூன் 30ஆம் நாள் அன்று தமிழகச் சட்டமன்றத்தின்முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும், 1962 சூலை 1 ஆம் நாள் அன்று தமிழகமெங்கும் கண்டன ஊர்வலங்களும், கண்டனப் பொதுக் கூட்டங்களும் நடத்துவது என்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

விலைவாசி உயர்வை எதிர்த்து, 1962 சூலை 19ஆம் நாள்அன்று, மாவட்ட ஆட்சித் தலைவர்-துணை ஆட்சித் தலைவர் வட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் அலுவலகங்களின் முன்னால் தி.மு.கழகத்தின் சார்பாக மறியல் போராட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இறுதியில் அறிஞர் அண்ணா அவர்கள்,பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கியமான தீர்மானங் களைப் பற்றியும், கழகத் தோழர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் பற்றியும், நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் கழக உறுப்பினர்கள் வாதிட்ட கருத்துக்கள் பற்றியும், அரசியல் நிலைமைகள் பற்றியும் விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறினார்.

என்னுடைய முடிவுரைக்குப் பின்னர், பொதுக்குழுக் கூட்டம் நிறைவு பெற்றது.

## தி.மு.கழகத்தின் சார்பான போராட்டங்கள்

தி.மு.கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களை ஒட்டி ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், கண்டன ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள் முறைப்படி நடந்தேறின.

1962 சூன் 10ஆம் நாள் கைத்தறி நெசவு நூலுக்குப் புதிய வரி விதிக்கப்பட்டிருந்ததைக் கண்டித்து எல்லா ஊர்களிலும், நகரங்களிலும் கண்டன ஊர்வலங்களும், பொதுக் கூட்டங் களும் நடைபெற்றன.

அறிஞர் அண்ணா, நான்,மற்ற முன்னணித் தலைவர்கள் ஆகியோரின் தலைமையின்கீழ் பல்வேறு இடங்களில் ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன.

நான் சேலம் நகரில் நடைபெற்ற ஊர்வலத்திலும், பொதுக் கூட்டத்திலும் கலந்துகொண்டேன்.

1962 சூன் 30ஆம் நாள் விலைவாசி உயர்வைக் கண்டித்து சென்னைக் கோட்டையின்முன் மாபெரும்பேரணி ஒன்று எனது தலைமையில் நடைபெற்றது. அதில், கலைஞர் கருணாநிதி, மதியழகன், சிற்றரசு, நடராசன், மதுரை முத்து, அன்பில் தருமலிங்கம், மன்னை நாராயணசாமி, தில்லை வில்லாளன், மனோகரன், இராசாராம், திருவண்ணாமலை தருமலிங்கம் போன்றவர்களும், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்களும், கழகச் செயல்வீரர்களும், ஆதரவாளர்களும் பெருந்திரளினராகக் கலந்துகொண்டார்கள்.

1962 சூலை 1 ஆம் நாள் விலைவாசி உயர்வை எதிர்த்து நாடெங்கணும் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பெற்றன.

1962 சூலை 19 ஆம் நாள் விலைவாசி உயர்வை எதிர்த்து எல்லா மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்-துணை மாவட்ட ஆட்சித்தலைவர்-வட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் அலுவலகங்களின் முன்னால் கண்டன மறியல் நடந்தது.

நான் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்னால், பல நூற்றுக் கணக்கான தொண்டர்களோடு சேர்ந்து மறியல் செய்தேன். நானும், மற்றவர்களும் கைது செய்யப்பட்டு, மூன்று திங்கள்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, சென்னை மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டோம். நாடெங்கணும் சுமார் 20,000க்கும் மேற்பட்டவர்கள், மறியலில் ஈடுபட்டமைக் காகக் கைது செய்யப்பட்டு, ஆங்காங்குள்ள சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

அறிஞர் அண்ணா அவர்களும், அவரைச் சார்ந்தோரும் வடஆர்க்காடு வேலூரில் மறியல் செய்து, சிறைத்தண்டனை ஏற்றனர்.

## இந்திய - சீனப் போர்பற்றி அறிஞர் அண்ணாவின் அறிக்கை

நாங்கள் எல்லோரும் சிறைகளில் இருந்தபோது, எல்லைத் தகராறின் காரணமாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் போர் மூண்டது. சீனா இந்தியாவின் மீது போர் தொடுத்தது. அதை, இந்தியா, பண்டித நேரு தலைமையின்கீழ் முழுமூச்சோடு எதிர்த்தது.

அறிஞர் அண்ணா முதலில் வேலூர் சிறையிலிருந்து விடுதலை ஆனார். அவர் சென்னை வந்து சேர்ந்தவுடன், சென்னைச் சிறையிலிருந்த என்னையும்,மற்ற முக்கிய முன்னணியினரையும் சந்தித்து, இந்திய-சீனப் போரைப் பற்றித் தி.மு.கழகத்தின் சார்பாக,அறிக்கையொன்று வெளியிடவேண்டும்என்ற கருத்தைத் தெரிவித்து, எங்களோடு கலந்துபேசி தக்கதொரு முடிவினை எடுத்தார். அதன் அடிப்படையில் விரிவான அறிக்கை ஒன்றினை வெளியிட்டார்.

இந்திய - சீனப்போர் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் கண்டுள்ள முக்கியமான சில கருத்துக்கள் வருமாறு :

> "தி.மு.கழகத்தின் சார்பாக, அதன் பொதுச் செயலாளர் என்ற முறையில், சீன ஆக்கிரமிப்பை நசுக்கி, ஒடுக்குவதற்கு, இந்திய அரசாங்கம் மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளுக்கும் எனது கட்சியின் முழு ஆதரவுக்கான உறுதியை, இந்த அறிக்கையின்மூலம் தெரிவிக்கிறேன்.

சீனாவின் ஆக்கிரமிப்பை இந்தியாவிலுள்ள எல்லாச் சனநாயகக் கட்சிகளும் கடுமையாக எதிர்க்கின்றன. தி.மு.கழகம் பிரதமர் நேருவின் உறுதியைப் பாராட்டுகிறது; அவரது முயற்சிகளை மனநிறைவோடு வரவேற்கிறது.

பிரதமர் பண்டிதநேரு எல்லா அரசியல் கட்சிகளிட மிருந்தும் ஒத்துழைப்பைக் கேட்டிருக்கிறார். நேற்றுவரையில் நான் வேலூர் மத்தியச் சிறையில் அடைபட்டிருந்தேன். நான் விடுதலையடைந்ததும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு, பண்டித நேருவின் உருக்கமான வேண்டுகோளை ஏற்று, தி.மு.கழகம் அவரது போர் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு தருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீன ஆக்கிரமிப்பைப் பற்றி நாங்கள் குமாரபாளையம் பொதுக்குழுக் கூட்டத்தில் கண்டித்திருக்கிறோம். மதுரை மாநாட்டிலும், சென்னை மாநாட்டிலும் சீன ஆக்கிரமிப்பைக் கண்டித்துத் தெளிவுபடப் பேசியிருக்கிறோம். சீனாக்காரன் எடுத்துவைத்த காலடி திருப்பி எடுக்கப்படும்வரை, அதற்காகப் போராடும் நேருவின் கரத்தை வலுப்படுத்து வோம்.

சீனாக்காரனை விரட்ட எங்களது முழு ஒத்துழைப்பையும் தரத் தயாராக இருக்கிறோம். இதைத் தெளிவாகவும், திட்ட வட்டமாகவும், ஒளிவுமறைவு இல்லாமலும் கூறுகிறேன். சீனாக்காரனை விரட்டும் முயற்சியில் மட்டுமல்லாமல், பணம் சேர்க்கும் பணியிலும் முழுமூச்சுடன் வேலை செய்யத் தயாராக இருக்கிறோம்.

போர் நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந்த நேரத்தில், திராவிட நாட்டுப் பிரிவினைப் பிரச்சாரத்தையும், நடவடிக்கைகளை யும் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம். இந்த நேரத்தில்

எந்தவிதக் கிளர்ச்சியிலும் நாங்கள் ஈடுபடமாட்டோம். நாடு காக்கும் பணியில்எங்களை நாங்கள் ஒப்படைத்துள்ளோம்.

இப்போது நடக்கும் போர் சீனாவுக்கும், இந்தியாவுக்கும் இடையே நடக்கும் போரல்ல. சர்வாதிகாரத்திற்கும், சனநாயகத்திற்கும் இடையிலே நடக்கும் போராகும். நாம் நமது அறிவு, ஆற்றல், வாய்ப்பு, வசதி, ஊக்கம், உழைப்பு ஆகிய எல்லாவற்றையும் பயன்படுத்திச் சனநாயகத்தைக் காப்பாற்றுவோமாக!''

## தி.மு.கழகச் செயல்வீரர்கள் விடுதலை

*விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தின் காரணமாகச் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த கழகச் செயல்வீரர்கள் அனைவரும் 1962 நவம்பர் 8ஆம் நாள் விடுதலை செய்யப்பட்டனர்.*

*சென்னை மத்தியச் சிறையில் அடைபட்டிருந்த நானும், என்னுடன் சிறையிலிருந்த மதியழகன், காஞ்சி மணிமொழியார், சிவசங்கரன், மேயர் குசேலர், துணை மேயர் வேதாசலம், அ.பொ. அரசு, வி. முனிசாமி, அ. செல்வராசு, கண்ணபிரான், ஆலடி அருணா, சு. பாலன், டி.கே. கபாலி, வி.எஸ். கோவிந்தராசன், சா. கணேசன், எம். கோபால், க. பார்த்தசாரதி, டி.கோவிந்தசாமி, எஸ்.எம். துரைராசு மற்றும் பலர் விடுதலை அடைந்தோம்.*

*சிறைவாயிலில் கழகத் தோழர்கள் ஆயிரக்கணக்கில் குழுமியிருந்து எங்களுக்கு மாலைகள் அணிவித்து, எங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.*

## தி.மு. கழகத்தின் சார்பாகப் போர்நிதி திரட்டுதல்

*தி.மு.கழகத்தின் சார்பாகப் போர் நிதி திரட்டுவதற்கு என்று, 1962 டிசம்பர் 2 ஆம் நாள், சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.*

அந்தக் கூட்டத்தில் அறிஞர் அண்ணாவும், நானும், மற்றக் கழகத் தலைவர்களும் கலந்து கொண்டோம். மக்கள் பணமாகவும், நகைகளாகவும் வழங்கினர்.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமக்கு மதுரை மக்கள் அளித்த தங்க வாளைப் போர் நிதிக்காக அண்ணா அவர்களிடம் அளித்தார். அறிஞர் அண்ணா அவர்கள் அந்தத் தங்க வாளை ஏலம் விட்டார். அதன் மூலம் ஒரு இலட்சத்து நாலாயிரம் ரூபாய் கிடைத்தது.

மொத்தத்தில் சுமார் நாலரை இலட்சம் ரூபாயும், 280 பவுன் நகைகளும் போர் நிதியாகக் கிடைத்தன.

அந்தத் தொகைகளையும், நகைகளையும் நானும், கலைஞர் கருணாநிதியும், முதலமைச்சர் காமராசர் அவர்களை அவரது வீட்டில் நேரில் கண்டு வழங்கினோம். அவர், அவற்றை மிக்க மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு, தி.மு.கழகத்திற்கு நன்றி தெரிவித்தார்.

## தேசிய ஒருமைப்பாடு பற்றிய விவாதம்

இந்திய நாடு எக்காரணங்கொண்டும் பிளவுபடாமல் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில், 'தேசிய ஒருமைப் பாட்டு மாநாடு' என்ற பெயரில் மத்திய அரசாங்கத்தின் முயற்சியில், பல அரசியல் கட்சிகளைக் கொண்ட மாநாடு ஒன்று, 1962 இல் டில்லியில் கூட்டப்பட்டது. அந்த மாநாட்டிற்குத் தி.மு.கழகத்திற்கு அழைப்பு அனுப்பப் படவில்லை.

நாடெங்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, பொது மக்களின் எண்ணங்களைத் திரட்டி, அறிக்கை ஒன்றினை உருவாக்க சர்.சி.பி. இராமசாமி அய்யர் தலைமையில்,

தேசிய ஒருமைப்பாட்டுக்குழு ஒன்று அந்த மாநாட்டில் நியமிக்கப்பட்டது.

அந்தக் குழு நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்து, பலரின் கருத்துக்களை அறிந்து, அவற்றின் அடிப்படையில் அறிக்கை ஒன்றைத் தயாரித்து, மத்திய அரசிடம் வழங்கியது.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழு உருவாக்கிய அறிக்கை பற்றி மாநிலச் சட்டமன்றங்களின் கருத்தறிய, எல்லா மாநிலச் சட்டமன்றங்களுக்கும் அந்த அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழகச் சட்டமன்றத்தில், அந்த அறிக்கை விவாதத்திற்கு வைக்கப்பட்டபோது, எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையிலும், தி.முகழகத்தின் சட்டமன்றக் கட்சியின் தலைவர் என்ற முறையிலும், நான், என்னுடைய கருத்தை எடுத்து வைத்தேன். நான் கூறிய கருத்துக்களில் சில வருமாறு :

"இந்திய தேசிய ஒருமைப்பாடு என்ற முழக்கத்தின் மூலம், இந்தியா ஒரேநாடு என்ற உணர்வை உருவாக்கவும், இந்தியாவில் ஒரே ஒரு பொது மொழி - ஆட்சிமொழி - தொடர்பு மொழிதான் உண்டு என்பதை நிலைநாட்டவும், உடை - எண்ணம் - பழக்கவழக்கம் போன்றவற்றில் ஒருமைப்பாடு காணவும் ஆன முயற்சிகள் ஆளுங்கட்சியின ராலும், பிறராலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தியா என்பது ஒருநாடல்ல, அது பல நாடுகளைக் கொண்ட ஒரு துணைக்கண்டமாகும். வெள்ளையர், இந்தியாவிலுள்ள பல பகுதிகளையும் துப்பாக்கி முனையில் அடக்கி, ஒடுக்கி ஒரே ஆட்சியின்கீழ் கொண்டு வருவதற்கு முன்னர், இந்தியாவில் பல்வேறு ஆட்சிகளைக் கொண்ட பல்வேறு நாடுகள் இருந்து வந்தன என்பதை மறந்து விடக்கூடாது.

வெள்ளையர் ஆட்சி இந்தியாவை விட்டு அகன்றபோது, 585 சுதேச சமஸ்தானங்களில், தனித்தனி அரசர்கள் இருந்து,வெள்ளையர் ஆட்சிக்கு உட்பட்டு, ஆண்டு வந்தனர். இந்தியா என்பது ஆதிக்க அதிகார ஆட்சியின் மூலம் ஒரு நாடாக ஆக்கப் பட்டதே அல்லாமல், இனம் - மொழி - சமயம் - பண்பாடு - நாகரிகம் - பழக்க வழக்கம் - கலையியல் - வரலாற்றியல் - புவியியல் போன்றவற்றால் ஒரு நாடாகத் திகழ்ந்ததே இல்லை; இப்பொழுதும் திகழவில்லை.

ஒன்றிற்கு ஒன்று வேறுபட்ட இனம் - மொழி - நாகரிகம் - பண்பாடு - வரலாறு ஆகியவற்றைக் கொண்ட பல பகுதிகளாக - பல நாடுகளாகத்தான் இந்தியா விளங்கி வந்தது; விளங்கி வருகிறது என்பதுதான் உண்மை.

நம்மைப் பொறுத்தவரையில், இங்குக் குழுமியுள்ள நாம் அனைவரும் மொழியால் தமிழர்; இனத்தால் திராவிடர்; நாட்டால் தமிழ் நாட்டினர். இந்தியாவிலுள்ள பிற பகுதிகளில் வாழும் மக்களோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கையில், அவர்களெல்லோரும் பல்வேறு வகைகளில் வேறுபட்டவர் களாகவும், வேறு வேறு நாட்டினராகவுந்தான் காட்சியளித்து வருகின்றனர்.

ஒற்றுமை என்பதற்கும், ஒருமைப்பாடு என்பதற்கும் வேறுபாடு உண்டு. உள்ளத்தில் ஒருவரையொருவர் உளமார ஏற்று, நட்புறவு கொண்டு, ஒருவரோடு ஒருவர் பழகுவது என்பது ஒற்றுமையைக் குறிக்கும்.

புறத்தோற்றத்தில் மொழி - உணவு - உடை - பழக்க வழக்கம் - தோற்றம் போன்றவற்றில் ஒரே தன்மையினராகக் காட்சியளிப்பது என்பது ஒருமைப்பாட்டுத் தன்மையைக் குறிக்கும்.

உலக நாடுகளிடையேயும், ஆசிய நாடுகளிடையேயும், இந்தியத் துணைக்கண்ட நாடுகளிடையேயும் ஒற்றுமை யுணர்வு வலுப்பட வேண்டும் என்பதில், பொருள் இருக்க முடியும். நாடுகள் பலவற்றையும் ஒரே தன்மையனவாக, அதாவது ஒருமைப்பாட்டுத் தன்மை கொண்டனவாக ஆக்கவேண்டும் என்று கூறுவதில் பொருள் இருக்க முடியாது.

அடக்குமுறையால் இந்தியா ஒருநாடு என்று ஆக்கப் படுகிறதே அல்லாமல், அன்புடைமையால் அது ஒரு நாடாக ஆகவில்லை.

எங்களைப் பொறுத்தவரையில், திராவிட இனம் வாழுகின்ற, திராவிட மொழிகள் பேசப்படுகின்ற, திராவிடக் கலைப் பண்புகளைக் கொண்ட, திராவிட வரலாற்றால் உருவான திராவிட நாடு தனியுரிமை பெற்ற தனிநாடாக ஆக வேண்டும், ஆகமுடியும் என்ற கோரிக்கையைத்தான், தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம்.

திராவிட நாடும், இந்தியத் துணைக்கண்டத்தில் அமைந்திருக்கும் பிறநாட்டுப் பகுதிகளும், ஒற்றுமை உணர்வோடு இருக்க வேண்டும் என்ற கருத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால், இந்தியத் துணைக் கண்டத் திலுள்ள நாடுகள் அனைத்தும் ஒருமைப் பாட்டுத் தன்மையைப் பெறவேண்டும் என்று வற்புறுத்துவதை முழு மூச்சோடு எதிர்க்கிறோம்.

திராவிட நாடு போன்ற பகுதிகள் குறிப்பிட்ட தேசியத் தன்மையைத் தனித் தனியாகப் பெற்று விட்டபிறகு, ஒருமைப்பாடு பற்றிப் பேசுவதற்கு இடம் ஏதுமில்லை.

இந்தியா ஒரே ஒரு அமைப்பு - எவ்வகையிலும் பிரிக்க முடியாத ஒரு அமைப்பு என்று சிலர் பேசி வந்தாலும்,

மொழிவழி மாநிலப் பிரச்சினைகளும், இன வழிப் பிரச்சினைகளும் இந்தியாவின் பல பகுதிகளிலும் கொழுந்து விட்டு எரியவே செய்கின்றன. இவையெல்லாம் ஒருமைப் பாட்டுத் தன்மையைக் கொண்டன அல்ல.

எனவே, இந்தியாவில் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க எண்ணுவதைவிட, இந்தியா இனவழி நாடுகளாகப் பிரிந்து நிற்க இடந்தந்து, இந்தியத் துணைக் கண்ட நாடுகளிடையே ஒற்றுமை உணர்வை வளர்க்கப் பாடுபடுவதுதான் சாலச் சிறந்ததாகும்!"

சேலம் பொதுக்குழுக் கூட்டம்

*1962 செப்டம்பர் 29,30ஆகிய நாட்களில், சேலத்தில், தி.மு.கழகத்தின் பொதுக்குழுக்கூட்டம், அவைத் தலைவரான எனது தலைமையில் நடைபெற்றது.*

*அறிஞர் அண்ணா, தலைமைக் கழக நிருவாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் அனைவரும் கலந்து கொண்டனர்.*

*விலைவாசி உயர்வை எதிர்த்து நடத்திய அறப்போராட் டத்தில் ஈடுபட்டுச் சிறைசென்று மீண்ட அறப்போர் வீரர்கள் அனைவர்க்கும் நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. மற்றும் கழக வளர்ச்சி, நாட்டின் பிரச்சினைகள் பற்றிய பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*அறிஞர் அண்ணா அவர்கள் சீனப் போர் பற்றியும், பொதுவான அரசியல் நிலைகள் குறித்தும் விரிவாகப் பேசினார்.*

*என்னுடைய முடிவுரைக்குப் பின் பொதுக்குழுக் கூட்டம் இனிதே நிறைவு எய்தியது.*

## நாடாளுமன்றத்தில் பிரிவினைத் தடைச்சட்டம் அறிமுகம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மிக முக்கிய நோக்கங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வந்தது, திராவிட நாடு தனிநாடாக ஆகவேண்டும் என்ற கோரிக்கையாகும்.

திராவிடநாடு தனிச் சுதந்திர நாடாக ஆக்கப்பட வேண்டும் என்பதற்கான காரணகாரிய விளக்கங்கள், அறிஞர் அண்ணாவாலும், ஏனைய கழகத்தலைவர்களாலும், பொதுக் கூட்டங்கள் -மாநாடுகள்-ஏடுகள்-நூல்கள்- சட்டமன்றம்-நாடாளுமன்றம் ஆகியவற்றின் மூலம் தெளிவாகவும், திட்பமாகவும் தொடர்ந்து எடுத்து வைக்கப்பட்டு வந்தன.

கழகத்தின் கோரிக்கைக்கு நாளுக்கு நாள் பொது மக்களிடத்திலேயும், படித்த பண்புடையவர்களிடத்திலே யும் ஆதரவு பெருகிவரத் தலைப்பட்டது. 1957-இல் 15 சட்டமன்ற இடங்களைப் பெற்ற கழகம், 1962-இல் 50 இடங்களைப் பெறக்கூடிய செல்வாக்கை எய்தியது.

திராவிடத்தனிநாடுகோரிக்கைக்குத் தமிழக மக்களின் நல்லாதரவு நாளுக்கு நாள் பெருகி வருவதைக் கண்ட மத்திய ஆட்சியினர், அச்சமும், ஐயப்பாடும் கொள்ளத் தலைப் பட்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் திராவிடத் தனிநாடு கோரிக்கை வலுப்பெற்றுவளரத் தொடங்கிய அதே நேரத்தில், சீக்கியர்கள் தனி சீக்கியஸ்தான் கேட்டுப் போராடி வந்தனர்.

காஷ்மீர் மக்கள், காஷ்மீரானது தனிநாடாக ஆக்கப் படவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வந்தனர்.

நாகர்கள், தங்களுக்கு என்று ஒரு தனிநாட்டை நாகர் நாடு என்ற பெயரில் அமைக்க வேண்டும் என்று போராடி வந்தனர்.

அசாம் பகுதியிலுள்ள தீவிரவாதிகள், அசாமைத் தனிநாடாக ஆக்கவேண்டும் என்று கூறி, கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்.

இப்படிப்பட்ட கோரிக்கைகளுக்கெல்லாம் எதிராகக் காரணகாரிய விளக்கத்தோடு பதில் கூறமுடியாத நிலையில் தத்தளித்த மத்திய ஆட்சியினர், தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரால் பிரிவினை கோருபவர்களை அடக்கி ஒடுக்கி விடலாம் என்று முதலில் நினைத்தனர். தேசிய ஒருமைப்பாடு என்ற முழக்கம் பல்வேறு இன மக்களின் இன உணர்வை எவ்வகையிலும் மட்டுப்படுத்த முடிய வில்லை.

இந்த நிலையில் சீனப் போர்நிறுத்த அறிவிப்பு வெளிவந்தது. இந்தியாவில் அமைதி நிலை ஏற்பட்டது. அரசியல் கட்சிகள் தன்னிச்சையாகச் செயல்படத் தொடங்கின.

திராவிட நாட்டுப் பிரிவினைப் பிரச்சினை போன்ற தனிநாடு கோரிக்கைகளை அடக்குமுறைச் சட்டத்தின் மூலம் நிலையாக ஒடுக்க முடியுமே அல்லாமல், வாதத்தால் ஒடுக்க இயலாது என்ற முடிவுக்கு மத்திய ஆட்சியினர் வரலாயினர்.

சீனப்போர் நிறுத்த அறிவிப்புக்குப் பிறகு கூடிய நாடாளுமன்றக் கூட்டத்தில், பிரிவினைத் தடைச்சட்டம் ஒன்றினைக் கொண்டுவந்து, அதனை நிறைவேற்றி வைக்க மத்திய அரசினர் பெரிதும் முயன்றனர். அந்தப் பிரிவினைத் தடைச்சட்டம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. 25.1.1963 அன்று நாடாளுமன்ற மாநிலங்க்ள் அவையில் அந்தச் சட்டம் விவாதத்திற்கு வந்தபோது, அறிஞர் அண்ணா அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, அந்தப்

*பிரிவினைத் தடைச்சட்டத்தை மிகக் கடுமையாக எதிர்த்து, ஆங்கிலத்தில் அருமையான முறையில் கருத்துக்களை வெளியிட்டார்.*

*அறிஞர் அண்ணா அவர்கள் அப்போது வெளியிட்ட கருத்துக்களில் ஒருசில மட்டும் கீழே தரப்படுகின்றன.*

"அண்மையில் சீன ஆக்கிரமிப்பாளரோடு சமரசம் பேசி அமைதி - நட்புறவு உடன்பாடு காண இந்திய அரசினர், மேசையின்முன் உட்கார்ந்து பேச்சு வார்த்தை நடத்தினர். அந்த முயற்சிக்கு நாம் அனைவரும் முழு ஒத்துழைப்பைத் தந்தோம்.

இன்று ஒரு குறிப்பிட்ட இலட்சியத்துக்காகப் பாடுபடுபவர் களை அழிப்பதற்கென்றே ஒரு புதிய தடைச் சட்டம், இந்த அவையின்முன் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அரசமைப்புச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவர, வேதனைதரக்கூடிய தடைச் சட்டம் ஒன்று இங்கு விவாதத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

இந்த மன்றத்தின் இரண்டு தரப்புக்களிலிருந்தும் கூறப்பட்ட பல கருத்துக்களையும் நான் மிகுந்த அக்கறையுடன் கேட்டுக்கொண்டிருந்தேன். சட்டத்தின் துணைகொண்டு தனிநாடு கேட்கும் முயற்சியை முறியடித்துவிட, இன்றைய ஆட்சியினர் முயலுகின்றனர். தனிநாடு என்னும் இலட்சியத்தைப் புகுத்தியவன் என்ற முறையில், என் நோக்கத்தை மீண்டும் விளக்கிட நான் முற்படவில்லை. எங்களுடைய கோரிக்கை குறித்துச் சிலரிடம் ஏற்பட்டுள்ள ஐயப்பாடுகள், தவறான எண்ணங்கள் ஆகியவற்றைக் களையவே நான் முற்படுகிறேன். எங்களுடைய இலட்சியம் பற்றிய விளக்கத்தையும், அதன் வரலாற்றையும் இந்த மன்றத்தில் உள்ளவர்கள் அனைவரும் தெளிவாகப் புரிந்துகொள்வது நலம் பயக்கும் என்று கருதுகிறேன்.

பாகிஸ்தான் பிரிவினையைக் கண்டபிறகு, திராவிடஸ்தான் பிரிவினை கேட்கப்படுகிறது என்று ஒரு உறுப்பினர் கூறினார். இந்தியா விடுதலை பெற்ற பிறகுதான், பிரிவினை உணர்ச்சிகள் தோன்றியுள்ளன என்று மற்றொரு உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கூற்றுக்கள், உண்மைக்கு முற்றிலும் புறம்பானவையாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்த ஒரு அரசியல் அமைப் பாகும். திராவிடர் கழகம், இந்தியா விடுதலை பெறுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே செயலாற்றி வருகிறது. இந்தியாவின் எதிர்கால அரசியலமைப்பு எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்பது பற்றிய சர்ச்சைகள் எழுந்தபோது, நான் பொதுச் செயலாளராக இருந்த திராவிடர் கழகம், தென்னகத்திற்கு அதாவது திராவிடத்திற்குத் தனி அரசியல் ஏற்பாடு வேண்டும் என்ற கருத்தை அறிவித்தது. அதனுடைய தொடர்பாகத்தான், திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்துவந்த திராவிட முன்னேற்றக் கழகமும், தனிநாடு பிரச்சினையை எடுத்து வைத்து, அது பற்றி விளக்கிக்கொண்டு வருகிறது. எனவே, இது ஆளுங்கட்சியின் செயல்களைப் பொறுத்தோ, செயலாற்றாத தன்மைகளைப் பொறுத்தோ அமையவில்லை.

எங்களது பிரிவினைப் பிரச்சாரத்தைத் தடைபோட்டு நிறுத்து வதற்குமுன்பு எங்களுடைய பிரச்சினையைப் புரிந்து கொள்வதற்காவது ஆளுங்கட்சித்தரப்பினர் முயலுவது நல்லது. எங்களுடன் கலந்துபேசி எங்களது கருத்தினைத் தெளிவாக அறிந்துகொள்ள ஆளுங்கட்சியினர் முயன் றிருக்கலாம்.

இப்போது இந்த மசோதா, இந்தியாவினுடைய அரசாண்மை யையும், வட்டார ஒற்றுமையையும் பாதுகாக்கவும், அவற்றை

நிலை நிறுத்திக் கொள்ளவும் வேண்டும் என்ற நோக்கில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்திய அரசாண்மைக்கு இப்போது என்ன ஆபத்து வந்திருக்கிறது? என்று எனக்குத் தெரியவுமில்லை; எனக்குத் தெரிவிக்கப்படவுமில்லை.

இங்கு இப்பொழுது சட்ட அமைச்சர் இல்லை. அவர் இருந்திருப்பாரேயானால், அவர் என்னைப் பார்த்து, நாட்டிலே பிளவுசக்திகள் உள்ளனவே அறியாயா? இது காரணமாகவே தேசிய ஒருமைப்பாட்டுக் குழு அமைத் தோமே அறியாயா? தேசிய ஒருமைப்பாட்டுக் குழு கூறிய பரிந்துரைகளை ஒட்டியே நாங்கள் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோமே தெரியாதா? என்றெல்லாம் கேட்டிருப்பார்.

தேசிய ஒருமைப்பாட்டுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது என்பதையும், அதன் தலைவராக இராமசாமி அய்யர் அவர்கள் நியமிக்கப்பட்டார் என்பதையும் நான் நன்கு அறிவேன். யார் அந்த இராமசாமி அய்யர்? அவர் இந்தியாவின் வல்லமையையும், அதன் அரசுரிமையையும் நன்கு அறிந்து, திட நம்பிக்கையுடன் பரிந்துரை செய்யக் கூடிய வல்லமை படைத்தவர் என்று நினைத்து, அவரைக் குழுவின் தலைவராக நியமித்தீர்கள்! அவர் எந்த அளவுக்கு நம்பிக்கை கொண்ட வீரர் என்றால், திருவிதாங்கூர் திவான் என்ற முறையில், திருவிதாங்கூர் தனிச் சுதந்திர நாடாக ஆகிவிட்டது என்று பிரகடனம் செய்தவர்தான்! பாகிஸ் தானுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுவிட்டதாக அறிவித்தவர்தான்! அவர் இந்தியாவோடு கூட்டுசேராக் கொள்கையைக் கொண்டிருந்தவர்தான்! தேசிய ஒருமைப் பாட்டுக் குழுவிற்கு எப்படிப்பட்ட தன்மைகொண்ட தலைவர் நியமிக்கப்பட்டிருந்தார் என்பதை இந்த மன்றத்தினர் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

திராவிடஸ்தான் கோரிக்கை ஆபத்தானது என்று ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் இங்குப் பேசியுள் ளார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சில திங்கள்களுக்கு முன்புகூட, ஏன் சில வாரங்களுக்கு முன்பு கூட, நாங்கள் என்ன கேட்கிறோம் என்பது தங்களுக்குப் புரியவே இல்லை என்று கூறிக் கொண்டு வந்தனர். அவர்கள் எதையும் புரிந்துகொள்ள வில்லை என்பது மட்டும் எனக்குப் புரிகிறது. ஆனால், எங்களது திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கை ஆபத்து தரத்தக்கது என்பது மட்டும் அவர்களுக்குத் தெளிவாகப் புரிகிறது! இது எப்படி அறிவு நிறைவான அரசியலாகும்?

உள்துறை அமைச்சர் அண்மையில் பேசும்போது, "பிரிவினை கோருவோர் கட்டுக்கு அடங்காது போனாலோ, குறிப்பிட்ட எல்லையை மீறிப் போனாலோ, வன்முறைச் செயல்களில் ஈடுபட்டாலோ, பிரிவினைப் பிரச்சாரம் கடுமையான முறையில் சட்டப்படி தடுக்கப்பட்டுவிடும்" என்று குறிப்பிட்டுள்ளார். இது சில திங்கள்களுக்கு முன்பு உள்துறை அமைச்சர் பேசியது. இந்த இடைக்காலத்தில் என்ன நேரிட்டுவிட்டது? நாங்கள் என்ன மண்டை ஓடுகளையும், தலைகளையும், வேட்டையாடிக் குவித் தோமா? ஏதாவது சட்டங்களை மீறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டோமா? இல்லையே! மாறாகச் சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்டவுடன் இந்தியாவைக் காப்பாற்ற, தங்கு தடையற்ற முறையில், உணர்ச்சியோடும் எழுச்சியோடும் கூடிய உதவியையும், ஒத்துழைப்பையும் அல்லவா தந்தோம்!

நீங்கள் கொண்டுவரும் பிரிவினைத் தடைச் சட்டத்தைப் படித்துப் பார்க்கும் மக்கள் என்ன நினைப்பார்கள்? நாட்டிலே நிலவுகிற அமைதிக்குக் காரணம், பிரிவினைத் தடைச் சட்டந்தான் போலிருக்கிறது! இந்தச் சட்டம் இல்லை யானால், நாட்டிலுள்ள பலர் நாட்டு விரோதிகள் ஆகி

விடுவார்கள்! நாடு துண்டு துண்டாக ஆகிவிடும் போலிருக்கிறது என்றுதான் நினைப்பார்கள்.

பல அரசியல் அறிஞர்கள் இந்தியா மிகப்பெரிய அளவுள்ள ஒரு துணைக்கண்டமாகும் என்றுதான் குறிப்பிட்டுள்ளார்கள். பல்வேறுவிதமான மனப்பான்மைகள் - பண்பாடுகள் - பாரம்பரிய உணர்ச்சிகள் - வரலாறுகள் வெவ்வேறு வகையினதாக இருந்து வருகின்றன. இங்கு இரும்புக் கூண்டுபோன்ற ஓரரசு முறை இருக்க முடியாது என்ற காரணத்தால்தான், அரசமைப்புச் சட்டம் வகுத்தவர்கள் கூட்டாட்சி முறையைக் கொண்டு வந்தனர்.

திராவிடப் பெருங்குடி மக்களின் உரிமைகள் அழிக்கப் படுகின்றன; வளங்கள் பறிக்கப்படுகின்றன; தனித் தன்மைகள் புறக்கணிக்கப்படுகின்றன; வாழ்வு அடிமைப் படுத்தப்படுகிறது. இந்தக் காரணங்களிலிருந்து மீளத்தான், நாங்கள் தனிநாடு கேட்கிறோம். வேறு வழி எதுவும் இல்லாததால்தான், தனி நாடு வேண்டும் என்கிறோம். நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிற அளவிற்கு வேறு வழி காட்டுங்கள். நான் அது பற்றிச் சிந்திக்கிறேன்.

உரிமை வேட்கையோடும், விடுதலை வேட்கையோடும் எடுத்து வைக்கப்படும் கோரிக்கைக்குக் காரணகாரிய விளக்கத்தோடு பதில் கூற முன் வாருங்கள்; வாதாடுங்கள்; வரவேற்கிறேன்! வாதங்களால் எங்களை வெல்ல முடியாத நீங்கள், தடைச்சட்டத்தின் மூலம் எங்களது உணர்வுகளை அடக்கி, ஒடுக்கி, ஒழிக்க முற்படுகிறீர்கள். உங்களுக்கு இருக்கும் பெரும்பான்மை வலிவால், எங்களது பிரச்சினை பற்றிய பிரச்சாரத்தை அடக்கி ஒடுக்கிவிடலாம். ஆனாலும் கோரிக்கை பற்றிய உணர்வுகள் எங்களைப் போன்றவர்களின் உள்ளங்களில் என்றும் கொதித்துக் கொண்டுதான் இருக்கும்.

என்றேனும் ஒருநாள் அவை வெடித்து வெளிக்கிளம்பியே தீரும்; எங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும் என்பது உறுதி.

ஆளுங்கட்சியினருடைய ஆணவப்போக்கு, அடக்கு முறை, அடாதுடி நடவடிக்கை, அநியாயமான மசோதா ஆகிய இவற்றிற்கு எனது கண்டன எதிர்ப்பைப் பதிவு செய்து கொள்கிறேன்!''

*என்று அறிஞர் அண்ணா அவர்கள் வீர உணர்ச்சியோடு நிலைமையைத் தெளிவுபடுத்திப் பேசினார்.*

*இந்தியாவிலுள்ள எந்த ஒரு பகுதியாவது இந்தியா விலிருந்து பிரிந்து தனிநாடாக ஆகவேண்டும் என்ற கருத்தை வெளியிட்டாலும், பிரச்சாரம் செய்தாலும், துண்டு அறிக்கையாகவோ, கட்டுரையாகவோ வெளியிட்டாலும், உரையாடலின் மூலம் வெளிப்படுத்தினாலும், அப்படிப் பட்ட செயலில் ஈடுபடுபவர்களை ஏழு ஆண்டுகள் வரையில் சிறையில் அடைக்கலாம், ஈடுபடும் அமைப்புக் களை அல்லது கட்சிகளை அறவே தடை செய்யலாம் என்ற வகையில், தடைச் சட்ட மசோதா பெரும்பான்மை வலி வோடு, நாடாளுமன்ற இரு அவைகளாலும் நிறைவேற்றப் பட்டுச் சட்டமாக்கப்பட்டது.*

### தி.மு.கழகத்தின் நிலை

*நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பிரிவினைத் தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்டு, அரசமைப்புச் சட்டத் தில் திருத்தமும் கொண்டுவரப்பட்ட நிலையில், தி.மு. கழகத்திற்குத் தன் நிலையைப் பற்றி ஆழமாகவும், விரிவாகவும், தீவிரமாகவும் ஆராய்ந்து பார்த்துத் தக்கதொரு முடிவு எடுக்கவேண்டிய இன்றியமையாத நிலை ஏற் பட்டது.*

அரசமைப்புச் சட்டத்திருத்தத்தின் மூலம் கழகத்திற்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள், கழகத்தின் முக்கியத் தலைவர்களோடும், முக்கியப் பொறுப்பாளர்களோடும், பொதுக் குழு உறுப்பினர்களோடும் தனித்தனியாகவும், கூட்டாகச் சேர்த்து வைத்தும் நீண்ட கலந்துரையாடல்கள் நடத்தி வந்தார்.

பிரிவினைத் தடைச்சட்டத்தின் விதிகளின்படி, திராவிட நாடு திராவிடர்க்கே என்ற முழக்கத்தை எழுப்ப முடியாது; திராவிட நாட்டுப் பிரிவினை பற்றிப் பேசமுடியாது; அதற்கான காரணகாரிய விளக்கங்களை எடுத்து வைக்கவோ, எழுதிக் காட்டவோ, அறிக்கைகள் வெளியிடவோ முடியாது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

கழகத்தைச் சேர்ந்த யாரொருவரும் பிரிவினை பற்றிப் பேசமுடியாது. அதனைக் கொள்கையாகக் கொண்ட தி.மு.கழகம் இயங்கவே முடியாது என்ற நிலையில், இயக்கமே அடியோடு அழிந்து ஒழிந்து விடும் என்ற கட்டம் உருவாயிற்று.

தி.மு.கழகத்தைச் சேர்ந்த முக்கியமான முன்னணித் தலைவர்கள் பலரும், திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை எக்காரணங் கொண்டும் விட்டுவிடக்கூடாது என்றும், பிரிவினைத் தடைச்சட்டத்தை மிகக் கடுமையான முறையில் எதிர்த்துப் போராடவேண்டும் என்றும், அதனால் எப்படிப்பட்ட தீங்கு ஏற்பட்டாலும், எத்தனை ஆண்டுகள் சிறையில் தள்ளப்பட்டாலும் அவற்றையெல்லாம் நாம் தாங்கிக்கொள்ள வேண்டும் என்றும் வாதிட்டு வந்தனர்.

பிரிவினைத் தடைச்சட்டத்தால் ஏற்படும் விளைவுகள் பற்றியும், அதன் கொடிய பிடியிலிருந்து தி.மு.கழகமும்,

தி.மு.கழகத்தாரும் ஒதுங்கி நின்று அரசியல் வளர்ச்சியில் முன்னேற வழிவகுக்க வேண்டும் என்பது பற்றியும் நான் என்னுடைய கருத்தை விளக்கமாக எடுத்து வைத்தேன். நான் அறிஞர் அண்ணாவிடமும், மற்ற முக்கியத் தோழர்களிடமும் என்னுடைய கருத்தை எடுத்து வைக்கும்போது,

''தி.மு.கழகத்தையும், நம்மையும் அடியோடு ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற தீயநோக்கத்தோடு தான், ஆளுங்காங்கிரசுக் கட்சியினர், தமது ஆதிக்க வலிவையும், அதிகார வலிவையும் பயன்படுத்திப் பிரிவினைத்தடைச் சட்டத்தை நிறைவேற்றி, அரசமைப்புச் சட்டத்திலே இடம் பெற வைத்துள்ளார்கள்.

உரிமையியல் சட்டத்தையோ, குற்றவியல் சட்டத்தையோ மீறி, மறியல் போன்ற பேராட்டங்களை நடத்துவதன்மூலம், கழகத்தவர்க்குச் சிறைத் தண்டனை, அபராதம் விதித்தல் போன்றவைகள்தான் நிகழும். அவற்றின்மூலம் கழகமோ, கொள்கையோ, குறிக்கோளோ, திட்டங்களோ அழிந்துபோக வாய்ப்பு ஏற்படாது. எடுத்துக்காட்டாக இ.பி.கோ. 144 தடையை மீறுவதன் மூலம், தண்டனைதான் கிடைக்குமே யல்லாமல், கழகம் அழிந்துவிடும் என்ற நிலை ஏற்படாது.

இப்பொழுது, அடிப்படை உரிமைகளையே பறிக்கும் அளவுக்கு, அரசமைப்புச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

திராவிட நாட்டுப் பிரிவினையை நாம் தொடர்ந்து வலியுறுத்துவது என்று முடிவு செய்வோமேயானால், திராவிடநாடு பிரிவினை பற்றிப்பேசவோ, எழுதவோ, கருத்தை வெளியிடவோ வழியில்லை, அவை அனைத்தும் தடுக்கப்பட்டுவிடும். பிரிவினைக் கோரிக்கையை எடுத்து வைப்பவர்கள் அனைவரும் ஏழு ஆண்டுகாலம் சிறையில் தள்ளப்படுவார்கள். வெளிவந்த பிறகு மீண்டும்

கோரிக்கையை வற்புறுத்தினால் மறுபடியும் ஏழு ஆண்டு காலம் சிறைத்தண்டனை அவர்களுக்குக் கிடைக்கும். பிரிவினைக் கோரிக்கையைக் கொண்டுள்ள கழகமும் தடை செய்யப்பட்டுவிடும்; அது அறவே இயங்க முடியாமல் போய்விடும்; கழகமும் தடைசெய்யப்பட்டு, கொள்கைப் பிரச்சாரமும் நிறுத்தப்பட்டுக் கழகச் செயல் வீரர்களும் சிறையில் அடைக்கப்பட்ட பிறகு, கட்சி இயங்க வழியில்லாமல் போய்விடும். கட்சி இயங்காவிட்டால், மக்களின் ஆதரவை இழக்க நேரிடும்; மக்களின் ஆதரவு அற்றுப்போகும் நிலையில், அரசியல் நடத்தவோ, ஆட்சிபுரியவோ அறவே வழி ஏற்படாது.

வெறிநாய் நம்மைக் கடிக்க வந்தால், அதன் கடிக்கு ஆளாகிச் செத்துப்போவதற்கு இடமளிக்காமல், அதன் கடியிலிருந்து ஒதுங்கி நின்று, நம்மைநாமே காப்பாற்றிக் கொண்டு, நமது வாழ்வை மேலும் சிறப்பாக வளப்படுத்திக் கொள்ள முயலுவதுதான் அறிவுடைமையாகும்.

திராவிட நாட்டுப் பிரிவினை கோரி, என்ன என்ன நியாயமான காரணங்களை எடுத்து வைக்கிறோமோ, அதே காரணங்களை நாம் அழுத்தந்திருத்தமாக எடுத்து வைத்து, முழு மாநிலத் தன்னாட்சி வேண்டும் என்று கேட்டுப்பெற வாய்ப்பு இருக்கிறது.

'மத்தியிலே இந்தியாவைப் பாதுகாப்பதற்கான வலிவான கூட்டாட்சி அமையவேண்டும். மாநிலத்திலே மக்களை வாழவைப்பதற்கான முழுத் தன்னாட்சி அமையவேண்டும்'' என்ற கோரிக்கையை எடுத்து வைத்தால், பிரிவினைத் தடைச் சட்டம் நம்மையோ, நமது கழகத்தையோ அழிக்க முடியாது.

திராவிடப்பெருங்குடி மக்கள் வளத்துடனும், வலிவுடனும், வனப்புடனும், வசதியுடனும் வாழ்வதற்கான காரண காரிய

விளக்கங்கள் அத்தனையையும் எடுத்துச் சொல்லி, ஆகவே திராவிட நாடு தனிநாடாக ஆகவேண்டும் என்று இது வரையில் சொல்லி வந்தோம். இனி, அதே காரணகாரிய விளக்கங்களை அடுக்கடுக்காக எடுத்துச்சொல்லி, ஆகவே முழு மாநிலத்தன்னாட்சி அமைய வேண்டும் என்று இனிச் சொல்ல முடியும். அப்படிச் செய்வதன்மூலம் நமது கழகம், கொள்கை, குறிக்கோள், திட்டம், ஆட்சி ஆகியவற்றைக் காப்பாற்றிக் கொள்ள நமக்கு வழி ஏற்பட்டுவிடும். அதன்மூலம் நாமும், நமது கழகமும் வளர, வாழ வழிஉண்டு; பிரிவினைத் தடைச்சட்டமும் எந்த வகையிலும் தலையிட முடியாது.

தனிநாடு என்ற கோரிக்கையை விட்டுவிட்டு, மாநிலத் தன்னாட்சி என்ற கோரிக்கையை அழுத்தந்திருத்தமாக முன்வைப்போமேயானால், நமக்கு நல்ல எதிர்காலம் ஏற்படும். 'காரியந்தான் நமக்குப் பெரிதே அல்லாமல், வீரியம் அல்ல!' நாம் அடியோடு அழிந்து போவதை விடக் காலத்திற்கும், கருத்துக்கும் வளைந்து கொடுக்க லாம்! அதில் தவறு ஏதும் இல்லை! சுவரை வைத்துக்கொண்டுதான் ஓவியம் வரைய முற்படவேண்டும். அதுபோல, கழகத்தை நிலைநிறுத்திக்கொண்டுதான் கொள்கையை நிறைவேற்ற முயலவேண்டும்!''

*என்று விளக்கிக் கூறினேன்.*

*அறிஞர் அண்ணா அவர்களுடைய எண்ணம் அதே போக்கில் இருந்த காரணத்தால், அவர் என்னுடைய கருத்தை ஏற்றுக்கொண்டார். அறிஞர் அண்ணா அவர்கள் அத்தகைய கருத்துக்கு ஏற்ப, கழக முன்னணியினரையும், கழகச் செயல் வீரர்களையும் ஆயத்தப்படுத்தி, எல்லோரையும் தன் வயப்படுத்தி வெற்றி கண்டார்கள்.*

## கழகச் சட்டதிட்டத்தில் திருத்தம்

1963 நவம்பர் 3ஆம் நாளன்று தி.மு.கழகத்தின் தலைமைச் செயற்குழுக் கூட்டம், சென்னை அறிவகத்தில், என்னுடைய தலைமையின்கீழ் நடைபெற்றது.

அறிஞர் அண்ணா அவர்களும், செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். அறிஞர் அண்ணா அவர்கள், பிரிவினைத் தடைச் சட்டத்தினால் ஏற்படும் விளைவுகள் பற்றியும், அதன் கொடிய பிடியிலிருந்து விலகிக் கழகம் நீடித்துப் பணிபுரிய வேண்டிய நிலைமை குறித்தும், எதிர்கால நலன் கருதிக் கழகச் சட்டதிட்டம் திருத்தப்பட வேண்டியதன் இன்றியமையாமை பற்றியும், நீண்டதொரு விளக்கந்தந்து உரையாற்றினார்.

பின்னர், கழகத்தின் சட்டதிட்ட விதி முறைகளில் ஏற்றதொரு திருத்தத்தைக் கொண்டுவர, செயற்குழுவினர் அனைவரும் ஒரே மனதாக ஒப்புதல் அளித்தனர்.

பிரிவினையை வலியுறுத்தும் சட்டதிட்ட விதியை நீக்கி விட்டுப் பின்வருமாறு புதிய விதி ஒன்று கழகச் சட்டதிட்டத்தில் சேர்க்கப்பட்டது.

> ''தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் போன்ற மொழிவழி மாநிலங்கள், இந்திய அரசுரிமை - ஒருமைத் தன்மை - அரசமைப்புச் சட்டம் ஆகியவற்றிற்குள் அடங்கி இருந்து, தேவைப்படும் கூடுதல் அதிகாரங்கள் அத்துணையையும் பெற்று, இந்தியக் கூட்டாட்சி அமைப்புக்குள் தன்னாட்சி மாநிலங்களாக இயங்கக் கழகம் பாடுபடும்''

தி.மு.கழகம் மேற்கொண்ட நிலையை, கழகத்தோழர்கள் மட்டுமல்லாமல், பொதுமக்கள் பலரும் மகிழ்ச்சியோடு வரவேற்றனர். அறிஞர் அண்ணா கூறியபடி, கழகம் மேலும் மேலும் பொது மக்களின் அன்பையும், ஆதரவையும், நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்று வளரத் தொடங்கியது. 1967இல் தமிழக அரசையே கைப்பற்றும் அளவுக்குக் கழகம் செல்வாக்குப்பெற்று வளர்ந்தது.

## இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடுகள்

1963 ஏப்ரல் 13 ஆம் நாள், நாடாளுமன்ற மக்களவையில், உள்துறை அமைச்சராக இருந்த இலால்பகதூர் சாஸ்திரி அவர்கள் ஆட்சிமொழி பற்றிய மசோதாவைத் தாக்கல் செய்தார்.

அதன்படி, 1965ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26ஆம் நாள்முதற்கொண்டு இந்திமொழி மட்டுமே ஆட்சி மொழியாக ஆகும். இந்தி மொழிக்குத் துணையாக ஆங்கில மொழியைச் சிறிது காலத்திற்குத் தேவைப்படும்வரையில் பயன்படுத்தலாம். 1965 சனவரி 26ஆம் நாளுக்குப்பிறகு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் மத்திய அரசினர் வெளியிடும் இந்தி மொழிபெயர்ப்புடன்கூடிய மத்திய அரசின் சட்டங்கள், ஆணைகள், கட்டளைகள், நெறிகள், துணைச் சட்டங்கள் போன்றவைகள், அதிகார நிறைவான தாகக் கருதப்படும். மாநில அரசுகளால் நிறைவேற்றப்படும் சட்டங்கள், ஆணைகள், கட்டளைகள் ஆகியவற்றை மாநில அரசுகளின் அரசுப் பதிவேட்டில் இந்தியில் மொழிபெயர்த்து மாநில ஆளுநர் அவர்களின் அனுமதியுடன் வெளியிடின் அவை அதிகார நிறைவானதாகக் கருதப்படும்.

இப்படிப்பட்ட நிலை, இந்தி பேசாத மாநில மக்களுக்கு நீடித்த - நிலைத்த தீமைகளை இழைப்பதாக அமைந்து விடும் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இந்தி மொழிக்கு

மட்டும் பட்டஞ்சூட்டி, அதன் ஆதிக்கக் கரங்களை வலுவடையச் செய்யவேண்டும் என்பதே, இம்மசோதாவின் நோக்கமாக இருந்தது. இந்த மசோதாவின்படி, ஆங்கிலத்தின் இடத்தை இந்திமொழி ஒட்டுமொத்தமாகக் கைப்பற்றிக் கொள்ளும் நிலை ஏற்பட்டது.

பண்டித நேரு அவர்கள், 1962ஆம் ஆண்டு கொடுத்த உறுதிமொழியான, இந்தியைப் பேசாத மாநில மக்கள் விரும்பும் காலம்வரையில், ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக நீடிக்கும். ஆங்கிலத்தை இந்தி பேசாத மக்கள் எப்பொழுது அகற்ற விரும்புகிறார்களோ, அது வரையில் ஆங்கிலம் ஆட்சி மொழியாகவே இருந்து வரும். இந்தியை மட்டுமே ஆட்சிமொழி ஆக்கி, ஆங்கிலத்தை அகற்றிவிடும் உரிமை இந்தி மொழி பேசுகின்ற மக்களுக்கு அறவே இல்லை'' என்பது உள்துறை அமைச்சர் இலால்பகதூர் சாஸ்திரி அவர்களால், முறைப்படி காப்பாற்றப்படாத நிலை ஏற்பட்டது. பண்டித நேரு உயிரோடு இருந்தபோது, மொழிப்பிரச்சினை பற்றிக்கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படாதது, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், பொதுவான இந்தி எதிர்ப்பாளர்களுக்கும் பெருத்த ஏமாற்றத்தை அளித்தது.

மாக்கியவல்லி என்ற தந்திர அரசியல்வாதி, ''எவ்வளவு வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுக்க முடியுமோ அவ்வளவையும் கொடுங்கள். ஆனால் அவற்றையெல்லாம் நீங்கள் நிறைவேற்றி வைக்க வேண்டிய அவசியமில்லை'' என்று அரசியல் தந்திரிகளுக்கு அளித்த வாக்குறுதியின் படிதான், இந்தியப்பேரரசினர் நடந்து கொண்டனர்.

முதிர்ந்த இந்தியத் தலைவர்கள் பலரும் விடுத்த எச்சரிக்கைகளை மதிக்காமலும், இந்தி பேசாத மாநில மக்களின் கண்டனக் குரல்களைப் பொருட்படுத்தாமலும்,

நாடாளுமன்றத்தில் அறிஞர் அண்ணாவும், ஏனைய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் தெரிவித்த எதிர்ப்புக் குரலைக் காது கொடுத்துக் கேட்காமலும் ஆட்சிமொழி மசோதாவானது, ஆளுங் காங்கிரசுக் கட்சியினரால், நாடாளு மன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது.

இந்திமொழியானது, வலுக்கட்டாயமாக இந்தி பேசாத மக்களின்மீது திணிக்கப்படுவதை எதிர்த்துத் தி.மு.கழகம் பல கூட்டங்களையும், மாநாடுகளையும் கூட்டிக்கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது.

1963 ஏப்ரல் 29ஆம் நாள், ஆட்சிமொழிச் சட்டத்தைக் கண்டிக்கும் வகையில், சென்னைக் கடற்கரைப்பகுதியில், அனைத்துக் கட்சிகளின் கண்டனக் கூட்டம் ஒன்றினைத் தி.மு.கழகம் ஏற்பாடு செய்தது. அந்தக் கூட்டத்தில், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும், அறிஞர் அண்ணாவும், நானும் கலந்துகொண்டு, ஆட்சிமொழிச் சட்டத்தின் மூலம் இந்தி இந்தியாவின் ஆட்சிமொழியாகத் திணிக்கப்படுவதை எதிர்த்துப் பேசினோம்.

4.8.63இல், சேலத்தில் இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு நான் தலைமை தாங்கினேன். மனோகரன் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்களும், கழகத்தின் முக்கியச் சொற்பொழிவாளர்களும் கலந்துகொண்டனர். மாநாட்டில் பொதுமக்களும், கழகத் தோழர்களும் பல்லாயிரக்கணக்கில் கலந்துகொண்டு, அதற்குச் சிறப்புச் சேர்த்தனர். ''இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!'' என்ற முழக்கம், மக்களுக்கு ஊக்கத்தையும், உணர்ச்சியையும் ஊட்டும் வகையில் தொடர்ந்து எழுப்பப்பட்டது.

1963 ஆகஸ்டு 8,9,10 ஆகிய நாட்களில், சென்னையில் தி.மு.கழகத்தின் பொதுக் குழுக் கூட்டம், எனது தலைமையில் நடைபெற்றது. அறிஞர் அண்ணாவும், பொதுக்குழு உறுப்பினர்களும், தலைமைக் கழக நிருவாகிகளும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் இந்தித் திணிப்பை எதிர்த்துப் பலமுனை களில் போராட்டங்கள் நடத்துவது பற்றி விவாதிக்கப் பட்டது. பொதுக்குழு உறுப்பினர்கள் பலரும் விவாதத்தில் கலந்துகொண்டனர்.

இந்திமொழி ஆதிக்கத்தால் ஏற்படக்கூடிய சீர்கேடுகள் பற்றி நான் விரிவாக எடுத்துக்கூறினேன். இந்தித் திணிப்பை எதிர்த்து எந்த எந்த வகைகளில் போராட வேண்டிவரும் என்பது பற்றிப் பொதுச் செயலாளர் அறிஞர்அண்ணா அவர்கள் நீண்ட உரையாற்றினார்.

> இந்திமொழிதான் இனி இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்கும் என்று அறிவித்து, அதனை அரசமைப்புச் சட்டத்தில் நுழைத்து வைத்துக்கொண்டு, அதை நடை முறைப்படுத்த எல்லாவகையிலும் சூழ்ச்சிகளையும், சதிகளையும் கையாள முற்பட்டிருக்கும் மத்திய அரசின் போக்கைத் தி.மு.கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது என்றும்,
>
> தென்னக மக்களை இந்தித் திணிப்பின் மூலம் இரண் டாந்தரக் குடிமக்களாக்கும் சூழ்ச்சியில் மத்திய அரசு ஈடுபட்டிருப்பதை எதிர்க்கவும், தென்னக மக்களின் மொழியுரிமையை நிலைநாட்டவும், தி.மு.கழகம் நேரடிப் போராட்டங்களைத் தொடங்க வேண்டும் என்றும்,
>
> தி.மு.கழகத்தின் சார்பாக அறப்போராட்டங்களைத் தொடங்கி, அவற்றைச் செம்மையாகக் கண்காணிக்கப் போராட்டக் குழு ஒன்றை உருவாக்கவேண்டும் என்றும்,

1963 ஆகஸ்டு திங்களிலிருந்து அறப்போராட்டங்களை ஒன்றன்பின் ஒன்றாகத் தொடங்குவது என்றும்.

தீர்மானங்கள் முக்கியமானவையாக நிறைவேற்றப்பட்டன. நாட்டு நடப்பு, அரசியல் நிலை, கழக வளர்ச்சி ஆகியவை குறித்து மேலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

25.8.63 அன்று தஞ்சையில், தஞ்சை மாவட்ட இந்தி எதிர்ப்பு மாநாடு கூட்டப் பெற்றது. மாநாட்டிற்கு சத்தியவாணிமுத்து தலைமை தாங்கினார். மதியழகன் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். கலைஞர் கருணாநிதி வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாநாட்டில் அறிஞர் அண்ணா, நான், கழக முன்னணிச் சொற்பொழிவாளர்கள் உரையாற்றினோம். இந்தித் திணிப்பைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

22.9.63இல், நெல்லை பேட்டையில், நெல்லை மாவட்ட இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு கோவிந்தசாமி தலைமை தாங்க, ப.உ. சண்முகம் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மாநாட்டில் அறிஞர் அண்ணா, நான், கலைஞர் கருணாநிதி, கழகத்தின் முன்னணிப் பேச்சாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு, இந்தித் திணிப்பு முயற்சிக்குக் கடுங்கண்டனம் தெரிவித்து உரையாற்றினோம்.

1963 அக்டோபர் 5,6 ஆகிய இரு நாட்களில், திருச்சியில், மாணவர் கழகத்தின் சார்பாக இந்தித் திணிப்பு எதிர்ப்புச் சிறப்பு மாநாடு மிகச்சிறப்பாக நடைபெற்றது. தமிழகம் எங்கணும் இருந்து ஏராளமான மாணவர்கள் வந்து மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மாணவர் எம்.எஸ். வெங்கடாசலம் வரவேற்புரை நல்க, மாணவர் சின்னத்துரை மாநாட்டைத் தொடங்கி வைக்க, மாணவர் கணபதி மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.

மாநாட்டில் அறிஞர் அண்ணா, நான், கலைஞர் கருணாநிதி, மதியழகன், காயிதே மில்லத் முகமது இஸ்மாயில், மூதறிஞர் இராஜாஜி ஆகியோரும், மாணவர் கழகப் பேச்சாளர்களும் கலந்துகொண்டு இந்தித் திணிப்பால் தமிழுக்கும், தமிழர்க்கும், தமிழ்நாட்டிற்கும் ஏற்படக்கூடிய கேடுகள் பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் பேசினோம்.

13.10.63 அன்று சென்னை நுங்கம்பாக்கத்தில், தி.மு.கழகத்தின் சார்பாக இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு மிக்க எழுச்சியோடு நடைபெற்றது.

அன்று காலையில் மாபெரும் ஊர்வலம் ஒன்று, அறிவகத்திலிருந்து தொடங்கி, நுங்கம்பாக்கம் மாநாட்டுப் பந்தலை வந்தடைந்தது.

மாநாட்டுக் கொடியை சிற்றரசு ஏற்றி வைத்தார். மாநாட்டைப் பேராசிரியர் அன்பழகன் தொடங்கி வைத்தார். மாநாட்டிற்கு அறிஞர் அண்ணா தலைமை தாங்கிப் பேருரை ஆற்றினார்.

மாநாட்டில் நான், கலைஞர் கருணாநிதி, மதியழகன், காஞ்சி மணிமொழியார், சிற்றரசு, நடராசன், காஞ்சி கலியாணசுந்தரம், ஆசைத்தம்பி, இளம்வழுதி போன்றோர் கலந்து கொண்டு, இந்தித் திணிப்பைக் கண்டித்து உரை நிகழ்த்தினோம்.

இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய அறிஞர் அண்ணா அவர்கள், உணர்ச்சி மிகுந்ததொரு உரை ஆற்றி,

அறப்போர்த் திட்டத்தை அறிவித்தார். அரசமைப்புச் சட்டத்தில், இந்தியை ஆட்சிமொழியாக ஆக்கும் 175ஆவது பகுதியை மட்டும் தி.மு.கழக அறப்போர்த் தொண்டர்கள் தீயிட்டுக் கொளுத்துவார்கள் என்றும், எல்லா இடங்களிலும் மத்திய அரசின் அலுவலகங்களின் முன்னால் தீயிட்டுக் கொளுத்தும் அறப்போராட்டம் நடைபெறும் என்றும், 17.11.63 இல் தொடங்கப்படுகின்ற இந்தித் திணிப்பு எதிர்ப்பு அறப்போராட்டம், மாவட்ட வாரியாக நடத்தப்பெற்று, 1965 சனவரி 26ஆம்நாள் முடிவுறும் என்றும் அறிவிப்பை வெளியிட்டார்.

எந்த எந்த இடங்களில், எந்த எந்த நாட்களில், யார் யார் அறப்போராட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்ற பட்டியலையும், அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டார்கள்.

## இந்தித் திணிப்பை எதிர்த்து மாநிலங்கள் அவையில் அறிஞர் அண்ணா

மத்திய அரசின் ஆதிக்க அதிகாரத்தால், இந்திமொழி, இந்தி பேசாத மாநிலங்களில் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுவதை எதிர்த்து 1963ஆம் ஆண்டில், அறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் மிகக் கடுமையாகப் பேசினார். அறிஞர் அண்ணா பேசிய கருத்துக்களில் சில வருமாறு :

> "திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாங்கள் இந்தி வலுக்கட்டாயமாக எங்கள்மீதும், எங்கள் மாநிலத்தவர் மீதும் திணிக்கப்படுவதை முழுமூச்சுடன் எதிர்த்துப் போராடுவோம்! அரசின் அடக்குமுறைகளின் மூலம் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து நாங்கள் அஞ்சப் போவதில்லை! கைகட்டி வாய்பொத்திக் கட்டுண்டு கிடக்க எங்கள் மனச்சான்று இடந்தராது!

பல இன மொழிகளைக் கொண்ட இந்தியத் துணைக் கண்டத்திற்கு, ஒரே ஒரு ஆட்சி மொழிதான் இருக்கும்; அதுவும் இந்தி மொழியாக மட்டுமே இருக்கவேண்டும் என்பதற்கு, நாங்கள் ஒருகாலும் இசையமாட்டோம்.

இந்திமொழியானது, உத்தரப்பிரதேசம் பீகார் இராஜஸ்தான் - மத்திய பிரதேசம் என்ற குறிப்பிட்ட மாநிலங்களிலே மட்டும் பேசப்படுகின்ற இலக்கண இலக்கிய வளர்ச்சி பெறாத ஒரு சாதாரண மொழியாகும். ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் பேசப்படுகின்ற இந்தி மொழியை இந்திய நிலப்பரப்பு முழுவதிலும் வலுக்கட்டாய மாகத் திணிப்பது என்பது, அறிவுடைமைக்கும், அற நெறிக்கும், அரசியலுக்கும் ஏற்புடையதல்ல.

இந்தித் திணிப்பு ஏற்பாட்டின்மூலம், இந்தி மொழிவெறி பிடித்த மத்தியஅரசு, இந்திமொழி வழங்கும் பகுதிக்கு நிலையான நன்மையையும், பிற பகுதிகளுக்கு நிலையான தீங்கையும் ஏற்படுத்தத் துணிந்திருக்கிறது.

இந்திய அரசின் ஆட்சிமொழித்துறையில், இன்றுள்ளது போல, ஆங்கில மொழியே ஆட்சிமொழியாக நீடித்திருக்க வேண்டும். அகில உலகத்திற்கும் பொதுமொழியாக இருந்துவரும் ஆங்கிலமே, இந்தியாவின் பொதுமொழி யாகவும் இருந்துவருகிறது. அதுவே சென்ற இருநூறு ஆண்டு காலமாக ஆட்சி மொழியாகவும் இருந்து வருகிறது. ஆங்கிலம் உலகத் தொடர்பு மொழியாகவும், உலக வாணிக மொழியாகவும், அறிவியல்-தொழில்நுட்பவியல்களைக் கற்றுத்தரும் மொழியாகவும் இருந்து வருவதால், அந்தமொழி நமது வளர்ச்சிக்குப் பயன்படும் ஒரு கருவியாக இருந்து வரமுடியும்.

இந்தியாவிலுள்ள முக்கியத் தேசியமொழிகள் அனைத்தும், இந்தியாவின் ஆட்சி மொழிகளாக ஆகும் காலம் வரையில், இப்பொழுது ஆட்சி மொழியாக இருந்து வரும் ஆங்கிலமே, தொடர்ந்து நீடித்து வருவது சாலச் சிறந்ததாகும். இந்தியாவின் முக்கியத் தேசிய மொழிகள், இந்தியாவின் முழு ஆட்சி மொழிகளாக ஆகிவிட்ட நிலையிலும் கூட, ஆங்கிலமொழி துணை மொழியாக இருந்து வரவேண்டிய அவசியம் ஏற்படத்தான் செய்யும்.

இந்தியா என்பது, ஒரு நாடு என்ற நிலையில் இல்லை. அது ஒரு ஐக்கிய நாடு என்று குறிப்பிடப்படும் நிலையில்தான் இருந்து வருகிறது. இந்தியா என்பது, பல்வேறு தேசிய இனங்களையும், பல்வேறு தேசிய மொழிகளையும் மாறுபட்ட பல்வேறு பழக்க வழக்கங்களையும் கொண்ட ஒரு துணைக் கண்டமாகும். நமது அரசியல் அமைப்பு முறையும், பல்வேறு தேசியப் பகுதிகளை ஒன்றாக இணைத்திருக்கக்கூடிய ஒரு இணைப்பு முறையேயாகும்.

இன்றும் கூடத் தேசியப் பாட்டுக்களான 'ஜனகன மனவும்,' 'வந்தே மாதரமும்' இந்திமொழியில் இல்லாமல், வங்காள மொழியில்தான் இருந்து வருகின்றன.

இந்தியாவில் இந்தியைவிடப் பலவகைகளிலும் சிறந்து விளங்கும் தமிழ் போன்ற தொன்மையான மொழிகள் மதிக்கப்படவேண்டும். அவற்றிற்கெல்லாம் உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும்.

இந்தித் திணிப்பை எதிர்த்து நாங்கள் நடத்தப்போகும் போராட்டத்தில் சிறைத் தண்டனை 4 ஆண்டுகள் அல்ல, 40 ஆண்டுகளானாலும் ஏற்க நாங்கள் அனைவரும் ஆயத்தமாகவே இருக்கிறோம்!''

## இந்தித் திணிப்பை எதிர்த்து நான் பேசிய பேச்சு

*1963ஆம் ஆண்டில், இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கூட்டங்களிலும்-மாநாடுகளிலும், தமிழகச் சட்டமன்றத்திலும், இந்தித் திணிப்பை ஏன் எதிர்க்கிறோம் என்பதற்கான காரணங்களைப் பற்றி நான் விரிவாகவும், விளக்கமாகவும், தெளிவாகவும், திட்பமாகவும் கருத்துக்கள் பலவற்றை எடுத்துக்கூறினேன். அப்படிக் கூறப்பட்ட கருத்துக்களில் சில மட்டும், இங்கே தொகுத்துச் சொல்லப்படுகின்றன. அவை வருமாறு:-*

> "காங்கிரசுக் கட்சியிலும், மத்திய ஆட்சியிலும் கோலோச்சி வரும் இந்தி மொழி வெறியர்கள், இந்திதான் இந்தியாவின் ஒரே தேசியமொழி ஆகும் என்றும், அதுவே இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆகவேண்டும் என்றும், அதுவேதான் இந்தியாவின் பொதுமொழியாக அமையவேண்டும் என்றும், அதுவே இந்தியாவின் தொடர்பு மொழியாகவும் இருந்து வரவேண்டும் என்றும் தொடர்ந்து கூக்குரலிட்டு வருகின்றனர்.
>
> இந்தியா என்பது பல்வேறுவிதமான - பல்வேறு வகையான இனங்கள் - பல சமயங்கள் - பல சாதிகள் - பல விதமான நாகரிகங்கள் - பலவிதமான பண்பாடுகள் - பல்வேறுவகைப் பட்ட உணர்வுகள் - பல்வேறு வகைப்பட்ட நடையுடை பழக்க வழக்கங்கள், பல்வேறுவிதமான போக்குகள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு துணைக் கண்டமாகும் என்பது, வரலாற்று அறிஞர்களின் கணிப்பாகும்.
>
> மொழிவாரியாகப் பிரிந்து, தனித்தனித் தேசிய இனங்களைக் கொண்ட துணைக்கண்டந்தான் இந்தியாவே அல்லாமல், ஒரு நாடு என்று சொல்லுவதற்கான இயற்கையான தகுதி படைத்ததல்ல.

பிரிட்டிஷாரின் துப்பாக்கி முனையால், இந்தியா ஒரே ஆட்சியின்கீழ் கொண்டு வரப்பட்டதே அல்லாமல், அது ஒரு நாடாக இயற்கையில் அமையவில்லை.

1961 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி, இந்தியாவில் பல்வேறு வகைப்பட்ட மக்களால் பேசப்படும் மொழிகள் 1652 ஆகும். அவற்றில் இலக்கணமோ, இலக்கியமோ, எழுத்து வழக்கோ அற்று, அரை குறைப்பேச்சு வழக்கில் இருந்து வருபவை பல மொழிகளாகும். ஏறத்தாழ 125 மொழிகள் மட்டும் குறிப்பிட்டு அடையாளம் காட்டப்படும் நிலைமையில் இருந்துவருகின்றன. இன்றைய நிலையில் இந்தியக் குடியரசின் அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில், தேசிய மொழிகளாகச் சுட்டிக் காட்டப்படுபவை 18 மொழிகளே ஆகும். அவை (1) அசாமி (2) வங்காளி (3) குசராத்தி (4) மராத்தி (5) இந்தி (6) காஷ்மீரி (7) பஞ்சாபி (8) ஒரியா (9) தெலுங்கு (10) கன்னடம் (11) தமிழ் (12) மலையாளம் (13) சிந்தி (14) உருது (15) கொங்கணி (16) நேபாளி (17) மணிப்புரி (18) சமற்கிருதம் ஆகியவை ஆகும்.

இந்த அட்டவணையில் ஆங்கிலோ - இந்தியர்களின் தாய் மொழியாக இருந்துவரும் ஆங்கிலம் சேர்க்கப்படவில்லை. குறிப்பிடப்பட்ட 18 மொழிகளிலும் கூட, சிறப்பான மொழிகள் 12 தான்.

எந்த வகையில் பார்த்தாலும் இந்தி, இந்தியாவின் ஒரே தேசிய மொழி என்று சொல்லுவதற்கில்லை. மற்றச் சிறந்த மொழிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இலக்கண, இலக்கிய வளமற்ற இந்தி மொழி இந்தியாவின் பொது மொழியாகவோ, தொடர்பு மொழியாகவோ இருக்கச் சிறிது கூடத் தகுதிபடைத்த ஒரு மொழி அல்ல என்பது தெளிவாகப் புலப்படும்.

பல்வேறு வகைப்பட்ட மொழி - சமயம் - உணவு - உடை - உணவு - வழிபாடு - பழக்க வழக்கம் - சடங்கு - சம்பிரதாயம் ஆகியவற்றைக் கொண்ட இந்தியாவில், ஒற்றுமையுணர்வை அகத்தளவில் வளர்க்க முயலலாமே அல்லாமல், புறத்தோற்றஅளவில் ஒருமைப் பாட்டுத் தன்மையை வளர்க்கவே முடியாது; வளர்க்கவும் கூடாது. ஒருமைப்பாட்டுத் தன்மையின் மூலம் ஒற்றுமையுணர்வை ஏற்படுத்துவது என்பது இயலாத ஒரு செயலாகும்.

இந்திய மக்களிடையே ஒருமைப்பாட்டுத் தன்மையை ஏற்படுத்துவதாக நினைத்துக் கொண்டு, இந்தியாவுக்கு ஒரே தேசிய மொழி - ஒரே பொது மொழி - ஒரே தொடர்பு மொழி என்று ஏற்படுத்துவதன் மூலமோ, இந்தியர் அனைவரையும் ஒரே மாதிரியான உடையை உடுக்கவைப்பதன் மூலமோ, ஒரேவிதமான உணவை உண்ண வைப்பதன் மூலமோ, ஒரே இசையைப் பயன்படுத்தும்படி செய்வதன் மூலமோ, எல்லோர்க்கும் ஒரே சமயத்தை வற்புறுத்துவதன் மூலமோ ஒற்றுமையுணர்வை உருவாக்கிவிடலாம் என்று எண்ணி னால், அது ஒருகாலும் நடைபெறக்கூடியதல்ல.

'ஒருமைப்பாட்டுக்கும், 'ஒற்றுமைக்கும்' உள்ள வேறுபாட்டை நன்கு உணரவேண்டும். 'ஒருமைப்பாடு' என்பது, மனிதனின் புறத்தோற்றத்தில் காணப்படக்கூடிய ஒரே தன்மையாகும். 'ஒற்றுமை' என்பது மனிதனின் அகவுணர்வைப்பொறுத்து ஏற்படக்கூடிய நட்புறவுத்தன்மை யாகும். ஒருமைப்பாட்டை ஏற்படுத்திவிட்டால், ஒற்றுமைப் பண்பு ஏற்பட்டுவிடும் என்று எண்ணுவது தவறான கருத்தாகும். ஒருவருக்கொருவர் புறத்தோற்றத் தன்மைகள் ஒரு நாட்டில் எப்படி வேண்டுமானாலும் அமையலாம்; ஆனால், அவர்களிடையே ஒற்றுமைப்பண்பு ஏற்பட வேண்டும் என்பதுதான் முக்கியம்.

இந்தியாவில் ஒற்றுமை உணர்வு எல்லா மக்களிடையேயும் ஏற்பட வேண்டும் என்பதுதான் நமது கொள்கை. அப்படிப்பட்ட ஒற்றுமை உணர்வை, இந்தியை எல்லோரும் பேசும்படி செய்வதன் மூலம் அதாவது ஒரே ஆட்சி மொழியை வற்புறுத்துவதன் மூலம் ஏற்படுத்த இயலாது என்பதுதான் நம்முடைய கருத்து. இந்தியை ஒரே ஆட்சி மொழியாக இந்தியாவில் ஆக்குவதன் மூலம், இந்திய ஒற்றுமையை உண்டாக்கி விடமுடியாது என்பதுதான் நமது வாதம்.

இந்தி மொழி என்பதும் ஒரே மொழியாக இருக்க வில்லை. அந்தப் பெயரில் பல பிரிவுகள் இருந்து வருகின்றன. வடநாட்டில் பலபகுதிகளிலும் சிதைந்துபோன அபப்ரம்ச மொழிகள் - சமற்கிருதம் - பிராகிருதம் - பாலி - பாரசீகம் - துருக்கி - அரபு போன்ற மொழிகளின் சொற்களோடு கலந்து உருவான மொழிகள் தாம், இந்திக்குழு மொழிகள் என்ற பெயரில் பல பகுதிகளில் தனித்தனியாகப் பேசப்படும் மொழிகளாக இருந்து வருகின்றன. இந்தி என்ற பெயரில் 5 குழு மொழிகளும், அவற்றின் உட்பிரிவுகளாக 19 மொழிப்பிரிவுகளும், அவற்றின் கிளை மொழிகளாக 89 வகையான மொழிகளும் தனித் தனியாகப் பேசப்பட்டு வருகின்றன.

இந்தி மொழித் திணிப்பு, நாளடைவில் தமிழ் - தமிழர் - தமிழ்நாடு ஆகியவற்றை அடியோடு சீர்குலையச் செய்துவிடும் என்பது உறுதி. எனவேதான் உயிரைக் கொடுத்தாவது அதனை எதிர்க்கவேண்டிய கட்டத்திற்கு வந்திருக்கிறோம்.

கழகத் தோழர்களே! கழக ஆதரவாளர்களே! தமிழ்ப் பற்றுக்கொண்ட தமிழ்ப் பெருங்குடி மக்களே! சிங்கமென வீறிட்டு எழுங்கள்! சிறுத்தையெனப் பகைப்புலம் நோக்கிப்

பாயுங்கள்! ஆங்காங்கு அறப்போர்ப் பாசறை அமையுங்கள்! அறப்போர் வீரர்களின் அணிவகுப்புக்களை நாடெங்கணும் நடத்துங்கள்! வெற்றி நமதே என்று போர்முழக்கம் எழுப்புங்கள்! எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கெடுத்து முழங்குவோம்! வாரீர்! வாரீர்! அறப்போர்க் களம் நோக்கி அணிதிரண்டு வாரீர்!''

## அரசமைப்புச் சட்ட ஆட்சி மொழிப்பிரிவு எரிப்புப் போராட்டம்

சென்னை இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாட்டில் செய்த முடிவுக்கு இணங்க, அறிஞர் அண்ணா அவர்களும், அவரோடு சேர்ந்து பார்த்தசாரதி, பொன்னுவேலு, வெங்கா, சுந்தரம் ஆகியோரும் 17.11.63 அன்று சென்னைக் கடற்கரையில், அரசமைப்புச் சட்டத்தின் ஆட்சி மொழிப் பிரிவுக்குத் தீயிட்டுக் கொளுத்துவதாக விளம்பரம் செய்யப் பட்டது. ஆனால் போராட்டம் நடைபெறுவதற்கு முன்பே, 15.11.63 அன்று, அறிஞர் அண்ணா அவர்களும் ஏனையோரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப் பட்டார்கள். அவர்கள் அனைவர்க்கும் ஆறுமாத கடுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

1.6.64 அன்று கோவையில், நானும், இராசமாணிக்கம், ஜானகி ராமன், கோபால், இராசு. மெய்யப்பன் ஆகியோரும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மறியல் செய்து, சட்டப் பிரிவைத் தீயிட்டுக்கொளுத்த முயன்றபோது, கைது செய்யப்பட்டோம். எங்களுக்கு ஆறு திங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, கோவை மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டோம்.

இந்தித் திணிப்பை எதிர்த்து மறியல் செய்ததற்காகவும், சட்டப்பிரிவை எரிக்க முயன்றதற்காகவும் கழகத்தின்

முக்கியத் தலைவர்களும், பொறுப்பாளர்களும், செயல் வீரர்களும் நாட்டில் பல இடங்களில் கைது செய்யப்பட்டு, மூன்று திங்களிலிருந்து இரண்டு ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுத் தமிழகத்தின் பல்வேறு சிறைச் சாலைகளிலும் அடைக்கப்பட்டார்கள். அப்படிச் சுமார் 12000 பேர்கள் பல்வேறு சிறைச்சாலை களிலும் அடைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில், கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன், மதியழகன், நடராசன், ஆசைத்தம்பி, கோவிந்தசாமி, மதுரை முத்து, சி.வி.எம். அண்ணாமலை, கே.டி.எஸ்.மணி, மா.பொ.வேதாசலம், செழியன், அன்பில் தருமலிங்கம், அழகமுத்து, எம்.எஸ். மணி, இரா. சாம்பசிவம், தில்லை வில்லாளன், இளம்வழுதி, வி.வி. சாமிநாதன், எம். சண்முகம், என். இராசாங்கம், எம்.செல்வராசு, பொன் சொக்கலிங்கம், இளமுருகு பொற்செல்வி, எம்.எஸ் சிவசாமி, இரத்தினவேல் பாண்டியன், கோவை இராமநாதன், காட்டூர் கோபால், மனோகரன், எம்.கண்ணு, மன்னைநாராயணசாமி, கிட்டப்பா, எஸ். நடராசன், கோ.சி. மணி, கு. அடைக்கலம், ஜி.பி. சோமசுந்தரம், ஈ.ஆர். கிருட்டிணன், இராசாராம், எஸ்.ஏ. அன்புக்கரசு, வேலம்மையார், தென்னரசு பில்லப்பன், மாதவன், எம்.எஸ். இராமசாமி, அமுதன், வி.டி. அண்ணாமலை, பி.எஸ் சந்தானம், இரா. தருமலிங்கம், அரூர் முத்து, சத்தியவாணிமுத்து, ப.உ. சண்முகம், எஸ். முருகையன், காஞ்சி மணிமொழியார், புலவர் கோவிந்தன், செ. கோ. விசுவநாதன், போளூர் சுப்பிரமணியம், ஏ.பி. சனார்த்தனம், தி.திராவிட மணி, எஸ்.ஜே. உசேன், கி. சோழன், சம்பங்கி இராமையா,

நீலநாராயணன், வி. முனிசாமி, அ.செல்வராசு, சிட்டிபாபு, அ.பொ. அரசு, சடகோபன் போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவார்கள்.

இந்தித் திணிப்பு எதிர்ப்பு அறப்போராட்டங்கள், தமிழ கத்தின் எல்லாப்பகுதிகளிலும், 1963 நவம்பர் தொடங்கி, 1965 மார்ச்சு வரையில் தொடர்ந்து நடைபெற்றுவந்தன.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் மறைவு

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள், இருபதாம் நூற் றாண்டின் ஈடும் எடுப்பும் அற்ற ஒரு பெருங்கவிஞராகத் திகழ்ந்தவர் ஆவார். அவர் தமிழகப் பெருங்குடி மக்களுக்குப் புரட்சி நெறியைப் புகட்டிப் புதுமை வாழ்வைப் பயந்தவர்.

அவர் வீழ்ச்சியுற்றுக் கிடந்த தமிழகத்திற்கு எழுச்சி ஊட்டியவர்; நலங்குன்றிக்கிடந்த தமிழுக்கு ஏற்றமும், எழிலும் தந்தவர்; நலிவுற்றுக்கிடந்த தமிழர்க்கு நல்வாழ்வு காட்டியவர்.

புரட்சிக்கவிஞர், கவிதைகள் மூலம் புரட்சிகரமான எண்ணங்களையும், புரட்சிகரமான போக்குகளையும், தமிழ் மக்களிடையே உருவாக்கியவர். அவர் தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் முழுக்க முழுக்க வெற்றி பெறுவதற்கு அரும்பாடு பட்டவர். அவர் தமிழுக்கும், தமிழிசைக்கும், தமிழ் நாட்டியத்திற்கும், தமிழ் நாடகத்திற்கும் உயிர் ஓட்டம் பயந்தவர். அவர் அரண்மனைகளிலே மட்டும் தவழ்ந்து கொண்டிருந்த அழகுத் தமிழை, ஆலமரத்தடிக்குக் கொண்டு வந்தவர்.

அவர் ''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும், மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!'' என்று வாழ்நாளெல்லாம் முழங்கி வந்தவர். ''தமிழுக்கும் அமுதென்றுபேர்! - அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!'' என்று கூறிவந்தவர்.



1950 – மதுரை மாவட்டம் அய்யம்பாளையத்தில் கழகப் பேச்சாளர்கள் பயிற்சி வகுப்பு



1956 – திருச்சி தி.மு.க. மாநில மாநாடு – மாநாட்டுத்தலைவர் நாவலரை ஊர்வலமாக அழைத்து வருதல்



1956 – திருச்சி தி.மு.க. மாநில மாநாடு
தம்பியைத் தலைமை ஏற்க அழைக்கிறார் அண்ணன்



1956 – உடுமலையில் தேர்தல் ஆய்வுக்குழுவினர்
நாவலர், என்.வி.நடராசன், சம்பத், மதியழகன்



கன்னியாகுமரி – கடலில் குளியல்
மதியழகன், கண்ணதாசன், ஆவுடையப்பன், யதார்த்தம் பொன்னுச்சாமி
என்.எஸ்.கிருஷ்ணன், என்.வி.நடராசன் ஆகியோருடன் நாவலர்



1963 – கோவையில் இந்தி எதிர்ப்பு மறியல் – முதல் அணியில்
நாவலருடன் கலந்து கொண்ட தோழர்கள்
இராசமாணிக்கம், கோபால் உடன் உள்ளனர்



1965 – இந்தித்திணிப்பு எதிர்ப்புப்போராட்டம்
சிறை சென்ற நாவலர் விடுதலையாகி மதுரை
மத்திய சிறையிலிருந்து வெளிவருதல்



1966 – பினாங்கு நகர ஸ்டேடியத்தில் நாவலர் உரையாற்றுதல்



1966 – சென்னை சேப்பாக்கம் பொதுக்கூட்டம் – நாவலர் இலண்டனிலிருந்து தாம் கொண்டுவந்த வீரர் சிலைகளை எம்.ஜி.ஆர்க்கு அளித்து உரையாற்றுகிறார்



6-3-1967 – அறிஞர் அண்ணா அமைச்சரவையில் நாவலர் அமைச்சராகப் பதவி ஏற்றல்

1944லிருந்து 1964 வரையில் அவரோடு நெருங்கிப் பழகி, அவரது கவிதைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவன் நான். 1964ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அவர் நோய் வாய்ப்பட்டு அரசு பெரிய மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார் என்பதைக் கேள்வியுற்று, நான் மருத்துவமனைக்குச் சென்று உடல் நலம் பற்றிக் கேட்டறிந்தேன். நெஞ்சு வலியின் காரணமாக அவர் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார். மருத்துவ சிகிச்சைகள் பலனளிக்காமல்போகவே, அவர் 1964 ஏப்ரல் 21ஆம் நாள் இயற்கை எய்தினார்.

புரட்சிக்கவிஞர் மறைவுற்றார் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட உடனே, மிகவும் அதிர்ச்சி அடைந்த நான் மருத்துவமனைக்குச் சென்று, அவரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினேன்.

அவரது உடல் நல்லடக்கம் செய்யப்படப் புதுவைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அவரது இறுதிஊர்வலத்திலும், நல்லடக்க நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ள, நானும், கலைஞர் கருணாநிதி அவர்களும் புதுவைக்குச் சென்றோம்.

அவரது இறுதி ஊர்வலத்தில் எல்லா அரசியல் கட்சி களைச் சார்ந்தவர்களும், தமிழறிஞர்களும், கவிஞர்களும், பொதுமக்களும் ஏராளமானவர்கள் கலந்துகொண்டார்கள்.

அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட இடுகாட்டில், அவரது மறைவு குறித்து இரங்கற்கூட்டம் ஒன்று நடை பெற்றது. அதில் நான், கலைஞர், ம.பொ.சி., ஔவை சண்முகம், கவிஞர் கண்ணதாசன், குபேர் போன்ற பலரும் கலந்துகொண்டு இரங்கலுரை ஆற்றினோம்.

பின்னர் அவர் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நினைவு மண்டபம் ஒன்று எழுப்பப்பட்டது. பிற்காலத்தில்,

சென்னையிலும், புதுவையிலும் அவரது முழுஉருவச் சிலைகள் நிறுவப்பட்டன.

## தி.மு.கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம்

இந்தி மொழியை இந்தியாவின் ஒரே ஆட்சி மொழியாக ஆக்கும் மத்திய அரசின் போக்கை எதிர்த்துப் போராட்டத் திட்டம் வகுப்பதற்கு என்று, 1965 சனவரி 8ஆம் நாள், தி.மு.கழகத் தலைமைச் செயற்குழுக்கூட்டம், கழகத் தலைமை நிலையமான அறிவகத்தில் கூட்டப்பெற்றது.

கூட்டத்திற்குக் கழக அவைத்தலைவர் என்ற முறையில், நான் தலைமை தாங்கினேன். கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா, தலைமைக் கழக நிருவாகிகள், செயற் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

1965 சனவரி 26ஆம் நாளன்று, இந்தியானது இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்கப்பட இருந்தது குறித்துக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுப் பின்னர் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(அ) 1965 சனவரி 26ஆம் நாளாகிய குடியரசு நாளின் முக்கியத்துவத்தைத் தி.மு.கழகம் நன்கு உணர்ந்திருந்தபோதிலும், தென்னக மக்களின் விருப்பத்தையும், நலன்களையும் சீரழிக்கக் கூடிய விதத்தில், அந்த நாளை, இந்தித் திணிப்பு நாளாக இந்தியப் பேரரசினர் மேற்கொண்டி ருப்பதாலும், அந்த நாளில் இந்தித் திணிப்பு எதிர்ப்பு உணர்ச்சியை வெளிப்படுத்தாவிட் டால், தென்னகம் இந்தியை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டுவிட்டது என்று, இந்திய அரசின ரால் திரித்துக்கூறப்படும் என்பதை உணர்வ

தாலும், அந்த நாளில் தென்னக மக்களின் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியையும், மனக்கொதிப்பையும் காட்டுவதன் அறிகுறியாக, 1965 சனவரி 26ஆம் நாளைத் துக்க நாளாகக் கொள்வது என்றும்,

(ஆ) அன்று எல்லா ஊர்களிலும் கண்டனக் கூட்டங்களை நடத்துவது என்றும்,

(இ) துக்க நாளின் அறிகுறியாக அன்று எங்கணும் கறுப்புக் கொடியை ஏற்றி வைப்பது என்றும், கறுப்புச் சின்னம் அணிந்துகொள்வது என்றும், இச்செயற்குழுக் கூட்டம் முடிவு செய்கிறது''

பொதுமக்களுக்குத் தெளிவு பயப்பதற்காக, அறிக்கை ஒன்று உருவாக்கப்பட்டு, வெளியிடப்பட்டது. அதில், இந்தி மொழியை இந்தியாவின் ஒரே ஆட்சி மொழியாக ஆக்குவது என்பது, இந்தி மொழியின் ஏகபோக ஆதிக்கத்தை ஏற்படுத்தும்; அரசியல் அநீதியை விளைவிக்கும்; இந்தி பேசும் மாநிலங்களின் ஏகாதிபத்தியத்தை உருவாக்கும்; தென்னகத்தை மிகுந்த தாழ்நிலைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும்; தென்னக மொழிகளுக்கு இழிவையும், அழிவையும் உண்டாக்கும்; நிருவாகச் சீர்குலைவை ஏற்படுத்தும் என்பன போன்ற கருத்துக்கள் தெளிவுபடுத்தப்பட்டிருந்தன.

அந்த அறிக்கை, கழகத்தின் முக்கியத் தலைவர்களின் கூட்டறிக்கையாக வெளியிடப்பட்டது. அதில், அறிஞர் அண்ணா, நான், கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன், மதியழகன், சிற்றரசு, நடராசன், செழியன், சத்தியவாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, டி.கே. சீனிவாசன், ப.உ. சண்முகம், சி.வி.எம். அண்ணாமலை, தில்லை வில்லாளன், தருமலிங்கம், இராசாராம், காஞ்சி மணிமொழியார், அரங்கண்ணல், நீலநாராயணன்,

ப. நாராயணசாமி, அன்பில் தருமலிங்கம், எஸ். முத்து, எம்.எஸ். சிவசாமி போன்றோர் கையொப்பமிட்டிருந்தோம்.

## திருச்சி இந்தி எதிர்ப்பு மாநாடு

*1965 சனவரி 17ஆம் நாள், திருச்சி தேவர் மன்றத்தில், மாபெரும் இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு ஒன்று கூட்டப்பெற்றது.*

*முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகையில், இந்தி வெறியர்களின் ஆதிக்க அதிகாரத்தின் மூலம், வலுக்கட்டாயமாக இந்தி மொழி திணிக்கப்படுவதன் மூலம் தமிழ் வளர்ச்சியும், தமிழர் மேம்பாடும், தமிழ்நாட்டின் உரிமையும் எப்படி யெல்லாம் கெடும் என்பதற்கான காரண காரியங்களை விளக்கிப்பேசினார்.*

*மாநாட்டைத் தொடங்கி வைத்து மூதறிஞர் இராஜாஜி பேசும்போது,* "உண்மையைச் சொல்லுகிறேன், என்னுடைய உள்ளத்திலேகூட இப்போது பிரிவினை உணர்வு தோன்றிவிட்டது. பிரிவினை கூடாது என்று மத்திய அரசினர் முன்பு சட்டம் செய்தனர். இப்போது பிரிவினை மனப்பான்மையை உண்டாக்குவதற்குச் சட்டம் செய்துள் ளார்கள். அரசமைப்புச் சட்டத்தின் 17ஆவது பிரிவு, இந்தியை ஆட்சிமொழி ஆக்குவதற்கு வழி செய்கிறது. அந்த 17ஆவது பிரிவைத் தூக்கிக் கடலில் போடுங்கள்!" என்று *கூறினார்.*

*மாநாட்டில் தலைமையுரை ஆற்றிய பி.டி.இராசன் அவர்கள்,* "மக்களின் விருப்பத்தை அறிந்து நடப்பதே ஆட்சியாளரின் கடமை. படித்தவர்கள், அறிஞர்கள், பெரும் பான்மை மக்கள் இந்தி மொழி திணிக்கப்படுவதைக் கடுமையாக எதிர்க்கிறார்கள். இந்திமொழியை ஆட்சிமொழி ஆக்குவதை விடுத்து, ஆங்கிலத்தையே தொடர்ந்து ஆட்சி மொழியாகக்

கொள்வதுதான், அறிவுடைமையான செயல் ஆகும். இந்தி மொழியைக் கட்டாயமாகத் திணிப்போர் அறிவுடையோர் ஆகமாட்டார்கள்'' என்று பேசினார்.

*மாநாட்டில் சொற்பொழிவாற்றிய ஜி.டி. நாயுடு அவர்கள்* ''அரசியல் சட்டத்தைக் காட்டி இந்தியைத் திணிப்பதைத் தமிழ் மக்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள். அடக்குமுறைகளுக்குத் தமிழர்கள் அஞ்சப் போவதில்லை. இந்தியைத் திணிப்பதன்மூலம் தமிழ்நாடே சிறைச் சாலையாக மாறும் என்பது உறுதி'' *என்று குறிப்பிட்டார்.*

*மாநாட்டில் நான் கலந்துகொண்டு, சிறப்புரை ஆற்றினேன். அப்போது நான் குறிப்பிட்ட கருத்துக்களில் சில வருமாறு :*

> ''இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படியும், இந்தியப் பேரரசினர் வெளியிட்டுள்ள அறிக்கையின்படியும், 1965 சனவரி 26ஆம் நாள் முதல், இந்தி மொழியே இந்தியாவின் முழு முதல் ஆட்சி மொழியாகும் என்று பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. தேவைப்படும் காலம் வரையில் மட்டும், ஆங்கில மொழியைப் பயன்படுத்திக்கொள்ள, சிறிது சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.
>
> இந்தி பேசாத மாநிலங்களின் மக்கள் விரும்புகிற காலம் வரையிலும், ஆங்கில மொழி ஆட்சிமொழியாக நீடிக்கும் என்றும், ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்து வருவதை அகற்றும் அதிகாரம், இந்தி பேசுகின்ற மாநில மக்களுக்கு அறவே இல்லை என்றும், அந்த அதிகாரம் இந்தி பேசாத மாநிலங்களின் மக்களிடந்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்றும், பிரதமராக இருந்த பண்டித நேரு வாக்குறுதி அளித்தார். அந்த வாக்குறுதியைப் புறக்கணித்து விட்டு இந்தி வெறிபிடித்த மத்திய அரசினர், இப்பொழுது இந்தி

மொழிக்கு மட்டும் பட்டஞ்சூட்டத் தலைப்பட்டிருக் கிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தமிழ் மொழியானது, மாநில ஆட்சிமொழியாகவும், பயிற்றுமொழியாகவும் இருந்து வரவேண்டும். பிற மாநிலங்களோடும், பிற நாடுகளோடும் அரசியல் - வாணிகம் - சமுதாயவியல் - கலையியல் - அறிவியல் - தொழில் நுட்பவியல் போன்றவற்றில் தொடர்பு கொள்ளுவதற்கு இப்பொழுது பொது மொழியாக இருந்து வரும் ஆங்கில மொழியே தொடர்ந்து இருந்து வரவேண்டும்.

இந்திய தேசிய மொழிகள் அனைத்தும் இந்தியாவின் ஆட்சிமொழிகள் என்ற தகுதியைப் பெறும் காலம் வரையில், இந்தியாவின் பொது மொழியாகவும், ஆட்சி மொழியாகவும், தொடர்பு மொழியாகவும் ஆங்கிலமே நீடித்து வர வேண்டும். அந்த வகையில் இந்திய அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், தமிழ்-தாய்மொழி யாகவும், ஆங்கிலம் துணைமொழியாகவும் பயன்பட்டு வரவேண்டும். இந்திமொழி எந்த ஒருவகையிலும் தமிழர்க்குத் தேவைப்படாத ஒரு மொழியாகும். தமிழ் - ஆங்கிலம் இரண்டு மொழிகள் மட்டுமே தமிழர்கள் வாழ - வளர - மேம்பாடு எய்தப் போதுமானவையாகும். இந்தி மொழி எந்த ஒரு இடத்திலும், எந்த ஒரு துறையிலும் ஆக்கமும், ஆதிக்கமும் பெற இடந்தரலாகாது. எந்த வகையில் இந்தி திணிக்கப்பட்டாலும், அதை முழுமூச்சோடு நாம் எதிர்ப்போம்! எத்தனை போராட்டங்களை வேண்டு மானாலும் சந்திக்க நாம் தயாராக இருக்கிறோம்! எத்தனை ஆண்டுகள் சிறைத்தண்டனை கிடைத்தாலும், எத்தனை உயிர்கள் பலியாவதாக இருந்தாலும் நாம் அவற்றைப்பற்றி யெல்லாம் கவலைப்படப்போவதில்லை!

தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம் - உயிர்த்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை
மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!"

மற்றும் தமிழர் தலைவர்கள் பலர் மாநாட்டில் சிறப்புரை ஆற்றினர்.

## இந்தித் திணிப்பை எதிர்த்துத் துக்க நாள்

தி.மு.கழகத்தின் பொதுக்குழுத் தீர்மானத்திற்கு இணங்க, 1965 சனவரி 26ஆம் நாளை - இந்தியை ஆட்சி மொழியாக ஆக்கும் குடி.யரசு நாளைத் துக்க நாளாகக் கடைப்பிடிப்பதற் கான முயற்சிகளில், தி.மு.கழகத் தோழர்கள் மிகத்தீவிரமாக ஈடுபட்டனர்.

தி.மு.கழகம், சனவரி 26ஆம் நாளைத் துக்க நாளாகக் கடைப்பிடிக்கவேண்டும் என்றும், அன்று எல்லோரும் கறுப்புச் சின்னம் அணிந்து, எங்குப் பார்த்தாலும் கறுப்புக் கொடி ஏற்றவேண்டும் என்றும் வெளியிட்ட அறிக்கை, மாணவர்களிடையே பெருத்த எழுச்சியை ஏற்படுத்தியது.

மாணவர்கள் சனவரி 25ஆம் நாளன்றே துக்கநாள் கடைப்பிடிக்க முன்வந்தனர். மாணவர்கள் கறுப்புச் சின்னம் அணிந்து ஆங்காங்குள்ள கல்லூரிகளுக்கு வந்தனர். ஆனால் வகுப்புகளைப் புறக்கணித்து, ஆர்ப்பாட்டத்திலும், மறியல் கிளர்ச்சிகளிலும், இரயில்-பேருந்து மறியல்களிலும் மிகத் தீவிரமாக ஈடுபட்டனர். பல இடங்களிலும் துப்பாக்கிச் சூடுகள், தடியடித்தாக்குதல்கள் காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டன. ஆயிரக்கணக்கான மாணவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். தமிழகத்திலுள்ள எல்லாப் பெருநகரங்கள், சிறு நகரங்கள் ஆகியவற்றிலெல்லாம் மாணவர்களின் கிளர்ச்சிகள் கட்டுக் கடங்காமல் தலைதூக்கி நின்றன.

25.1.65 அன்றே நாடெங்கணும் கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டன. கழகத்தோழர்களின் வீடுகள்தோறும் கறுப்புக்கொடிகள் ஏற்றப்பட்டன.

காவல்துறையினரின் அடக்குமுறை நடவடிக்கைகள் எல்லா இடங்களிலும் தலைவிரித்து ஆடின. அறிஞர் அண்ணா, நான், கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன், மதியழகன், சிற்றரசு, நடராசன், கோவிந்தசாமி, செழியன், சத்திய வாணிமுத்து, கே.ஆர். இராமசாமி, காஞ்சிமணிமொழியார், சனார்த்தனம், அரங்கண்ணல், இராசாராம், எஸ்.எஸ். இராசேந்திரன், அன்பில் தருமலிங்கம், து.ப. அழகமுத்து, டி.வி. நாராயணசாமி, நீலநாராயணன், அ.பொ. அரசு, சி.வி. இராசகோபால், வி. முனிசாமி, பி.எஸ். மணியம், காவேரி மணியம், கே.பி. சுந்தரம், இளம்வழுதி, தில்லைவில்லாளன், வி.வி. சாமி-நாதன், ஈ.ஆர். கிருட்டிணன், எஸ். முருகையன், ப.உ. சண்முகம், மா.பா. சாரதி, எஸ்.வி. லிங்கம், கோவை இராசமாணிக்கம், புலவர் கோவிந்தன், உடுமலை நாராயணன், சா. கணேசன் மற்றும் பல்லாயிரக்கணக்கான கழகப் பொறுப்பாளர்கள் நாடெங்கணும் கைது செய்யப் பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டோம்.

சனவரி 26ஆம் நாள் குடியரசு விழாவானது தடியடி, கண்ணீர்ப்புகை வீச்சு, துப்பாக்கிச்சூடு, கைது போன்ற வகையில் அடக்குமுறை விழாவாகக் காட்சி அளித்ததே அல்லாமல், மகிழ்ச்சிக்குரிய விழாவாக அமையவில்லை. கழகத் தோழர்களின் வீடுகளில் பறக்கவிடப் பட்டிருந்த கறுப்புக்கொடிகள், காவல் துறையினரால் கழற்றப்பட்டன. கழகக் கட்டடங்கள் பலவும் ஆங்காங்குத் தாக்கப்பட்டன.

கிளர்ச்சிகளில் மாணவர்கள், கழகத்தோழர்கள், பொது மக்கள் ஏராளமாக எல்லா இடங்களிலும் கலந்துகொண்ட தால், சில இடங்களில், துப்பாக்கிச்சூடு, தடியடி, கண்ணீர்ப் புகை, கைது காரணமாகப் பொதுமக்களின் கூட்டம் கட்டுக்கடங்காமல் போகவே, வன்முறைச் செயல்கள் தலைதூக்கி, இரயில்கள் - பேருந்துகள் - சீருந்துகள் - அரசு அலுவலகங்கள் போன்றவை தீக்கு இரையாக்கப் பட்டன.

இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கிளர்ச்சிகள், 25.1.65 இல் தொடங்கி இரண்டு திங்கள்கள் வரை தொடர்ந்து எங்குப் பார்த்தாலும் நடைபெற்றுக்கொண்டே இருந்தன.

இந்தித் திணிப்பை எதிர்த்துச் சிலர் தீக்குளித்து இறந்தனர். அப்படித் தீக்குளித்தவர்கள் வருமாறு :

1. திருச்சி கீழப்பழுவூர் சின்னச்சாமி, 2. சென்னை விருகம்பாக்கம் சிவலிங்கம், 3. சென்னை திருவல்லிக்கேணி அரங்கநாதன், 4. திருச்சி அய்யம்பாளையம் வீரப்பன், 5. கோவை சத்தியமங்கலம் முத்து, 6. மயிலாடுதுறை சாரங்கபாணி, 7. விராலிமலை சண்முகம், 8. கீரனூர் முத்து, 9. சிவகங்கை இராசேந்திரன், 10. பீளமேடு தண்டபாணி ஆகியோர் ஆவர்.

1965 இந்தித்திணிப்பு எதிர்ப்புக் கிளர்ச்சிகளின்போது, சிறையில் அடைக்கப்பட்டவர்கள் மட்டும் சுமார் 16,500 பேர்கள் ஆவார்கள். துப்பாக்கிச் சூடுகளுக்குப் பலியான வர்கள் 184 பேர்கள்; அவர்களில் மாணவர்கள் மட்டும் 43 பேர்கள்; படுகாயமுற்றவர்கள் 681 பேர்கள் ஆவர்.

மூன்று திங்கள் கழித்துத்தான், அறிஞர் அண்ணாவும், நானும், பிற தோழர்களும் சிறையிலிருந்து விடுவிக்கப் பட்டோம்.

1965 ஆம் ஆண்டு மிகப்பெரிய அளவில் நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கிளர்ச்சிதான், தி.மு.கழகத்திற்கு பெருத்த அளவில் பொதுமக்களின் அன்பையும், ஆதரவையும், நம்பிக்கையையும், நன்மதிப்பையும் திரட்டித் தந்தது. அதன் விளைவுதான், 1967இல், தி.மு.கழகம் பொதுமக்களின் நல்லாதரவைப்பெற்றுத் தமிழக ஆட்சியைக் கைப்பற்றியது ஆகும். அறிஞர் அண்ணா முதலமைச்சர் பொறுப்பை ஏற்கவும், என்னைப்போன்ற நண்பர்கள் எட்டுப் பேர்கள் அமைச்சர் பொறுப்புக்களை ஏற்கவுமான நிலைமை ஏற்பட்டது.

1938 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டுப் பல்வேறு கட்டங்களில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளும், அவற்றை ஒட்டித் தோன்றிய தனித்தமிழ் இயக்கமும், அதன் காரணமாக ஏற்பட்ட தமிழ் மலர்ச்சி இயக்கமும், தி.மு. கழகம் சிறப்பாகவும், செம்மையாகவும் வளர்ந்தோங்கு வதற்குப் பெரிதும் உறுதுணையாக இருந்துவந்தன என்று கூறலாம்.

## அயல் நாடுகளில் அறிஞர் அண்ணாவின் சுற்றுப்பயணம்

கிழக்கு ஆசிய நாடுகளான சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, ஆங்காங், சப்பான் போன்ற நாடுகளில் வாழ்ந்துவந்த தமிழர்களும், இயக்க நண்பர்களும் அறிஞர் அண்ணா அவர்களைத் தாம் வாழும் நாடுகளுக்கு வருகை தரவேண்டும் என்று பெரிதும் விரும்பி, அழைப்பு விடுத்திருந்தனர்.

அவர்களின் விருப்பத்திற்கு இணங்க, அறிஞர் அண்ணா அவர்கள் அந்த நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்வது நலம் பயக்கும் என்ற கருத்தை நானும், கலைஞர் கருணாநிதியும் அறிஞர் அண்ணாவிடம் வலியுறுத் தினோம்.

*1965ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில், அந்த அயல்நாடு களில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள அறிஞர் அண்ணா அவர்கள் இசைந்தார்கள். அறிஞர் அண்ணாவுடன் செழியனும் சென்றார். நானும், கலைஞரும் பிற கழக முன்னணியினரும் அவர்களை வழியனுப்பிவைத்தோம்.*

*குறிப்பிட்ட அந்தக் கிழக்கு ஆசிய நாடுகளில், அறிஞர் அண்ணா அவர்களுக்கு மாபெரும் வரவேற்புகள் மிக உற்சாகத்தோடு அளிக்கப்பட்டன. அயல் நாடுகளில் வாழ்ந்த தமிழர்கள் ஏற்பாடு செய்திருந்த பல்வேறு விருந்து விழாக்களிலும், வரவேற்பு நிகழ்ச்சிகளிலும், சிறப்புக் கூட்டங்களிலும் அறிஞர் அண்ணா கலந்துகொண்டு, அவர்களெல்லாம் மகிழும் வண்ணம் சீரிய உரைகள் ஆற்றினார்.*

*அறிஞர் அண்ணா அவர்களும், செழியனும் 21.8.65இல் திரும்பி வந்தபோது, நானும் மற்றக் கழக முன்னணியினரும், செயல்வீரர்களும் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மாபெரும் வரவேற்புக் கொடுத்தோம்.*

*பின்னர் அவர் ஊர்வலமாக அழைத்து வரப்பெற்றார். கடற்கரையில், மாபெரும் வரவேற்பு நிகழ்ச்சி என்னுடைய தலைமையில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. அறிஞர் அண்ணா அவர்கள் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துச் சுற்றுப் பயணத்தில் தாம் கண்டதும், கேட்டதும் பற்றிய பல விவரங்களைச் சுவைபட எடுத்துக்கூறினார்.*

## கே.கே. நீலமேகம் மறைவு

*திராவிட இயக்கத்தின் மாபெரும் வீரரும், தி.மு.கழகத் தின் முன்னணித்தலைவர்களில் ஒருவருமான குடந்தைப் பெரியவர் கே.கே. நீலமேகம் அவர்கள், 17.12.65-இல்*

இயற்கை எய்தினார் என்ற செய்தியைக் கேள்வியுற்றதும், அறிஞர் அண்ணாவும், நானும் குடந்தைக்குச் சென்றோம். தஞ்சை மாவட்டத்திலிருந்தும், அதனைச் சுற்றியுள்ள பிற மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான கழகத் தோழர்கள் இறுதி அஞ்சலி செலுத்த, குடந்தை நகர் வந்து சேர்ந்தனர்.

தஞ்சை மாவட்டத்தில், நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக்கழகம் போன்றவை வேரூன்றவும், வளரவும், செழித்தோங்கி நிற்கவும் அரும்பாடுபட்டவர் குடந்தை கே.கே. நீலமேகம் ஆவார்.

அவரது தன்னலமற்ற தூய தொண்டினைப் பாராட்டித் தி.மு.கழக மாநில மாநாட்டில், அறிஞர் அண்ணா அவர்கள் கேடயம் வழங்கி, அவரை மிகவும் பாராட்டினார்.

அவர் திராவிட இயக்கத்தின் சார்பாக நடைபெற்ற பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டுப் பல தடவைகள் சிறைத்தண்டனை பெற்றவராவார்.

அவரது இறுதி ஊர்வலத்தில் அறிஞர் அண்ணாவும், நானும், பிற கழகத் தலைவர்களும் கலந்துகொண்டது மட்டுமல்லாமல், சுடுகாட்டில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்திலும் கலந்துகொண்டு இரங்கலுரையும் ஆற்றினோம்.

### மேலை நாடுகளில் சுற்றுப்பயணம்

1966ஆம் ஆண்டு ஆகஸ்டு - செப்டம்பர்த் திங்கள்களில், இலண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொள்ள, நான் தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாகச் சென்றேன்.

காமன்வெல்த் நாடுகளிலிருந்து சுமார் 120க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வந்து மாநாட்டில் கலந்துகொண்டார்கள். மாநாடு இங்கிலாந்து நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

மாநாடு ஏழு நாட்கள், காலையிலும் மாலையிலும் நடைபெற்றது. காமன்வெல்த் நாடுகளிடையே நிலவ வேண்டிய நட்புறவு, நாடாளுமன்றங்களின் சனநாயக நடைமுறைகள், நாடாளுமன்றங்களின் உரிமைகள், நாடாளு மன்றம் நீதித்துறை நிருவாகத்துறை ஆகியவற்றி னிடையே இருக்கவேண்டிய உறவுமுறைகள், சனநாயகக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் பேணிக் காக்க வேண்டிய இன்றியமையாமை, நாடாளுமன்றத்திற்கான தேர்தல் முறைகள் போன்ற பல்வேறு பொருள்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

கிரேட் பிரிட்டனைச் சேர்ந்த கன்சர் வேடிவ் கட்சி, லேபர் கட்சி, லிபரல் கட்சி ஆகியவற்றின் முக்கியத் தலைவர்கள், அந்த அந்தக் கட்சிகளின் அமைப்புமுறை - கொள்கை - குறிக்கோள் - நடவடிக்கைகள் ஆகியவைபற்றி மாநாட்டில் விளக்கங்கள் தந்தனர்.

பிரிட்டிசு நாடாளுமன்ற நடவடிக்கைகளை, பார்வை யாளர் மாடத்திலிருந்து, நானும், மற்றப் பிரதிநிதிகளும் கூர்ந்து கவனித்தோம்.

நான் இலண்டனுக்குப் போயிருந்த அந்த நேரத்தில், பொதுத்தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. முக்கிய அரசியல் கட்சிகளின் தேர்தல் பொதுக்கூட்டங்கள், தேர்தல் பற்றிய விளம்பரமுறைகள், வேட்பாளர்கள் வாக்குகள் திரட்டும் பணி போன்றவற்றை நானும், ஏனையோரும் நேரில் சென்று பார்த்தோம்.

மாநாடு முடிந்தவுடன், பிரிட்டிசு நாடாளுமன்ற அதிகாரிகள் எங்களையெல்லாம், பத்து நாட்கள் சுற்றுலா இடங்களைக் காண அழைத்துச் சென்றனர். இலண்டன் மாநகர், இங்கிலாந்தின் சிற்றூர்ப் பகுதிகள், ஸ்காட்லாண்டு பகுதி, வேல்ஸ் பகுதி ஆகிய இடங்களில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிகுந்த கட்டடங்கள், கலையழகு மிக்க மாளிகைகள், இயற்கையழகு மிகுந்த இடங்கள், தொழில் வளர்ச்சி பெற்ற நகரங்கள், சிறப்புக்குரிய பல்கலைக் கழகங்கள் போன்ற வற்றைக் கண்டுகளித்தோம்.

நான் இலண்டனிலிருந்து தாயகத்திற்குத் திரும்பும் போது, பாரீசு - ஜெனிவா - பான் - பெர்லின் - டென்மார்க்-ஆலந்து - பெல்ஜியம் - உரோம் - கிரீசு - எகிப்து போன்ற மேலை நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டேன்.

மேலைநாடுகளின் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு, நான் பம்பாய் வழியாகச் சென்னை வந்து சேர்ந்தபோது, சென்னை விமானக்கூடத்தில் அறிஞர் அண்ணா, எம்.ஜி.ஆர்., தி.மு.கழக முன்னணித் தலைவர்கள், கழகத்தின் முக்கியப் பொறுப்பாளர்கள், கழகச் செயல் வீரர்கள் பலரும் திரண்டிருந்து என்னை மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்றுச் சிறப்பித்தார்கள்.

சென்னையில் என்னை வரவேற்றுப் பாராட்டும் வகை யில், தி.மு. கழகத்தின் தலைமை அமைப்பின் சார்பாக மாபெரும் வரவேற்புப் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப் பெற்றது. அதில் அறிஞர் அண்ணா அவர்களும், முக்கிய முன்னணித் தலைவர்களும் கலந்துகொண்டு, என்னைப் பெரிதும் பாராட்டி மகிழ்வித்தார்கள். இறுதியாக நான் ஏற்புரை வழங்கும்போது, மேலை நாடுகளில் நான் கண்டதும், கேட்டதும், உணர்ந்ததுமான வியப்புக்குரிய பலன்தரக்கூடிய செய்திகள் பலவற்றை விளக்கினேன்.

தமிழ்நாட்டின் பல பகுதிகளில், கழகத் தோழர்கள் என்னை வரவேற்றுப் பாராட்டுவதற்காக நிகழ்ச்சிகள் பலவற்றை ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சிகளிலெல்லாம் நான் கலந்துகொண்டு உரையாற்றிக் கழகத் தோழர்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தந்தேன்.

மேலை நாடுகளின் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு சென்னை வந்து சேர்ந்த நான், மூன்றுவார காலத்திற்குள், முதல் உலகத்தமிழ் மாநாட்டின் அழைப்பினை ஏற்றுக் கோலாலம்பூருக்குச் செல்ல வேண்டியவன் ஆனேன்.

## முதல் உலகத் தமிழ் மாநாடு

முதல் உலகத் தமிழ் மாநாடு, 1966ஆம் ஆண்டில், மலேசியா நாட்டின் தலைநகரான கோலாலம்பூரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு அப்பொழுது முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய நானும், நாற்பதிற்கு மேற்பட்ட தமிழறிஞர்களும் தமிழ்நாட்டுப் பேராளர்களாகச் சென்றோம்.

அந்த மாநாட்டில், தமிழ் நாட்டைச் சேர்ந்த முதல்வர் பக்தவத்சலம், நான், சர் பி.டி. இராசன், டாக்டர் வரதராசனார், அ.ச. ஞானசம்பந்தம், சிலம்புச்செல்வர் ம.பொ.சி., நடிகர் டி.கே. சண்முகம், டாக்டர் வி.ஐ. சுப்பிரமணியம், நெ.து. சுந்தரவடிவேலு, நீதிபதி மகராசன், துரை அரங்கனார், வழக்கறிஞர் சண்முக- சுப்பிரமணியம் போன்றோர் சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினோம்.

மாநாட்டின் நிகழ்ச்சிகள் ஐந்து நாட்கள் தொடர்ந்து நடைபெற்றன. மாநாட்டிற்கு உலகின் பல நாடுகளிலிருந்தும் தமிழறிஞர்கள் பலர் வந்து கலந்துகொண்டனர்.

மாநாடு முடிந்தவுடன் மலேசியத் திராவிடர் கழகம், சுயமரியாதைச் சங்கம், பகுத்தறிவாளர் கழகம், தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் சார்பாக மலேசியாவின் பல நகரங்களிலும் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்புப் பொதுக் கூட்டங்களில் நான் கலந்துகொண்டு உரையாற்றினேன்.

கோலாலம்பூரில் வாழும் தமிழ்ப் பெருங்குடிமக்களின் சார்பாகப் பல்வேறு அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து, மிகப் பெரிய பொது மண்டபம் ஒன்றில், எனக்குச் சிறப்பான வரவேற்பு நிகழ்ச்சி ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்ச்சியில் பெருந்திரளான தமிழர்கள் மிக்க எழுச்சி யோடு கூடியிருந்து மிக உற்சாகத்தோடு என்னை வரவேற்றனர். மலேசியா வாழ் தமிழர் தலைவர்களும், மலேசியா அமைச்சர்கள் டத்தோ சம்பந்தம், டத்தோ திருநாவுக்கரசு ஆகியோரும், தமிழ்முரசு ஆசிரியர் சாரங்கபாணி அவர்களும் எனக்குப் பாராட்டுத் தெரிவித்துச் சிறப்புரை ஆற்றினார்கள்.

நான் பாராட்டுரைகளுக்கும், வரவேற்புரைகளுக்கும் நன்றி தெரிவித்து, ஏற்புரை வழங்கினேன். அப்போது நான் பேசியவற்றின் சுருக்கம் வருமாறு :

> "தாய்த் தமிழகத்திலிருந்து கடல் கடந்து வந்து, மலேசியா மண்ணில் தமிழ்ப் பெருங்குடிமக்கள் ஒன்று திரண்டிருக்கும் ஒரு பெருங்காட்சியைக் காண்பதிலே நான் பூரிப்படை கிறேன்! பெருமைப்படுகிறேன்! பெருமிதங்கொள்கிறேன்!
>
> உங்களில் பலபேர்கள் பலப்பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மலேசியாவைத் தாயகமாக கொண்டு வாழ்ந்து வந்திருந்தபோதிலும், நீங்கள் தமிழை - தமிழார்வத்தை - தமிழ் இலக்கிய உணர்வை - தமிழ்ப் பண்பாட்டை - தமிழ்

நாகரிகத்தை - தமிழ்க் கலைகளை - தமிழ்ப் பழக்கவழக்கங் களை மறக்காமல், அவற்றையெல்லாம் போற்றிப் பாராட்டிக் கட்டிக் காப்பாற்றி வருகிறீர்கள் என்பதை அறியும்போது, நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நீங்கள் மலேசியாவின் அரசியல் - பொருளியல் - சமுதாயவியல் ஆகியவற்றிற்கு ஏற்ப வாழ்க்கையை நடத்தி வந்தாலும், தமிழ் மனப்பண்போடு வாழ்கிறீர்கள் என்பது எனக்குப் பெருமிதத்தை அளிக்கிறது.

நீங்கள் மிக்க அன்போடும், பண்போடும் எனக்கு அளித் திருக்கும் வரவேற்புகளும், பாராட்டுரைகளும், வாழ்த்துரை களும் தாய்த்தமிழகத்திற்கு அளிக்கப்பட்டவைகளாகும் என்றே நான் கருதுகிறேன்.

தமிழகத்திற்கும், மலேசியாவிற்கும் நீண்ட நெடுங் காலந்தொட்டே அரசியல் - வாணிகவியல் - போரியல் - கலையியல் போன்றவற்றில் தொடர்புகள் இருந்து வந்திருக்கின்றன.

சோழ மன்னர்களின் கப்பற்படை வீரர்கள், மலேசியாவின் பல பகுதிகளை வென்று, சோழ அரசின் ஆதிக்கத்தை நிலைநாட்டியிருக்கிறார்கள். முதலாம் இராசேந்திர சோழன் மலேசியாவின் கடாரம் என்ற பகுதியை வென்று ஆண்டிருக் கிறான். கடாரம் என்ற பகுதி இப்பொழுது 'கெடா மாநிலமாக'த் திகழ்கிறது. கெடாப் பகுதியில், சோழப் பேரரசு ஆண்டதன் தன்மைகளை, அங்குள்ள நினைவுச் சின்னங்கள் பல நினைவுபடுத்திக்கொண்டிருக்கின்றன.

மலேசியாவில் குடியுரிமை பெற்றுவாழும் தமிழர்கள் அனைவரும் தாங்கள் முதலில் மலேசியர், இரண்டாவது நிலையில் தமிழர் என்ற உணர்வோடுதான் வாழவேண்டும்.

உங்களுடைய நேரம் - நினைப்பு - உழைப்பு - ஊக்கம் - அறிவு - ஆற்றல் ஆகிய அனைத்தும் மலேசிய நாட்டின் மேம்பாட்டுக்கு உறுதுணையாகவே அமையவேண்டும்.

தமிழரின் சிறந்த பண்பாட்டுக் கொள்கையான 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!' என்பதைத்தான், இங்கு நடைபெற்ற முதல் உலகத் தமிழ் மாநாடு உலகத்தினர்க்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது. தமிழரின் பண்டைய நாகரிகமும், பண்பாடும் உலக மக்களுக்கு எடுத்துக்காட்டாகவும், வழிகாட்டுவனவாகவும் விளங்கும் தன்மையனவாகும்.

தமிழர் போற்றிவந்த அன்புடைமை, அறிவுடைமை, பண்புடைமை, அடக்கமுடைமை, அருளுடைமை, ஒப்புரவுடைமை, ஒழுக்கமுடைமை, ஆள்வினையுடைமை, பொறையுடைமை போன்றவற்றைக் கட்டிக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு தாய்த் தமிழகத்தினர்க்கும் உண்டு; உங்களுக்கும் உண்டு.

மலேசியாவிற்கு வேலை தேடிவந்த தமிழர்களில் மிகப் பெரும்பாலோர், தத்தம் குடும்பத்தினரைத் தாய்த்தமிழகத் திலேயே விட்டுவிட்டு வந்ததன் காரணமாகத் தமிழர்களின் எண்ணிக்கை இங்குப் பெருகாமல் போய்விட்டது. ஆனால், மலேசியாவில் குடியேறிய சீனர்கள் அனைவரும் தத்தம் குடும்பத்தினரோடு குடியேறியதன் காரணமாக அவர்களின் எண்ணிக்கை பன்மடங்கு பெருக வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. சீனர்களைப்போல, தமிழர்கள் அனைவரும் தத்தம் குடும்பத்தினரோடு, இங்குக் குடியேறியிருந்திருப்பார்களே யானால், இன்று மலேசியா நாடு, தமிழர்கள் ஆளும் ஒரு நாடாக ஆகியிருக்கும். அதே தன்மையில் சிங்கப்பூரும் தமிழர்கள் ஆளும் ஒரு நாடாக ஆகியிருக்கும்.

கோலாலம்பூர் வாழ் தமிழர்கள் சார்பாக எனக்குச் சிறப்பான வரவேற்பினை அளித்து, என்னைப் பெரிதும் போற்றிப் பாராட்டி இருப்பதற்காக என் உளங்கனிந்த நன்றியை உங்கள் அனைவர்க்கும் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் அனைவரும் வளம் பலபெற்று, நலம் பல எய்தி வாழ வேண்டும் என்ற என் வாழ்த்தை உவகைப் பெருக்கோடு தெரிவித்துக் கொள்கிறேன்!''

*நான் மலேசியாவின் பல்வேறு பகுதிகளில் பதினைந்து நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, முக்கியமான நகரங்களில் நடைபெற்ற சிறப்புக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றினேன்.*

*ஈப்போ, பினாங்கு, ஜோகூர், காம்பாங்க், கிள்ளாங், மலாக்கா, மூவார், செரம்பான், தைப்பிங் போன்ற நகரங்களில் நடைபெற்ற சிறப்பு வரவேற்புகளில் கலந்து கொண்டேன். இடையிடையே பல சுற்றுலா இடங்களையும் கண்டு களித்தேன்.*

*முதல் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி நான் மலேசியாவில் மேற்கொண்ட சுற்றுப்பயணம் பயன் தருவதாகவும், மகிழ்ச்சி ஊட்டுவதாகவும் அமைந்திருந்தது.*

### திருச்சி - தஞ்சை வட்டார தி.மு.கழக மாநாடு

*திருச்சி - தஞ்சை வட்டார தி.மு.கழக மாநாடு 1966 சூன் 11, 12 ஆகிய நாட்களில், திருச்சிப் பந்தயத் திடலில் நீலமேகம் பந்தலில், சின்னச்சாமி அரங்கில் நடைபெற்றது.*

*அன்பில் தருமலிங்கம் மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்தினார். மாநாட்டை சி.வி.எம். அண்ணாமலை தொடங்கி வைத்தார். மாநாட்டிற்குப் பேராசிரியர் அன்பழகன் தலைமை தாங்கினார்.*

மாநாட்டில் அறிஞர் அண்ணா, நான், கலைஞர் கருணாநிதி, மதுரை முத்து, சிற்றரசு, நடராசன் போன்றோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினோம்.

### மதுரை மாவட்ட தி.மு.கழக மாநாடு

மதுரை மாவட்ட தி.மு.கழக மாநாடு, 1966 அக்டோபர் 1, 2 ஆகிய நாட்களில், வத்தலக்குண்டில் நடைபெற்றது. மதுரை முத்து வரவேற்புரை ஆற்றினார். அழகமுத்து மாநாட்டைத் தொடங்கிவைத்தார். இரத்தினவேல் பாண்டியன் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். காஞ்சி மணிமொழியார் கண்காட்சியைத் திறந்துவைத்தார்.

மாநாட்டில் அறிஞர் அண்ணா, நான், கலைஞர், பேராசிரியர் அன்பழகன் மற்றும் கழக முன்னணித் தலைவர்கள் சிறப்புரை நிகழ்த்தினோம்.

### செங்கற்பட்டு மாவட்ட தி.மு.கழக மாநாடு

செங்கற்பட்டு மாவட்ட தி.மு.கழக மாநாடு, 1966 அக்டோபர் 15, 16 ஆகிய நாட்களில் செங்கற்பட்டில், அரங்கநாதன் பந்தலில், தேவராசன் அரங்கில் நடைபெற்றது.

மாயவரம் கிட்டப்பா கழகக் கொடியை ஏற்றி வைத்தார். புலவர் கோவிந்தன் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். கிருட்டிணமூர்த்தி மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

அறிஞர் அண்ணா, பேராசிரியர் அன்பழகன், மதியழகன் மாநாட்டில் 15.10.66 அன்று கலந்துகொண்டு உரையாற்றினார்கள். நானும், கலைஞர் கருணாநிதியும் 16.10.66 அன்று கலந்துகொண்டு உரை நிகழ்த்தினோம்.

## நெல்லை மாவட்ட தி.மு.கழக மாநாடு

நெல்லை மாவட்ட தி.மு.கழக மாநாடு, 1966 நவம்பர் 15,16 ஆகிய நாட்களில், பாளையங்கோட்டையில், கே.வி.கே. சாமி பந்தலில், தாளமுத்து அரங்கில் நடைபெற்றது.

எம்.எஸ். சிவசாமி வரவேற்புரை நிகழ்த்தினார். செ. மாதவன் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். மைனர் மோசசு மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.

மாநாட்டில் நானும், கலைஞர் கருணாநிதியும் 15.11.66 அன்று உரை ஆற்றினோம். அறிஞர் அண்ணா, நடராசன், மதியழகன் ஆகியோரும், பிற கழக முன்னணி யினரும் 16.11.66 அன்று உரை நிகழ்த்தினார்கள்.

## சேலம் - தருமபுரி மாவட்ட தி.மு.கழக மாநாடு

சேலம் - தருமபுரி மாவட்டங்களின் தி.மு.கழக மாநாடு, 1966 டிசம்பர் 4, 5 ஆகிய நாட்களில், கிருஷ்ணகிரியில், குள்ளு பந்தலில், மோகனூர் வடிவேலு அரங்கில் நடைபெற்றது.

சரசுவதி வெங்கடேசன் கழகக்கொடியை ஏற்றி வைத்தார். மாநாட்டைத் திண்டிவனம் தங்கவேலு தொடங்கி வைத்தார். உடுமலை நாராயணன் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.

அறிஞர் அண்ணா, நான், கலைஞர் கருணாநிதி, மற்றும் கழக முன்னணித் தலைவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினோம்.

## தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டங்கள்

1967 ஆம் ஆண்டு நடைபெற இருந்த பொதுத் தேர்தலில், தி.மு.கழகம் மிகத் தீவிரமாக ஈடுபட இருந்த காரணத்தால்,

தேர்தலை நடத்தப்போதுமான அளவுக்கு நிதி திரட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

தேர்தல் நிதி திரட்டுவதற்காகப் பல முக்கியமான நகரங்களில் நிதிச் சிறப்புக் கூட்டங்கள் நடத்துவது என்றும், அந்தச் சிறப்புக் கூட்டங்களில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களும், நானும் கலந்துகொள்வது என்றும் திட்டமிடப் பட்டது.

சிறப்புக் கூட்டங்கள், செங்கற்பட்டு, திண்டிவனம், விழுப்புரம், கடலூர், சிதம்பரம், மயிலாடுதுறை, கும்ப கோணம், தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோவில்பட்டி, தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, இராஜபாளையம், பழனி, பொள்ளாச்சி, கோவை, சேலம், கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ஆரணி, திருவண்ணாமலை, அரக்கோணம் ஆகிய நகர்களில் நடைபெற்றன. சிறப்புக் கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை, ஆங்காங்கேயிருந்த மாவட்டக் கழகச் செயலாளர்களும், நகரக் கழகச் செயலாளர்களும் முன்னின்று நடத்தினர்.

சிறப்புக் கூட்டங்களின் மூலம் ரூபாய் பன்னிரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட தொகை, தேர்தல் நிதியாகக் கிடைத்து. அதனைப் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களும், நானும் அறிஞர் அண்ணாவிடம் சேர்த்தோம்.

### தி.மு.கழகப் பொது - சிறப்பு மாநாடு

1967 பொதுத் தேர்தலையொட்டி, தி.மு.கழகத்தின் பொது - சிறப்பு மாநாடு 1966 டிசம்பர் 29, 30, 31, 1967 சனவரி 1 ஆகிய நாட்களில், சென்னை விருகம்பாக்கத்தில் நீலமேகம் நகரில், போளூரார் அரங்கில் நடைபெற்றது.

மாநாட்டிற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார். நான் மாநாட்டின் பொறுப்பாளராக இருந்தேன். கலைஞர் கருணாநிதி மாநாட்டைத் தொடங்கி வைத்தார். நீலநாராயணன் வரவேற்புரை ஆற்றினார். கோவிந்தசாமி கண்காட்சியைத் திறந்துவைத்தார்.

கழகத்தின் முக்கிய முன்னணித் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

பணபலம், படைபலம், பதவிபலம், பத்திரிகை பலம் ஆகியவற்றைக் கொண்டு வல்லாதிக்கம் செலுத்திவந்த காங்கிரசுக் கட்சியைத் தேர்தலில் வீழ்த்த வேண்டிக் காங்கிர சுக்கு மாறுபட்ட கட்சிகளை ஒரு கூட்டணிக்குள் கொண்டு வந்து, ஒட்டுமொத்த ஆதரவுடன் தேர்தலில் போட்டியிட அறிஞர் அண்ணா அவர்கள் திட்டம் தீட்டினார்கள். இராஜாஜி தலைமையில் இயங்கிய சுதந்திராக் கட்சி, இராமமூர்த்தி தலைமையில் இயங்கிய மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சி, முகம்மது இஸ்மாயில் தலைமையில் இயங்கிய முசிலிம் லீக் கட்சி, ம.பொ.சி. தலைமையில் இயங்கிய தமிழரசுக் கழகம், ஆதித்தனார் தலைமையில் இயங்கிய நாம் தமிழர் இயக்கம் ஆகியவற்றைத் தி.மு. கழகம் தலைமையிலான தேர்தல் கூட்டணியாக உருவாக்கு வதில் அறிஞர் அண்ணா வெற்றி பெற்றார்.

தேர்தல் கூட்டணியில் இணைந்துள்ள ஒவ்வொரு கட்சியும் தத்தமது தனித்தன்மைகளை அப்படியே காப் பாற்றிக் கொள்வது என்றும், வாய்ப்புள்ள தொகுதிகளில் தகுதி படைத்த கட்சியின் வேட்பாளர்கள் போட்டியிடுவது என்றும், அப்படிப்போட்டியிடும் கட்சிக்கு ஏனைய

கட்சிகள் முழு ஆதரவை அளிப்பது என்றும், கூட்டணிக் கட்சிகளிடையே உடன்பாடு ஏற்பட்டது. கூட்டணிக்கு, 'சனநாயக முற்போக்குக் கூட்டணி' என்று பெயரிடப்பட்டது.

சனநாயக முற்போக்குக் கூட்டணியின் வலிவையும், செல்வாக்கையும் நாட்டினர்க்கு உணர்த்தும் வகையில், தி.மு.கழகப் பொது-சிறப்பு மாநாட்டில் கூட்டணியைச் சேர்ந்த கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

மாநாட்டில், அறிஞர் அண்ணா, மூதறிஞர் இராஜாஜி, காயிதேமில்லத் முகம்மது இஸ்மாயில், இராம மூர்த்தி, சிலம்புச் செல்வர் சிவஞானம், ஆதித்தனார் ஆகியோர் பொதுத்தேர்தலில் சனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் வெற்றிபெற வேண்டியதன் நோக்கத்தையும், இன்றியமையாமையையும் விரிவாக எடுத்துப்பேசினார்கள். அனைவரும் கூட்டணி வெற்றி பெற்றே தீரும் என்ற உறுதியையும் உற்சாகத்தோடு வெளிப்படுத்தினர்.

மாநாட்டில் நான் பேசும்போது குறிப்பிட்டதாவது :-

> ''மாநாடு நான்கு நாட்களாக மிகச் சீரோடும், சிறப்போடும், பொலிவோடும், வலிவோடும் நடைபெற்றுவரும் காட்சியைக் காண்பதில், நீங்கள் அனைவரும் பெறும் மகிழ்ச்சியில், நானும் பங்குகொள்கிறேன்.
>
> சீமான்களையும், பூமான்களையும் நம்பி நாம் நமது கழகத்தைத் தொடங்கவில்லை! ஆலை அரசர்கள், ஆண்டைகள் ஆகியோரை நம்பி நாம் கழகத்தை வளர்க்கவில்லை! மிட்டா மிராசுதாரர்கள், பட்டக்காரர்கள்,

பாளையக்காரர்கள் போன்றோர் நமது கழகத்திற்கு ஊக்கமோ, உதவியோ புரியவில்லை! நாம் மிகமிகச் சாதாரணமான ஏழை எளிய மக்களையும், உழைப்பாளர்களையும், பாட்டாளி களையும், தொண்டுள்ளங்கொண்டவர்களையும் மட்டுமே வைத்துக்கொண்டு கழகத்தை நடத்தி வருகிறோம். நமது கழகத்தவர்கள் கைகளில் காசு இல்லாதவர்கள் தான்; ஆனால் மனத்திலே மாசு இல்லாமல், கொள்கை - குறிக்கோள் - கோட்பாடு என்ற பிடிப்போடு தொண்டாற்றி வருகிறார்கள்.

தி.மு.கழகத்திற்கு என்று தனிக்கொள்கைகள் உண்டு; தனிக் குறிக்கோள்கள் உண்டு. அவற்றையெல்லாம் அடிப்படை யாகக்கொண்ட திட்டங்கள் வெற்றிபெறப் பாடுபட்டு வருகிறோம். கொள்கைகளை விலைபேசி விற்றுவிட்டு, அரசியல் பதவிக்கான ஆதாயம் பெற்று, அதன் மூலம் கட்சியை நடத்துபவர்கள் அல்லர் நாம். கட்சியின் கொள்கைகளை வளர்க்கவும், கட்சியின் குறிக்கோள்களை அடையவும், கட்சியின் திட்டங்களை நிறைவேற்றி வைக்கவும், கட்சியைக் காப்பாற்றவும் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு, அறப்போர்கள் பல நடத்தி, வெஞ்சிறை வாழ்வு ஏற்ற வீரச் சிங்கங்கள் நம்மிடையே ஏராளமானவர்கள் இருந்துவருகிறார்கள். கழகத்திற்காக வீரமரணம் எய்திய வர்கள் பலர் ஆவார்கள்.

காடு கழனிகள் இல்லாத நாடுகள் - கடல் பகுதியே இல்லாத நாடுகள் - பனிப்பாலை வெளிகளைத் தவிர வேறு எதுவுமே இல்லாத நாடுகள் - ஊசி இலைக் காடுகளை மட்டுமே நம்பி வாழுகின்ற நாடுகள் பாலைவனங்கள் பலவற்றைக் கொண்டுள்ள நாடுகள் என்று சொல்லப்படக்கூடிய நாடுகளிலெல்லாம்கூட, மக்கள் தங்கள் தேவைகளை

யெல்லாம் நிறைவேற்றிக் கொண்டு, மனநிறைவோடு வாழ்ந்துவருகிறார்கள். ஆனால், முப்புறமும் கடலும், எப்புறமும் வளங்களும், நீர் வளமும், நிலவளமும், கனிவளமும், காட்டுவளமும், நாகரிக வளமும், பண்பாட்டு வளமும் கொண்டு விளங்கும் நமது நாடு மட்டும், வறுமையிலும், ஏழ்மையிலும் மூழ்கி, வாடி வதங்கிக் கொண்டிருக்கக் காண்கிறோம். இதற்குக் காரணம் நம்மவர் ஆட்சி, நல்லவர் ஆட்சி, வல்லவர் ஆட்சி இங்கு இல்லாதது தான்.

புதைந்து கிடக்கும் கனிச்செல்வங்கள் தோண்டி எடுக்கப் படவேண்டும்; புதிய புதிய பெரிய தொழிற் சாலைகள் தோற்றம்பெறவேண்டும்; பொருளாதார நிலை எல்லாத் துறைகளிலும் ஓங்கவேண்டும், வறுமை நீங்கவேண்டும்; வாட்டம் தொலைய வேண்டும்; ஏழை எளிய மக்களின் வாழ்வு எல்லா வகையிலும் வளரவேண்டும்; இவையெல்லா வற்றையும் நிறைவேற்றிவைக்க நாட்டில் நல்லாட்சி - நம்மவர் ஆட்சி மலரவேண்டும்! வரப்போகும் பொதுத் தேர்தலின்போது, நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் உங்கள் பங்கை உரிய முறையில் செலுத்தினால், வெற்றி கிட்டுவது உறுதி! தேர்தல் பொறுப்புக்களை ஏற்பீர்! கடமையைக் கட்டுப்பாட்டோடு செய்ய வாரீர்! பொதுமக்களின் அன்பையும், அரவணைப்பையும் பெறுவீர்! அவர்களின் நம்பிக்கையையும், நன்மதிப்பையும் ஈட்டுவீர்! வென்று வாகைசூட வாரீர்!''

*அறிஞர் அண்ணா அவர்கள் இறுதியில் பேசும்போது,*

''சனநாயக முற்போக்குக் கூட்டணியில் இணைந்து நின்று, தேர்தலில் ஒருமுகமாகப் போட்டியிடப் பெருந்தன்மையோடு

முன்வந்துள்ள கூட்டணிக் கட்சிகளையும், அவற்றின் தலைவர்களையும் மனமார வரவேற்கிறேன். அவர்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டணியில் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் சமத்துவ அடிப்படையில் இணைந்திருக்கின்றன. கட்சி களிடையே கொள்கை - குறிக்கோள் - திட்டம் போன்ற வற்றில் வேறுபாடுகள் இருந்தபோதிலும், நாட்டின் நலன்கருதி, சனநாயக முறையையும், பண்பையும் காப்பாற்றிட, சர்வாதிகாரப் போக்கினைக்கொண்ட காங்கிர சின் ஆதிக்கத்தை அகற்றும் நோக்கத்துடன்தான், இந்தக் கூட்டணி அமைந்திருக்கிறது.

கூட்டணிக் கட்சிகள் ஒவ்வொன்றும் வாய்ப்பு வசதிக்கு ஏற்பப் போட்டியிடும் தொகுதிகளைத் தேர்ந்தெடுக்கும். தேர்தலில் அனைத்துக் கட்சியினரும் ஒன்று சேர்ந்து அனைவரின் வெற்றிக்காகவும் பாடுபடுவர்.

ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு குறிப்பிட்ட கட்சியின் வேட்பாளர் வெற்றிபெற, எல்லாக் கட்சியினரும் ஒன்றாக இணைந்து பாடுபடுவோம். வெற்றி நமதே என்ற களிப்போடு பொதுத்தேர்தல் களத்தில் நாங்கள் இறங்குகிறோம்! வாக்காளப் பெருமக்கள் அனைவரும் எங்களுக்கு ஆதரவு தாரீர்! தாரீர்! என்று இந்த மாநாட்டின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறேன்!'' *என்று குறிப்பிட்டார்கள்*

*விருகம்பாக்கம் மாநாடு, வரலாற்றில் புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் மிக்க எழுச்சி யோடும், உணர்ச்சியோடும் நடைபெற்றது. எதிர்காலத்தில்*

அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி ஏற்படுவது உறுதி என்ற நம்பிக்கையோடு கழகத் தோழர்கள் அனைவரும் தீவிரமான தேர்தல் பணிகளில் ஈடுபடத் தலைப்பட்டனர்.

## 1967 பொதுத் தேர்தல்

1967ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்களில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பங்குகொள்ள, கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் மிகத் தீவிரமான முறையில் தேர்தல் பணிகளில் ஈடுபட்டன.

சனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றுகூடி, எந்த எந்தக் கட்சி, எந்த எந்தத் தொகுதிகளில் போட்டியிடுவது என்பது பற்றிக் கலந்துரை யாடல் நடத்தி, இறுதியில் ஒருமித்த உடன்பாட்டுக்கு வந்தனர்.

தமிழகச் சட்டமன்றத் தொகுதிகளில், தி.மு. கழகம் 173 இடங்களிலும், சுதந்திராக் கட்சி 27 இடங்களிலும், இடது சாரி கம்யூனிஸ்டுக் கட்சி 20 இடங்களிலும், முசிலிம் லீக் 4 இடங்களிலும், பி.சோ. கட்சி 4 இடங்களிலும், தமிழரசுக் கழகம் 2 இடங்களிலும், சோஷியலிஸ்டுக் கட்சி 1 இடத் திலும், நாம் தமிழர் இயக்கம் 1 இடத்திலும் போட்டியிடுவது என்று சனநாயக முற்போக்குக் கூட்டணியின் சார்பாக முடிவு செய்யப்பட்டது.

தேர்தல் பிரச்சாரம் மிகத் தீவிரமாக முடுக்கிவிடப் பட்டது. தி.மு.க கூட்டணிக்கட்சித் தலைவர்கள் எல்லாத் தொகுதிகளுக்கும் சென்று, பொதுக் கூட்டங்களில் பேசி, வாக்காளப் பெருமக்களிடம் வாக்குகள் கேட்டனர். பொது மக்களின் ஆதரவு கூட்டணிப்பக்கம் சிறப்பாக அமைந் திருந்தது. அந்த நிலைமை ஆங்காங்கே காணப்பட்டது.

தி.மு.க.விற்கு ஆளுங்கட்சி ஆவதற்குரிய பெரும் பான்மை வலிவு கிடைக்கும் என்று அறிஞர் அண்ணாவோ, நானோ எதிர்பார்க்கவில்லை. கணிசமான அளவுக்குக் கூடுதலாக மட்டும் இடங்கள் கிடைக்கப்பெறலாம் என்று எதிர்பார்த்தோம்.

தமிழக ஆட்சியை மீண்டும் கைப்பற்றுவதற்கான வலிமை தங்கள் கட்சிக்குக் கிடைக்கும் என்று காங்கிரசுக் கட்சியினர் எதிர்பார்த்தனர். காங்கிரசுக் கட்சியின் தலைவர் காமராசர், விருதுநகர் தொகுதியில் போட்டியிட்டார். தேர்தல் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, செய்தித்தாள் நிருபர்கள் அவரை நேரில் பேட்டி கண்டார்கள்; ''பொதுத் தேர்தலில் காங்கிரசின் நிலை எப்படி இருக்கும்? என்ன முடிவு ஏற்படக்கூடும்?'' என்று கேட்டார்கள். அதற்குக் காமராசர் அவர்கள் விடையிறுக்கும்போது "நான் படுத்துக்கொண்டே ஜெயிப்பேன்! நான் மீண்டும் முதலமைச்சர் பொறுப்பை ஏற்பேன்! இன்னும் சில நாட்களில் நீங்கள் என்னைக் கோட்டையிலே சந்திக்கலாம்!'' என்று கூறினார். அதனை யடுத்துக் காமராசர் அவர்கள் சாலை விபத்தின் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைப் பெற்று வந்தார். பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகின.

1967 பொதுத் தேர்தலின் முடிவுகள், தி.மு.கழகக் கூட்டணிக்குச் சார்பாகவே வெளிவந்தன.

நாடாளுமன்றத் தொகுதிகளில், தி.மு.கழகம் 25 இடங் களிலும், சுதந்தராக்கட்சி 5 இடங்களிலும், மார்க்ஸிஸ்டுக் கம்யூனிஸ்டுக் கட்சி 4 இடங்களிலும், முஸ்லிம் லீக் 1 இடத்திலும் வெற்றிபெற்றன.

தி.மு. கழகத்தின் சார்பாக வெற்றிபெற்ற 25 நாடாளு மன்ற உறுப்பினர்களில், அறிஞர் அண்ணா, செழியன்,

இராசாராம், மனோகரன், எஸ்.டி. சோமசுந்தரம், பேராசிரியர் அன்பழகன் போன்றோர் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவார்கள்.

தி.மு.கழகக் கூட்டணியின் சார்பாகச் சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டவர்களில், தி.மு.கழகத்தின் சார்பாக 137 பேர்களும், சுதந்தராக் கட்சியின் சார்பாக 20 பேர்களும், மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பாக 3 பேர்களும், பி.சோ. கட்சியின் சார்பாக 2 பேர்களும், தமிழரசுக் கழகத்தின் சார்பாக ஒருவரும் வெற்றிபெற்றார்கள்.

தி.மு.கழகத்தின் சார்பாகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந் தெடுக்கப்பட்டவர்களில், நான், கலைஞர் கருணாநிதி, மதியழகன், சத்தியவாணிமுத்து, ஆசைத் தம்பி, அரங்-கண்ணல், வேழவேந்தன், அ.பொ. அரசு, எம்.ஜி. இராமச்சந்திரன், முனு ஆதி, சி.வி.எம். அண்ணாமலை, எஸ்.ஜே. இராமசாமி, எஸ். முருகையன், வி.டி. அண்ணா மலை, புலவர் கோவிந்தன், எம். சண்முகம், இரெ. இளம்வழுதி, எஸ். இராமச்சந்திரன், என். இராசாங்கம், கே.எஸ். சாமி- நாதன், சாதிக் பாட்சா, சு. துரைசாமி, ஏ.எம். இராசா, மு. கண்ணப்பன், கே. செயராமன், எம். முத்துச்சாமி, சி.வி. வேலப்பன், ஈ.ஆர். கிருட்டிணன், எஸ். ஆறுமுகம், து.ப. அழகமுத்து, கே.வி. சுப்பையா, எம்.எஸ். மணி, ஜே.எஸ். இராசு, கே.என். இராமச்சந்திரன், ஆர். நாக-சுந்தரம், புலவர் முருகையன், எஸ். கணேசன், என். கிட்டப்பா, சி. கிருட்டிணமூர்த்தி, ந. தருமலிங்கம், எல். கணேசன், ஆ. துரையரசன், எம். இரத்தின சபாபதி, ஏ.எஸ். சுப்பிரமணியம், ஆதித்தனார், ஏ.ஆர். சுப்பையா, ஆலடி அருணா, எம்.எஸ். சிவசாமி, எட்மண்ட் பெர்னாண்டோ, மாதவன், தங்கப்பன், மலைக்கண்ணன்,

எஸ். சேதுராமன், பெ. சீனிவாசன், எம்.எம். மேத்தா, பி.எஸ். மணியம், அக்கினிராசு, எம். இராஜாங்கம், பழனிவேல்ராசன், ஓ.பி. இராமன், சா.பெ. மலைச்சாமி, வி.எஸ்.எஸ். மணி, எம்.சி. பாலன் போன்றவர்கள் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவார்கள்.

## அறிஞர் அண்ணா பெரியாரைக் காணுதல்

பொதுத் தேர்தலில், தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் பெரும்பான்மை இடங்களைப் பெற்றிருந்தாலும், தி.மு. கழகம் மட்டுமே தனித்துநின்று தமிழக ஆட்சியை அமைக்கும் நிலையைப் பெற்றிருந்ததால், "தி.மு.கழகம் மட்டும் ஆட்சியை அமைக்கும் பொறுப்பை ஏற்கும்" என்ற கருத்தை அறிஞர் அண்ணா வெளியிட்டார்.

நான் அறிஞர் அண்ணாவிடம் பேசும்போது, "தி.மு. கழகத்தின் சார்பாக, நாம் ஆட்சிப்பொறுப்பை ஏற்பதற்கு முன்னால், நம்மையெல்லாம் அரசியலில் ஆளாக்கிவிட்ட பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களை நேரில் கண்டு, அவரது வாழ்த்துக்களைப் பெறுவது பலவகைகளில் நமக்கு நன்மை பயப்பதாக அமையு மல்லவா? பெரியார் அவர்களை நேரில் காணுவதன் மூலம், அவரிடம் நாம் கொண்டிருக்கும் மதிப்பை உலகுக்கு உணர்த்தவும், அவருடைய எதிர்ப்பு குறையவும், அவரது ஒத்துழைப்பு கிடைக்கவும் வழிவகைகள் ஏற்படும். மேலும் நம்முடைய கொள்கைப் பிடிப்பையும், பெருந்தன்மையையும் காட்டுவதாக அமையும்" என்று குறிப்பிட்டேன்.

நான் கூறிய கருத்தை அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக் கொண்டு, அமைச்சரவைப் பொறுப்பை ஏற்பதற்குமுன், திருச்சிக்குச் சென்று பெரியாரைப் பார்த்துவிட்டு வந்து விடலாம் என்று கூறினார்.

*அறிஞர் அண்ணா, நான், கலைஞர் கருணாநிதி ஆகிய மூவரும் காரில் திருச்சிக்குப் புறப்பட்டோம். நாங்கள் வருகை தரும் செய்தியைப் பெரியாரிடம் சொல்லி வைக்கும் படி, அன்பில் தருமலிங்கத்திற்குச் செய்தி அனுப்பினோம்.*

*திருச்சிக்கு 29.2.67 மாலை 6 மணி அளவில் போய்ச் சேர்ந்தோம். திருச்சி நகரின் எல்லையில் அன்பில் தருமலிங்கம் எங்களை வரவேற்று, திருச்சியிலுள்ள பெரியார் மாளிகைக்கு அழைத்துச் சென்றார்.*

*பெரியார் மாளிகையில் மணியம்மையார் அவர்கள் எங்களை வரவேற்று, பெரியார் உட்கார்ந்திருந்த கட்டிலுக்கு அருகில் அழைத்துச்சென்றார். பெரியாருக்கு நாங்கள் வணக்கம் செலுத்தினோம். பெரியார் அவர்களும் எங்க ளுக்கு வணக்கங்கூறி அருகிலிருந்த நாற்காலிகளில் அமரும்படி கூறினார்.*

*அறிஞர் அண்ணா அவர்கள் பெரியாரின் உடல்நலம் பற்றி உசாவிவிட்டு,* "உங்களால் ஆளாக்கப்பட்ட நாங்கள், பொது மக்களின் அன்பையும், ஆதரவையும், நம்பிக்கையையும், நன் மதிப்பையும் பெற்றுத் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்க இருக்கிறோம். எங்களுக்கு இன்று கிடைத்துள்ள வெற்றியும், பெருமையும், புகழும் முழுக்க முழுக்க உங்களையே சாரும். உங்களுடைய வாழ்த்தும், அன்பும், ஆதரவும், அரவணைப்பும் எங்களுக்கு என்றும் வேண்டும். நாங்கள் எப்படி, எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை நீங்கள்தான் அவ்வப்போது எங்களுக்குச் சொல்லித் தர வேண்டும்!" என்று *கூறினார்.*

*பெரியார் அவர்கள் எங்களை நிமிர்ந்துகூடப் பார்க் காமல், கூச்சம் மேலிட்டு கூனிக்குறுகி, தாங்கொணா மகிழ்ச்சிப் பெருக்கோடு உட்கார்ந்திருந்தார். எங்களை முகங் கொடுத்துப் பார்க்கவே வெட்கப்பட்டுக்கொண்டிருந்தார்.*

*பின்னர் பெரியார் அறிஞர் அண்ணாவின் கரத்தைப் பற்றிக்கொண்டு* "அண்ணாதுரை! என்னுடைய வாழ்த்துக்களும், பாராட்டுதல்களும் உங்களுக்கு என்றென்றும் உண்டு. உங்களைத் தோற்கடிக்க எவ்வளவோ பாடுபட்டேன். ஆனால் நீங்கள் வென்றுவிட்டீர்கள். நான்தான் தோற்றுப்போய்விட்டேன். எனக்கும், என்னுடைய கொள்கைகளுக்கும், குறிக்கோள்களுக்கும் ஆதரவாக இருந்துவரக்கூடிய உங்களுக்கு என் ஆதரவும், ஒத்துழைப்பும் என்றென்றும் உண்டு! நீங்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்க இருப்பதைக் கண்டு நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்!" *என்று குறிப்பிட்டார்.*

*பெரியாரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு நாங்கள் மூவரும் அன்று இரவே சென்னைக்குத் திரும்பினோம்.*

*செய்தித்தாள் நிருபர்கள் பெரியாரைக் கண்டு, ''நீங்கள் தேர்தலில் காங்கிரசை முழுமூச்சோடு ஆதரித்துத் தி.மு.கழ கத்தைக் கடுமையாக எதிர்த்து வந்தீர்களே! இப்பொழுது திடீரென்று தி.மு.கழக ஆட்சியை ஆதரிப்பதாகக் கூறு கிறீர்களே!'' என்று கேட்டதற்குப் பெரியார் அவர்கள்,* "ஆமாம்! நான் இப்பொழுது தோசையைத் திருப்பிப் போட்டு விட்டேன்! எத்தனை நாட்களுக்குத்தான் ஒரு பக்கத்தை மட்டும் வேகவைத்துக்கொண்டிருப்பது? அடுத்த பக்கமும் வேகவேண்டும் அல்லவா!" *என்று குறிப்பிட்டார்.*

## 1967இல் தி.மு.கழக ஆட்சி அமைப்பு

*தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் களின் கூட்டம், 28.2.1967 அன்று நடைபெற்றது.*

*தி.மு.க. சட்டமன்றக் கட்சியின் தலைவர் பொறுப்புக்கு, அறிஞர் அண்ணா அவர்களின் பெயரை, நான் முன் மொழிந்தேன். அதனைக் கலைஞர் கருணாநிதி*

வழிமொழிந்தார். அறிஞர் அண்ணா அவர்கள், தி.மு.க. சட்ட மன்றக் கட்சித் தலைவராக நீண்ட கையொலிக்கு இடையில், ஒரே மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் அமைச்சரவையை அமைக்கும் பொறுப்பை அறிஞர் அண்ணா அவர்கள் எற்று, அமைச்சர்களைத் தேர்ந் தெடுக்கும் பணியில் ஈடுபட்டார். கழகத்தின் முக்கியத் தலைவர்கள் பலரும் அமைச்சரவையில் இடம்பெற விரும்பினார்கள. என்.வி. நடராசன், சிற்றரசு போன்ற வர்கள் மிகத்தீவிரமாக ஈடுபட்டார்கள்.

அமைச்சரவையை அமைப்பதில், அறிஞர் அண்ணா அவர்களுக்கு யாரை எடுப்பது, யாரை விடுவது என்பது பற்றிய சங்கடமான நிலைமை ஏற்பட்டது. அப்பொழுது அறிஞர் அண்ணாவிடம் நான் பேசும்போது, "அண்ணா! எனக்கு அமைச்சரவையில் இடம் வேண்டாம். நான் எப்பொழுதும் போல் கழகப் பணிகளை ஆற்றிக்கொண்டு வருகிறேன். உங்களுக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய பொருத்தமானவர்கள் யார் யார் என்பதைக் கண்டறிந்து, தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள். யாருக்காவது சமாதானம் சொல்லவேண்டிய சங்கடமான நிலை தங்களுக்கு ஏற்பட்டால், 'நான் நெடுஞ்செழியனுக்கே அமைச்சரவையில் இப் பொழுது இடந்தரவில்லை. ஆகவே, நீங்கள் சில்காலம் பொறுத்திருங்கள். சாதகமான சூழ்நிலை ஏற்படும்போது உங்களை அமைச்சரவையில் சேர்த்துக்கொள்கிறேன்' என்று அவர்களிடம் கூறிவிடுங்கள். அதன்மூலம் அப்படிப்பட்டவர்கள் ஓரளவுக்குச் சமாதானம் அடையக்கூடும்" என்று சொன்னேன்.

அதற்கு அறிஞர் அண்ணா அவர்கள், "உன்னைப் பொறுத்தவரையில் நீ கூறுவது சரியானதாக அமையக்கூடும். ஆனால், யாரேனும் என்னிடம் வந்து, 'நெடுஞ்செழியனுக்கு ஏன்

அமைச்சர் பதவியை அளிக்கவில்லை' என்று கேட்டால், நான் அப்படிப்பட்டவருக்கு என்ன பதில் சொல்லமுடியும்? அந்த நிலை எனக்கு மேலும் சங்கடம் தரக்கூடிய ஒரு நிலையாகத்தான் இருக்கும்!'' *என்று கூறினார்.*

*அமைச்சரவை அமைப்பதற்கு முன்பு கூடிய, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் அறிஞர் அண்ணா பேசும்போது,* "நெடுஞ்செழியன் ஒருவர்தான் தனக்கு அமைச்சர் பதவி வேண்டாம் என்றும், தான் எப்பொழுதும்போல் கழகப் பணிகளை ஆற்றிக்கொண்டு வருகிறேன் என்றும் கூறினார். சிலர் தங்களுக்கு அமைச்சர் பதவி அளிக்கவேண்டும் என்று வற்புறுத்தினார்கள்; என்னிடம் காரசாரமாகக்கூடப் பேசினார்கள்; வெளியே போய் என்னைக் கண்டகண்டபடி திட்டினார்கள்; சிலர் என் வீட்டிற்கு முன்னால் நின்று மண்ணைவாரித் தூற்றினார்கள். சிறிது காலம் பொறுத்து, நாமெல்லாம் பக்குவப்பட்டதற்குப் பிறகு, இந்த ஆட்சி நமக்குக் கிடைத்திருக்கலாம். மிகச் சீக்கிரமாகவே இந்த ஆட்சி நமக்குக் கிடைத்திருக்கிறது. எதிர்காலத்தில் நாம் மகிழ்ச்சியைவிடத் தொல்லைகளையும், துயரங்களையும்தான் அதிகமாகத் தாங்கவேண்டிவரும் என்று நான் கருதுகிறேன். ஒவ்வொருவரும் 'நான்! நான்!' என்று சொல்லுவதை மறந்து, 'நாம்! நாம்!' 'நம்மால் மட்டுமே செய்ய முடியும்!' என்று எண்ணும் நினைப்பு எல்லோர்க்கும் வரவேண்டும். எந்த ஒரு நிலையிலும் நாம் அனைவரும் கூட்டுப்பொறுப்போடு பணியாற்ற முயன்றால் தான், கட்சியையும் வளர்க்க முடியும்; ஆட்சியையும் காப்பாற்ற முடியும்!'' *என்று குறிப்பிட்டார்.*

*இறுதியாக அறிஞர் அண்ணா அவர்கள் ஒன்பது பேர்கள் கொண்ட அமைச்சரவையை அமைக்க முன்வந்தார்கள்.*

*அமைச்சர்களுக்கான பதவி உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் விழா, 6.3.1967 சென்னை இராசாசி மண்டபத்தில்*

நடைபெற்றது. ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்களின் முன்னிலையில் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகவும், நான் கல்வி-தொழில் அமைச்சராகவும், கலைஞர் கருணாநிதி பொதுப்பணித்துறை அமைச்சராகவும், மதியழகன் உணவுத் துறை அமைச்சராகவும், கோவிந்தசாமி வேளாண்மைத்துறை அமைச்சராகவும், சத்தியவாணிமுத்து தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராகவும், மாதவன் சட்டத்துறை அமைச்சராகவும், சாதிக் பாட்சா மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராகவும், முத்துச்சாமி உள்ளாட்சித்துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றுக்கொண்டோம்.

விழாவிற்குப் பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்களும், பல அதிகாரிகளும், பிரமுகர்களும் வருகைதந்து சிறப்பித்தனர்.

பதவிக்கான உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் விழா முடிந்தவுடன், அறிஞர் அண்ணா அவர்கள், இராஜாஜி மண்டபத்திற்கு வெளியேவந்து, அங்குக் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான தோழர்களிடம் சென்று கையசைத்துக் காட்டித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார். அறிஞர் அண்ணா அவர்களைக் கண்டதும் கூடியிருந்த மக்கள், ''அறிஞர் அண்ணா வாழ்க!, ''அமைச்சர் பெருமக்கள் வாழ்க!'', ''தி.மு.க. ஆட்சி வாழ்க!'' என்று வாழ்த்தொலிகள் எழுப்பி, விண்ணதிர முழங்கினார்கள்.

அறிஞர் அண்ணாவின் கார் முன்செல்ல, ஏனைய அமைச்சர்களின் கார்கள் தொடர்ந்து பின்செல்ல, எல்லோரும் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையைச் சென்றடைந்தோம். கோட்டையில் முக்கிய அரசு அதிகாரிகள் அறிஞர்

அண்ணாவை எதிர்கொண்டு வரவேற்று, அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

பின்னர் முதலமைச்சர் அறையில் அறிஞர் அண்ணா சென்றமர்ந்தார். மற்ற அமைச்சர்கள் அனைவரும் அறிஞர் அண்ணாவின் எதிரில் இருந்த நாற்காலிகளில் அமர்ந்தோம். நாங்கள் நாற்காலிகளில் அமரும்போது, அறிஞர் அண்ணா அவர்கள், எங்களைப் பார்த்து, "இந்த நாற்காலிகள் நமக்கு என்றும் நிலையானவை என்ற எண்ணத்தில் அமராதீர்கள்! இந்த நாற்காலிகளை விட்டு எந்த ஒரு நேரத்திலும் நாமே எழுந்து செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் ஏற்படலாம்! அல்லது சில எதிர்பாராத சூழ்நிலைகளேகூட நம்மையெல்லாம், இந்த நாற்காலிகளைவிட்டு வெளியேற்றவும் செய்யலாம்! எதற்கும் நாம் மிக எச்சரிக்கையோடுதான் இந்த நாற்காலிகளில் அமரவேண்டும்!" என்று பொறுப்புணர்ச்சியோடு குறிப்பிட்டார்.

அமைச்சர் பொறுப்புக்களை ஏற்றிருந்த எங்களுக்கு, அறிஞர் அண்ணா அவர்கள் சில அறிவுரைகளைக் கூறினார். அவை வருமாறு :-

> "அமைச்சர்களாகப் பணியாற்றப்போகும் நீங்கள் எல்லோரும் எளிமையான முறையில் வாழவேண்டும். ஆடம்பரமோ, படாடோபமோ, அகம்பாவமோ, அதிகார தோரணையோ எந்த வகையிலும் இருக்கக்கூடாது.
>
> பொதுமக்களின் குறைகளையும், அவர்கள் குறிப்பிடும் குற்றங்களையும் பொறுமையாகக் கேட்டுக் கொள்ள வேண்டும். அவற்றைச் சட்டநெறிமுறையின் அடிப்படை யிலும், நியாயம், நேர்மை ஆகியவற்றின் அடிப்படையிலும் தீர்த்து வைக்க முயலவேண்டும்.
>
> செய்யவேண்டிய செயல்களை நீங்கள் செய்யத் தவறினாலும் பரவாயில்லை; ஆனால் செய்யத்தகாத செயல்கள் ஏதொன்றையும் செய்துவிடாதீர்கள்.

உங்களுடைய செயல்கள் அனைத்தும் ஏழை எளிய மக்களின் நிலையை உயர்த்தவும், அவர்களைக் காப் பாற்றவும் பயன்படவேண்டுமே அல்லாமல், பணக் காரர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில், எக்காரணங்கொண்டும் அமைந்துவிடக்கூடாது.

பொதுமக்களாக இருந்தாலும், எதிர்க்கட்சியினரானாலும், கழகத் தோழர்கள் ஆனாலும் எல்லோர்க்கும் சட்ட நெறி முறைகளுக்கு உட்பட்டுத்தான் உதவி செய்யவேண்டும்; உறுதுணையாக இருக்கவேண்டும். சட்டங்களை எக்காரணங்கொண்டும் வளைக்கவோ, முறிக்கவோ, மீறவோ கூடாது. நீதித்துறையிலோ, நிருவாகத்துறையிலோ அத்து மீறித் தலையிட, நீங்கள் ஒருக்காலும் முயலக்கூடாது.

நீங்கள் அனைவரும் சிறிய வகைக் கார்களை மட்டுந்தான் பயன்படுத்தவேண்டும். தனிப்பட்டவரின் ஆடம்பரமான விழாக்களில் நீங்கள் பங்கு பெறக்கூடாது. அரசாங்கத்தின் சலுகைகளை உங்களுக்கோ, உங்களின் உற்றார் உறவினர்க்கோ பயன்படுத்திக்கொள்ளக்கூடாது.

உங்களுடைய ஒவ்வொரு செயலையும் இலட்சக் கணக் கானவர்களின் கண்கள் கவனித்துக்கொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

எல்லாத்துறைகளிலும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஊதாரிச் செலவினம் கூடாது. நலிவுற்ற மக்களுக்குச் சீரான வாழ்வை அளிக்கவேண்டும்.

அமைச்சர்கள் தங்களுடைய திறமைகளைப் பேச்சுக்கள் மூலம் வெளிப்படுத்தாமல், செயல்கள் மூலம் செய்து காட்டவேண்டும்!"

பின்னர் அறிஞர் அண்ணா அவர்கள், ஒவ்வொரு அமைச்சரையும் அவரவர் அறைக்கு அழைத்துச்சென்று, அவரவர் இருக்கையில் அமரச்செய்தார்.

அறிஞர் அண்ணாவின் அறைக்கு அடுத்து இருந்த அறையில், நான் அமர்த்தப்பட்டேன். முக்கியமான அதிகாரிகள் பலரும் வந்து, தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு எனக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். கழகத்தின் பொறுப்பாளர்களும், செயல்வீரர்களும் பெருந்திரளினராக வந்து மாலைகள் அணிவித்து, ஆடைகள் போர்த்தி, வாழ்த் துக்களைத் தெரிவித்தனர்.

நான் கல்வி, தொழில் ஆகிய துறைகளின் பொறுப்புக் களை மட்டுமல்லாமல், மின்சாரம், தொழிலாளர் நலம், சட்டமன்றம், தமிழ் வளர்ச்சி, இந்து சமய அறநிலையப் பாதுகாப்பு, முன்னாள் இராணுவத்தினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சுற்றுலா, வீட்டுவசதி போன்ற துறைகளின் பொறுப்புக்களையும் ஏற்றிருந்தேன்.

அரசு ஊழியர்கள் கூட்டத்தில் அறிஞர் அண்ணா

நாங்கள் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட 6.3.1967 அன்று மாலை, அமைச்சரவையினர்க்கு வரவேற்பு அளிக்கும் கூட்டம் ஒன்று, தலைமைச் செயலக ஊழியர் களால் ஏற்பாடு செய்யப்பட்டது.

வரவேற்புக் கூட்டம் சென்னைக் கோட்டையிலுள்ள போர்ப்படையினரின் அணிவகுப்புத் திடலில் நடை பெற்றது. கூட்டத்தில் அறிஞர், அண்ணா, நான், ஏனைய அமைச்சர்கள் ஆகியோர் கலந்துகொண்டோம்.

அப்பொழுது தலைமைச் செயலாளராக இருந்த இராமகிருட்டிணன் ஐ.சி.எஸ். அவர்கள், முதலமைச்சர்

*அறிஞர் அண்ணாவையும், ஏனைய அமைச்சர் களையும் வரவேற்று உரையாற்றினார்.*

*அமைச்சரவையினரின் சார்பாக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்புரை வழங்கினார். அவர் பேசும் போது குறிப்பிட்டதாவது :-*

"இப்படி உரை நிகழ்த்துவது என்பது எனக்கு வழக்கமான தொரு - பழக்கப்பட்ட செயலேயாகும். ஆனால், தமிழக ஆட்சியின் நிருவாகப் பொறுப்பை ஏற்றிருப்பது என்பது, எனக்குப் பழக்கமில்லாத புதியதொரு பொறுப்பாகும்.

அரசு ஊழியர்களாக விளங்கும் உங்களையெல்லாம் நம்பித்தான், நான் இந்தப் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். நிருவாக முறைகளையும், சட்ட நெறிகளையும், விதிமுறைகளையும், மரபுகளையும் நீங்கள் தான் எனக்கும், ஏனைய அமைச்சர்களுக்கும் அவ்வப்போது விளக்கிக்கூறவேண்டும். நாங்கள் கடைப்பிடிக்கவேண்டிய முறைகள் பற்றியும், கடைப்பிடிக்கவேண்டாத முறைகள் பற்றியும் நீங்கள்தான் எங்களுக்கு எடுத்துக்கூறவேண்டும்.

நீண்ட நெடுங்காலமாகத் தமிழகம், நிருவாகத்துறையில் முதல் இடம் பெற்றுச் சிறப்பாகத் திகழ்கிறது என்பதை நான் நன்கு அறிவேன். ஏழை எளிய மக்கள், நலிவுற்ற மக்கள், வறுமையில் வாடுவோர், திக்கற்றவர்கள், உடல் ஊன முற்றோர், பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் போன்றோரின் நலன்கருதி, நாங்கள் கொடுத்த வாக்குறுதி களை நிறைவேற்ற நாங்கள் முயலும்போது, நீங்கள் எங்களுக்குப் பெருந்துணையாக இருக்கவேண்டும். ஏழ்மை, வறுமை, இல்லாமை, போதாமை போன்றவற்றை அகற்ற நாங்கள் முற்படும்போது, நீங்கள் எங்களுக்கு உறுதுணை யாக இருக்கவேண்டும்!"

வானொலியில் அறிஞர் அண்ணாவின் பேச்சு

*அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன், 14.3.67 இல் சென்னை வானொலியில் பேருரை ஆற்றினார். அது வருமாறு :-*

''நண்பர்களே! ''உங்களுக்காக நான்'' என்பது மட்டு மல்லாமல், இன்னும் உண்மையைச் சொல்லவேண்டு மானால், ''உங்களால் நான்'' என்றுதான் சொல்லவேண்டும்.

நான் என் கடமையை மறந்துவிடுபவன் அல்லன். நான் என் கடமையைச் செய்து முடித்திட, உங்கள் ஒவ்வொரு வருடைய ஒத்துழைப்பும் எனக்குத் தேவை.

மக்களுக்கு நலிவுகள் நீங்கிய நல்வாழ்வு தரவேண்டும் என்பது, எனது தலையாயக் குறிக்கோளாகும். அந்தக் குறிக்கோள் வெற்றிபெற்றால் மட்டுமே, அறநெறி அரசு அமைந்ததாகப் பொருள்கொள்ள முடியும்.

கொள்கை குறிக்கோள் என்பது மிகப்பெரியது. நான் மிகமிகச் சாமானியன்தான். ஆனால், உங்கள் தோழனாக இருக்கிறேன். நான் என்னுடைய திறமையை மட்டும் நம்பி இந்தப் பணியில் இறங்கவில்லை; உங்கள் எல்லோருடைய திறமையையும் நம்பித்தான் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளேன்.

அரசமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அதிகார வரம்புகளும், உரிமைகளும், வாய்ப்புக்களும், வசதிகளும் மாற்றி அமைக்கப்பட்டால்தான், மாநில அரசு முழு வளர்ச்சி அடையமுடியும். மக்களின் வாழ்வைச் செம்மைப்படுத்த முடியும். இந்திய நாட்டை எல்லா வகைகளிலும் காப்பாற்ற மத்திய அரசும், நாட்டு மக்களை எல்லா வகையிலும்

காப்பாற்ற மாநில அரசுகளும் தக்க உரிமைகளையும், அதிகாரங்களையும் பெற்றுத்தீரவேண்டும். இந்த நோக்கத்தின் அடிப்படையில்தான், அரசமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்படவேண்டும் என்று கூறிவருகிறேன்.

அணைத்தல் - பிணைத்தல் - கட்டுண்டு கிடத்தல் ஆகியவை தனித்தனிப் பொருள் கொண்டவை. மாநிலத்தின் மாண்பும், வளமும், வாய்ப்பும், வசதியும், ஏற்றம் பெறக்கூடிய வகையில், மத்திய-மாநில அரசுகளின் உறவு நிலைமை வகுக்கப்படவேண்டும்.

தனித்தன்மைகளும், பொது நன்மையும் கெடாத வகையில் அரசமைப்புச் சட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டும்!

இந்த நோக்கத்தை நிறைவேற்ற, என் தலைமையிலான அரசு ஒல்லும் வகைகளிலெல்லாம் அரும்பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்!''

## அறிஞர் அண்ணாவின் டில்லிப் பயணம்

*அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப்பிறகு அறிஞர் அண்ணாவும், நானும், 10,11.4.67 ஆகிய நாட்களில் டில்லிக்குச் சென்று அங்குத் தமிழக அரசு விருந்தினர் விடுதியில் தங்கினோம்.*

*டில்லியில் 10.4.67 அன்று பிரதமர் இந்திரா காந்தியைக் கண்டோம். இந்திரா காந்தியிடம் அறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போது,*

''காங்கிரசுக் கட்சிக்கும் தி.மு.கழகத்திற்கும் இடையே மாறுபட்ட கொள்கை - குறிக்கோள் - கருத்துக்கள் இருந்த போதிலும், மத்திய அரசுக்கும் - தமிழக மாநில அரசுக்கும் இருக்கவேண்டிய நெருங்கிய உறவு முறைப்படி காப்பாற்றப்

படும். நாட்டு மக்களின் நலன்கருதி மத்திய அரசுக்குத் தமிழக மாநில அரசு துணையாக இருக்கும்; அதுபோல, மாநில அரசுக்கு மத்திய அரசும் துணையாக இருக்க வேண்டும்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பொருளாதார நிலையை மேம்படுத்தவும், தொழில் துறையை வளர்க்கவும், சமுதாய நலத்திட்டங்களை நிறைவேற்றவும் தமிழக அரசு எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும், மத்திய அரசு உறுதுணை யாக நிற்கவேண்டும்.

ஆங்கிலமொழி, தொடர்ந்து ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் அரசமைப்புச் சட்டம் திருத்தப்படவேண்டும்!"

*என்று கூறினார்.*

*அப்பொழுது குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் இராதாகிருட்டிணன் அவர்களையும், துணைக் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களையும் கண்டு, கலந்துரையாடல் நடத்தி மகிழ்ந்தோம்.*

*நாடாளுமன்றத்தின் மையமண்டபத்தில், பல்வேறு கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடினோம்.*

*டில்லி தமிழ்ச் சங்கத்தின் சார்பாக அறிஞர் அண்ணா அவர்களுக்கும், எனக்கும் வரவேற்பு அளிக்கும் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் ஏராளமான தமிழ் அதிகாரி களும், தமிழன்பர்களும் கலந்துகொண்டனர். நானும், அறிஞர் அண்ணாவும் ஏற்புரைகள் வழங்கினோம்.*

*அறிஞர் அண்ணாவின் நாவன்மையும், வினாக்களுக்கு விடையிறுக்கும் பாங்கும், எளிய தோற்றமும், இனிய*

இயல்பும் டில்லியிலிருந்த அனைவரையும் பெரிதும் கவர்ந்தன. அவரும், நானும் கலந்துகொண்ட எல்லாப் பொது நிகழ்ச்சிகளிலும் பெருந்திரளான மக்கள் கூடினர்.

## அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எனக்கு வரவேற்பு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று, எம்.ஏ., பட்டம் பெற்ற நான், தமிழக அமைச்சரவையில் இடம் பெற்றுக் கல்வி அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த நிலையில் 26.4.67 அன்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக, எனக்கு வரவேற்பு அளிக்கும் நிகழ்ச்சி ஒன்று சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பட்டமளிப்பு விழா மண்டபத்தில், வரவேற்பு விழா நடைபெற்றது. விழாவிற்குப் பல்கலைக் கழகத் துணைவேந் தராக இருந்த, டி.எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார். பேராசிரியப் பெருமக்களும், மாண வர்களும், கழகத் தோழர்களும் பெருந்திரளினராகக் கூடி யிருந்தனர். பல்கலைக் கழக இணைவேந்தராக இருந்த செட்டிநாட்டு அரசர் முத்தையா செட்டியார் அவர்களும் வரவேற்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு, என்னை மிகவும் பாராட்டிப்பேசினார்.

பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களும், எனக்குப் பேராசிரியராக இருந்த சிலரும் என்னை வரவேற்றுப் பல படப் பாராட்டினார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பாகத் தந்தத்தினால் ஆன பல்கலைக்கழகக் கட்டடத் தோற்றத்தை நினைவுபடுத்தும் பரிசு ஒன்று, நினைவுப் பரிசாக எனக்கு அளிக்கப்பட்டது. நான் ஏற்புரை வழங்கியபோது, குறிப்பிட்டதாவது:-

> "எந்தப் பல்கலைக் கழகம் என்னைப் பயிற்றுவித்து, எனக்குப் பட்டம் வழங்கி, என்னை ஆளாக்கிவிட்டதோ, அந்த

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக நான் வரவேற்கப்படுகிறேன்; வாழ்த்தப்படுகிறேன்; பெருமைப் படுத்தப்படுகிறேன்; புகழப்படுகிறேன் என்பதை எண்ணி எண்ணி நான் பூரிப்பும், பெருமிதமும் அடைகிறேன்.

நான் கல்வி அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, நான் கலந்துகொள்ளும் முதல் பொது நிகழ்ச்சி இந்த வரவேற்பு விழாதான் என்று எண்ணும்போது, நான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன்.

எனக்குப் பாடம் புகட்டிய பேராசிரியர்கள் பலரும், நான் அன்போடு பழகிய பேராசிரியர் பலரும் என் எதிரே வீற்றிருப்பதைக் காண்கிறேன். இவர்களெல்லாம் போதித்த அறிவுத்திறன் - ஆற்றல் திறன் - பண்பாட்டுத் திறன் ஆகியவற்றால்தான், நான் இந்த நிலைக்கு உயர்ந்துள்ளேன் என்பதை நன்றியுணர்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சூழல்கள்தாம், என்னை ஒரு தமிழ் ஆர்வலனாகவும், ஒரு அரசியல்வாதியாகவும், ஒரு சமுதாயத் தொண்டனாகவும் ஆக்கின.

இருபத்து மூன்று ஆண்டுகாலத்திற்கு முன்பு அண்ணாமலை நகரில் நான் பயின்றபோது நிகழ்ந்த நிகழ்ச்சிகளும், கண்ட காட்சிகளும் என் நினைவில் இன்னும் பசுமையாகவே இருந்துவருகின்றன.

நான் ஒரு பேச்சாளனாகவும், எழுத்தாளனாகவும், நிருவாகத் திறமையுடையவனாகவும் ஆவதற்கு, இந்தப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேரவையும், தமிழ் மன்றமும், பட்டி மன்றமும் எனக்குப் பெரிதும் துணைபுரிந்தன. நான் எனது சிந்தனை அறிவையும், செயலாற்றல் திறனையும் வளர்த்துக் கொள்ள, இங்குள்ள அரிய பெரிய நூல்நிலையம் சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

இதே பட்டமளிப்பு விழா மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டங்கள் - விழாக்கள் மூலம், அரசியல் பெருந்தலைவர்களும், தமிழ்ப் பேரறிஞர்களும், பல்துறை வல்லுநர்களும் ஆற்றிய சொற்பொழிவுகள் எனக்கு ஊக்கத்தையும், ஆக்கத்தையும் பயந்தன.

நானும், என் இளவல் செழியனும் மிகவும் ஏழைமையான நிலையில்தான், பல்கலைக் கழகப் படிப்பைப் பெற முயன்றோம். எங்களுக்கு எல்லா வகையிலும் பெருந்துணையாக இருந்து, பேருதவி புரிந்துவந்தவர், உடற்பயிற்சி இயக்குநராக இருந்து வரும், அய்யாறு அவர்களே ஆவார். நாங்கள் இருவரும் அய்யாறு அவர்களின் பெயரில், உணவு விடுதியிலிருந்து ஒரு சாப்பாடு எடுத்து, இருவரும் உண்டு வாழ்ந்துவந்தோம். தெற்கிருப்பு என்ற பகுதியிலுள்ள ஒரு சிறு அறையை ஐந்து ரூபாய் வாடகைக்கு எடுத்துக்கொண்டு, அதில் இருந்துவந்தோம். பல்கலைக் கழகத்தின் தங்கும் விடுதியில் இருந்துவந்த காந்திமதிநாதன், சுப்பையா ஆகியோரின் அறைகளில் எங்கள் பாட நூல்களையும், குறிப்பேடுகளையும் பாதுகாப்பாக வைத்திருந்தோம். பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் இரத்தினசாமி அவர்களின் அனுமதியோடு, பல்கலைக் கழகத்தின் வகுப்பு அறைகளில் இரவில் தங்கிப்படித்துவந்தோம்; அங்கேயே படுத்துக் கொண்டோம். அவற்றிற்கான வசதிகளை அவர் செய்து தந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தந்த ஊக்கந்தான், நானும், என் இளவல் செழியனும் அரசியல் உலகில் இன்று புகழோடும், பெருமையோடும் உலா வரச்செய்திருக்கிறது.

நான் பேச்சுப்போட்டிகள் பலவற்றிலும், எழுத்துப்போட்டிகள் பலவற்றிலும் வெற்றிபெற, பேராசிரியர் சுப்பிரமணியபிள்ளை, டாக்டர் சிதம்பரநாதஞ்செட்டியார், ஔவை

துரைசாமிபிள்ளை, துணைவேந்தர் பேராசிரியர் இரத்தினசாமி போன்றவர்கள் பெரிதும் ஊக்கந்தந்தனர்.

அண்ணாமலை செட்டியார், முத்தையா செட்டியார் ஆகியோரின் பெரு முயற்சியாலும், பேருதவியாலும் இந்தப் பல்கலைக் கழகம் ஆண்டுக்கு ஆண்டு சிறப்புற்று ஓங்கி வளர்ந்துவருவது மிகவும் மகிழ்வதற்குரியதாகும்.

தமிழ் வளர்ச்சி, தமிழிசை வளர்ச்சி, அறிவியல் மேம்பாடு ஆகிய துறைகளில் இந்தப் பல்கலைக் கழகம் அனைத்து இந்தியாவிலும் புகழ்பெற்று விளங்கிவருவது மிகவும் பாராட்டுவதற்கு உரியதாகும்.

இந்தப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறிய பலர் உலக அளவிலும், அனைத்து இந்திய அளவிலும், தமிழ்நாடு அளவிலும் பல்வேறு துறைகளிலும் சிறப்புற்றுத் திகழ்வது நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியைத் தருவதாகும்.

இந்தப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு வகையான சிறப்புக்குரிய வாய்ப்பு வசதிகளையெல்லாம் மாணவ நண்பர்கள் பெரிதும் பயன்படுத்திக்கொண்டு சிந்தனை அறிவுத்திறன், செயலாற்றல் திறன், செய்துமுடிக்கும் திறன், பண்பாட்டுத் திறன் ஆகியவற்றில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றுப் புகழோடும், பெருமையோடும் திகழ என் உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

என்னைச் சிறப்பாக வரவேற்றுப் பாராட்டியுள்ள முத்தையா செட்டியார் அவர்களுக்கும், பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களுக்கும், பேராசிரியப் பெரு மக்களுக்கும், மாணவ நண்பர்களுக்கும் என் நன்றியை உவகைப் பெருக்கோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் புகழ் ஓங்குக! அதன் கல்வித் தொண்டுகள் என்றும் வெல்க!''

*பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், மாணவர்கள் சார்பாக இரவு விருந்து ஒன்று சிறப்பான முறையில் எனக்கு அளிக்கப் பட்டது. அதற்காக, விருந்தின்போது, நான் அனைவர்க்கும் நன்றி தெரிவித்து உரையாற்றினேன்.*

## தில்லை நடராசர் கோயிலில் வரவேற்பு

*நான் இந்து அறநிலையப் பாதுகாப்புத்துறை அமைச்ச ராக இருந்த காரணத்தால், தில்லை நடராசர் கோயிலின் அறங்காவலர்கள், 26.4.67 அன்று மாலை என்னைக் கோயிலுக்கு அழைத்து, எனக்கு வரவேற்பு அளித்தனர். என்னுடன் அறநிலையத்துறையின் ஆணையரும் வருகை தந்தார்.*

*கோயிலின் பல பகுதிகளையும் எனக்குச் சுற்றிக் காண பித்தார்கள். கோயிலில் தூய்மை காக்கப்படவேண்டியதன் இன்றியமையாமையையும், பொதுமக்களுக்குத் தேவைப் படும் அடிப்படை வசதிகளைச் செய்துதர வேண்டியதன் அவசியத்தையும் நான் வலியுறுத்தினேன். வரவேற்புக் கூட்டத்தில்* "நெடுஞ்செழியன் என்ற தனிப்பட்ட முறையில் எனக்குச் சிலகொள்கைகள் உண்டு. நான் ஒரு பகுத்தறிவு வாதியாகத் திகழ்ந்துவருகிறேன். ஆன்மால், அறநிலையப் பாதுகாப்புத் துறை அமைச்சர் என்ற முறையில் எனக்குச் சில பொறுப்புக்களும், கடமைகளும் உண்டு. பகுத்தறிவுக் கொள்கை களுக்குப் பழுது ஏற்படாத வகையில், ஆன்மிகவாதிகளின் நோக்கம் நிறைவேற என் கடமையை ஆற்றுவேன். வலுக்கட்டாயமாக எனது கொள்கையை எவர் மீதும் திணிக்கமாட்டேன். அதேபோது, பொது இடங்களில், எனது கட்சியின் மேடைகளில் எனது கொள்கைகளை வலியுறுத்தி வரவும் தவறமாட்டேன். பொறையுடைமை எல்லா வகையிலும் காப்பாற்றப்படும்'' *என்று குறிப்பிட்டேன்.*

நடராசரின் கருவறைக்கு என்னை அழைத்துச் சென்றனர். அங்கு, தீட்சதர்கள் வைதிக முறைப்படி வழிபாடு நடத்தினர். வழிபாட்டு முறைகளைக் கவனித்துக்கொண்டிருந்தேன். தீட்சதர்கள் என்னுடைய கொள்கைகளைத் தெளிவாக அறிந்திருந்த காரணத்தால், மரியாதை நிமித்தமாக அவர்கள் எனக்கு மாலை சூட்டினார்கள். ஆனால் திருநீற்றை எனக்கு அளிக்காமல் மற்றவர்க்கு அளித்தார்கள்.

நான் தில்லை நடராசர் கோயிலுக்குச் சென்றதை வைத்துக்கொண்டு, என்மீது பழிபோட வேண்டும் என்ற தீய நோக்கத்தோடு, சில செய்தித்தாள்கள் நான் தீட்சதர்கள் கொடுத்த திருநீற்றை அலட்சியமாகக் கீழே வீசி எறிந்து விட்டேன் என்று எழுதின. அந்தச் செய்தியைத் தீட்சதர்களே கூட மறுத்து, நடந்த உண்மையை மட்டும் வெளியிட்டார் கள். நானும் நடந்ததை மட்டும் விளக்கி அறிக்கை வெளி யிட்டேன். பின்னர் அதுபற்றிய ஆரவாரம் அடங்கிற்று.

நான் அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில், கொள்கையை விட்டுவிடாமல் கடமையை ஆற்றினேன் என்பதைப் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டு, என்னைப் பாராட்டிப், "பலே நெடுஞ்செழியன்! பலேபலே நெடுஞ்செழியன்!" என்று தலைப்பிட்டு, 'விடுதலை' ஏட்டில் ஒரு பெட்டிச் செய்தியை வெளியிட்டார்.

தில்லை நடராசர் கோயில் அறங்காவலர்களும், தீட்சதர் களும் என்னை அன்போடு வரவேற்று, பாராட்டி, வழியனுப்பி வைத்ததற்காக, நான் அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக்கொண்டேன்.

## அறிஞர் அண்ணா ஆட்சியில் தமிழ்மணம்

அறிஞர்அண்ணா அவர்கள் 1967இல் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், "எங்கும் தமிழ் - எதிலும் தமிழ் -

என்றும் தமிழ்'' என்ற கொள்கைக்கு நல்ல ஆக்க நிலை ஏற்பட்டது.

1967 ஏப்ரல் 14ஆம் நாளன்று, அதாவது சித்திரைத் திங்கள் முதல்நாள் விழாவன்று, சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில், ''தமிழக அரசு - தலைமைச் செயலகம்'' என்ற பெயர்ப்பலகை அறிஞர் அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அந்த விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், அயல்நாட்டுத் தூதுவர்கள், தொழில் அதிபர்கள், வணிகப் பெருமக்கள் என்ற முறை யில், பல தரப்பினரும் பெருமளவில் கலந்து கொண்டார்கள்.

அப்பொழுது கல்வித் துறைக்கும், தமிழ் வளர்ச்சித் துறைக்கும் அமைச்சராக இருந்த நான், விழாவில் கலந்து கொண்டு, வரவேற்புரை நல்கி, குழுமியிருந்தவர்கள் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்தேன்.

நான் பேசும்போது,

''தமிழக அரசு கொண்டிருக்கும், 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தும் முதல் செயல், 'தமிழக அரசு - தலைமைச் செயலகம்' என்ற தமிழ்ப் பெயர்ப் பலகையைத் திறந்து வைக்கும் இந்த நிகழ்ச்சியே யாகும்.

தமிழக அரசு, ஆட்சி மொழியாகத் தமிழ் மொழியைக் கொண்டிருப்பதால் இனி அதனுடைய நடவடிக்கைகள் அனைத்தும் தமிழிலேயே நடைபெறவேண்டும் என்ற உறுதியை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். தமிழக அரசின் கோப்புகள் அனைத்தும், கூடுமான வரையில் தமிழிலேயே இயங்கவேண்டும் என்று முடிவு செய்துள்ளோம்.

எல்லாத் துறைகளிலும், தமிழை ஆட்சிமொழியாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளில், நாங்கள் தொடர்ந்து முயலுவோம்.

கல்வி நிலையங்களிலும், ஆட்சி நிருவாகங்களிலும் 'தமிழ் - ஆங்கிலம்' என்ற இருமொழிக் கொள்கைக்கு ஏற்ற வகையில் இடங்கொடுக்கப்படும். தமிழகத்தின் எல்லாத் துறைகளிலும், நிலைகளிலும் 'தமிழ் மணம்' கமழ வேண்டும் என்பது எங்களது வேணவாவாகும்!''

*என்று குறிப்பிட்டேன்.*

தமிழக அரசின் இலச்சினையில் உள்ள கோபுரச் சின்னத்தில் இருந்த 'கவர்ன்மெண்ட் ஆப் மெட்ராஸ்' என்ற ஆங்கிலச் சொற்றொடர் அகற்றப்பட்டு, 'தமிழக அரசு' என்ற தமிழ்ச் சொற்றொடர் பதியப்பெற்றது.

அந்தச் சின்னத்தில் இடம் பெற்றிருந்த 'சத்தியமேவ ஜெயதே' என்ற வடமொழிச் சொற்றொடர் நீக்கப்பட்டு, 'வாய்மையே வெல்லும்' என்ற தமிழ்ச் சொற்றொடர் பொறிக்கப்பட்டது.

ஸ்ரீ, ஸ்ரீமதி, குமாரி என்ற அடைமொழிச் சொற்களுக்கு மாற்றாக, திரு, திருமதி, செல்வி என்ற அடைமொழிச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

தைத் திங்களின் மூன்றாவது நாளைத் 'திருவள்ளுவர் நாளாகக் கொண்டாட வேண்டும் என்றும், அந்த நாள் அரசு விடுமுறை நாளாக அமையும் என்றும் அரசாணையின் மூலம் அறிவிக்கப் பட்டது.

ஆண்டுதோறும், தைத் திங்கள் முதல் நாள் தொடங்கி, மார்கழித் திங்கள் இறுதிநாள் வரையில் ஆன ஓராண்டு காலத்தைத் 'திருவள்ளுவர் ஆண்டு' என்று குறிப்பிடவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

இந்திய அரசின் அனுமதிபெற்று 1967 சூலை 18ஆம் நாளன்று, 'மெட்ராஸ் ஸ்டேட்' என்ற பெயரை, 'தமிழ்நாடு மாநிலம்' என்று பெயர் மாற்றம் செய்யும் சட்டமுன் முடிவு ஒன்றை, நான் தமிழகச் சட்ட மன்றத்தில் கொண்டுவந்தேன். சட்ட மன்ற உறுப்பினர்கள் அனைவரின் முழு ஆதரவோடும், கரவொலியோடும் அந்தத் தீர்மானம் ஒரே மனதாக நிறைவேற்றப்பட்டது. அப்பொழுது முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் எழுந்து, 'தமிழ்நாடு' என்று முன்மொழிய, எல்லா உறுப்பினர்களும் 'வாழ்க!' என்று வழிமொழிந்தனர். தமிழகச் சட்டமன்றத்தில், 'தமிழ்நாடு வாழ்க!' என்ற வாழ்த்தொலி முழக்கம் மூன்று முறை திரும்பத்திரும்ப எழுப்பப்பட்டு, சட்டமன்றமே பெருமகிழ்ச்சியில் ஆழ்ந்தது.

*'தமிழ்நாடு' என்று பெயர்மாற்றம் செய்ததைத் தமிழக மக்கள் பெரும்பான்மையோரும் பேராவலோடு வரவேற்று, ஆங்காங்கு அது தொடர்பாக வெற்றி விழாக்களைக் கொண்டாடினர்.*

*அறிஞர் அண்ணாவின் ஆட்சிக்காலத்தில், கல்லூரிகளில், பட்டப்படிப்புக்களைத் தமிழிலே கொண்டுவருவதற்கான முயற்சிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டன.*

*சட்டமன்றப் பேரவை மேலவை ஆகியவற்றின் நடவடிக்கைகள் பெரும்பகுதி தமிழிலேயே நடைபெற வழிவகை செய்யப்பட்டது.*

*எல்லாத் துறைகளிலும் தமிழுக்கு நல்ல ஆக்கமும், ஊக்கமும் அளிக்கப்பட்டன.*

*அறிஞர் அண்ணாவின் ஆட்சிக் காலத்தில், இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு, சென்னையில் மிகச்சிறப்பாக நடத்தப் பெற்றது. தமிழை வளர்த்த பேரறிஞர் பெருமக்களின் சிலைகள் சென்னைக் கடற்கரைப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டன.*

## இந்தியின் ஆதிக்கம் அகற்றப்பட்டது

*காலமெல்லாம் இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடி வந்த அறிஞர் அண்ணா அவர்கள், முதலமைச்சர் பொறுப்பை ஏற்றதும், தமிழ்நாட்டிலிருந்து இந்தி மொழித் திணிப்பை அடியோடு நீக்கும் அரும் பணியில் ஈடுபட்டு, அதில் சிறப்பான வெற்றிகண்டார்.*

"தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ் - ஆங்கிலம் ஆகிய இரண்டுமொழிகள் மட்டுமே போதுமானவையாகும். இந்திமொழி தமிழ்நாட்டிற்குத் தேவைப்படாத ஒன்று. அதற்கு அறவே இடமில்லை. இனித் தமிழ்நாடு தமிழ் - ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையை மட்டுமே கடைப்பிடிக்கும்" என்ற *கருத்தமைந்த தீர்மானம், சட்ட மன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்களால் கொண்டுவரப் பட்டு, நிறைவேற்றப்பட்டது.*

*அறிஞர் அண்ணா அவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்த இருமொழிக் கொள்கையை, நல்ல தமிழார்வம் படைத்த தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும் மனதார வரவேற்றுப் பெரிதும் மகிழ்ந்தார்கள். நாடெங்கும் இருந்த மாணவர் பட்டாளங்கள் அது குறித்து வெற்றிவிழாக் கொண்டாடித் தமது பெரும் மகிழ்வைத் தெரிவித்துக் கொண்டன.*

## படி அரிசித் திட்டம்

*1967 பொதுத் தேர்தலில் தி.மு.கழகம் போட்டியிட்ட போது, அது தன் தேர்தல் அறிக்கையில், தி.மு.கழகம் தமிழக ஆட்சிப்பொறுப்பை ஏற்றால், குறிப்பிட்ட பெரு நகரங் களில், ஏழை எளிய மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற வீதத்தில் அரிசி வழங்கப்படும் என்று அறிவித் திருந்தது.*

*1967இல் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தமிழக ஆட்சி அமைந்தவுடன், சென்னை, கோவை ஆகிய இரண்டு பெருநகரங்களிலும், ஏழை எளிய மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடும் திட்டம் முன்னோடியாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.*

*எதிர்க்கட்சியினராக விளங்கிய காங்கிரசுக் கட்சியினர், இந்தத் திட்டத்திற்குக் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் தேர்தல் காலத்தில் பொது மக்களுக்குத் தாம் கொடுத்த வாக்குறுதியிலிருந்து எக்காரணங் கொண்டும் பின்வாங்கமாட்டேன் என்று உறுதியாக இருந்து, சொன்ன உறுதிமொழியை நிறைவேற்றி வைத்தார்.*

நீதிக்கட்சியின் வரவேற்பு

*தமிழவேள் பி.டி. இராசன் அவர்கள் தலைமையின் கீழ் இயங்கிவந்த நீதிக்கட்சியின் சார்பாக, 1967 ஏப்ரல் 20ஆம் நாள், தி.மு.க. அமைச்சரவையினர்க்குச் சென்னை இராயப் பேட்டை உட்லண்ட்ஸ் ஓட்டலில், வரவேற்பு விருந்து ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் அறிஞர் அண்ணா, நான், மற்ற அமைச்சர்கள் ஆகியோர் கலந்துகொண்டோம்.*

*அந்த விருந்தில் தி.மு.கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், நீதிக்கட்சியின் தலைவர்கள், திராவிட இயக்கப்பற்றுடைய வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் போன்ற பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.*

*தமிழவேள் பி.டி. இராசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பின்னர் நானும், அறிஞர் அண்ணாவும் பேசினோம். நான் பேசும்போது,*

> "தி.மு.கழகத்தினர்க்கு முன்னோடிகளாகவும், வழி காட்டிகளாகவும் விளங்கிவரும் தமிழவேள் பி.டி. இராசன் போன்ற நீதிக்கட்சியின் தலைவர்கள், எங்களது அமைச்

சரவையினர்க்கு அளிக்கும் வரவேற்பு விருந்தில் கலந்து கொள்வதில், நாங்கள் எல்லோரும் பூரிப்பும், பெருமிதமும் கொள்கிறோம்.

1921 முதல் 1936 வரை நீதிக்கட்சியினர் ஆண்டு, அவர்கள் விட்டுச் சென்ற சென்னை மாநில ஆட்சியை, அறிஞர் அண்ணா அவர்களின் சீரிய தலைமையிலுள்ள தி.மு. கழகமான திராவிட இயக்கம் மீண்டும் கைப்பற்றியிருப்பது, நீதிக்கட்சியின் பழம் பெருந்தலைவர்களுக்குப் பெருமகிழ்ச்சி யைத் தரும் என்று கருதுகிறேன்.

திராவிட இயக்கத்தின் மாபெருந் தலைவர்களான, டாக்டர் சி. நடேசனார், சர் பி.டி. தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர், பனகல் அரசர், பெரியார் இராமசாமி ஆகியோர் வகுத்துத்தந்த கொள்கைகளும், குறிக்கோள்களும், கோட்பாடுகளும் எங்களுக்கு வழிகாட்டுவனவாக அமையும் என்பதில் எங்களுக்குப் பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது.

நீதிக்கட்சியினர் கண்ட கனவுகளையெல்லாம் நனவாக்கித் தரும் பெரும் பொறுப்பினை, அறிஞர் அண்ணாவின் அமைச்சரவை ஏற்றிருக்கிறது.

நீதிக்கட்சியின் பழம் பெருந்தலைவர்கள் அனைவரும் எங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்பது மட்டுமல்லாமல், எங்களைச் சரியான நெறியில் வழி நடத்திச்செல்லவும் முயலவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழவேள் பி.டி. இராசன் அவர்களின் வரவேற்பையும், வாழ்த்துரைகளையும் பெறுவதை நாங்கள் பெரும் பேறாகக் கருதுகிறோம். அவருக்கும், ஏனைய நீதிக்கட்சியின் தலைவர்களுக்கும் எங்களது உளங்கனிந்த நன்றியை உவகைப் பெருக்கோடு தெரிவித்துக்கொள்கிறோம்.''

*என்று குறிப்பிட்டேன்.*

அடுத்து முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போது,

"நீதிக்கட்சியால் வளர்க்கப்பட்டு, அரசியலிலே ஆளாக்கி விடப்பட்ட நான், இன்றைய நிலையில், தமிழகத்தின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்கிறேன் என்று எண்ணிடும் போது, பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழவேள் பி.டி. இராசன் போன்ற நீதிக்கட்சியின் பழம் பெருந்தலைவர்கள், எனக்கு என்றென்றும், பாதுகாப்பாகவும், பக்கவலிவாகவும் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் அரசியல் பாடத்தை நீதிக்கட்சியினிடத்திலும், சமுதாயச் சீர்திருத்த - பகுத்தறிவுப் பாடங்களைத் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தினிடத்திலும் கற்றுக் கொண்டேன்.

என்னைப் பொறுத்தவரையில், மூன்று வகையில் ஆற்றலையும், பயனையும் பெற்றிருக்கிறேன். நீதிக்கட்சியி னிடம் எனக்குச் சில ஆண்டுகள் நெருங்கிய தொடர்பு இருந்ததால், அந்தக் கட்சிக்குரிய சிறப்பான ஆற்றலான பெருந்தன்மைப் போக்கினைப் பெற்றிருக்கிறேன்.

சுயமரியாதை இயக்கத்திடம் எனக்கு நீண்ட நெடுங் காலமாகவே தொடர்பு இருந்துவருவதால், தன்மான உணர்வைப் பெருமளவுக்குப் பெற்றிருக்கிறேன்.

காங்கிரசுக் கட்சியின் பெருந்தலைவர்களோடு நான் நெருங்கிப் பழகிவந்ததன் காரணமாக, அவர்கள் கையாண்டு வந்த இராசதந்திர முறையைக் கற்றுக்கொண்டுள்ளேன்.

இந்த மூன்றுவிதமான பண்புகளும், நான் எனது கடமை களைச் செவ்வனே செய்துமுடிக்கப் பெரிதும் துணையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நான் தமிழ்நாட்டு மக்களிடையே சமத்துவ நிலையும், சகோதரப் பண்பும் வளர அரும்பாடுபடுவேன். இட ஒதுக்கீட்டு முறையைச் சிறப்பாகவும், செம்மையாகவும் கையாளுவதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகியோரின் நிலை எல்லா வகையிலும் மேம்படப் பாடுபடுவேன்.

எதிலும் தமிழ் - எங்கும் தமிழ் - என்றும் தமிழ் - எப்படியும் தமிழ் என்ற கொள்கையை முழுமூச்சுடன் நிறை வேற்றுவேன்.

வசதி படைத்தோரிடம் வரியின்மூலம் பொருள் வளத்தை வாங்கி, ஏழை எளிய மக்களின் வாழ்வு ஓங்க அதனைப் பயன்படுத்துவேன்.

யாரையும் நான் எந்த வகையிலும் வீழ்த்தமாட்டேன்; வீழ்ந்து கிடப்பவர்களை எல்லா வகையிலும் தூக்கிவிடுவேன்.

பெரியாரின் சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளை எல்லா வழிகளிலும் நடைமுறைப்படுத்த முயலுவேன்.

நீதிக்கட்சியின் புகழையும், பெருமையையும் நிலை நாட்டுவேன்.

தமிழவேள் பி.டி. இராசன் போன்ற பெருந்தலைவர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில், எனது ஆட்சி நடைபெறும் என்பதைப் பெருமிதத்தோடு கூறிக்கொள் கிறேன்!"

*என்று குறிப்பிட்டார்.*

## மே நாள் விழா - அரசு விடுமுறை நாள்

*ஆண்டுதோறும் மேத் திங்கள் முதல் நாளை மே நாள் விழாவாகக் கொண்டாடும் நிலைமை, உழைக்கும் வர்க்கத்*

தினிடத்தே இருந்துவந்தது. அந்த நாளை ஆண்டுதோறும் திராவிட இயக்கம் மிகச் சிறப்பாகவே கொண்டாடிவந்தது.

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக ஆட்சிப்பொறுப்பை ஏற்ற 1967 ஆம் ஆண்டு முதல், 'மே முதல் நாள்' அரசு விடுமுறை நாளாகக் கொள்ளப்படும் என்று தமிழக அரசின் மூலம் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். உழவர் பெருங்குடியினரும், தொழிலாளர்களும் அறிஞர் அண்ணா அவர்களின் அறிவிப்பை வரவேற்றுப் பெரிதும் மகிழ்ந்தார்கள்.

1967 மே 1 ஆம் நாள், சென்னையில் தி.மு.கழகத்தின் சார்பாக நடைபெற்ற மே நாள் விழாப் பொதுக்கூட்டத்தில், அறிஞர் அண்ணா, நான், ஏனைய அமைச்சர்கள் சிலரும் கலந்துகொண்டு உரையாற்றினோம்.

அந்தக் கூட்டத்தில் நான் கலந்துகொண்டு பேசும்போது,

> "மே நாள் மேதினி எங்கும் கொண்டாடப்படும் ஒரு பெரும் உழைப்பாளர் நாளாகும்! இந்த நாள் உலகோர் அனைவரும் உழைப்புக்கு மதிப்பு அளிக்கும் நாளாகும்! இந்த நாள் உழைப்பாளர்களின் உண்மையான உழைப்பை உரிய முறையில் வலியுறுத்தும் நாள்! இந்த நாள் ஒவ்வொருவரும் உரிய கடமையைச் செய்யவேண்டும்; அதன்மூலம் தக்க உரிமையைப் பெறவேண்டும்." என்ற கொள்கையை நிலைநாட்டும் நாள்!
>
> இந்த நாள் 1886இல், அமெரிக்காவின், சிகாகோ நகரில், தொழிலாளர்கள் உரிமைகளுக்காகப் போராடி வெற்றிபெற்ற நாள்! இந்தநாளை உலகத் தொழிலாளர் நாளாக உலகு எங்கணும் கொண்டாடவேண்டும் என்று, 1889ஆம் ஆண்டில், பாரிசில் கூடிய உலகத் தொழிலாளர் மாநாட்டில் தீர்மானித்த நாள்!

இந்த நாளைத் தி.மு.கழகமும், தமிழக அரசும் கொண்டாடு வதில் பேருவகை கொள்கின்றன.

தொழிலாளர்களின் உரிமையும், கடமையும் ஒரு தராசில் உள்ள இரண்டு தட்டுக்களைப்போல் சம அளவில் அமைந்திருக்கவேண்டும்; தொழிலாளர்கள் கடமையைச் செய்துவிட்டு உரிமை கோரவேண்டும்; முதலாளிகள் உரிமையை வழங்கிவிட்டுக் கடமையைப் பெறவேண்டும்.

உழவர்களும் - தொழிலாளர்களும் எல்லா வகைகளிலும் உற்பத்தியைப் பெருக்கவேண்டும்; நாட்டின் வருவாயைப் பன்மடங்கு குவிக்கவேண்டும்; தனி நபர் வருமானத்தைப் பெருக்கவேண்டும்; வாழ்க்கைத் தரத்தை எல்லா வகையிலும் உயர்த்தவேண்டும்; எல்லோரும் எல்லா இன்றியமையாத் தேவைகளையும் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்; எல்லோரும் மனநிறைவுபெற்று மனமகிழ்ச்சி யோடு திகழ வேண்டும்; இவற்றையெல்லாம் நிறைவேற்ற மே நாள் விழா உணர்ச்சியையும், எழுச்சியையும் தந்து, ஊக்கத்தையும் ஆக்கத்தையும் கொடுக்கவேண்டும்'' *என்று குறிப்பிட்டேன்.*

*அறிஞர் அண்ணா அவர்கள் இறுதியில் சிறப்புரை ஆற்றியபின், கூட்டம் இனிது நிறைவு எய்தியது.*

*கூட்டத்திற்குக் கழகத் தோழர்களும், தொழிலாளத் தோழர்களும், பொதுமக்களும், பெருந்திரளினராக வருகை தந்து மே விழாக்கூட்டத்தினைச் சிறப்பித்தனர்.*

### இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு

*முதல் உலகத் தமிழ் மாநாடு, 1966ஆம் ஆண்டு, கோலாலம்பூரில் நடைபெற்றதற்குப்பிறகு, இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டினை, 1968 ஆம் ஆண்டு, தமிழகத்தின்*

தலைநகரான சென்னையில், மிகச்சிறப்பாக நடத்தவேண்டும் என்று, தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் எண்ணினார்கள்.

தமிழக அரசின் சார்பாக இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சென்னையில் நடத்த அறிஞர் அண்ணா உரிய முயற்சிகளை மேற்கொண்டார். மாநாட்டிற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவும், கண்காணிக்கவும், மாநாட்டு நிகழ்ச்சிகளை வரன்முறைப்படுத்திச் செயல்படுத்தவும் மாநாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைவராகவும், நான் துணைத் தலைவராகவும், கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன், பக்தவத்சலம், விசுவநாதம், பேராசிரியர் பில்லியாசோ, எம்.ஜி. இராமச்சந்திரன், மா. முத்துச்சாமி, செல்லப்பன், எஸ்.ஜி. ஹாட்சன், ஔவை நடராசன், கே.எஸ். மகாதேவன், தனிநாயக அடிகள், டாக்டர் கே.கே. பிள்ளை, அகிலன், இராமலிங்கனார், டாக்டர் வ.சுப. மாணிக்கம், அன்பு கணபதி, அப்துல் கபூர், சா. கணேசன், ம.பொ. சிவஞானம், டாக்டர் மு. வரதராசன், இராசா சர் முத்தையா செட்டியார், திருக்குறள் முனிசாமி, குன்றக்குடி அடிகளார், வ. சுப்பையாபிள்ளை, டாக்டர் சி. இலக்குவனார், கவிஞர் சுரதா, கோ. முத்துப்பிள்ளை, இரா. நாகசாமி, அப்துல் சமத், குடந்தை சுந்தரேசன், ஔவை சண்முகம், மயிலை சீனி. வேங்கடசாமி போன்றவர்கள் உறுப்பினர்களாகவும் இருந்து பணியாற்றி வந்தோம்.

உலகத் தமிழ் மாநாடு இரண்டு வகையாகப் பிரிக்கப் பட்டுத் தனித்தனியாக நடைபெற்றது. ஒன்று ஆராய்ச்சி

அறிஞர்கள் மட்டுமே கூடி, ஆய்வுக்கட்டுரைகளைப் பற்றி ஆய்வு நடத்தும் ஆராய்ச்சி அரங்கம். இந்த அரங்கம் சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் நடைபெற்றது. ஆய்வரங்கத்தின் பல்வேறு பிரிவுகள் தனித்தனியாக அமர்ந்து ஆய்வு நடத்தின. இந்த ஆய்வரங்கம் ஏழு நாட்கள் தொடர்ந்து காலை, மாலை என்ற இரண்டு வேளைகளிலும் நடைபெற்றது.

மற்றொன்று பொதுமக்கள்கூடி, சிறப்புச் சொற்பொழிவு களைக் கேட்டறியும் விதத்தில் அமைந்த பொது அரங்கமாகும். இது சென்னைத் தீவுத்திடலில் போடப் பட்டிருந்த மாபெரும் பந்தலில் நடைபெற்றது. இந்த அரங்கமும் ஏழு நாட்கள் காலை மாலை இரண்டு வேளை களிலும் நடைபெற்றது. தமிழ்நாடு, இந்தியாவின் பிற மாநிலங்கள், வெளி நாடுகள் ஆகியவற்றிலிருந்து வருகை தந்திருந்த தமிழ்ப் பேரறிஞர் பெருமக்கள் பலரும், பொது அரங்கில் கலந்துகொண்டு, பல்வேறு சிறப்புத் தலைப்புக் களின் கீழ் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

அறிஞர் அண்ணாவும், நானும் இரண்டு அரங்குகளிலும் கலந்துகொண்டு, சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றினோம்.

மாநாட்டின் பொது அரங்கில் நாள்தோறும் இசை - நாடகம் - பற்றிய கலை நிகழ்ச்சிகள் தொடர்ந்து ஏழு நாட்களிலும் மிகச்சிறப்பாக நடைபெற்றன.

மாநாடு 1968 சனவரி முதல் நாளன்று தொடங்கப்பட்டது. அன்று பகற்பொழுதில் மாபெரும் ஊர்வலம் சைதாப் பேட்டையில் தொடங்கி, மலைச் சாலை (அண்ணா சாலை) வழியாக வந்து, இறுதியில் தீவுத்திடலை அடைந்தது.

ஊர்வலத்தில் பல்வகைப்பட்ட இசைக்குழுவினர் இன்னிசை எழுப்பிவந்தனர். இளம்பெண்கள் பல்வேறு வகையான ஆடல்பாடல் நாட்டியக் கூத்துக்களை நடத்தி வந்தனர்.

ஊர்வலத்தின் முன்பகுதியில் 12 யானைகள், 25 குதிரைகள் அணிவகுத்துச் சென்றன. தமிழ் மூவேந்தர் வேடந்தாங்கியவர்கள் யானைகளின் மீதும், குதிரைகளின் மீதும் அமர்ந்துசென்றனர்.

60க்கும் மேற்பட்ட நாதசுரக் குழுவினர் இன்னிசை முழங்கிச் சென்றனர். பள்ளி - கல்லூரி மாணவ மாணவி யரின் அணிவகுப்பு, பள்ளி - கல்லூரி தேசிய மாணவப் படையினரின் அணிவகுப்பு, காவல் துறையினரின் அணிவகுப்பு, தமிழ்ப்புலவர் பெருமக்களின் அணிவகுப்பு போன்றவை ஊர்வலத்தில் கலந்துகொண்டன.

தமிழ் நாகரிகம் - பண்பாடு - வரலாறு - தமிழகச் சிறப்பு ஆகியவற்றை உணர்த்தும் வண்ணவண்ணக் காட்சி வண்டிகள் ஊர்வலத்தில் இடம்பெற்றிருந்தன.

இந்தியாவின் குடியரசுத் தலைவராக விளங்கிய டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள், சிறப்பான மேடை ஒன்றில் அமர்ந்திருந்து ஊர்வலத்தைப் பார்வையிட்டார். அவருக்கு இருபக்கத்திலும் தமிழக ஆளுநர், முதலமைச்சர் அறிஞர் அண்ணா, நான், ஏனைய அமைச்சர்கள், தமிழ்ப்பேரறிஞர்கள், கலைஞர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், அதிகாரிகள், சிறப்பு அழைப்பினர் போன்றோர் அமர்ந்திருந்து ஊர்வலத் தைக் கண்டுகளித்தோம். 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் சாலையின் இருமருங்கிலும் நின்று, பேரார வத்தோடும், பேரெழுச்சியோடும் ஊர்வலத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டையொட்டி, நல்ல தமிழ் வளர்த்த சீரியோரின் சிலைகள் சென்னை மாநகரில் திறந்துவைக்கப்பட்டன.

1968 சனவரி முதல் நாளன்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவச்சிலை, சென்னை மலைச் சாலையில் (இப்பொழுது அண்ணாசாலை) நீதிக்கட்சியின் தலைவர் களில் தலைசிறந்த ஒருவரான சர் ஏ. இராமசாமி முதலியார் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

விழாவிற்கு நான் தலைமை தாங்கி சர் ஏ. இராமசாமி முதலியார் உள்ளிட்ட விழாவிற்கு வருகைதந்து சிறப்பித்த பெரியவர்களையும், பெருந்திரளான பொதுமக்களையும் வரவேற்றுப் பேசினேன்.

அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுத்திறன், ஆற்றல் திறன், பண்பாட்டுத் திறன், சிந்தனை ஆற்றல் திறன், செயலாற்றல் திறன், செய்து முடிக்கும் திறன், சமுதாய - அரசியல் தொண்டு, அவருடைய பேச்சாற்றல், எழுத் தாற்றல், நிருவாகத் திறமை, தலைமைச் சிறப்பு போன்ற வற்றை நான் விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறினேன்.

சிலையைத் திறந்துவைத்த சர் ஏ. இராமசாமி முதலியார் அவர்கள், அறிஞர் அண்ணாவின் பேச்சுத் திறமை, எழுத்துத் திறமை, அவரது தனிப்பெருஞ் சிறப்புக்கள் ஆகியவை பற்றி அழகான ஆங்கிலத்தில், சிறப்பான முறையில் எடுத் துரைத்தார்.

அறிஞர் அண்ணாவின் சிலையை உருவாக்கித்தரும் பொறுப்பைப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

1968 சனவரி 2ஆம் நாளன்று, சென்னைக் கடற்கரைச் சாலையில், திருவள்ளுவர் சிலையை நான் திறந்து வைத்தேன். அந்தச் சிலையை நடிகர் திலகம் சிவாஜிகணேசன் வழங்கினார்.

கடற்கரைச் சாலையில், சிலப்பதிகாரக் காவியத் தலைவி கண்ணகியின் உருவச் சிலையை கலைஞர் கருணாநிதி திறந்து வைத்தார். தமிழகக் கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றின் மாணவ மாணவியர்களின் நன்கொடை மூலம் அந்தச் சிலை உருவாக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி மன்றத்தினர் அளித்த பாரதியார், பாரதிதாசன், ஔவையார், வ.உ. சிதம்பரனார் ஆகியோரின் சிலைகள் கடற்கரைச் சாலையில் சிறப்பாக நிலைநாட்டப் பட்டன.

தமிழறிஞர்கள் ஜி.யூ. போப், கால்டுவெல் ஆகியோரின் சிலைகள் புராட்டஸ்டெண்ட் கிறித்துவச் சமயத்தினரால் வழங்கப்பட்டன. அவைகளும் கடற்கரைச் சாலையில் அமைக்கப்பட்டன.

கத்தோலிக்கக் கிறித்தவர்களின் சார்பாக அளிக்கப்பட்ட வீரமாமுனிவர் சிலையும் கடற்கரைச்சாலையில் நிறுவப் பட்டது.

கோவை மாநகர் பெருமக்களின் சார்பாக வழங்கப்பட்ட கம்பர் சிலையும், கடற்கரைச் சாலையில் திறந்துவைக்கப் பட்டது.

மாநாட்டின் ஆய்வரங்கத்திலும், பொது அரங்கத்திலும் அயல் நாடுகளைச் சேர்ந்த இருநூற்றுக்கு மேற்பட்ட தமிழறிஞர்களும், இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்து வருகைதந்த நூற்றைம்பதுக்கு மேற்பட்ட தமிழறிஞர்களும்,

தமிழகத்தைச் சேர்ந்த நானூற்றுக்கு மேற்பட்ட தமிழறிஞர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

மாநாட்டின் தொடக்கவிழா மிகப் பெரிய அளவில் சென்னைக் கடற்கரையில், கலங்கரை விளக்கப் பகுதியில் நடைபெற்றது. தொடக்க விழாவைக் காண ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கடற்கரை மணற்பரப்பில் திரண்டிருந்தனர்.

விழாவிற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார். இந்தியக் குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். தமிழக அரசின் சார்பாகவும், இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின் வரவேற்புக்குழுவின் சார்பாகவும், மாநாட்டுக்குழுவின் துணைத்தலைவர் என்ற முறையில், நான் வரவேற்புரை நிகழ்த்தினேன். நான் பேசும்போது தமிழின் தனிப்பெருஞ் சிறப்புக்கள், தமிழர் வரலாற்றின் மேன்மைகள், தமிழர் பண்பாட்டின் உயர்வு, தமிழர் நாகரிகத்தின் மேம்பாடு ஆகியவைபற்றிச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் எடுத்துரைத்தேன்.

தொடக்கவிழாவில் பெரியார் இராமசாமி, காமராசர், குன்றக்குடி அடிகளார், கி.ஆ.பெ. விசுவநாதம், பிஷப் நியூபிகின், பிஷப் அருளப்பா, இலங்கை அமைச்சர் தமிழ்ச் செல்வம், மலேசியா அமைச்சர் மாணிக்க வாசகம், தனிநாயக அடிகள் போன்றவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள், திருக்குறள் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகத் 'திருக்குறள் ஆராய்ச்சி மையம்' அமைக்க, சென்னைப் பல்கலைக் கழகம், மதுரைப்

பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களுக்கும், ரூபாய் மூன்று இலட்சம் வீதம், ரூபாய் ஒன்பது இலட்சத்தை வைப்பு நிதியாக வைத்துப் பயன்படுத்த அதற்கான காசோலைகளை வழங்கினார்.

மாநாட்டு ஆய்வரங்கில் நான் கலந்துகொண்டு, "தமிழர் நாகரிகமும் பண்பாடும்" என்ற தலைப்பின்கீழ் சிறப்புரை ஆற்றினேன். நான் பேசும்போது குறிப்பிட்டதாவது :-

> "உலகில் எத்துணையோ நாகரிகங்கள் தோன்றி வளர்ந்து வந்திருக்கின்றன. அவற்றில் சில மறைந்து விட்டன; சில சிதைந்துவிட்டன; சிலமட்டுமே இருந்துவருகின்றன.
>
> தோன்றி வளர்ந்த நாகரிகங்களில் குறிப்பிடத்தக்க நாகரிகங்கள், இருபத்து மூன்று என்று ஆராய்ச்சி வல்லுநர்களால் குறிப்பிடப்படுகின்றன. அவற்றுள்ளும் மிகச்சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை என்று போற்றப்படு பவை, தமிழர் நாகரிகம், ஆரியர் நாகரிகம், சுமேரியர் நாகரிகம், அராபியர் நாகரிகம், எபிரேனியர் நாகரிகம், எகிப்தியர் நாகரிகம், கிரேக்கர் நாகரிகம், உரோமானியர் நாகரிகம் போன்ற ஒரு சிலவே ஆகும்.
>
> உலக நாகரிகங்களில் முதன்முதலாகச் செம்மைப்பட்டுச் சிறப்பாக வளர்ந்துவந்த நாகரிகம் தமிழர் நாகரிகமே ஆகும் என்று, வரலாற்று ஆராய்ச்சி வல்லுநர்கள் பலரும் குறிப்பிட்டுள்ளனர்.
>
> தமிழர் நாகரிகம் கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் தோன்றியது என்றும், பின்னர் அது விரிந்து பரவத் தொடங்கித் தென்னாட்டில் திராவிட நாகரிகமாக மலர்ந்தது என்றும், பின்னர் அது சிந்துவெளி நாகரிகமாக, அதாவது

மகஞ்சதாரோ - அரப்பா நாகரிகமாக மிளிர்ந்தது என்றும், பின்னர் அதுவே சுமேரியர் நாகரிகமாக மாறிற்று என்றும், அடுத்து அதுவே அராபியர் நாகரிகமாக ஆயிற்று என்றும், பின்னர் அதிலிருந்து எபிரேனியர் நாகரிகம் தோற்றம் பெற்றது என்றும், பின்னர் அதிலிருந்து எகிப்தியர் நாகரிகம் உருப்பெற்று வளர்ந்தது என்றும், பின்னர் அதுவே கிரேக்கர் நாகரிகமாகச் சிறந்து விளங்கிற்று என்றும், அடுத்து அதிலிருந்து உரோமானியர் நாகரிகம் உருப்பெற்றது என்றும், பின்னர் அதுவே ஐரோப்பாக் கண்டத்தின் நாகரிகமாகப் பரவி நின்று காட்சி அளித்தது என்றும், இந்தியாவில் நீண்ட காலம் வரலாற்றுத் துறை ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டிருந்த அருட்டிரு ஈராசுப் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார்.

மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள நாகரிகங்கள் பலவற்றிற்கும் தாயாகவும், முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்கியது தமிழர் நாகரிகமான திராவிட நாகரிகமே ஆகும் என்று அறுதியிட்டும் உறுதியாகவும் அவர் கூறியுள்ளார். அதுகாரணம் பற்றித்தான், அவர் தம்மை "நான் ஸ்பெயின் நாட்டிலிருந்து வந்த திராவிடன்" (I am a Dravidian from Spain) என்று சொல்லிக்கொள்வதிலே பூரிப்பும் பெருமையும் கொண்டார்.

வரலாற்று ஆராய்ச்சி அறிஞர் பெருமக்கள், உலகிலுள்ள பல்வேறு மக்கள் இனத் தொகுப்புக்களைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு இரண்டு அளவு கோல்களைப் பயன்படுத்தி வருகின்றனர். ஒன்று 'நாகரிகம்' (Civilisation) என்ற அளவுகோல். மற்றொன்று, 'பண்பாடு' (Culture) என்ற அளவுகோல்.

'நாகரிகம்' என்பது மனிதனது புறத்தோற்றங்களின் வளர்ச்சியையும், சிறப்பையும், செம்மையையும், தனித்

தன்மையையும் குறிப்பதாகும். 'பண்பாடு' என்பது, மனிதனின் அகவுணர்வுகளின் வளர்ச்சியையும், சிறப்பையும், செம்மையையும், தன்மையையும் குறிப்பதாகும்.

மனிதன் தன் அறிவுத்திறன், ஆற்றல்திறன், சிந்தனைத் திறன், செயற்படுத்தும் திறன் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு, பேணி வளர்த்துவரும், சுவையான உணவு - அழகான உடை - வனப்புமிக்க அணிகலன்கள் - வசதியான உறையுள் - வாய்ப்பான போக்குவரத்துப் பொறிகள் - செயற்கை வளம் மிகுந்த நாடு - நலம் மிகுந்த நகரங்கள் - கல்விச் சாலைகள் - கலைக் கூடங்கள் - இயல் - இசை - கூத்து - நாடகம் - நாட்டியம் - ஓவியம் - சிற்பம் - விளையாட்டு - வளர்ந்து நிற்கும் வாணிகம் - சிறந்து விளங்கும் தொழிற்சாலைகள் - அழகு மிகுந்த சாலைகள் - வனப்பு செறிந்த பூஞ்சோலைகள் போன்றவை, புறத் தோற்றத்தின் பொலிவினை வெளிப்படுத்தும் நாகரிகக் கூறுபாடுகளாகும்.

மனிதன் தன், சிந்தனையாற்றலாலும் அறிவுத் திறத்தாலும், உள்ளுணர்வுத் திறத்தாலும் உள்ளத்தைப் பண்படுத்திப் பண்படுத்தி, அன்புடையவன் - அருளுடையவன் - ஈவுடையவன் - இரக்கமுடையவன் - பண்புடையவன் - பக்குவமுடையவன் - வீரமுடையவன் - தீரமுடையவன் - ஊக்கமுடையவன் - உணர்வுடையவன் - மானமுடையவன் மரியாதையுடையவன் - பற்றுடையவன் - பணிவுடையவன் - தன்னலங்கருதாதவன் - பிறர்நலம் பேணுபவன் - உடல் பொருள் உயிரை ஈபவன் என்ற முறையில் பெயரெடுப்பது போன்றவை அகத்தோற்றப் பொலிவை உணர்த்தும் பண்பாட்டுக் கூறுபாடுகளாகும்.

தமிழர்கள் மிகப்பெருந்தொன்மைக் காலந்தொட்டு வாழ்வியலில், மிக்ச் சிறந்த நாகரிகம் வாய்ந்தவர்களாகவும்,

உயர்ந்த பண்பாட்டைக் கொண்டவர்களாகவும் வளர்ந் தோங்கி வந்திருப்பதன் காரணமாகத்தான், திராவிடர்ப் பண்பாடும், நாகரிகமும், உலகப் பேரறிஞர்கள் பலராலும் சிறப்பித்துச் சொல்லப்படுகின்றன.

உலகில் அறிவியற் கலைகளையும், கலையியற் கலை களையும் எந்த நாடு சிறப்பாகவும், செம்மையாகவும் வளர்த்துக்கொண்டு வந்திருக்கிறதோ, அந்தநாடு நாகரிகத் திலும், பண்பாட்டிலும் மேம்பட்டதொரு நாடாகக் கருதப் படுகின்றது. இந்த இலக்கணத்திற்கு ஏற்ப, தமிழகம் வளர்ந்துவந்த காரணத்தால்தான், பண்டைத்தமிழகம் நாகரிகம் வாய்ந்த ஒன்று என்றும், பண்பாடு சிறந்த ஒன்று என்றும் போற்றப்படுகின்றது.

அறிவு செறிந்த அழகுக் கலைகள் பல தமிழகத்தின் புகழையும், பெருமையையும் மிகச் சிறப்பான முறையில் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றன.

அவைகளில், இலக்கியக்கலை - இசைக்கலை - நாட்டியக் கலை - கூத்துக்கலை - நாடகக்கலை - சிற்பக்கலை - கட்டடக்கலை - சித்த மருத்துவக்கலை - விளையாட்டுக் கலை - சமையற்கலை போன்றவை குறிப்பிடத்தகுந்தவை களாகும்.

இலக்கியக் கலையின்பாற்பட்ட தொல்காப்பியம் திருக்குறள் - அகநானூறு - புறநானூறு - நற்றிணை - குறுந்தொகை - ஐங்குறுநூறு - கலித்தொகை - பரிபாடல் - பதிற்றுப்பத்து - பத்துப்பாட்டு - நாலடியார் - சிலப்பதிகாரம் - மணிமேகலை - கல்லாடம் - பெருங்கதை - தேவாரம் - திருவாசகம் - நாலாயிரத்திவ்யப் பிரபந்தம் - பெரியபுராணம் - சீவகசிந்தாமணி - வளையாபதி - குண்டலகேசி - கம்ப இராமாயணம் - வில்லிபாரதம் - பட்டினத்தார் பாடல் -

தாயுமானவர் பாடல் - இராமலிங்க வள்ளலார் திருவருட்பா - தேம்பாவணி - சீறாப்புராணம் - சித்தர் பாடல்கள் - பல்வேறு வகைப்பட்ட கலம்பகங்கள் - அந்தாதிகள் - அம்மானைகள் - பிள்ளைத் தமிழ்கள் - பரணிகள் - பள்ளுகள் - தூது விடுக்கள் - பாரதியாரின் புதுமைக் கவிதைகள் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் புரட்சிக் கவிதைகள் போன்றவையெல்லாம், தமிழ்மொழி பெற்றுள்ள அரும்பெரும் இலக்கியச் செல்வங்களாகும்.

தமிழ் இலக்கியச்செல்வங்கள் பலவும், தமிழர் பண்பாட்டை வளர்க்கப் பெரிதும் பயன்பட்டு வந்திருக்கின்றன.

தமிழகத்தின் இசைக்கலை - நாட்டியக்கலை - கூத்துக் கலை - சிற்பக்கலை - கட்டடக்கலை போன்றவை, தமிழர் நாகரிகத்தின் சிறப்பைத் தெள்ளத்தெளிவாக விளக்குவன வாகும்.

இந்த ஆய்வரங்கில் கூடியுள்ள அனைவரும், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல், இனிதாவது எங்கும் காணோம்" என்று சொல்லிப் பெருமிதங்கொள்கிறோம்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும், மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!" என்று முழங்குகிறோம்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்ப்பண்பாடு!"

*இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின் பொது அரங்கில் நான் கலந்துகொண்டு தமிழ்மொழியின் தனிப்பெருஞ் சிறப்புக்களைப் பற்றிப் பேசினேன். நான் பேசியபோது குறிப்பிட்ட கருத்துக்களின் சுருக்கம் வருமாறு :-*

"தமிழுக்கு அமுது என்று பேர் - அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!" என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் முழங்கினார்.

தமிழுக்குத் தனிப்பெரும் மதிப்பை அளிக்க, அதனைப் பலவகையிலும் வளர்க்க, அதற்கு உரிய இடம் நல்க, அதன் அருமை பெருமைகளை உணர நாம் அனைவரும் இங்குக் கூடியுள்ளோம்.

தமிழ்மொழியானது, இயற்கையாகவே தோன்றி, இயற்கை யோடு இணைந்து வளர்ந்து, இயற்கையோடு இயைந்து நின்று பொலிவோடும், வலிவோடும் திகழும் மொழியாகும்.

தமிழ்மொழி இயற்கை அழகையும்,செயற்கைப் பொலிவை யும் ஒருங்கே கொண்டதாகும்.

தோற்றக்காலத்தைக் கணக்கிடமுடியாத அளவுக்குத் தொன்மை வாய்ந்ததாகும்.

பழைமைக்குப் பழைமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் விளங்கும் பொற்புள்ள மொழியாகும்.

காலங்கள் பல கடந்தாலும், காலமாகாததாகும்.

மூத்தமொழி என்றாலும், முதுமைக்கோலம் பூணாமல், கன்னித் தமிழாகவே காட்சி அளிக்கும் மொழியாகும்.

இனிமையான மொழி; வளமையான மொழி; எளிமையான மொழி என்று போற்றப்படுவதாகும்.

தொண்டைக்கு அப்பால் போகாமல், இப்பாலேயே, பிறக்கக் கூடிய வல்லோசை, மெல்லோசை, இடையோசை ஆகிய வற்றைக் கொண்டதாகும்.

எழுத்தோசைகளைக் கூட்டினாலே, சொல்லோசை பிறக்கும் என்ற சிறப்புத் தன்மையைக் கொண்டதாகும்.

ஐந்து எழுத்துக்களுக்குள்ளாகவே பெரும்பாலான சொற் களையெல்லாம் உருவாக்கக்கூடிய திறன் படைத்ததாகும்.

சிறப்பு 'ழ'கரத்தையும், சிறப்பு 'ற'கரத்தையும், சிறப்பு 'ன'கரத்தையும் தனக்கே உரிய எழுத்துக்களாகக் கொண்ட மொழியாகும்.

உலகமொழிகள் பலவும் 'ந', 'ம' என்ற இரண்டு எழுத்துக் களை மட்டுமே, மூக்கின் துணையோடு பிறக்கும் மெல்லோசை எழுத்துக்களாகக் கொண்டிருக்கின்றன. தமிழ்மொழியோடு தொடர்புகொண்ட வடமொழி 'ங', 'ஞ', 'ண', 'ந', 'ம' என்ற ஐந்து மெல்லோசை எழுத்துக்களைக் கொண்டிருக்கிறது. ஆனால், தமிழ்மொழி மட்டும் 'ங', 'ஞ', 'ண', 'ந', 'ம', 'ன' என்ற ஆறு மெல்லோசை எழுத்துக்களைச் சிறப்பாகப்பெற்றிருக்கிறது.

தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கோண்ட், கூ, ஓராயான் போன்ற பலமொழிகளைப் பெற்றெடுத்த பிறகும், தமிழ்மொழி சீரிளமை குன்றாமல் இருந்துவருகிறது.

தமிழ்மொழி வரிவடிவில் எழுத்துக்கள் ஒன்றோ டொன்று பிணையாமல், பிறழாமல் தனித்தனியாக நின்று ஓசையில் ஒன்று சேர்ந்து சொற்களை உணர்த்தும் தன்மையுடைய தாகும்.

இல்லாத புதிய ஓசையைப் பெறுவதற்கு ஆங்காங்கு, 'ஃ' என்ற ஆய்த எழுத்து, உரியமுறையில் பயன்பட்டு வருகிறது.

தமிழ்மொழி 'குற்றியலுகரம்' என்ற தனிச்சிறப்புடைய எழுத்துத்தன்மையைக் கொண்டிருக்கிறது.

உயிர் - மெய் - உடன்படுமெய் - குறில் - நெடில் - இடைச்சொல் - உரிச்சொல் - சாரியை - உயிரீற்றுப் புணரியல் - மெய்யீற்றுப் புணரியல் - ஒற்று - எழுவாய் - பயனிலை - செயப்படுபொருள் என்பனபோன்ற இயற்கையோடு இயைந்த காரணப் பெயர்களைக் கொண்டது தமிழ் ஆகும்.

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து இலக்கியச் செறிவுடையதாய், இலக்கணக் கட்டுக் கோப்பு உடையதாய் வளர்ந்துவரும் மொழி தமிழ் மொழியாகும்.

வேறு எந்த மொழியின் துணையுமில்லாமல் தானே தனித்து இயங்கவல்ல மொழியாகும்.

தமிழ்மொழி தொன்றுதொட்டு அன்பு - அருள் - அறம் - அடக்கம் - அமைதி - அறிவு - ஆற்றல் - உண்மை - உழைப்பு - நேர்மை - நாணயம் - உயர்வு - ஒழுக்கம் - இரக்கம் - ஈகை - வீரம் - தீரம் - காதல் - கடமை - நீதி - நெறி போன்ற பண்பாடுகளை வற்புறுத்தி வருவதாகும்.

'உள்ளுறை உவமம்' என்னும் அணியைத் தனிச் சிறப்பாகக் கையாளும் பாங்குகொண்டது தமிழ் மொழியாகும்.

அறநெறிகளை, வற்புறுத்திக் கூறும் செய்யுட்களையும், நூல்களையும் மிகவாகக் கொண்டது தமிழாகும்.

இயல் - இசை - இயக்கம் என்னும் முத்தன்மையை யுடையது தமிழ் என்பதை உணர்த்தும் முறையில் 'முத்தமிழ்' என்று போற்றிப் புகழப்படுவது தமிழ் மொழியாகும்.''

*அறிஞர் அண்ணா அவர்களின் பெருமுயற்சியால் கூட்டப்பெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு, சென்னையில், மிகச்சிறப்பாகவும், செம்மையாகவும், புகழோடும், பெருமையோடும் நடந்தேறியது.*

*மாநாட்டின் ஊர்வலம், கண்காட்சி, பொது அரங்கம், ஆய்வரங்கம் ஆகியவற்றில் பல இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு மகிழ்ச்சியுற்றார்கள்.*

## கோட்டையில் அறிஞர் அண்ணா உருவப்படத் திறப்பு விழா

*சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில், 1968 பிப்ரவரி 2ஆம் நாளன்று, தமிழக அரசின் தலைமைச் செயலக ஊழியர்*

சங்கத்தின் சார்பாக அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத் திறப்புவிழா நடைபெற்றது.

அறிஞர் அண்ணாவின் உருவப்படத்தைப் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் திறந்துவைத்தார். விழாவிற்கு நான் தலைமை தாங்கினேன்.

பெரியார் அவர்கள் பேசும்போது அறிஞர் அண்ணா அவர்களின் அருமை பெருமைகளைப் பற்றியும், அவரது சிந்தனை ஆற்றல், செயலாற்றல், கொள்கைப் பிடிப்பு, தமிழுக்கும் தமிழர்க்கும் அவர் ஆற்றிவந்துள்ள தொண்டுகள் போன்றவைபற்றியும் விரிவான முறையில் குறிப்பிட்டார்.

நான் பேசும்போது குறிப்பிட்ட ஒருசில கருத்துக்கள் வருமாறு :-

> ''அறிஞர் அண்ணா அவர்கள் வீழ்ச்சியுற்றுக் கிடந்த தமிழகத்திற்கு எழுச்சி தந்தவர்; விசையொடிந்து கிடக்கும் உள்ளங்களுக்கெல்லாம் உணர்ச்சி ஊட்டியவர்; சமுதாயத்திலே நிலவிவரும் சூது - சூழ்ச்சி - வஞ்சகம் - பொய் - புனைசுருட்டு - பித்தலாட்டம் - மோசடி போன்ற தீயவற்றையெல்லாம் தொகை தொகையாக எதிர்நிறுத்தி, அவற்றைத் தூள்தூளாக ஆக்கிக் காட்டியவர்; அரண்மனையில் மட்டும் தவழ்ந்துகொண்டிருந்த அழகுத் தமிழை அரசமரத்தடிக்குக் கொண்டுவந்தவர்; ஏழையரின் சிரிப்பிலே இன்பத்தைக் காண்பவர்; கத்தியைத் தீட்டாமல் புத்தியை மட்டும் தீட்டச் சொல்லுபவர்; மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்று பகர்பவர்; வேட்டு முறையில் நம்பிக்கை வைக்காமல், ஓட்டு முறையில் மட்டும் நம்பிக்கை வைப்பவர்; சனநாயகப் பண்புக்கும் - முறைக்கும் மிகுந்த மதிப்பு அளிப்பவர்; மனிதப் பண்புக்கு மதிப்பு அளித்து வாழ்ந்துவருபவர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளர்; சீரிய எழுத்தாளர்; சிறப்பான கட்டுரையாளர்; போற்றுதலுக்குரிய சிறுகதை ஆசிரியர்; பாராட்டுவதற்குரிய பெருங்கதை ஆசிரியர்; சிறந்த நூலாசிரியர்; நாவலாசிரியர்; நாடக ஆசிரியர்; நடிகர்; நடிப்பாசிரியர்; திரைப்படக் கதை ஆசிரியர்; வசன ஆசிரியர்; நாளிதழ் - வார இதழ் ஆசிரியர்; திருந்திய பகுத்தறிவுவாதி; சீர்திருத்தவாதி; அரசியல் தலைவர்; அறப்போர் வீரர்; விடுதலை வீரர்; ஆட்சித் தலைவர்; கலைஞர்; கவிஞர்; ஓவியர்; பெரியாரின் பெருந் தொண்டர்; தமிழகத்தின் ஒப்பற்ற ஒரு பெருந்தலைவர்.

அறிஞர் அண்ணா ஏழைமையானவர்தான்; ஆனால் மோழையானவர் அல்லர்; அவர் அறிவு வலிமையுடையவர்; ஆனால் பண வலிமையுடையவரல்லர்; எளிமையானவர்; ஆனால் ஏற்றம்பல கொண்டவர்; ஆடம்பரம் அற்றவர்; ஆனால் அடக்கம் உடையவர்; படாடோபமற்றவர்; ஆனால் பண்பு நிறைந்தவர்; அவசரப்படாதவர்; ஆனால் எதையும் ஆழ்ந்து சிந்திப்பவர்; ஆரவாரம் அற்றவர்; ஆனால் கொள்கை அழுத்தம்கொண்டவர்.

அறிஞர் அண்ணா அவர்கள் அவரது பேச்சில் சொல்லுக்குச் சொல் சுவை கூட்டுபவர்; பொருளுக்குப் பொருள் ஒளி ஊட்டுபவர். அவர் எங்கும் தமிழ் - எதிலும் தமிழ் - என்றும் தமிழ் - எப்படியும் தமிழ் என்று முழங்கிவருபவர். தமிழ் - ஆங்கிலம் மட்டும் போதும் என்ற இருமொழிக் கொள்கையை நிலை நாட்டியவர்; 'சென்னை மாநிலம்' என்ற பெயரை மாற்றித் 'தமிழ்நாடு மாநிலம்' என்று பெயர் சூட்டியவர். தமிழை எல்லாத் துறைகளிலும் ஆட்சிமொழி ஆக்க அரும்பாடுபட்டு வருபவர்.

அறிஞர் அண்ணாவின் சிந்தனைத் திறனாலும், செயலாற்றல் திறனாலும் தமிழும், தமிழகமும் மறுமலர்ச்சி பெற்று வருகிறது.

தமிழால் அறிஞர் அண்ணா வளர்ந்தார், அறிஞர் அண்ணாவால் தமிழ் வளர்ந்தது. அவர் மூத்த புலமையையும், முதிரா இளமையையும், முத்தமிழ்ச் செழுமையையும், முருகிய தன்மையையும் கொண்டவர். இத்தகைய அரும்பெருஞ் சிறப்புக்களைக்கொண்ட அறிஞர் அண்ணாவின் திருஉருவப் படத்தைத் திறந்துவைக்கப் பகுத்தறிவு இயக்கத் தந்தை பெரியார் அவர்களே நேரில் வந்திருப்பது கிடைத்தற்கரிய பெரும்பேறாகும்.

அறிஞர் அண்ணாவின் ஆசானாகிய பெரியார் அவர்கள் வருகை தந்திருப்பது, நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியையும், விழாவிற்குப் பெருஞ்சிறப்பையும் அளிப்பதாகும்.''

## அறிஞர் அண்ணாவின் ஆட்சியில் முக்கியச் சாதனைகள்

*அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, என்றென்றும் நெஞ்சில் நீக்கமறத் தங்கும் வகையில், சில முக்கியச் சாதனைகளை நிறைவேற்றினார்.*

1. சென்னைக் கோட்டையில் ''தமிழக அரசு தலைமைச் செயலகம்'' என்ற ஒளிப்பெயர் பலகையைத் திறந்து வைத்தார்.

2. 'சென்னை மாநிலம்' என்று இருந்த பெயரை மாற்றித் 'தமிழ்நாடு மாநிலம்' என்று பெயர் சூட்டும் தீர்மானத்தைச் சட்டமன்றப் பேரவையில் ஒரு மனதாக நிறைவேற்றிவைத்தார்.

3. தமிழ்நாடு 'ஆங்கிலம் - இந்தி - தமிழ்' என்ற மும்மொழித்திட்டத்தை ஏற்காது என்றும், 'தமிழ் - ஆங்கிலம்' என்ற இருமொழித் திட்டத்தைத்தான்

எல்லாத் துறைகளிலும் நிறைவேற்றும் என்றும் கூறி அதற்கான ஆணையைச் சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்.

4. தமிழ்நாட்டில் தமிழ்தான் பள்ளி - கல்லூரி பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில், பாடமொழியாகவும், பயிற்று மொழியாகவும் ஆவதற்கு முறையான முன்னேற் பாடுகளைச் செய்யவேண்டும் என்று, அறிஞர் அண்ணா ஆணை வெளியிட்டார்.

5. முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களின் பெரு முயற்சியினால், சென்னை - திருச்சி - திருநெல்வேலி - கோவை - ஆகிய இடங்களில் செயல்பட்டுவந்த 'ஆகாஷ்வாணி' நிலையங்கள், 'வானொலி' நிலையங்கள் என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டன.

6. பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த 'சுயமரியாதைத் திருமணத்திற்கு' சட்ட நிறைவான ஒப்புதல் வழங்க, அறிஞர் அண்ணா அவர்கள், தமிழகச் சட்ட மன்றத்தில் அதற்கான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து, அதனை ஒரே மனதாக நிறைவேற்றி வைத்தார். "இந்தச் சட்டம் பெரியாருக்குச் செலுத்தப் படும் காணிக்கையாகும்" என்றும் அறிஞர் அண்ணா குறிப்பிட்டார்.

7. சென்னைக் குடிசைவாழ் மக்களுக்குத் தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டித்தரக் குடிசைமாற்று வாரியம் ஒன்றினை உருவாக்கினார்.

8. ஓய்வு நேரத்தை ஊருக்குப் பயன்படுத்த, பொதுத் தொண்டு புரியும் நோக்கத்தில், இளைஞர் பட்டாளத்தை உருவாக்கி, அதற்குச் 'சீரணி' என்று பெயர் சூட்டினார்.

9. அறிஞர் அண்ணா அவர்கள், 1968இல், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டைச் சென்னையில், பொது மக்களின் உதவியோடு, தமிழக அரசின் சார்பாகக் கண்டோர் வியக்கும் வகையில் மிகச்சிறப்பாக நடத்தினார்.

10. நீதிக் கட்சியால் தொடங்கப்பட்டுத் தொடர்ந்து நடைபெற்றுவந்த வகுப்புவாரி இட ஒதுக்கீட்டுத் திட்டத்திற்கு, அதிக முக்கியத்துவம் தந்து அதனைச் சிறப்பாகவும், செம்மையாகவும் காப்பாற்றி வந்தார்.

## அறிஞர் அண்ணாவின் உலக நாடுகள் சுற்றுப்பயணம்

*முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் 1968 ஏப்ரல் 15ஆம் நாள், உலக நாடுகள் பலவற்றில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளப் புறப்பட்டார்.*

*சுற்றுப்பயணத்திற்கான முன்னேற்பாடுகளைச் செய்யும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டிருந்தேன். அறிஞர் அண்ணா அவர்களை வழி அனுப்பி வைக்க, சென்னை விமான நிலையத்தில் நானும், அமைச்சர் பெருமக்களும், கழகப் பொறுப்பாளர்களும், செயல்வீரர்களும், அதிகாரிகளும், பொதுமக்களும் பல்லாயிரக்கணக்கில் கூடியிருந்தோம்.*

*அறிஞர் அண்ணா அவர்கள் உரோம், வாட்டிகன், சுவிட்சர்லாந்து, செர்மனி, பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா, சப்பான், ஆங்காங், பாங்காக், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்றுவிட்டு, மே மூன்றாவது வாரம் சென்னை வந்து சேர்ந்தார். அந்த நாடுகளில் வாழ்ந்த தமிழர்களும், இந்தியர்களும் அறிஞர் அண்ணா அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பை அளித்தனர். ஆங்காங்கு அறிஞர் அண்ணா அவர்கள், பொறுப்புணர்ச்சி*

யோடும், கடமையுணர்ச்சியோடும் ஆற்றிய ஆங்கிலம் - தமிழ்ச் சொற்பொழிவுகள், பலரையும் மிகவாகக் கவர்ந்தன. அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலைக் கழகம், அறிஞர் அண்ணாவுக்குச் 'சப்பெலோஷிப்' என்ற அரிய மதிப்புறு விருதினை அளித்துச் சிறப்புச் செய்தது. வாட்டிகன் நகரில் போப்பாண்டவர் அறிஞர் அண்ணாவை வரவேற்று மகிழ்வித்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் தாயகம் திரும்பி வந்தபோது, அவருக்குச் சிறப்பான வரவேற்பை அளிக்க, அழகான முறையில் ஏற்பாடுகளைச் செய்ய நானும், பிற அமைச்சர்களும், கழக முன்னணியினரும் முனைந்தோம். அறிஞர் அண்ணா அவர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பெற்றார்.

அறிஞர் அண்ணாவின் உலக நாடுகளின் சுற்றுப்பயணம், தமிழகத்திற்குத் தனிப்பெருமையையும், புகழையும் அளிப்ப தாக அமைந்திருந்தது.

அறிஞர் அண்ணா அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றி ருந்தபோது, தமிழக அரசின் முக்கியப் பொறுப்புகளை நான் ஏற்று, அவற்றை நிருவகித்து வந்தேன்.

## அறிஞர் அண்ணாவின் இறுதி நாட்கள்

1968 செப்டம்பர் 1ஆம் நாள், திருத்தணியில் நடை பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள அறிஞர் அண்ணாவும், நானும் சென்றிருந்தோம். எங்களுடன் டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்களும் வந்திருந்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் ஏதோ வயிற்றுவலியால் அவதிப்படுவதையும், அவர் சோர்வுற்று இருந்ததையும்,

அவர் சரியாகச் சாப்பிடாமல் இருந்ததையும் கூர்ந்து கவனித்த டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்கள், அறிஞர் அண்ணாவை சென்னைப் பொது மருத்துவமனையில் சேர்த்துப் பரிசோதனை செய்து பார்க்கவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்.

அதன்படி, 3.9.68 அன்று, அவர் சென்னைப் பொது மருத்துவமனையில் பரிசோதனைக்காகச் சேர்க்கப்பட்டார்.

அவர் உடல்நலக் குறைவின் காரணமாக 8.9.68 அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அவருக்கு அளிக்க இருந்த மதிப்புறு டாக்டர் பட்டத்தை, அவர் நேரடியாகச் சென்று பெறமுடியாத நிலை ஏற்பட்டது. அறிஞர் அண்ணா அவர்கள், அவருக்குப் பதிலாக என்னை நேரடியாகச் சென்று டாக்டர் பட்டத்தை வாங்கிவரும்படி அன்புடன் கூறினார்.

8.9.68 அன்று, அண்ணாமலை நகர், பட்டமளிப்பு விழா மண்டபத்தில், இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர்-உசேன் அவர்களின் தலைமையில், அறிஞர் அண்ணாவுக்கு டாக்டர் பட்டம் அளிக்கும் விழா நடைபெற்றது. பல்கலைக் கழக இணைவேந்தர் டாக்டர் இராசா சர் முத்தையா அவர்களும் விழாவில் கலந்துகொண்டார்.

டாக்டர் பட்டத்தை அறிஞர் அண்ணாவின் சார்பாக நான் பெற்றுக்கொண்டு, அவரின் சார்பாக நன்றி தெரிவித்து உரையாற்றினேன். பின்னர் அந்தப்பட்டத்தை அறிஞர் அண்ணாவிடம் கொண்டுபோய்ச் சேர்த்தேன்.

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள், 10.9.68 அன்று, சென்னைப் பொது மருத்துவமனைக்கு வருகைதந்து, அறிஞர் அண்ணா அவர்களைக் கண்டு உடல்நலம் உசாவினார்.

மருத்துவப் பரிசோதனையில் அறிஞர் அண்ணாவிற்குக் குடலில் புற்றுநோய் கண்டிருப்பதாக அறியப்பட்டது. அந்தச் செய்தி என்னைப் போன்றவர்க்கு மிக்க வருத்தத்தை யும், பெருந்துயரத்தையும் அளித்தது.

புற்றுநோய்க்கான சிறந்த சிகிச்சையைப்பெற, அறிஞர் அண்ணாவை அமெரிக்காவிற்கு அனுப்பிவைப்பதென அமைச்சரவையினர் முடிவுசெய்தோம். அறிஞர் அண்ணா வுடன் அவரது குடும்பத்தினர், டாக்டர் சதாசிவம், செழியன், இராசாராம் ஆகியோர் செல்வதென முடிவு செய்யப்பட்டது.

அறிஞர் அண்ணாவையும், அவரது குழுவினரையும், நான், கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர். ஆகியோர் மும்பைவரை சென்று வழி அனுப்பிவைத்தோம்.

அமெரிக்காவின் மெமோரியல் மருத்துவமனையில், 16.9.68 அன்று, டாக்டர் தியேடர் மில்லர் அறிஞர் அண்ணா வுக்கு அறுவை சிகிச்சை செய்தார். மூலப் புற்றுநோய்க் கட்டி அகற்றப்பட்டுவிட்டது என்றாலும், புற்றுநோய் வேறு சில இடங்களுக்கும் பரவியிருக்கக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டி ருந்தது.

அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள், 21.9.68 அன்று, மெமோரியல் மருத்துவமனைக்குச் சென்று, அறிஞர் அண்ணாவின் உடல் நலம்பற்றி உசாவி அறிந்தார்.

உடல்நலம் தேறியவுடன் அறிஞர் அண்ணா, 16.11.68 அன்று, தம் குழுவினருடன் சென்னை வந்து சேர்ந்தார். நானும், ஏனைய அமைச்சர்களும், கழகப் பொறுப்பாளர் களும், பொதுமக்களும் சென்னை விமான நிலையம் சென்று மகிழ்ச்சிகரமான வரவேற்பை அவருக்கு அளித்தோம்.

அறிஞர் அண்ணா அமெரிக்காவிலிருந்து தாயகம் வந்து சேர்ந்தபிறகு, அவர் கலந்துகொண்ட பொது நிகழ்ச்சி, 'தமிழ்நாடு' என்று பெயர்மாற்றம் செய்ததற்கு மகிழ்ச்சி தெரிவிக்கும் விழாவாகும். அந்த விழா, 1.12.68 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

விழாவிற்கு நான் தலைமை தாங்கினேன். அறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்ற எழுந்தவுடன், மண்டபமே அதிரும்படியாகக் கரவொலியும், வாழ்த்தொலியும் எழும்பின. ஒலி ஆரவாரம் அடங்க, சிறிது நேரம் ஆயிற்று. அறிஞர் அண்ணா பேசும்போது குறிப்பிட்டதாவது :-

> ''சில நாட்களாக உங்களிடம் பேசுகின்ற வாய்ப்பை நான் இழந்திருந்தேன். இன்று அந்த வாய்ப்பை மீண்டும் பெற்றிருக்கிறேன். நான் எதைப் பற்றிப் பேசுவதில் பெரு விருப்பங்கொள்வேனோ, அதைப் பற்றிப் பேசுவதில் இன்று மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.
>
> நான் இந்த விழாவில் கலந்துகொள்ள முடிவு எடுத்தபோது, என்னுடைய டாக்டர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். ''நீங்கள் கூட்டத்தில் பேசக்கூடாது; பேசினால் உடலுக்கு ஊறு நேரக்கூடும்'' என்று எச்சரித்தனர். இன்றைய தினம் நான் பேசுவதால் எனது இந்த உடலுக்கு ஊறு நேரும் என்றால், இந்த விழாவில் கலந்துகொள்ளாத உடம்பு இருந்தால் என்ன? போனால் என்ன? என்று எண்ணி, இந்தக் கூட்டத்தில் எப்படியும் கலந்துகொள்வது என்று முடிவு எடுத்துத்தான் நான், இங்கு வந்துள்ளேன்''

அறிஞர் அண்ணாவின் இந்தப் பேச்சு உள்ளத்தை உருக்குவதாகவும், உடலை உலுக்குவதாகவும் அமைந் திருந்தது. மேலும் அறிஞர் அண்ணா குறிப்பிடும்போது,

''நான் எண்ணியபடி 'தமிழ்நாடு' என்ற பெயரைத் தாயகத்திற்குச் சூட்டிவிட்டேன்! சுயமரியாதைத் திருமணச் சட்டத்தைச் செல்லுபடி ஆகும்படி செய்துவிட்டேன்! இந்தித் திணிப்பை ஒழித்து இருமொழிக் கொள்கையை நிலை நாட்டிவிட்டேன்! இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டைச் சீரோடும், சிறப்போடும் நடத்தி முடித்துவிட்டேன்! தமிழ் வளர்த்த சீரியோர் சிலைகளைச் சென்னை மாநகரில் நிலைநிறுத்திவிட்டேன்! இனி எனக்கு எந்தக் கவலையும் இல்லை''

*உடல் நலிவு அறிஞர் அண்ணாவை ஒருபுறம் வாட்டிக் கொண்டிருந்தாலும், அவர் ஓய்வு ஒழிவின்றி அரசுப் பணிகளிலும், பொது நிகழ்ச்சிகளிலும் ஈடுபட்டுக்கொண்டே இருந்தார். அதன் காரணமாக, அவருடைய உடல் நலம் மேலும் சீர்குலையத் தலைப்பட்டது. அவருக்கு ஆறுதல் ஏற்படும் வகையில், நாள்தோறும் இரவு நெடுநேரம் வரையில், நான் அவருடன் இருந்து, பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி அவரோடு உரையாடி, அவருக்குச் சோர்வு ஏற்படாத வகையில், அவருக்கு உதவியாக இருந்துவந்தேன்.*

## அறிஞர் அண்ணாவின் இறுதிக்கட்டம்

*1969 சனவரி 17ஆம் நாள் காலை அறிஞர் அண்ணாவைக் காண நான் நுங்கம்பாக்கத்தில் இருந்த அவரது வீட்டிற்குச் சென்றேன். அப்பொழுது அறிஞர் அண்ணா மிகவும் களைப்புற்ற நிலையில் இருந்தார். இரண்டுநாள் கழித்து அவர் மயக்கமுற்ற நிலையில் சனவரி 20ஆம் நாள் அன்று நானும், அங்கிருந்த மற்றவர்களும் சேர்ந்து, அவரை அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றோம். நான் அறிஞர் அண்ணா அவர்களுக்குத் தோள்கொடுத்துத் தாங்கி, அவரை மெல்ல அழைத்துச் சென்று, மருத்துவமனைப் படுக்கையில் வைத்தேன். டாக்டர்*

சதாசிவம், டாக்டர் கிருட்டிணமூர்த்தி, டாக்டர் சாந்தா போன்றவர்கள் மருத்துவ சிகிச்சை அளித்துவந்தனர். நான் பகலும், இரவுமாக மருத்துவமனையிலேயே தங்கியிருந்து அறிஞர் அண்ணாவிற்கான உதவிகளைச் செய்துவந்தேன். அண்ணாவின் குடும்பத்தினரும் உடனிருந்து கண்காணித்து வந்தனர்.

தமிழக அரசால், அமெரிக்காவிலிருந்து டாக்டர் மில்லர் வரவழைக்கப்பட்டார். அவர், 25.1.69 அன்று, அண்ணாவுக்கு இரண்டாவது முறையாக அறுவை சிகிச்சை செய்தார். அண்ணாவின் வயிற்றில், குளத்தில் படியும் பாசிபோல் படர்ந்திருந்த புற்றுநோய் மேலும் பரவாமல் தடுப்பதற் காகக் கொடிய வெப்பம் மிகுந்த ரேடியம் ஊசி, டாக்டர் மில்லரால், அண்ணாவின் வயிற்றுக்குள் பாய்ச்சப்பட்டது.

அறிஞர் அண்ணா அவர்கள் புற்றுநோய்க் கொடுமையி லிருந்து மீண்டு, வீடு திரும்புவார், தாய்த் திருநாட்டின் பணியை மீண்டும் தொடங்குவார் என்று எல்லோரும் எதிர் பார்த்தோம். ஆனால், அண்ணாவின் உடல் நிலை 29.1.69 அன்று மிகவும் சீர்கேடு அடையத் தொடங்கியது. 31.1.69இல் அவர் நினைவை இழந்தார். மணிக்குமணி அண்ணாவின் உடல் நிலை கவலைக்கிடமாக ஆகிக்கொண்டே இருந்தது.

1969 பிப்ரவரி 3ஆம் நாள் விடியற்காலை 12.22 மணிக்கு வாழ்வுக்குப் போராடிக்கொண்டிருந்த அவரது உயிர் பிரிந்தது! தமிழரின் பேரொளி அணைந்துவிட்டது! அன்புருவம் மறைந்துவிட்டது! தமிழ் - தமிழர் - தமிழ்நாடு - தமிழ்ப் பண்பாடு பற்றிப் பேசி வந்த நா அடங்கிவிட்டது! கடமை - கண்ணியம் கட்டுப்பாடு பற்றிப் போதித்த வாய் மூடிவிட்டது!

நான் கண்ணீர் சிந்தியபடி கதறிக்கொண்டு அறையின் வெளியே வந்து, "அந்தோ! அண்ணா மறைந்துவிட்டார்! அந்தோ!

அண்ணா மறைந்துவிட்டார்!" என்று கூச்சல் எழுப்பினேன். வெளியே கூடியிருந்த அனைவரும் கண்ணீர் மல்கக் கதறிக் கதறி அழுதனர். செய்தி கேள்விப்பட்டு மக்கட்கூட்டம் பெருந்திரளாக வந்து சேர்ந்தது.

## நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றல்

அப்பொழுது தமிழக ஆளுநராக இருந்த உஜ்ஜல் சிங் அவர்கள், என்னையும், ஏனைய அமைச்சர்களையும் ஆளுநர் மாளிகைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

நாங்கள் எல்லோரும் உடனடியாக ஆளுநர் மாளிகைக்குச் சென்றோம். அமைச்சரவையில் மூத்த அமைச்சர் என்ற முறையில், என்னை ஆளுநர் அவர்கள் தற்காலிக முதலமைச் சராக நியமித்தார். நான் முதலமைச்சராகவும், ஏனையோர் அமைச்சர்களாகவும் பதவி உறுதி மொழியினை எடுத்துக் கொண்டோம்.

## அறிஞர் அண்ணாவின் இறுதிப்பயணம்

3.2.69 அன்று விடியற்காலை அண்ணாவின் உடல் முதலில் நுங்கம்பாக்கம் வீட்டிற்கு எடுத்துச் செல்லப் பட்டுப் பின்னர் பொதுமக்கள் பார்வைக்காக, இராசாசி மண்டபத்தில் கொண்டுபோய் வைக்கப்பட்டது.

அண்ணாவின் மறைவுச் செய்தி கேட்டுப் பல இலட்சக் கணக்கான கழகத் தோழர்களும், பொதுமக்களும் சென்னை மாநகரப் பகுதிகளிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் சாரைசாரையாக இராசாசி மண்டபம் வந்து, அண்ணாவின் உடலுக்கு மலர் வளையங்கள் வைத்துக் கண்ணீர் விட்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

4.2.69 காலை, அண்ணாவின் இறுதி ஊர்வலம் புறப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நானும், ஏனைய அமைச்சர்

களும் அண்ணாவின் உடலைத் தாங்கிவந்து இராணுவத்தினர் ஏற்பாடு செய்திருந்த பீரங்கி வண்டியில் வைத்தோம். அண்ணாவின் இறுதி ஊர்வலம் இராணுவ - காவல் துறையினரின் மரியாதையோடு அன்று காலை 9.20 மணிக்குப் புறப்பட்டது. இறுதி ஊர்வலத்தில் பல இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்டார்கள். 'கின்னஸ்' நூலில் இடம்பெறும் அளவிற்கு மிகப்பெரிய ஊர்வலமாக அது அமைந்திருந்தது. ஊர்வலம் இராசாசி மண்டபத்திலிருந்து கிளம்பி, மலைச் சாலை, கதீட்ரல் சாலை, கடற்கரைச் சாலை வழியாகச் சென்று, சென்னைப் பல்கலைக் கழகக் கட்டடத்திற்கு எதிரே உள்ள கடற்கரைப் பகுதிக்குப் போய்ச் சேர்ந்தது.

அண்ணாவின் உடல் வைக்கப்பட்டிருந்த சந்தனப் பெட்டி, புதைகுழியின் அருகில் கொண்டுபோய் வைக்கப் பட்டது. நான் அண்ணாவின் உடலின் மீது பொன்னாடை போர்த்தி இறுதி அஞ்சலி செய்தேன். அடுத்து, தமிழக ஆளுநர், பிறமாநில ஆளுநர்கள், பிற மாநில முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

சவப்பெட்டி புதைகுழிக்குள் முறைப்படி இறக்கப்பட்ட வுடன், அண்ணாவின் வளர்ப்பு மகன்களும், உறவினரும் அங்குக் குழுமியிருந்த பெருமக்களும் உப்பு கலந்த மண்ணைப் புதைகுழியில் போட்டனர். அன்று காலை 11.30 மணிக்கு உடல் அடக்கம் நடைபெற்றபோது, இராணுவத்தினர் மூன்றுமுறை வானத்தை நோக்கிச் சுட்டு மரியாதை செலுத்தினர். இராணுவ இசைக்குழுவினர் இரங்கல் இசையை இசைத்தனர்.

அறிஞர் அண்ணா அவர்களின் உடல் அடக்கம் செய்யப் பட்ட இடம், 'அண்ணா நினைவிடம்' என்ற பெயரில் நினைவுச் சின்னமாகத் தமிழக அரசால் அமைக்கப்பட்டது. அறிஞர் அண்ணாவின் கல்லறையின் மீது "எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது" என்ற சொற்றொடர் செதுக்கி வைக்கப்பட்டது.

## அறிஞர் அண்ணா மறைவு குறித்த இரங்கல் கூட்டம்

அறிஞர் அண்ணா மறைந்தவுடன் 3.2.69 முதல், முழுப் பொறுப்புக்களோடு கூடிய முதலமைச்சர் பொறுப்பை நான் ஏற்றிருந்தேன். உலகு எங்கிருந்தும் ஏராளமான தலைவர்கள் அறிஞர் அண்ணாவின் மறைவு குறித்து இரங்கற் கடிதங் களை என் பெயருக்கு அனுப்பிவைத்தனர். அவர்களுக்கெல் லாம் தக்க முறையில் மறுமொழி எழுதி அனுப்பி வைத்தேன். பல பெருமக்கள் நேரில் வந்து இரக்கம் தெரிவித்து ஆறுதல் கூறினர்.

அண்ணாவின் மறைவுகுறித்து இரங்கல் தெரிவிக்க இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள், 8.2.69 அன்று சென்னை வந்தார்கள். முதலமைச்சர் என்ற முறையில், நான் விமானம் நிலையம் சென்று அவரை வரவேற்றேன். அவர் விமான நிலையத்திலிருந்து அண்ணாவின் வீட்டிற்கு நேரே சென்று இராணி அம்மையாருக்கு ஆறுதல் கூறி னார்கள்.

9.2.69 அன்று, அண்ணாவின் மறைவுகுறித்து மாபெரும் இரங்கற்கூட்டம், சென்னைக் கடற்கரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரங்கல் கூட்டத்திற்கு நான் தலைமை தாங்கினேன். கூட்டத்தில் பிரதமர் இந்திராகாந்தி, ஆளுநர் உஜ்ஜல் சிங், காமராசர், மூதறிஞர் இராசாசி, பக்தவத்சலம், பிரமானந்த ரெட்டி, இலட்சுமணசாமி முதலியார், ம.பொ. சிவஞானம், குன்றக்குடி அடிகளார்

போன்றவர்கள் கலந்துகொண்டு இரங்கலுரை ஆற்றினர். அனைவரும் அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுத் திறன் பற்றியும், ஆற்றல் திறன்பற்றியும் அரும்பெரும் பண்பாடுகள் பற்றியும், புகழ், பெருமை பற்றியும் விரிவாக எடுத்துரைத்தனர்.

புதிய அமைச்சரவை அமைதல்

நோய்வாய்ப்பட்டிருந்த அறிஞர் அண்ணா அவர்கள், எல்லா வகையிலும் உடல்நலம் பெற்றுத்தேறி, மீண்டும் ஆட்சிப் பொறுப்பையும், கழகப் பொறுப்பையும் ஏற்று நடத்தவேண்டும் என்ற ஒரே கவலையில், நான் அல்லும் பகலுமாக மருத்துவமனையிலே, அறிஞர் அண்ணாவின் படுக்கைக்கு அருகில் இருந்துவந்தேன்.

அண்ணா அவர்கள் மறைந்துவிடுவார் என்பதைப் பற்றியோ, அவருக்குப்பிறகு அமைச்சரவை அமைவது பற்றியோ சிறிதளவு சிந்தனையும் எனக்கு ஏற்படவில்லை. அறிஞர் அண்ணா முழுநலமும் பெற்று, மீண்டும் நம்மிடையே உலாவுவார் என்ற நம்பிக்கையில்தான், நான் இருந்துவந்தேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் புற்றுநோய்க் கொடுமையிலிருந்து மீளுவது என்பது மிகக் கடினம், அவர் மறைந்துவிட்டால், புதிய அமைச்சரவையை எப்படி அமைப்பது என்பதிலே, கலைஞர் கருணாநிதி அவர்களும் அவருக்கு உறுதுணையாக இருந்தவர்களும், அண்ணா, மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோதே, தனியாக அமர்ந்து சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்.

அண்ணாவிற்குப் பிறகு தமிழக முதலமைச்சர் பொறுப்பைத் தாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற பெருவிருப்பம் கலைஞர் கருணாநிதியின் உள்ளத்தில்

தோற்றம் பெற்றது. அதற்கு ஆதரவு தரும் முறையில் எம்.ஜி. இராமச்சந்திரன், ஆதித்தனார், அன்பில் தருமலிங் கம், மன்னை நாராயணசாமி, ப.உ. சண்முகம், மதியழகன், சத்தியவாணிமுத்து போன்றவர்கள் செயல்திட்டம் வகுக்க முயன்றனர். இந்தச் செய்தி எனக்குத் தெரியவந்தது என்றாலும், நான் அதைப்பற்றிக் கவலை கொள்ளாமல், அண்ணாவைப் பற்றி மட்டுமே எண்ணிக்கொண்டிருந்தேன்.

அறிஞர் அண்ணாவிற்கு அடுத்தபடியாகக் கழகத்தில் மூத்த தலைவராகவும், அமைச்சரவையில் மூத்த அமைச்ச ராகவும், நீண்ட பெருங்காலமாக இயக்கத்தொண்டு புரிந்து வருபவராகவும் இருந்துவந்த நான்தான், அறிஞர் அண்ணா விற்குப் பிறகு தமிழக முதலமைச்சராக வருவேன் என்று கழகத்தில் இருந்த நல்லவர்கள் பலரும், பொதுமக்களும் பெரிதும் எதிர்பார்த்திருந்தனர்.

அறிஞர் அண்ணா அவர்கள் மறைவதற்கு முன்னதாகவே, கலைஞர் கருணாநிதியின் ஆதரவாளர்கள், கலைஞரை முதலமைச்சராக ஆக்குவதற்கான எல்லாவித முயற்சி களிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

எம்.ஜி.ஆர். அவர்கள், கழக எம்.எல்.ஏ.க்கள் பலரையும் இராமாவரம் தோட்டத்திற்கு வரவழைத்து, அவர்களுக்கு விருந்தளித்து, அவர்களின் ஆதரவைக் கலைஞர் கருணாநிதிக்குத் திரட்டித் தரும் பணியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டார்.

ஆதித்தனார் ஏராளமான பணத்தைச் செல வழித்து, எம்.எல்.ஏ.க்களுக்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்து, அவர்களது ஆதரவைப்பெற மும்முரமாக

ஈடுபட்டார். அதைப்போன்றே கலைஞரைச் சார்ந்தவர்கள் பலரும் கலைஞருக்கு ஆதரவு திரட்டித்தரும் பணியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

அண்ணா அவர்கள் மருத்துவமனையில் இருந்தபோதோ, அவர் மறைந்த பிறகோ, தமிழக முதலமைச்சராக ஆவதற்கான எந்த ஒரு முயற்சியிலும் நான் ஈடுபடவில்லை. போட்டி எதுவும் இல்லாமல், கழக எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து, என்னை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்து, முதலமைச்சராக ஆக்கினால், அந்தப் பொறுப்பை மனமுவந்து ஏற்றுக்கொள்வது என்றும், போட்டி ஏற்படுமேயானால், போட்டியிலிருந்து விலகி ஒதுங்கிக்கொள்வது என்றும் முடிவு செய்திருந்தேன். அறிஞர் அண்ணாவின் மறைவுக்குப்பின் கழகத்தில் பிளவு - போட்டி - மோதல் போன்றவை எவையும் ஏற்படக்கூடாது என்ற எண்ணத்தில் நான் இருந்துவந்தேன்.

மதுரை முத்து, காஞ்சி இராசகோபால், தக்கோலம் இராமசாமி, பெரணமல்லூர் அண்ணாமலை, எம்.எஸ். சிவசாமி, கடம்பூர் சனார்த்தனம், கோவை இராச மாணிக்கம், கோவை சாமி போன்றவர்கள் நான் முதலமைச்சர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடத்தான் வேண்டும் என்று என்னை வற்புறுத்தினர். "முதலமைச்சர் பொறுப்புக்கு ஒரே மனதாக என்னைத் தேர்ந்தெடுத்தால் அந்தப் பொறுப்பினை ஏற்க ஆயத்தமாக இருக்கிறேன்; ஆனால், தேர்தலில் போட்டி ஏற்படுமாயின், நான் அதிலிருந்து ஒதுங்கிக்கொள்வேன். அண்ணா மறைவிற்குப்பின் கழகத்தில் பிளவு - பேதம் - மோதல் ஏற்படுவதை நான் விரும்பவில்லை" என்று அவர்களிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தேன்.

கலைஞர் கருணாநிதிக்கு ஆதரவாகத் தீவிரமான முறையில் முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டன. நான் எந்தவித முயற்சியிலும் ஈடுபடவில்லை. எனக்கு ஆதரவு திரட்டும் பணியில் நான் ஈடுபடவே இல்லை.

10.2.69 அன்று, சென்னை அரசினர் தோட்டம், சட்ட மன்ற தி.மு.க.கட்சி உறுப்பினர்களின் அறையில், தி.மு. கழக எம்.எல்.ஏ.க்களின் கூட்டம் நடைபெற்றது. சட்ட மன்ற தி.மு.க.கட்சியின் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

கூட்டத்திற்கு ஏ. கோவிந்தசாமி அவர்கள் தலைமை தாங்கினார். சட்டமன்ற தி.மு.க. கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்க, கலைஞர் கருணாநிதியின்பெயரை மதியழகன் முன்மொழிய, சத்தியவாணிமுத்து வழிமொழிந்தார். நான் அறியாமலேயே, என் பெயரை எஸ்.ஜே. இராமசாமி முன்மொழிந்தார்; வி.டி. அண்ணாமலை வழிமொழிந்தார்.

கூட்டத்தலைவர் அவர்கள் தேர்தலில் போட்டி ஏற்பட்டு விட்டதால், இனி வாக்கெடுப்பின் மூலந்தான் முடிவு செய்ய வேண்டும் என்று அறிவித்தார்.

நான் உடனே எழுந்து, ''தலைவர் தேர்தலில் போட்டி ஏற்படுவதை நான் விரும்பவில்லை; ஒரே மனதாக என்னைத் தேர்ந்தெடுப்பதாக இருந்தால் மட்டுமே நான் தேர்தலில் நிற்பேன் என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டு வந்துள்ளேன். எனக்குப் போட்டி ஏற்பட்டுவிட்ட நிலையில், நான் போட்டியிட விரும்பவில்லை; போட்டியிலிருந்து விலகிக்கொள்கிறேன்'' என்று அறிவித்தேன்.

பின்னர் கூட்டத் தலைவர், ''கலைஞர் கருணாநிதி, சட்டமன்ற தி.மு.க.கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்'' என்று அறிவித்தார்.

நான் கலைஞர் கருணாநிதிக்கு வாழ்த்துத் தெரிவித்து விட்டு வீடு திரும்பினேன்.

எனது வீட்டில், செய்தித்தாள் நிருபர்கள் கூடி, என்னைப் பேட்டி கண்டனர். ''அடுத்து உங்கள் செயல் திட்டம் என்ன?'' என்று அவர்கள் கேட்டனர்.

> ''நான் தி.மு.கழகச் சட்ட மன்ற உறுப்பினராகத் தொடர்ந்து பணியாற்றுவேன். கலைஞர் கருணாநிதி அமைக்கப்போகும் அமைச்சரவையில் இடம்பெற மாட்டேன். எப்பொழுதும்போல் கழகத் தொண்டினை ஆற்றிக்கொண்டு வருவேன்.''

என்று விடையிறுத்தேன்.

11.2.69 அன்று கோட்டையில் நான் எனது அலுவலக அறையைக் காலிசெய்துகொண்டிருந்தபோது, கலைஞர் கருணாநிதி அவர்களும், இராசாராம் அவர்களும் என் அறைக்கு வந்தனர்.

கலைஞர் அவர்கள் என் கைகளைப் பிடித்துக்கொண்டு, ''நான் உங்கள் கால்களைப் பிடிப்பதாகக் கருதிக்கொள்ளுங்கள். தயவுசெய்து நீங்கள் அமைச்சரவையில் பங்குகொள்ள வேண்டும்'' என்று கூறினார்.

நான், ''நீங்கள் அப்படியெல்லாம் பணிந்து கூறக்கூடாது. நான் உங்களுக்கு எல்லாவகையிலும் ஆதரவாகவே இருந்து வருவேன். அமைச்சரவையில் இடம்பெற நான் விரும்பவில்லை. என்னைப் பொறுத்திடுக!'' என்று கூறினேன்.

பின்னர் நான்அமைச்சரவையில் இடம்பெறாமல், கழகப் பணியினையும், எம்.எல்.ஏ. பணியினையும் தொடர்ந்து ஆற்றிவந்தேன்.

## அறிஞர் அண்ணாவின் மறைவிற்குப்பிறகு எனது பணி

அறிஞர் அண்ணா மறைந்தவுடன், அவருக்குப் பிறகு, 3.2.69 முதல் 10.2.69 வரை 7 நாட்கள் முழு அதிகாரமும், முழுத் தகுதியும் பெற்ற முதலமைச்சர் பொறுப்பை, நான் ஏற்று நடத்தினேன். வரலாற்றுக் குறிப்பேட்டில், அறிஞர் அண்ணாவிற்குப் பிறகு நான் முதலமைச்சர் ஆனேன் என்றும் எனக்குப்பிறகு கலைஞர் கருணாநிதி முதலமைச்சர் ஆனார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

பின்னர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மறைந்தபிறகு 24.12.87 முதல் 7.1.88 வரையிலும் முழு அதிகாரங்கொண்ட முதலமைச்ச ராகப் பணியாற்றினேன். இரண்டுமுறை முழு அதிகாரமும், உரிமையும் பெற்ற முதலமைச்சராக இருந்து வந்துள்ளேன்.

*கலைஞர் கருணாநிதியின் தலைமையின்கீழ் தமிழக அமைச்சரவை இயங்கிக்கொண்டிருந்தபோது, 10.2.69 முதல் 30.6.69 வரை நான் சட்டமன்ற உறுப்பினராக மட்டுமே இருந்து பணியாற்றிவந்தேன். வழக்கம்போல் கழகப் பொதுக் கூட்டங்களிலும், கழக நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டேன். கழகத்தொண்டு ஆற்றுவது, எனக்கு எப்பொழுதும் போல, தனி மகிழ்ச்சியையே அளித்தது.*

*சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களையும், அரசியல் பொரு ளாதாரக் கருத்துக்களையும், அவ்வப்போது எழுதி வெளி யிடும் பொருட்டு, நானும், என் இளவல் செழியனும் சேர்ந்து, மீண்டும் "மன்றம்" வார இதழைத் தொடங்கினோம். எனக்கு அரசியல் தொடர்புவிடுபடாமல் இருக்க, 'மன்றம்' ஏடு பெருந்துணையாக இருந்தது. நானும், இளவல் செழியனும் எழுதிவந்த கட்டுரைகளைப் பலரும் விரும்பிப் படித்துப் பாராட்டுரைகள் வழங்கினார்கள்.*

## 1969 இல் மீண்டும் அமைச்சர் பொறுப்பை ஏற்றல்

அறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய தி.மு.கழகமும், தி.மு.கழக ஆட்சியும் மிக்க வலிவோடும், பொலிவோடும் திகழ, நான் கழக அமைச்சரவையில் பங்கு ஏற்றுப் பணிபுரிய வேண்டும் என்ற கருத்தைக் கழகத்தின் மூத்த முன்னணித் தோழர்களும், என் நெருங்கிய நண்பர்களும் தொடர்ந்து என்னிடம் வலியுறுத்தி வந்தனர்.

பெரியார் இராமசாமி, கோவை ஜி.டி. நாயுடு, நீதிபதி கணபதியாபிள்ளை, துணைக் குடியரசுத் தலைவர் கிரி, முத்தையா செட்டியார், பி.டி. இராசன், டி.எம். நாராயணசாமி பிள்ளை, வி.வி. இராமசாமி, கருமுத்து தியாகராச செட்டியார், டாக்டர் மு. வரதராசன் போன்ற பெரியவர்கள் பலரும், தமிழக அமைச்சரவையில் நான் ஒரு அமைச்சராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றவேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்து வந்தனர். முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களும் நான் அமைச்சர் அவையில் இடம்பெற வேண்டும் என்ற தமது விருப் பத்தைத் தெரிவித்துவந்தார்.

தி.மு.கழக அமைச்சரவையில் பொறுப்பு ஏற்க நான் இறுதியாக இசைவு தெரிவித்த நிலையில், 13.8.1969 அன்று ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்கள் முன்னிலையில் பதவிக்கான உறுதிமொழி எடுத்துக்கொண்டு, கல்வி, மக்கள் நல்வாழ்வு ஆகிய துறைகளின் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

## தி.மு.கழகத் தலைமை அமைப்புத் தேர்தல்

அறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு, நான் அமைச் சரவையில் பொறுப்பு ஏற்றுக்கொண்டவுடன், தி.மு.கழகத்

தின் தலைமை அமைப்பைப் பொறுத்துச் சிலமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அறிஞர் அண்ணா காலம் வரையில், தி.மு.கழகத்திற்குத் தலைவர் பதவி என்ற ஒன்று இல்லாமல், பொதுச் செய லாளர் என்ற பதவியே கழகத்தின் எல்லா உரிமைகளையும், பொறுப்புக்களையும், அதிகாரங்களையும் கொண்ட பதவி யாக இருந்துவந்தது.

அறிஞர் அண்ணா அவர்கள், "திராவிட இயக்கத் தந்தை பெரியார் அவர்கள் அமர்ந்திருந்த தலைவர் பதவிக்கான நாற்காலி, தி.மு.கழகத்தைப் பொறுத்து எப்பொழுதும் காலியாகவே இருந்து வரும். அந்தத் தலைவர் பதவி நாற்காலியில் வேறுயாரும் உட்கார அனுமதிக்கமாட்டோம்" என்று சொல்லிவந்தார்.

அறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பிறகு, தலைவர் பதவியை மீண்டும் புதுப்பித்து, அந்தப் பதவியில் தாம் அமரவேண்டும் என்ற விருப்பம் கலைஞர் கருணாநிதி அவர் களுக்கு ஏற்பட்டது. அவரது விருப்பத்திற்கு இணங்க, தி.மு.கழகச் சட்டதிட்டத்தில் தலைவர் பதவியை உருவாக்கு வது என்றும், தலைவரும், பொதுச் செயலாளரும் கலந்து பேசி எந்த ஒரு முக்கிய முடிவையும் எடுக்கவேண்டும் என்றும் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, அவை பொதுக் குழுவால் ஒரே மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

திருத்தயமைக்கப்பட்ட கழகச் சட்டத்தின்படி, கலைஞர் கருணாநிதி அவர்கள் கழகத் தலைவராகவும், நான் கழகப்பொதுச் செயலாளராகவும், புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் கழகப் பொருளாளராகவும், பொதுக்குழுவினரால் ஒரே மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோம். எங்கள் மூன்று பேர்களுடைய நல்ல ஒத்துழைப்போடு கழகப் பணிகளும், ஆட்சிப்பணிகளும் இனிது நிறைவேறிவந்தன.

## உலக நாடுகளில் சுற்றுப்பயணம்

1970ஆம் ஆண்டு, செப்டம்பர் - அக்டோபர் ஆகிய திங்கள்களில், இத்தாலி, செர்மனி, பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா, சப்பான், ஆங்காங், தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் அழைப்பை ஏற்று, அந்நாடுகளின் விருந்தினனாக நான் சுற்றுப்பயணம் மேற்கொண்டேன்.

என்னுடன், என்னுடைய துணைவியார் டாக்டர் இரா. விசாலாட்சி அவர்களும், பள்ளிக் கல்வி இயக்குநர் சை.வே. சிட்டிபாபு அவர்களும், கே.என். சிவபெருமாள் அவர்களும் வந்தனர்.

17.9.70 அன்று கழக நண்பர்கள் வழியனுப்பி வைக்க, விமானம் மூலம் புறப்பட்டுப் பம்பாய் வழியாக இத்தாலி நாட்டின் தலைநகரான உரோம் போய்ச் சேர்ந்தோம். உரோமில் உள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற சின்னங்களையெல்லாம் கண்டுமகிழ்ந்தோம். உரோமிலுள்ள பல்கலைக் கழகங்களுக்குச் சென்று அவற்றைப் பார்வையிட்டதோடு, கல்வி வளர்ச்சி பற்றிய கருத்துக்களை அங்கிருந்த பேராசிரியர்களோடு பரிமாறிக்கொண்டோம். உரோமிலிருந்து, சுவிட்சர்லாந்து நாட்டின் தலைநகரான ஜெனிவாவுக்குச் சென்றோம். சுவிட்சர்லாந்து நாட்டின் பனிக்கட்டி படிந்த மலைச் சரிவுகளையும், படகில் பயணம் செய்யக்கூடிய பெரிய ஏரியையும், மற்ற இயற்கைச் செழிப்புக்களையும் கண்டுகளித்தோம். ஐக்கிய நாடுகள் அவையின் உலக நிறுவனத்தையும் பார்வையிட்டோம்.

பின்னர் செர்மனியின் தலைநகர் பெர்லின் போய்ச் சேர்ந்தோம். பெர்லின் நகரின் பழைமையான சின்னங்களையும், பெர்லின் பல்கலைக் கழகத்தையும், கிழக்கு

செர்மனி மேற்கு செர்மனி ஆகியவற்றிற்கு இடையே இருந்த தடுப்புச் சுவரையும் பார்வையிட்டோம். பெர்லின் நகரில் உள்ள ஒரு பெரிய ஒப்ரா தியேட்டருக்குச் சென்று, மிகப்பெரிய நடன ஆட்டக் கலையைக் கண்டு மகிழ்ந்தோம்.

செர்மனியிலிருந்து பின்னர் பிரான்சு நாட்டுத் தலை நகரான பாரிசு நகரம் போய்ச்சேர்ந்தோம். பாரிசு நகரத்தில், அந்த நாட்டின் பழைமையான சின்னங்களையும், வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களையும், 14ஆவது லூயி மன்னன் வாழ்ந்த மிகப்பெரிய அரண்மனையையும், பாரிசிலுள்ள மிகவிரிவான அருங்காட்சியகத்தையும், பல் வேறு கல்விச் சாலைகளையும் பார்வையிட்டோம். பிரான்சு நாட்டு அமைச்சர்கள் சிலரோடு கலந்துரையாடல் நிகழ்த் தினோம்.

பின்னர் பாரிசிலிருந்து, இங்கிலாந்தின் தலைநகரான இலண்டன் போய்ச் சேர்ந்தோம். இலண்டன் மாநகர் பழைமையும் - புதுமையும் கலந்து காணப்படும் பொலிவு மிக்க ஒன்றாகக் காட்சி அளித்தது. இலண்டனில் பழைய கோட்டை சூழ்ந்த அரண்மனை, புதிய பக்கிங்காம் அரண்மனை, நாடாளுமன்றக் கட்டடம், காண்டர்பெரி மாதா கோயில், ஹைட் பார்க், உரோமானியர் கட்டிய கோட்டை போன்ற இடங்களையெல்லாம் சுற்றிப் பார்த்தோம். பிரிட்டனின் கல்வி அமைச்சர், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், நிதி அமைச்சர் ஆகியோரைக் கண்டு அவரவர்களின் துறைகளைப் பற்றிக் கலந்துரை யாடல்கள் நடத்தினோம். இலண்டன் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இலக்கியக் கூட்டத்தில், 'இலக்கிய இன்பம்' என்ற பொருள்பற்றி நான் சொற்பொழி வாற்றினேன். கூட்டத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட

தமிழன்பர்கள் கலந்துகொண்டார்கள். இலண்டன் பி.பி.சி. தொலைக்காட்சியின் தமிழ் ஒளிபரப்புப் பிரிவில் சிறப்புப் பேட்டி ஒன்று அளித்தேன். இலண்டன் வாழ் தமிழன்பர்கள் எங்களுக்குச் சிறப்பான முறையில் விருந்து ஒன்றினை அளித்தார்கள். அதில் நான் 'உலக நாடுகளில் தமிழர்கள்' என்ற பொருள்பற்றி உரையாற்றினேன்.

இங்கிலாந்து சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு, அமெரிக்காவின் நியூயார்க் நகருக்குப் போய்ச் சேர்ந்தோம். அமெரிக்க அரசின் பிரதிநிதிகள் எங்களை விமானக் கூடத்தில் வரவேற்றனர். நாங்கள் அமெரிக்க அரசின் விருந்தினராக ஏற்றுக்கொள்ளப்பட்டு, உணவு - உறையுள் - போக்குவரத்து போன்ற எல்லா வசதிகளையும் சிறப்பாகப் பெற்றோம். அமெரிக்காவின் நியூயார்க், வாஷிங்டன், சிகாகோ, பெபல்லோ, நயாகரா அருவிப்பகுதி, சான் பிரான்சிஸ்கோ, லாஸ் ஏஞ்சல்ஸ், அரிசோனா, கலிபோர்னியா, ஹாவாய் போன்ற இடங்களில், இருபது நாட்களுக்கு மேல் சுற்றுப்பயணம் மேற்கொண்டோம். எல்லா இடங்களிலும், முக்கியமான பகுதிகளுக்குச் சென்று, அவற்றையெல்லாம் பார்வையிட்டோம். ஆங்காங்குக் கலந்துரையாடல் நடத்தினோம். விடுதலைச் சிலை, நியூயார்க் துறைமுகம், வாஷிங்டன் காங்கிரசு மாளிகை, ஆப்ரகாம் லிங்கன் நினைவிடம், வாஷிங்டன் நினைவிடம், சிகாகோ பல்கலைக் கழகம், சிகாகோ ஏரி, ஸ்மித் சோனியன் அருங்காட்சியகம் ஹாலிவுட் திரைப்பட நகர், பெர்க்லி பல்கலைக் கழகம், டிஸ்னிலாண்டு, ஹாவாய்த் தீவின் கடற்கரைப் பகுதி போன்றவற்றை யெல்லாம் கண்டு களித்தோம். நியூயார்க், வாஷிங்டன், சிகாகோ, கலிபோர்னியா, சான்பிரான்சிஸ்கோ ஆகிய நகரங்களிலுள்ள தமிழ்ச் சங்கத்தினர் எங்களுக்குச் சிறந்த வரவேற்பு அளித்து, தமிழர் முறைப்படி வாழையிலை போட்டு, அறுசுவை விருந்து அளித்தனர்.

பின்னர் நாங்கள் சப்பான் நாட்டின் டோக்கியோ நகருக்குப் போய்ச் சேர்ந்தோம். டோக்கியோ நகரில் சப்பான் மன்னரின் அரண்மனை, முக்கியமான சில பல்கலைக் கழகங்கள், சிறப்பான மருத்துவமனைகள், மிகப்பெரிய தொழிற்சாலைகள், புத்தர் கோயில்கள், துறைமுகம் போன்றவற்றைப் பார்வையிட்டோம். சப்பானிய நாடகங்களையும், நடன அரங்குகளையும் கண்டுமகிழ்ந்தோம்.

அடுத்து ஆங்காங் நகர் போய்ச்சேர்ந்தோம். அங்கு மின்னணுப்பொருள்கள், ஆடை வகைகள், அணிமணிகள் போன்றவற்றைக் கடைகளில் வாங்கினோம். சீன நாட்டுப் பொருள்கள் ஏராளமாக அங்குக் கிடைக்கப்பெற்றன. தமிழ்நாட்டைச் சேர்ந்த வணிகர்கள் அங்குப் பெரிய பெரிய கடைகளை வைத்து நடத்திக்கொண்டு வந்ததைக் கண்டோம். அவர்கள் அனைவரும் சேர்ந்து ஏற்பாடு செய்திருந்த சிறப்புக் கூட்டத்திலும், விருந்திலும் நாங்கள் கலந்துகொண்டோம். வரவேற்புக் கூட்டத்தில் நான் தமிழ் பற்றியும், தமிழர் நிலைபற்றியும் சொற்பொழிவாற்றினேன். நண்பர் அப்துல் சமத் அவர்களும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

பின்னர் நாங்கள் தாய்லாந்தின் தலைநகரான பாங்காக் நகர் போய்ச் சேர்ந்தோம். அங்குள்ள மன்னர் அரண்மனை, புத்தர் கோயில்கள், வணிகக் கூடங்கள், படகில் செல்லும் கால்வாய்ப் பகுதிகள் போன்றவற்றைப் பார்வையிட்டோம். அங்கிருந்த இந்திய நாட்டுத் தூதர் எங்களுக்கு விருந்து ஒன்று ஏற்பாடு செய்து, சிறப்பான வரவேற்பை அளித்தார்.

பாங்காக் பயணத்தை முடித்துக்கொண்டு மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூர்போய்ச் சேர்ந்தோம். கோலாலம் பூரில் அமைச்சர்கள் சிலரைக் கண்டு அளவளாவி இருந் தோம். பல்கலைக் கழகம், மருத்துவமனை, இரப்பர்

தோட்டம் போன்றவற்றைப் பார்வையிட்டோம். வள்ளல் ஆறுமுகம் பிள்ளை, மலேசியா வாழ் தமிழர்கள் அடங்கிய வரவேற்புக்கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்து எங்களுக்குச் சிறப்பான வரவேற்பு அளித்தார். நான் 'தமிழரின் சிறப்பு' பற்றி உரையாற்றினேன். மலேசியா தமிழன்பர்கள் அன்போடு ஏற்பாடு செய்திருந்த சிறப்பான விருந்தில் நாங்கள் கலந்துகொண்டோம். கோலாலம்பூர் தமிழ்ச் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் ஒன்றிலும் கலந்துகொண்டு நான் 'திருக்குறள் நெறி' என்னும் பொருள்பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினேன்.

பின்னர் சிங்கப்பூர் போய்ச் சேர்ந்தோம். சிங்கப்பூரில் வாழ்ந்த தமிழன்பர்கள் பலரும் எங்களை வரவேற்று மகிழ் வித்தார்கள். சிங்கப்பூரின் முக்கியப் பகுதிகளையெல்லாம் சுற்றிப் பார்த்தோம். சிங்கப்பூர் தமிழ்ச் சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்த வரவேற்புக் கூட்டத்திலும், விருந்திலும் கலந்து கொண்டோம்.

உலகநாடுகளின் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு, நாற்பத்தைந்து நாட்களுக்குப்பிறகு நாங்கள் சென்னை வந்து சேர்ந்தோம். சென்னை விமானக் கூடத்திற்கு முதல்வர் கலைஞர் கருணாநிதி, அமைச்சர் பெருமக்கள், கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள், கழகப் பொறுப்பாளர்கள், கழகச் செயல்வீரர்கள், உற்றார் உறவினர்கள் பலரும் வருகை தந்து எங்களை அன்புடன் வரவேற்றுச் சிறப்பித்தார்கள்.

உலக நாடுகளின் சுற்றுப்பயணம், பல்வேறு வளர்ந்த நாடுகளின் வளர்ச்சி, ஆங்காங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரம், தொழில் வளர்ச்சி, வாணிகப் பெருக்கம், அறிவியல் தொழில் நுட்பவியல் வளர்ச்சி, மக்களின் ப்ழக்க வழக்கங்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள், நினைவுச் சின்னங்கள், கல்வி வளர்ச்சி, பொருளாதார ஏற்றம்

போன்றவற்றை நேரடியாகத் தெளிவாக அறிந்துகொள்ளப் பெரிதும் பயன்பட்டது. நமது நாட்டை அந்த நாடுகள்போல் முன்னேறச் செய்யவேண்டுமானால், எவ்வளவு கடினமான உழைப்போடும், அறிவாற்றல் திறனோடும் பாடுபட வேண்டியிருக்கும் என்பதைப் புரிந்துகொண்டேன். நமது நாடு முன்னேறவேண்டுமானால், மக்களிடத்தில் அறிவியல் அறிவு, அறிவியல் சிந்தனை, அறிவியல் அணுகுமுறை, தொழில்நுட்பவியல் ஆற்றல் போன்றவை பரவலாக வளர வேண்டும் என்பது மட்டும் உண்மை.

## 1971 தேர்தலும் ஆட்சி அமைப்பும்

1971 பிப்ரவரித் திங்களில், இந்திய நாடாளுமன்ற மக்களவைக்கான பொதுத்தேர்தலும், தமிழகச் சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தலும் ஒருசேர ஒருங்கிணைந்து வந்தன.

அந்தத் தேர்தலில், தி.மு.கழகமும், இந்திரா காங்கிரசும் ஒரு அணியில் கூட்டணியாக இருந்து போட்டியிட்டன. எதிர் அணியில், சுதந்திராக் கட்சியும் ஸ்தாபனக் காங்கிரசும் ஒன்று சேர்ந்திருந்தன.

நான் தி.மு.கழகத்தின் வேட்பாளராக திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட்டு, வெற்றிபெற்றேன். தமிழகச் சட்டமன்றப் பேரவைக்கான தேர்தலில் தி.மு.கழகத்திற்கு மட்டும் 184 இடங்கள் கிடைத்தன. தி.மு.க. தவிர்த்த மற்றக் கட்சிகள் அனைத்திற்கும் 50 இடங்கள் கிடைக்கப்பெற்றன.

14.3.71இல் தி.மு.க. சட்டமன்றக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. என்.வி. நடராசன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். நான் முன்மொழிய, புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., பேராசிரியர் அன்பழகன், மதுரை முத்து ஆகியோர் வழிமொழிய கலைஞர் கருணாநிதி அவர்கள், தி.முக.

*சட்டமன்றக் கட்சியின் தலைவராக ஒரே மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.*

*15.3.71 அன்று, சென்னைப் பல்கலைக் கழகப் பட்ட மளிப்பு விழா மண்டபத்தில், ஆளுநர் உஜ்ஜல் சிங் முன்னிலையில், கலைஞர் கருணாநிதி தலைமையிலான அமைச்சரவையினர் பதவிக்கான உறுதிமொழியை எடுத்துக்கொண்டோம்.*

*நான் 1971க்கும் 1976க்கும் இடைப்பட்ட காலத்தில், கல்வி, வருவாய், விற்பனைவரி, உள்ளாட்சி, வீட்டுவசதி, சுற்றுலா, பிற்படுத்தப்பட்டோர் நலம்போன்ற துறைகளின் பொறுப்புக்களை ஏற்று நடத்தினேன்.*

*நான் 1967 முதல் 1976 வரை ஒன்பது ஆண்டுகாலம் கல்வித் துறையின் அமைச்சராக இருந்தபோது, கல்வித் துறையின் வளர்ச்சிக்காகப் பல திட்டங்களைத் தீட்டி, அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவரப் பெரிதும் முயன் றேன்.*

1. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழ் - ஆங் கிலம் மட்டுமே பாடமொழிகளாகவும், பயிற்று மொழி களாகவும் அமையும் இருமொழித் திட்டம் நடை முறைக்குக் கொண்டுவரப்பட்டது.

2. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங் களிலும், கலையியற் பாடங்களைத் தமிழில் பயிற்று விக்க வழிவகைகள் செய்யப்பட்டன.

3. கல்லூரிகள் - பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில், தமிழில் பயில முன்வரும் மாணவர்க்குக் கல்விக் கட்டணத்தில் முழுச் சலுகை அளிக்கப்பட்டது.

4. ஆயிரத்திற்கு மேற்பட்ட தொடக்கப்பள்ளிகளும் அறுநூற்றுக்கு மேற்பட்ட உயர்நிலைப்பள்ளி களும், நூற்றுக்கு மேற்பட்ட கல்லூரிகளும் புதியனவாக என்னால் உருவாக்கப்பட்டன.

5. பொறியியல் - மருத்துவம் - வேளாண்மை - கால்நடை போன்ற தொழில்நுட்பக் கல்லூரி களில், பள்ளி இறுதித்தேர்வு மதிப்பெண்கள், நேர்முகத் தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில், இட ஒதுக்கீட்டுத் திட்டத்திற்கு ஏற்ப, மாணவ-மாணவியர் கள் முறைப்படி சேர்க்கப்பட அரசாணை பிறப்பிக்கப் பட்டது.

6. பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு, கல்லூரிக் கல்வித் தேர்வு ஆகியவற்றில் கலந்துகொள்ளும் மாணவ - மாணவியரின் விடைத்தாள்கள், பொது மைய இடங்களில் வைத்துத்தான் திருத்தப்படவேண்டும் என்ற புதியமுறை கொண்டுவரப்பட்டது.

7. பள்ளி மாணவ-மாணவியரும், ஆசிரிய-ஆசி ரியைகளும் குறிப்பிட்ட சீருடை அணிந்து கல்விச் சாலைகளுக்கு வரவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது.

8. வெப்பம் மிகுந்த நாடாகிய நமது நாட்டில் பள்ளி கள் - கல்லூரிகள் காலை 7 மணி அளவில் தொடங்கப் பெற்று, பிற்பகல் 1 மணிக்கு முடிவுற வேண்டும் என்றும், மாலைப் பொழுதில் மாணவர்களும் - ஆசிரியர்களும் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம் என்றும் வற்புறுத்தப்பட்டன.

9. பெற்றோர் - ஆசிரியர் சங்கங்கள் பள்ளிகள் தோறும் நிறுவப்படவேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கப் பட்டதோடு, கல்வித் துறையில் பெற்றோர் - ஆசிரியர்

நலன் பற்றிக் கவனிக்கத் தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப் பட்டது.

10. அறச்சிந்தனையாளர்களிடமிருந்து, பள்ளிகளுக் கான நன்கொடை, பொருள்களைத் திரட்டப் பல இடங்களில் கல்வி மேம்பாட்டு மாநாடுகளும், கண்காட்சிகளும் நடத்தப்பட்டன.

11. பள்ளிகளில், நூலகப்படிப்பு, ஓவியம், உடற் பயிற்சி போன்றவற்றில் தேர்வுகள் நடத்தி, மாணவ - மாணவியர்க்கு மதிப்பெண்கள் தரப்பட்டு அவற்றை மாணவ-மாணவியரின் வகுப்புத் தேர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப் பட்டது.

12. பள்ளிகள் தோறும் 10 சதவீத மாணவ-மாண வியரை, சாரண - சாரணியர் அமைப்பினராக ஆக்கவேண்டும் என்று எல்லாப்பள்ளிகளும் கேட்டுக்கொள்ளப் பட்டன.

13. 'ஆசிரியர் கடமைகள் பத்து', 'மாணவர் கடமைகள் பத்து', 'பெற்றோர் கடமைகள் பத்து' என்ற பலகைகள் பள்ளிதோறும் வைக்கப்பட என்னால் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

14. தமிழக அரசின் வருவாயில், ஆண்டுதோறும் 25 சதவீத ஒதுக்கீடு கல்வித்துறைக்கு மட்டும் செலவிட வழிவகை செய்யப்பட்டது.

15. சிறந்த பள்ளிகள், சிறந்த ஆசிரியர்கள், சிறந்த மாணவர்கள் என்று மாநில அளவில் தேர்ந் தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு விருதுகள் -

பணப்பரிசுகள் - பதக்கங்கள் - நற்சான்றிதழ்கள் போன்றவைகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப் பட்டன.

16. தமிழில், கல்லூரி - பள்ளிப் பாடநூல்களைக் குறைந்த செலவில் அச்சிட்டு வழங்க ரூ. 1 கோடி நிதி ஒதுக்கப்பெற்றது.

*கல்வித் துறையைப்போன்றே, வருவாய்த்துறை, விற்பனைவரித் துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, உள்ளாட் சித்துறை, சுற்றுலாத்துறை, வீட்டுவசதித்துறை, பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை போன்றவற்றில் பலப்பல நிருவாகச் சீர்திருத்த முறைகளைக் கொண்டுவந்து, அவற்றையெல் லாம் நடைமுறைப்படுத்தினேன். சட்டமன்ற உறுப்பினர் களும், பொதுநல நோக்கங்கொண்ட பெரியோர்கள் பலரும் நான் பொறுப்புவகித்த துறைகள் பற்றிய நிருவாகச் சீர்திருத்தங்களையும், செம்மையான நடவடிக்கைகளையும் பெரிதும் பாராட்டினார்கள்.*

*1967 முதல் 1976 வரை நான் பல்வேறு பொறுப்புக்களின் அமைச்சராகவும், சட்டமன்றப் பேரவையின் முன்னவராக வும் இருந்து பணியாற்றி வந்தேன்.*

புரட்சிநடிகர் எம்.ஜி.ஆர். கழகத்திலிருந்து வெளியேற்றம்

*1971 பொதுத்தேர்தலில், புரட்சிநடிகர் எம்.ஜி. இராமச்-சந்திரன் அவர்களின் திரையுலகப் புகழும், செல்வாக்கும், பிரச்சாரப் பணியும், தி.மு.கழகம் மிகப்பெரிய வெற்றியைப் பெறக் காரணமாக இருந்தன. அந்தத்தேர்தலில், தமிழகச் சட்டமன்றப் பேரவையின் 234 இடங்களில், தி.மு.கழகம் 184 இடங்களில் வெற்றிபெற்றது.*

அவர், 1971ஆம் ஆண்டு அமைந்த அமைச்சரவையில், தாமும் பங்குபெறவேண்டும் என்றும், கலைத்துறையின் அமைச்சராகப் பொறுப்பு ஏற்கத் தம்மால் இயலும் என்றும் கூறினார். அப்பொழுது முதலமைச்சர் பொறுப்பை ஏற்க இருந்த கலைஞர் கருணாநிதி அவர்கள், "எம்.ஜி.ஆர். திரைப்பட நடிப்பை விட்டுவிட்டு வந்தால், அமைச்சர் பொறுப்பை ஏற்கலாம். திரைப்படங்களில் நடித்துக் கொண்டே அமைச்சர் பொறுப்பை ஏற்றிருப்பது என்பது சட்ட விதிமுறைப்படி பொருந்திவராது" என்று கூறினார்.

புரட்சிநடிகர் எம்.ஜி.ஆர். திரைப்பட உலகில் புகழோடும், பெருமையோடும் முதல் இடத்தில் இருந்து வந்ததால், அந்தத்துறையை விட்டுவிட்டு அமைச்சர் பதவிக்குவர அவர் விரும்பவில்லை. என்றாலும், அவர் கலைஞர் கருணாநிதியின் போக்கிலே மனவருத்தம் கொண்டிருந்தார்.

1971 பொதுத் தேர்தலின்போது, கழக வேட்பாளர்களுக்குத் தேர்தல் செலவுக்கு எனக் கொடுக்கப்பட்ட தொகைகள், ஒரு சிலர்க்கு அதிகமாகவும், வேறு சிலர்க்குக் குறைவாகவும் இருந்தன என்ற புகார்கள் பொருளாளர் எம்.ஜி.ஆரிடம் ஒரு சிலரால் கொடுக்கப்பட்டன.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் தேர்தல் வரவு - செலவு பற்றிய கணக்கு விவரங்கள் தமக்குத் தெரியப்படுத் தப்படவேண்டும் என்று, கழகத் தலைவர் கலைஞரிடம் கேட்டார். இதற்கு முறையான விடையைக் கலைஞர் எம்.ஜி.ஆருக்கு அளிக்கவில்லை. தேர்தல் பற்றிய வரவு - செலவுக் கணக்குகளையெல்லாம் கேட்கக்கூடாது என்ற விதத்தில், கலைஞர் கருணாநிதியின் பதில்கள் அமைந்திருந் தன. "கழகப்பொருளாளர் கழகக் கணக்குகளைப் பற்றிக்

கேட்கக்கூடாதா? அப்படியானால் பொருளாளர் பதவி எதற்கு?" என்பனபோன்ற மன உளைச்சல் புரட்சிநடிகர் எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்டது.

கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதியின் போக்கைப் பொறுத்துக்கொள்ள முடியாத எம்.ஜி.ஆர், 8.10.1972இல் திருக்கழுக்குன்றத்திலும், அதனையடுத்துச் சென்னை இலாயிட்சு சாலையிலும் நடைபெற்ற பொதுக்கூட்டங் களில், "கழகத் தலைவர் கலைஞரும், மேலிடத்தலைவர்களும், கழக அமைப்புக்களின் அனைத்துப் பொறுப்பாளர்களும் தேர்தல் பற்றிய கணக்குகளையும், கழகக் கணக்குகளையும், தத்தமது சொத்துக் கணக்குகளையும் கழகத் தோழர்களுக்குக் காட்ட வேண்டும்" என்று வெளிப்படையாகப் பேசினார்.

இந்தச் செய்தியை மதுரையிலிருந்த கலைஞர் கேள்விப் பட்டதும், 10.10.72 அன்று, சென்னையில், கழகத்தின் அவசரச் செயற்குழுவைக் கூட்ட ஏற்பாடு செய்தார். அவரே செயற்குழு உறுப்பினர்களுக்குத் தந்திமூலம் அழைப்பு விடுத்தார்.

10.10.72 அன்று, சென்னை அரசு விருந்தினர் விடுதியில், கழகச் செயற்குழுக் கூட்டம் கூடிற்று. கூட்டத்திற்குக் கலைஞர் தலைமை வகித்தார். நானும், முக்கியமான செயற்குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டோம்.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலோர், கழகத்தின் கட்டுப்பாட்டை மீறும் வகையிலும், கழகத்தின் கண்ணியத்திற்குக் குந்தகம் ஏற்படுத்தும் முறையிலும் நடந்துகொண்ட பொருளாளர் எம்.ஜி.ஆர். மீது தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, அவரைக் கழகத்திலிருந்து அறவே வெளியேற்றவேண்டும் என்று வற்புறுத்தினர். நாஞ்சில் மனோகரன், செழியன், முரசொலி மாறன்,

அரங்கண்ணல் ஆகிய நால்வர் மட்டும், "எம்.ஜி.ஆரிடம் விளக்கம் கேட்டால் போதும். அவர்மீது எத்தகைய ஒழுங்கு நடவடிக்கையும் மேற்கொள்ளவேண்டாம்." என்று கூறினர். நான் விவாதங்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு இருந்தேனே அல்லாமல், எந்த ஒரு கருத்தையும் திட்டவட்டமாகச் சொல்லவில்லை.

அவசரச் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட செயற்குழு உறுப்பினர்களான காஞ்சி மணி, சென்னை நீலநாராயணன், கோவை இராசமாணிக்கம், சென்னை செல்வராசு, தருமபுரி முருகேசன், தோப்பூர் திருவேங்கடம், முகவை தென்னரசு, நெல்லை அழகிய நம்பி, மதுரை முத்து, திருச்சி எம்.எஸ். வெங்கடாசலம், சாதிக் பாட்சா, சத்தியவாணி- முத்து, ப.உ. சண்முகம், என்.வி. நடராசன், பாரூக், இரா. இராசன், அன்பில் தருமலிங்கம், மன்னை நாராயணசாமி, சேலம் கிருட்டிணன், இராசாராம், காஞ்சி கலியாணசுந்தரம், அழகமுத்து, சி.வி.எம். அண்ணாமலை, டி.கே. சீனிவாசன் ஆகிய 25 உறுப்பினர்கள் கையொப்ப மிட்ட புகார் மனு ஒன்றினைத் தி.மு.கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதியிடமும், கழகப் பொதுச் செயலாளரான என்னிடமும் அளித்தனர்.

அந்தப் புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப் பட்டிருந்தது :-

> "இதில் கையொப்பம் செய்துள்ள தி.மு.கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆகிய நாங்கள், பணிவன்போடு அளித்த விண்ணப்பம்.
>
> அண்மையில், சில நாட்களாகக் கழகப் பொருளாளர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள், கழகச் சட்ட திட்டத்திற்கு மாறாகக் கழக அரசையும், சட்டமன்ற, நாடாளுமன்ற

உறுப்பினர்களையும், மாவட்ட - வட்ட - கிளைக் கழகச் செயலாளர்களையும், குற்றம் சாட்டும் முறையில், இழிவுபடுத்தியும், கழகச் செயற்குழு - பொதுக்குழுவில் மட்டுமே பேசப்படக் கூடியதும், மறுக்கப்படக்கூடியதுமான பிரச்சினைகளைப் பொது மேடையில் பேசியும் பொது மக்களிடையே குழப்பம் விளைவித்து வருகிறார்.

மேலும் கோவையில் நடைபெற்ற பொதுக்குழுவில், மதுவிலக்கு ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசி, அந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றுவதற்கு ஒத்துழைத்திருந்தும், இப்பொழுது அந்தப் பிரச்சினையைப் பற்றி எதிர்த்துப் பேசிவருகிறார். மேலும் கழகப் பொதுக் குழுவிலும், செயற்குழுவிலும், அவர் ஒரு தீர்மானம் கொண்டுவருவதாகவும், அந்தத் தீர்மானத்தைப் பொதுக்குழு ஏற்றுக்கொள்ளாவிட்டால், தான் பொதுமக்கள் முன்னால் சென்று பிரச்சினையை எடுத்துவைத்துக் கழகத்தைச் சந்திப்பேன் என்றும் பேசியிருக்கிறார்.

அவருடைய இந்தப்போக்கு, கழக அமைப்பையும், பொதுக் குழுவையும், நமது சனநாயக முறையையும் இழிவுபடுத்துவ தாக உள்ளது.

ஆகவே, கழகக் கட்டுப்பாட்டைக் காப்பாற்றவும், விதி முறைகளுக்கு மதிப்பு அளிக்கும் வகையிலும் அவர்மீது உடனடியாகத் தக்க நடவடிக்கையை எடுக்கப் பணிவன் போடு கேட்டுக்கொள்கிறோம்''

*அந்தப் புகார் மனுவைப்பெற்றுக்கொண்ட நான்,* ''இந்த விண்ணப்பத்தை ஏற்று, எம்.ஜி.ஆர். அவர்களைக் கழகத்தின் எல்லாப் பொறுப்புக்களிலிருந்தும் தற்காலிகமாக விலக்கி (சஸ்பெண்டு) வைத்து விளக்கம் கேட்கலாம்'' *என்று குறிப்பு*

எழுதி, அதனைக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களின் ஒப்புதலுக்கு, அவரிடம் கொடுத்தேன்.

கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் அதில் கையொப்பம் இட்டு அதற்கு ஒப்புதல் அளித்தார்.

புரட்சிநடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள், தி.மு.கழகத்திலிருந்து தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி 10.10.72 அன்று மாலை செய்தித்தாள்களில் வெளிவந்தவுடன், கழகச் செயல் வீரர்களிடத்தும் பொதுமக்களிடத்தும் ஒரு பெரும் பரபரப்பு சூழ்நிலை ஏற்பட்டது. கழகத்தின் செயல் வீரர்கள் பலரும், ஆதரவாளர்கள் பலரும் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு ஆதரவாகவும், கலைஞர் கருணாநிதிக்கு எதிராகவும், ஆர்ப்பாட்டம், கிளர்ச்சி, மறியல் போன்றவைகளில் ஈடுபட்டார்கள். அவர்கள் போக்குவரத்துச் சாதனங்களான பேருந்துகள், கார்கள், லாரிகள், இரயில்கள் போன்றவற்றில் ''எம்.ஜி.ஆர். வாழ்க!'', ''எம்.ஜி.ஆரை வெளியேற்றாதே!'', ''கருணாநிதி ஒழிக!'' என்பனபோன்ற முழக்கங்களை எழுதிவைத்தார்கள்.

11.10.72 முதல் 16.10.72 வரை சென்னை சத்தியா படப்பிடிப்பு நிலையத்தின் மைதானத்தில் நாள்தோறும் பல்லாயிரக்கணக்கானவர்கள் கூடி, எம்.ஜி.ஆருக்கு ஆதரவாக முழக்கமிட்டார்கள். எம்.ஜி.ஆர். அவர்களுக்கெல்லாம் உரியமுறையில் சமாதானம் சொல்லி, கழகத்தை நடத்த, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்துவந்தார்.

14.10.72 அன்று புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர் அவர்கள் தி.மு.கழகத்திலிருந்து தாம் அறவே விலகிவிட்டதாகத் தெரிவித்து, அறிக்கை ஒன்றினை வெளியிட்டார். அவர் புதிய கழக அமைப்பை ஏற்படுத்தப்போவதாக, 16.10.72 அன்று அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டார்.

அதன்படி 17.10.72 அன்று "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற பெயரில் அரசியல் அமைப்பை ஏற்படுத்தினார். அறிஞர் அண்ணாவின் உருவம்பொறித்த கறுப்பு - சிவப்பு கொண்ட இருவண்ணக் கொடியையும் உருவாக்கினார். பின்னர் அ.தி.மு.கழகம் தனி அரசியல் கட்சியாகச் செயல்படத் தொடங்கியது. அதன் கிளைகள் எல்லா நகரங்களிலும், பேரூர்களிலும், சிற்றூர்களிலும் தோற்றங்கொள்ளத் தொடங்கின. இளைஞர்கள் பலரும் அந்தக்கட்சியில் ஆர்வத்தோடும், அக்கறையோடும், உணர்ச்சியோடும், எழுச்சியோடும் பங்குகொள்ளத் தொடங்கினர். மிகக் குறுகிய காலத்தில் அந்தக் கட்சிக்கு ஆதரவும், செல்வாக்கும் பெருகத் தொடங்கின.

**எம்.ஜி.ஆரை தி.மு.கழகத்திலிருந்து வெளியேற்றக் காரணம் யார்?**

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆரை, தி.மு.கழகத்திலிருந்து வெளியேற்ற நான்தான் காரணம் என்று உண்மைக்குப் புறம்பான வாதத்தைக் கலைஞர் கருணாநிதி அவர்கள், அடிக்கடி செய்தித்தாள்களில் எழுதியும், பொதுக் கூட்டங்களில் பேசியும் தம்மைக் காப்பாற்றிக்கொள்ளப் பெரிதும் முயன்றார்.

ஆனால் உண்மையில் நடந்தது என்ன? 1971 தேர்தலுக்குப் பிறகு எம்.ஜி.ஆருக்கும், கலைஞர் கருணாநிதிக்கும் இடையே மனக்கசப்பு, மாற்சரியம், வெறுப்பு, பகையுணர்ச்சி போன்றவை தோன்றலாயின. எனக்கும் எம்.ஜி. ஆருக்கும் இடையே எந்தவிதமான சண்டையும், சச்சரவும், தகராறும் ஏற்படவே இல்லை. எம்.ஜி.ஆரைக் கழகத்தைவிட்டு வெளியேற்றவேண்டும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றவே இல்லை. எம்.ஜி.ஆரை வெளியேற்றுவதற்கு முழுமுதற் காரணமாக இருந்துவந்தவர் கலைஞர் கருணாநிதியே ஆவார்.

அவசர அவசரமாகக் கழகச் செயற்குழுவைக் கூட்டிய வரும் கலைஞர் கருணாநிதிதான்! செயற்குழு உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்தவரும் அவர்தான்! எம்.ஜி.ஆருக்கு மாறுபாடான கருத்துக்களை வழங்கியவரும் அவர்தான்! எம்.ஜி.ஆர். மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று துடியாய்த் துடித்தவரும் அவர்தான்! செயற்குழுவினரின் முடிவுக்கு இறுதியாக ஒப்புதல் அளித்தவரும் அவர்தான்.

*எம்.ஜி.ஆரை வெளியேற்ற வேண்டுமா? வேண்டாமா? என்பது பற்றிய விவாதத்தில் நான் கலந்து கொண்டு, எந்த ஒரு கருத்தையும் சொல்லவில்லை. செயற்குழுவினரின் தீர்மானத்தைப் பொதுச்செயலாளர் என்றமுறையில் நான் ஏற்று, குறிப்பினை எழுதிக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதியின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தேன். நான் செய்தது அவ்வளவுதான்!*

*எம்.ஜி.ஆரை, கழகத்திலிருந்து தற்காலிகமாக விலக்கி வைத்து, அவரிடம் விளக்கம் கேட்கும் அறிக்கை தயார் நிலையில் இருந்தது. அறிக்கை தயாரானதற்குப் பிறகும் விவாதம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது.*

*செய்தித்தாள் நிருபர்கள் செயற்குழுவின் முடிவை எதிர் பார்த்து நீண்டநேரம் காத்துக்கொண்டு இருந்தார்கள். அறிக்கையை என்.வி. நடராசன் அவர்கள் செய்தித் தாளினரிடம் தருவதற்காகக் கையில் வைத்திருந்தார். அவர்,* "அறிக்கையை நிருபர்களிடம் கொடுத்துவிடலாமா? அவர்கள் செய்தி என்ன என்று நீண்ட நேரமாகக் கேட்டுக்கொண்டிருக் கிறார்கள்!" என்று என்னிடம் கூறினார். "செயற்குழு உறுப்பினர் களில் மிகப்பெரும்பாலோரும் கையெழுத்திட்ட தீர்மானத்திற்குக் கழகத் தலைவரின் ஒப்புதல் கையொப்பமும் கிடைத்துவிட்டதால், அதனைச் செய்தித்தாளினரிடம் தெரிவித்துவிடலாம்!" *என்று அவரிடம் கூறினேன்.*

இதைத்தான், கலைஞர் கருணாநிதி, ''எம்.ஜி.ஆர். தி.மு. கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டதற்குக் காரணம் நாவலர் நெடுஞ்செழியன்தான்!'' என்று திரும்பத்திரும்பத் திரித்திப் பேசியும், எழுதியும் வந்துள்ளார்.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உண்மை நிலவரம் மிகத் தெளிவாகத் தெரிந்திருந்த காரணத்தால், கலைஞர் கருணாநிதியின் உண்மைக்குப் புறம்பான கூற்றை அவர் நம்பவில்லை. பின்னர் எம்.ஜி.ஆர் அவர்கள் என்னைப் பலவகைகளிலும் போற்றிப் பாராட்டிச் சிறப்புச் செய்ததிலிருந்து அவரை விலக்க நான் காரணமல்ல என்ற உண்மை நிலைமை எல்லோருக்கும் தெரியவந்தது.

### தி.மு.கழகத்திற்கு ஏற்பட்ட சரிவு

*எம்.ஜி.ஆர். அவர்கள் 'அண்ணா திராவிட முன்னேற்றக் கழக' அமைப்பைத் தோற்றுவித்து, அதனை வளர்த்துக் கொண்டுவந்த நிலையில், அவரது கழகத்தினர், அவரைப் 'புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்' என்று பெருமை யோடும், பூரிப்போடும் அழைக்கத் தலைப்பட்டனர்.*

*எம்.ஜி.ஆர். அவர்கள் கழகத்தை விட்டு வெளியேறி யதற்குப்பிறகு, கலைஞர் கருணாநிதியும், நானும் தி.மு. கழகத்தையும், தி.மு.கழக ஆட்சியையும் எப்பொழுதும் போல் கட்டிக்காத்து வளர்த்து வருவதில் கண்ணுங்கருத்து மாக இருந்தோம் என்றாலும், எம்.ஜி.ஆரால் தொடங்கப் பட்ட அ.தி.மு.கழகம் மிகக்குறுகிய காலத்திலேயே, கழக இளைஞர்களின் ஆதரவையும் பொதுமக்களின் ஆதரவையும் பெருமளவுக்குப் பெறத் தொடங்கிற்று.*

*அ.தி.மு.கழகம் தோன்றிய ஒன்பதாவது திங்களில், அதாவது 1973 ஆம் ஆண்டில், திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில், மாபெரும்*

வெற்றியைப் பெற்றது. அடுத்து நடைபெற்ற கோவை நாடாளுமன்றத் தொகுதியின் இடைத்தேர்தல், சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் ஆகியவற்றிலும் அ.தி.மு.கழகம் வெற்றிபெற்றது. 1974ஆம் ஆண்டில், புதுவை மாநிலத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில், அ.தி.மு.கழகம் பெரும் பான்மையான இடங்களில் வெற்றிபெற்றுப் புதுவை மாநில அரசைக் கைப்பற்றியது.

தி.மு.கழகத்திலிருந்து அடிமட்டத் தொண்டர்கள் பலரும் அ.தி.மு.கழகத்தில் இணைந்துவிட்டதாலும், பொதுமக்க ளின் நல்லாதரவு அ.தி.மு.கழகத்திடம் பெருவாரியாக இருந்துவந்ததாலும், இடைத்தேர்தல்களிலும், பொதுத் தேர்தல்களிலும், தி.மு.கழகத்திற்குப் பெருத்த சரிவு ஏற்பட்டது. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் செல்வாக்கே மிக ஓங்கி எங்கணும் வளரத் தலைப்பட்டது.

### மதுரைப் பல்கலைக் கழகத்தின் மதிப்புறு டாக்டர் பட்டம் பெறுதல்

மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக டாக்டர் மு. வரதராசன் அவர்கள் பணிபுரிந்துவந்த காலத் தில், எனக்கு மதிப்புறு டாக்டர் பட்டத்தைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக வழங்கப் பெருமுயற்சி எடுத்துக்கொண் டார். அவருடைய விருப்பத்திற்கு இணங்க, மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிமன்றக் குழு, எனக்கு மதிப்புறு டாக்டர் பட்டத்தை வழங்க ஒரு மனதாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசன் அவர்கள், எனது இசைவைப் பெற்றதற்குப்பிறகு, தனிப் பட்டமளிப்பு விழாவிற்குச் சிறப்பான முறையில் ஏற்பாடுகளைச் செய்தார்.

பட்டமளிப்பு விழாவிற்கு, தமிழக ஆளுநராக இருந்த கே.கே. ஷா அவர்கள் தலைமை தாங்கி, எனக்கு மதிப்புறு டாக்டர் பட்டத்தை வழங்கினார். சிறப்பு விருந்தினராகத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி கலந்துகொண்டார். விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர், உயர்நிலை அதிகாரிகள், பேராசிரியப் பெருமக்கள், பல்கலைக் கழக மாணவர்கள், தொழிலதிபர்கள், வணிகவேந்தர்கள், வழக்கறிஞர்கள், கழகப் பொறுப்பாளர்கள் போன்ற பலரும் பெருந்திரளினராகக் கலந்துகொண்டு சிறப்புச் செய்தார்கள்.

பட்டம் வழங்கியது குறித்து, நான் நன்றியுரை ஆற்றும் போது,

> ''பாடுதமிழ் வளர்த்த மதுரை மாநகரில், மதுரைப் பல்கலைக்கழகம் எனக்கு மதிப்புறு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்திருப்பது, எனக்குக் கிடைத்துள்ள பெறற்கரிய பெரும்பேறு எனக்கருதுகிறேன். என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியது, நான் விரும்பிப்போற்றிவரும் அருந்தமிழே யாகும். மதுரைப் பல்கலைக் கழகம் என்னைப் பெருமைப் படுத்திப் பாராட்டி, எனக்குச் செய்திருக்கும் சிறப்பு தமிழுக்குச் செய்துள்ள பெருஞ்சிறப்பு என்றே கருதுகிறேன்.
>
> மேலும் மேலும் நான் தமிழ்த்தொண்டாற்றவும், பொதுத் தொண்டு புரியவும் இந்த விழா எனக்குப் பெரிதும் ஊக்கம் அளிப்பதாக அமைந்துள்ளது. எங்கும் தமிழ் - என்றும் தமிழ் - எதிலும் தமிழ் - எப்படியும் தமிழ் என்பது நமக்கு குறிக்கோள் ஆகும். அந்தக் குறிக்கோளை அடைய நான் எனது சிந்தை - சொல் - செயல் ஆகியவற்றைத் தொடர்ந்து பயன்படுத்துவேன்.

பண்டைக் காலந்தொட்டுத் தமிழர் போற்றிவந்த சிறந்த பகுத்தறிவுப் பண்பாட்டு நெறி எல்லாத் துறைகளிலும் வளரவேண்டும். அன்பு நெறியும் - அறிவு நெறியும் - பண்பாட்டு நெறியும் அழிந்துவிட்டால், தமிழ்ச் சமுதாயம் தன் பெருமையையும், புகழையும் இழந்துவிடும்.

தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்றத் தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்கள் மிகவும் பாடுபடவேண்டும்.

தமிழ்நாட்டில் - எல்லாத் தரப்பினர்க்கும் அன்பு - அறிவு - ஆற்றல் - ஆண்மை - திறமை - பண்பு - பாங்கு வளர நாம் அனைவரும் பாடுபடுவோமாக!

எனக்கு மதிப்புறு டாக்டர் ப்ட்டம் வழங்கிப் பெருமைப் படுத்தியுள்ள மதுரைப் பல்கலைக் கழகத்திற்கும், அதன் துணை வேந்தருக்கும், அதன் ஆட்சி மன்றக் குழுவினர்க்கும் என் உளங்கனிந்த நன்றியை உவகைப் பெருக்கோடு தெரிவித்துக் கொள்கிறேன்!"

என்று குறிப்பிட்டுப் பேசினேன்.

டாக்டர் பட்டம் பெற்ற எனக்கு வரவேற்பும், பாராட்டும் தெரிவிக்கின்ற வகையில் மதுரை நகரப் பெருமக்களின் சார்பாக விழா ஒன்று, கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவிற்குக் கருமுத்து தியாகராச செட்டியார், தலைமை தாங்கினார். செட்டி நாட்டரசர் இராசா சர் முத்தையா செட்டி யார், டாக்டர் மு. வரதராசன், ஔவை துரைசாமி பிள்ளை, லெ. நாராயணன் செட்டியார், மதுரை முத்து ஆகியோர் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்கி னார்கள். விழாவில், நகரப் பெருமக்கள் பலரும் கலந்து கொண்டனர். நான் இறுதியில் பாராட்டுரைகளுக்கு நன்றி தெரிவித்துப் பேசினேன்.

பெரியார் ஏற்பாடு செய்த பாராட்டுக்கூட்டம்

*நான் மதுரைப் பல்கலைக் கழகத்தின் மதிப்புறு (டி.லிட்.) டாக்டர் பட்டம் பெற்றமை குறித்துப் பகுத்தறிவு இயக்கத் தந்தை பெரியார் அவர்கள், சென்னை பெரியார் திடலில் அமைந்துள்ள கலையரங்கில், பகுத்தறிவாளர் கழகத்தின் சார்பாக எனக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் சிறப்புக் கூட்டம் ஒன்றினை 1972 இல் ஏற்பாடு செய்தார்.*

*கூட்டத்திற்குப் பெரியார் அவர்கள் தலைமை தாங்கினார். பெரியார் அவர்கள் எனக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டு இதழ் ஒன்றினைப் படித்து அளித்து, என்னைப் பற்றிப் பெரிதும் புகழ்ந்துபேசினார்கள். அவர் பேசும்போது குறிப்பிட்டதாவது:-*

> ''நாவலர் தலைசிறந்த பகுத்தறிவுவாதிகளில் ஒருவர். இப்போதுதான் அவர் பகுத்தறிவுவாதி என்பது இல்லை. மாணவப் பருவம் முதற்கொண்டே நாவலர் பகுத்தறிவாளராகச் சிறந்து விளங்கிவருகிறார்.
>
> நமது நாவலர் மிகவும் சாதாரணமான குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய தந்தையார் பெரிய வருமானம் தரும் பதவி எதிலும் இருக்கவில்லை என்ற போதிலும், நாவலர் தமது கல்வியை முடித்துக்கொண்டதும், நேராக என்னிடம் வந்தார்.
>
> நான் இன்றைக்கு இருப்பதைப்போல அன்றைக்கு இருக்கவில்லை. இன்றைக்குப் பெரிய பெரிய பதவிகளில் இருப்பவர்கள் எல்லோரும்கூட என்னிடம் வந்து, ''ஐயா! எனக்கு உதவி செய்யுங்கள்! உரிய வேலையில் அமரப் பரிந்துரை செய்யுங்கள்!'' என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு உரிய உதவிகளைச் செய்கிறேன். ஆனால், அன்று நான் அப்படிப்பட்ட நிலையில் இல்லை.

ஆயினும், "நான் தங்களுடன் இருந்து தொண்டு செய்கிறேன்! எனக்குச் சோறு மட்டும் போட்டால் போதும்! வேறு சம்பளம் எதுவும் வேண்டாம்!" என்று நாவலர் சொன்னார். எம்.ஏ. படித்துப் பட்டம் பெற்றவர் என்னிடம் இப்படிச் சொன்னார்.

இன்றைக்கு இருப்பதைப்போல, எம்.ஏ. படிப்பு என்பது அவ்வளவு சல்லிசானதாக அப்போது இருக்கவில்லை.

நாவலர் என்னோடு இருந்து, தொண்டு செய்ய வந்தாலும், அவர் என்னிடம் எதையும் கற்றுக்கொள்ளவில்லை. எனக்கே பலவகைகளிலும் கற்றுத்தரும் அளவுக்குத்தான் அவர் இருந்துவந்தார். எனக்கே பாடம் கற்றுத்தரும் அளவுக்குத் தகுதியும், திறமையும் படைத்தவராக அவர் இருந்தார்.

அப்போதெல்லாம் பகுத்தறிவுப் பிரச்சாரம் என்பது நாத்திகப் பிரச்சாரம் என்று அழைக்கப்பட்டது. அதனை இப்போதுதான் அனைவருமே பகுத்தறிவுப் பிரச்சாரம் என்கிறார்கள்.

அப்போது நாத்திகப் பிரச்சாரம் செய்வது என்பது இலகுவான வேலையல்ல. மிகவும் ஆபத்தான பணி. அப்போது முதல் இப்போதுவரை நாவலர் நல்ல பழுத்த பகுத்தறிவாளராகவே இருந்துவருகிறார்.

அப்படிப்பட்ட நாவலருக்கு மதுரைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கி, அவரைப் பெரிதும் சிறப்பித்திருக் கிறது என்பதைக் கேள்விப்படும்போது, நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அவருக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்களை யும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். நாவலர் பல்லாண்டு வாழ்ந்து, அவர் ஆற்றிவரும் பகுத்தறிவு நெறித்தொண்டு, மக்களுக்கு எல்லா வகையிலும் பயன்படவேண்டும் என்பது எனது ஆவல்!"

எனக்குப் பாராட்டுக்கள் தெரிவித்த பெரியாருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், நான் அந்த விழாவில் பேசியதாவது :-

''மதுரைப் பல்கலைக் கழகம் எனக்கு டாக்டர் பட்டம் வழங்கிப் பாராட்டுத் தெரிவித்திருப்பதைவிடப் பகுத்தறிவு இயக்கத் தந்தை பெரியார் அவர்கள் என்னைப் பெரிதும் புகழ்ந்து பாராட்டியிருப்பதைப் பெரும் பேறாகக் கருது கிறேன்.

பெரியார் அவர்கள் அவ்வளவு எளிதாக எவரையும் பாராட்டி விடமாட்டார். பெரியாரிடம் ஒருவர் பாராட்டுப் பெறுவது என்பதே ஒரு கடினமான செயலாகும். அப்படிப்பட்ட பெரியாரிடம் நான் பாராட்டுப் பெறுகிறேன் என்பதில் எனக்குப் பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது.

பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்று வித்த 1925ஆம் ஆண்டிலிருந்தே, அரசுப் பணியில் இருந்துவந்த என் தந்தையார், இராசகோபாலனார் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளிடத்தில் பெரிதும் ஈடுபாடுகொண்டிருந்தார்கள். பெரியார் நடத்தி வந்த 'குடி அரசு' வார இதழ் வாரந்தோறும் எங்கள் வீட்டுக்கு வரும். 'குடி அரசு' வார இதழைப் படிப்பதன் மூலமும், என் தந்தையாரின் பகுத்தறிவு தொடர்பான உரையாடல்களைக் கேட்பதன் மூலமும், நான் பகுத்தறிவு நெறியில் மிகுந்த பற்றுக்கொண்டவன் ஆனேன்.

நான் எனது பத்து வயது முதற்கொண்டே பகுத்தறி வாளனாகத் திகழ்ந்து வரத் தலைப்பட்டேன். 1939இல் பெரியார் அவர்கள் எங்கள் வீட்டுத் திருமணத்திற்குத் தலைமை தாங்க வந்ததிலிருந்து, அவரோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. 1943 ஆம் ஆண்டில், நான்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கிய மன்றத்தின் செயலாளராகப் பணியாற்றியபோது, பெரியார் அவர்களை அழைத்துச் சிறப்புக்கூட்டம் நடத்தினேன்.

நான் பல்கலைக் கழகப் படிப்பை முடித்துவிட்டு வெளியேறிய நிலையில், பெரியார் அவர்களின் அழைப்பை ஏற்று, ஈரோட்டில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டேன். அன்றிலிருந்து இன்றுவரை நான், தொடர்ந்து திராவிடச் சமுதாயப் பணிகளையும், அரசியல் பணிகளையும், பகுத்தறிவு இயக்கப் பணிகளையும் ஆற்றிவருகிறேன்.

என்னைப் பொதுவாழ்க்கையில் ஆளாக்கிவிட்ட பெருமை பெரியார் அவர்களையும், பேரறிஞர் அண்ணா அவர்களை யும் சாரும்.

பகுத்தறிவு நெறியே பண்பட்ட நெறியாகும் என்ற கொள்கையை, எனது வாழ்க்கையில் எல்லா வகைகளிலும் கடைப்பிடித்து வருகிறேன்.

மனிதனின் அறிவுத்திறன், ஆற்றல் திறன், பண்பாட்டுத் திறன், செயலாற்றும் திறன், நட்புறவு, தோழமை, உண்மையறிதல், அன்புடைமை, ஒழுக்கமுடைமை, ஊக்கமுடைமை போன்றவற்றிற்கு உண்மையான முறையில் மதிப்பளித்து வருவது பகுத்தறிவு இயக்கமேயாகும்.

நமது சமுதாயத்தைப் பகுத்தறிவுடையதாகவும், பண்புடைய தாகவும், மானமுடையதாகவும், மதிப்புடையதாகவும் ஆக்கும் பணியில், பெரியார் அவர்களோடு இணைந்து நின்று செயலாற்றுவதில் நான் என்றென்றும் பெருமகிழ்ச்சி கொண்டு விளங்கி வருகிறேன்.

நான் அமைச்சர் பொறுப்பில் இருந்துவருவதற்குக் காரணமே, அதன்மூலம் சுயமரியாதை இயக்கம் - பகுத்தறிவு



10-11-1967 - அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்
கல்வி - தொழில் அமைச்சர் நாவலர் அவர்களுக்கு வரவேற்பு விழா
டாக்டர் விசாலாட்சி, துணை வேந்தர் சந்திரா ரெட்டி,
இணை வேந்தர் டாக்டர் முத்தைய செட்டியார் கலந்து கொள்ளுதல்



1967 செப்டம்பர் 15 - அறிஞர் அண்ணாவுக்கு மாலை அணிவித்துப்
பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவிக்கிறார் நாவலர்



7-4-1968 - கோவை ஜி.டி.நாயுடு அவர்களின் 75வது பிறந்த நாளினை ஒட்டி சென்னை மாநகராட்சி நடத்திய பாராட்டு விழாவில் அறிஞர் அண்ணா, நாவலர்



அறிஞர் அண்ணாவின் உடலை நாவலரும் மற்ற அமைச்சர்களும் இறுதி ஊர்வல வண்டியில் வைப்பதற்கு எடுத்து வருதல்



1972 - மதுரைப் பல்கலைக்கழகம் நாவலருக்கு மதிப்புறு டாக்டர் பட்டம் வழங்குதல் - முதல்வர் கலைஞர் கருணாநிதி, ஆளுநர் கே.கே.ஷா, துணை வேந்தர் டாக்டர் மு.வரதராசன் ஆகியோருடன் நாவலர்



19-1-73 - ஈரோடு நகராட்சி மன்ற நூற்றாண்டு விழாவின் போது அமைச்சர் நாவலர் ஈரோடு நகராட்சியின் முன்னாள் தலைவர் தந்தை பெரியார் அவர்களுக்கு கேடயம் வழங்குதல்



1975 மே – டார்ஜிலிங் – தலாய்லாமா அவர்களுடன் நாவலர்



1976 – அரியானா பருக்பாட்நகர் – இந்தியக் குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகம்மது நாவலருக்குச் சாரண இயக்கத்தின் மிக உயர்ந்த விருதான 'யானை விருது' வழங்கும் விழா நாவலர் ஏற்புரை வழங்குகிறார்

இயக்கம் - திராவிட இயக்கம் ஆகியவற்றின் கொள்கை களையும், குறிக்கோள்களையும் நிறைவேற்றி வைக்க வாய்ப்பு கிடைக்கும் என்பதேயாகும்.

என்னை மனமுவந்து பலவாறாகப் பாராட்டியுள்ள தந்தை பெரியார் அவர்களுக்கு, எனது உளங்கனிந்த நன்றியை உவகைப் பெருக்கோடு தெரிவித்துக்கொள்கிறேன். வாழ்க பெரியார்! வளர்க பகுத்தறிவுஇயக்கம்! வெல்க அதன் சீரிய தொண்டு!''

*பின்னர் பெரியார் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த விருந்தில் கலந்துகொண்டு பெருமகிழ்வடைந்தேன்.*

## தமிழக அரசின் மூலம் அரும்பணிகள்

*அறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப்பின், கழகத் தலைவராக இருந்த கலைஞர் கருணாநிதியும், கழகப் பொதுச் செயலாளராக இருந்த நானும், கழகத்தின் மூலமும், தமிழக அரசின் மூலமும் தமிழ் வளர்ச்சியடைய, தமிழர் மேம்பாடு எய்த, தமிழ்நாடு வளம்பெற பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அவற்றை நிறைவேற்றுவதிலே கண்ணுங்கருத்துமாக இருந்துவந்தோம்.*

*பல்வேறு முக்கிய நகரங்களில் அறிஞர் அண்ணா அவர்களின் சிலைகளும், பெரியார் அவர்களின் சிலைகளும் நிறுவப்பட்டன.*

*மாவட்டங்கள்தோறும் அரசியல், சமுதாய சீர்திருத்த மாநாடுகள் நடத்தப்பட்டன. பழம்பெருமை வாய்ந்த பூம்புகார், புதிய எழிலோடு புதுப்பிக்கப்பட்டது. வள்ளுவரின் நினைவை நிலைநாட்ட சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டது. கலைவாணர் பெயரில் நினைவு அரங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது.*

அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த 'தமிழ்-ஆங்கிலம்' என்ற இருமொழிக் கொள்கைக்கு ஆக்கமும், ஊக்கமும் தரப்பட்டன.

பள்ளிகள், கலைக்கல்லூரிகள், தொழில் நுட்பவியல் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் தமிழைப் பாடமொழியாகவும், பயிற்றுமொழியாகவும் ஆக்குவதற் கான பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்ப் பேரறிஞர்கள் பாராட்டப்பட்டனர். மறைந்த தமிழகத் தலைவர்களின் நூற்றாண்டு நினைவு விழாக்கள், மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

இவற்றையெல்லாம் உரியமுறையில் நிறைவேற்றத் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு நான் உறுதுணையாக இருந்து பணியாற்றிவந்தேன்.

## தி.மு.க. ஆட்சி அகற்றப்படுதல்

1975 ஆம் ஆண்டில், இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தியை எதிர்த்து, இராஜ் நாராயணனால் தொடுக்கப்பட்ட தேர்தல் வழக்கில், இந்திரா காந்திக்கு எதிராகத் தீர்ப்பு வந்தது. அதன் மூலம் இந்திராகாந்தி அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும், பிரதமர் பதவியையும் இழக்கும்படியான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அப்பொழுது, இந்திரா காந்தியின் தலைமையிலான மத்திய அரசு, அவசரச் சட்டம் ஒன்றை இயற்றி, இந்திராகாந்தி பதவியை இழக்காமல் அவரைப் பாதுகாத்தது. அந்த நிலைமையை எதிர்த்து நாடெங்கும் கிளர்ச்சிகளையும், ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் எதிர்க்கட்சி களைச் சார்ந்தவர்கள் செய்துவந்தனர்.

தோன்றிய எதிர்ப்புக்களை எல்லாவகையிலும் சமாளிப்ப தற்காக, பிரதமர் இந்திரா காந்தி, இந்தியா முழுவதற்கும் சேர்த்து நெருக்கடி சட்டத்தைப் பிரகடனப்படுத்திப் பேச்சுரிமை, எழுத்துரிமை, செயலாற்றும் உரிமை போன்றவற்றிற்குத் தடைவிதித்தார்.

அப்பொழுது, தமிழகத்தின் முதல்வராக இருந்துவந்த கலைஞர் கருணாநிதி அவர்கள், இந்திராகாந்திக்கு எதிராக வும், நெருக்கடி சட்டத்திற்கு எதிராகவும் சில பல நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அதுமட்டுமல்லாமல், அவர் மீது பல ஊழல் குற்றச்சாட்டுப் புகார்களும் இருந்துவந்தன. இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு, அப்பொழுது குடியரசுத் தலைவராக இருந்துவந்த பக்ருதீன் அலி அகமது அவர்கள், கலைஞர் கருணாநிதியின் மீது எட்டுக்குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி, அவரது தலைமையின்கீழ் இயங்கி வந்த தமிழக ஆட்சியை யும், தமிழகச் சட்டமன்றத்தையும் 1976 சனவரி 31ஆம் நாளன்று கலைத்தார். அன்று நான் திருச்சியில் அரசு விழா ஒன்றில் கலந்துகொண்டிருந்தேன். செய்தி அதிர்ச்சியைத் தந்தது. தி.மு.க. ஆட்சி, ஐந்தாண்டு காலம் முடிவடை வதற்கு முன்பே திடீரென்று கலைக்கப்பட்டது தி.மு.கழகத் தினரிடையேயும், பொதுமக்களிடத்திலேயும் ஒருபெரும் பரபரப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.

## தி.மு.கழகத்தைப் பொறுத்து ஏற்பட்ட சில விளைவுகள்

தி.மு.கழகத் தலைவர் கருணாநிதி அவர்களின் போக்கின் காரணமாகத் தி.மு.கழகத்தினரிடையே ஒரு கசப்பான - சோர்வான சூழ்நிலை உருவாகியது.

தி.மு.கழக ஆட்சி கலைக்கப்பட்டது குறித்துக் காங்கிரசுக் கட்சியினரும், அ.தி.மு.கழகத்தினரும், தி.மு.க விற்கு

எதிரான பிரச்சாரத்தில் மிகத்தீவிரமாக இறங்கினர். அந்த நிலை தி.மு.கழக வளர்ச்சிக்குப் பெரும் பாதிப்பை உண்டாக்கிற்று. தி.மு.கழகத்திற்கு ஏற்பட்டுவிட்ட அவப் பெயரையும், சரிவையும் துடைத்து, எப்படியேனும் நிலைமையைச் சரிப்படுத்தவேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலான தி.மு.க. முன்னணித் தலைவர்களிடையே ஏற்பட்டது.

தி.மு.கழகத்தின் தலைமையில் மாற்றம் ஏற்படுத்திப் புதிய தலைமையை உருவாக்கினால், நிலையைச் சரிக்கட்டி விடலாம் என்று சிலர் எண்ணத் தொடங்கினர்.

தி.மு.கழகத் தலைவர் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ளும்படி கலைஞர் கருணாநிதியைக் கேட்டுக்கொள் வது என்றும், புதிய தலைமையை உருவாக்க வழிகாணுவது என்றும், புலவர் கோவிந்தன், சிற்றரசு, ஆதித்தனார் போன்றவர்கள் முயற்சியினை மேற்கொண்டார்கள்.

இந்த முயற்சியைக் கேள்வியுற்ற கலைஞர் கருணாநிதி அவர்கள், செய்தித்தாள்களில் செய்தி ஒன்றினை வெளியிட்டார்.

> ''கழகத் தலைமைப் பொறுப்பிலிருந்து நான் விலக வேண்டும் என்று 1976இல் ஆட்சி கலைக்கப்பட்டதும் ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டது.
>
> இப்பொழுது மீண்டும் நான் கழகத் தலைவர் பதவியிலிருந்து விலகவேண்டும் என்ற கோரிக்கையைச் சிலர் எழுப்பி யுள்ளனர். எதிர்ப்புக் கையெழுத்து, ஆதரவுக் கையெழுத்து போன்றமுறைகள் கழகத்தின் கட்டுக்கோப்பைக் குலைத்து விடும் என்று நான் கருதுகிறேன். எனவே, நான் கழகத் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள முடிவு செய்துள்ளேன். இதற்கான விலகல் கடிதத்தைப் பொதுச்

செயலாளர் நாவலர் அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளேன். கழகத்தைப் பிளவுபடாமல் காப்பாற்றுவதற்காக இந்த முடிவுக்கு வந்துள்ளேன்''

கலைஞர் கருணாநிதி அவர்கள் கழகத் தலைவர் பொறுப்பிலிருந்து விலகிவிட்டார் என்ற செய்தியை, நான் கும்பகோணம் பகுதியில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்த போது அறியலானேன்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் கழகத் தலைவர் பொறுப்பிலிருந்து விலகிவிட்ட நிலையில், நானும் பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிவிடுவதுதான் முறை என்று கருதி, நான் என்னுடைய பொறுப்பிலிருந்து விலகி விடுவதற்கான கடிதத்தைக் கழகத்தின் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைத்தேன்.

நாங்கள் இருவரும் கழகத்தின் பொறுப்புக்களிலிருந்து விலகியது, கழகத் தோழர்களிடையே பெரும் பரபரப்பையும், வருத்தத்தையும் ஏற்படுத்தியது. பின்னர் கழகத்தின் முன்னணியினர் பலரும் கூடி, நாங்கள் இருவரும் விலகல் கடிதங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினர். பலரின் வற்புறுத்தலுக்கு இணங்க நாங்கள் இருவரும் விலகல் கடிதங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டோம். எப்பொழுதும்போல் கழகப் பணியாற்றவே நான் பெரிதும் விரும்பினேன். கலைஞர் கருணாநிதிக்கு வேண்டிய சிலர், என்னுடைய உணர்வுக்குத் தீங்கு இழைக்கக்கூடிய வகையில், என்னுடைய போக்கைக் கடுமையாகக் கடிதங்கள் மூலமும், 'முரசொலி'க் கட்டுரைகள் மூலமும் என்னைப்பற்றி விமர்சிக்க முயன்றனர். கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களும் அப்படிப்பட்ட விமர்சனங்களுக்கு ஆதரவு அளித்துவந்தார்.

கலைஞர் கருணாநிதி, அவரைச் சார்ந்த அவரது நெருங்கிய நண்பர்கள் ஆகியோரின் வெறுப்புக்கும், எதிர்ப்புக்கும், மனக்கசப்புக்கும் இடையில் கழகப்பணி ஆற்றுவதைவிட, தி.மு.கழகத்திலிருந்து அறவே விலகி ஒதுங்கியிருந்து அமைதியான வாழ்வு நடத்துவது, என்னுடைய மனநலத்திற்கு ஏற்றதாக அமையும் என்று கருதினேன். என்னுடைய முடிவு இராசாராம், ஆதித்தனார், செழியன், மாதவன் ஆகியோர்க்கு மட்டும் தெரியும்.

''கருத்து வேறுபாடுகளின் காரணமாகத் தி.மு.கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உள்பட நான் வகித்து வரும் எல்லாப் பொறுப்புக்களிலிருந்தும் விலகிவிடுவதாகத் தீர்மானித்து விட்டேன்'' என்று கூறி, 15.4.1977 அன்று, நான் விலகல் கடிதத்தைத் தி.மு.கழகத் தலைவருக்கு அனுப்பி வைத்துவிட்டு, அந்தச் செய்தியைச் செய்தித்தாள்களிலும் வெளியிட்டேன்.

தி.மு.கழகத்தை விட்டு விலகியவுடன் நான் சில நாட்கள் அமைதியான இடத்தில் ஓய்வு பெறுவதற்காகப் பெங்களூர் சென்றுவிட்டேன்.

தி.மு.கழகத்திலிருந்து நான் விலகியது தி.மு.கழகத்தவர்க்கும், கழக ஆதரவாளர்களுக்கும் பெரும் அதிர்ச்சியை அளித்தது. நான் விலகலைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மீண்டும் தி.மு.கழகத்தில் இணைந்து பாடுபட வேண்டும் என்று கலைஞர் கருணாநிதி அவர்கள் 'முரசொலி' நாளேட்டில் நீண்டதொரு உருக்கமான கடிதத்தை எழுதினார்.

கழகத்தின் முன்னணித் தலைவர்கள் பலரும் கடிதங்கள் மூலமும், அறிக்கைகளின் வாயிலாகவும், நான் திரும்பவும் தி.மு.கழகத்தில் இணைந்து அரசியல் பணியைத் தொடர்ந்து

ஆற்றிவரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர்.

மனஅமைதியும், மனநிறைவும் ஏற்படாத சூழலில் மீண்டும் இணைந்து பணியாற்ற எனக்கு விருப்பம் ஏற்பட வில்லை. அரசியலிலிருந்து ஒதுங்கி நின்று, ஓய்வு எடுக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே, நான் பெங்களூரில் சில நாட்கள் தங்கியிருந்தேன்.

என்னைத் தொடர்ந்து, என் வழியைப் பின்பற்றிப் பல நண்பர்கள் விலகல் கடிதங்களைக் கொடுத்துவிட்டுத் தி.மு.கழகத்திலிருந்து விலகிவிட்டார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் வருமாறு :-

1. க. இராசராம், 2. செ. மாதவன், இராம. அரங்கண்ணல், 4. டி.கே. சீனிவாசன், 5. கவிஞர் கா. வேழவேந்தன், 6. இரா. சனார்த்தனம், சென்னை தி. மணிவண்ணன், 8. சென்னை மு. வரதராசன், 9. காஞ்சிபுரம் கே.டி.எஸ்.மணி, 10. தென்னார்க்காடு ஏ.வி. தண்டபாணி, 11. வடார்க்காடு முல்லை வடிவேலு, 12. நாமக்கல் பி. தியாகராசன், 13. தருமபுரி எம்.எஸ். சண்முகம், 14. ஈரோடு ப.சா. விசுவ நாதன், 15. கோவை ஏ.என். சாமி, 16. திருச்சி டி.வி. பரம-சிவம், 17. ஆடுதுறை கு. இராசமாணிக்கம், 18. வேதாரண்யம் சி.வ. கனகசுந்தரம், 19. அறந்தாங்கி துரையரசன், 20. சாத்தூர் வரதராசன், 21. நெல்லை அழகியநம்பி, 22. பெங்களூர் எஸ்.இ. வேணுகோபால், 23. தூத்துக்குடி எம்.எஸ். சிவசாமி, 24. காஞ்சி கலியாணசுந்தரம், 25. சி.பா. ஆதித்தனார், 26. கோவை சே.அ. இராசமாணிக்கம், 27. சென்னை ஏ.கே. வேலன், 28. சென்னை பி.கே. முத்துராமலிங்கம், 29. சென்னை அ.சி துளசிங்கம், 30. அரூர் எச்.எல். முருகேசன், 31. தருமபுரி எம்.வி. கரிவேங்கடம், 32. அரூர் முத்து, 33. சேலம் கே. செயராமன், 34. முல்லை சத்தி, 35. சோழவந்தான் தா. ஆவுடையப்பன், 36. அருப்புக்கோட்டை ஏ.ஆர்.

சின்னச்சாமி, 37. கடம்பூர் எம்.ஆர். சனார்த்தனம், 38. விளாத்திகுளம் எம். இரத்தினசபாபதி, 39. கோவை கேரள சுந்தரம், 40. சென்னிமலை சி. தங்கமுத்து, 41. பவானி ஏ.எம். இராசா, 42. பொள்ளாச்சி எ. வெங்கடாசலம், 43. பொள்ளாச்சி நா. மாரிமுத்து, 44. திருப்பூர் பி.என். பாலசுப்பிரமணியம், 45. சென்னை வே. குப்பம்மாள், 46. சென்னை பத்மாவதி கோவிந்தசாமி, 47. சென்னை சி. சுப்பிரமணியம், 48. சென்னை எஸ். மாரியப்பன், 49. காஞ்சிபுரம் ஏ.பி. கண்ணபிரான், 50. செங்கற்பட்டு செ.ஏ. பலராமன், 51. செங்கை வி. கந்தசாமி, 52. ஒரக்காட்டுப் பேட்டை கு.மு. இளங்கோ, 53 கடலூர் த. கோதண்டராமன், 54. சிதம்பரம் சு. கோவிந்தராசன், 56. விழுப்புரம் ஏ.ஜி. சம்பத், 57. திண்டுக்கல் பி. சமதர்மம், 58. வேலூர் யாஷ்பால், 59. இராணிப்பேட்டை ஆர்.ஏ. கலீல், 60. சேந்த மங்கலம் எம்.ஆர். பழனிமுத்து, 61. சேலம் எஸ். சாக்ரடீஸ், 62. கோவை கே. துரை 63. குடந்தை இரா. இராமதாசன், 64. திருச்சி புலவர் ச. இராசகோபால், 65. முசிறி எம்.வி. இராதாகிருட்டினன், 66. மணப்பாறை ஏ.எஸ். கணபதி, 67. புதுக்கோட்டை அ. முகம்மதலி, 68. மதுரை ஏ.வி.எஸ். மணியன், 69. மதுரை கருணைதாசன், 70. வீரபாண்டி ச.அய்யாதுரை, 71. சிவகாசி எஸ்.பி.மணியம், 72. சிவகாசி வே. கருணாகரன் போன்றவர்கள் மிக முக்கியமானவர்கள் ஆவார்கள்.

இராசாராம், மாதவன், அரங்கண்ணல், ஆதித்தனார், ஏ.என். சாமி, எ. வெங்கடாசலம், காஞ்சி கலியாணசுந்தரம், எம்.எஸ். சிவசாமி போன்றவர்கள், நான் அரசியலி லிருந்து ஒதுங்கி நின்றுவிடக் கூடாது என்றும், புதிய அரசியல் கட்சியைத் தோற்றுவித்து, அதன்மூலம் திராவிட இயக்க

அரசியலைத் தொடர்ந்து நடத்திவரவேண்டும் என்றும் என்னை மிகுதியும் வற்புறுத்தினார்கள்.

நண்பர்களின் அன்பு வேண்டுகோள்களுக்கு இணங்கிப் புதிய அரசியல் கட்சி ஒன்றினைத் தோற்றுவிக்க இசைவு அளித்தேன்.

❁ ❁ ❁

# 12

# மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம்

புதிய அரசியல் கட்சியின் தோற்றம்

நண்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும், வற்புறுத்தலுக்கு இணங்கவும், பெங்களூரில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த நான், ஓய்வை முடித்துக்கொண்டு, 24.4.77 அன்று சென்னை வந்து சேர்ந்தேன்.

புதிய அரசியல் அமைப்புக்கு என்ன பெயரிடுவது? எப்படிப்பட்ட கொடியை உருவாக்குவது? எப்படிப்பட்ட அமைப்பு முறையை மேற்கொள்வது? யார் யாரைப் பொறுப்பாளர்களாக ஆக்குவது? என்பனபோன்ற பொருள்கள்பற்றி, நான், நண்பர்கள் இராசாராம், மாதவன், அரங்கண்ணல், ஆதித்தனார், டி.கே. சீனிவாசன் போன்றவர்களோடு கலந்துரையாடல் நடத்தினேன்.

27.4.77 அன்று, புதிய அரசியல் அமைப்புக்கு ஆதரவு தரும் கழகத் தோழர்கள் அனைவரும் அடங்கிய அமைப்புக் கூட்டத்தைச் சென்னை தி. நகர் பகுதியிலுள்ள திருமண மண்டபம் ஒன்றில் கூட்டுவது என்றும், புதிய அமைப்பை ஏற்படுத்துவது பற்றிய தீர்மானங்களை அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றுவது என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

27.4.77 அன்று தி.நகர் திருமண மண்டபத்தில், புதிய அரசியல் அமைப்புக்கு ஆதரவுதரும் கழகத் தோழர்களின் கூட்டம் என்னுடைய அழைப்பின் பேரில் கூட்டப்பெற்றது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து, இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட முக்கியப் பொறுப்பாளர்களும், செயல் வீரர்களும் கூட்டத்திற்கு வருகை தந்தனர்.

இராசாராம் அவர்கள் கூட்டத்திற்கு வருகை தந்தவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். கூட்டத்திற்கு நான் தலைமை தாங்கினேன். நான் தலைமை உரை நிகழ்த்தும்போது, தி.மு. கழகத் தலைமையின் போக்கு எப்படியெல்லாம் சனநாயகப் பண்பிற்கும் - முறைக்கும் முரண்பாடாக அமைந்திருக்கிறது என்பது பற்றியும், தி.மு. கழகத்திலிருந்து என்போன்றோர் விலகித்தீர வேண்டிய இன்றியமையாமை ஏன் ஏற்பட்டது என்பது பற்றியும், புதிய அரசியல் சூழ்நிலை ஏன் அமைந்தது என்பது பற்றியும், புதிய அரசியல் அமைப்பினைக் காணவேண்டிய சூழ்நிலை ஏன் அமைந்தது என்பது பற்றியும், புதிய அரசியல் கொள்கை முறை, பெரியாரின் கொள்கைமுறை, பேரறிஞர் அண்ணாவின் சனநாயக நெறிமுறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசியல் அமைப்பை எப்படி ஏற்படுத்துவது என்பது பற்றியும், அதன் அமைப்பு முறை எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றியும் விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக்கூறினேன்.

புதிய அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதற்கான சீரிய பரிந்துரைகளையும், கருத்துக்களையும் நண்பர்கள் மனம் விட்டுப் பொறுப்புணர்ச்சியோடும், கடமையுணர்ச்சியோடும் சொல்லவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன்.

நண்பர்கள் மாதவன், அரங்கண்ணல், ஆதித்தனார், டி.கே. சீனிவாசன், கவிஞர் வேழவேந்தன், கே.டி.எஸ். மணி, ஏ.என். சாமி, அழகியநம்பி, எம்.எஸ். சிவசாமி, காஞ்சி கலியாண சுந்தரம், சே.அ. இராசமாணிக்கம், எச்.எஸ். முருகேசன், கடம்பூர் சனார்த்தனம், பி. சமதர்மம், ஏ.எஸ். கணபதி போன்றவர்கள் புதிய அரசியல் அமைப்பை எப்படி யெல்லாம் அமைக்கலாம் என்பதற்கான சீரிய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

விவாதங்களுக்குப்பிறகு, கூட்டத்தில், ஒரே மனதாகக் கீழ்க்கண்ட முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. புதிய அரசியல் அமைப்புக்கு 'மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம்' என்று பெயரிடுவது.

2. மேலே கறுப்பு - நடுவில் வெள்ளை - கீழே சிவப்பு ஆகிய மூன்று நிறங்களும் சம அளவில் அமைந்த தன்மையில், 1:2 என்ற அளவில் கொடியை ஏற்படுத்துவது.

3. பெரியார் - பேரறிஞர் அண்ணா ஆகியோர் வகுத்துத் தந்த கொள்கை - குறிக்கோள் - கோட்பாடு ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு கழகத்தை நடத்திச் செல்வது.

4. சமுதாயத்திலே சமத்துவம், பொருளாதாரத்திலே சமதர்மம், அரசியலிலே சனநாயகம் ஏற்பட அரும்பாடு படுவது.

5. தமிழகத்தைப் பொறுத்த வரையில், தமிழ்- ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளுக்கு மட்டுமே, அந்தந்தத் துறைகளுக்கு ஏற்ப ஆக்கம் தந்து ஆட்சிமொழிகளாகப் பயன்படுத்துவது.

6. இந்தியாவின் முக்கியத் தேசிய மொழிகள் அனைத்தும் சமத்துவத் தன்மையின் அடிப்படையில் ஆட்சி மொழிகளாக ஆகப் பாடுபடுவது.

7. 'மாநிலத்திலே தன்னாட்சி - மத்தியிலே கூட்டாட்சி' என்ற அரசமைப்புமுறை ஏற்பட, எல்லாவகையிலும் முயலுவது.

8. எங்கும் தமிழ் - எதிலும் தமிழ் - என்றும் தமிழ் - எப்படியும் தமிழ் என்ற குறிக்கோள்களுக்கு முழு ஆக்கம் தருவது.

9. தமிழ்ப்பண்பாடும் நாகரிகமும் அமைந்த இயற்கலை - இசைக்கலை - இயக்கக்கலை - கூத்துக்கலை - சிற்பக்கலை - கட்டடக்கலை - ஓவியக்கலை போன்ற தனித்தன்மைகொண்ட கலைகளுக்குப் பலவகை களிலும் ஊக்கம் அளிப்பது.

10. சாதிவெறி - சமுதாய வெறிஅற்ற, மனித மாண்புக்கு மதிப்பளிக்கக்கூடிய பண்பட்ட பகுத்தறிவு நெறிக்கு ஆக்கம் தருவது.

11. இந்திமொழியோ, பிறமொழிகளோ அதிகார ஆதிக்க அடிப்படையில், தமிழகத்தில் திணிக்கப்படுவதை முழுமூச்சோடு எதிர்ப்பது.

12. பகுத்தறிவு நெறிக்கு ஒத்துவரும் குறள் நெறிக் கருத்துக்களுக்கு ஆக்கம் தருவது.

13. தமிழகத்தின் இயற்கை வளத்தையும், செயற்கைச் செல்வத்தையும் பெருக்கக்கூடிய முயற்சிகளுக்கு முழு ஆதரவு தருவது.

14. அறிவியல் வளர்ச்சிக்கும், தொழில்நுட்பவியல் வளர்ச்சிக்கும் எல்லா வகைகளிலும் ஊக்கம் அளிப்பது.

15. அறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்திவந்த கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு என்ற கொள்கையைப் போற்றிக் கடைப்பிடிப்பது.

இந்த முடிவுகளைக் கூட்டத்தில் குழுமியிருந்தோர் அனைவரும் ஆரவாரம் செய்து, கையொலி எழுப்பி முழு மனத்தோடு நிறைவேற்றி வைத்தனர்.

பின்னர், கீழ்க்கண்டவாறு கழகத்தின் முக்கியப் பொறுப்பாளர்கள், கூட்டத்தினரின் முழு ஒப்புதலோடு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | |
|---|---|
| பொதுச்செயலாளர் | இரா. நெடுஞ்செழியன் |
| பொருளாளர் | க. இராசாராம் |
| கொள்கை பரப்புச் செயலாளர் | செ. மாதவன் |
| அமைப்புச் செயலாளர் | இராம. அரங்கண்ணல் |
| தலைமை நிலையச் செயலாளர் | : டி.கே.சீனிவாசன் |
| தொழிலாளர் அணிச் செயலாளர் | கா.வேழவேந்தன் |
| தலைமை நிலையப் பொறுப்பாளர் | இரா. சனார்த்தனம் |

மாவட்ட-மாநிலச் செயலாளர்களாக 21 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கழகப் பொதுக்குழு உறுப்பினர்களாக 125 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ம.தி.மு.கழகத்திற்கு என்று தனிச் சட்டதிட்டங்களை உருவாக்குவது என்றும், கழகத்தின் பல்வேறு அமைப்புகளுக்கான தேர்தலை முறைப்படி நடத்தத் தேர்தல் விதிமுறைகளை உருவாக்குவது என்றும், முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

ம.தி.மு.கழகத்தின் தலைமை நிலையத்தைச் சென்னை, சாந்தோம் நெடுஞ்சாலையிலமைந்த 121-சி எனும் எண் கொண்ட கட்டடத்தில் அமைப்பது என்றும், 'மக்களாட்சி' என்ற வாரம் இருமுறை இதழைத் தொடங்குவது என்றும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

இறுதியில் முடிவுரை ஆற்றும்போது நான் குறிப்பிட்டதாவது:

> ''மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம், மக்களுடைய கழகமாகும்! மக்களால் வளர்க்கப்படவேண்டிய கழகமாகும்! மக்களுக்காகத் தொண்டாற்ற இருக்கும் கழகமாகும்!
>
> இந்தக் கழகம் தூய உள்ளமும், நேர்மைப்போக்கும், உண்மைத்தன்மையும், சனநாயகப் பண்பும் கொண்டவர்களால் தொடங்கப்பட்டுள்ளது.
>
> கையிலே காசில்லாமல், ஆனால், மனத்திலே மாசில்லாமல், வெறுங்கையோடு தி.மு.கழகத்திலிருந்து வெளியேறி வந்துள்ள நண்பர்கள் பலரும் இங்குக்கூடி, மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் புதிய அரசியல் கட்சியை உருவாக்கியிருக்கிறோம்.
>
> ம.தி.மு.கழகத்தின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும் ஏற்று, இதனிடம் அன்பும், ஆதரவும் காட்டி, இதனிடத்தில் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் வைக்கிற அன்பர்கள் அனைவரையும் கழகத்தில் இணைக்க, நாம் தொடர்ந்து பாடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சிற்றூர்-பேரூர்-நகரங்கள்-வட்டங்கள்-மாவட்டங்கள் ஆகியவற்றில் முறைப்படியான கிளைக் கழகங்களை அமைக்க நாம் எல்லோரும் அரும்பாடு படவேண்டும். ஆங்காங்குக் கழக உறுப்பினர்களைப் பதிவு செய்வதற்கான உறுப்பினர் பதிவுத்தாள்கள், இன்னும் சில நாட்களுக்குள் மாவட்டப் பொறுப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

கழகத்தின் மூவண்ணக் கொடிகளை நகரந்தோறும், ஊர் தோறும், தெருதோறும் பொது இடங்களிலும், சதுக்கங் களிலும், மூலை முடுக்குகளிலும் ஏற்றி வைக்க இங்கு வந்துள்ளவர்கள் அனைவரும் பெரு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ம.தி.மு.கழகத்தின் தொடங்க விழாப் பொதுக்கூட்டம், சென்னையில், 8.5.77 அன்று நடைபெறும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். தொடக்கவிழாப் பொதுக்கூட்டம் நடந்தேறிய பிறகு, எல்லா ஊர்களிலும், நகரங்களிலும் கழகப்பொதுக்கூட்டங்கள் நடைபெறத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பொதுக் கூட்டங்களை ஆடம்பரமில்லாமல், ஆனால் நல்ல ஆர்வத்தோடு, பகட்டு இல்லாமல், ஆனால் எளிமையான முறையில் எழுச்சி தோன்ற ஆங்காங்குக் கூட்ட வேண்டும்.

நாம் பட்டம் பதவிகளைப் பெரிதாகக் கருதாமல், கொள்கைகளைக் காப்பாற்றும் ஒரே நோக்கத்தோடுதான், புதுக்கழகத்தைத் தோற்றுவித்துள்ளோம். வசதிவாய்ப்புகள் அற்ற நிலையில்தான், நாம் இந்தக் கழகத்தைத் தொடங்கியுள்ளோம்.

கழகத்தின் தலைமை நிலையத்தை இயங்கவைக்க, ''மக்களாட்சி'' ஏட்டினை நடத்த, கொள்கை பரப்புப்

பணிகளைப் பரவச் செய்ய நமக்குப் போதுமான அளவுக்கு நிதி தேவைப்படுகிறது. சிறு துளிகள் பெருவெள்ளம் என்ற பழமொழிக்கு இணங்கக் கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும், தங்களால் இயன்ற அளவுக்கு, நிதியினைத்திரட்டித்தரப் பெருமுயற்சி எடுக்கவேண்டும்.

கழகத் தலைவர்களிடத்திலும், முன்னணியினரிடத்திலும் அன்பு, மரியாதை காட்டும் அறிகுறியாக மாலைகள் - ஆடைகள் - சால்வைகள் போன்றவற்றை அளிக்காமல், அவற்றிற்கு மாற்றாகக் கழக வளர்ச்சி நிதி என்ற பெயரில், நிதியாக வழங்க வேண்டும் என்று கழகத் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கழகத்தின் முன்னேற்றம் ஒவ்வொன்றும் நம்முடைய முன்னேற்றமாகும். கழகத்திற்குப் பெயரையும், பெருமையை யும், புகழையும் காணவேண்டியது நமது கடமையாகும். கழகம் வாழ - வளர - வெல்ல நாம் எல்லோரும் எல்லா வகைகளிலும் தொண்டு செய்வோமாக''

*இறுதியில் மாதவன் அவர்கள் நன்றியுரை நவில, கூட்டம் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் முடிவுற்றது.*

மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தொடக்கவிழா

*மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்க விழாப் பொதுக்கூட்டம், 8.5.77 ஞாயிறன்று, மாலை 6.30 மணி அளவில், சென்னை, திருவல்லிக்கேணித் தேரடித் தெருவில், மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.*

*கூட்டத்தில் பங்கு கொள்ளத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், பலநூற்றுக்கணக்கான கழகத் தோழர் களும், ஆதரவாளர்களும் ஆர்வத்தோடும், எழுச்சியோடும் வருகை தந்தனர்.*

கூட்டத்தில் நாங்கள் என்ன கருத்துக்களைப் பேசப் போகிறோம் என்பதைக் கேட்டறியப் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் தேரடித் திடலில் வந்து குழுமியிருந்தனர்.

கூட்டத்திற்குத் டி.கே. சீனிவாசன் அவர்கள் தலைமை தாங்கினார். இராசாராம் அவர்கள் வரவேற்புச் சொற்பொழி வாற்றினார். மாதவன், அரங்கண்ணல், வேழவேந்தன், காஞ்சி கலியாணசுந்தரம், எம்.எஸ். சிவசாமி, சே. அ. இராசமாணிக்கம், இரா. சனார்த்தனம் ஆகியோர் எழுச்சிமிகு சிறப்புரை ஆற்றினர்.

இறுதியில் நான் உரையாற்றும்போது குறிப்பிட்ட தாவது :

''திருவல்லிக்கேணியில், தேரோடும் நெடுந்தெருவில், கங்கை கொண்டான் மண்டபத்திற்கு அருகில், பெரியார் திடலில், அறிஞர் அண்ணா அரங்கத்தில் குழுமியிருந்து, மக்கள் திராவிடமுன்னேற்றக் கழகத்தின் தொடக்கவிழாப் பொதுக் கூட்டத்தைச் சீரோடும், சிறப்போடும் நடத்துவதில், நாமெல்லோரும் பூரிப்பும், பெருமையும் அடைகிறோம்.

''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி, நாங்கள் நம் பாவைக்குச் சாற்று நீராடினால்'' என்னும் பாசுரத்தை, இதே பகுதியில், வைணவச் சான்றோர்கள் பலரும் பாடி வருகிறார்கள். இதே பகுதியில், இன்று நாம் நின்று, ''ஓங்கி உலகப் பெரும் புகழ் படைத்த பேரறிஞர் அண்ணாவின் பேர் பாடி, நாங்கள் நம்கழகத்திற்குச் சாற்றுப்பா சாத்தினால், நீங்காத பெயரும் புகழும் நிலைக்குமே!'' என்று பாடி மகிழ்கிறோம்.

''பல்லாண்டுப் பல்லாண்டுப் பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்'' என்று வைணவப் பெரியார்கள் இங்குதான்

அடிக்கடி முழங்கிச் செல்வ துண்டு. நாமும் மக்கள் தி.மு.க. பல்லாண்டுப் பல்லாண்டுப் பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம் ஆண்டுகள் வாழ்க! வாழ்க! என்று வாழ்த்தி, தொடக்க விழாவைக் கொண்டாடுகிறோம்.

''கங்கை கொண்டான்' என்ற பட்டம், கங்கைப் பகுதிகள் மேல் படையெடுத்துச் சென்று, அவைகளை வென்று கொற்றக் குடையோடு இராசேந்திர சோழன் திரும்பியபோது, அவனுக்குச் சூட்டப்பட்டதாகும். அப்படிப்பட்ட வெற்றி கொண்ட 'கங்கை கொண்டான்' பெயரில் அமைந்த மண்டபத்திற்கு அருகில் கழகத் தொடக்க விழாவைக் கொண்டாடுவது, நமக்குப் பெருமகிழ்ச்சியைத் தருவதாகும்.

எனக்கு முன் பேசிய கழகப் பொறுப்பாளர்கள், மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கவேண்டிய இன்றியமையாமை ஏன் ஏற்பட்டது? எந்தச் சூழ்நிலையில் ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது? அதன் கொள்கை குறிக்கோள் - கோட்பாடுகள் - திட்டங்கள் என்ன? என்பதைப்பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

1949ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம்நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்தபோது, அறிஞர் அண்ணா அவர்கள் ''வெட்கப்படுகிறோம்! வேதனைப் படுகிறோம்! விரட்டப்படுகிறோம்!'' என்று குறிப்பிட்டுப் பேசினார். அதுபோன்றதொரு நிலையில் நின்று கொண்டு தான், இன்று நாம் ம.தி.மு.கழகத்தைத் தொடங்கியுள்ளோம்.

இருபத்தெட்டு ஆண்டுகளாகக் கட்டிக் காத்து வளர்த்து வந்த தி.மு.கழகத்திலிருந்து நானும், ஏனைய நண்பர்களும் வெளியேறும்போது, எங்களுக்கு வேதனையும், வாட்டமும், வருத்தமும் இருக்கத்தான் செய்கின்றன. தி.மு.கழகத்தின் வரலாற்றில் அதன் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், வளர்ச்சி

யிலும் முழுக்க முழுக்கப் பங்கு கொண்டு உழைத்தவன்தான் நான். கழகத்திற்குப் பெயரிடுவது, கொடி காண்பது, அமைப்பை உருவாக்குவது, நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது, போராட்டங்களைக் காண்பது, அவற்றில் பங்கு கொள்வது போன்றவற்றிலெல்லாம், நேரடியாக ஈடுபட்டிருந்தவன்தான் நான்.

அப்படிப்பட்ட கழகத்தை விட்டு நானும், ஏனைய நண்பர்களும் வெளியேறக் காரணம் என்ன? தி.மு. கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதிக்கு மாறுபட்ட சில கருத்துக்களை நாங்கள் கொண்டிருந்தோம் என்ற காரணத்திற்காகக் கழக தலைமையைச் சீர்ப்படுத்திச் செம்மைப்படுத்த முயன்றோம் என்ற காரணத்திற்காக நாங்கள் கலைஞர் கருணாநிதியாலும், அவரது நெருங்கிய தோழர்களாலும், 'சதிகாரர்கள்', 'துரோகிகள்', 'காட்டிக் கொடுப்பவர்கள்' என்று தூற்றப்பட்டோம்.

அவர்கள் எங்களை ஒழிக!' என்று கூறினார்கள். நாங்கள் தி.மு.கழகத்தைவிட்டு ஒழிந்து வந்துவிட்டோம். நாங்கள் வெளியேறி வந்த பிறகும், எங்களை அவர்கள், 'பதவிப் பித்தர்கள்', 'இடந்தேடிகள்', 'பதவி அரிப்புக் கொண்டவர்கள்' என்றெல்லாம் தூற்றி வருகின்றனர். அதுபற்றி நாங்கள் கவலை கொள்ளவில்லை.

தி.மு.கழகத்தை அழித்து, ஒழிக்க வேண்டும் என்பதல்ல எங்களுடைய நோக்கம். கலைஞரின் போக்கிலேயே அது வாழட்டும். அங்கே எங்களால் இருக்க முடியாது என்ற ஒரே காரணத்திற்காக, வெளியேறி வந்து விட்டோம். நாங்கள் பெரியார் - பேரறிஞர் அண்ணா ஆகியோர் வகுத்துத் தந்த கொள்கைகள் - குறிக்கோள்கள் - கோட்பாடுகளின் வழி, தனியாகக் கழகத்தை நடத்திச்செல்லலாம் என்ற நோக்கத்திலேயே வெளியே வந்துவிட்டோம்.

அறிஞர் அண்ணா காலத்தில் வெற்றிக்கு மேல் வெற்றி பெற்று வந்த கழகம், கலைஞர் கருணாநிதி தலைமைப் பொறுப்பை ஏற்ற பிறகு, தோல்விக்குமேல் தோல்வியைப் பெறுவானேன்? 1971 பொதுத்தேர்தலில் தி.மு.கழகம் பெருவெற்றி பெற்றதற்கு அடிப்படைக் காரணம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் செல்வாக்கும், புகழும், உழைப்புமே ஆகும்.

கலைஞரின் தலைமையில் பொது மக்களுக்கு வெறுப்பும், அருவருப்பும் ஏற்படத் தொடங்கின. அதன் விளைவாக, திண்டுக்கல் இடைத்தேர்தல், கோவை சட்டமன்ற - நாடாளுமன்ற இடைத்தேர்தல்கள், புதுவை மாநிலப் பொதுத்தேர்தல் ஆகியவற்றில் தி.மு.கழகத்திற்குப் படுதோல்விகள் ஏற்பட்டன. கலைஞர் கருணாநிதி அவர்களின் தலைமையில் இயங்கிவந்த தமிழக ஆட்சி, எட்டுக் குற்றச்சாட்டுகளுக்கு ஆட்பட்டுக் குடியரசுத் தலைவரால் கலைக்கப்படுவதற்குக் காரணம், முழுக்க முழுக்க அவரே ஆவார்.

கழகத்திற்குப் பெருமையும், புகழும், வெற்றியும் ஏற்படும் போது, அவற்றிற்குப் பொறுப்பு ஏற்று மகிழ்வது எவ்வளவு நியாயமோ, அவ்வளவு நியாயம் ஆகும், கழகத்திற்குச் சரிவும், இழிவும், தோல்வியும் ஏற்படும்போது, அவற்றிற்குப் பொறுப்பு ஏற்று வருந்த வேண்டும் என்பது.

கழகத் தலைமையின் போக்கிலே மாற்றம் ஏற்படாவிட்டால், கழகம் விரைவில் அழிந்துபோக இடம் ஏற்பட்டுவிடும் என்ற எண்ணம் கழக முன்னணித் தலைவர்களிடையே ஏற்பட்டது. கழகத் தலைவர், கழகப் பொதுச்செயலாளர், கழகப் பொருளாளர் ஆகியோர் பதவிகளை விட்டு இறங்கி வந்து, தொண்டர்களாக இருந்து கழகத்தினைத் தூக்கி நிறுத்தப் பாடுபடுவது நல்லது என்ற கருத்து அவர்களால் எடுத்து

வைக்கப்பட்டது. ஆனால் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள கலைஞர் கருணாநிதி மறுத்துவிட்டார். அதன்பிறகுதான் கழகத்தை விட்டு வெளியேறிவிடுவது என்ற முடிவுக்கு நான் வந்தேன். மற்ற நண்பர்களும் அதே முடிவுக்கு வந்தார்கள். அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட விளைவுதான், ம.தி.மு. கழகத்தின் தோற்றமாகும்.

நான் எம்.ஏ. படித்து முடித்ததற்குப் பிறகு, பெரியாரின் ஈரோட்டுப் பாசறைக்குத்தான் சென்றேன். அன்றிலிருந்து இன்றுவரை கழகத்தின் ஆக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டு வருகிறேன். தமிழகத்தின் பட்டி தொட்டி களிலெல்லாம் சுழன்று சுற்றி வந்து, கழகக் கொள்கைகளைப் பரப்பி வருகிறேன். பெரியாரோடு நான் இருந்தபோது, அவர் கிழித்த கோட்டைத் தாண்டியதில்லை. அறிஞர் அண்ணா வின் தலைமையின்கீழ் பணியாற்றியபோது, கட்டுப் பாட்டுக்கு ஊறு தேடாமல், கழகத்திற்குக் களங்கம் கற்பிக் காமல் கடமையாற்றி வந்தேன். நான் கலைஞரோடு சேர்ந்து பணியாற்றி வந்தபோதும், கழகத்தின் கருத்துக்கு மாறுபாடாக எந்த ஒரு நடவடிக்கையிலும் ஈடுபட்டதில்லை.

இப்பொழுது, தி.மு.கழகத்தை விட்டு வெளியேறுவதைத் தவிர, வேறு வழி எதுவும் தென்படவில்லை என்ற நிலை ஏற்பட்டதனால், 'பட்டதெல்லாம் போதும்; படமுடியாது இனித்துயரம்' என்று சொல்லிவிட்டு வெளியேறி வந்து விட்டோம்.

நான் தி.மு.கழகத்தை விட்டு வெளியேறுவது என்று தீர்மானித்தவுடன், என்னிடம் இருந்த கார், ரூ.28 இலட்சம் கணக்கு, காசோலைப் புத்தகம் போன்ற எல்லாவற்றையும் தி.மு.கழகத் தலைமை நிலையத்திடம் ஒப்படைத்து விட்டேன்.

நான் தி.மு.கழகத்தை விட்டு விலகியவுடன், கலைஞர் கருணாநிதி அவர்கள், ''நீ கூடவா புரூட்டசு?'' என்று ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீசர் நாடகத்தில் வரும் ஒரு சொற்றொடரைப் பயன்படுத்தி, 'முரசொலி'யில் எழுதிக் காட்டினார்.

நான் அந்தக் கூற்றைப் பற்றிக் கவலைப்படவில்லை. நான் 'புரூட்டசு' என்றால், அவர் 'சீசர்' என்று ஆகிறார். ஷேக்ஸ் பியரின் நாடகத்தில் புரூட்டசு என்பவன், பெருமைக்குரிய வனாக - பண்பாளனாக - நேர்மையாளனாக - நாணயமானவ னாக - உண்மையானவனாக - வீரனாகத்தான் வருணிக்கப் படுகிறான். அவன் கெட்டவனாகச் சித்தரிக்கப்படவில்லை. புரூட்டசு பேசும்போது, ''நான் சீசர்மேல் கொண்ட அன்பு எவரையும்விடக் குறைந்தது அல்ல, ஆனால், உரோம் நகரின்மீது நான் கொண்டிருக்கும் அன்பு, அதைவிட மிகப் பெரியதாகும்!'' என்று குறிப்பிடுகிறான். அதுபோலத்தான், நானும் கூறுகிறேன், ''கலைஞர் மீது நான் கொண்டிருக்கும் அன்பு குறைந்தது அல்ல; ஆனால், கழகத்தின் மீது நான் வைத்திருக்கும் அன்பு அதைவிட மிகப் பெரியது ஆகும்!'' என்று.

புரூட்டசு சீசரைக் கொன்று உரோமைக் காப்பாற்றினான். ஆனால், இந்தப் 'புரூட்டசு' அப்படிச் செய்யமாட்டான். எனவேதான் தி.மு.கழகத்தை விட்டு வெளியேறி வந்துவிட்டான்.

இந்தக் கழகத்தில் தனிநபர் வழிபாடு இருக்காது. கழகத்தை முன்னிறுத்தி, நாம் அதன் பின்னணியில் நின்று பாடு படுவோமேயல்லாமல், நம்மை முன்னிறுத்திக் கழகத்தைப் பின்னணியில் வைத்துச் செயலாற்றமாட்டோம்.

இந்தக் கழகத்தில் 'நான்' என்ற சொல் ஆதிக்கம் செலுத்தாது, 'நாம்' என்ற சொல்தான் ஆட்சி புரியும். இந்தக் கழகத்தின் தோழர்கள் அனைவருடைய உள்ளங்களிலும் பெரியார் - பேரறிஞர் அண்ணா போன்ற மறைந்த மாபெருந் தலைவர்கள்தாம், இடம் பெற்றிருப்பார்கள்.

'மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்புக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள், நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் ஆகியவற்றை நடைமுறைப் படுத்த நாங்கள் முயலுவோம்.

மக்கள் தி.மு.கழகம், அமைப்பு அளவில் வசதியும், வலிமையும் அற்ற ஒன்றாக இன்றைய நிலையில் இருந்தாலும் எதிர்காலத்தில் கொள்கை வளத்தோடும், குறிக்கோள் வலிவோடும் வளரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

வாழ்க பெரியார் புகழ்! வளர்க அறிஞர்அண்ணா கொள்கை! வெல்க ம.தி.மு.கழகம்!''

*கழகத்தின் தென்சென்னைப் பொறுப்பாளர் மு. வரதராசன் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.*

புதிய கழகத்திற்குப் பாராட்டு

*மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப் பட்டதை ஆதரித்தும், போற்றியும் பண்புடைய நண்பர்கள் பலர் கடிதங்களும், கட்டுரைகளும் எழுதினர். சிலர் பாராட்டுத் தந்திகள் அனுப்பி வைத்தனர்.*

*புதிய கழகத்தை வரவேற்றுப் பாராட்ட, புலவர் பெருமக்கள் பலர் சிறப்புக் கூட்டம் ஒன்றினைக் கூட்டினார்கள். அதில் புலவர் இளஞ்செழியன், புலவர் பாண்டுரங்கன், புலவர் வள்ளலரசு, புலவர் வீரபாகு, புலவர்*

முத்துக்குமரன், புலவர் செகந்நாதன், புலவர் திருநாவுக்கரசு போன்றவர்கள் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்கி னார்கள்.

அந்தக் கூட்டத்தில் பேசியவர்கள், சரியான நேரத்தில், நாட்டுக்குச் சரியான வழிகாட்டத் தோன்றிய மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை வரவேற்றுப் பாராட்டியதோடு, தங்களின் முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் தருவ தாகக் கூறினார்கள்.

கூட்டத்தில் சிறப்புரை ஆற்றிய புலவர் இளஞ்செழியன் அவர்கள், புதிய கழகத்தை உள்ளன்போடு வரவேற்றதோடு, என்னையும் பலபடப் பாராட்டிப் பேசினார்.

அவர் பேசியவற்றின் சுருக்கம் வருமாறு :

"மக்கள் தி.மு.கழகத்தைத் தொடங்கியுள்ள டாக்டர் நாவலர் அவர்கள் நேர்மையால், தூய்மையால், நீண்ட ஒழுக்கத்தால், பண்பால், அன்பால், பகுத்தறிவால், நாவன்மையால், உண்மையால், நல்லுரையால், தொண்டால், தொலையாப் பயணத்தால், நாட்டையும், ஏட்டையும், நல்லோரையும் கவர்ந்தவராவார்.

அவர், "ஒழுக்கமும், வாய்மையும், நாணும்இம் மூன்றும் இழுக்கார் குடிப்பிறந்தார்" என்ற வள்ளுவரின் குறளுக்கோர் நாயகமாகவும், நனிசிறந்த தாயகமாகவும் விளங்கி வருகிறார். நற்றமிழ் கற்றோர் அனைவரும் அவரை இன்று பின்தொடருகின்றோம்.

டாக்டர் நாவலர் அவர்கள் நாணயத்தை வாழ்விலும், நாநயத்தைப் பேச்சிலும் காட்டிவருபவர். அறிஞர் அண்ணா அவர்கள்மீது அளவுகடந்த பற்றும், அவர் அளித்துள்ள கொள்கைகளிடத்திலே எல்லையற்ற ஆதரவும் காட்டுபவர். அவருடைய குரலிலிருந்து குறள்வருமே ஒழிய, குற்றங்கள்

என்னும் பொய் - வஞ்சகம் - சூது - சுயநலம் என்பவை வாரா. புகழ் அவரைத் தேடி ஓடிவரும்; அவர் புகழைத் தேடி ஒருபோதும் ஓடியதில்லை!

அவர், சலுகை என்ற பெயரால் சரியில்லாத தவற்றினையோ, அன்பு என்ற பெயரால் ஆகாத சலுகையினையோ, நட்பு என்ற பெயரால், தகுதியில்லாதவர்க்குப் பதவியைத் தருகின்ற செயலையோ, நன்கொடை என்ற பெயரால் நள்ளிருள் பேரத்தையோ கனவிலும் சரி, நனவிலும் சரி எண்ணிப் பார்க்காதவர்!

நாவலர் அவர்களின் வழிப்பயணத்தில் என்னை நான் முழுக்க முழுக்க இணைத்துக் கொண்டுவிட்டேன். உயர் பேராண்மை என்பது, நாவலருக்கே உரிய சொந்தமும் சொத்தும் என்பேன்.

நாவலர், இலக்கிய வழிவந்த ஓர் இலக்கண மனிதர்! அவரின் செயல்பாடுகளில் பொய்யற்ற நடப்பே இருக்கும்; போலியான நடிப்பு இருக்காது.

"அண்ணாதான் நமது கழகத்தின் ஆணிவேர்; நாம் எல்லோரும் அவருக்குப் பக்கவேர்களாகவும் சல்லி வேர்களாகவும் இருக்கிறோம். அண்ணாதான் நமக்கு ஆசான், வழிகாட்டி; அறிவுரை கூறுபவர்!" என்று நாவலர் அடிக்கடி சுட்டிக் காட்டுவார். அவர், அண்ணா தந்த கொள்கை, நோக்கம், திட்டம், நெறி, வழி ஆகியவற்றை என்றென்றும் கட்டிக் காத்து வருபவர்.

என்னைப் போன்ற புலவர்கள் பலரும், கவிஞர்கள் பலரும், பேராசிரியர்கள் பலரும் நாவலரின் தொண்டுக்குத் துணையாக நிற்போம். அவரோடு சேர்ந்து தமிழ்ப் பண்பாட்டைத் தூக்கிக் காக்கிற தூணாகவும் இருப்போம்.

அறிஞர் அண்ணா உள்ளிட்ட தலைவர்கள் அனைவரைக் காட்டிலும் நாவலர்தான் மிகமிக அதிகமாக நாடு நகரம், சிற்றூர், பேரூர், பட்டி தொட்டியெல்லாம் சுற்றிச் சுற்றிச் சுழன்று வந்து, கழகக் கொள்கைகளை வளர்த்தவராவார்.

டாக்டர் நாவலர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் விளங்கும் மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம் எல்லா வகையிலும் வளரும்; அவர் நமக்கு என்றென்றும் நல்ல வழிகாட்டியாக இருப்பார் என்ற நம்பிக்கை என் போன்றார்க்கு என்றும் உண்டு.

வாழ்க நாவலர்! வளர்க ம.தி.மு.கழகம்!".

## மக்கள் தி.மு.கழகப் பொதுக் குழு

*மக்கள் தி.மு.கழகத்தின் தொடக்கவிழாப் பொதுக் கூட்டம் நடந்தேறிய பின்னர், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், ஆர்வமும், ஊக்கமும் கொண்ட தோழர்கள், ம.தி.மு.கழகத்திற்கு ஆதரவு தர முன்வந்தனர். பல நகரங்கள், பேரூர்கள், சிற்றூர்கள் ஆகியவற்றில் புதிய கிளைகள் தோற்றுவிக்கப்பட்டன. சென்னையிலும், பிற ஊர்களிலும் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் நானும், கழகத்தின் முன்னணிச் சொற்பொழிவாளர்களும் கலந்து கொண்டோம்.*

*மக்கள் தி.மு.கழகத்தின் பொதுக்குழுக்கூட்டம், கழகத் தலைமை நிலையத்தில், காஞ்சி கலியாணசுந்தரம் அவர்களின் தலைமையில், 27.5.77 வெள்ளியன்று நடை பெற்றது. காலை 10.30 மணிக்குத் தொடங்கப் பெற்ற கூட்டம், பகல் உணவுக்கான சிறிது இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் தொடங்கி, இரவு 7.30 மணி அளவில் முடிவுற்றது.*

பொதுக்குழு உறுப்பினர்கள் 125 பேர்களும், சிறப்பு அழைப்பினர் 18 பேர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். முக்கிய முன்னணித் தோழர்கள் கழக அமைப்பு, கழக வளர்ச்சி, கொள்கை பரப்புதல், நிதிசேர்த்தல், பொதுத் தேர்தலில் எவ்வாறு பங்கு கொள்வது என்பவை பற்றிப் பேசினார்கள். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

1977 சூன் திங்களில் நடைபெறக்கூடிய பொதுத் தேர் தலில், மக்கள் தி.மு.கழகம் போட்டியிடுவதில்லை என்றும், அறிஞர் அண்ணாவின் கொள்கைகளை ஏற்று, கலைஞரின் தி.மு.கழகத்தை எதிர்க்கும் அ.இ.அ.தி.மு.கழகக் கூட்டணி யின் வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிப்பது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அ.இ.அ.தி.மு.கழகத்தின் பொதுச் செயலாளர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், ம.தி.மு.கழகத்திற்குப் பத்து சட்ட மன்றத் தொகுதிகளை ஒதுக்கித்தர முன்வந்தார் என்றாலும், ம.தி.மு.கழகம் போதுமான வளர்ச்சியையும், நிதி வசதியையும் பெறாதிருந்த நிலையில், கழகத்தவர் யாரும் போட்டியில் கலந்துகொள்வதில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

## 1977 பொதுத்தேர்தலும் புதிய ஆட்சியும்

மக்கள் தி.மு.கழகம் எடுத்த முடிவிற்கு இணங்க, 1977 பொதுத்தேர்தல், அ.இ.அ.தி.மு.க கூட்டணி வேட்பாளர் களுக்கு ம.தி.மு.க தோழர்கள் ஆங்காங்கு முழு ஆதரவு கொடுத்தார்கள்.

தேர்தல் பிரச்சாரப்பணிகளில் நானும், ம.தி.மு.க.வின் முன்னணிப் பேச்சாளர்களும் தீவிரமாக ஈடுபட்டோம். பல்வேறு இடங்களில் நடைபெற்ற பிரச்சாரப் பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்டோம்.

தேர்தலில் அ.இ.அ.தி.மு.கழகம் 129 இடங்களில் வெற்றி பெற்றது. தி.மு.கழகம் 48 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் தகுதி அ.இ.அ.தி.மு.கழகத்திற்கு ஏற்பட்டது.

30.6.77 அன்று புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையில் அ.இ.அ.தி.மு.க ஆட்சி ஏற்பட்டது. இளைஞர்களும், தாய்மார்களும், பொதுமக்களும் அந்த ஆட்சியைப் பெருமகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

அன்று மாலை, சென்னைக் கடற்கரைச் சீரணி அரங்கில், புதிய அமைச்சரவைக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அழைப்பின் பேரில் நான் அந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு, முதலமைச்சர் புரட்சித்தலைவர் அவர்களுக்கும், ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொண்டேன். புரட்சித்தலைவரின் சீரிய தலைமையின்கீழ் தமிழக அரசு புகழோடும், பெருமை யோடும், பொலிவோடும், வலிவோடும் திகழும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தேன்.

பொதுக்கூட்டத்தில் நான் பேசும்போது, தெரிவித்த சில கருத்துக்கள் வருமாறு :

> "மாநிலக் கட்சிகளுக்கு மக்களிடத்தில் சிறப்பான வரவேற்பு இருக்கிறது என்பதை இந்தப் பொதுத் தேர்தலின் முடிவுகள் தெள்ளத்தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன.
>
> அண்ணாவின் கொள்கை வழிநின்று வெற்றி பெற்றுள்ள அ.இ.அ.தி.மு.கழகம், அண்ணா அவர்கள் பின்பற்றிய அடக்கவுணர்வோடும், ஆர்வத்தோடும் கொள்கைகளைத் தழுவி நின்று செயல்பட வேண்டும். அ.இ.அ.தி.மு.கழகம்

அறநெறியில் ஆட்சி புரிந்து, பொதுமக்களின் நம்பிக்கையையும், நன்மதிப்பையும், அன்பையும், ஆதரவையும் பெற்றுப் பெருமையோடும், புகழோடும் செயல்படவேண்டும் என்று மக்கள் தி.மு.கழகம் விரும்புகிறது.

அண்ணாவின் கனவுகள் நனவாக வேண்டும். அண்ணா அமைத்த சனநாயகப் பண்போடுகூடிய பாங்கான ஆட்சி மீண்டும் மலரவேண்டும். அண்ணா வகுத்துத் தந்த கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் புதிய ஆட்சி நல்லாதரவு தந்து, அவற்றையெல்லாம் நிறைவேற்றி வைக்க வேண்டும். புரட்சித்தலைவர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் அமைந்துள்ள இந்தப் புதிய ஆட்சியினர்க்கு, மக்கள் தி.மு. கழகத்தின் சார்பாக மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.''

*இறுதியில் பேசிய முதல்வர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்னைப் பற்றிக் குறிப்பிட்டுச் சில கருத்துக்களைக் கூறினார். அவற்றின் சுருக்கம் வருமாறு :*

''அறிஞர் அண்ணா அவர்கள் 1967ஆம் ஆண்டு ஆட்சி அமைத்தபோது, நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தேன் என்பது உங்களுக்கு நினைவிருக்கும்.

மருத்துவமனையில் இருந்த என்னிடம் நமது நாவலரின் இளவல் செழியனை அனுப்பிவைத்து, அறிஞர் அண்ணா அவர்கள் தாம் தயாரித்து வைத்திருந்த அமைச்சர்களின் பட்டியலையும், அவர்களுக்கு அளிக்க இருந்த பொறுப்புக்களின் பட்டியலையும் காட்டி வரும்படி கூறியிருந்தார். அவை பற்றி நான் என்ன கூறுகிறேன் என்பதைக் கேட்டுவா என்று சொல்லியனுப்பியிருந்தார்.

செழியன் அவர்கள் என்னை வந்து மருத்துவ மனையில் பார்த்தார்.

''தொழில் தொடர்பான துறை, நிறுவனங்கள், அமைப்புக்கள் ஆகியவற்றை எந்த அமைச்சரிடம் ஒப்படைப்பது என்பது பற்றி எம்.ஜி.ஆரிடம் கேள்'' என்று அண்ணா சொல்லி யனுப்பியதாக செழியன் என்னிடம் கூறினார்.

நான் உடனே செழியன் அவர்களிடம் ''தொழில் துறையில் கை கறைபடக் காரணம் இருக்கிறது. தொழில் துறை அமைச்சர் என்றால், நிச்சயமாய் தவறுகள் நிகழ்வதற்கு ஏதுக்கள் உண்டு. ஆகவே அந்தத் துறைக்கு நல்லவர் ஒருவரை அமைச்சராகப் போடவேண்டும்'' என்று நான் சொன்னேன்.

''யாரைப் போடலாம் என்று சொல்லுங்கள்' என்று செழியன் என்னைக் கேட்டார். நாவலர் அவர்களை இந்தத் துறைக்கு அமைச்சராகக் போடலாம் என்று நான் சொன்னேன்.

''என்னுடைய அண்ணனுக்கு இந்தப் பதவியைக் கொடுக்கும்படி, எம்.ஜி.ஆரை நான் பயன்படுத்திக் கொண்டேன் என்று அண்ணா அவர்கள் எண்ணிவிட்டார் களேயானால், இத்தனை நாட்களாக நான் ஆற்றிவரும் தொண்டு, அவரிடம் நல்லவனாக, தூய்மையானவனாக நடந்துகொண்ட தன்மை ஆகியவற்றிற்குக் களங்கம் ஏற்பட்டுவிடாதா?'' என்றார்.

'நான் சொல்லுகிறேன், நீங்கள் போய்ச் சொல்லுங்கள். அண்ணா கேட்டால், அதற்கான காரணங்களை அவரிடம் நான் விளக்கமாகச் சொல்லிக் கொள்ளுகிறேன்' என்று நான்கூறினேன்.

'நாவலரை நான் மிக உயர்ந்த நிலையில் வைத்து மதிக்கிறேன் என்பதை, அண்ணா அவர்கள் நன்கு

அறிவார்கள். என்னுடைய கருத்துக்கு அண்ணா ஏதும் மறுப்புத் தெரிவிக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு'' என்று நான் தெரிவித்தேன்.

நாவலர் தி.மு.கழகத்தில் முக்கியமான ஒரு தலைவராகத் திகழ்ந்தபோதுதான், நான் அந்தக் கழகத்தின் ஒரு தொண்டனாகப் பணியாற்ற முன்வந்தேன்.

அப்படிப்பட்ட நாவலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு எங்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்திருப்பதை நான் ஒரு பெரும் பேறாகவே கருதுகிறேன்!''

## அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

*1977 செப்டம்பர் 15ஆம் நாள் அறிஞர் அண்ணாவின் 68ஆவது பிறந்தநாள் விழா தமிழக அரசின் சார்பாக மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவானது சென்னை அரசினர் தோட்டத்தில், இராசாசி மண்டபத்திற்கு எதிரில் நடைபெற்றது.*

*விழாவிற்குத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமை தாங்கினார். விழாச் சிறப்புரை ஆற்ற, புரட்சித் தலைவர் அவர்கள் எனக்கு அழைப்பு விடுத்திருந்தார். நான் அழைப்பினை ஏற்று விழாவில் கலந்துகொண்டேன். விழாவில் அமைச்சர்கள் சிலரும், தமிழறிஞர்கள் சிலரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.*

*நான் பேசும்போது குறிப்பிட்டதாவது:-*

"அறிஞர் அண்ணாவின் 68ஆவது பிறந்தநாள் விழாவைப் புதிதாக ஆட்சி அமைத்துள்ள புரட்சித்தலைவரின் தமிழக அரசு கொண்டாடும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதும், அதில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றும் பேற்றினை நான்

பெற்றிருப்பதும், எனக்குப் பெரு மகிழ்ச்சியை அளிக் கின்றன.

இந்த அரசு அண்ணாவின் வழிவந்த அரசு! அண்ணா பெயரால் அமையப்பெற்ற கழகம் நடத்தும் அரசு! அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற ஆட்சியை முறைப்படி தொடர்ந்து நிலைநாட்டும் அரசு! இந்த அரசு அறிஞர் அண்ணாவின் பிறந்தநாளைப் பொருத்தமான முறையில், சிறப்பாகக் கொண்டாட முன் வந்திருப்பது போற்றுவதற்கு உரியதாகும்.

அறிஞர் அண்ணாவின் வழி என்ன என்பதை எல்லோரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். அண்ணாவழி என்பதற்கு அன்புவழி, அறவழி, ஆடம்பரமற்ற வழி, அடக்கமான வழி, அமைதியான வழி, ஆரவாரம் அற்ற வழி, சமத்துவத்திற்கும், சமதர்மத்திற்கும் மதிப்பளிக்கும் சனநாயக வழி, மூடநம்பிக்கைக்கு எதிரான வழி, குருட்டுப் பழக்க வழக்கத்திற்கு மாறுபாடான வழி, உண்மையான வழி, நாணயமான வழி, தூய்மையான வழி தமிழ்மொழி - தமிழ் மக்கள் - தமிழ்நாடு போற்றும் நல்லவழி என்றெல்லாம் பொதுப்படையாகக் கூறலாம்.

இந்தச் சீரிய பண்புகள் அனைத்தும் அறிஞர் அண்ணா விடத்தில் பொதிந்து கிடந்தன. அவருடைய எண்ணம் - எழுத்து செயல்முறை ஆகிய எல்லாவற்றிலும் அந்தப் பண்புகள் தென்படுவதைக் காணலாம்.

அறிஞர் அண்ணா அன்பு நெறிக்கு முழுக்க முழுக்க மதிப்பு அளித்து வந்தார். அன்பு நெறிக்கு மாறுபாடான வன் முறையை, அவர் எந்தக் கட்டத்திலும், எந்த நிலையிலும், எந்தவகையிலும் ஏற்றுக்கொண்டவரல்லவர். முடிவு மட்டும் நன்றாக அமைந்தால் போதாது, முடிவை அடைவதற்கான வழிமுறைகளும் நல்லவைகளாகவே அமையவேண்டும் என்பதை அவர் வற்புறுத்தி வந்தார்.

தீய வழிமுறைகளை அவர் எந்த ஒரு கட்டத்திலும் துணைக்குத் தேடியதில்லை. தீயமுறையில் பணம் திரட்டுவது, பணத்தைச் செலவழிப்பது, பதவியைப் பெறுவது, ஆதிக்க அதிகாரம் செலுத்துவது போன்றவற்றை அவர் அறவே வெறுத்து வந்தார். பிறர்க்குத் தீங்கு தரும் எந்த ஒரு செயலையும் செய்ய அவர் விரும்பியதில்லை.

அறிஞர் அண்ணா அவர்கள் அகந்தை - ஆணவம் - அதிகாரம் - ஆதிக்கம் ஆகியவற்றில் பற்று வைத்ததில்லை. 1961 ஆம் ஆண்டில், திருவொற்றியூரில் நடைபெற்ற கழகக் காவலர் கூட்டத்தில், அண்ணா அவர்கள் பேசும்போது குறிப்பிட்டது இங்குக் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

'நான் உங்களுக்கெல்லாம் தலைவன் அல்லன்; உங்களுடைய அண்ணன்! புகழால் கட்சி நிறுவியோர் உண்டு; பணபலத்தால் கட்சி நடத்துவோருமுண்டு; அறிவால் - ஆற்றலால் இயக்கங்கள் அமைப்போருண்டு- நான் உங்கள் அன்பைப்பெற்று, அன்பு வழியில் கட்சியை நடத்தி வருபவன்' என்று மிக்க அடக்கவுணர்வோடு கூறினார்.

அறிஞர் அண்ணா அவர்கள் எப்பொழுதும் அறவழியைத் தான் பின்பற்றினார். திராவிடர் கழகத்தை விட்டு வெளியேறி தி.மு.கழகத்தைத் தோற்றுவிக்க அண்ணா அவர்கள் முயன்றபோது, திராவிடர் கழகத்தின் சொத்துக்கள் - பணம் - அச்சகம் - 'விடுதலை' ஏடு போன்ற அனைத்தையும் பெரியாரிடமிருந்து பிடுங்கிக் கொள்ளவேண்டும் என்று சிலர் வற்புறுத்தினார்கள். தி.மு.கழகத்தினிடத்தில் பெரும் பான்மையோர் வலிவு இருக்கிறது என்ற காரணத்திற்காகப் பெரியாரிடம் சண்டை சச்சரவை ஏற்படுத்திக்கொள்ளவோ, வன்முறை கொண்டு போராடிச் சொத்துக்களையெல்லாம்

பிடுங்கிக்கொள்ளவோ அண்ணா அறவே விரும்பவில்லை. வன்முறை அற்ற மென்முறையை மேற்கொள்ளும் அறவழியைத்தான் அவர் கடைப்பிடித்தார்.

1956 இல் திருச்சியில் நடைபெற்ற கழக மாநில மாநாட்டிற்கு என்னைத் தலைமை தாங்கும்படி வழிமொழிந்து பேசிய போது, அவர் எவ்வளவு அடக்கத்தோடு பேசினார் என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். அறிஞர் அண்ணா அவர்களோடு மிக நெருங்கிப் பழகி, அவரது சிறந்த பண்புகளையும், சீரிய அறிவாற்றல் திறன்களையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு நிரம்பக் கிடைத்திருந்தும், அவர் பெற்றிருந்த அருமை - பெருமை - அறிவு - ஆற்றல் ஆகிய வற்றில், நூற்றில் ஒரு பங்கைக் கூட இன்னமும் என்னால் பெற முடியவில்லை என்றுதான் சொல்லவேண்டும். நானும் எவ்வளவோ முயன்று பார்க்கிறேன்; ஏங்கிப் பார்க்கிறேன்; தாவித்தாவிப் பார்க்கிறேன். அவற்றையெல்லாம் என்னால் பெற முடியவே இல்லை.

அப்படிப்பட்ட மிக உயர்ந்த நிலையில் இருந்த அறிஞர் அண்ணா அவர்கள், ஐந்து இலட்சம் மக்கள் கூடியிருந்த அந்த மாநாட்டில், என்னை விளித்து, 'தம்பிவா! தலைமை தாங்கவா! நீ ஆணை இடு! உன் ஆணைக்கு நான் கட்டுப்பட்டு நடக்கிறேன்.' என்று குறிப்பிட்டார்.

அவர் என்னை ஆணையிடச் சொல்கிறார்; தான் கட்டுப்பட்டு நடக்கிறேன் என்கிறார்; நான் எங்கே? அண்ணாஎங்கே? நான் மடு அளவுக்குத் தாழ்ந்தவன் என்றால், அவர் மலை அளவுக்கு உயர்ந்தவர். அறிஞர் அண்ணா அவர்கள் எவ்வளவு அடக்கமான முறையில் செயலாற்றி வந்தார் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

அண்ணா அவர்கள் அதிகாரமும், ஆதிக்கமும் கொண்ட முதலமைச்சராக இருந்தபோதும், அவர் அக்கிரமக் காரர்களுக்கும், அநியாயக்காரர்களுக்கும், கொலைகாரர் களுக்கும், கொள்ளையடிப்போர்க்கும், சமுதாயவிரோதி களுக்கும், பழிபாதகம் செய்வோர்க்கும் பாதுகாப்பாக இருந்ததே இல்லை. அத்தகையோர்க்கு எந்த வகையிலும் ஊக்கம் தந்தததும் இல்லை. அவரது வாழ்வு உண்மையை யும், தூய்மையையும், நேர்மையையும், நாணயத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது.

அண்ணா அவர்கள் சனநாயகத்திற்கு மிகவும் மதிப்பு அளித்து வந்தார். அவர் பேசும் போது, சனநாயக முறை களை மட்டும் கடைப்பிடித்தால் போதாது என்றும், சனநாயக மனப்பான்மையும், சனநாயக நோக்கமும், சனநாயகப் பண்பும், சனநாயக அணுகுமுறையும் முழுக்க முழுக்க அமைந்திருக்க வேண்டும் என்பதையும் வற்புறுத்தி வந்தார்.

அண்ணா அவர்கள் சனநாயகத்தில் தமக்கு இருக்கும் நம்பிக்கையையும், மதிப்பையும் குறிப்பிடும்போது,

''நான் சனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவன்; அரசியலில் கண்ணியத்தை விரும்புவன்; கட்டளை இடுபவன் அல்லன். சனநாயகம் வளர்ந்துள்ள இந்நாளில் கட்டளை இடும் தலைவர்கள் தோன்ற முடியாது; தோன்றவும் கூடாது; சனநாயகம் இல்லாவிட்டால் அரசியலில் பலன் ஏதும் ஏற்படாது. நான் நானாக எதையும் செய்வதில்லை; செய்யவும் மாட்டேன். உங்களிலே பலரின் கருத்துக்களைக் கேட்கிறேன்; அவற்றைத் தொகுத்து ஆராய்ந்து பார்க்கிறேன்; பின்னர் ஒரு முடிவுக்கு வருகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

அண்ணா அவர்கள் ஒரு நல்ல குடும்பத்தில் அண்ணன், தம்பி, தமக்கை, தங்கை, தாய், தந்தை ஆகியோரிடையே காணப்படக்கூடிய நல்ல பண்போடு

கூடிய 'குடும்பப்பாசம்' போன்றதொரு பாசம், கட்சித் தோழர் களிடையே நிலவவேண்டும் என்பதை அடிக்கடி உணர்த்தி வந்தார்.

அண்ணா அவர்கள் எப்பொழுதும், கட்சியிலிருந்த மற்றவர்களின் ஒருமித்த முடிவுக்குத் தம்மை ஆட்படுத்திக் கொள்வாரே அல்லாமல், தம்முடைய கருத்தைப் பெரும் பான்மையோரின் கருத்துக்கு மாறாக ஒருபோதும் திணிக்க முயலமாட்டார். கட்சித் தோழர்களிடையே, பிரச்சினை களைப் பொறுத்துத் தெளிவினை ஏற்படுத்த முயலுவார்.

ஒரு கட்சித் தலைவருக்கு இருக்கவேண்டிய அறிவும், ஆற்றலும், தகுதியும், திறமையும், உறுதியும், ஊக்கமும், மாண்பும், மதிப்பும், புகழும், பெருமையும், அன்பும், அருளும், பெருந்தன்மையும், பெரு நோக்கமும், சனநாயகப் பண்பும், சிறப்பும் அண்ணாவிடத்தில் மிகவும் செறிந்திருந்தன.

அறிஞர் அண்ணா அவர்களுக்கு ஈடான தலைவரும் இல்லை; எடுப்பான தலைவரும் இல்லை! எனவே அவரது சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றைப் பின்பற்றி நாம் நம் கடமைகளை ஆற்றுவோமாக!"

*முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் நிறைவுரை ஆற்றினார்.*

*இறுதியில் அறிஞர் அண்ணா எழுதிய 'நீதி தேவன் மயக்கம்' என்ற நாடகம் அண்ணா கலைக்குழுவினரால் சிறப்பாக நடத்திக் காட்டப்பட்டது.*

### ம.தி.மு.க வளர்ச்சிக்கான ஆக்கப்பணிகள்

*மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை களையும், குறிக்கோள்களையும் பொது மக்களிடையே*

எடுத்துக் கூறி, அவர்களின் அன்பையும், ஆதரவையும், நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெறப் பரவலான முறையில் எல்லா முக்கியமான நகரங்களிலும் பேரூர்களிலும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. கழகத்தின் மூவண்ணக் கொடி எல்லா ஊர்களிலும், நகரங்களிலும் பறக்க விடப்பட்டன ''மக்களாட்சி'' ஏட்டின்மூலம் கருத்துக்களும், நிகழ்ச்சிகளும் வெளியிடப்பட்டன.

1977 ஏப்ரல் திங்களிலிருந்து, செப்டம்பர்த் திங்கள் முடிய, 125க்கு மேற்பட்ட நகரங்களில் பொதுக்கூட்டங்கள் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடத்தப்பட்டன. நான் மட்டும் 95க்கு மேற்பட்ட பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டேன். கழகத்தின் முன்னணிச் சொற்பொழிவாளர்கள் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டு ஆங்காங்குக் கழகப் பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டனர்; கொள்கை விளக்கம் செய்தனர். நகரங்கள், பேரூர்கள், சிற்றூர்கள் ஆகியவற்றில் குறிப்பிட்ட அளவில் நூற்றுக்கணக்கில் மட்டுமே கழகத்தில் இணைந்து பாடுபட்டு வந்தனர். திராவிட இயக்கப்பற்றுக் கொண்டவர்கள் பெரும்பான்மையோர், அ.இ.அ.தி.மு.கழகத்திலும், தி.மு.கழகத்திலும் பிடிப்பும், தொடர்பும் கொண்டிருந்த காரணத்தினால், எதிர்பார்த்த அளவுக்கு மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை வலிவுமிக்க-ஆதரவுமிக்க ஒரு கட்சியாக வளர்க்க இயலவில்லை. சட்டமன்றத் தொகுதியிலோ, நாடாளுமன்றத் தொகுதியிலோ தனித்துப் போட்டியிட்டுப் பொது மக்களின் பேராதரவைப் பெறமுடியாத நிலையில்தான் ம.தி.மு.கழகம் இருந்து வந்தது. போதுமான அளவுக்கு நிதி வசதி இல்லாமையும், செய்தித்தாள் வசதி இல்லாமையும் கழக வளர்ச்சிக்குப் பெருந் தடைக்கற்களாகவே இருந்து வந்தன. ம.தி.மு.கழகம் குறிப்பிடத்தகுந்த ஒரு கட்சியாகத்

தோற்றமளித்ததேயல்லாமல், தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கான வசதியையும், வாய்ப்பையும், செல்வாக்கையும், பேராதரவையும் பெறமுடியவில்லை.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் அழைப்பு

அ.இ.அ.தி.மு.கழகத்தின் பொதுச் செயலாளரும், தமிழக முதல்வரும் ஆன புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மக்கள் தி.மு. கழகத்தை, அ.இ.அ.தி.மு.கழகத் தோடு இணைத்துச் செயலாற்ற முன்வரவேண்டும் என்று மிக நெருங்கிய நண்பர்கள் மூலம் எனக்குச் செய்தி சொல்லி அனுப்பியிருந்தார். அவர், தொலைபேசியின் மூலம் என்னோடு தொடர்பு கொண்டும் பேசினார். "நேரில் வந்து தங்களிடம் அரசியல் நிலைமைகளைப் பற்றிப்பேசுகிறேன். அதன்பிறகு ஏற்றதொரு முடிவை மேற்கொள்ளலாம்" என்று நான் அவரிடம் தெரிவித்தேன்.

பின்னர் ஒரு நாள் நானும், இராசாராம் அவர்களும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் அழைப்பினை ஏற்று, அவரை அவரது தி.நகர் இல்லத்திற்குச் சென்று நேரில் கண்டோம்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நீண்டநேரம் எங்களோடு அரசியல் சூழ்நிலைகளைப்பற்றியும், திராவிட இயக்கத்தின் எதிர்காலம் பற்றியும், அ.இ.அ.தி.மு.கழகமும், ம.தி.மு.கழகமும் ஒன்றாக இணைவதன்மூலம் ஏற்படக் கூடிய நன்மைகளைப் பற்றியும் விரிவாகவும், விளக்க மாகவும் கலந்துரையாடல் நடத்தினார்.

அவர் குறிப்பிடும் போது, "அ.இ.அ.தி.மு.கழகமும், ம.தி.மு.கழகமும் ஒரே விதமான கொள்கை, கோட்பாடுகளைக் கொண்ட திராவிட இயக்கங்களாகும். இரு கழகங்களையும் சேர்ந்த

பெரும்பாலோரும் அறிஞர் அண்ணா தலைமையின் கீழ் இணைந்திருந்து பணியாற்றி வந்திருக்கிறோம். இரு கழகங்களும் ஒன்றாக இணைவதன் மூலம் அ.இ.அ.தி.மு.கழகம் மேலும் வலிவு பெற்றுப் பொலிவுடன் திகழும். ம.தி.மு.கழகத்தவரின் சீரிய பணிகள் சிறப்பாக நிறைவேற நல்லவாய்ப்பு ஏற்படும். நீங்கள் நன்றாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வாருங்கள். ம.தி.மு.கழகத்தைச் சார்ந்த தலைவர்களுக்கு உரிய மரியாதையும், மதிப்பும் அ.இ. அ.தி.மு.கழகத்தில் வழங்கப்படும். ம.தி.மு. கழகத்தின் செயல் வீரர்களின் தகுதியும், திறமையும் ஏற்றமுறையில் நன்கு பயன்படுத்திக் கொள்ளப்படும். உங்களுக்கு எவ்விதக் கூச்சமும், தயக்கமும் வேண்டாம். பெரியார் புகழையும், அறிஞர் அண்ணாவின் புகழையும் நிலைநாட்ட நாம் இருசாராரும் ஒன்றாக இணைந்து பணியாற்றுவோம்'' என்று கூறினார்.

''விரைவில் ம.தி.மு.கழகத்தின் பொதுக் குழுவைக் கூட்டிப் பொதுக்குழு உறுப்பினர்களின் கருத்து அறிந்து, திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வரலாம் என்று எண்ணுகிறேன். அதுபற்றிய விவரத்தைப் பின்னர் தங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்'' *என்று நான் கூறினேன்.*

## ம.தி.மு.கழகப் பொதுக்குழுகூட்டம்

*புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் விடுத்த அழைப்பினைப் பற்றி ஆய்வு செய்வதற்காக, ம.தி.மு.கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம், 1977 செப்டம்பர் முதல் வாரத்தில், சென்னை, சாந்தோம் பகுதியிலிருந்த கழகத் தலைமைச் செயலகத்தில் கூட்டப்பெற்றது.*

*கூட்டத்தில் தலைமைக்கழக நிருவாகிகளான இராசாராம், மாதவன், அரங்கண்ணல், டி.கே சீனிவாசன், வேழவேந்தன், சனார்த்தனம் ஆகியோரும், மாவட்டக்*

கழகச் செயலாளர்களும், பொதுக்குழு உறுப்பினர்களும், சிறப்பு அழைப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

கூட்டத்திற்கு நான் தலைமை தாங்கினேன். இராசாராம் பொதுக்குழுக்கூட்டத்திற்கு வருகை தந்திருந்த அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

தலைமையுரையில், நான் பேசும்போது, கழகத்தின் வளர்ச்சி நிலையைப் பற்றியும், ஆளுங்கட்சியினரின் தீவிரமான எதிர்ப்பு நடவடிக்கைகளைப் பற்றியும், நிலை மைகளையெல்லாம் சமாளிப்பதற்கு ஏற்றபடி நிதிவசதி இல்லாமையைப்பற்றியும், கழகம் ஆங்காங்கு ஓரளவுக்கு வளர்ந்திருந்தாலும், சட்டமன்றத் தேர்தலிலோ, நாடாளு மன்றத் தேர்தலிலோ தனித்து நின்று போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதைப் பற்றியும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் விருப்பத்தைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறிப் பொதுக்குழு உறுப்பினர்கள், தங்களுடைய எண்ணங்களைத் தாராளமாக மனம்விட்டு எடுத்துரைக்க லாம் என்று கேட்டுக்கொண்டேன்.

எவ்வளவு இன்னல் இழப்புக்கள் ஏற்பட்டாலும், எவ்வளவு தொல்லை, துயரங்கள் நேர்ந்தாலும் ம.தி.மு. கழகத்தை நாம் திட்டமிட்டபடி தொடர்ந்து நடத்திச் செல்லவேண்டும் என்றும், அதனை அ.இ.அ.தி.மு. கழகத்தோடு இணைக்க வேண்டிய இன்றியமையாமை இல்லை என்றும் வாதிட்டுச் சில உறுப்பினர்கள் பேசினார்கள்.

பொதுக்குழு உறுப்பினர்களில் பெரும்பாலானோர் பேசும்போது, ம.தி.மு.கழகம் சீரிய கொள்கைகளையும், நோக்கங்களையும், திட்டங்களையும் கொண்டிருந்தாலும், அரசியல் உலகில் அது வெற்றிகரமாக நடைபோட

இயலுமா? என்பது கேள்விக்குறியாக இருந்து வருவதாலும், தி.மு. கழகத்தின் சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து அரசியல் நடத்துவது என்பது கடினமாக இருந்து வருவதாலும், அ.இ.அ.தி.மு.கழகம் பொதுமக்களின் பெருத்த ஆதரவையும், நம்பிக்கையையும் பெற்று விளங்குவதாலும், தி.மு.கழகத்தை எல்லா நிலைகளிலும் எதிர்த்து நின்று போராட ம.தி.மு.கழகம் அ.இ.அ.தி.மு.கழகத்துடன் இணைந்து செயலாற்றுவதுதான் ஏற்றதாக இருக்கும் என்று வாதாடினார்கள்.

இறுதியில் பெரும்பாலானோர் கருத்துக்கு இணங்க, ம.தி.மு. கழகத்தை, அ.இ.அ.தி.மு.கழகத்தோடு இணைப்பது என்ற முடிவு, பொதுக்குழுவில் மேற்கொள்ளப்பட்டது.

1977 செப்டம்பர் 18 ஆம் நாள் அ.இ.அ.தி.மு.கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற இருப்பதால், அப்பொழுது இணைப்பு நிகழ்ச்சியை வைத்துக் கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

## பெரியார் சிலை திறப்பு விழா

1977 செப்டம்பர் 17 ஆம் நாள் பெரியார் அவர்களின் பிறந்தநாள் விழாவை ஒட்டி, அவரது முழு திருஉருவச் சிலையைச் சென்னை அண்ணா மேம்பாலத்திற்கு அருகில் நிறுவ, அ.இ.அ.தி.மு.கழகம் முடிவு செய்திருந்தது.

சிலை திறப்பு விழாவிற்கான ஏற்பாடுகள் அ.இ.அ.தி.மு. கழகத்தின் சார்பாக மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டன. விழாக் கூட்டத்திற்கு முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமை தாங்கினார். பெரியார் சிலையை மத்திய அமைச்சர் ஜகஜீவன்ராம் அவர்கள் திறந்து வைத்தார். தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் பலர் விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

*புரட்சித்தலைவர் அவர்களின் அன்பான அழைப்பினை ஏற்று, நானும் அந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினேன்.*

*நான் பேசும்போது குறிப்பிட்ட கருத்துக்களின் சுருக்கம் வருமாறு:-*

''பெரியார் அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் ஒப்பும் உயர்வும் அற்ற, ஈடும் எடுப்பும் இல்லாத ஒரு பெருந் தலைவராகத் திகழ்ந்தவர் ஆவார். அவர் தமிழகத்தில் பகுத்தறிவு இயக்கத் தந்தை எனப் போற்றப்படுபவர். அவர் நாட்டு விடுதலைக்காகவும், சமுதாய உரிமைகளுக்காகவும் பாடுபட்டு வந்த மாபெரும் வீரர் ஆவார். அவர் வேண்டத் தகாத குருட்டு நம்பிக்கைகளையும், மூடப்பழக்க வழக்கங் களையும் கடுமையாகச் சாடியவர். அவர் சமூகச் சீர்திருத்தப் பணிகளில் ஓயாமல் ஈடுபட்டு வந்தவர்.

பெரியார் அவர்கள் எப்பொழுதும் உண்மைக்குப் பரிந்து பேசினார்; கொள்கையில் கோணல் ஏற்படாமல் நடந்து கொண்டார்; கள்ளங்கபடமில்லாமல் பொதுப் பணி ஆற்றி வந்தவர்; எத்தகைய எதிர்ப்புக்கள் எங்கிருந்து வந்தாலும் அவற்றையெல்லாம் துணிவோடு எதிர்கொண்டு நின்றவர்; எதற்கும் துணிந்த துணிச்சல்காரர்; உறுதியான உள்ளம் படைத்தவர்; உரிமைப் போராட்டங்கள் பலவற்றில் கலந்து கொண்டவர்; பலமுறைகள் சிறைத் தண்டனை ஏற்றவர்; பெண்ணடிமை தீரப் போராடியவர்; தீண்டாமையை எதிர்த்து அறப்போர்கள் பல நிகழ்த்தியவர்; தமிழக மக்களின் தன்னேரில்லாத் தலைவராகத் திகழ்ந்தவர்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தூய தாடி அவர் மார்பிலே விழுந்து கிடக்கும். அவர்

தொண்டுகள் செய்து பழுத்த பழமாய் விளங்கினார். அவரது மண்டைச் சுரப்பை உலகமெலாம் தொழுதது; அவரது மனக்குகையிலே சிறுத்தை எழுந்தது.

அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிடும் போது, ''நான் என் வாழ்நாளில் கண்டதும் ஒரே தலைவர், நான் கொண்டதும் ஒரே தலைவர்; அவர்தான் பெரியார்!'' என்று கூறினார்.

பெரியார் அவர்கள், 'திராவிடச் சமுதாயத்தைத் திருத்தி, இந்த மக்களை மானமும், அறிவும் உள்ள மக்களாக ஆக்குவது தான், என்னுடைய ஒரே பணி' என்று தம்முடைய குறிக் கோளைத் தெள்ளத்தெளிவாகப் புலப்படுத்தினார்.

பெரியார் அவர்கள் கற்பனைக்கடவுள், மதம், சாதி, புராணம், இதிகாசம், வேதம், புரோகிதம், குருட்டு நம்பிக்கை, மூடப்பழக்க வழக்கம் ஆகியவற்றை மிகக் கடுமையாக எதிர்த்து வந்தார். ஆன்மிகவாதிகளின் மனம் புண்படுமோ என்பதைப் பற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல் கற்பனைக் கடவுள் கொள்கையைச் சாடினார். ''கடவுள் இல்லை! கடவுள் இல்லை! கடவுள் இல்லவே இல்லை! கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்! கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி' என்பது அவர் வலியுறுத்தி வந்த கொள்கை.

பெரியார் வலியுறுத்தி வந்த கொள்கைகளாவன: மனிதன் மனிதத்தன்மையோடும், மனிதப் பாங்கோடும் வாழ வேண்டும், தெய்வீகத்தன்மை என்று ஒன்று இல்லை. கடவுளைப்பற்றிய கற்பனைக் கதைகள் ஒழியவேண்டும்; மனிதனின் அறிவுக்கு ஒத்துவராத கற்பனைக் கடவுளை மறக்கவேண்டும்; கண்ணுக்குத் தெரிந்த மனிதனைப் பற்றி மட்டுமே நினைக்க வேண்டும்; சமுதாய வாழ்க்கையில் ஒழுக்கந்தான் வேண்டும்; பக்திவேண்டாம். கர்மா, விதிபோன்றவற்றை நம்பி மதியை இழக்கக்கூடாது; சாதி - சமயம் பற்றிய அறிகுறிகள், அடையாளங்கள் போன்ற

அனைத்தும் அகற்றப்படவேண்டும்; தீண்டாமை எல்லா நிலைகளிலும் ஒழிக்கப்பட வேண்டும்; பெண்ணடிமை அடியோடு நீக்கப்படவேண்டும்; ஆண்களும், பெண்களும் எல்லாவகையிலும் சமமாகக் கருதப்படவேண்டும்; எங்கும் தமிழ்-எதிலும் தமிழ்-என்றும் தமிழ் - எப்படியும் தமிழ் என்ற நிலை ஏற்படவேண்டும்; இந்தித் திணிப்பு அடியோடு எதிர்க்கப்படவேண்டும்; பகுத்தறிவு நெறிதான் மனித சமுதாயத்திற்குப் பலன் தரும் பண்பட்ட நெறியாகும். தன்மானமும், பகுத்தறிவுந்தான் மனிதனுக்கு மேன்மை தரும்'' என்பன போன்ற கருத்துக்கள் பெரியார் கூறிவந்தவை களாகும். இவ்வாறு பகுத்தறிவு நெறிக் கருத்துக்களை, அறுபது ஆண்டு காலத்திற்கு மேலாக நாட்டில் பரப்பி வந்த பெரியாரின் திருவுருவச் சிலையை அ.இ.அ.தி.மு.கழகத்தின் சார்பாக நிறுவியுள்ள புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை, நான் பெரிதும் வாழ்த்தி வரவேற்றுப் பாராட்டு கிறேன். பெரியாரின் புகழ் வாழ்க! அவரின் இயக்கம் வளர்க! அவர்தம் கருத்துக்கள் வெல்க!''

*பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் கூடி மகிழப் பெரியாரின் சிலை திறப்பு விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது.*

❁ ❁ ❁

# 14

## அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம்

*1977 செம்டம்பர் 18 ஆம் நாளன்று, சென்னை 'சத்தியா திரைப்படம் எடுக்கும் அரங்கில்' அ.இ.அ.தி.மு.கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் கூட்டப்பெற்றது. அந்தப் பொதுக் குழுக் கூட்டத்தில் வந்து இணையுமாறு, ம.தி.மு.கழகத் திற்குப் புரட்சித்தலைவர் அவர்கள் சிறப்பு அழைப்பு விடுத்திருந்தார்.*

*அ.இ.அ.தி.மு.கழகத்தோடு ம.தி.மு.கழகத்தை இணைக் கலாம் என்று நாங்கள் ம.தி.மு கழகத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் முடிவு எடுத்திருந்ததால், நாங்கள் புரட்சித் தலைவரின் அன்பு அழைப்பை ஏற்று, அ.இ.அ.தி.மு.க.வின் பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, அதனோடு ம.தி.மு. கழகத்தை இணைப்பது என்று தீர்மானித்தோம்.*

*ம.தி.மு.கழகத்தைச் சேர்ந்த முன்னணித் தலைவர்களும், முக்கியப் பொறுப்பாளர்களுமாகிய நாங்கள் 360க்கு மேற்பட்டவர்கள், ஒன்று சேர்ந்து ஊர்வலமாக 18.9.77 அன்று காலை 11மணி அளவில், சத்தியா அரங்கத்திற்குச் சென்றோம். புரட்சித்தலைவரும், அ.இ.அ.தி.மு. கழகப் பொதுக்குழு உறுப்பினர்களும் எங்களைப் பெருமகிழ்ச்சி*

யுடன் வரவேற்றார்கள். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எனக்குப் பொன்னாடை போர்த்தி வரவேற்றார்கள். நான் அவருக்குப் பெரியதொரு மலர்மாலை அணிவித்து மகிழ்ந்தேன்.

புரட்சித்தலைவர் அவர்கள் என்னை மேடைக்கு அழைத்துச் சென்று, மேடையில் அவருக்கு அருகில் என்னை அமரச் செய்தார்கள். ம.தி.மு.க.வின் பொறுப்பாளர்கள் அனைவரும் பொதுக்குழு உறுப்பினர்களோடு கலந்து உட்கார்ந்தார்கள்.

பின்னர், என்னையும், ம.தி.மு.கழகத்தினரையும் மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்று நாஞ்சில் மனோகரன், இராகவானந்தம், திருப்பூர் மணிமாறன் ஆகியோர் பேசினார்கள். இறுதியாகப் புரட்சித்தலைவர் அவர்கள் என்னைப் பலபடப் பாராட்டியதோடு, எங்களையெல்லாம் மனநிறைவோடு வரவேற்றுப் பேசினார்.

வரவேற்புக்கு ஏற்புரை வழங்கும் முறையில், நான் பேசினேன். நான் பேசிய கருத்துக்களின் சுருக்கம் வருமாறு:

> "இன்றுமுதல் மக்கள் திராவிட முன்னேற்றக்கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு முழுக்க முழுக்க ஒன்றாக இணைகிறது என்பதைப் பூரிப்போடும், பெருமையோடும் கூறிக்கொள்கிறேன். இனி இரு கழகத்தினரும் ஒரே கழகமாக, அதாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாகப் பணியாற்றுவோம் என்பதைப் பெருமித உணர்வோடு சொல்லிக் கொள்கிறேன்.
>
> நான் நீதிக்கட்சியிலும், திராவிடர் கழகத்திலும், திராவிட முன்னேற்றக்கழகத்திலும், மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலும் பொறுப்புக்கள் பலவற்றை ஏந்திப் பணியாற்றி

வந்தவன். திராவிட இயக்கத்தின் வழிவந்த அ.இ.அ.தி.மு. கழகத்தில் என்னையும், என்னுடைய நெருங்கிய நண்பர் களையும் இணைத்துக்கொண்டு அரசியல் பணி ஆற்ற வாய்ப்பு ஏற்பட்டிருப்பதை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

புரட்சித்தலைவரும், நானும் திராவிட முன்னேற்றக் கழகத்தில், அறிஞர் அண்ணாவின் சீரிய தலைமையின்கீழ் பணியாற்றி வந்தவர்கள் தாம். இடையில் நாங்கள் பிரிந்து நின்று அரசியல் நடத்தி வந்தாலும், மீண்டும் ஒன்று சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பது குறித்து நான் கழிபேருவகை கொள்கிறேன். 'பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? என்பது கம்பனுடைய வாக்கு.

பாலில் சர்க்கரை சேர்வது போல, மோரில் உப்பு சேர்வதைப் போல, அ.இ.அ.தி.மு.கழகத்தோடு, ம.தி.மு.கழகம் இப்பொழுது சேர்ந்துள்ளது. பாலில் சர்க்கரை கரைந்து இருப்பதும், மோரில் உப்பு கலந்திருப்பதும் கண்ணுக்குத் தெரியா; ஆனால் அவற்றைச் சுவைக்கும் போது சர்க்கரை இருப்பதும், உப்பு இருப்பதும் உணரப்படும். அதுபோல, அ.இ. அ.தி.மு.கழகத்தோடு, ம.தி.மு.கழகம் சேர்ந்திருப்பது, கண்ணுக்குத் தெரியாது, ஆனால், செயற்பாட்டின்போது இணைந்திருக்கும் தன்மை உணரப்படும்

புரட்சித்தலைவர் அவர்கள் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களாலும், பேரறிஞர் அண்ணா அவர்களாலும் பெரிதும் மதிக்கப்பட்டவர். அறிஞர் அண்ணா அவர்கள் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டிப் பேசும்போது, அவர் தம்முடைய அருமருந்தன்ன நண்பர் என்றும், தம்முடைய இதயத்தில் எடுத்து வைத்துக்கொள்ளப்பட்ட அருங்கனி என்றும், அவர் உழைப்பின் பலனை நல்ல பல நற்பணி களுக்குச் செலவிட்டு வருபவர் என்றும், அவருடைய

இதயம் எப்பொழுதும் அன்பு காட்டும் தன்மையது என்றும், அவர் எந்தத் துறையை மேற்கொண்டாலும் அதில் வெற்றி பெறுவார் என்றும், அவர் அரசியலில் பொறுப்பேற்றால் அதில் தன்னுடைய தனி முத்திரையைப் பதிப்பார் என்றும், அவர் கலைஞர்களுக்கெல்லாம் ஒரு சீரிய வழிகாட்டி என்றும், அவருடைய உள்ளம் மிகப்பெரியது என்றும், அவருடைய குணம் தங்கம் போன்றது என்றும், அவர் கழகத்தின் கண்மணியாகவும், கலை உலகத்தின் நன்மணி யாகவும் திகழ்ந்து வருகிறார் என்றும் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

இப்படிப்பட்ட சிறப்புகளுக்கெல்லாம் உரிய புரட்சித் தலைவர் அவர்கள் கழகத்திற்கும், ஆட்சிக்கும் தலைமை தாங்கி எல்லோருடைய அன்பையும், ஆதரவையும், நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்று விளங்கி வருகிறார். அவரோடு இணைந்து பணியாற்றுவது என்பது எனக்குப் பேரின்பம் தருவதாகும்.

ம.தி.மு.கழகத் தலைவர்களை ஏற்று ஆதரித்து, அரவணைத்துக் கொண்டிருக்கும் புரட்சித்தலைவர் அவர்களுக்கும், ஏனைய நண்பர்களுக்கும் எனது உளங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியாரின் கொள்கைகள் பரவ - பேரறிஞர் அண்ணாவின் கருத்துக்கள் வெற்றிபெற நானும், ஏனைய என் நண்பர் களும் புரட்சித்தலைவரோடு இணைந்திருந்து அரும்பாடு படுவோம் என்று உறுதி கூறுகிறேன். வாழ்க புரட்சித் தலைவர்! வாழ்க அ.இ. அ.தி.மு.கழகம்!"

*அன்று நடைபெற்ற பொதுக்குழுக்கூட்டத்திலேயே புரட்சித்தலைவர் அவர்கள் முன்மொழிய, நாஞ்சில் மனோகரன், கே.ஏ. கிருட்டிணசாமி ஆகியோர்*

வழிமொழிய நான் அ.இ.அ.தி.மு.கழகத்தின் அவைத் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். கழகத்தின் அவைத் தலைவராக நான் தேர்ந்தெடுக்கப் பட்டதற்கு நன்றி தெரிவித்து உரையாற்றினேன்.

முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு, புரட்சித்தலைவர் அவர்கள் நிறைவுரை ஆற்ற, பொதுக்குழுக் கூட்டம் நிறைவு எய்தியது.

## கொள்கை பரப்புப் பணிகளில் ஈடுபடுதல்

நான், அ.இ.அ.தி.மு.கழகத்தில் இணைந்ததற்குப்பிறகு, கழகத்தின் கொள்கை பரப்புப்பணிகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டேன்.

கழகத்தின் பல்வேறு அமைப்புக்களைச் சார்ந்த பொறுப் பாளர்களின் அழைப்பின் பேரில், தமிழகம் எங்கணும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, பல்வேறு நகரங்கள், பேரூர்கள், சிற்றூர்கள் ஆகியவற்றில் நடைபெற்ற பொதுக் கூட்டங்கள், கொடியேற்று நிகழ்ச்சிகள், ஆண்டுவிழாக்கள், படத்திறப்பு நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கலந்து கொண் டேன்.

ஆங்காங்குள்ள கழகப் பொறுப்பாளர்களும், செயல் வீரர்களும், மன்றமறவர்களும் கழக ஆதரவாளர்களும் பெருந்திரளினராக வருகை தந்து, என்னை மிக்க ஆரவாரத் தோடு வரவேற்று, மாலைகள், ஆடைகள் அணிவித்துப் பெருமைப்படுத்தினார்கள்.

நான் பொதுக்கூட்டங்களில் பேசும் போது, தி.மு.கழகத் திலிருந்து விலகவேண்டிய இன்றியமையாமை ஏன் ஏற்பட்டது என்பது பற்றியும், அறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட கழகம், கலைஞர் கருணாநிதியின் தலைமையின் கீழ் எப்படியெல்லாம்

சீரழிந்து, சிதைந்து வருகிறது என்பது பற்றியும், அறிஞர் அண்ணாவின் கொள்கைகளைக் காப்பாற்றப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், புதிய கழகத்தைத் தோற்று வித்து எப்படியெல்லாம் பாடுபட்டு வருகிறார் என்பது பற்றியும், அவர் ஏழை எளிய மக்களை மேம்பாடுறச் செய்ய எப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் தீட்டி, அவற்றை நிறைவேற்ற அரும்பாடுபட்டு வருகிறார் என்பது பற்றியும், விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறினேன்.

கழகத்தின் சார்பாக நடைபெற்ற நாளேடான 'அண்ணா' இதழில் அவ்வப்போது கட்டுரைகள் எழுதி, அரசியல் பிரச்சி னைகளுக்கு விளக்கந் தந்து வந்தேன். கழகத்தின் வளர்ச்சி குறித்து நான் மேற்கொண்ட ஆக்கப் பணிகளுக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் நல்ல ஊக்கம் அளித்து வந்தார்.

### மகன் மதிவாணன் திருமணம்

என்னுடைய ஒரே மகன் மதிவாணனின் திருமணம், 2.11.1977 அன்று, திருநெல்வேலியில் நடைபெற்றது. திருநெல்வேலி மேடைத்தளவாய் குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் எம்.டி.கே. குத்தாலிங்கம் அவர்களின் மகள் செல்வி சாந்தி என்ற கல்யாணி மணமகளாக அமைந்தார். அதனைச் சிறப்புற நடத்தித்தரவேண்டும் என்று, கழகப் பொதுச் செயலாளரும், முதல்வருமான புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை நானும், என்னுடைய துணைவியார் டாக்டர் விசாலாட்சி அவர்களும் கேட்டுக் கொண்டோம். புரட்சித் தலைவர் அவர்கள் எங்கள் வேண்டுகோளை மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்.

நெல்லைத்தளவாய் குடும்பம், விஜய நகரப் பேரரசின் கீழ், மதுரை மண்டலத்தை ஆண்ட நான்கு நாயக்கர் மன்னர்களுக்குத் தலைமை அமைச்சராகவும், படைத்

தலைவராகவும் விளங்கிய தளவாய் அரியநாத முதலியார் அவர்களின் வழிவழித் தலைமுறையாக வந்த குடும்ப மாகும்.

திருமணம் நெல்லையில், மேடைத்தளவாய் மாளிகை யின் முன்னர் போடப்பட்டிருந்த மாபெரும் பந்தலில் நடை பெற்றது. திருமணத்திற்கு உற்றார் உறவினர், கழகத் தோழர்கள், கழக ஆதரவாளர்கள், நண்பர்கள், பொதுமக்கள் என்ற முறையில், ஐயாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் வந்து கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள்.

அன்று காலை 10 மணி அளவில் புரட்சித்தலைவரும், கழக முன்னணித்தலைவர்களும், சென்னையிலிருந்து நெல்லை வந்து சேர்ந்தார்கள். திருமணத்திற்கு வருகை தந்திருந்த புரட்சித்தலைவரையும் ஏனையோரையும் வரவேற்று நான் பேசினேன்.

நான் பேசும்போது, புரட்சித்தலைவரின் வருகையால் திருமண நிகழ்ச்சி எவ்வாறெல்லாம் சீரும், சிறப்பும் பெற்றுப் பொலிவோடும், பெருமையோடும் நடைபெறு கிறது என்பது பற்றியும், புரட்சித்தலைவரின் அருமை பெருமைகள் பற்றியும், எங்களுடைய நேமத்தார் குடும்ப மும், தளவாய் குடும்பமும் எப்படி வழி வழித் தலைமுறை களாகச் சிறப்புற்று வளர்ந்து வந்துள்ளன என்பது பற்றியும், விரிவாக எடுத்துப் பேசினேன்.

பின்னர் புரட்சித்தலைவர் அவர்கள் திருமணத்தை நிறை வேற்றி வைத்து, மணமக்களை வாழ்த்தியும், என்னைப் பாராட்டியும் பேசினார்கள். கழகத்தின் முன்னணித் தலை வர்கள் பலரும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

திருமணம் கழகத்தின் மாபெரும் மாநாடுபோல் நடந்து முடிந்தது. புரட்சித்தலைவரைக் கண்டு மகிழ ஏராளமான

பொதுமக்கள், திருமணப் பந்தலைச் சுற்றிச் சூழ்ந்து நின்றிருந்தனர்! அவர்கள் எல்லோரும் வாழ்த்தொலி எழுப்பி, கையொலி செய்து, புரட்சித்தலைவரை வரவேற்றார்கள்.

## கழகப் பொதுச்செயலாளர் பொறுப்பை ஏற்றல்

தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், 1978ஆம் ஆண்டில் ஒன்றரைத் திங்கள் காலம், உலக நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, சப்பான், ஆங்காங், தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உள்ள முக்கிய நகரங்களுக்குச் சென்று வந்தார்.

அவர் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, அவருக்கு வழியனுப்பு விருந்து ஒன்று கழக முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த விருந்தில் பேசும் போது, புரட்சித்தலைவர் அவர்கள், யாரும் எதிர்பார்க்காத வகையில், "இன்று முதல் டாக்டர் நாவலர் அவர்கள் அ.இ. அ.தி.மு. கழகத்தின் தற்காலிகப் பொதுச் செயலாளராகப் பணியாற்றுவார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன்" என்று கூறிவிட்டு, என்னைப் பாராட்டும் வகையில் அவர் எனக்கு மலர் மாலை ஒன்றினைச் சூட்டினார்.

புரட்சித்தலைவர் அவர்கள் உலகச் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பும் வரையில், நான் தற்காலிகப் பொதுச்செயலாளராகப் பணியாற்றி வந்தேன். நான் கழகத் தலைமை நிலையச் செயற்பாடுகளைக் கண்காணித்து வந்ததோடு, கழகத்தின் செயற்பாடுகள் செம்மையுற நடைபெற முழுக் கவனம் செலுத்தி வந்தேன். கழக நடவடிக்கைகள் பற்றி, நான் அவ்வப்போது அவரோடு தொலைபேசியின் மூலம் தொடர்புகொண்டு முடிவுகள் எடுத்து, அவற்றை அவ்வப்போது நிறைவேற்றி வந்தேன்.

புரட்சித்தலைவர் அவர்கள் மேற்கொண்ட உலகச் சுற்றுப் பயணம் மிக வெற்றிகரமாக நடந்தேறியது. உலக நாடுகள் பலவற்றிலும் அமைந்திருந்த தமிழர் அமைப்புக்கள் பலவும் ஆங்காங்கு அவருக்குச் சிறப்பான முறையில் வரவேற்பு அளித்து, விருந்து வைத்து, பலவகைகளிலும் அவரைச் சிறப்பித்தன. ஆங்காங்கு நடைபெற்ற வரவேற்புக் கூட்டங் களில் அவர் சிறந்தமுறையில் உரையாற்றி எல்லோரையும் மகிழ்வித்தார்

அவர், ஒன்றரைத் திங்களில் சுற்றுப் பயணத்தை நிறை வேற்றிவிட்டுத் தாயகம் திரும்பினார். அவர் சென்னை விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது, நானும், கழக முன்னணியினரும், கழகச் செயல்வீரர்களும், பொதுமக்களும் பெருந்திரளினராகச் சென்று, அவருக்குப் பொன்னாடை போர்த்தி, மாலை சூட்டி வரவேற்றோம்.

பின்னர் சென்னை விமான நிலையத்திலிருந்து அவரும் நானும் திறந்த காரில் நின்றபடி, ஊர்வலமாக அண்ணா சிலை வரை சென்றோம். வழி நெடுகப் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் சாலையின் இருபக்கங்களிலும் நின்று, கையசைத்து, ஆரவாரித்து மகிழ்ச்சிகரமாக அவரை வரவேற்றனர்.

சென்னை, அண்ணா சாலையில் உள்ள அண்ணாசிலை அருகில் பெரியதொரு மேடை போடப்பட்டிருந்தது. நாலா பக்கங்களிலும் பல இலட்சக்கணக்கான மக்கள் குழுமி யிருந்தனர். புரட்சித்தலைவர் அவர்கள் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு, மேடை மீது ஏறி நின்று, நாலா பக்கமும் குழுமியிருந்த மக்களுக்கு தம் இரட்டை விரலைக்காட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்.

பின்னர் ஒலிபெருக்கியின் மூலம், குழுமியிருந்த மக்களுக்கு வணக்கத்தையும், வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்தார். உலக நாடுகளில் மேற்கொண்ட சுற்றுப் பயணம் எப்படியெல்லாம் வெற்றிகரமாக நடந்தேறியது என்ற விவரங்களைச் சுருக்கமாகச் சொன்னார். கழகத்திற்கும், கழக ஆட்சிக்கும் ஆதரவு நல்கிவரும் பொதுமக்கள் அனைவர்க்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

அ.இ.அ.தி.மு.கழகத்தை எல்லாவகைகளிலும் வளர்த்து, அதற்குப் பெருமையையும், புகழையும் சேர்க்க அனைவரும் பாடுபடவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். அதோடு, அவர் பேசும் போது, "இன்றுமுதல் டாக்டர் நாவலர் அவர்கள் கழகத்தின் முழு அதிகாரமும் பெற்ற பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றுவார்" என்று ஒரு அறிவிப்பையும் வெளியிட்டார். குழுமியிருந்த கழகத் தோழர்கள் அனைவரும் கையொலி செய்து அந்த முடிவை வரவேற்றார்கள்.

நான் அன்றுமுதல் முழு அதிகாரம் படைத்த கழகப் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றத் தொடங்கினேன்.

### கோவையில் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

1978 இல், புரட்சித்தலைவர் உலகச் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு வந்து சேர்ந்த ஒரு திங்களுக்குப் பிறகு, கோவையில் அ.இ.அ.தி.மு.கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் கூட்டப்பெற்றது. அதற்குப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆயிரத்தைந்நூற்றுக்கு மேற்பட்டவர்கள் வருகை தந்திருந்தனர். பொதுக்குழுக் கூட்டத்திற்குப் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. ஒரு தீர்மானத்தின் மூலம், புரட்சித்தலைவரால் கழகப் பொதுச் செயலாளராக நான் அறிவிக்கப்பட்டதைக் கழகப் பொதுக்குழு ஒருமனதாக ஏற்றுக்கொண்டது.

பொதுச்செயலாளர் என்ற முறையில் நான் பேசும்போது, பொதுச் செயலாளராக என்னைத் தேர்ந்தெடுத்த புரட்சித் தலைவர் அவர்களுக்கும் ஏனைய பொதுக்குழு உறுப் பினர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியை உவகைப் பெருக்கோடு தெரிவித்துக்கொண்டேன். கழக அமைப்பு முறையில் செய்யப்படவேண்டிய சில சீர்திருத்தங்கள் பற்றியும், கழகப் பிரச்சாரத்தை முடுக்கிவிட வேண்டியதன் இன்றியமையாமை பற்றியும், புதியபுதிய கிளைகளையும், சார்பு மன்றங்களையும் உருவாக்கவேண்டிய தன்மையைப் பற்றியும் நான் விரிவாக எடுத்துக்கூறினேன்.

இறுதியாகப் புரட்சித்தலைவர் அவர்கள் நிறைவுரை ஆற்றினார். அப்பொழுது அவர் பேசும்போது, குறிப்பிட்ட தாவது:-

> "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளராக டாக்டர் நாவலரை நான் தேர்ந் தெடுத்த செயலை, இந்தப் பொதுக்குழுக் கூட்டம், ஒரே மனதாக ஏற்றுத் தீர்மானம் நிறைவேற்றி இருப்பதைக் கண்டு, நான் மிக்க மகிழ்ச்சி அடைவதோடு, பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவர்க்கும் என் உளமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.
>
> கழகத்தின் பொதுச்செயலாளராக ஆவதற்கான முழுத் தகுதியையும், திறமையையும் பெற்றவர் டாக்டர் நாவலர் என்பதை, நான் கண்டுபிடித்துவிடவில்லை. அவரை உள்ளபடியே பொதுச்செயலாளர் என்று அறிவித்தவரும்,

ஆக்கியவரும் அறிஞர் அண்ணா அவர்களே ஆவார். பொதுச் செயலாளர் ஆவதற்குரிய தகுதியும், திறமையும் டாக்டர் நாவலரிடத்திலே உண்டு என்பதைக் கண்டறிந்து அதனை உலகுக்கு உணர்த்தியவர் அறிஞர் அண்ணா அவர்கள். அவர் காட்டிய வழியைப் பின்பற்றியே இன்று நானும், நீங்களும் நடந்து கொள்கிறோம்.

டாக்டர் நாவலர் அவர்கள், அறிஞர் அண்ணா உருவாக்கிய கழகத்தில் முன்னணித் தலைவர்களில் முக்கியமான ஒருவராக இருந்து பாடுபட்டு வந்த நேரத்தில், நான் அண்ணாவின் கழகத்தில் ஒரு சாதாரணத் தொண்டனாகச் சேர்ந்து, கடமையாற்றும் ஒருவனாகவே பணிபுரிந்து வந்தேன். அறிஞர் அண்ணா அவர்களின் அரிய அறிவுரை களையும், டாக்டர் நாவலர் அவர்களின் ஆழம் மிக்க கருத்துரைகளையும், நான் அடிக்கடி கேட்டுத்தான், இன்று இப்படிப்பட்ட அரசியல் நிலைக்கு ஆளாகி இருக்கிறேன்.

டாக்டர் நாவலர் அவர்களின் சிந்தனையறிவுத் திறன், செயலாற்றல் திறன், சிறந்த பண்பாடு, எளிமையான போக்கு, அன்போடுகூடிய அடக்கம், ஆரவாரமற்ற அமைதி, குழு அமைக்காத கொள்கை, கொள்கைப்பற்று, உயர்ந்த குறிக்கோள், விடாமுயற்சி, பேரூக்கம், கடமை ஆர்வம், கண்ணியமான பேச்சு போன்றவை என் உள்ளத்தை அந்த நாளிலிருந்து பெரிதும் கவர்ந்தவையாகும்.

நான் மதிப்பும், மரியாதையும் செலுத்தக் கூடிய தகுதி வாய்ந்த தலைவர்களில் நாவலர் அவர்கள் முக்கியமான ஒருவர் ஆவார். அப்படிப்பட்ட நாவலரின் கீழ், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிநடை போட்டுப் பொலிவோடு விளங்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!!''

## கோவை மாணவர் கழக மாநாடு

*1978 ஆம் ஆண்டு, கோவையில், அ.இ.அ.தி.மு. கழகத்தைச் சார்ந்த மாணவர் கழகத்தின் மாநில மாநாடு நடைபெற்றது. தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கழக மாணவர்கள் பெருந்திரளாக வந்து மாநாட்டில் கலந்து கொண்டார்கள். மாநாடு இரண்டு நாட்கள் நடைபெற்றது.*

*கழக மாணவர்களும், கழகத்தின் முன்னணிப் பேச்சாளர் களும் மாநாட்டில் உரை நிகழ்த்தினார்கள். இறுதியில் புரட்சித் தலைவர் அவர்களும், நானும் சிறப்புச் சொற் பொழிவுகள் ஆற்றினோம்.*

*நான் பேசும்போது குறிப்பிட்டதாவது:-*

அ.இ.அ.தி.மு.கழகத்தின் கொள்கை - குறிக்கோள் - கோட்பாடு ஆகியவற்றில் நீங்காப்பற்றும், தணியா ஆர்வமும் கொண்டுள்ள மாணவ நண்பர்கள் இந்த மாநாட்டில் பெருந் திரளாகக் குழுமியிருக்கும் காட்சியைக் காண, நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

வயலில் பயிர்களைச் செழுமையாக வளர்க்க நாற்றங்கால் எப்படி அடிப்படையாகப் பயன்படுகிறதோ, அப்படியே அ.இ.அ.தி.மு.கழகத்தில் சிறந்த அறிவாற்றல் மிக்க தலைவர்களை உருவாக்க, மாணவர் கழகம் அடிப்படை யாகப் பெரிதும் பயன்படுகிறது.

மாணவர்கள் கழகப்பற்றோடு, தாங்கள் பெறும் கல்வியின் மூலம், எல்லாத் துறைகளிலும் சிறப்புற்று விளங்குவதற்கு ஏற்ற முறையில், அறிவுத்திறனையும், ஆற்றல் திறனையும் பெரிதும் வளர்த்துக் கொள்ள வேண்டும். எல்லாத் துறை களிலும் கழகத்திற்கு வழிகாட்டியாக இருந்து, அதனை எதிர்காலத்தில் வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்கு ஏற்ற வல்லுநர்களாய் மாணவர்கள் திகழவேண்டும்.

பெரியார் வகுத்துத்தந்த பகுத்தறிவு நெறி, அண்ணா வற்புறுத்தி வந்த சனநாயக நெறி, புரட்சித்தலைவர் வலியுறுத்தி வரும் பண்பாட்டு நெறி ஆகியவற்றை வளர்க்க மாணவர்கள் தங்கள் திறமைகளை எல்லாவகையிலும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொருவிதமான சிறந்த திறமை இருக்கும். சிலரிடத்தில் பேச்சுத் திறமை காணப்படும்; வேறு சிலரிடம் எழுத்துத் திறமை தென்படும்; மற்றும் சிலரிடம் கலைத் திறமை திகழும். இயல் - இசை - கூத்து, நாடகம் - ஓவியம் - சிற்பம் - விளையாட்டுப் போன்றவற்றில் சிலர்க்குத் தனித்திறமைகள் இருக்கும். அப்படிப்பட்ட திறமைகள் மூலம், மாணவர்கள், கழகக் கருத்துக்களைப் பரப்ப, கழகத்திற்குப் பெருமை சேர்க்க, புகழை ஏற்படுத்த முயலவேண்டும்

கழக மாணவர்கள் கல்வியறிவில், செயலாற்றலில், பண்பாட்டில், ஒழுக்கத்தில் மிகச் சிறந்து விளங்குகிறார்கள் என்று மற்றவர்கள் பாராட்டும் விதத்தில் தங்களைத் தாங்களே வளர்த்துக் கொள்ளவேண்டும்.

எதிர்காலத்தில் அரசியல் கட்சியைச் சிறப்பாக நடத்திச் செல்லும் திறனையும், ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தும் திறனையும் நல்லமுறையில் மாணவர்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

அறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய கழகத்திற்கு மாணவர் கழகம் உறுதுணையாக அமைந்திருந்தது என்பதை யாரும் மறப்பதற்கில்லை. அந்த நிலை இப்பொழுதும் நீடிக்க வேண்டும்.

பள்ளிகள் தோறும், கல்லூரிகள் தோறும் கழக மாணவர் அமைப்புக்களை ஏற்படுத்த, இங்குக் குழுமியுள்ள

மாணவர்கள் பெருமுயற்சி எடுக்க வேண்டும். மாணவர் கழகம் வலிவு பெற்று வாழ, வளர, வெல்ல என் உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்!''

## பெரியார் நூற்றாண்டு விழா

*பகுத்தறிவு இயக்கத் தந்தையும், சுமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தவரும், தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடியும், நீதிக் கட்சியின் தலைவரும், திராவிடர் கழகத்தின் தலைவருமான பெரியார் இராமசாமி அவர்களின் நூற்றாண்டு விழா, 1978 செப்டம்பர் 17 முதல் 1979 செப்டம்பர் 17 வரை, ஓராண்டு காலம் தமிழக அரசால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.*

*தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால், நான் 'பெரியார் நூற்றாண்டு விழா அமைப்புக் குழுவின்' தலைவராக நியமிக்கப்பட்டேன். நான் தமிழக அரசுப்பொறுப்பு ஏதோன்றையும் ஏற்றிராத அந்நிலையில், தமிழக அரசின் சார்பாக பெரியாரின் நூற்றாண்டு விழாவை ஓராண்டு காலத்திற்கு நடத்தும் பொறுப்பை என்னிடத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் ஒப்படைத்தார்.*

*என் தலைமையில் அமைந்த நூற்றாண்டுவிழா அமைப்புக்குழுவில், டாக்டர் சிட்டிபாபு, சுந்தர வடிவேலு, எம் இராச கோபால், திருவாரூர் தங்கராசு, டார்பிடோ சனார்த்தனம், இரண்டு ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். அமைச்சர் பதவிக்கு ஈடான அதிகாரம் எனக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.*

*பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஓராண்டு கொண்டாடுவதற்குரிய செயல்திட்டங்களை, அரசின் செய்தித் துறை, வருவாய்த் துறை, காவல் துறை, பொதுப்*

பணித்துறை, தமிழ் வளர்ச்சித் துறை, கல்வித் துறை, கலைத் துறை போன்றவற்றின் முழு ஒத்துழைப்போடு தீட்டினேன்.

அந்த ஓராண்டு காலத்தில் மாவட்டந்தோறும், எல்லா மாவட்டங்களிலும் இரண்டு நாள் விழாவாக நூற்றாண்டு விழாவை நடத்துவது என்றும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாணவர் அணிவகுப்புகள் - பொது மக்கள் அணி வகுப்புக்கள் - பெரியார் வாழ்க்கை வரலாற்றைக் காட்டும் அலங்கார வண்டிகள் -ஆடல்பாடல் நிறைந்த கலை நிகழ்ச்சிகள்-இன்னிசை வாத்தியக் குழுக்கள் ஆகியவை அடங்கிய ஊர்வலத்தை நடத்துவது என்றும், பெரியார் வாழ்க்கை வரலாற்றை உணர்த்தும் கண்காட்சியை நிறுவுவது என்றும், இன்னிசை அரங்குகள் - நாடக அரங்குகள் ஆகியவற்றை நடத்துவது என்றும், கருத் தரங்கம்-கவியரங்கம்-பட்டிமன்றம் சிறப்புச் சொற் பொழிவுகள் போன்றவற்றை நடத்துவது என்றும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

பெரியார் நூற்றாண்டு விழாவின் தொடக்க விழா மாநாடு, அவர் பிறந்த ஈரோட்டில் நடத்தப்பட்டது. பின்னர் திருச்சி - மதுரை - நெல்லை - நாகர்கோவில் - இராமநாதபுரம்- புதுக்கோட்டை - தஞ்சை- கடலூர் - கோவை - சேலம் - தருமபுரி - வேலூர் - காஞ்சிபுரம் - விருதுநகர் - திண்டுக்கல் போன்ற இடங்களில் இரண்டு நாள் விழா மாநாடுகள் நடத்தப்பட்டன. இறுதியாகச் சென்னையில் நூற்றாண்டு இறுதி விழா மிகப்பெரிய அளவில், மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாநாடுகளில் மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள், அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த தலைவர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், புலவர்கள், பகுத்தறிவு இயக்கத் தலைவர்கள் போன்ற

பலதரப்பினரும் கலந்து கொண்டு சிறப்புச் சொற் பொழிவுகள் ஆற்றினர்.

ஒவ்வொரு மாநாட்டிலும் நான் வரவேற்புரை நிகழ்த் தினேன். தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாநாடுகளில் நிறைவுரை ஆற்றினார்.

ஊர்வலம், கண்காட்சி, கருத்தரங்குகள், சிறப்புரைகள், கலை நிகழ்ச்சிகள் ஆகிய எல்லாமே பொதுமக்களின் கவனத்தைப் பெரிதும் கவருவனவாக அமைந்திருந்தன.

பெரியார் பெயரால் மாவட்டம் அமைப்பது, பெரியார் அறிவியல் ஆய்வுக் கூடத்தை நிறுவுவது, பெரியார் சிலை களை முக்கிய நகரங்களில் நிறுவுவது, எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் பெரியாரின் பொன் மொழிகள் பொறிக்கப்பட்ட கருங்கற்றூண்களை நிறுவுவது, சென்னை யில் பூந்தமல்லி நெடுஞ் சாலையைப் 'பெரியார் சாலை' என்று பெயர் மாற்றம் செய்வது, சென்னை வீட்டு வசதி வாரியப் பல்லடுக்கு மாளிகைக்கு 'பெரியார் மாளிகை' என்று பெயரிடுவது, பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்திருத் தத்தை அரசாணைமூலம் நடைமுறைப்படுத்துவது, பெரி யாரின் கொள்கைக்கு இணங்கத் தெரு, நெடுஞ்சாலை, ஊர், நகர், குடியிருப்புப் பகுதிகள் ஆகியவற்றிற்கு இடப் பட்டிருக்கும் பெயர்களில் உள்ள சாதிப் பெயர்களை அகற்றிவிடுவது, பெரியார் வாழ்க்கை வரலாற்றையும், அவருடைய பகுத்தறிவு அறிவுரைகளையும் பள்ளிப் பாடப் புத்தகங்களில் இடம் பெறச் செய்வது போன்ற பல தீர்மானங்கள் இறுதிவிழா மாநாட்டில் நிறைவேற்றப் பட்டன.

பெரியாரின் கொள்கைகளைத் தம் வாழ்நாளில் தொடர்ந்து பரப்பிவந்த பெருந்தொண்டர்களுக்குக் கேடயங் களும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அப்பொழுது தமிழகத்தில் இருந்த பதினாறு மாவட்டங்களிலும், பெரியாரின் நூற்றாண்டு விழாவின் இரண்டு நாள் மாநாடுகள் மிகச் சிறப்பாகவும், செம்மையாகவும் நடந்தேறின. எல்லா மாநாடுகளிலும் முதல்வர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், அனைத்துக் கட்சித்தலைவர்களும், சான்றோர்களும், புலவர் பெருமக்களும், கவிஞர்களும், கலைஞர்களும் கலந்து கொண்டனர்.

மாநாடுகளில் நான் உரையாற்றும்போது பொதுவாகக் குறிப்பிட்ட கருத்துக்களின் சுருக்கம் வருமாறு:-

"பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தமிழகம் எங்கணும், ஆண்டு முழுவதும் கொண்டாடுவதில், நாம் பூரிப்பும், பெருமையும் கொள்கிறோம்.

அவர் இருபதாம் நூற்றாண்டின் ஈடும் எடுப்பும் அற்ற ஒரு பெருந்தலைவராய்த் திகழ்ந்தார். அவர் வீழ்ச்சியுற்றுக் கிடந்த தமிழகத்திற்கு எழுச்சி தந்து, விசை ஒடிந்து கிடந்த உள்ளங்களுக்கெல்லாம் வலிமை ஊட்டினார். அவர் தமிழகத்தில் மண்டிக் கிடந்த சூது - சூழ்ச்சி - பொய் - புனை சுருட்டு - கற்பனைக் கடவுள் - கற்பனைக் கதைகள் - மூடப் பழக்க வழக்கம் - குருட்டு நம்பிக்கை ஆகியவற்றை யெல்லாம் தொகையாக எதிர் நிறுத்தித் தூள் தூளாக ஆக்கிக் காட்டியவர்.

அவர் 1925 ஆம் ஆண்டில், சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்து அதன்மூலம் பகுத்தறிவு நெறிக் கருத்துக்களையும், சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களையும், எதிர் நீச்சல் போட்டு, நாட்டில் பரப்பி வந்தவராவார். அவர் உரிமைப் போர்கள் பலவற்றையும் நடத்திப், பல முறைகள், பல்லாண்டுகள் சிறைக்கோட்டம் புகுந்தவர்.

பெரியாரைப் பற்றிப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் குறிப்பிடும் போது, தொண்டு செய்து பழுத்த பழம்! தூய

தாடி மார்பில் விழும்! மண்டைச் சுரப்பை உலகு தொழும்! மனக் குகையில் சிறுத்தை எழும்!' என்றும், 'வயதினில் அறிவினில் பெரியார்! வாய்மைப் போருக்கு என்றும் இளையார்! அவர்தான் பெரியார்' என்றும் சிறப்பித்துச் சொன்னார்.

கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடும்போது, "ஊன்றி வரும் தடிசற்று நடுங்கக்கூடும்! உள்ளத்தின் வித்தினிலே நடுக்கமில்லை! தோன்ற வரும் வடிவினிலே நடுக்கந் தோன்றும்! துவளாத கொள்கையிலே நடுக்கமில்லை! வான்றவழும் வெண் மேகத்தாடி ஆடும்! வளமான சிந்தனைக்கோர் ஆட்டமில்லை! ஆன்றவிந்த பெரி யோர்க்கும் பெரியார்! எங்கள் அய்யாவுக்கு இணை அவரே! மற்றோர் இல்லை" என்று புகழ்ந்துபாடினார்.

பெரியார் அவர்கள், தமிழ்ச் சமுதாயம் மானமுடை யதாகவும், அறிவுடையதாகவும் அமையப் பாடுபடுவதே தம் வாழ்க்கையின் குறிக்கோள் என்று சொல்லி வந்தார்.

அவர் மக்கட் சமுதாயத்திற்குப் பற்பல நல்லுரைகளையும், அறிவுரைகளையும் வழங்கி வந்தார். சமுதாய வாழ்க்கையில் பக்தி என்பது அறவே வேண்டாம்; ஒழுக்கத்தான் முக்கியமாக வேண்டும். பக்தி என்பது தனிச் சொத்து; ஒழுக்கம் என்பது பொதுச் சொத்து. பக்தி இல்லாவிட்டால் சமுதாயத்திற்கு இழப்பு ஏதும் இல்லை; ஆனால் ஒழுக்கம் இல்லாவிட்டால் சமுதாயமே பாழ்பட்டுப் போய்விடும். பகுத்தறிவும், தன்மான உணர்வும் மட்டுமேதான் மனித வாழ்வை மேம்படுத்தும். கற்பனைக் கடவுளை மறக்கவேண்டும். உயிரோடு உலாவும் மனிதனைப் பற்றி மட்டும் நினைக்கவேண்டும். கர்மாவை நம்புபவன் ஒருநாளும் கடைத்தேற மாட்டான். எவரும் விதியை நம்பி மதியை இழக்கக் கூடாது. மனித அறிவினால் விளைந்த தீய விளைவுகள் அனைத்தையும் மனித அறிவினால் மட்டுமே அகற்ற முடியும். சீர்திருத்தம் என்பது

மனித சமுதாயத்தில் உள்ள தேவையற்றதையெல்லாம் நீக்கிவிட்டுத் தேவையானதை மட்டும் வைத்துக் கொள்ளுவதும், தோற்றுவித்துக் கொள்ளுவதுமேயாகும்.

அவர், ''கடவுள் இல்லை! கடவுள் இல்லை! கடவுள் இல்லவே இல்லை! கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்! கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்! கடவுளை வணங்குபவன் காட்டுமிராண்டி!'' என்ற கருத்தை எங்கும், எப்பொழுதும், எவரிடத்திலும் அழுத்தந்திருத்தமாக வற்புறுத்தி வந்தார்.

எந்தப் பொருளானாலும் அதனால் மனித சமுதாயத்திற்கு என்ன பயன்? எவ்வளவு பயன்? என்பதைப் பொறுத்துத்தான் அதற்கு மதிப்பும், மரியாதையும் தரப்பட வேண்டும் என்பதை அவர் எப்பொழுதும் வலியுறுத்தி வந்தார்.

எந்த ஒரு பொருளானாலும் அதைப் பற்றி ஏன்? எப்படி? எதற்கு? எங்கு? எப்போது? எவரால்? என்பன போன்ற கேள்விகள் மூலம் விளக்கம் பெற்றுச் சிந்தனை செய்து முடிவு காணவேண்டும் என்று அவர் கூறுவார்.

பெரியார் அவர்கள், தம் வாழ்நாளில், கற்பனைக் கடவுள் பற்றையும், மத நம்பிக்கையையும், மூடப் பழக்க வழக்கங் களையும், குருட்டு நம்பிக்கைகளையும், முழு மூச்சுடன் எதிர்த்து வந்ததால், அவர் அற்ப ஆயுளில் மறைந்து போய்விடுவார் என்று வைதிகர்களும், ஆன்மிகவாதிகளும் ஓயாமல் சாபமிட்டு வந்தனர். பெரியார் அவர்கள் விரைவில் மடியவேண்டும் என்பதற்காகவே, வைதிகப் பார்ப்பனர்கள், பல்வேறு இடங்களில் சத்துரு சங்கார யாகங்கள் நடத்தினார்கள்.

உள்ளபடியே பார்த்தால், ஆண்டவனின் அவதாரங்கள், தூதுவர்கள், ஆண்டவனுக்கு வேண்டியவர்கள், ஆண்ட வனின் அருள் பெற்றவர்கள் என்று சுட்டிக் காட்டப்பட்ட

பலரைக் காட்டிலும், பெரியார் அவர்கள் மிக அதிகமான ஆண்டுகள் உயிர் வாழ்ந்து வந்திருக்கிறார்.

ஆதிசங்கரர் 32 ஆண்டுகாலமும், இயேசுநாதர் 34 ஆண்டுகாலமும், விவேகாநந்தர் 39 ஆண்டுகாலமும், இராமானுசர் 41 ஆண்டுகாலமும், இராமகிருட்டிணர் 50 ஆண்டுகாலமும், முகம்மது நபி 51 ஆண்டு காலமும், இரமணரிஷி 60 ஆண்டுகாலமும், குருநானக் 70 ஆண்டுகாலமும் மட்டுமே வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஆனால் நாத்திகம் பேசி வந்த பெரியார் அவர்கள் 94 ஆண்டுகாலத்திற்கு மேலாகவே உயிர் வாழ்ந்துள்ளார்.

பெரியார் வற்புறுத்தி வந்த முக்கியமான சில கொள்கைகள்

1. கடவுள் என்பது அறிவற்ற காட்டு மிரண்டி கால மனிதரின் அச்சத்தாலும், ஆசையாலும் உருவாக்கப் பட்ட ஒரு கற்பனைக் கருத்தாகும்.

2. மனிதனால் கற்பனை செய்யப்பட்ட கடவுள் என்பது, எந்த ஒரு நிலையிலும், எந்த ஒரு தன்மையிலும் இல்லை; இல்லவே இல்லை.

3. கற்பனைக் கடவுளைப் படைத்தவனும், கடவுள் பற்றிய கதைகளையும், உருவங்களையும் உண்டாக் கியவனும் அறிவற்றவன் ஆவான்.

4. கற்பனைக் கடவுள் தத்துவத்தைப் பரப்பியவன் அயோக்கியன் ஆவான்.

5. கடவுளை வணங்குபவனும், வழிபடுப்வனும் நாகரிக மற்ற காட்டு மிராண்டி ஆவான்.

6. கடவுளைப் பற்றிப் பக்தர்கள் எழுதிய கதைகள் - காவியங்கள் - புராணங்கள் - இதிகாசங்கள் - சாத்திரங்கள் - சம்பிரதாயங்கள் - வேதங்கள் -

உபநிடதங்கள் போன்றவை முழுக்க முழுக்கக் கட்டுக் கதைகளே ஆகும்.

7. மனிதன் எதனையும் தன் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்து, உண்மை நிலைமையைக் கண்டறிந்து சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

8. மனிதன் எதையும் குருட்டுத்தனமாக அப்படியே நம்பிவிடக்கூடாது.

9. அறிவு ஆராய்ச்சிக்கு ஏற்றபடி ஒத்துவராத எதையும், மனிதன் ஒதுக்கித் தள்ளிவிடவேண்டும்.

10. பகுத்தறிவுக்கு ஒத்து வருவதை மட்டுமே மனிதன் ஏற்கவேண்டும்.

11. மனிதன் மூடப்பழக்க வழக்கத்திற்கு எக்காலத்திலும் மதிப்பு அளிக்கக்கூடாது; அதற்கு அடிமை ஆகிவிடக் கூடாது.

12. அறிவுக்கு ஏற்ற வகையில் பற்று இருக்க வேண்டு மேயல்லாமல், அறிவுக்கு ஒத்துவராத பக்தி எந்த மனிதனிடத்திலும் இருக்கக்கூடாது.

13. மனிதன் சாதி சமயப்பற்றற்றவனாக வளர வேண்டும்.

14. சாதி, சமயம் பற்றிய அடையாளங்கள் - அறிகுறிகள், விளம்பரங்கள், வேடிக்கைகள் போன்றவை அறவே அகற்றப்படவேண்டும்.

15. மனிதன் அறிவுக்கு - ஆற்றலுக்கு - பண்புக்கு - பாங்குக்கு - மானத்திற்கு - மரியாதைக்கு - ஒழுக்கத்திற்கு - உயர்வுக்கு - நீதிக்கு - நேர்மைக்கு - நாணயத்திற்கு - நலனுக்கு மதிப்புத் தரவேண்டும்.

16. தீண்டாமை எல்லாவகைகளிலும் எல்லா வழிகளிலும், எல்லா நிலைகளிலும் அறவே நீக்கப்படவேண்டும்.

17. பெண்ணடிமை எல்லாவகைகளிலும் அறவே நீக்கப்படவேண்டும்.

18. மனிதனுக்கு அறிவியல் சிந்தனையும், தொழில் நுட்பவியல் ஆற்றலும் எல்லா வகைகளிலும் வளர வேண்டும்.

19. பகுத்தறிவு நெறிதான் மனித வளர்ச்சிக்குப் பயன்படும் பண்பட்ட நெறியாகும்.

20. ஒவ்வொருவரும் கற்பனைக் கடவுளை மறக்க வேண்டும். காட்சிதரும் மனிதனை நினைக்க வேண்டும்.

இவைபோன்ற புரட்சிகரமான கருத்துக்களைப் பெரியார் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் அழுத்தந் திருத்தமாக வற்புறுத்தி வந்தார்.

அவர் 28 முறை உரிமைப் போராட்டங்களில் ஈடுபட்டுக் கைது செய்யப்பட்டுக் கடுந்தண்டனை அளிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

பெரியாரின் பெருந்தொண்டு தமிழ் வளர, தமிழ் மேம்பாடு எய்த, தமிழ்நாடு ஏற்றம் பெறப் பல வகைகளிலும் பயன்பட்டு வந்திருக்கிறது.

அப்படிப்பட்ட பெரியாரின் பெயரும், புகழும் பல்லாண்டு காலம், பலநூற்றாண்டு காலம் வாழ்க! அவரது கொள்கைகள் என்றென்றும் வெல்க!

*பெரியார் நூற்றாண்டு விழாவை ஒட்டி, அவரது பொன்மொழிகள் பொறிக்கப்பட்ட கருங்கற்றூண்கள்,*

பதினாறு மாவட்டத் தலைநகர்களிலும் நிறுவப்பட்டன. அவற்றின் திறப்பு விழா நிகழ்ச்சிகள் சீரோடும், சிறப்போடும் நடந்தேறின. எல்லா நிகழ்ச்சிகளிலும் நான் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினேன்.

## நெல்லை சட்ட மன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெறுதல்

1977 பொதுத் தேர்தலில், தமிழகச் சட்டமன்றத்திற்கான இடங்களில் பெரும்பாலானவற்றை அ.இ.அ.தி.மு.கழகம் கைப்பற்றியது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் ஆட்சி அமைந்தது. புரட்சித் தலைவர் தமிழக மக்களின் அன்பையும் அரவணைப்பையும், நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்றுச் சிறப்பாக ஆண்டு வந்தார்.

1977இல், ஜனதாக் கட்சி இந்திய ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, பிரதமர் மொரார்ஜி தேசாய், காங்கிரசுக் கட்சி ஆண்டு வந்த எட்டு மாநில ஆட்சிகளை, அரசமைப்புச் சட்டத்தின் 356 ஆவது பிரிவைப் பயன்படுத்திக் கலைத்தார். 1980இல், இந்திரா காந்தியின் தலைமையில் காங்கிரசுக் கட்சியின் ஆட்சி மத்திய அரசில் ஏற்பட்டபோது, அவர் தமக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனதாக்கட்சி ஆண்டு வந்த எட்டு மாநில ஆட்சிகளைக் கலைக்க முயற்சி செய்தார். அப்பொழுது, காங்கிரசோடு கூட்டுச் சேர்ந்திருந்த தி.மு.கழகத்தின் தலைவர் கலைஞர் கருணாநிதியின் வற்புறுத்தலின் பேரில், புரட்சித்தலைவரின் ஆட்சியையும் சேர்த்துக் கலைக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. புரட்சித்தலைவரின் ஆட்சியின் மீது எந்த ஒரு குற்றமோ, குறையோ சுமத்தப்பட முடியாத நிலையிலும், மத்திய அரசின் அதிகார, ஆணவ ஆதிக்கத்தின் காரணமாகவும், கலைஞர் கருணாநிதியின் தூண்டுதலின் பேராலும்

புரட்சித்தலைவரின் ஆட்சி எதிர்பாராத வகையில் திடீரென்று கலைக்கப்பட்டது.

அப்பொழுது புரட்சித்தலைவர் அவர்கள், ஆட்சி கலைக் கப்பட்டது குறித்துக் கவலையோ, கலக்கமோ கொள்ளாமல், சிரித்துக் கொண்டே, "மத்திய அரசின் ஆதிக்க அதிகாரத்தின் காரணமாக எனது ஆட்சி கலைக்கப்பட்டாலும், இன்னும் ஆறு திங்களுக்குள் நடைபெறும் தேர்தலில், எனது கழகம் மீண்டும் பெருவாரியான இடங்களில் வெற்றிபெறும். கழக ஆட்சி மீண்டும் அமையும்; நான் மீண்டும் முதலமைச்சர் ஆவேன்" என்று குறிப்பிட்டார்.

1980 இல், தமிழகச் சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் நான் அ.இ.அ.தி.மு. கழகத்தின் வேட்பாளராகத் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டேன். என்னை எதிர்த்து நின்ற காங்கிரசுக் கட்சி வேட்பாளரைவிட இருபதினாயிரம் வாக்குகள் மிகவாகப் பெற்று வெற்றிபெற்றேன்.

அதன்பிறகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையின்கீழ் அமைந்த அமைச்சர் அவையில் நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றுப் பணிபுரிந்தேன். வேறு சில துறைகளும் என் பொறுப்பில் விடப்பட்டிருந்தன. புரட்சித் தலைவரின் பொற்கால ஆட்சியில் பங்குகொண்டு பணியாற்றும் வாய்ப்பு பெற்றுப் பெருமகிழ்வுற்றேன்.

## எனது 60ஆவது ஆண்டு பிறந்தநாள் விழா

1980 சூலை 11 ஆம் நாள், எனது 60ஆவது ஆண்டு நிறைவு பிறந்தநாள் விழா, மிக எளிமையாக - ஆனால் சிறப்பாகச் சென்னை யில் நடைபெற்றது. முதல்வர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், கழகத்தின் முக்கியப் பொறுப்பாளர்களும், செயல்

வீரர்களும், நண்பர்களும், பொதுமக்களும், அரசு அதி காரிகளும், தோழமைக் கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டு பாராட்டுரைகள் வழங்கி, வாழ்த்துகள் தெரிவித்தார்கள். அவர்கள் எனக்குப் பொன்னாடைகள் போர்த்தியும், சால்வைகள் அணிவித்தும், ஆடைகள் வழங்கியும், பூமாலைகள் சூட்டியும், அன்புப் பரிசுகள் நல்கியும் என்னைப் பெருமைப்படுத்தினர். என்னை வாழ்த்த வந்தவர்கள் அனைவரோடும் சேர்ந்து, நான் விருந்துண்டு மகிழ்ந்தேன்.

நண்பர்கள் குழுவினர் எனது மணிவிழாவை இலக்கிய விழாவாகக் கொண்டாட அன்று ஏற்பாடு செய்திருந்தனர். விழாவானது பெரியதொரு திருமணமண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விழாவிற்குக் கழகத் தோழர்களும், இலக்கிய அன்பர்களும் ஆயிரக்கணக்கில் வருகை தந்திருந்தனர்.

விழாவிற்குத் திருக்குறள் முனிசாமி அவர்கள் தலைமை தாங்கினார். புலவர் இளஞ்செழியன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். டாக்டர் சை.வே. சிட்டிபாபு அவர்கள் பாராட்டு மடல் வாசித்தளித்தார். டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், வித்துவான் கி.வா. ஜெகந்நாதன், மால்கம் ஆதிசேஷையா, ஔவை நடராசன், சிலம்பொலி செல்லப்பன், டாக்டர். வா.செ. குழந்தைசாமி போன்ற வர்கள் பாராட்டுரை வழங்கினார்கள். நான் 'இலக்கிய இன்பம்' என்னும் பொருள்பற்றி நீண்டதோர் சொற்பொழி வாற்றினேன்.

## ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு - 1981 - சனவரி

முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை மதுரையில் நடத்தப் பெரிதும் விருப்பங் கொண்டார். அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பொது

மக்களின் பெரு ஒத்துழைப்போடு, தமிழக அரசின் சார்பாகச் செய்யப்பட்டன.

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக முதல்வர் புரட்சித்தலைவர் பொறுப்பேற்க, நான் வரவேற்புக் குழுவின் துணைத்தலைவராகப் பணியாற்றினேன். புரட்சித் தலைவரின் சார்பாக மாநாட்டுப் பணிகள் முழுவதையும் நான் மேற்பார்வையிட்டுக் கண்காணித்து வந்தேன்.

மாநாடு பொது அரங்கம் - ஆய்வு அரங்கம் என இரு பகுதிகளாக நடைபெற்றது. பொது அரங்கத்தில் அமைச்சர் கள், தமிழ்ச்சான்றோர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், அரசியல் தலைவர்கள், பேராசிரியர்கள் போன்றோர் கலந்து கொண்டனர். மாநாடு ஏழு நாட்கள் நடைபெற்றது. நாள்தோறும் கருத்தரங்கு, கவியரங்கு, பட்டிமன்றம், வழக்காடு மன்றம், இசையரங்கு, நாட்டிய அரங்கு, நாடக அரங்கு போன்றவை பொது அரங்கில் இடம் பெற்றிருந்தன. பொது அரங்கு மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெற்றது.

ஆய்வு அரங்கம் மதுரைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. ஆய்வரங்கத்தில் தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழ் ஆராய்ச்சி வல்லுநர்கள், பிறநாட்டுத் தமிழறிஞர்கள், மொழிநூல் வல்லுநர்கள், வரலாற்றுப் பேராசிரியர்கள் போன்றவர்கள் ஆய்வுக்கட்டுரைகளைப் படைத்தும் படித்தும் விளக்கவுரைகள் தந்தனர்.

மாநாட்டை ஒட்டி, மதுரை மாநகரில் தொல்காப்பியர், திருவள்ளுவர், பாரதியார், பாரதிதாசன், மறைமலையடிகள், திரு.வி.க., உ.வே.சா., பேராசிரியர் சுந்தரனார், வீரமாமுனிவர், வேதநாயகனார், திருமலையரசர் போன்றவர்களின் சிலைகள் பல பகுதிகளிலும் நிறுவப்பட்டன.

வெளியூர்களிலிருந்து மதுரைக்குள் வந்து நுழையும் ஐந்து பெரும் நெடுஞ்சாலைகளில், மதுரையின் எல்லைப் பகுதிகளில் ஐந்து பெரிய தோரணவாயில்கள் அமைக்கப் பட்டன. அவற்றைத் தமிழ்ச் சான்றோர்கள் திறந்து வைத்தனர்.

இறுதி நாளன்று மாபெரும் ஊர்வலம் மதுரை மாநகரின் முக்கிய தெருக்களில் வலம் வந்தது. ஊர்வலத்தை ஒரு குறிப்பிட்ட இடத்தில் போடப்பட்டிருந்த மேடையில் அமர்ந்துகொண்டு, இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, ஆளுநர் குரானா, முதல்வர் புரட்சித் தலைவர், வெளி நாடுகளின் அமைச்சர்கள், தமிழக அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் பார்வையிட்டனர்.

தமிழ்-தமிழர்-தமிழ்நாடு பற்றிய வரலாற்று நிகழ்ச்சி களையும், புகழையும், பெருமையையும், வளத்தையும், வாழ்வையும், புலப்படுத்தும் அலங்கார வண்டிகள் நாற் பதுக்கு மேற்பட்டவை ஊர்வலத்தில் பங்குகொண்டன. கிராமிய இசைக்குழுக்கள், நாடகக் குழுக்கள், நாட்டியக் குழுக்கள் ஊர்வலத்திற்கு அழகு சேர்த்தன. மாணவ மாண வியரும், காவல் துறையினரும், புலவர் பெருமக்களும், கவிஞர்களும், கலைஞர்களும், ஆசிரியர்களும், வழக்கறி ஞர்களும் அணிஅணியாக ஊர்வலத்தில் அணிவகுத்து வந்தனர். 12 யானைகளும், 50 குதிரைகளும், 60 பொலி காளைகளும் ஊர்வலத்தின் முன்பகுதியில் இடம் பெற்றிருந்தன.

பல்வேறு இன்னிசை வாத்தியக் குழுவினர் ஊர்வலத் தின் இடையிடையே இன்னிசை எழுப்பி வந்தனர். ஊர்வலத்தின் வழிநெடுக வெடிவேட்டுக்கள் முழங்கின; வாண வேடிக்கைகள் நிகழ்ந்தன.

மாநாட்டின் இறுதி விழாவிற்கு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமை தாங்கினார். இந்தியப் பிரதமர்

இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் நிறைவுச் சொற்பொழிவு நிகழ்த்தினார். நான் வரவேற்புக் குழுவின் சார்பாக விழாவிற்கு வருகைதந்தோர் அனைவரையும் வரவேற்றுப் பேசினேன். நிறைவு விழாவில் அகவை முதிர்ந்த தமிழ்ப்பேரறிஞர்கள் பதினைந்து பேர்களுக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டும் பொற்கிழிகள் அளிக்கப் பட்டும் பெரிதும் சிறப்புச் செய்யப்பட்டார்கள்.

மாநாட்டில் கலந்து கொண்ட புலவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், இசைக்குழுவினர், நாடகக் குழுவினர், நாட்டியக் குழுவினர், சிற்பிகள் போன்றோர்க்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன.

❁ ❁ ❁



1977 – இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களுடன் நாவலர்



30–6–79 – தருமபுரி பெரியார் நூற்றாண்டு விழா – முதலமைச்சர் புரட்சித்தலைவரும், பெரியார் நூற்றாண்டு விழாக்குழுத் தலைவர் நாவலரும்



1980 - டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டின்
போது சேக் அப்துல்லா அவர்களுடன் நாவலர்




நாவலர் மணிவிழா மலர் வெளியீட்டு விழாவில் கவிஞர் கண்ணதாசன்
உரையாற்றுகிறார். மேடையில் மதுரை முத்து, ம.பொ.சி.,
குன்றக்குடி அடிகளார், எஸ்.எஸ்.இராசேந்திரன் ஆகியோருடன் நாவலர்



1980 – நவலருக்கு அவருடைய இல்லத்திற்கு வருகை தந்து பிறந்த நாள் வாழ்த்துக் கூறுகிறார் புரட்சித்தலைவர்



1980 – இலண்டன் தமிழ்ச் சங்க வரவேற்பு விழாவில்
நிதியமைச்சர் நாவலர் உரையாற்றுகிறார்



4–8–80 – மொரிசியசுத் தீவு மகாத்மா காந்தி மண்டபத்தில்
நடைபெற்ற உலகத்தமிழ்ப்பண்பாட்டு மாநாட்டு மேடையில்
மொரிசியசு பிரதமர் இராம்கூலம், மோரிசியசு நிதியமைச்சர்
தமிழகக் கல்வி அமைச்சர் அரங்கநாயகம் ஆகியோருடன் நாவலர்

## டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., டி.லிட்.,

## வாழ்க்கைக் குறிப்புகள்

| | |
|---|---|
| பிறப்பு | *1920 சூலை 11ஆம் நாள் - ஞாயிறு* |
| தந்தையார் | *திரு.வ.சௌ. இராசகோபாலனார்* |
| தாயார் | *திருமதி. மீனாட்சி சுந்தரத்தம்மையார்* |
| உடன்பிறந்தார் | *சௌரிராசன், நாடியம்மாள், செழியன், புனிதவல்லி, இராமதாசு, நீலா, விமலா.* |
| துணைவியார் | *டாக்டர் இரா. விசாலாட்சி, எம்.பி.பி.எஸ்., எம்.பி.எச். டி.எம்.சி.எச்* |
| மகன், மருமகள் | *மதிவாணன்; சாந்தி* |
| பேத்தி - பேரன் | *விசாலாட்சி; நெடுஞ்செழியன்* |
| பிறந்த ஊர் | *திருக்கண்ணபுரம் (ஆழ்வார்களால் பாடப்பெற்ற சிற்றூர்), நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம்.* |
| குடிப்பெயர் | *நேமத்தார்* |
| பரம்பரை | *அரிசில் கிழார் பரம்பரை* |
| குடிக்கான பட்டப்பெயர் | *அரச மக்கள்* |
| போற்றப்பட்டு வரும் பழம் பொருள்கள் | *வீரவாள், கேடயம், சேமக்கலம்* |
| தொடக்கக் கல்வி | *பட்டுக்கோட்டை கழகத் தொடக்கப் பள்ளி* |
| உயர்நிலைக் கல்வி | *பட்டுக்கோட்டை கழக உயர் நிலைப் பள்ளி* |

| | |
|---|---|
| கல்லூரிக் கல்வி | *1938-39 - சில திங்கள் - சென்னைப் பச்சையப்பன் கல்லூரி.* |
| | *1939-44 ஐந்தாண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகம்* |
| படிப்பு | *எம்.ஏ., (கலை முதியர்) பட்டப் படிப்பு* |
| பெற்ற பாராட்டுப் பட்டம் | *1972 இல் மதுரைப் பல்கலைக் கழகத்தின் மதிப்புறு டி.லிட் (டாக்டர்) பட்டம்* |
| அறிஞர் அண்ணா பயன்படுத்திய அடைமொழிகள் | *'நாவலர்' - 'நடமாடும் பல்கலைக் கழகம்' - 'கழகக் காவலர்'* |
| தன்மதிப்பியக்கத் தொடர்பு | *1925 முதல் பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களின் தன்மதிப்பு இயக்கத்தில் ஈடுபாடுகொண்டிருந்த தமது தந்தையார் உருவாக்கிய சூழலில் வளர்ந்து இளமை முதல் பகுத்தறிவு வாதியாகத் திகழ்தல்.* |
| 1926 | *பட்டுக்கோட்டைக்கு வருகை தந்த தமிழக முதல்வர் பனகல் அரசர் கூட்டத்தைத் தந்தையாரோடு சென்று காணுதல்* |
| 1928 | *திருக்கண்ணபுரத்தில், (குத்தூசி) எஸ். குருசாமி நடத்திய வைக்கம் வீரர் பெரியார் பிறந்தநாள் விழா ஊர்வலத்தில் செங்கொடி ஏந்திச் செல்லுதல்.* |
| 1929 | *பட்டுக்கோட்டையில் (குத்தூசி) எஸ். குருசாமி தலைமையில் நடந்த* |

| | |
|---|---|
| | முதலாவது மாநில சுயமரியாதை மாநாட்டிற்குத் தந்தையாரோடு சென்று அதனைக் காணல். |
| 1929 | பட்டுக்கோட்டைக்குத் தாடியில்லாமல் வருகைதந்த பெரியாரின் பேச்சை முதன்முதல் கேட்டல். |
| 1931 | பட்டுக்கோட்டையில் சர்.பி.டி. இராசனும், சர். கிருஷ்ணநாயரும் கலந்துகொண்ட விழாவிற்குத் தந்தையாரோடு செல்லல். |
| 1933 | பட்டுக்கோட்டையில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டிற்கும், வாக்காளர் மாநாட்டிற்கும் தந்தையாரோடு சென்று, அவற்றில் கலந்து கொள்ளல். |
| 1935 | பட்டுக்கோட்டைக்கு வருகைதந்த காங்கிரசுக் கட்சியின் தலைவர் பாபு இராசேந்திர பிரசாத்துக்கு பொன் -னம்பலனார் தலைமையில் கறுப்புக்கொடி காட்டல். |
| 1936 | நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது, நீதிக்கட்சியின் சார்பாகச் சட்டமன்றத்திற்குப் போட்டியிட்ட சர்.ஏ.டி. பன்னீர் செல்வத்திற்கும், பாப்பா நாடு இராசப்பாவுக்கும் 'சிவப்புப் பெட்டியில்' வாக்களிக்கத் தேர்தல் பணிபுரிதல். |
| 1937 | பட்டுக்கோட்டையில், தம் இளவல் செழியனோடு சேர்ந்து, 'திருவள்ளுவர் இளைஞர் தமிழ்க் கழகம்' நிறுவுதல் |

| | |
|---|---|
| 1938 | பட்டுக்கோட்டையில், கே.வி. அழகிரிசாமி, எஸ்.எஸ். பாரதியார், சாமி வேலாயுதம் போன்றவர்களைக் கொண்டு கட்டாய இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கூட்டங்களை நடத்துதல் |
| 1938 | சென்னையில் பெரியார் தலைமையில் நடைபெற்ற நீதிக்கட்சியின் மாநில மாநாட்டிற்குப் பட்டுக்கோட்டை அழகிரிசாமி அவர்களோடு சென்று அதில் கலந்து கொள்ளுதல். |
| 1940 | அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவராக இருந்தபோது, திருவாரூரில் பெரியார் தலைமையில் நடைபெற்ற நீதிக்கட்சியின் மாநில மாநாட்டில் கலந்து கொள்ளுதல். |
| 1943 | அண்ணாமலைப் பல்கலைக் கழக வளாகத்தில் தமிழிசை இயக்க முதல் மாநாடு நடைபெற்றபோது, அதற்கு மாணவர்களின் பேராதரவைத் திரட்டித்தருதல். |
| 1943 | அண்ணாமலை நகரில், இசையரசு எம்.எம்.தண்டபாணி தேசிகரின் தமிழிசை அரங்கிற்குத் தெலுங்கர் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தபோது, எதிர்ப்பை அடக்கி இசை அரங்கு ஒழுங்குற நடைபெற உதவி செய்தல். |

| | |
|---|---|
| 1943 | திருவாரூர் ''தமிழ் மாணவர் மன்ற'' ஆண்டுவிழாவில் (கலைஞர்) கருணாநிதி அழைப்பை ஏற்றுக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துதல். |
| 1943 | சென்னையில் திரு.வி.க. மணி விழாவையொட்டி நடைபெற்ற கல்லூரி மாணவர்கள் தமிழ்ப் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு, பெரிய வெள்ளிக்கோப்பையையும், சிறிய வெள்ளிக் கோப்பையையும், வெற்றிப் பரிசு களாகப் பெறுதல் |
| 1943 | அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'பத்துப்பாட்டு' ஆராய்ச் சிக் கட்டுரை எழுதி, சர்.ஆர்.கே. சண்முகம் பரிசினைப் பெறுதல் |
| 1944 | குடந்தையில் நடைபெற்ற திராவிட மாணவர் மாநாட்டின் இரண்டாம் நாள் மாலை நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி நடத்துதல். பெரியார், அறிஞர் அண்ணா அந்த மாநாட்டில் கலந்துகொள்ளல். |
| 1944 | எம்.ஏ., பட்டப்படிப்புத் தேர்வு எழுதி, பட்டம் பெறுதல். |
| *1944* | புவனகிரியில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களோடு கலந்து கொள்ளுதல். |
| 1944 | ஈரோட்டில் பெரியாரால் கூட்டப் பெற்று, அறிஞர் அண்ணா |

தலைமை தாங்கிய மாநாட்டில், கழகக் கொடியேற்று விழா நிகழ்ச்சியை நிகழ்த்துதல்.

1944 மேத் திங்களில் கோவை மாவட்டத்தில், மாணவர் கொள்கை பரப்புச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு நகரங்களில் பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்ளுதல். சில இடங்களில் பெரியாரும் கலந்துகொண்டு உரையாற்றுதல்.

1944 சூன் திங்கள் முதல் வாரத்தில், இலால்குடியில், பெரியாரும், அறிஞர் அண்ணாவும் கலந்து கொண்ட திராவிட இளைஞர் மாநாட்டிற்குத் தலைமை தாங்குதல்.

1944 சூன் திங்கள் இரண்டாவது வாரத்தில், பெரியாரும், அறிஞர் அண்ணாவும் பங்குகொண்ட கோபி திராவிட இளைஞர் மாநாட்டிற்குத் தலைமை தாங்குதல்.

1944 சூன் திங்களில் தூத்துக்குடியிலும், இராசிபுரத்திலும் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாடுகளில் பெரியார் - அறிஞர் அண்ணா ஆகியோரோடு சேர்ந்து கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுதல்.

1944 சூலைத் திங்களில் சேலத்தில் நடைபெற்ற திராவிட மாணவர் மாநாட்டிற்குத் தலைமை தாங்குதல்.

| | |
|---|---|
| 1944 | ஆகஸ்டுத் திங்களில், சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சியின் மாநில மாநாட்டில், பெரியார் தலைமை தாங்க, அறிஞர் அண்ணா 'திரா விடர் கழகம்' என்ற பெயர்மாற்றத் தீர்மானத்தை முன்மொழிய, அதனை வழிமொழிந்து பேசுதல். |
| 1944-46 | கோவை ஜி.டி.நாயுடு மாளிகை வளாகத்தில் நூலகம், விடுதி ஆகிய வற்றின் பொறுப்பேற்றல். |
| 1945 | திருச்சியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநில மாநாட்டில், கலந்து கொண்டு உரையாற்றுதல். |
| 1946 | மதுரையில் நடைபெற்ற முதல் மாநிலக் கறுப்புச் சட்டை மாநாட் டில் பங்கேற்றுச் சொற்பொழி வாற்றுதல். |
| 1946 | டிசம்பர்த் திங்களில், சென்னையில் நடைபெற்ற கறுப்புச்சட்டைப் படை தடை எதிர்ப்பு மாநாட்டில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துதல். |
| 1947 | 'சுதந்தர நாடு' என்னும் நாளிதழின் துணை ஆசிரியராகப் பொறுப் பேற்றல். |
| 1948 | பொங்கல் நாளன்று 'மன்றம்' திங்களிதழைத் தொடங்குதல். புரட்சிக் கவிஞரின் நல்வாழ்த்துப்பா பெறுதல். |
| 1948 | ஈரோட்டில் அறிஞர் அண்ணா தலைமையில், பெரியாரால் நடத் |

| | |
|---|---|
| | தப்பட்ட, திராவிடர் கழகச் சிறப்பு மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றுதல். |
| 1948 | இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டுக் கைது செய்யப்பட்டுச் சென்னைச் சிறைச்சாலையில், 15 நாட்கள் காவலில் வைக்கப்படுதல். |
| 1948 | காஞ்சிபுரம் 'திராவிட நாடு' வார இதழில், அறிஞர் அண்ணாவின் அழைப்பின்பேரில், துணை ஆசிரியராகப் பணி ஏற்றல். |
| 1949 | ஆகஸ்டுத் திங்களில், பெரியாரின் திருமணம் என்ற பெயரால் செய்யப்பட்ட ஏற்பாட்டை எதிர்த்து, அறிஞர் அண்ணா அவர்களுடன், திராவிடர் கழகத்தைவிட்டு வெளியேறுதல். |
| 1949 | செப்டம்பர் 17ஆம் நாள் அறிஞர் அண்ணாவைப் பொதுச் செயலாளராகக் கொண்ட 'திராவிட முன்னேற்றக் கழக' அமைப்பு ஏற்பட உறுதுணையாக நிற்றல். |
| 1949 | தி.மு.கழகத்தின் சார்பாகத் தொடங்கப்பட்ட 'மாலை மணி' நாளேட்டின் நிருவாக ஆசிரியர்ப் பொறுப்பேற்றல். |
| 1949 | அக்டோபர் 16-ஆம் நாள், சென்னை இராபின்சன் பூங்காத் திடலில் நடைபெற்ற தி.மு.கழகத் தொடக்க விழாப் பொதுக் கூட்டத்தில், |

| | |
|---|---|
| | அறிஞர் அண்ணா அவர்களுடன் கலந்துகொண்டு உரையாற்றுதல். |
| 1949 | இறுதித்திங்களில், திருச்சியில் நடைபெற்ற திருச்சி மாவட்ட முதல் தி.மு.கழக மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுதல். |
| 1950 | மார்ச்சுத் திங்கள் 26-ஆம் நாள் டாக்டர் விசாலாட்சி அம்மையாரை, சேலத்தில் வாழ்க்கைத் துணைவிய ராக ஏற்றுத் திருமணம் முடித்தல். |
| 1950 | வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கைக்கு ஆதரவாகச் சேலத்தில் நடைபெற்ற அறப்போர் ஆர்ப் பாட்டத்திற்குத் தலைமை தாங்குதல். |
| 1951 | சூன் 20-ஆம் நாளன்று மகன் மதிவாணன் பிறத்தல். |
| 1951 | சூலை 4-ஆம் நாள், தேனியில் எதிரிகளால் நடத்தப்பட்ட மிகப் பெரிய கலவரத்தைச் சமாளித்தல். |
| 1951 | சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ.திடலில் அறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற முதல் மாநில தி.மு. கழக மாநாட்டை முழுப் பொறுப் பேற்று நடத்துதல். |
| 1952 | மதுரை புகைவண்டி நிலையத்தின் பெயர்ப் பலகையிலுள்ள இந்தி எழுத்துக்களை அழிக்கும் போராட் டத்தில் ஈடுபட்டு, ஒரு திங்கள் கால அளவுக்குச் சிறைத்தண்டனை ஏற்றல். |

| | |
|---|---|
| 1952 | நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது, கழக ஆதரவுபெற்ற வேட்பாளர்களுக்காக, மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற் கொண்டு பேராதரவு திரட்டுதல். |
| 1953 | முதலமைச்சர் இராஜாஜியின் குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்து மாநில மெங்கும் பிரச்சாரம் செய்தல். |
| 1953 | இந்தியத் தலைமை அமைச்சர் பண்டித நேருவை எதிர்த்துச் சென்னையில் நடைபெற்ற கறுப் புக்கொடி காட்டும் போராட்டத்தை ஒட்டிக் கைது செய்யப்பட்டுச் சென்னை மத்தியசிறையில் மூன்று திங்கள்கள் அடைக்கப்படுதல். |
| 1954 | இந்தித்திணிப்பு எதிர்ப்பு மறியல் கிளர்ச்சியில் மதுரையில் பங்கு கொண்டதற்காக மூன்று திங்கள் சிறை வாழ்வு மேற்கொள்ளுதல். |
| 1954 | இலங்கையில், பல்வேறு நகரங் களுக்கு, 15 நாட்கள் கொள்கை முழக்கச் சுற்றுப் பயணம் மேற் கொள்ளுதல். |
| 1954 | (1951 தொடங்கி) நடைபெற்ற 2-வது கட்ட மாவட்ட மாநாடுகளில் கலந்துகொள்ளல். |
| 1955 | தி.மு.கழகத்தின் பொதுச் செய லாளர் பொறுப்பினை ஏற்றல். |
| 1956 | திருச்சியில் நடைபெற்ற தி.மு. கழகத்தின் இரண்டாவது மாநில |

| | |
|---|---|
| | மாநாட்டிற்குத் தலைமை தாங்குதல். அறிஞர் அண்ணா அவர்கள், ''தம்பி வா! தலைமை தாங்க வா! உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்போம்!'' என்று குறிப்பிடுதல். |
| 1957 | பொதுத் தேர்தலின்போது, சேலம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிக்கான வாய்ப்பினை 207 வாக்குகளில் இழத்தல். |
| 1958 | இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத்தை எதிர்த்து நடைபெற்ற கறுப்புக்கொடி காட்டும் போராட்டத்தையொட்டிக் கைது செய்யப்பட்டுச் சென்னை சைதாப்பேட்டைச் சிறையில், ஒரு வாரகாலம் அடைக்கப்படுதல். |
| 1960-வரையில் | (1955 தொடங்கி) நடைபெற்ற 3-வது கட்ட மாவட்ட தி.மு.கழக மாநாடுகளில் கலந்து கொள்ளல். |
| 1961 | பல்வேறு நகரங்களில் நடைபெற்ற தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டங்களில் கலந்துகொண்டு, தேர்தல் நிதி திரட்டுதல். |
| 1962 | நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது, திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெறுதல். சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பினை ஏற்றல். |

| | |
|---|---|
| 1963 | கோவையில் நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்பு மறியல் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிக் கைது செய்யப்பட்டு, மூன்று திங்கள் சிறையில் அடைக்கப்படுதல். |
| 1963 | திராவிடநாடு பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு, மாநிலத் தன்னாட்சி உரிமை கேட்டு, அதற்கு ஏற்ப தி.மு.கழகச் சட்டதிட்ட ஏட்டில் திருத்தம் கொண்டுவந்து, அதனை நிறைவேற்றி வைத்தல். |
| 1964 | சென்னையில், இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கிளர்ச்சியின் காரணமாகக் கைது செய்யப்பட்டு, இரண்டு வார காலம் சிறைத் தண்டனை பெறுதல். |
| 1965 | சனவரி 25-ஆம் நாள் திருச்சியில் நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநில மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழி வாற்றுதல். |
| 1965 | மாணவர் இயக்கத்தின்மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டதைக் கண்டித்து, ஆட்சிக்கு எதிராகத் தமிழகச் சட்டமன்றத்தில், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து கடுமையாக வாதாடுதல். |
| 1966 | சூன் திங்களில் இலண்டன், எடின்-பர்க், ஆக்ஸ் போர்டு, ஸ்காட்லாந்து, தென்வேல்ஸ், மனிதத்தீவு, பாரீஸ், |

| | |
|---|---|
| | ஸ்டாக்ஹோம், ஜெனிவா, உரோம் போன்ற நகரங்களுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளுதல். |
| 1966 | சூலைத் திங்களில் கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்டு விட்டு, மலேசியாவின் பல்வேறு பகுதிகளிலும், சிங்கப்பூர் நகரிலும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளுதல். |
| 1966 | புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடன் சேர்ந்து மாநில மெங்கும் சென்று, தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல். |
| 1966 | டிசம்பர்த் திங்களில் சென்னை விருகம்பாக்கத்தில், அறிஞர் அண்ணா தலைமையில் நடை பெற்ற தேர்தல் சிறப்பு மாநாட்டை முக்கியப் பொறுப்பேற்று நடத்து தல்; மாநாட்டில் சீரிய சொற் பொழிவு ஆற்றுதல். |
| 1967 | பொதுத் தேர்தலின்போது, சென்னை திருவல்லிக்கேணி சட்ட மன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெறுதல். |
| 1967 | அறிஞர் அண்ணா அமைத்த அமைச் சரவையில் அமைச்சராகப் பொறுப் பேற்றல். |
| 1968 | சனவரித் திங்களில், சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் |

| | |
|---|---|
| | தமிழ் மாநாட்டில் வரவேற்புக் குழு வின் துணைத்தலைவர் பொறுப் பினை ஏற்றல். |
| 1968 | அறிஞர் அண்ணா அவர்கள் இரு முறை வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, முதல்வர் பதவிக்குரிய பொறுப்புக் களை ஏற்று நடத்துதல். |
| 1969 | அறிஞர் அண்ணா மறைந்தபோது, பிப்ரவரி 3-ஆம் நாளிலிருந்து, பிப்ரவரி 10-ஆம் நாள் வரையில், முழு உரிமை படைத்த தமிழக முதல்வராகத் திகழ்தல். |
| 1969 | தி.மு.கழகத்தின் பொதுச் செய லாளர் பொறுப்பினை மீண்டும் ஏற்று, 1977 ஏப்ரல் வரை அந்தப் பொறுப்பில் நீடித்தல். |
| 1969 | கலைஞர் கருணாநிதி தலைமை யிலான அமைச்சரவையில், கல்வி - பொதுநலம் வருவாய் போன்ற துறைகளின் அமைச்சராய்த் திகழ்தல். |
| 1969 - வரையில் | (1961 தொடங்கி) நடைபெற்ற 4-வது கட்ட மாவட்ட தி.மு.கழக மாநாடு களில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுதல். |
| 1970 | உலக நாடுகளில் நாற்பது நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளுதல். |

| | |
|---|---|
| 1971 | பொதுத் தேர்தலின்போது, திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில், போட்டியிட்டு வெற்றிபெறுதல். |
| 1971 முதல் | 1976வரை இருமுறை முதலமைச்சர் பதவிக்குரிய பொறுப்புகள் அனைத்தையும் ஏற்று ஆட்சி புரிதல். |
| 1972 | மதுரைப் பல்கலைக் கழகத்தில் மதிப்புறு டி.லிட். (டாக்டர்) பட்டம் பெறுதல். |
| 1972 | டாக்டர் பட்டம் பெற்றமைக்காகப் பெரியார் திடலில் பகுத்தறிவாளர் கழகத்தின் சார்பாகப் பெரியாரால் பொன்னாடை போர்த்தப்பட்டுப் பாராட்டப் பெறுதல். |
| 1976 | சனவரி 31-ஆம் நாள் கலைஞர் கருணாநிதியின் தலைமையிலான அமைச்சரவையும், தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையும் கலைக்கப் படுதல். |
| 1977 | கலைஞரின் மாறுபட்ட போக்கின் காரணமாக, நண்பர்கள் பலரோடு தி.மு.கழகத்தை விட்டு விலகி, 'மக்கள் தி.மு.கழகம்' என்னும் புதியதொரு அமைப்பைத் தோற்று வித்தல். |
| 1977 | சூன் 30ஆம் நாள் எம்.ஜி.ஆர். தலைமையிலான அமைச்சரவை -யின் பாராட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுதல். |

| | |
|---|---|
| 1977 | செப்டம்பர் 18ஆம் நாள், அ.இ. அ.தி.மு.கழகத்தில் நண்பர்களோடு இணைதல். அன்றே அ.இ.அ.தி.மு. கழகத்தின் அவைத்தலைவர் பொறுப்பினை ஏற்றல். |
| 1977 | நவம்பர் 2-ஆம் நாளில், மகன் மதிவாணன் திருமணம் |
| 1978 | அ.இ.அ.தி.மு.கழகத்தின் தற்காலிகப் பொதுச் செயலாளர் ஆதல் - பின்னர் பொதுச் செயலாளர் பொறுப்பேற்றல்; பிறகு பொதுச் செயலாளராகப் பொதுக்குழுவால், ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் படுதல். |
| 1978 | கோவையில் நடைபெற்ற அ.இ. அ.தி.மு.கழக மாணவர் மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த் துதல். |
| 1978 | தமிழக அரசின் சார்பாக அமைக்கப் பட்ட பெரியார் நூற்றாண்டு விழாக் குழுவிற்குத் தலைவராக நியமிக்கப் படுதல். மாவட்டந்தோறும் விழாவை நடத்துதல்; மாவட்டந் தோறும் பெரியாரின் பொன்மொழி கள் பொறிக்கப்பட்ட கற்றூண்களை நிறுவுதல். |
| 1980 | பொதுத் தேர்தலின்போது, நெல்லை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெறுதல். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் நிதி அமைச் சராகப் பொறுப்பேற்றல். |

| | |
|---|---|
| 1981 | மதுரையில், ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டை வெற்றிகரமாக நடத்த முழுப் பொறுப்பேற்றல். |
| 1981 | எட்டயபுரத்தில் நடைபெற்ற பாரதியார் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு, அரியதொரு உரை ஆற்றுதல். |
| 1981 | இலங்கை கொழும்பு நகரில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுதல். |
| 1982 | சேலத்தில் நடைபெற்ற மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுதல். |
| 1983 | கடலூரில் நடைபெற்ற அ.இ.அ.தி.மு.கழகப் பெண்கள் மாநாட்டில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துதல். |
| 1983 | மதிவாணன் - சாந்தி ஆகியோரின் குழந்தையான பேத்தி 'விசாலாட்சி' பிறத்தல். |
| 1984 | தஞ்சையில் நடைபெற்ற இராசராச-சோழனின் 1000-ஆவது முடிசூட்டு ஆண்டு விழாவை முன்னின்று நடத்தி, விழாவில் பேருரை ஆற்றுதல். |
| | 1980க்கும் 1984க்கும் இடையில் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம், பாரதிதாசன் |

| | |
|---|---|
| | பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம், அன்னை தெரசா பெண்கள் பல்கலைக் கழகம் ஆகியவை உருப்பெற, புரட்சித் தலைவருக்கு உறுதுணை புரிதல். |
| 1984 | அக்டோபர் 15 முதல், 1985 பிப்ரவரி 4 வரை புரட்சித் தலைவர் மருத்துவ சிகிச்சைபெற்ற காலத்தில், முதலமைச்சரின் பதவிப்பொறுப்புக் களை ஏற்று ஆட்சி நடத்துதல். |
| 1984 | பொதுத்தேர்தலின்போது, மதுரை மாவட்டம் ஆத்தூர் சட்ட மன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெறுதல். |
| 1985 | புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அமைத்த அமைச்சரவையில் சேர்ந்து மீண்டும் நிதியமைச்சர் ஆதல். |
| 1985 | ஒரு திங்களும், 1986இல் ஒன்றரைத் திங்களும், 1987-இல் மூன்று திங்கள் களும், புரட்சித்தலைவர் மருத்துவ சிகிச்சை பெற்ற காரணத்தால், முதலமைச்சர் பதவிப் பொறுப்புக் களை ஏற்று ஆட்சிபுரிதல். |
| 1986 | மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாவில் கலந்துகொண்டு, நிறைவுப் பேருரை நிகழ்த்துதல். |

| | |
|---|---|
| 1987 | இந்திய விடுதலையின் 40-வது ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்பாக முன்னின்று நடத்துதல். |
| 1987 | டிசம்பர் 24இல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மறைந்ததனையடுத்து, டிசம்பர் 24முதல் 1988 சனவரி வரை முழுப்பொறுப்பு வாய்ந்த முதல -மைச்சராக ஆளுநர் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக்கொண்டு பணியாற்றி வருதல். |
| 1988 | சனவரி 31ஆம் நாளன்று தமிழக ஆட்சியும், சட்ட மன்றமும் கலைக் கப்பட்டதன் காரணமாக கழகப் பணிகளில் முழு நேரம் ஈடுபடல். |
| 1988 | அக்டோபர் 20இல் மகன் மதிவாணன் மருமகள் சாந்தி ஆகியோர்க்கு ஆண் குழந்தை பிறந்து, குழந்தைக்குத் தாத்தாவின் பெயரான 'நெடுஞ்செழியன்' என்ற பெயர் சூட்டப்பட்டது. பெயர் சூட்டுவிழாவில் உற்றார், உறவினர், கழகத் தலைவர்கள், நண்பர்கள் பலரும் கலந்துகொண்டனர். |
| 1990 | அ.இ.அ.தி.மு.கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பினை ஏற்றல். |
| 1990 | மேத் திங்களில், குடும்பத்தினருடன் சிங்கப்பூருக்குச் சுற்றுப் பயணம் சென்று வரல். |
| 1990 | இருதய அறுவை சிகிச்சை யின் பொருட்டு அமெரிக்காவின் |

ஹூஸ்டன் நகருக்குத் துணைவியார் டாக்டர் விசாலாட்சி அம்மையாருடன் சென்று வருதல்.

1991 நடைபெற்ற பொதுத்தேர்தலில் தேனி சட்டமன்றத் தொகுதியில் அ.இ.அ.தி.மு.கழக வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெறுதல்.

1991 சூன் 24 ஆம் நாளன்று புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அமைச்சரவை -யில் இடம்பெற்று, நிதி அமைச்சர் பொறுப்பை மீண்டும் ஏற்றல்.

1991 நவம்பரில், நாவலர் எழுதிய 'திருக்குறள் தெளிவுரை' என்னும் அரிய நூல் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் வெளியிடப்பெறல்.

1992 சனவரித் திங்கள் 15ஆம் நாள், தமிழக அரசின் திருவள்ளுவர் விருது மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் வழங்கப் பெறல்.

1992 பிரிட்டன் - பிரான்ஸ் - அமெரிக்கா நாடுகளுக்குச் செல்லல். பாரிசில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ளல். அமெரிக்கா பீட்ஸ்பர்க்

| | |
|---|---|
| | நகரில் மீண்டும் இருதய சிகிச்சை செய்துகொள்ளல். |
| 1993 | சூலை 11ஆம் நாள் 74வது பிறந்தநாள் விழா. நாவலரைப் பற்றி எழுதப்பெற்ற 'நாவலர் காவியம்' என்னும் கவிதை நூல் வெளியிடப் பெற்றது 74வது பிறந்தநாளை யொட்டி, சென்னையில் இந்திய - மலேசியப் பண்பாட்டுக் கழகம் நடத்திய இலக்கிய விழாவில் கலந்துகொண்டு சிறப்புச் சொற் பொழிவு ஆற்றல். |
| 1994 | நவம்பர் 11இல், நாவலர் எழுதிய 'புரட்சிக்கவிஞர்' பாரதிதாசன் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் வெளி யிடப்பெறல். |
| 1995 | தஞ்சையில் எட்டாவது உலகத் தமிழ்மாநாடு மிகப்பெரிய அளவில் சிறப்பாக நடைபெற்றபோது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி வரவேற்புக் குழுத்தலைவ ராக இருக்க, நாவலர் துணைத் தலைவராக இருந்து மாநாட்டுப் பணிகளைக் கவனித்தல். |
| 1995 | சனவரியில், இந்திய விற்பனை வரி பற்றிய ஆய்வுக்குழுவில் இடம் பெற்று, ஸ்பெயின், பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் |

விரிவான முறையில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளல்.

1995 சூலை 11ஆம் நாளன்று, நாவலர் ஆட்சிப்பொறுப்பில் 25ஆண்டுகள் நிறைவு பெற்றதைக் குறிக்கும் 'வெள்ளி விழா', அரசியலில் 50 ஆண்டுகள் நிறைவுபெற்றதைக் குறிக்கும் 'பொன்விழா', அகவையில் 75 ஆண்டுகள் நிறைவு பெற்றதைக் குறிக்கும் 'பவளவிழா' ஆகிய மூன்றும் சேர்ந்து முப்பெரும் விழாவாகக் கொண்டாடப்பெற்றது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியும், அமைச்சர்களும், கழக முன்னணியினரும் விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துத் தெரிவித்தனர்.

1996 சனவரித் திங்களில் திருச்சியில் நடைபெற்ற கழக மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுதல். கழகப் பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.

1996 நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது, தேனி சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிட்டு, மாறுபட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக வெற்றி வாய்ப்பை இழந்தார்.

1997 அ.இ.அ.தி.மு.கழகத்தின் அவைத் தலைவராக நாவலர் மீண்டும் பொதுக்குழுவால் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுதல்.

1998 சனவரி முதல் வாரத்தில் நெல்லை - பாளையங்கோட்டையில் நடைபெற்ற அ.இ.அ.தி.மு.கழக மாநிலச் சிறப்பு மாநாட்டில் முக்கியப் பொறுப்பு ஏற்றுப் பணி யாற்றல். நாவலரால் உருவாக்கப் பெற்ற 'வெள்ளி விழா' மலர் மாநாட்டில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் வெளியிடப் பெற்றது. நாவலரின் பழம்பெரும் - நீண்ட காலத் தொண்டைப் போற் றும் வகையில் மாநாட்டில் புரட்சித் தலைவி அவர்களால் நாவலருக்கு அம்பாசிடர் கார் ஒன்று பாராட்டுப் பரிசாக வழங்கப்பெற்றது.

1998 நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின்போது, போட்டி யிட்ட கழக வேட்பாளர்களுக்கும், தோழமைக் கட்சி வேட்பாளர் களுக்கும் ஆதரவு திரட்டும் வகை யில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளல்.

1998 சனநாயக முற்போக்குக் கூட்டணி யின் கூட்டாட்சி, மத்திய அரசில் அமைய அரும்பாடுபட்ட கழகப் பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கு, உறுதுணையாக இருந்து பணியாற்றல்.

| | |
|---|---|
| 1999 | நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட சனநாயக முற்போக்குக் கூட்டணியைச் சார்ந்த வேட்பாளர்களுக்கு ஆதரவாக, சூறாவளிச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பிரச்சாரப் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளல். |
| 1999 | டிசம்பர் 29 - புலவர் இளஞ்செழியன் ஏற்பாட்டில் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் ஒப்புரவாளர் கழகப் பாராட்டு விழாவில் பங்கேற்று 'ஒப்புரவு' எனும் தலைப்பில் சிறப்பானதொரு உரையாற்றல். |
| 1999 | டிசம்பர் 31 திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி அவர்கள் சென்னை பெரியார் திடலில் ஏற்பாடு செய்திருந்த பெரியார் புத்தாயிரம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றல். இதுவே அவர் கலந்து கொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சியாகும். |
| 2000 | சனவரி 8-இல் உடல் நலக்குறைவின் காரணமாக சென்னை 'அப்பலோ' மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுதல். |
| | சனவரி 12 இரவு 7.30 மணி அளவில் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் கலங்க இயற்கை எய்தினார். |

